தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—185

இந்தியப்
[redacted]ாருளாதார வரலாறு-I
(1857 - 1956)

[redacted]NOMIC HISTORY OF INDIA-I (1857 - 1956)

தொகுப்பாசிரியர்
வி. பி. சிங்

தமிழாக்கம்
ம. திருநாவுக்கரசு, M. A., B.Ed.,
பொருளாதாரத் துணைப் பேராசிரியர்,
பூ. சா. கோ. கலைக் கல்லூரி,
கோவை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழக அரசு

First Edition—December 1968

B. T. P. No. 185

Economic History of India : I 1857 -- 1956

Edited By
V. B. Singh

Translation
M. Thirunavukkarasu

Price Rs. 7-00

This Tamil Edition of Bconomic History of India : 1857—1956 is Published by Arrangement With Messrs. Allied Publishers Private Ltd., Bombay.

Printed by
M/s MURASOLI
4/128, Mount Road,
Madras-6.

அணிந்துரை

(... இரா. நெடுஞ்செழியன், தமிழகக் கல்வி-தொழில் அமைச்சர்)

...மிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஏழு ஆண்டுகள் ...கிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு ...ணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று ...நகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல ...ல்ல மறைந்து வருகின்றன. நாடுமுழுவதும் பரந்துள்ள மாணவர் ...ரின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன் வந்துள்ள ...வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு ...ய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறை ...ில் நூல்கள் எழுதித்தர முன்வந்த நூலாசிரியர்களின் தொண்டு ...ர்ச்சி இவற்றின் காரணமாக இத்திட்டம் நம்மிடையே மகிழ்ச்சி ..., மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது.

... பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ ...ருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில், அரிய முறையில் ...ல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், ...வதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'இந்தியப் பொருளாதார வரலாறு (1857—...56)-I' என்ற இந்நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 185-ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான நூல்களையும் சேர்த்து இதுவரை 220 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை ...ல்லூரிக் கலை மண்டபத்தில் கொலு வீற்றிருக்கிறாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக. உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயி...ம் மாணவர்கள் உலக மாணவர்களிடை... சிறந்த இடம் பெற ...ண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் ...கலைக்கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் ... மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்

சிறப்புரை

இராதாக்கமல் முகர்ஜி

இந்த நூலிற்கு அணிந்துரை எழுதுவது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்றது. இதை நான் ஒரு பெரும் பேறாகக் கருதுகிறேன். இந்நூலின் தொகுப்பாசிரியர் திறமையும் புகழும் பெற்ற மாணவராக இருந்தவர். தற்சமயம் இப் பல்கலைக் கழகத்தில் எனது உடன் பணியாளராகவும், எல்லோருடைய மதிப்பை பெற்றவராகவும் திகழ்கின்றார். இந்தியர்களின் பொருளாதார வாழ்க்கையிலும், வரலாற்றிலும் சென்ற நூற்றாண்டுகளில் ஏற்பட்ட பல மாறுதல்களைப் படம் பிடித்துக் காட்டும் ஓர் அறிவுக் களஞ்சியமாக இந்நூல் விளங்குகின்றது. சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னே வெளிவந்த 'இந்தியப் பொருளாதாரத்தின் அடித்தளம்' (Foundations of Indian Economics-1916) என்ற என்னுடைய நூலில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அமைப்புக்களை விவரித்துள்ளேன். இந்தியாவின் குறை வளர்ச்சி இயற்கைக் காரணிகளால் ஏற்படவில்லை என்றும், பிரிட்டிஷார் விரும்பி மேற்கொண்ட கொள்கையின் விளைவாகத் தோன்றியது என்றும் நான் தெளிவுபடுத்தியுள்ளேன். பிரிட்டிஷாரின் ஆதரவில் பல்கலைக்கழகங்களில் பல தேற்றப் பொதுமைகள் உருவாக்கப்பட்டன. இவை யாவும் அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்கும் வகையில் அமைந்துள்ளன. ஆகையால் பிரிட்டிஷாரின் செல்வாக்கில் அமையாத சுயேச்சையான தேசிய கருத்துக் கோட்பாடு தேவையென்றும், அது இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்றும் நான் வலியுறுத்தியுள்ளேன். இக்கோட்பாட்டினரை 'இந்திய பொருளாதாரக் கருத்தினர்' (Indian School of Economics) என்று அழைக்கலாம். ஒரு வகையில் நான் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இரு தொகுதிகளாகத் தொகுத்து வெளியிட்ட, நவீன இந்தியாவின் பொருளாதாரப் பிரச்சினைகள்' (Economic Problems of Modern India - 1939) என்ற நூலின் தொடர்ச்சியாக இப்போது இந்நூல் வெளிவந்துள்ளது எனலாம். இன்றுவரை நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகள் இதில் இடம் பெற்றுள்ளன. டாக்டர் வி. பி. சிங் (Dr. V. B. Singh) அவர்கள் 'இந்தியப் பொருளாதாரம், நேற்றும் இன்றும்" (Indian Economy, Yesterday and Today, New Delhi,-1964) என்ற நூலில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைத் தெளிவாக்கியுள்ளார். பிரிட்டிஷ் ஆட்சித் துவக்கத்தில் பொருளாதாரத் தேக்க நிலை ஏற்பட்டது என்றும், மற்றும் இந்தியா விடுதலை பெ



வதற்கு முன்னர், 'அரை குறை வளர்ச்சி' ஏற்பட்டுள்ளது என்றும் மிகவும் பொருத்தமாக அவர் விவரித்துள்ளார். தனியார் துறையின் முதலாளித்துவக் குழு நலன்களை ஈடு செய்வதும் குடியானவர்களின் நலன்களையும், நகர உழைப்பாளிகள், நடுத்தர வகுப்பினர் முதலியவர்களின், நலன்களையும் மற்றும் பழையனவற்றையும் புதியனவற்றையும் ஒருமுகப்படுத்துவதுடன் ஒருமைப்படுத்துவதும் அவசியமாகும். 4-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தைச் செயல்படுத்தும் நிலையில் தக்க தருணத்தில் இக் கோரிக்கை வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியா தற்சமயம் பொருளாதார — சமூக முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டு இருக்கிறது. எனவே, வளர்ச்சி வேகத்தை அதிகரிக்கக் கூடிய காரணிகளையும், அதனைக் குறைக்கக் கூடிய காரணிகளையும் வரலாறு, சமூகஇயல் ஆகியவற்றின் கருத்து ஓட்டத்தில் ஆய்ந்து அறிவது அவசியம். எந்த நாடும் அதனுடைய வரலாற்று மரபினைப் புறக்கணிக்க முடியாது. அவ்வாறே அடிப்படையாக உள்ள சமூக, பொருளாதாரக் கட்டமைப்புகளையும் அழிக்க முடியாது. ஏனெனில் இவை நெடு நாட்களாக வந்துள்ள மரபின் விளைவாகவும், நாளடைவில் உருவாகிய சுற்றுப்புற சூழலின் விளைவாகவும் காட்சி அளிக்கின்றன.

நிறுவன அமைப்புப் பொருளாதாரத் தேற்றங்களைப் (Institutional Economic Theory) பல கோணங்களிலிருந்து நோக்க வேண்டும் என்று நெடுநாட்களாகவே நான் வலியுறுத்தியுள்ளேன். நவீன திட்டமிடல் முறை மேற்கொள்ளப்பட்ட நிலையில் பல புதிய பொருளாதாரக் கருத்துகளும், தேற்றங்களும் தேவைப் படுகின்றன. ஆனால் அவைகளை உருவாக்கக் கூடிய சூழ்நிலை தோன்றவில்லை. நமது நாட்டின் இன்றைய பொருளாதாரத் தேற்றம் பொருளாதார வரலாற்றில் வேறூன்றியதாக இல்லை. ஒன்றுக் கொன்று எதிராகவும், போட்டியாகவும் அமைந்துள்ள பல வகையான பொருளாதார நிறுவன அமைப்புகளிலிருந்து திட்டமிடலுக்கு ஏற்ற கருத்துகளையும், தேற்றங்களையும் நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். திட்டமிடலுக்கு ஏற்ற தேற்ற அடிப்படை இன்றுவரை உருவாகவில்லை. இக்குறையை நீக்கும் வகையில் சில முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பொருளாதார தேற்றத்திற்கும் செயல் முறைக்கும் உள்ள வேறுபாட்டை நீக்கும் வகையில், வரலாற்றில் அமையப் பெற்ற முறையான திட்டமிடல் தேற்றத்தை உருவாக்க வேண்டும். வளர்ச்சி சக்திகள் மரபையும் மதிப்பீடுகளையும் வெளிக்காட்டுகின்றன. பொருளியலும், சமூக இயலும் அடிப்படையில் ஒன்றுயிருப்பதால், சமூக நிறுவனங்கள்

ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன. மேற்கூறிய அடிப்படையில் புதிய தொரு தேற்றத்தை உருவாக்குவதற்கு இந்நூல் வழிகோலுமே யாதலால், இதன் முக்கிய நோக்கம் நிறைவேறியதாகக்கூறலாம்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி சமன்பாடு இல்லா மலும், ஏற்றத்தாழ்வு உடையதாகவும் இருக்கின்றது. இதற்குச் சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புக் கூறுகள் காரணமாக உள் ளன. இந்தியச் சூழலுக்கு ஒவ்வாத பொருளாதாரச் சிந்தனையின் அடிப்படையில் பொருளாதாரத் தேற்றமோ, பொருளாதாரத் திட்டமிடலோ சிறப்பாக அமைய முடியாது. கிராமச் சமுதாயத் தின் சிதைவுக்கு பிரிட்டிஷாரின் அதிகாரக் குவிப்பு சக்திகள் காரணமாக இருந்தன. மேல் வகுப்பினர்களான ஜமீன்தார்கள், இடைநிலையாளர்கள், 'மகஜன்'கள், பாதுகாக்கப்பட்ட குடியானவர் கள் முதலியோர் புதிதாக ஏற்பட்டமையாலும், சாகுபடியாளர்கள் கூலிப் பட்டாளமாக மாற்றப்பட்டமையாலும், கிராமச் சமுதாயம் முற்றிலும் சீரழிந்தது. இதன் முழுமையான வரலாற்று விவரங் கள் 'கிழக்கு நாடுகளில் மக்கள் ஆட்சி' (Democracies of the East, 1923) என்ற என்னுடைய நூலிலும், முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த 'இந்தியாவின் நிலப் பிரச்சினைகள் (The Land Problems of India-1933) என்ற மற்றொரு நூலிலும் காணலாம். இவ்விரண்டு நூல்களிலும் கிராம சமுதாயத்தின் சீரழிவு விவரிக்கப் பட்டுள்ளது. கிராமங்களை வெகு எளிதாகவோ, வெகு விரை விலோ 'நவீன பஞ்சாயத்து ஆட்சி'களாக மாற்ற முடியாது. முந் திய பொருளாதார அமைப்பின் மரபுரிமைகளை எளிதில் போக்கி விட முடியாது. வேளாண் கூலிகளின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அவர்கள் கிராம மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினராக உள்ளனர். இவர்கள் சமு தாய நலத் திட்டங்களினால் எவ்விதப் பலனும் அடையவில்லை. இன் றைய நிலையில் நாட்டின் பல வட்டாரங்கள் வேளாண்மையில் வாட்டமுற்றுள்ளன. அங்கெல்லாம் மரபுரிமை வழியாக வந்துள்ள ஜாதி வேறுபாடுகளும், தீண்டாமையும் நிலவக் காணலாம். நில மானியச் சமுதாய அமைப்பில் உருவாகிய கிராமப் பிணைப்பும், பண்ணை அடிமை முறையும் இன்றும் காணப்படுகின்றன. இந்த கிராமப் பகுதிகள் நமது திட்டங்களினாலோ, அண்மையில் ஏற் பட்ட சட்டங்களினாலோ எவ்விதமாறுபாட்டையும் அடையவில்லை. புதிய சூழ்நிலைக்கு ஏற்ற புதிய தலைவர்களை உடனடியாக உரு வாக்கமுடியவில்லை. சமூகத்தில் நெகிழ்ச்சி அற்ற பிளவுகள் உள்ளன. கிராமங்களில் செல்வந்தர்களுக்கும், வறியவர்களுக்கும் இடையே தொன்று தொட்டு வந்துள்ள வேறுபாடுகளை நிலச்சீர் திருத்த மசோதாக்களோ, நில உச்ச வரம்பு மசோதாக்களோ, நில உட்குத்தகையைத் தடுக்கும் மசோதாக்களோ மாற்றமுடிய

வில்லை. பஞ்சாயத்து ஆட்சி உண்மையில் எல்லோருக்கும் நம்பிக்கையூட்டும் வகையில் உள்ளது. இதன் வெற்றிக்கு நிலச் சீர்திருத்த வெற்றி அடிப்படையாகும். இவ்வகையில் புதிய வேளாண்மைக் கொள்கை ஒன்றை வகுத்து, அதனைத் தீவிரமாகக் கடைப்பிடிக்க வேண்டும். அக்கொள்கை நில வார முறையையும், தலத்தில் இல்லாத நிலக்கிழார்கள், சாகுபடியாளர்கள் மூலம் பயிரிடுவதையும் உடனடியாக மாற்றியமைக்கக் கூடியதாகவும் நாடெங்கிலும் வேளாண்மைக் கூட்டுறவு இயக்கத்தைத் தோற்றுவிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் வேளாண்மை வரலாற்றில் பொதிந்துள்ள வன்மையான கூறுகளைத் திருத்தியமைக்க முடியும்.

நவீன திட்டமிடலின் நோக்கத்தைத் தோல்வியடையச் செய்யும் வகையில் இரு போக்குகள் அமைந்துள்ளன. வேளாண்மையின் வளர்ச்சி வேகத்தைவிட மக்கள்தொகையின் வளர்ச்சி வேகம் அதிகமாகவும், உழைப்பாளிகளின் தொகையை விட மொத்த மக்கள்தொகையின் வளர்ச்சி அதிகமாகவும் இருக்கின்றன. பிரிட்டிஷ் இந்தியாவின் பொருளாதார அமைப்பின் கேடு விளைவிக்கின்ற மரபுரிமையாகக் கிராமங்களில் வேலை அற்றவர்களும், குறை வேலை செய்பவர்களும் இருக்கின்றனர். இவர்களது தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகிறது. இந்த நிலையை மாற்றுவது கடினமாக உள்ளது. இது எதிர்காலத்தில் தீர்க்கப்பட வேண்டிய முக்கியமான ஒரு பொருளாதாரப் பிரச்சினையாகும்; முன்னேற்றத் தடைகள் நெடுங்காலமாக வேரூன்றியுள்ளன. வேளாண்மையின் அடிப்படையில் தொழில்கள் வளர்வதற்கும், தொழில் முன்னேற்றம் பரவலாக அமைவதற்கும் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியடையவில்லை. தொழில் முறைகளுக்கு ஏற்றபடி வர்த்தகப் பயிர்களின் வேளாண்மை திட்டமிடப்படவில்லை.

இந்தியா 17-ஆவது, 18-ஆவது நூற்றாண்டுகளில் ஆசியாவின் வேளாண்மைத் தாயகமாகவும், உலகத்தின் தொழில் கூடமாகவும் திகழ்ந்ததை 'இந்தியாவின் பொருளாதார வரலாறு' (Economic History of India, 1600-1800) என்ற நூலில் நான் விளக்கிக் கூறியிருக்கிறேன். பிரிட்டிஷாரின் திட்டமிட்ட கொள்கை காரணமாக இந்தியா ஒரு குறை வளர்ச்சிபெற்ற பொருளாதார நாடாக விளங்குகிறது. இதன் காரணமாகப் பொருளாதார வளர்ச்சிப் பாதையில் பல விரிசல்களும், பிளவுகளும் ஏற்பட்டன. இவைகளைச் சீர் செய்வதற்கு நீண்ட காலம் ஆகலாம். வரலாற்று அடிப்படையிலும், நிறுவன அமைப்பு அடிப்படையிலும், பொருளாதாரத் தேற்

றங்களும், கொள்கைகளும் உருவாக்கப்பட வேண்டும். பிரிட்டிஷா ரின் பொருளாதாரக் கொள்கைக்குத் துணையாக நாடெங்கிலும் பரவலாக அமைந்துள்ள இருப்புப் பாதை அமைப்புகளும், அவை களில் சாமான்களை அனுப்புவதற்கு வசூலிக்கப்படுகின்ற கட்ட ணங்களும், விற்பனை முறையும், வங்கிகள் அமைப்பும் இருந்தன. இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட குடிசைத் தொழில், கைவி னைத் தொழில் ஆகியவைகளின் பொருள்களுக்குப் பதிலாக, முக்கிய மாகக் கைத்தறித் துணிகளுக்குப் பதிலாக இயந்திரங்களால் நெய்த பிரிட்டிஷ் துணிகள் இறக்குமதி செய்யப்பட்டு அங்காடிகளில் விற் கப்பட்டன. இந்தியாவில் உற்பத்தியான கச்சாப் பொருள்கள் ஏற்று மதி செய்யப்பட்டன. இவ்வாறு நீண்டகாலமாகத் திட்டமிட்டு மேற் கொண்ட சுரண்டலின் விளைவையும், திட்டமிட்டுப் பொருளாதார அமைப்பில் ஏற்படுத்திய குறை வளர்ச்சியின் விளைவையும், பலர் பல கோணங்களிலிருந்து ஆக்கித் தந்துள்ள பொருளாதாரத் தேக்க நிலையின் விளைவையும், நேர்படுத்துவதற்குப் பொருளாதார அமைப் பின் எல்லாத்துறைகளும் முழுமையான திட்டமிட்ட முன்னேற்றம் எய்துவது அவசியமாகும்.

1857லிருந்து 1900 வரையிலான ஆண்டுகளில் இந்தியாவின் தலா வருவாயை எம். முகர்ஜி (M. Mukerjee) அவர்கள் கணக்கிட் டுள்ளார். 1948—49 ஆண்டு விலையின் அடிப்படையில் சராசரி வருவாய் 1857-ல் 169 ஆக இருந்தது. 1876-ல் 210 ஆக உயர்ந்தது; ஆனால் 1900-ல் 188ஆகக் குறைந்தது. 1905லும் 1955லும் இவை முறையே 203 ஆகவும், 275 ஆகவும் இருந்தன. 1600 முதல் 1900 வரையில் உள்ள ஆண்டுகளில் வட இந்தியாவில் உண்மையான ஊதியத்தை (Real Wages) நான் கணித்துள்ளேன். திறனற்ற ஊழியர்களின் உண்மையான ஊதியம், 1600-ஆவது ஆண்டின் அடிப் படையில், கண்டுபிடிக்கப்பட்டது. 1850-ல் 52 ஆக இருந்தது 1903ல் 43 ஆகக் குறைந்தது. இந்தியப் புள்ளி விவர நிலையத்தினர் (Indian Statistical Institute) உண்மையான வேளாண் ஊதி யத்தை 1890-ம் ஆண்டின் அடிப்படையில் கணித்துள்ளனர். இது, 1880-ல் 97 ஆக இருந்தது 1900த்தில் 88 ஆகக் குறைந்தது. இவ் வாறாக இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் இதற்கு முன்பு ஏற்படாத வகையில் தேக்க நிலைமையும், வறுமையும் ஏற்பட்டுள்ளதை அறியலாம்.

பிரிட்டிஷ் ஆட்சியின் பொருளாதார மரபுரிமையாக இன் றைய மாநிலங்களின் அல்லது மாகாணங்களின் பிரிவினை அமைந் துள்ளது. இது பூகோள அமைப்பிற்கு ஏற்ற வகையிலோ, உயி ரினச் சூழலுக்கு (Ecological) ஏற்றதாகவோ பிரிக்கப்படவில்லை,

இதன் காரணமாக வட்டார வளத் திட்டமிடலின் அடிப்படையான அவசியத்தைத் தெளிவாக ஒருவரும் உணர முடியவில்லை. ஆறுகளின் வடி நிலங்களில் ஒன்றுக்கும் அதிகமான மாநிலப் பகுதிகள் அமைந்திருக்கக் கூடுமேயானுல், வளத் திட்டமிடல் பயனுள்ளதாக இருக்கும். ஆண்டுதோறும் ஏற்படக் கூடிய வெள்ளங்களைக் கட்டுப்படுத்தவும், ஆறுகள், வாய்க்கால்கள் ஆகியவற்றின் போக்குகளை மாற்றியமைக்கவும், மற்றும் கிழக்கு உத்தரப் பிரதேசம், வட பீகார் ஆகிய பகுதிகளில் காணக்கூடிய வடிகால் இல்லாத நீர்த்தேக்கமுற்ற பகுதிகளைச் சீர் செய்வதற்கும் இம்முறை இன்றியமையாததாகும். இத்தகைய வளங்களைப் பயன்படுத்துவதற்கு வட்டார அடிப்படையில் திட்டமிடல் அமைய வேண்டும். அவ்வாறே உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தானம், டெல்லி ஆகிய பகுதிகளில் பாலைவனம் தொடர்ந்து பரவாமல் தடுப்பதற்கு நீண்டகால ரீதியில் ஆற்றுப் படுகைகளைத் திட்டமிட்டு அமைப்பது அவசியம். பீகார், ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அளவற்ற கனிவளங்கள் காணப்படுகின்றன. இப்பகுதிகளைக் கூட்டாகத் திட்டமிடுவதற்கு ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும். இந்தியாவின் மையப் பகுதியில் ரூர் (Ruhr) போன்ற தொழில் நகரம் ஒன்றை ஏற்படுத்தி நாட்டின் தொழில் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்த வேண்டும். பழங் காலத்திலிருந்து பெறப்பட்ட நிர்வாக, அரசியல் மரபுரிமைகளால் எழக்கூடிய இடர்ப்பாடுகளையும் பொருளாதாரக் குறிக்கோள்களிலிருந்து விலகிச் செல்லும் தன்மையையும் தவிர்ப்பதற்குத் திட்டமிடுபவர்கள் கற்பனைத் திறன் உடையவர்களாகவும், எதிர்காலத்தில் நடக்கக்கூடியவற்றை முன்னறிந்து கூறுபவர்களாகவும் இருக்கவேண்டும்.

பொருளாதார அமைப்பின் மொத்த வளர்ச்சிக்கு வலிவூட்டவும் மற்றும் வளர்ச்சியில் காணக்கூடிய நிலையற்ற தன்மை, சமன்பாடு இன்மை, ஏற்றத் தாழ்வுகள் முதலியவைகளைச் சீர்செய்யும் வகையிலும் எதிர்காலத்தில் பொதுத் துறையின் தொழில் முயற்சிகளும், மற்றும் வேளாண்மை, வர்த்தகம், வங்கித்தொழில் ஆகிய துறைகள் நிறுவன அடிப்படையில் திட்டமிடலை மேற்கொள்ளுவதும், சிறு அளவு, நடுத்தர அளவுத் தொழில்களின் உற்பத்திப் பெருக்கம் கூட்டுறவு அடிப்படையில் ஏற்படுவதும் இந்தியப் பொருளாதார அமைப்பிற்கு மிகவும் அவசியம். இந்த அடிப்படையில் தான் பிரிட்டிஷார் திட்டமிட்டு ஏற்படுத்திய குறை வளர்ச்சி மரபுரிமையை நீண்டகால ரீதியில் களைந்து எறிய முடியும். அப்போது தான் உழவும், தொழிலும் ஜனநாயக அடிப்படையில் அமையவும், வேளாண்மைக்குத் தொழில்துறை பின்னணியாக இருக்கவும் முடியும்.

நான்காவது திட்ட காலத்தில் இப்போதுள்ள தனியார் துறை, பொதுத்துறை ஆகிய இரண்டுடன், மூன்றாவதாக ஒரு துறையை ஏற்படுத்த வேண்டும். அது கூட்டுறவுத் துறையாக இருக்கும். இதில் சிறு தொழில்கள் அமைந்து இருக்கும். இத்துறை பெரிய தொழில்களுடனும், பெரிய தொழில் நிறுவனங்களுடனும் இணைந்து செயல்படும். அவைகளுக்குத் தேவையான அத்தியாவசியப் பொறி உறுப்புகளையும், இதர பொருள்களையும் உற்பத்தி செய்யும். இவை துணைத் தொழில்களாக இயங்கிவரும். இவைகளைக் கிராமங்களிலும், சிறு பட்டணங்களிலும் ஏற்படுத்தலாம். அவ்விடங்களின் தொழில் உற்பத்தித் திறனும், வேலை வாய்ப்பும் அதிகரிக்கும். தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் அமைந்த பெரிய தொழில்கள் மூன்றாவது துறையில், கூட்டுறவு அமைப்பில் செயல்படும். சிறு தொழில் நிறுவனங்களுக்குப் பல வகைகளிலும் உதவியாக இருக்க முடியும். இவை பெரிய தொழில்களுக்குத் தேவையான பொருள்களை அளிக்கின்றமையால் துணைத் தொழிலாக அமைந்துள்ளன. இவைகளை ஏற்படுத்துவதற்குப் பொறிக் கருவிகள், சிறு இயந்திரங்கள் (Jigs), வார்ப்புருக்கள் (Dies), ஃபிக்ஸர் (Fixtures) முதலியவற்றை அளிக்கலாம். பெரிய தொழில்கள், தங்களுக்குத் தேவைப்படும் பொறி உறுப்புக்களின் வரைப்படத்தையும், அதற்கான உலோகத்தின் தன்மை, திறன் முதலியவற்றைக் குறிப்பிட்டு உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கலாம். அதே சமயம் உயர்ந்த நிலையில் தரக்கட்டுப்பாடுகளையும், காலவரையையும் நிர்ணயிக்கலாம். இவ்வாறு பெரிய தொழில்கள் ஊக்கமும் ஆதரவும் தரக்கூடுமேயானால், சிறுதொழில்களின் உற்பத்தித் கணிசமாக உயரும். இவைகளைத் திட்டமிட்டுச் செய்வதற்குத் தொழில் ஆலோசனை முறையை மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும் மேற்கொள்ள வேண்டும். இத்தகைய ஆலோசனைகள் சிறு தொழில் அதிபர்களுக்கு இலவசமாகக் கிடைக்கும் ஒரு பொதுப் பணியாக இருக்க வேண்டும். பஞ்சாபில் அற்புதமான வகையில் துரிதமாக ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சி குறிப்பிடத்தக்கது. நடுத்தர அளவிலும், சிறு அளவிலும் அமைந்த பொறியியல் தொழில்களின் மூலமாக அங்குச் சிறப்பான தொழில் ஆக்கம் ஏற்பட்டது எனலாம். பஞ்சாப் இவ்வகையில் இந்தியாவிற்கு ஒரு வழி காட்டியாக உள்ளது. கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மக்கள் சிறு அளவு பொறியியல் தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். ரூ. 10 கோடி முதலீட்டைக் கொண்டு, ரூ. 30 கோடி மதிப்புள்ள பொறியியல் தொழிற் பொருள்கள் தயாரித்து வருகிறார்கள். இவ்வகையில் பஞ்சாபில் சைக்கிள், தையல்பொறிப் பகுதிகள், துணை உறுப்புகள், வேளாண் கருவிகள், உலோகக் கலன்கள் முதலியன உற்பத்தி செய்யப்படுகின்றன. இதைப் போல ஏனைய மாநிலங்களி

லும் செய்ய முடியும். கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக மலிவான மின் மோட்டார்களை உபயோகப்படுத்தி நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் தொழில் வளர்ச்சி வேகத்தைத் துரிதப்படுத்த முடியும்.

இந்தியாவில் சோஷலிஸப் பொருளாதார அமைப்பை உருவாக்குவதற்கு விஞ்ஞானத்தையும், தொழில் நுட்பத்தையும் முன்னேற்றம் காணும் வகையில் திறமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சிறு தொழில் அதிபர்கள், வினைஞர்கள் முதலியோர் எக்காரணம் கொண்டும் வலியற்றவர்களாகவோ, கூட்டுறவில் அமையாதவர்களாகவோ, அமைப்பு முறையில் அடங்காதவர்களாகவோ, பரம்பரையாக, வந்த அமைப்புகளில் தனித்தனியாகப் பிரிந்து இருப்பவர்களாகவோ இருக்கக் கூடாது. அப்பொழுதுதான் நாட்டின் தொழிலில் முன்னேற்றம் சிறப்பாக அமையும். நான்காவது திட்டத்தில் சிறு தொழில் துறையின் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், கிராமப் பகுதிகளில் தொழிற் பேட்டை (Industrial Estates) அமைக்க வேண்டும். நாடெங்கிலும் மின் சக்தியின் துணையிலும் போக்குவரத்துகளின் துணையிலும் தொழில்புற நகரங்கள், துணை நகரங்கள் மற்றும் கிராமங்களைச் சூழ்ந்த சிறு பட்டணங்கள் (Rural Urban Centres) முதலியவற்றை ஏற்படுத்த வேண்டும்.

இந்தத் திட்டத்திற்குத் துணையாக உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தொழில் நுட்பக் கூடங்கள் அமைக்கப்பட வேண்டும். இதனால் தொழிலை மையமாகக் கொண்ட கல்வி கிராமங்களில் வளர்ச்சியடையும். இதனால் நகரத்தை நோக்கிப் பெருவாரியாக இடம் பெயர்பவர்களைத் தடுக்க முடியும். பிரிட்டிஷார் இந்தியாவில் ஏற்படுத்திய கல்வி முறை காரணமாக மக்கள் சமூகப் பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்பத் தங்களை மாற்றி அமைத்துக் கொள்ள முடியவில்லை. நாசுக்கான வெளிப்புறப் பழக்க வழக்கங்களையும் அதிகமான ஏட்டுக்கல்வி நாட்டத்தையும், உடல் உழைப்பில்லாத எளிதான வேலைகளை விரும்பும் தன்மையையும் இக்கல்வி முறை ஏற்படுத்தியது. இப்பொழுது உள்ள கல்வி அமைப்பு முறையை மாற்றுவதற்குத் தீவிரமாகச் சிந்தனை செய்ய வேண்டும். துவக்க நிலை, உயர்நிலை, பல்கலைக் கழகங்களில் பாரம்பரியமாக வந்துள்ள கல்வியின் அமைப்பை மாற்ற வேண்டும். இதற்குப் பதிலாக உருவாக்கப்படும் புதிய கல்விமுறை தொழில் முன்னேற்றத்திற்கும், நவீன தொழில் நுட்பத் தேவைகளுக்கும் ஏற்றதாக இருக்க வேண்டும். இன்றும் மிகப் பெரியளவில் கல்லாமை நிலவக் காண்கிறோம். உத்தரப் பிரதேசம், குஜராத், மகாராஷ்டிரம் முத

லிய மாநிலங்களில் கற்றவர்களின் விகிதம் ஆண்களில் முறையே 27, 41, 42 ஆகவும், பெண்களில் 7, 19, 17 ஆகவும் உள்ளது. எல்லோருக்கும் 14 அல்லது 16 வயது வரை கட்டாயக் கல்வி வெகு விரைவில் அளிக்க வேண்டும். கல்வியில் பழைய அமைப்பு முறையை மேற்கொள்ளுவதால் பெருத்த இழப்பு ஏற்படக்கூடும். இதில் பயின்றவர்கள் நாசூக்கான, அழுக்குப்படாத வேலைகளை (White Collar Jobs) செய்ய விரும்புகின்றனர். பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்பு முதியோர் கல்வி புழக்கத்தில் இருந்தது. பள்ளிக் கூடங்களுக்காகக் கிராமக் கொடைகள் இருந்தன. கோயில்களும் மசூதிகளும் கல்வியில் ஆர்வம் காட்டின. அவைகளுக்குத் திரும்பவும் உயிரூட்டுவது அவசியம். பொருளாதாரத் திட்டமிடலுக்கு இவை தவிர்க்க முடியாத மாற்றுவழியாகும். பெருவாரியாக உள்ள கல்லாமையைப் போக்குவதற்கு மட்டும் இல்லாமல் சமூகத்தில் சமத்துவம், நீதி முதலிய புதிய மதிப்பீடுகளை மக்களிடையே பரவச் செய்யவும் முதியோர் கல்வி இன்றியமையாததாகும். பொருளாதார வளர்ச்சியில் இணைந்துள்ள இதனை எவ்விதத் தாமதமுமின்றி நிறைவேற்ற வேண்டும்.

இந்தியா எதிர்காலத்தில் ஒரு மாபெரும் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டும். பல்வகைத் திறன்களையும், மதிப்புகளையும் புதிய வகையில் ஒருங்கு இணைக்க வேண்டும். வேளாண்மை நாகரிகத்தைத் தொழில் நுட்ப மதிப்பீடுகளின் அடிப்படையில் உருவாக்க வேண்டும். அப்போது தலை நகரங்களுக்கும் துணைப்பட்டணங்களுக்கும் இடையேயும், கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையேயும் புதிய தொடர்புகள் ஏற்படும். கூட்டுறவு அடிப்படையில் பரவலாக அமைகின்ற தொழில் ஆக்கம், தற்சமயம் உள்ள பொதுத்துறையை விட அதிக அளவு இணக்கமாக, வேளாண்மை கூட்டுறவிற்கும் பஞ்சாயத்து ஆட்சிக்கும் பொருந்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் தொழில் நுட்பத் துறையிலும், நிலை அமைப்புத் துறைகளிலும் எண்ணிறந்த வாய்ப்புகள் தோன்றியுள்ளன. அவை பெரிய தொழில்களுக்கும், பெரிய நிறுவனங்களுக்கும் சாதகமாக இருப்பதைப் போலவே, சிறு தொழில்களுக்கும் நிறுவனங்களுக்கும் சாதகமாக உள்ளன. சமூகத்தில் மரபாக வந்துள்ள பொருளாதாரச் சிந்தனையையும் குழு நலன்களையும் (Vested Interests) 'களைந்து எறிவது' இன்றியமையாதது. அப்போதுதான் 4ஆவது திட்டம் வெற்றியடையும். சாதாரண மனிதனின் மதிப்பும் கௌரவமும் காக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் சோஷலிச இலட்சியத்தைச் சமூகம் உறுதியாகவும், நிதானமாகவும் அடைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இம்முயற்சிகள் இரு வகைகளில் வேரூன்றி இருக்க வேண்டும். வேளாண் துறையில் கிராமப் பஞ்சாயத்துகளும், கூட்டுறவு அமைப்புகளும் மக்களிடையே சோஷலிச மனப்பான்மையை ஏற்படுத்திக் குடியானவர்களுக்கும், சாகுபடியாளர்களுக்கும் மன உறுதியை ஏற்படுத்திப் புதிய சக்தியையும், ஆர்வத்தையும் உருவாக்கக் கூடும். அவ்வாறே தொழில் துறையில் கூட்டுறவு அமைப்பும் மற்றும் அரசாங்கத் தொழில் நிறுவனங்களும், தனியார் தொழில் நிறுவனங்களிடையே சமூகப் பொறுப்பையும் கடமை உணர்ச்சியையும் ஏற்படுத்தக்கூடும். சோஷலிசத்தை நோக்கி இந்தியக் கிராமங்களும், நகரங்களும் ஒருங்கே முன்னேற வேண்டும். பொருளாதாரத் திட்டமிடலுக்கு, புதிய சோஷலிசத் தேற்றம் ஒன்று தேவைப்படுகிறது. பல துறைகளும் சமநிலையில் ஒருமித்த வளர்ச்சியைப் பெறுவதற்கு இது வழிகாட்டியாக இருக்க வேண்டும். சமத்துவ, ஜனநாயக சூழ்நிலையில் 400 மில்லியன் மக்களின் ஆர்வத்தையும், முயற்சிகளையும் இணக்கமான துறைகளில் ஈடு படுத்தி வெற்றிகாண வேண்டும்.

லக்னௌ பல்கலைக் கழகம்
லக்னௌ.
பசந்த பஞ்சமி: 1965.

பாயிரம்

1857லிருந்து 1956 வரை உள்ள ஆண்டுகளின் இந்தியப் பொருளாதார வரலாற்றை முழுமையாக விவரிக்கும் ஒரு நூலாக விளங்கும் என்ற நம்பிக்கையில் இதனை வெளியிடுகிறோம். இந்தியப் பொருளாதார அமைப்பில், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் காணக் கூடிய முக்கியப் போக்குகளைக் கண்டுபிடித்து அவைகளை விளக்கிக் கூறும் வகையில் பல அத்தியாயங்கள் உள்ளன. அக்காலத்தில் இந்தியப் பொருளாதாரம் குறை வளர்ச்சியுடன் தேக்கமுற்று இருந்தது. விடுதலைக்குப் பின்னர் தேசீய ஜனநாயகமும், இயக்க நிலைப் பொருளாதார அமைப்பும் தோன்றின. இவைகளை எடுத்துக்காட்டும் வகையில் இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் அமைந்துள்ளது. தேற்ற ரீதியாக இந்த நூல் பொருளாதார வரலாற்றுக்கும், பொருளாதார தேற்றத்திற்கும் அமைந்த இரு வழித் தொடர்பை வலியுறுத்த முற்படுகிறது. இப்புத்தகம் சிறப்புத் தேர்ச்சியாளருக்கும், மாணவர்களுக்கும், பொதுவான வாசகர் களுக்கும் பயன் உள்ளதாக இருக்கும் என்று நம்பப்படுகிறது, 1959 லேயே இந்த நூலை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதனைச் செயல்படுத்துவதற்கான இடைக்காலம் இன்னும் குறைவாக இருந்திருக்க வேண்டுமென விழைகிறேன்.

என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கி இப்புதிய முயற்சியில் என்னுடன் ஒத்துழைத்து கட்டுரைகளை வழங்கிய ஆசிரியர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என்னுடைய ஆசிரியரும், இந்திய சமூக இயல்களின் மூதறிஞருமான, பேராசிரியர் இராதாக் கமல் முகர்ஜி அவர்கள், இந்த நூலுக்கு சிறப்புரை வழங்கியுள்ளார்கள். அன்னாருக்கு என் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பொருளியல் துறை,
லக்னௌ பல்கலைக்கழகம்
லக்னௌ.
பசந்த, பஞ்சமி, 1965.

வி. பி. சிங்

கட்டுரை ஆசிரியர்கள்

1. **சிங். வி. பி, (Singh, V. B.)**
பொருளியல்துறை,
லக்னௌ பல்கலைக்கழகம்,
லக்னௌ.

2. **ஸானி, எம். ஆர். (Sahni, M. R.)**
புவி அமைப்பியல் துறை,
பஞ்சாப் பல்கலைக்கழகம்,
சந்திகார்.

3. **மதன், டி. என். (Madan, T. N.)**
மனித இயல்துறை,
கர்னாடகப் பல்கலைக்கழகம்,
தார்வார்.

4. **ஸின்கா, ஜெ. என். (Sinha, J. N.)**
பொருளியல்துறை,
பஞ்சாப் பல்கலைக்கழகம்,
பாட்டியாலா.

5. **பாத்தியா, பி. எம். (Bhatia, B.M.)**
இந்துக் கல்லூரி,
டெல்லி பல்கலைக்கழகம்,
டெல்லி.

6. **சர்மா, எஸ். ஆர். (Sharma. S. R.)**
சமூக இயல், சமூகப் பணித்துறை,
லக்னௌ பல்கலைக்கழகம்,
லக்னௌ.

7. **குஸ்ரோ, ஏ. எம். (Khusro, A.M.)**
பொருளாதார வளர்ச்சிக்கழகம்,
பல்கலைக்கழக 'என்க்ளேவ்', (University Enclave)
டெல்லி.

8. பிஷ், ஆர். எஸ். (Bisht, R. S.)
இந்தியத் தொழில், வர்த்தகக் கூட்டுச் சம்மேளனம்,
புதுடெல்லி.

9. நம்பூதிரிபாத், எம். பி. என். (Namboodripad, M.P.N.)
இந்தியத் தொழில், வர்த்தகக் கூட்டுச் சம்மேளனம்,
புதுடெல்லி.

10. ஃபுகாஸவா, எச். (Fukazawa, H.)
பொருளியல்துறை, இத்தோத் சுபாஷி பல்கலைக்கழகம்,
குனித்தாட்சி, டோக்கியோ, (ஜப்பான்).

முன்னுரை

வி. பி. சிங்

இந்த நூல் பொருளாதார வரலாற்றின் அமைப்பையும், நோக்கத்தையும் விவரித்துக் கூறுகின்றநிலையில் தொடங்குகிறது. பொருளாதாரத் தேற்ற அடிப்படையில் வரலாற்றையும், வரலாற்று அடிப்படையில் பொருளாதாரத் தேற்றத்தையும் விளக்கிக் கூற முற்படுகிறது. இதனால் பொதுமை உரைகளை ஆக்கவும், பின்வருவனவற்றை முன்கூறவும், அனுபவப் பாடங்களால் பலனடையவும் முடிகிறது. அதாவது ஒரு சிறப்பு நிகழ்ச்சியிலிருந்து பொது உண்மைகளைக் கண்டு அறியமுடிகிறது. இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்றும், கால அளவின் மூன்றுக் கூறுகளாகும். எனவே நிகழ்காலமும் வரலாறுகக் கருதப்படுகிறது. பொருளாதார வரலாற்றிற்கும், பொருளாதாரச் சிந்தனை வரலாற்றிற்கும் இடையே இருவழித் தொடர்பு உண்டு. இவை சார்புத் தொடர்புடையன. காலத்தாலும், சூழ்நிலைகளாலும் மாறுபடுகின்ற "உண்மையான" வாழ்க்கைக் கோட்பாடுகளுக்கு ஏற்பப் பொருளாதார இயல் (Economic Science) "மாற்றி அமைத்துக்கொள்ளப்படவேண்டும்." எடுத்துக் காட்டாக, சென்ற நூற்றாண்டில் இந்தியத் தொன்மைப் பொருளியல் கருத்தினர் (Indian Classicists) பொருளாதாரப் பிரச்சினைகளை நாட்டின் சமூக, அரசியல் நிகழ்ச்சி முறைமைகளுடன் இணைத்துக் கூறும் மரபை ஏற்படுத்தினர். அந்த மரபு இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் கைவிடப்பட்டது. 1938-39 ஆண்டுகளில். இந்திய தேசீய தலைவர்களின் பொருளாதாரக் கருத்துக்கள், இந்திய பொருளியல்வாதிகளின் கருத்துக்களைவிட சிறந்ததாக இருந்தன. இந்தியப் பொருளாதாரக் கருத்துக்களின் பரிணமம் விவரித்துக் கூறப்படுகிறது. இதன் வாயிலாகப் பொருளாதாரத் தேற்றம் பொருளாதார வரலாற்றில் வேரூன்றி உள்ளது என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

இயற்கையை மனிதன் வெற்றிகண்ட விவரங்களைக் கூறும் பதிவு ஏடாக மனிதனின் வரலாறு அமைந்துள்ளது. இயற்கையுடன் மனிதன் செயல்படும்பொழுது அவன் செல்வத்தை உருவாக்குகிறான். ஒரு நாட்டின் இயற்கை வளங்களைப் பயன்படுத்துவது ஒரு பிரச்சினையாகப் பரிணமிக்கிறது. பேராசிரியர் ஸானி

(Sahni) அவர்கள் இந்தியாவின் இயற்கைவளங்களைப் பற்றியும், அவைகளின் முக்கியத்துவத்தைப் பற்றியும், அவைகளைப் பயன் படுத்துவது பற்றியும் இரண்டாவது அத்தியாயத்தில் விளக்கிக் கூறியுள்ளார். தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள இயற்கை வளங்களும், எதிர்காலத்தில் கண்டுபிடிக்கக்கூடியவகைகளும் கிட்டத்தட்ட வரையற்றவை என்று கூறுகிறார். இதனை இந்தியா வின் நற்காலம் என்று கூறலாம். இந்த அடிப்படையில் வன வளம், மண்வளம், கனிவளம் ஆகியவைகளை நமது கண்ணோட்டத் துக்கு அளிக்கின்றார். பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்தியாவில் நிலையாக இருக்கத் தொடங்கியதும் முதலாவதாகக் கனிவளங் களைப்பயன்படுத்துவதில் கவனம் செலுத்தினர். இவ்வகையில் முதலில் நிலக்கரி எடுத்துக்கொள்ளப்பட்டது. கால ஓட்டத்தை பின்னோக்கிப் பார்க்கின்றபோது விடுதலைக்குப் பின் உள்ள ஆண்டு களில் ஏற்பட்ட முன்னேற்றம் அதற்கு முன்பு உள்ள நூறு ஆண்டு களில் இருந்ததைவிட அதிகம் எனக் கூறலாம். தாதுக்கனிகளைக் கச்சாவாக ஏற்றுமதி செய்து, அதற்கு ஈடாக இறக்குமதி செய்யப் படும் மூலதனத்தைவிட அவைகளை உள்நாட்டிலேயே பயன் படுத்துவது (அதற்கான தொழில்களை ஏற்படுத்துவது) நாட்டின் பொருளாதார சுயேச்சைக்கான அடித்தளத்தை அமைக்கக்கூடியது என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம்.

இயற்கை வளங்களை மக்கள் எவ்வாறு பயன்படுத்துகின்றார் கள் என்பது சமூக வரலாற்றின் ஒரு கூறாக உள்ளது. எனவே சமூக வரலாற்றை முழுமையாக உணருவதற்கு இது அவசியமாகும் இந்த முக்கியமான பிரச்சினையை டாக்டர் மதன் அவர்கள் மூன்றும் அத்தியாயத்தில் விவரித்துள்ளார். அவர் இந்து ஏகக்குடும்பம் ஜாதி, இவைகளின் வகை அமைப்புக்கள் எவ்வாறு மாறிக் கொண்டு வந்து உள்ளன என்பது பற்றியும், பொருளாதார முன் னேற்றத்தை அவை எவ்வாறு பாதிக்கின்றன என்பது பற்றியும் ஆய்ந்து கூறியுள்ளார். இந்தியப் பொருளாதாரத்தின் பிற்போக் கான நிலைமைக்கு ஜாதி, ஏகக்குடும்பம் முதலிய அமைப்பு முறை கள் காரணம் என்று கருதுவதை நேர்மையாளர்களின் சீற்றம் என்று கருதலாமே அல்லாமல், அவை அவர்களின் சமூக இயல் நுண்ணறிவை எடுத்துக்காட்டுவதாகக் கருதமுடியாது என்று ஆசிரியர் ஒதுக்கித் தள்ளிவிடுகிறார். அவர் கூறும் முடிவு பின் வருமாறு; "இந்திய (பொருளாதார வளர்ச்சியை) சமூக நிறுவன அமைப்புக்களான ஜாதியும், ஏகக்குடும்பமும் ஏனைய காரணி களுடன் சேர்ந்து பொருளாதார வளர்ச்சி வேகத்தைக் குறைத் துள்ளன என்று பொருளாதார, சமூக வரலாற்று அறிஞர்கள் கூறுவது சரியான வாதமாகும். ஆனால் இந்த நிறுவனங்கள் வளர்ச்சியைத் தவிர்த்து உள்ளன என்று அவர்கள் வலியுறுத்தி

கூறுவார்களேயாஞல் அவைகளுக்கு அநாவசியமான முக்கியத்துவம் கொடுப்பதுடன் அவைகள் மாற்றமின்றி இருந்துவருவதாகவும் எண்ணவேண்டியிருக்கிறது."

ஜாதி, ஏகக்குடும்பம் இவைகளைப்போல இந்தியாவின் சமூக மரபு உரிமையின் ஒரு பகுதியாகக் கிராமச்சமுதாயம் விளங்குகிறது. இந்தியக் கிராமச் சமுதாயத்தின் அமைப்பும், சிதைவும் நான்காம் அத்தியாயத்தின் பாடமாக உள்ளன. உள்ளீடாக அமைந்த நிகழ்ச்சிகளின் வாயிலாக, அது சிறிது சிறிதாகச் சிதைந்துகொண்டிருந்தது. அச்சமயத்தில் வளர்ச்சி அடைந்த பொருளாதாரத் தொழில் நுட்ப சக்திகளின் அடிப்படையில் எழுந்த தொழில் புரட்சியும், அதன் காரணமாகப் பிரிட்டிஷார் அடைந்த வெற்றியும், இதற்கு இறுதியான முடிவை அளித்தன. அதிகாரக் குவிப்புடைய நிர்வாக அமைப்பு, வரிவசூல்முறை, போலீஸ், நீதி மன்றங்கன் போன்ற நிறுவன அமைப்புக்கள், நவீன போக்குவரத்து வசதிகளின் வளர்ச்சி முதலிய காரணிகள் கிராமத்தைத் தனித்து இயங்கமுடியாதவாறு செய்தன. உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் வெளிநாடுகளில் ஏற்றுமதி செய்யப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் விற்பனைக்குக் கிராமங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டன. அதிக நில வாரமும், பெருகிவரும் கடன் சுமையும் கிராமத்து இளைஞர்களை வேலை தேடும்முகத்தான் நகரங்களுக்குச் செல்லுமாறு தூண்டின. அங்கு ஏற்பட்ட தொழில் வளர்ச்சி காரணமாக அது சாத்தியமாக இருந்தது. கிராமக் கைவினைத் தொழில்கள் சிதைவுற்றமையால் கிராமத்திலிருந்து மக்கள் புலம்பெயரும் வேகம் மேலும் அதிகரித்தது. கிராமங்கள் ஒருபோதும் முழுமையான சுயேச்சை பெற்று இருக்கவில்லை. ஆஞல் இந்த மாறுபட்ட சூழலில் அது இயலாத ஒன்ருகிவிட்டது. இவ்வாருக மரபாக வந்த கிராமச் சமுதாய அமைப்புக்கள் தன்னிறைவு பெற்றுவிளங்கியதுடன் சமூகக் கட்டுப்பாட்டிற்கும், சமூகநலப் பாதுகாப்பிற்கும், செயல் காரணியாக இருந்தன. அத்தகைய கிராமச் சமூதாய அமைப்புக்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. விடுதலைக்குப் பின்னர் மும்முனைகளில் கிராமச் சமுதாயத்தைச் சீர்திருத்தவும், உயிர்ப்பிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிலப் பிரபுத்துவத்தை அழிப்பதன்மூலமாகவும், கிராமப் பஞ்சாயத்துக்கள் (மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்கள்) மூலமாகவும், சமுதாயநலத் திட்டங்கள், கிராம வளர்ச்சித் திட்டங்கள் (Rural Extension Service) ஆகியவைகளை ஏற்படுத்துவதன் மூலமாகவும் கிராமச் சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்கு வழிவகுக்கப்படுகிறது. இத்தகைய முயற்சிகள் போதுமானதாக இல்லை. கடல் போன்று பரந்துள்ள வேளாண்துறையில் வளர்ச்சியடைந்த சில கிராமச்

சமுதாயங்கள் தீவுகளைப்போல் காட்சியளிக்கின்றன. இவை களின் வளர்ச்சி போதுமானதாக இருக்கவில்லை என்பதுடன் ஒரு சீராகவும் அமையவில்லை. கிராமச் சமுதாயங்கள் சமூக மாற்றத் தின் உட்கருக்களாக உள்ளன. எனவே சமூகச் சீரமைப்பு என்பது உயிர்ப் பொருள்களிடையே உள்ளீடாகத் தோன்றும் மாற்றத் தைப் போன்ற ஒரு பிரச்சினை ஆகும்.

கௌடில்யரிலிருந்து நவீனப் பொருளியல் வாதிகள் வரை எல் லோரும் பல்வேறு வகைகளில் பொருளாதார வளர்ச்சியில் மனித சக்தியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கூறி உள்ளனர். எனவே மக்கள் தொகையின் போக்கை முக்கிய அறிவியலின் ஆய் வாகக் கருதவேண்டும். டாக்டர் சின்ஹா (Dr. Sinha) அவர்கள் தாம் ஆய்விற்கு எடுத்துக்கொண்ட காலத்தை இரு பிரிவுகளில் பரிசீலனை செய்கின்றார். அதாவது 1921க்கு முன்னர் உள்ள காலம் என்றும், பின் உள்ள காலம் என்றும் இரு பிரிவுகளாகப் பிரித்துள் ளார். 1921க்கு முன் அமைந்த காலத்தில் பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் இடைவிடாது ஏற்பட்டமையால் மக்கட் தொகையின் வளர்ச்சி வேகம் தடைப்பட்டது. 1921க்குப் பின்னர் கருவளம் மாறுபடாத நிலையில், இறப்பு விகிதம் வீழ்ச்சி அடைந்தது. இத ளுல் மக்கட் தொகையின் வளர்ச்சி வேகம் அதிகரித்தது. அதிகக் கருவளம் ஒரு புறமும், குறைந்து செல்லும் மரண விகிதம் மற்றொரு புறத்திலுமாகச் சேர்ந்து உழைப்புச் சக்திகளின் வளர்ச்சிக்குப் பாதக மான ஒரு வயதுக் கட்டமைப்பை ஏற்படுத்துகின்றன. இந்த நூற் ருண்டின் முதல் 50 ஆண்டுகளில் மக்கட் தொகை மொத்தத்தில் 50% அதிகரித்துள்ளது. அதே காலத்தில் உழைப்பாளிகளின் தொகை 21% அதிகரித்துள்ளது. இதனுல் உழைப்பாளிகளாகப் பங்கு பெறுகின்றவர்களின் விகிதம் வீழ்ச்சியடைந்தது. உழைப்ப வர்களின் வேலைக் கட்டமைப்பிலும் அதிக மாற்றம் இல்லை. மக்கள் தொகை வளர்ச்சி வேகத்திற்கேற்பச் சாகுபடி செய்யப்படுகின்ற நிலத்தின் பரப்பளவும், வேளாண்மை உற்பத்தித் திறனும் அதி கரிக்கவில்லை. இதனுல் வேளாண்மை உற்பத்தியும், உணவு உற்பத்தியும் வீழ்ச்சி அடைந்தன. ஓரளவிற்கு இந்த சூழ்நிலையை ஈடு செய்யும் வகையில் தொழில் உற்பத்தி கணிசமாக உயர்ந்துள் ளது என்ருலும், தொழில் உற்பத்தியின் பங்கு நாட்டின் மொத்த வருவாயிலும், நிகர வருவாயிலும் மிகக் குறைவாகவுள்ளது குறிப் பிடத்தக்கது. விடுதலைக்குப் பின்னர் இந்தியப் பொருளாதாரத்தின் தேக்கநிலை தகர்த்து எறியப்பட்ட போதிலும், அதன் வளர்ச்சிவேகம் குறைவாகவே காணப்படுகிறது. வேளாண்மையின் மிகக்குறைவான வளர்ச்சி வேகம் இந்தியப் பொருளாதார அமைப்பின் துரித வளர்ச்சிக்கு முக்கிய இடையூருக உள்ளது. இதை 6வது அத்தியா யத்தில் டாக்டர் பாத்தியா (Dr. Bhatia) விவரித்து உள்ளார்.

வேளாண்மை வளர்ச்சியின் பல கூறுகளான நில உரிமை, வர்த்தகம் சார்ந்த வேளாண்மை, (Commercialisation of Agriculture) உணவு உற்பத்தி, விற்பனை, விவசாயக்கடன், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆதரவில் ஏற்பட்ட கூட்டுறவு இயக்கம் முதலியவை டாக்டர் பாத்தியாவால் விவரிக்கப்பட்டுள்ளன. பிரிட்டிஷார் ஏற்படுத்திய வரி வசூல் முறை, இந்தியாவில் நில உரிமைத் தொடர்புகளில் பெரியதொரு புரட்சியை ஏற்படுத்தியது. இதனால் சொத்து உரிமை பெற்ற புதியதொரு வகுப்பு தோன்றியது. அதில் முக்கிய மானவர்கள் வியாபாரிகள். அவர்கள் நில உடைமை (Zamindari) யை வருமானம் நல்கும் ஒரு சொத்தாகக் கருதினர். அவர்கள் வேளாண்மை பற்றிய எவ்வித உண்மையும் அறியாதவர்கள். அவர்கள் நிலத்தில் நிரந்தர முன்னேற்றம் செய்வதில் ஆர்வம் காட்டவில்லை. அவர்கள் தலத்தில் இல்லாத நிலக்கிழார்களின் வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்களின் முக்கியக் குறிக்கோள் குடியானவர்களின் வரிச்சுமையை உச்ச நிலைக்கு அதிகரிப்பதாகும். வட அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டக்காலத்தில்தான் இந்தியாவின் வர்த்தகப் புரட்சியும் நிகழ்ந்தது. இதனால் தற்கா லிகமாக அமெரிக்காவிலிருந்து பருத்தி வாங்குவதற்குப் பதிலாக, பிரிட்டன் இந்தியாவிலிருந்து தருவித்துக் கொண்டது. இதனால் இந்திய வேளாண்மையில் ஒரு பூரிப்பு நிலை ஏற்பட்டது. இந்தப் பூரிப்பு நிலை குறுகிய காலமே இருந்தது. 1875—1900 ஆண்டுகளில் இந்தியாவில் இடைவிடாது பஞ்சமும், கொள்ளை நோய்களும் ஏற்பட்டன. இந்தியா விடுதலை பெற்ற பின்னரும் இந்திய வேளாண்மையில் சில குறைகள் காணப்பட்டன. சிதறிய, துண் டாடப்பட்ட விவசாயப் பண்ணைகள், புராதன பண்ணைச் சாகுபடி முறைகள், மிகவும் பழைமையான அங்காடிக் கட்டமைப்புக்கள் வேளாண்மைக் கடன்கள், ஒரு ஏக்கரின் மிகக் குறைவான விளைச். சல் விகிதம் முதலியன இந்திய வேளாண்மையின் முக்கியக் கூறு களாக உள்ளன.

வெப்ப மண்டல நாடுகளில் வேளாண்மை உற்பத்தித்திறன் பெரும்பாலும் நீர்ப்பாசன வசதிகளைப் பொறுத்து அமையும். அத் தியாயம் 7ல் திரு. சர்மா அவர்கள் இதனை விளக்கிக் கூறியுள்ளார். 17-வது நூற்றுண்டின் பிற்பகுதியிலிருந்து இந்தியாவில் நீர்ப்பாசன வசதிகள் மிகுந்துள்ளன. நாடெங்கிலும் கிணறுகளும் கண்மாய் களும், வெள்ளக்கால்வாய்களும், வற்றுக் கால்வாய்களும் (Innundation Perennial) மற்றும் ஏரிகளும் நீர்த்தேக்கங்களும் நீர்ப் பாசன வசதிகளை அளித்தன. பிரிட்டிஷாரின் கஞ்சத்தனம் காரண மாக, மேற்கொண்டு நீர்ப்பாசன வேலைகள் மேற் கொள்ளப்பட வில்லை. இதனால் ஆசியாவின் களஞ்சியமாகக் கருதப்பட்ட நிலப் பகுதிகள், பஞ்சம் இடைவிடாது தாண்டவமாடும் பகுதிகளாக

மாறின. விடுதலைக்குப் பின்னர்தான் சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா, கோதாவரி; கிருஷ்ணா, மகாநதி, காவேரி, நர்மதை, தபதி ஆகிய ஆறுகளை முறையாகப் பயன்படுத்துவதற்கான மிகப் பெரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நாடெங்கிலும் சிறு அளவு நீர்ப்பாசனத் திட்டங்களும் ஏற்படலாயின.

விடுதலைக்குப் பின்னர் நில உரிமைகளின் அடிப்படையான மறு சீரமைப்புப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தப்பட்டது. இதனை அத்தியாயம் எட்டில் காணலாம். இடை நிலையாளர்களை அகற்றுவதும், வாரச் சீர்திருத்தமும், நில உரிமைக்கு உச்சவரம்பு ஏற்படுத்துவதும், நிலச் சீர்திருத்தத்தின் முக்கியக் கூறுகளாகும். இந்தியாவில் காணப்படும் நிலைமையை டாக்டர் குஸ்ரோ (Dr. Khusro) பின் வருமாறு சுருக்கிக் கூறி உள்ளார். "பெரும்பாலான இடைநிலையாளர்கள் அகற்றப்பட்டமையால் இரு வகை மாறுபட்ட விளைவுகள் தோன்றின. சில இடங்களில் முன்னாள் ஜமீன்தார்களுக்கு "பூமிதாரி" (Bhumidari) உரிமைகள் வழங்கப்பட்டன. அதாவது அவர்களுக்கு உடைமையாளர் என்ற வகையில் சாகுபடி செய்யும் உரிமைகள் வழங்கப்பட்டன. அத்தகைய இடங்களில் பண்ணை நிர்வாகம் செம்மையாக இருந்ததோடு, செறிந்த முதலீட்டையும், நவீனத் தொழில் நுட்ப முறைகளையும் மேற்கொள்ளுவது சாத்தியமாயின. இவைகளின் விளைவாக ஒரு ஏக்கர் நிலத்தின் உற்பத்தித் திறனும் உழைப்பாளி ஒருவரின் உற்பத்தித் திறனும் சராசரியாக உயர்ந்தது. மாறாக, இத்தகைய 'பூமிதாரி' உரிமைகள் வழங்கப்படாத இடங்களில் வாரப்பிரிவினை முறை வளர்ச்சி அடைந்தது. முன்பு தலத்தில் இல்லாத நிலக்கிழார்களாக இருந்தவர்கள், தற்சமயம் சாகுபடி செய்யும் உடைமையாளர்களாகத் தங்களை அழைத்துக் கொள்ளுகிறார்கள். இவர்களுடைய நிலத்தைக் குடியானவர்கள் சாகுபடிசெய்கிறார்கள். இதற்கு முன்பு பெற்றதைப் போலவே விளைச்சலில் மிக அதிகமான பங்கைப் குத்தகையாகப் பெற்று வருகிறார்கள், இவர்கள் நிலத்தை நேரிடையாகச் சாகுபடி செய்யாத போதிலும் சாகுபடி செய்யும் உடைமையாளர்களாகக் (Own Cultivator) கருதப்படுகின்றனர். இலக்கணப்படி பண்ணைக்கு மூலதனம் அளிக்கும் உரிமையாளர்கள் சாகுபடி செய்யும் உடைமையாளர்களாகக் கருதப்பட்டனர். அவ்வகையில் இவர்கள் பண்ணைகளுக்கு ஓரளவு மூலதனம் அளித்துள்ளமையால் சாகுபடி செய்யும் உடைமையாளர்களாகக் கருதப்படுகின்றனர். இத்தகைய இலக்கண விளக்கத்தைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு தங்கள் நலனைப்பாதுகாத்துக் கொள்கின்றனர். சாகுபடி செய்பவன் அல்லது வாரச்சாகுபடியாளன் ஓர் அளவிற்கோ அல்லது முழுமையாகவோ மூலதனத்தை அளித்து இருக்கலாம் என்பது புறக்கணிக்கப் பட்டது. எனவே

சுரண்டல் தன்மையுள்ள வாரப் பிரிவினை நாடெங்கிலும் பல பகுதி களில் நிலவக் காண்கிறோம். நிலச்சீர்திருத்தங்கள் ஏற்படுவதற்கு முன்பு இருந்ததை விட இப்போது இவை பெருகி உள்ளதாகக் கூறலாம். நில உச்சவரம்பைப்பற்றித் தவறான வாதங்கள் நிலவின. அதனைச் சட்டமாக்குவதில் தாமதம் ஏற்பட்டது. அதனை அமுலாக் குவதற்குள் பெரிய நிலக்கிழார்கள் தங்களையுடைய நிலத்தைப் பிரித்துக் கொள்வதற்குப் போதிய அவகாசம் கிட்டியது. எனவே, பெரும்பாலான மாநில நிலஉச்ச வரம்புச் சட்டங்கள் சட்டப் புத்தகங்களில் இடம் பெறுவதற்குள், மக்களின் நம்பிக்கை தகர்த்து எறியப்பட்டது. நில உச்ச வரம்பின் காரணமாக மறு பகிர்வுக்கு நிலம் கிடைக்காது என்ற நிலை ஏற்பட்டது. எனவே நிலச் சீர்திருத்தம் ஓரளவிற்கு வெற்றியும். ஓரளவிற்குத் தோல்வி யும் அடைந்து உள்ளதாகக் கூறலாம்.”

இந்தியாவில் வேளாண்மைத் தேக்க முற்றுள்ளக் காட்சி தொடர்ந்து நீடிக்கக் காண்கிறோம். வளர்ந்துவரும் மக்கட் தொகைக்குப் போதிய உணவு அளிப்பதற்காகவும், வளரும் தொழில்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் வேளாண்மை வளர்ச்சி அடைய வேண்டும். பிரிட்டிஷார் தங்கள் ஆட்சியில் இந்தியாவின் தொழில் வளர்ச்சி வேகத்தை வேண்டு மென்றே குறைத்தமையால், தற்சமயம் அதன் வளர்ச்சி வேகத்தை அதிகரிப்பது இன்றியமையாததாகிவிட்டது. ஒன்பதாவது அத்தி யாயத்தை எழுதிய ஆசிரியர்கள் பின் வருமாறு கூறுகிறார்கள்: “இன்றைய உலகில் ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற் றத்தை ஒப்புமையாக எடுத்துக் காட்ட வல்ல குறியீட்டு எண் ணாக எஃகு நுகர்வு அமைந்துள்ளது. இதற்கு முக்கியக் காரணம் எல்லாத் தொழில்களும் எஃகுத் தொழிலைச் சார்ந்து உள்ளமையும் மிகப் பெரியப் பொறிகளும் சிறியப் பொறிகளும் எஃகினால் தயாரிக் கப்படுவதுமாகும்.” இந்தியா முற்காலத்தில் இரும்பு, எஃகு முதலிய வற்றைத் தயாரிப்பதில் சிறந்த மரபினைப் பெற்று விளங்கியது. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யபபட்ட எஃகால் புகழ்பெற்ற “டமாஸ்கஸ்” (Damascus) வாட்கள் செய்யப்பட்டன. இந்திய எஃகுத் தொழில் இத்தகைய சிறப்பினைப் பெற்று இருந்தபோதிலும் பிரிட்டிஷார் அதன் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கவில்லை, இந்தியா வில் பெரியஅளவில் எஃகு உற்பத்தி செய்த பெருமை காலம் சென்ற ஜாம்ஷெட்ஜி டாடா அவர்களைச் சாரும். அவர் புதுமையைக் காணும் ஆர்வம் கொண்டவர்; தொழில் துணிவு பெற்றவர்; வருங் காலத்தை முன்னறிந்து கூறும் ஆற்றல் வாய்ந்தவர். அவரது வாழ்க்கை வரலாறு தொழில் துறையின் புதுமை ஆக்கத்திற்கு ஓர் உயர்தர எடுத்துக்காட்டாக உள்ளது. இரு உலகப் போர் களும், தொழில் வளர்ச்சி வேகப் போக்கும், இந்தியாவில் எஃகுத்

தேவையை அதிகரித்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பொதுத் துறையில் தோன்றவிருக்கின்ற மூன்று எஃகு ஆலைகளும் இயங்க ஆரம்பித்த பின்னரே இத்தகைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

இந்தியப் பருத்தி நெசவுத் தொழிலின் வளர்ச்சியைப் பிரிட்டிஷாரால் தடை செய்ய முடியவில்லை, 10வது அத்தியாயத்தில் டாக்டர் ஃபுகாஸவா (Dr. Fukazawa) இதனை விவரித்துள்ளார். இந்தியாவின் பருத்தி நெசவுத் தொழிலில் 465 ஆலைகள் உள்ளன. அவைகளின் நிலையான முதலும் நடப்பு மூலதனமுமாக மொத்தம் ரூ. 278 கோடி மதிப்புள்ள சாதனங்கள் உள்ளன; 114 லட்சம் கதிர்களையும், 2 லட்சம் தறிகளையும் உடையன. 7 லட்சத்திற்கும் அதிகமான உழைப்பாளிகள் இதில் வேலை செய்கிறார்கள். மொத்த உற்பத்தி, ஏற்றுமதி ஆகியவைகளின் அடிப்படையில் இந்தியப் பஞ்சாலைத் தொழிலைக் கருதும்போது, இது தனியார் துறையில் இந்தியாவில் அமைந்த மிகப் பெரிய தொழிலாக உள்ளது. அதே அடிப்படையில் இந்தியாவின் பஞ்சாலைத் தொழில் உலகத்திலேயே இரண்டாவதாக உள்ளது. (அதிகாரங்கள் குவிக்கப்பட்ட பொருளாதார அமைப்பு நாடுகளைத் தவிர) இத்தொழிலில் வேலை செய்பவர்கள் ஏனைய ஆலைத் தொழிலாளர் 22%, ஆக உள்ளனர். மொத்த நாட்டு வருவாயில் 1·8%ஐயும் தொழில்களின் மொத்த வருவாயில் 21·2%யும் இத்தொழில் அளிக்கிறது. 1955—56ல் கிடைத்துள்ள மொத்த அந்நிய மாற்று வருவாயில் 10% இத் தொழிலால் பெறப்பட்டது. இத்தொழில் துவக்கத்திலிருந்து இந்தியர்களது முதல் முயற்சியிலும், இந்தியர்களது மூலதனத்திலும், இந்தியர்களது நிர்வாகத்திலும் வளர்ந்துள்ளது. இதன் வளர்ச்சிக்குப் பல காரணங்கள் உண்டு. இத்தொழிலுக்குத் தேவையானக் கச்சாப் பொருள்கள் சிரமமின்றி வேண்டிய அளவு கிடைத்தன. இத்தொழிலுக்குத் தேவையான திறனும் இந்தியாவிலேயே கிடைத்தது. இதன் மூலதனத் தேவையும், தற்காலத்திய தர அளவில் பார்க்கின்றபோது, மிகக் குறைவு என்றுதான் கூற வேண்டும். இந்த நூற்றுண்டின் துவக்கத்தில் ஏற்பட்ட சுதேசி இயக்கமும், மக்களின் ஆதரவும் இத்தொழிலைப் பாதுகாத்தன. [1927ல் தான் அரசாங்கம் இத்தொழிலுக்குச் சட்டப்படி காப்பு அளித்தது.] இத்தொழிலின் அமைப்பு, செறிவு, கச்சாப்பொருள், உற்பத்தி, விற்பனை, பாதுகாப்பு. மற்றும் வளர்ச்சிப் பிரச்சினைகள் ஆகிய கூறுகளுடன் இணைத்து இத்தொழிலின் பரிணாமத்தை ஆசிரியர் விவரித்து உள்ளார்.

11-வது அத்தியாயத்தில் திரு. தாஸ் குப்தா (Mr. Das Gupta) அவர்கள் பருத்திக்கு அடுத்தாற்போல் இந்தியாவின். இரண்டா

வது முக்கியத் தொழிலாக அமைந்துள்ள சணல் தொழிலை விவரித்துள்ளார். ஏற்றுமதித் தொழில்களில் சணல் முதலிடம் பெற்றுள்ளது. இவ்வுற்பத்தியின் 80% நாட்டிற்கு டாலர் சம்பாதிக்கும் தனி இனமாக அமைந்துள்ளது. நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 25% சணலும், சணற் பொருள்களும் ஆகவுள்ளன. இதன் வளர்ச்சிக்கு இட அமைவும், செறிவும் ஒரு காரணமாகும். இத்தொழில் ஹூக்ளி ஆற்றின் இரு கரைகளிலும் 60 மைல் நீளத்திற்குச் 'செறிந்துள்ளது குறிப்பிடத்தக்க ஒன்ருகும். இத்தொழிலின் வளர்ச்சியை ஐந்து நிலைகளில் இக்கட்டுரை ஆசிரியர் விவரிக்கிருர். அவையாவன:

1. ஆரம்ப காலத்திலிருந்து முதல் உலகப் போர் வரை. 2. முதல் உலகப்போரிலிருந்து போருக்குப் பின்னர் ஏற்பட்ட பூரிப்பு வரை. 3. மந்தம் ஏற்பட்ட பத்து ஆண்டுகள் 4. இரண்டாவது உலகப்போரும் அதன் பின்னரும், 5, விடுதலைக்குப் பின்னர், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வரை மலிவான உழைப்பு கிடைத்தமையாலும், சணல் சாகுபடி செய்யப்படுகின்ற தலத்திலேயே இத்தொழிலின் இட அமைவு இருப்பதாலும், மற்றும் குறைவான விகிதத்தில் வரி விதிக்கப்படுவதாலும் டண்டியின் (Dundee) போட்டியை இத்தொழில் சமாளிக்க முடிந்தது என்று கூறலாம். இந்தியச் சணல் உற்பத்தியாளர்கள் சங்கம் (The Indian Jute Manufacturers Associations) ஒரு சர்வாதீன அமைப்பாகும். இதனுல் இது சர்வாதீன லாபத்தைப் பெறுகின்றது. பெரும்பாலான கச்சாச் சணல் விளையும் நிலங்கள் பாகிஸ்தான் வசம் இருந்தமையால் பிரிவினை இத்தொழிலுக்குப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. நற்காலமாக 1950—55 ஆண்டுகளில் இந்தியாவின் கச்சாச் சணல் உற்பத்தி திருப்திகரமாக முன்னேற்றம் அடைந்துள்ளது. போட்டி அடிப்படையில் இயங்குகின்ற இன்றைய உலகில் நவீனமாக்குகின்ற (Modernization) அளவைப் பொறுத்து, பருத்தி, சணல் ஆகிய இரு தொழில்களின் எதிர்காலம் அமையும்.

நவீனத் தொழில்கள் தோன்றுவதற்கு முன்னர், உலகத்தின் தொழிற் கூடமாக இந்தியா இருந்தது. கைவினைத் தொழில்கள் சிறந்த அமைப்பைப் பெற்று இருந்ததுதான் இதற்கு முக்கியக் காரணம். இந்த விவரங்களை 12வது அத்தியாயத்தில் திரு. சர்மா அவர்கள் சுருக்கமாகக் கூறி இருக்கிருர். தன்னிறைவு பெற்றக் கிராமங்கள் போற்றுதற்குரியன. அங்கு உள்ளூர்க் கைவினைஞர்கள் பலர் இருந்தார்கள். கருமான், தச்சன், நெசவுத் தொழிலாளி வாணிபர், சக்கிலி, குயவன், சாயம் தோய்ப்பவர், நறுமணப்பொருள்

தயாரிப்பவர், கல்தச்சர் முதலியவர்கள் தங்கள் தங்கள் குடிசைகளிலிருந்து கொண்டே வேலை செய்தனர். ஆனால் குடிசைத் தொழில் எல்லாம் குடிசைகளிலேயே செய்யப்பட்டு வந்தன என்பது தவறான ஒரு கருத்தாகும். ஏனெனில் "கார்கானா" (Karkhanas) க்கள் பேரளவு உற்பத்தி ஆலைகளாக இருந்தன. பிரிட்டிஷாரின் 'மாற்றாந்தாய்' மனப்பான்மையும், இங்கிலாந்தில் தொழிற் புரட்சி முடிவுற்றமையால் தோன்றிய போட்டியும், பிரிட்டிஷார் அரசியல் துறையில் சர்வாதிக்கம் பெற்று இருந்தமையாலும், இந்தியாவின் குடிசைத் தொழில்கள் வீழ்ச்சி அடையலாயின. தேசீய இயக்கத்தினர் துவக்கத்திலிருந்தே குடிசைத் தொழிலைப் பாதுகாக்கவும், மற்றும் அதனைத் திருத்தி அமைக்கவும் முயன்று வருவதாக டாக்டர் ஸ்ரீ மாலி (Dr. Shrimali) அவர்கள் 13வது அத்தியாயத்தில் கூறுகிறார். ஆகையால், விடுதலைக்குப் பின்னர் இத் தொழில் அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றது இயற்கையேயாகும். நாட்டின் பொருளாதாரச் சீரமைப்பை மேற்கொண்டுள்ள தேசீய அரசாங்கம் தனது சமூக, பொருளாதார இலட்சியங்களை அடைவதற்கான சாதனங்களாகச் சிறு அளவு தொழில்களையும் மற்றும், குடிசை, கிராமத் தொழில்களையும் பயன்படுத்திக் கொண்டது. இத்தொழில்களுக்கான வளர்ச்சித் திட்டம், நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் ஒரு கூறாகக் கருதப்படுகிறது.

இவ்வாறாகச் சிறந்த அமைப்பு முறைகளைப் பெறாத தொழில்களைக் கருதிய பின்பு, நவீன அமைப்பு முறைகளைப் பெற்றுள்ள ஏனையத் தொழில்களை எடுத்துக் கொள்வோம். 14வது அத்தியாயத்தில் திரு. குகா (Mr. Guha) அவர்கள் இந்தியத் தொழில் வளர்ச்சியின் புதுமைக் கூறாக நிலக்கரி சுரங்கத் தொழிலைப் பற்றி விவரித்திருக்கிறார். இந்தியாவில் நெடுநாட்களாக நிலக்கரி, ராணிகஞ்சில் இருந்துள்ள போதிலும், அதன் உபயோகத்தை 18வது நூற்றாண்டில்தான் தற்செயலாகக் கண்டு பிடித்தனர். துவக்கத்தில் சில பத்தாண்டுகளில் இந்தத் தொழிலை வளர்ப்பதற்காகப் பிரிட்டிஷார் மேற் கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. நிலக்கரியின் தேவை அப்போது அதிகரிக்கவில்லை. ஆகையால், இத் தொழில் வளர்ச்சியடையவில்லை. ரயில்வே, பஞ்சாலைகள், சணல் ஆலைகள் ஆகியவற்றின் வளர்ச்சிக் காரணமாக நிலக்கரியின் தேவை அதிகரித்தது. இதனால் 1850—59 ஆண்டுகளில் தான் இத் தொழில் வளர்வதற்கான அறிகுறிகள் தோன்றின. முதல் உலகப் போரின்போது பல புதிய தேவைகள் தோன்றின. ஏனைய தொழில்களைப் போலவே நிலக்கரியின் வளர்ச்சியிலும், பல பூரிப்பு நிலைகளும், மந்த நிலைகளும் ஏற்பட்டன. இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் இத் தொழிலின் முன்னேற்றத்திற்காகப் பல

கமிட்டிகள் நியமிக்கப்பட்டன. ஒரு சமயத்தில் நிலக்கரிப் பற்றாக் குறை காரணமாகத் தொழில் வளர்ச்சி தடைப்பட்டது. 1950ல் நிலக்கரிச் சுரங்கங்களுக்கான செயல் ஆய்வுக் குழு ஒன்று நிறுவப் பட்டது. உற்பத்தியையும் தரத்தையும் உயர்த்துவதற்காகவும் உற்பத்தி விற்பனை இவைகளைச் சீரமைப்பதற்காகவும் ஆலோசனை கள் கூறுவது இக்குழுவின் முக்கியப் பணியாகும். அவ்வகையில் இந்தியாவின் முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் சில முன் னேற்றங்கள் ஏற்பட்டன. அதன் அமைப்புகளையும், தொழில் நுட்பத்தையும் நவீனமாக்குவதைச் சார்ந்து இத்தொழிலின் எதிர் காலம் அமையும்.

தொழில் தாதுப் பொருள்களின் வளர்ச்சிக்குத் துரிதப் போக்கு வரத்து வசதிகள் அவசியம். எனவே, போக்குவரத்து ஒரு பிரச் சினையாக உள்ளது. இந்தியாவின் வர்த்தகம், தொழில் முதலியன தோன்றுவதற்கு முன்னரே இரயில்வே, போக்குவரத்தைப் பிரிட்டி ஷார் வளர்த்து உள்ளார்கள் என்றும், இதற்கு அரசியல் இராணுவ காரணங்கள்தான் முக்கியமானவை என்றும் திரு. ட்யூபே (Mr. Dubey) அவர்கள் 15வது அத்தியாயத்தில் கூறுகிறார். இங்கிலாந் திலும் இந்தியாவிலும் கிட்டத்தட்ட ஒரே காலத்தில் இருப்புப் பாதைகள் போடப்பட்டன. இந்தியாவில் இருப்புப் பாதை அமைப்பதற்குச் சாதகமான சூழ்நிலை நிலவியது. அதற்கான நிலம் மலிவாகவும், உழைப்பு அதைவிட மலிவாகவும் கிடைத்தன. கட்டிடச் சாமான்களைப் பெறுவதற்கான பொது வசதிகளும் சாதகமாக இருந்தன. இந்தியாவில் இருப்புப் பாதை அமைப்ப தற்குப் பிரிட்டிஷாரைத் தூண்டிய சக்திகளைப் பற்றி ஹார்டின்ஜ் பிரபு (Lord Hardinge) அவர்கள் (1346)பின்வருமாறு கூறியுள்ளார் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிகள் எழவிடாமல் தடுப்பதற்கும், விரை வில் போரை முடிப்பதற்கும், பேரரசின் பாதுகாப்பிற்காகவும், இருப்புப் பாதை அமைப்பது அவசியம். 1857ல் ஏற்பட்ட நிகழ்ச்சி கள் இந்த முடிவை மேலும் வலுப்படுத்தின. இவ்வாறு கூறுவ தால், அவர்களுடைய வர்த்தக நோக்கங்களை நாம் மறுப்பதாகக் கருத முடியாது. இது அவர்களுடைய இரண்டாவது முக்கிய நோக்கமாகும், இந்தியக் கச்சாப் பொருள்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு ஒரு சிறந்த சாதனமாக இயில்வேக்கள் இருந்தன. அத்துடன் பிரிட்டிஷ் தொழிற்சாலைப் பொருள்களுக்குப் பரந்த அங்காடியை இந்தியாவில் ஏற்படுத்தியது. இவ்வாறாக இந்தியா வைப் பிரிட்டிஷ் தொழில்களின் பின் நிலமாக மாற்றுவதற்கு இரயில்வே துணையாக இருந்தது,

1853 ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம் தேதி அன்று டல்ஹௌஸி பிரபு (Lord Dalhousie) அவர்கள் வெளியிட்ட இரயில்வேக்

குறிப்புக்கள் எதிர்கால இந்தியாவின் ரயில்வே வளர்ச்சிக்கு ஒரு மகாசாஸனமாகக்(Magna Carta) கருதப்பட்டது. இருப்புப்பாதைகள் அமைப்பது. மற்றும் நிர்வாகம். நிதி பற்றிய செயலாக்க ஆணைகள் அந்தக் குறிப்பில் உள்ளன. இருப்புப்பாதைகளைப் பரிசோதனைக்காக அமைக்கும் வழக்கம் கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக பிரதான இருப்புப் பாதைகள் (trunk line) அமைக்கப்பட்டன. முக்கியத் துறைமுகங்களுடன் மூன்று மாகாணங்களின் முக்கியப் பகுதிகளை இணைக்கவும், மாகாணங்களை ஒன்றுடன் ஒன்று இணைக்கவும் பிரதான இருப்புப் (trunk line) பாதைகள் அமைக்கப்பட்டன. இருப்புப் பாதைகள் அமைப்பதற்கு மிகப்பெரிய அளவில் முதலீடும், மிக அதிக அளவில் உலோகங்களும் தேவைப்பட்டன. இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் 'பழைய உத்தரவாத முறை' (Old Guarantee System) ஏற்படுத்தப்பட்டது. இது 1869 - வரை நீடித்தது. இந்த முறை டல்ஹௌஸி பிரபுவால் கொண்டுவரப்பட்டது. தனியார் துறையில் உள்ள கம்பெனிகள் இருப்புப்பாதை அமைக்க அனுமதிக்கப்பட்டன. இவை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்டு இருப்பதுடன், அதன் மேற்பார்வையில் செயல்படும். இருப்புப் பாதை அமைப்பிற்கான நிலம் அரசாங்கத்தால் இனமாக வழங்கப்படும். இரயில்வேச் கம்பெனிகள் எழுப்பிய மூலதனத்திற்கு 4½—5% வட்டி வீதத்தை இந்திய அரசாங்கம் உத்தரவாதம் அளித்தது, இத்தகைய உத்தர வாதத் திட்டம் இல்லையானல் மூலதனத்தைத் திரட்டுவது இயலாத காரியம் என்று சிலர் வாதிக்கின்றனர். இதை வில்லியம் துரோன்டன் (William Thornton) அவர்கள் மறுத்துள்ளார். உத்தரவாதம் இல்லாத நிலையில் அரசாங்கத்தின் கட்டுப்பாடும் இல்லாமலிருக்குமாதலால் இந்தியாவில் இருப்புப்பாதை அமைப்பதற்கு வேண்டிய மூலதனம் கிடைத்திருக்கும்," என்று அவர் கூறுகிறுர், இந்த உத்தரவாதத் திட்டம் சிக்கனத்திற்கு ஊக்கமளிக்காமல் பொறுப்பு இன்மையை வளர்த்தது. இருப்புப்பாதை அமைப்பதற்கான ஆக்கச்செலவை அதிகரித்தது, ஏற்கனவே அதிகமாக உள்ள பொது மக்களின் நிதிச்சுமையை மேலும் அதிகரித்தது. இந்தக் குறைகளை வைஸ்ராயின் மன்றமும் உணர்ந்தது. எனவே 1869ல் புதிய முறை ஒன்று துவக்கப்பட்டது. அதன் படி இருப்புப் பாதைகளை அமைப்பதுடன் இரயில்வேயின் நிர்வாகமும் அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்கும். இந்தப் புதிய திட்டத்தின்படி ஆண்டு ஒன்றுக்கு 3000 மைல்கள் வீதம் மொத்தம் 100,000 மைல்களுக்கு இருப்புப்பாதை போடவேண்டும். இந்த முடிவின் காரணமாக அரசினர் தலையிடாக் கோட்பாடு (Laissez-faire) கைவிடப்பட்டது. பொருளாதாரச் செயல்களில் அரசாங்கம் பங்குபெறும் புதிய சகாப்தம் இந்தியாவில் தோன்றியது என

லாம 1882 ல கமபெனிகள திருமபவும ஏறபடுததபபடடன இது முன்பு மேறகொணட திடடததிறகு முறறிலும வேறுபட்ட ஒனறாகும இனறைறககு அரசாஙகததின சொததாக இநதிய ரயிலவே இருககிறது விடுதலைககுப பினனா பொருளாதார அமைபபின தேவைகளையும சமூகததின தேவைகளையும முறறி லும நிறைவேறறுகினற வகையில இது இயஙகிவருகிறது இநதியாவில நவீனத தொழிலகளின உணமையான முனனோடியாக இரயிலவே அமையும எனறு மாாகஸ முனபு அறிவிதத கூறறை உறுதிபபடுததும வகையில் இநநிகழசசிகள அமைநதுள ளன

இரயிலவேயைத தவிர கடல விமான சாலைப போககுவரதது முதலிய சாதனஙகளையும கருதவேணடும 16 வது அததியாயத்தில டாகடா கபூா (Dr Kapur) அவாகள நமநாடு மிகபபழமையான காலததிலிருநதே கடலில ஆதிககம செலுததி வநத ஒரு வலலரசாகத திகழநதுளளது எனறும இததகைய நிலை பிரிடடிஷ ஆடசியில சிதறுணடு போயிறறு எனறும கூறுகிறாா பிரிடடிஷாரின கொளகை காரணமாக இநதியக கபபல போககுவரத்துத தொழில வேறுபடுததப படடதுடன கொடுமைககும உளளாககபபடடது இததகைய நிலை முதல உலகபபோாவரை நீடிததது எனலாம தேசிய இயககததினா அளிதத ஊககததின பேரில 1919-ல ஸிநதியா கபபல கமபெனி (Scindia Navigation Company) தோறறுவிககபபடடது கபபல தொழிலை இநத நாட்டில உயிாபபிககும ஒரு முயறசியாக இது அமைநதது 1923 ல் மககளுடைய விருபபததிறகு இணஙக இநதியக கடல வாததகக கமிடடி (Indian Mercantile Marine Committee) அரசாஙகததால நியமிககபபடடது டபபெரின (Dufferin) என்ற பயிறசிக கபபலை இககுழு அமைததைதத தவிர வேறு குறிப பிடததகக செயல எதுவுமிலலை இரணடாவது உலகப போரின போது கபபலகள ஏறறிச செலலும சுமைத திறனில (tonnage) பாதி அழிககபபடடது விடுதலைககுபபினனா பலமுனனேறறஙகள தோன்றின கபபல போககுவரதது வசதிகள பல நாடுகளுடன தொடாபு கொளளும வகையில அதிகரிககபபடடன துறை முக வசதிகள விரிவாககபபடடன இதைததவிர பொதுத துறையில கபபல தொழில அமைந்ததும தேசிய கபபலபோாடு (National Shipping Board) அமைககபபடடதும குறிபபிடததகக வையாகும 1911 ல அலகாபாததிறகும நயினிககு இடையே விமானத தபால ஏறபடட காலததிலிருநது ஆகாய விமானப போககுவரதது சகாபதம ஏறபடடதாகக கூறலாம. இநதிய மூலதனம இததொழிலில 1931 வரை ஈடுபடவிலலை 1932க்குப பின் 1945 வரையான காலததில பல ஆகாயவிமானக

கம்பெனிகள் தோன்றின. 1945 முதல் 1953 வரையில் அவைகளின் மலர்ச்சி ஒரு சீராக அமையவில்லை. 1950-ல் இந்திய அரசாங்கம் விமானப் போக்குவரத்து ஆய்வுக்குழு ஒன்றை நியமித்து "விமானப் போக்குவரத்து நிலையானப் பொருளாதார அடிப்படையில் அமைய வேண்டும் என்றும், அதன் எதிர்கால வளர்ச்சி செம்மையாக அமையவேண்டும்என்றும் உறுதிப் படுத்திக் கொள்வதற்கு இக்குழு அவசியமென்று கருதப்பட்டது." விமானப் போக்குவரத்துத் தொழிலைத் தேசிய மயமாக்குவதற்கு இது அடிகோலியது. இவ்வாறு நாட்டு உடைமையாக்கப்பட்டதன் வெற்றியைப் பின்வருவனவற்றிலிருந்து அறியலாம். விமானங்கள் அதிக காலத்திற்கும், அதிக தூரத்திற்கும், பறக்கின்றன. முன்பு இருந்ததைவிட அதிகப் பிரயாணிகளையும், அதிகச் சரக்குகளையும், தபால்களையும் ஏற்றிச் செல்கின்றன.

விவசாய நாட்டில் சாலைகள் முக்கியமான போக்குவரத்துச் சாதனங்களாக உள்ளன. புராதன காலத்திலும் இடைக்காலத்திலும் இந்தியாவின் பல முக்கியப் பகுதிகளைப் பெருஞ்சாலைகள் இணைத்துள்ளன. பிரிட்டிஷார் காலத்தில் இவை சரிவர பராமரிக்கப்படவில்லை. இது அவர்களுடைய போக்குவரத்துக் கொள்கைகளுக்கு ஒரு மோசமான விளக்கவுரையாக உள்ளது. 1943ல் தீட்டப்பட்ட நாக்பூர் திட்டமும், 1958ல் நடந்த இந்தியச் சாலை மாநாடும் இந்தியச் சாலைப் போக்குவரத்தின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை சிபாரிசு செய்தன. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின் ஒரு கூறுகச் சாலைப் போக்குவரத்து அமைந்துள்ளது. தேசியப் பொருளாதார அமைப்பில் அது முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.

பொருளடக்கம்

1. பொருளாதார வரலாறு

வி. பி. சிங் (V. B. Singh)

பொருளாதார வரலாறு தொன்மையானது. ஆதாம் ஸ்மித்தின் (Adam Smith) **'நாடுகளின் செல்வம்'** (Wealth of Nations) என்ற நூல் வெளிவந்த பிறகுதான் பொருளாதார வாலாற்றிற்கு முக்கியத்துவம் ஏற்பட்டது எனலாம். ஜெர்மன் நாட்டு வரலாற்றுக் கோட்பாட்டினர்களும் (Historical School), காரல் மார்க்ஸும் (Karl Marx) இதற்கு நிலையான அடிக்கல் அமைத்தனர். சாதாரணமாக வரலாற்றிற்கும் தேற்றத்திற்கும் இடையே உள்ள தொடர்புகளைச் சரியாகக் கவனிக்கத் தவறி விடுகின்றனர். எடுத்துக் காட்டாக ஸோம்பார்ட் (Sombart) அவர்களின் கூற்றைக் குறிப்பிடலாம். அவர், 'வரலாறு இல்லையேல் தேற்றமும் இல்லை' என்று கூறுகிறார்.[1] பொருளாதாரத்தில் இத்தகைய தேற்றச்சமன்குறை ஏற்படாதவாறு பொருளாதார வரலாறு அமைந்துள்ளது. அதாவது பொருளாதாரத் தேற்றத்திற்குப் பொருளாதார வரலாறு அடிப்படையாக உள்ளது. பொருளாதாரத் தேற்ற அடிப்படையில் வரலாற்றையும், வரலாற்று அடிப்படையில் பொருளாதாரத் தேற்றத்தையும் இது விளக்கிக் கூறுகிறது. இவ்விரண்டின் சார்புத் தொடர்பை வலியுறுத்துவதுடன், அவைகளை வளம் உடையதாகவும் செய்கிறது.[2]

---

[1] Hayek, F. A. அவர்கள் தொகுத்த, **'Capitalism and the Historians'** (London 1954) என்ற நூலில், பக். 57-ல் கூறப்பட்டுள்ளது.

[2] Leo Huberman எழுதிய **"Man's Worldly Goods"** என்ற நூலின் முகவுரையில்பின்வருமாறு எழுதுகிறார்: "இந்தப் பிணைப்பு அவசியமானதுடன், முக்கியமானதும் ஆகும். வரலாற்றைக் கற்பிக்கின்றபோது, பொருளாதாரக் கூறுகளைப் பற்றிப் போதிய கவனம் செலுத்தாதபோது, அது குறையுடையதாக இருக்கின்றது. வரலாற்றுப் பின்னணியிலிருந்து பிரிக்கப்பட்ட பொருளாதாரத் தேற்றம், உண்மையிலிருந்து பிறழ்ந்துள்ளமையால் அச்சுறுத்தக்கூடியதாக உள்ளது. பொருளாதாரம் வரலாற்றுச் சூன்யத்தில் ஆராயப்பட்டும், கற்பிக்கப்பட்டும் வருகிறவரை அது 'இருண்ட இயல்' (Dismal Science) ஆக இருந்துவரும்.

1. பொருளியல் இயல்புகள்

பொருளாதாரத்திற்கும், வரலாற்றுக்கும் இடையே பொதுவான ஒரு பகுதியாகப் பொருளாதார வரலாறு அமைந்துள்ளது. பொருளாதாரத்தின் ஒரு பிரிவுப் பாடமாக இதனை முறையாகப் படிப்பவர்கள் எண்ணுகிறார்கள். இருந்தபோதிலும் அதன் இயல்பு, நோக்கம் முதலியவைபற்றி முரணான கருத்துகள் நிலவுகின்றன. ஆனால், பொருளாதாரத்தைப்பற்றிப் பலரும் பொதுவான ஒரு கருத்தைக் கொண்டு உள்ளார்கள். இது ஒரு சமூக இயல் என்றும், வளர்ச்சியின் வெவ்வேறு நிலைகளில் காணக் கூடிய பொருளாதாரச் செயல்களின் இயல்பையும், அமைப்பு வகைகளையும் ஆய்ந்து கூறவல்லது என்றும் கருதுகின்றனர்.[3] அவ்வாறு பொருளாதார வளர்ச்சியின் பல்வேறு நிலைகளை ஆய்வதற்கு, ஒப்புமை முறைகள் இன்றியமையாத கருவிகளாக உள்ளன. இவை வரலாற்றையும், பொருளாதாரத்தையும் நெருக்கமாகப் பிணைக்கின்றன.

வளம் அனைத்தையும் இயற்கையே நல்கியுள்ளது. மனிதன் இயற்கையின் ஒரு பகுதியாவான். வளங்கள் பற்றாக் குறையாக இருப்பதாகத் தொன்மைப் பொருளியலார், (Classicists) **கருதினர்**. எனவே, அவைகளைப் பெருக்குவதற்கு வேண்டிய வழி முறைகளில் கவனம் செலுத்தினர்.[4] வளங் களைப் பெருக்கும் முயற்சியில் கூட்டுறவின் பயனை மனிதன் தெரிந்துகொண்டதுடன், அதனைப் பின்பற்றவும் செய்தான். உணவு, உறைவிடம், உடை, கல்வி, சமூக கௌரவம், பொழுது போக்கு இவைகளைத் தேடும்போது மனிதன் நாகரிகத்தை உருவாக்குகிறான்.[5] தன்னுடைய மனவுணர்ச்சி, சமயக் கருத்து, அரசியல், தேசிய நோக்கங்கள் இவைகளை வெளிக் காட்டுகின்ற விதத்திலும் நாகரிகத்தை ஏற்படுத்துகிறான். சமூகத் தின் நாகரிகத்தைப் பிரதிபலிக்கும் உற்பத்தி, பகிர்வு, பரிவர்த்தனை ஆகியவைகளின் நிலைமைகளுக்கு ஏற்பப் பொருளாதார தேற்றங் கள் அமைந்துள்ளன. இவைகளை வரலாற்று அடிப்படையில் தான் அறிந்து பயன் அடைய முடியும். எனவே, வரலாற்றைத் தவிர்த்துத் தேற்றத்தை மட்டும் முழுமையாக அறிய முடியாது.

3 இவ்வாசிரியரின் 'Some Problems of Research in Labour Economics' என்ற கட்டுரை **'The Indian Journal of Labour Economics'** என்ற சஞ்சிகையில் (Vol. III, No. 4, 1961, pp. 267—9) வெளிவந்ததைப் பார்க்கவும்.

4 பார்க்கவும்: Keirstead, B. S. எழுதிய **'The Theory of Economic Change'** (Toronto, 1948), என்ற நூல், p. 69.

5 பார்க்கவும்: Lange, O., என்பவர் எழுதிய "Subject Matter of Economics" என்ற கட்டுரை, 'Review of Economic Studies' என்ற சஞ்சிகையில் (Vol. 13, 1946—47) வெளிவந்துள்ளது.

2. வரலாற்றின் இயல்பு[6]

பொருளாதாரச் செயல்களின் அமைப்பு முறைகள் ஒவ்வொரு தலைமுறையிலும், ஒவ்வொரு சகாப்தத்திலும், ஒவ்வொரு நாட்டிலும் எவ்வாறு அமைந்துள்ளன?[7] இது வரலாற்றில் அமைந்த ஒரு பாடமாகும். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் ஜார்ஜ் மக்காலே ட்ரெவெல்லியன் சொற்பொழிவுகள் (George Macaulay Trevelyan Lectures in the University of Cambridge) ஆற்றும்போது(1961-ஆம்ஆண்டு ஜனவரி-மார்ச் மாதங்களில் பேராசிரியர் ஈ. எச். கார் (E H. Carr) அவர்கள் வரலாற்றை எல்லோரும் அறிந்துகொள்ளும் வகையில் தெளிவுபடுத்தியிருக்கிறார்.[8] வரலாற்றின் இருவகைக் கருத்துகளையும் பேராசிரியர் கார் விளக்குகிறார். (அ) வரலாற்று அறிஞன் மேற்கொண்ட ஆராய்ச்சியை வரலாறு என்று கருதலாம். (ஆ) பழமையான உண்மைகளைப்பற்றிய ஆய்வை வரலாறு என்று கருதலாம்.[9] 'வரலாறு என்பது ஒரு நிகழ்ச்சித் தொடராகும். வரலாற்று அறிஞனும், அவன் காணும் உண்மைகளும், சார்புத் தொடர்பு உடையன. அந்த விளைவுகளின் தொடர்ச்சியாக வரலாறு அமைந்துள்ளது, எதிர் காலத்திற்கும் இறந்த காலத்திற்கும் இடையே கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்த ஓர் இணைப்பாகும்.'[10] 'பழைய நிகழ்ச்சிகளுக்கும் முன்னேற்றத்தின் முதிர்ச்சியால் வெளிவருகின்ற எதிர்கால இலட்சியங்களுக்கும் ஏற்பட்ட ஒரு கருத்து இணைப்பாகவும், கருதலாம்.[11] வரலாற்று அறிஞன் காண்கின்ற 'உண்மைகள் ஒருபுறமாகவும் அதற்கு அவன் கூறும் விளக்கங்கள் மற்றொரு புறமாகவும் உள்ளன. அதாவது உண்மையையும், அதன் மதிப்பீடும்

[6] இப்பகுதியின் பெரும்பாலான கருத்துகள் பேராசிரியர் E. H. Carr அவர்களின் **What is History? (London 1961)** என்ற நூலைச் சார்ந்துள்ளன.

[7] 'புவியின் தோற்ற'த்தை (On the Creation of Earth)ப் பற்றி Goethe பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'நாம் காணும் ஒவ்வொரு பொருளும், திரும்பத் திரும்ப ஏற்படும் ஒவ்வொரு நிகழ்ச்சியும், நம்மிடையே ஆர்வத்தை ஏற்படுத்துகின்றன. அவை தோன்றுவதற்கான காரணத்தை அறிய முற்படுகிறோம். உண்மையான வரலாறு என்பது நிகழ்ச்சிகளின் பட்டியலாக மட்டும் இருக்க முடியாது. ஒரு நிகழ்ச்சியிலிருந்து மற்றொன்று தோன்றிய விதத்தை அது விவரித்துக் கூறும்." இது பேராசிரியர் Jurgen Kuczynski அவர்களால் எடுத்தாளப்பட்டது. ஜெர்மன் மொழியில், கார்ல் மார்க்ஸின் நினைவுச் சொற்பொழிவாக 'Economic History as a Science' என்ற தலைப்பில், German Academy of Sciences, Berlin-ல் May, 5, 1955-ல் வாசிக்கப்பட்டது.

[8] முன்கூறியபடி Carr, E. H.

[9] முன்கூறியபடி பக். 49; மற்றும் Collin Wood, R. G. அவர்கள் எழுதிய **'The Idea of History' (Oxford 1946)**யையும் பார்க்கவும்.

[10] Carr, E.H., முன்றி கூயபடி பக். 24.

[11] முன் குறிப்பின்படி. பக். 118.

வரலாற்று அறிஞனைச் சமநிலையில் இருக்கும்படி செய்கின்றன.[12] அவனால் இவைகளைப் பிரிக்கமுடியாது. மாறுபடாத உலகில் உண்மையையும் அதன் மதிப்பீட்டையும் வேறு படுத்திக் கூறுவது சாத்தியமாக இருக்கலாம். அத்தகைய உலகில் வரலாற்றுக்கு இடமே இல்லை. மாற்றம் வரலாற்றின் பிழிவாக உள்ளது. அது இயங்கிக்கொண்டே வருகிறது. பழைய முறையில் குறிப்பிடக்கூடும் ஆனால் முன்னேற்றம் என்றும் கூறலாம்.'[13] வரலாறு என்பது சமூகத்தின் நிகழ்ச்சி முறைமையாகும் (process). ஒவ்வொருவரும் சமூகத்தின் உறுப்பினர் என்ற வகையில் அதில் பங்குகொள்கிறார்கள். 'வரலாறு இன்றைக்கு இரு முக்கியப் பணிகளைச் செய்துவருகிறது. முதலாவதாகப் புராதன சமூகத்தின் பெருமைகளை இன்றைய மனிதன் உணரும்படி செய்கிறது. இரண்டாவதாக இன்றைய சமூகத்தை அவனுடைய முழுமையான கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவர உதவுகிறது.'[14]

இந்நிலையில் வரலாற்றின் இயல்புகளைப்பற்றிய சில ஐயப்பாடுகளைக் களைவது அவசியம்.[15] (அ) வரலாற்றில் பொதுமைக் கூற்றுகள் இடம் பெறுகின்றனவா? (ஆ) வரலாற்றிலிருந்து நாம் அறிய வேண்டிய பாடம் ஏதாவது உண்டா? (இ) வரலாற்றின் அடிப்படையில் எதிர்காலத்தை முன் அறிந்து கூறமுடியுமா? (ஈ) தற்சார்பு அற்ற (objectivity) நிலையை வரலாற்றில் காண

12 திருவாளர் ஹீட்டன் (Heaton) பேராசிரியர் ஆஷ்டன் (Ashton) ஆகிய இருவரும் 'முதலாளித்துவம்', 'ஏகாதிபத்தியம்' என்ற இரு சொற்களும், அகமதிப்பீட்டின் வாயிலாக எழுந்த தீர்ப்பைக் குறிப்பிடுவனவாக உள்ளனவென்றும், எனவே அவைகளை அகராதியினின்றும் நீக்கவேண்டும் என்றும் கூறுகிறார்கள். வார்ஷா (Warsaw) பல்கலைக் கழகப் பேராசிரியை குலா (Kula) அவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்: 'அகமதிப்பீட்டின் (Subjective) தீர்ப்பாக அமைந்த சொற்கள் சமூக இயல் அகராதிகளினின்றும் நீக்கப்படுமேயானால், அந்த அகராதி இணைக்கும் சொற்களைக் கொண்டதாக—அல்லது அதைப்போல—அமையும் என்றும், ஏனைய சொற்கள் நீக்கப்படும் என்று தான் அஞ்சுவதாகவும் கூறுகிறார்.' **Les Debut du Capitalisme En Pologne Dans La Perspective De L'Histoire Comparees** Submitted to the Conference Tenke A La Bibliotheque De L'academie, Polonaise a Rome, Le 22 Hors, 1960.

13 Carr, E. H. முன் கூறியபடி பக். 126. முன்னேற்றத்தின் ஆவணமாக மட்டும் வரலாறு அமையவில்லை. அது ஒரு முற்போக்கான அறிவியலாகவும் அமைந்துள்ளது என்று பேராசிரியர் ஆக்டன் கருதுகிறார். (Professor Acton) முன் குறிப்பில் பக். 109.

14 முன் குறிப்பின்படி பக். 49.

15 மேலும் பார்க்கவும். (அ) Gardiner, P. அவர்கள் தொகுத்த **'Theories of History'** (London, 1959) என்ற நூலும்; (ஆ) Collingwood, R. G. அவர்களின் **'The Idea of History'** (Oxford, 1946) என்ற நூலும்; (இ) Walsh, W. H., அவர்களின் **An Introduction to Philosophy of History** (London, 1951) என்ற நூலும்; (ஈ) Bukharin, N. A., அவர்களின் **Historical Materialism: A System of Sociology** (New York, 1925) என்ற நூலும்; (உ) Cornforth, H., அவர்களின் **Historical Materialism** (London, 1952) என்ற நூலும் பார்க்க வேண்டியவை.

முடியுமா? (உ) வரலாற்றில் பின்விளைவுகளைத் தோற்றுவிக்கும் நிகழ்ச்சிகளின் முக்கியத்துவம் என்ன?

(அ) வரலாற்றின் பொதுமைக் கூற்றுகள்: வரலாற்றைப் பற்றிய சில தவறான கருத்துகள் நிலவக் காண்கிறோம், **தனித் தன்மை** வாய்ந்த, **சிறப்பு நிகழ்ச்சிகள்** மட்டுமே வரலாற்றில் இடம் பெறுகின்றன என்றும், பொதுவான, எல்லோரும் ஏற்கக் கூடிய நிகழ்ச்சிகளை அறிவியல் கூறுகின்றன என்றும் சிலர் கருதுகிறார்கள். இதனை 'அறிவற்ற' கூற்று என்று பேராசிரியர் கார் கருதுகிறார். 'வரலாறு பொதுமைக் கூற்றுகளில்தான் வளர்ந்துள்ளது' என்று வலியுறுத்துகிறார்.[16] **கேம்பிரிட்ஜ் நவீன வரலாறு** (Cambridge Modern History) என்ற நூலில் திரு. எல்டன் (Elton), 'வரலாற்று உண்மைகளைச் சேகரிப்பவனினின்றும் வரலாற்று அறிஞனைப் பொதுமை உரைகள்தான் வேறுபடுத்திக் காட்டுகின்றன'[17] என்று கூறுகிறார். இதைப்போலவே மாதிரிப் பொருள்களை (specimens) சேகரிப்பவனினின்றும் இயற்கை அறிவியல்வாதியை வேறுபடுத்துவது பொதுமை உரைகள் என்று பேராசிரியர் கார் குறிப்பிட்டுள்ளார்.[18] அறிவியலில் பொதுமை உரைகள் காணப்படுகின்றன என்பது உண்மை. அதே காரணத்தினால் ஏனைய இயல்களில் இது காணப்படவில்லை என்பது தவறு. எடுத்துக்காட்டாக இரு புவி அமைப்புத் தோற்றங்கள், ஒரே இனத்தைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள், ஒரு செடியின் இரு இலைகள், இரு அணுக்கள் ஒரேமாதிரியாக இருந்ததில்லை.[19] அவ்வாறே வரலாற்றிலும் இரு நிகழ்ச்சிகள் ஒரேமாதிரியாக இல்லை. ஃபிரெஞ்சுப் புரட்சியோ, சோவியத் புரட்சியோ ஒரே மாதிரியானவை என்று கூற முடியுமா? தோற்ற அமைவிலும், உட்கருத்திலும் அவை வேறுபடுகின்றன. அவ்வாறு இருந்தபோதிலும் வரலாறு நமக்குப் பயன் அளிக்கத்தான் செய்கிறது. இன்றைய குழப்பமான பிரச்சினைகளின் தீர்வுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக நமது முன்னோர்கள் விளங்குகிறார்கள். அவர்கள் அனுபவத்தால் கண்ட பொதுமைக் கூற்றுகள் இன்றைக்கும் ஏற்றுக்கொள்ளக் கூடியவைகளாக உள்ளன. அத்தகைய பொதுமைக் கூற்று ஒன்றை இங்கே குறிப்பிடலாம். 'அதிகாரம் ஒருவனை ஊழல் நிறைந்தவனாக்குகிறது. முழுமையான அதிகாரம், முழுமையான ஊழல் நிறைந்தவன் ஆக்குகிறது' அவ்வாறே பொருளாதார வரலாற்றினின்றும்

[16] Carr, E. H., முன் கூறியபடி பக். 58.

[17] முன் குறிப்பின்படி பக். 58—59

[18] முன் குறிப்பின்படி.

[19] முன் குறிப்பின்படி பக். 57.

எடுத்துக் காட்டாக ஒரு பொதுமை உரையைக் கூறலாம். முதலாளித்துவம் நெருக்கடிகளையும், போர்களையும்—மூளாப்போர் உள்பட(Cold war)—பலவற்றையும் தோற்றுவிக்கின்றன. இப்படிக் கூறுவதால் நிகழ்ச்சிகளின் பட்டியலாக வரலாறு மாறிவிடுவதில்லை, அங்குள்ள ஒவ்வொரு நிகழ்ச்சியும் பொருத்தப்பட்டு இருக்கவேண்டும் என்பதில்லை.[20] மார்க்ஸ் இதனைத் தெளிவுபடுத்துகிறார். 'வேறுபாடுள்ள வரலாற்றுச் சூழல்களில் நிகழக்கூடிய ஒரேமாதிரியான நிகழ்ச்சிகள் முற்றிலும் வேறுபட்ட விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இவை ஒவ்வொன்றின் தனித்தனி பரிணாமத்தையும் ஆய்ந்த பின்னர்தான் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அப்போதுதான் இந் நிகழ்ச்சிகளுக்கு அடிப்படையாக அமைந்த கோட்பாட்டை உணரமுடியும். பல நிகழ்ச்சிகளையும் ஒரே அடிப்படையில் ஆயவிழைவது, **பல பூட்டுகளையும் ஒரே திறவுகோலால் திறக்க முற்படுவதாகும்** (passe-partout). **வரலாற்றின் தத்துவத் தேற்றங்கள்** சிறந்த பண்புகளை உடையன. அவை வரலாற்று நிகழ்ச்சிகளுக்கும் மேலான நிலையில் உள்ளன,"[21]

வரலாற்று அறிஞன் சிறப்பான நிகழ்ச்சிகளிலிருந்து பொதுவான உண்மைகளைக் காண முயலவேண்டும். அவன் தன்னுடைய கூற்றைச் சோதித்துப் பார்க்கவும் இது உதவுகிறது. எனவே சிறப்பானவைகளுக்கும், பொதுவானவைகளுக்கும் இடையே உள்ள தொடர்புகளை வரலாறு ஆய்ந்து கூறுகிறது. இவை உண்மையும், அதன் விளக்கத்தையும் போலுள்ளன. இதைப் பிரிப்பது இயலாத காரியம். இவைகளில் ஒன்றைவிட மற்றொன்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதும் இயலாத காரியம்.[22]

(ஆ) வரலாற்றுப் பாடங்கள் ; அனுபவ வழியாகப் பெற்ற பாடங்கள் வரலாற்றின் பொதுமை உரையாக உள்ளன. அவைகளை வெவ்வேறு நிகழ்ச்சிகளுக்கும் பொருந்துமாறு செய்வது இதன் முக்கியப் பணி ஆகும். எடுத்துக் காட்டாக அதிக விலை உயர்வு

20 மேலே கூறியபடி பக். 58—59.

21 முன்கூறியபடி பக். 59. Marx and Engels களின் 'Works, (Russian Edition), XV, 378.லிருந்து எடுத்து ஆளப்பட்டது. பேராசிரியர் கார் நமக்குப் பின்வரும் செய்தியை அறிவிக்கிறார். ருஷ்ய சஞ்சிகை (**Russian Journal Otechestvennye Zapiski** (1877)யில் வெளியிடப்பட்ட கடிதத்திலிருந்து இப்பகுதி எடுத்தாளப்பட்டதாகக் கூறுகிறார். அதன் அடிக்குறிப்பில் அவர் பின்வருமாறு எழுதுகிறார்: "வரலாற்றுப் போக்குகள் 'யாவராலும் ஏற்கக்கூடிய நியதிகளிலிருந்து பெறப்பட்டன' என்று மார்க்ஸ் கருதுகிறார் என்றும், அது 'வரலாற்றுத் தத்துவத்தின் பெருந்தவறு' ஆகும் என்றும பேராசிரியர் போப்பர் கூறுகிறார். (**The Poverty of Historicism,** 1957, pp. 128-129): இக்கருத்தைத்தான் மார்க்ஸ் குறிப்பாக மறுத்துள்ளார்",

22 முன் குறிப்பின்படி.

மக்களிடையே சொல்லொணுத மனக்குறையை ஏற்படுத்துகிறது. இதனைத் தவிர்ப்பதற்கு முயலுகிறோம். இவ்வாருக வரலாற்று அனுபவத்தால் அறிந்த உண்மைகள் நமக்குப் பேருதவியாக இருக்கின்றன இவை சார்புத் தொடர்புடையன. இருவழி கருத்து மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவை. பழமையின் அடிப்படையில் நிகழ்காலத்தை அறிய முற்படுகின்றபோது, நாம் நிகழ்காலத்தின் அடிப்படையில் பழமையை அளந்து அறிய முற்படுவதாகவும் கொள்ளலாம்.[23]

(இ) வரலாற்றில் முன் கூறுவதன் முக்கியத்துவம்

பொதுமைக் கூற்றுகளைக் கொண்டு ஓரளவிற்கு எதிர்காலப் போக்குகளை அனுமானிக்க முடியும். விஞ்ஞானத்தில் பொதுமைக் கூற்றுகளை நியதிகள் அல்லது விதிகள் என்று அழைக்கிறோம். இவை குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் மேற்கொண்டு நிகழக்கூடியவற்றை முன் அறிவிக்கின்றன. அந்தச் சூழ்நிலை சோதனைச்சாலைகளில் காணக்கூடிய கட்டுப்பாட்டிற்குட்பட்ட சூழ்நிலைகளாக இருக்கலாம் (இதனைத்தான் பொருளியலில் 'ஏனைய பொருள்கள் சமநிலையில் இருக்கின்ற' போது என்று குறிப்பிடுகிறோம்).விஞ்ஞான விதிகள் பொதுவாகக் காணக்கூடியத் தன்மைகளைக் கூறுகின்றன. அவை தனிப்பட்ட ஒன்றைக் குறிப்பிடுவதில்லை. இங்குப் பேராசிரியர் கார் அவர்களின் இரு சிறப்பு உதாரணங்களைக் குறிப்பிடலாம்.[24] (அ) ஒரு குறிப்பிட்ட ஆப்பிள் நிலத்தில் விழக்கூடும் என்று புவிஈர்ப்பு விதி கூறவில்லை. அதை ஒருவர் கீழே விழாமல் தன்னுடைய கூடையில் பிடித்துக் கொள்ளலாம் என்றும் கூறவில்லை. (ஆ) அதேபோல ஒளி நேர்க்கோட்டில் செல்கிறது என்று ஆடி இயல் (optics) விதி கூறுகிறது. இதனுல் ஒரு குறிப்பிட்ட ஒளிக்கதிரின் பாதையில் தடையம் இருக்குமேயானுல் ஒளி முறிவு ஏற்படாது என்று கூறமுடியாது. மேற்கூறிய விதிகளுக்குப் பல நிபந்தனைகள் இருந்தபோதிலும், அவைகளின் முக்கியத்துவம் குறையவில்லை. அவ்வாறே வரலாற்றின் பொதுமைக் கூற்றுகள் அமைந்துள்ளன. அவை எதிர்காலத்தில் நாம் மேற்கொள்ளும் செயல்களுக்குப் பொதுவான வழிகாட்டியாக இருக்கின்றன. எனவே, அவைகளால் குறிப்பிட்ட சம்பவத்தையோ அல்லது சிறப்பான சூழ்நிலையையோ விளக்க முடியாது. அதாவது வரலாற்று அறிஞனுல் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை முன் அறிந்து கூறமுடியாது. எதிர்காலம் நிலையற்றதாக உள்ளது. எதிர்பாராத பல நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன.

23 முன் கூறியபடி பக். 62.

24 முன் குறிப்பின்படி பக். 62,

பொருளாதார வரலாற்றில் ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியை இங்குக் குறிப்பிடலாம். **பெரிய நெருக்கடி** (Great Crisis) யின் தோற்றுவாய், வளர்ச்சி, விளைவு முதலியவைகளின் முழு விவரங்கள் பற்றிய அறிவு நமக்கு அவசியமாகும். அதன் உதவியால் ஒரு குறிப்பிட்ட பின் இறக்க (recession) சூழ்நிலையை அறியலாம். ஆனால், இந்த அறிவைக் கொண்டு முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் பின் இறக்கம் ஏற்படாமல் செய்வது இயலாத காரியம்.

(ஈ) வரலாற்றில் தற்சார்பற்ற நிலை: வரலாற்று அறிஞன் தற்சார்பற்ற நிலையில் இருக்கின்றபோதுதான் வருவனவற்றை முன்னுரைக்க முடியும். சமூக இயல்கள் மனிதனை மையமாகக் கொண்டு எழுந்தவை. அவைகளின் செயற் காரணமாகவும், செயல் முடிவாகவும் மனிதன் திகழ்கிறான். இவை ஓரினத்தைச் சேர்ந்தவை. மனிதன் மனிதனை அறிய முற்படுகின்ற சூழ்நிலையில் தற்சார்புக் கூறுகள் இயற்கையாக அமைந்துவிடுகின்றன. அதாவது தன்னை மையமாகக் கொண்டு மனித இனத்தை அறிய முற்படுகிறான். இத்தகைய தற்சார்புச் சக்திகள் (விருப்பம் போன்றவை) மிகத் தீவிரமாக இருக்கின்றன. இவ்வாறு மனிதர்களின் செயற்பான்மையை ஆய்ந்துள்ள சமூக இயல் அறிஞர்கள் கூறுகிறார்கள். தற்சார்புக்கூறுகள் சமூக இயல்களில் அதிக செல்வாக்குடன் இருப்பதை அறிந்த காரணத்தால் அதனை ஓரளவிற்குத் திருத்தி அமைக்க முடிகிறது. நாம் கண்கூடாகக் கண்டு அறியக்கூடிய உண்மைகள் இதற்கு உதவியாக உள்ளன.[25] வரலாற்று ஏடுகளைப் புரட்டும்போது சமூக இயல்களின் புறச்சார்பு விதிகளைச் சரிபார்ப்பதற்குப் பல நிகழ்ச்சிகள் இருப்பதை உணரலாம். அவைகளைப் பொருளியலில் சிறப்பாகக் காணலாம்.

ஒரேமாதிரியான நிகழ்ச்சிகள் வரலாற்றில் திரும்பவும் நிகழ்வதில்லை. எனவே, இவ்விதிகளைச் சரிபார்ப்பது எளிதாகிவிடுகிறது. சில சமயங்களில் முன்புள்ள சூழலின் சில கூறுகள் மட்டும் **மறுபடியும் தோன்றுவதுபோல** இருக்கும். இதைத் திரும்பவும் ஏற்பட்ட ஒரு முழு நிகழ்ச்சியாகக் கருதுவது தவறு. வரலாறு மனிதனுடன் முன்னேக்கிச் செல்கின்றது.இக்காரணத்தினல் இந்தச் சில கூறுகள், புதிய சூழ்நிலைகளில் வெவ்வேறு பொருள்களும், வெவ்வேறு முக்கியத்துவமும் பெற்று விளங்குகின்றன. எடுத்துக் காட்டாகப் புராதன சமூகத்தில் வகுப்புப் பிரிவுகள் இல்லை. தற்காலத்திய கம்யூனிஸ சமூகத்திலும் வகுப்புகள் இல்லை (classless). இவ்வாறு

[25] முன் குறிப்பின்படி பக். 64—65.

புராதனச் சமூகத்தின் சில கூறுகள் கம்யூனிஸ சமூகத்தில் காணப் பட்ட போதிலும், இதனை வரலாற்றின் மறுநிகழ்ச்சியாகக் கருது வது தவறு. ஏனெனில், இவ்விரு சமூகங்களும், பல வகைகளிலும் வேறுபடுகின்றன.

வரலாற்றில் ஏற்படும் மறுநிகழ்ச்சியை லியோநார்டோ டா வின்ஸி (Leonardo da Vinci) ஒரு சூழ்நிலையைக் கொண்டு விளக்கு கிறார். 'ஆற்றின் நடுவில் ஓடும் நீரைத் தொட்டுக்கொண்டு நாம் நின்றுகொண்டு இருக்கிறோம். நாம் தொடுகின்ற நீர், நம்மைக் கடந்து சென்றதன் இறுதியாகவும், நம்மை நோக்கி வருவன வற்றுள் முதன்மையாகவும் உள்ளது. அவ்வாறே கால ஓட்டத்தில் நிகழ்காலத்தைக் கூறலாம்......'[26]

பேராசிரியர் லாம்ப்பிரெச்(ட்) [Lamprecht (S P.)]. என்ப வர் 'இயற்கையும் வரலாறும்' (Nature and History)[27] என்ற நூலில் வரலாறு, பௌதிகம் இவை இரண்டிலும் காணப்படும் புறச் சார்புக் கூறுகளை விவரித்துக் கூறுகிறார். பௌதிக அறிஞர்களின் உலகமும், வரலாற்று அறிஞர்களின் உலகமும் ஒன்றைப் போல அமைந்துள்ளன.[28] அவற்றிலிருந்து இரு முக்கியத் தன்மைகளைப் பேராசிரியர் கார் குறிப்பிட்டுள்ளார். முதலாவதாக, பௌதிகர் கள் முன் அறிவிக்கின்றபடி சில நிகழ்ச்சிகள் நடைபெறுவதில்லை. இவை நிலையற்றதாக இருப்பதுடன் பௌதிகர்களால் கணிக்க இயலாதவைகளாகவும் இருக்கின்றன.[29] அதற்கான காரணங் களைப் பின்வருமாறு கூறலாம். உலக இயல்பு இதற்கு ஒருவகையில் காரணமாக இருக்கலாம். உலக இயல்பை அவர்கள் முழுமையாக உணராமல் இருக்கலாம். மேலே கூறிய இரு காரணங்களினாலும் கூட இருக்கலாம். அவ்வாறே வரலாற்றிலும் உள்ளன. இரண் டாவதாக அளந்து அறிபவரின் இயங்கு வேகத்திற்கு (motion) ஏற்ப (இடஅளவை மாறுபடும். அதாவது, இடவெளியில் இரு புள்ளி களுக்கு இடையே உள்ள தூரம் வேறுபடும். அவ்வாறே இயங்கு வேகத்திற்கேற்ப) காலவெளியில் இரு புள்ளிகளுக்கும் இடையே உள்ள தூரமும் வேறுபடும். அளந்து அறிபவரின் நிலையும், அளக் கப்படும் பொருளின் நிலையும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளமையால் அளவைகள் (measurements) வேறுபடுகின்றன.

[26] Stephen and Ethel Long Street அவர்களின் 'The Politician' (New York, 1959) என்ற நூலில் ஆளப்பட்டுள்ளது.

[27] New York, 1950.

[28] Carr, E. H. முன்கூறியபடி, பக். 66.

[29] பார்க்கவும்: Bohrm, David, Casuality and Chance in Modern Physics (London, 1957).

இவ்வாருக பௌதிகத்திலும், வரலாற்றிலும் நிலையற்ற தன்மை சாதாரணமாக இருந்தபோதிலும் இதன் தரமும், நிலையும் வேறுபடக்கூடியவை. இந்நிலையில் மார்ச் பிளாக்கு (March Bloch) கூறியதை இங்குக் குறிப்பிடலாம். 'வரலாற்று இயலில் உறுதி யற்ற தன்மைகளை உலகம் அறிய ஆர்வம் கொண்டிருக்கிறது. அவைகளை மறைக்க முயலுவது தவறு. நமது ஆர்வத்திற்கும் அவை காரணமாக உள்ளன. நமது ஆய்விற்குப் புத்துணர்ச்சி அளிக் கின்றன.'[30]

(உ) வரலாற்றில் பின் விளைவைத் தோற்றுவிக்கும் நிகழ்ச்சிகள் : பின்விளைவைத் தோற்றுவிக்கும் செயல்கள் வரலாற்றில் எவ்வாறு இடம் பெறுகின்றன என்பதைக் காணலாம். பேராசிரியர் கார் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: 'நிகழ்ச்சிகளைத் தூண்டக் கூடிய காரணங்களை ஆய்வது வரலாற்றை ஆய்வதாகும்.'[31] ஒரு தனிக் காரணியால் எந்த நிகழ்ச்சியும் ஏற்பட்டதில்லை. ஆல்ஃப்ரட் மார்ஷல் (Alfred Marshall) குறிப்பிடுகிருர்: 'பல காரணிகளின் விளைவுகள் பிரித்துக் காண்முடியாத வகையில் நன்ருகக் கலந்து இருக்கின்றன. ஆகையால் ஒரு காரணியின் தனிப்பட்ட விளைவைக் காண்பது அரிது. இதனை எவ்வாறேனும் மக்கள் உணரும்படி செய்தல்வேண்டும்.'[32] எனவே, விளைவுக் கான காரணிகள் பல உள்ளன. அவைகளில் சிலவற்றை மட்டும் வரலாற்று அறிஞன் தேர்ந்து எடுக்கிருன். அவை தவிர்க்க முடியாதனவாகவும், முக்கியத்துவம் பெற்றனவாகவும், உறுதிப் படுத்தக் கூடியவையாகவும் இருக்கவேண்டும். இத்தகைய காரணி கள் வரலாற்று உண்மைகளை விளக்கவல்லனவாகவும், பொது மக்கள் புரிந்துகொள்ளக் கூடியதாகவும் இருக்கவேண்டும். இவை வரலாற்றில் பொதிந்துள்ள மறைவான கருத்துகளை வெளிக்கொணர்வதாக இருக்கவேண்டும். டால்காட் பார்சன்ஸ் (Talcott Parsons) கூறியபடி, 'வரலாறு என்பது தேர்ந்தெடுக்

30 அவர் மேலும் கூறுகிருர்: 'நமது புதிய துணிகரமான செயல்கள் அனைத்திற் கும் வரலாறு காரணமாக உள்ளது. இதனை உறுதியாகவும், உரிமையுடனும் கூறமுடி யும். நிறைவான வெற்றி எவ்வாறு மகிழ்ச்சியையும், திருப்தியையும் ஏற்படுத்துகின் றதோ, அதுபோல முடிவுபெருத காரியங்களும், நமது கவனத்தைத் தொடர்ந்து உறுத்திக்கொண்டே இருக்கின்ற காரணத்தால், தணிக்க முடியாத ஓர் ஆர்வத்தை நம்முள் ஏற்படுத்தி, நமது வெற்றிக்கு வழிசெய்கின்றன. பேகை (Peguy) அவர்கள் கூறிய உதாரணத்தைச் சுருக்கமாகக் கூறலாம். திறமையான உழவன் (குடும்பத் தலைவன்) அறுவடையின்போது மகிழ்ச்சி அடைகின்ற அளவிற்கு, உழுவதிலும், விதை விதைப்பதிலும், மகிழ்ச்சி அடைவான்'. **The Historian's Craft** (Manchester, 1954), p. 18.

31 Carr, E. H., முன் கூறியபடி பக். 81.

32 Pigeu, A. C., (Ed.), **Memorial of Alfred Marshall,** (London, 1925), பக். 428:

கப்படுகின்ற ஒரு முறை' 'வரலாற்றுக்கு முக்கியத்துவம் நல்கக் கூடிய வகையில்' 'அந்தத் தேர்ந்தெடுக்கும் முறை' இருக்க வேண்டும் என்று பேராசிரியர் கார் கருதுகிறார்.[33]

வரலாற்றில் பின்விளைவை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள்பற்றி மாறுபட்ட கருத்து ஒன்று உண்டு. அதில் தற்செயலாக ஏற்படும் நிகழ்ச்சிகள் மிகவும் முக்கியமானவை என்று வலியுறுத்தப்படுகிறது. 'ஒளிக்கதிர் ஓர் ஊடகத்தின் வழியே செல்கின்ற போது அதன் போக்கு எப்படி மாறுபடுகிறதோ அதைப்போல வரலாற்று நிகழ்ச்சி முறைமையின் போக்கில் தற்செயலாக ஏற்படும் நிகழ்ச்சிகள் திசைமாற்றத்தை ஏற்படுத்துகின்றன.'[34] இதன்படி தற்செயலாக ஏற்படும் நிகழ்ச்சிகளுக்கு வரலாற்றில் அளவுக்குமீறிய முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

தற்செயலாக நிகழும் சம்பவங்கள் ஓரளவிற்கு முக்கியத்துவம் பெற்றுள்ளன. அதனை மார்க்ஸ் பின்வருமாறு கூறுகிறார்: 'தற்செயலாக ஏற்படும் நிகழ்ச்சிகள், உலக வரலாற்றில் இடம் பெறவில்லையானால், எல்லோரும் வியப்படையும் வகையில் அது அமைந்து இருக்கக்கூடும். இவை வளர்ச்சியின் போக்கில் ஒரு பகுதியாக இருக்கின்றன. இதைப்போன்ற ஏனைய நிகழ்ச்சிகள் இதன் விளைவை ஈடு செய்கின்றன. தற்செயலாக ஏற்படும் நிகழ்ச்சிகள், வளர்ச்சியின் வேகத்தை அதிகரிக்கவும், குறைக்கவும் செய்கின்றன. சில சமயங்களில் வரலாற்று இயக்கத்தின் தலைமையிடத்தில் உள்ள ஒருவரின் குணநலன்களை—(தற்செயலாக அமைந்தவை)—சார்ந்து வளர்ச்சி வேகம் அமையும்.'[35]

வரலாற்றில் தற்காலம்

வரலாற்றில் வாய்ப்பிற்கும், செயல் காரணிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கூறலாம். இவ்வுறவு இன்னல்கள் தோய்ந்த ஓர் உறவாகும். 'கால அளவில் இறந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் முதலியன ஒன்றுக்கொன்று

33 Carr, E. H., op.cit. p,, 99.

34 Trotsky, L., முன் குறிப்பில் எடுத்தாளப்பட்டது. பக். 96.

35 Marx and Engels, 'Works' (Russian Edition), XXVI, பக், 108. முன் குறிப்பில் எடுத்தாளப்பட்டது. பக். 95. இப்பகுதியின் உள்ளீடான கருத்துகளைப் பேராசிரியர் கார் பின்வருமாறு விளக்குகிறார். முதலாவதாக, தற்செயலாக ஏழும் நிகழ்ச்சிகள் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல. அவற்றால் நிகழ்ச்சிகளின் வேகத்தை அதிகரிக்கவோ, குறைக்கவோ முடியுமே தவிர நிகழ்ச்சிகளின் போக்கைப் பெருவாரியாக மாற்றமுடியாது. இரண்டாவதாக, தற்செயலாக ஏற்படும் ஒரு நன்மையைஅவ்வாறே தோன்றும் ஒரு தீமை அதனை ஈடு செய்யக்கூடும். இறுதியில் வாய்ப்பு அல்லது தற்செயல் நிகழ்ச்சிகள் ஒன்றுக்கொன்று அடிபட்டுப்போகின்றன. மூன்றாவதாக வாய்ப்பு என்பது தனி ஒருவரின் குணநலன்களாகப் பரிணமிக்கின்றன, முன்கூறியபடி.

தொடர்புடைய பகுதிகளாக உள்ளன.[36] வரலாற்றைப் புனைவதற்கு இம்மூன்றையும் முழுமையாகப் புரிந்துகொள்வது அவசியம். மார்க்ஸ் கூறுகிறார்: 'மனிதர்கள் தங்களுடைய வரலாற்றைத் தாங்களே ஏற்படுத்திக்கொள்கிறார்கள். ஆனால், அவர்கள் மனம் விரும்பியபடி அதனை ஆக்க முடியவில்லை: பழைமையிலிருந்து பெற்றதும் அவர்கள் நேரிடையாகச் சமாளித்ததுமான சூழ்நிலையில் தங்கள் வரலாற்றை உருவாக்குவதில்லை.'[37] மனிதன் தன்னுடைய தலைவிதியைத் தானே நிர்ணயிக்கக்கூடிய நிலையை எந்தச் சூழ்நிலை ஏற்படுத்தவல்லது? அவைகளை உருவாக்குவது எப்படி? முதலாவதாக, சமூகச் சீரமைப்பிற்கான மாற்றுவழிகளை வரலாற்று அடிப்படையில் விவாதிப்பதற்கான வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். இரண்டாவதாக அவசியமானபோது சமூகத்தில் கட்டமைப்பு மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய செயலாக்க அதிகாரங்களை மக்கள் பெற்று இருக்கவேண்டும்.[38] இக் கருத்தை டாக்டர் ஸ்வீஸி (Dr. Sweezy) மேலும் தெளிவுபடுத்துகிறார்: 'நிகழ்காலத்தில் இருக்கும்போதே வரலாற்றை முழுமையாக உணர்ந்து, அதன் புறவடிவையும், விளைவையும் மாற்றி அமைக்கவல்ல சக்தியைப் பெற்று விளங்கவேண்டும். இது சமூகவாதிகளின் முக்கியப் பொறுப்பாகும்.'[39]

36 பேராசிரியர் கார் சொல்லுகிறார்: 'வரலாற்றுக்கு முற்பட்ட காலமும் தெளிவாகப் பிரிக்கப்படவில்லை. மக்கள் தற்கால நிகழ்ச்சிகளுடன்நின்றுவிடாமல், எதிர்காலத்திலும், இறந்தகாலத்திலும் ஆர்வம் காட்டும்போது, இப்பிரிவு மறைந்து போகின்றது. வரலாற்றின் துவக்கநிலையிலேயே மரபு நம்மிடையே ஒப்புவிக்கப்படுகிறது. மரபுதான் நம் பழக்கவழக்கங்களையும், பழைய அனுபவ பாடங்களையும், எதிர்காலத்திற்குக் கொண்டு செல்கிறது. எனவே, பழைய ஆவணங்கள் எதிர்கால தலைமுறையினரின் நன்மைக்காகப் பாதுகாக்கப்படுகின்றன.' Carr, E. H., முன்கூறியபடி பக். 102.

37 Marx மேலும் கூறுகிறார்: 'இறந்துபோன தலைமுறையினர் விட்டுச் சென்ற மரபு, இப்போதுள்ளவர்கள் நினைவை அச்சுறுத்தும் வகையில் உள்ளது. பழைமையிலிருந்து விடுபடுவதற்காகப் புரட்சிகளைத் தோற்றுவிக்கின்றனர். அவர்களும், அவர்களைச் சூழ்ந்த பொருள்களும், பெருத்த மாறுபாடுகளுக்கு உள்ளாகின்றன. அவர்கள் கண்டிராத வகையில் புதிதானவைகளை உருவாக்க முயலுகிறார்கள். அத்தகைய நெருக்கடியான காலங்களில், தங்கள் பழைமையின் உணர்ச்சிகளை எல்லாம் ஒன்று திரட்டி தங்கள் பணியில் ஈடுபடுத்துகிறார்கள். உலக வரலாற்றில் புதிய காட்சிகளை உருவாக்கப் பாடுபடுகின்றனர். அதைப் பழைமையின் பெயரில் பழைமையான ஆடை ஆபரணங்களில் ஏற்படுத்துகிறார்கள். பழைமையான போர்க் கூச்சல்களையும் கைவிடுவதில்லை. இவ்வாறாகம் பழைமையிலிருந்து பெறப்பட்ட மொழியில், நெடுங்காலமாகக் கரந்த நிலைமையில் புதுமைகள் வெளிப்படுவதைக் காணலாம்.' Karl Marx. முன்கூறியபடி. பக். 1.

38 பார்க்கவும்: Mills, C. W., அவர்களின் **'Sociological Imagination'** (New York, 1953) என்ற நூல், பக். 190.

39 Sweezy, P. M., **'The Present as History'** (New York, 1953) என்ற நூல், பக். 6. Croce அவர்களும் நிகழ்காலத்தை வரலாறாகக் கருதியுள்ளார். பார்க்கவும், Gordineir, P., முன் கூறியபடி பக். 227.

3. வரலாறும் தேற்றமும்

இவ்வாறுகத் தேற்றங்களை ஆக்கவும், சரி பார்க்கவும், மாற்றியமைக்கவும், நிராகரிக்க்வும், வரலாறு அவசியமாகிறது. தேற்றம் வெற்றிடத்தில், சூன்யத்தில் தோன்றுவது இல்லை. நிகழ்கால நிகழ்ச்சிகள் கணப்பொழுதில் மறையக்கூடியவை. அவை தேற்றத்தை உருவாக்குவதற்கான கருத்துக் கோட்பாடாக அமைந்துள்ளன. இவைகளின் பிரதிபலிப்பாகத் தேற்றம் விளங்குகிறது.[40] பொதுமையை ஏற்படுத்தும் முயற்சியாகத் தேற்றம் அமைந்துள்ளது. எனவே, இது யாவரும் ஏற்கக்கூடியதாகவும் உள்ளது. காலத்தாலும், இடத்தாலும் ஏற்படுகின்ற மாறுபாடுகளுக்கு ஏற்பத் தேற்றங்களை மாற்றி அமைத்து, அதன் பின்னரே அதனை உபயோகிக்கவேண்டும். இந்த நிலைமையில் ஜே. எஸ். மில்லின் (J. S. Mill) கூற்றைக் குறிப்பிடலாம். 'உலகம் ஏற்கும் வகையில் அமைந்த வரலாற்று உண்மைகளைத் தேற்றங்களின் மூலமாக இணைப்பது சிந்திக்கும் ஆற்றல் பெற்ற விஞ்ஞானிகளின் பொதுவான ஒரு குறிக்கோளாகும். கிடைத்துள்ள புள்ளி விவரங்களின் உதவியால் முக்கியமான வரலாற்று உண்மைகளை விளக்க வேண்டியது சமூகக் கோட்பாட்டு முறையின் பொதுவான பொறுப்பாகும். சமூக முன்னேற்றத்தின் தத்துவம், துவக்கத்தில் வரலாற்றுத் தத்துவமாக இருக்கலாம். இதனைப் பின்னர் சரிபார்த்துக்கொள்ளவும் வரலாற்றுத் தத்துவம் உதவுகிறது.'[41]

தற்காலப் பொருளாதாரக் கருத்துகளை விளக்கிக் கூறவும், பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் வழி வகுப்பது தான் பொருளாதாரத் தேற்றத்தின் முக்கியப் பணியாகும். வரலாற்றில் உருவாகும் பிரச்சினைகளின் தரத்திற்கு ஏற்பப் பொருளாதாரத் தேற்றங்களின் தன்மை நிர்ணயிக்கப்படுகிறது. இத்தகைய பிரச்சினைகளை விளக்குவதற்காகவும், தீர்த்து வைப்பதற்காகவும் தேற்றம் அவசியமாகிறது. தேற்றத்தின் இலக்கணப்படி இதனை உருவாக்கிய பிரச்சினைகளுடன் இல்லாமல் பொதுவாக உபயோகப்படும் வகையில் அமைந்திருக்கவேண்டும்.

பொருளாதார வரலாற்றிலிருந்தும், பொருளாதாரச் சிந்தனை வரலாற்றிலிருந்தும் சில சம்பவங்களை எடுத்துக் கூறலாம். பேராசிரியர் எட்வின் கெ(ன்)னன் (Edwin Cannan) பின்வருமாறு

[40] பார்க்கவும்: Das Gupta, A. K., அவர்களின் 'Tendenciesin Economic Theory' என்ற கட்டுரை **The Indian Economic Journal,** சஞ்சிகையில் (Vol. VIII No. 3, January, 1961) வெளிவந்தது.

[41] Mill, J. S., அவர்களின் **'System of Logic'**, Vol. II (London, 1875) என்ற நூலில் பக். 529-30.

கூறியுள்ளார்: 'தங்கக் கட்டிகள் பற்றிய முரண்பாடான கருத்துகள் ரிக்கார்டோவின் மதிப்பீட்டுத் தேற்றத்தையும், 1813-15ஆம் ஆண்டுகளின் தானியச் சட்டம் பற்றிய சிக்கல்கள் ரிக்கார்டோவின் வாரம், மற்றும் பொதுவான பகிர்வுத் தேற்றங்களையும் உருவாக்கியுள்ளன'.[42] பேராசிரியர் ஆஷ்டன் (Ashton) பொருளாதார வரலாற்றிற்கும், பொருளாதாரத் தேற்றத்திற்கும் உள்ள தொடர்புகள் (The Relation of Economic History to Economic Theory) என்ற நூலில் பின்வருமாறு சில முக்கிய நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுள்ளார். (1) முதல் உலகப் போரின்போதும், அதன் பின்னரும் ஏற்பட்ட தீவிர விலை (உயர்வு) மாற்றங்கள், பணத்தின் மதிப்பில் ஏற்படும் ஏற்றத் தாழ்விற்கான காரணங்களையும், அதன் விளைவுகளையும் ஆராயும் வகையில் நமது கவனத்தை ஈர்த்தன. (2) 1914 முதல் 1925வரை உள்ள காலத்தில் நாட்டுக் கடன் அதிகமாக வளர்ந்துவிட்டது. இதன் காரணமாக வட்டி வீதத்தைப்பற்றி முழுவதும் அறிய ஆவல் கொண்டனர். நீண்டகால குறுகியகால முதலீட்டு வீதத்தையும், முதலீடுகளையும் வட்டி வீதம் பாதிக்கின்ற விதத்தை ஆராயத் தொடங்கினர். (3) 1920முதல் 1929வரையில் உள்ள ஆண்டுகளில் வெளிநாட்டுக் கடன்களும், அவைகளைத் திருப்பிக் கொடுப்பதும் பெரும் பிரச்சினைகளாக இருந்தன. இவை பன்னாட்டு வர்த்தகம், அந்நியமாற்று ஆகிய தேற்றங்களை மறுபரிசீலனை செய்யத் தூண்டியது. (4) சர்வாதீன நிறுவனங்களின் வளர்ச்சி காரணமாக மதிப்பீட்டுத் தேற்றங்கள் சீர்பட்டன.[43] பெரிய மந்தத்தின் காரணமாக கெயின்ஸின் (Keynes) பொதுத் தேற்றம் (General Theory) உருவாகியது என்பதை நாம் அறிவோம். இறுதியாகப் பேராசிரியர் ராபின்ஸை (Robbins)ப் பொறுத்தவரை பொருளாதாரம் என்பது பருஉருவமாகவும் பொருளாதார வரலாறு அதன் உட்பொருளாகவும் அமைந்துள்ளது.[44]

ஷும்பீட்டரை (Schumpeter)ப் போல வேறு எந்தப் பொருளியல் அறிஞரும் பொருளாதார வரலாற்றை வலியுறுத்திக்

42 அவர் மேலும் கூறுகிறார்: "Ricardoவின் **'Principles of Political Economy and Taxation'** என்ற நூல் பிரசுரிக்கப்படும் முன்னர் வெளிவந்த சிறு பிரசுரங்களைப் படித்து, அதன் பின்னர் இந்த நூலைப் படித்தால் கருத்துத் தெளிவாக விளங்குகிறது. அந்தச் சிறு பிரசுரங்களைப் படிக்காமல், இந்த நூலைமட்டும் படிக்கும் போது அதுவே தவறான விளக்கங்களின் வேட்டைக் களமாக மாறிவிடுகிறது." **A History of the Theories of Production and Distribution in English Politica Economy from 1776-1848** (London, 1903), p. 88.

43 பார்க்கவும்: Economica, Vol. XIII, No. 50, 1946, pp. 81-96.

44 முன்கூறியபடி, பக். 88.

கூறவில்லை. அவரைப் பொறுத்தவரை 'வரலாறு', 'புள்ளிவிவரம்', 'தேற்றம்', முதலிய மூன்றும் பொருளாதார ஆய்வின் முக்கியமான கூறுகளாகும். 'அம்மூன்று அடிப்படையிலும் பொருளாதார வரலாறு மிகவும் முக்கியமானதாகும். இக்கருத்தை நான் வேறு விதமாகக் கூற விரும்புகிறேன். பொருளாதாரத்தைப் புதிதாகப் படிக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்படுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். இந்த மூன்று பாடங்களில் ஒன்றைத்தான் படிக்க முடியும் என்ற நிபந்தனையும் இருப்பதாக எண்ணிக் கொள்ளுங்கள். அப்போது நான் பொருளாதார வரலாற்றைத்தான் விரும்பிப் படிப்பேன்.'[45] இதற்கு ஷூம்பீட்டர் மூன்று காரணங்களைக் கொடுக்கிறார். முதலாவதாக, கால ஓட்டத்தின் பின்னணியிலிருந்து விலக்கப்படும் நிலையில் பொருளாதாரம் புரியாத ஒரு புதிராக மாறிவிடும். அதைப் புரிந்து கொள்ள 'வரலாற்று **உண்மைகளும்**', 'போதிய அளவு வரலாற்று **உணர்வும்**', 'வரலாற்று **அனுபவமும்**' தேவைப்படுகின்றன.[46] இரண்டாவதாக 'நிறுவனங்களின்' அமைப்பு உண்மைகளைப் பிரதிபலிக்கும் வகையில் வரலாற்றுச் செய்திகள் அமைந்துள்ளன. இவை பொருளாதார நிலைமையைப் பிரதிபலிப்பதுடன், சமூக அரசியல் நிலைமைகளையும் விளக்கிக் கூறுகின்றன. எனவே, பொருளாதாரத் துறைக்கும், ஏனைய துறைகளுக்கும் இடையே உள்ள உண்மைகளின் தொடர்பை ஆய்வதற்குப் பொருளாதார வரலாறு சிறந்த முறையாகும். இது சமூக இயல்களின் ஒருமைத் தன்மையை எடுத்து காட்டுகிறது.[47] மூன்றாவதாக, 'பொருளாதார ஆய்வில் சில அடிப்படையான தவறுகள் ஏற்படுகின்றன. அதற்குப் பொருளியல் சாதனங்களின் குறைபாடும் ஓரளவிற்குக் காரணமாக இருக்கமுடியும். ஆனால், அதைவிட முக்கிய காரணம் ஒன்று உண்டு. வரலாற்று அனுபவம் மறைந்துள்ள காரணத்தினால் பொருளியல்வாதிகள் இத்தகைய தவறுகளைச் செய்கிறார்கள்' என்று கூறுகிறார்.[48]

ஷூம்பீட்டர் இதற்கு முன்பு எழுதிய 'பொருளாதார வளர்ச்சியின் தேற்றப் பிரச்சினை' (Theoretical Problems of Economic Growth) என்ற கட்டுரையில் பொருளாதார வரலாற்றைத் தீவிரமாக ஆயவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். முதலாவ

[45] Schumpeter, J. A., அவர்களின் **'History of Economic Analysis'**, (New York, 1954) பக். 12.

[46] முன் குறிப்பின்படி, பக். 12-13.

[47] முன் கூறியபடி பக். 13.

[48] முன் குறிப்பின்படி.

தாகத் தேற்றத்தை விளக்கக்கூடிய ஒரு சிறந்த கருவியாகப் பொருளாதார வரலாறு உள்ளது. இது 'அனுபவ வழி'யில் உருவாகியது. அதாவது, இது 'தத்துவ அடிப்படையிலோ' அல்லது 'ஊக அடிப்படையிலோ' அமையவில்லை.[49] எனவே, பொருளாதாரம் போன்ற சமூக இயல்களை ஆய்ந்து அறிவதற்கு இது அவசியமாக உள்ளது. இரண்டாவதாக, பொருளாதார வளர்ச்சியின் இலக்கணத்தைக் கூறவும், அதனை அளந்து அறியவும், சில காரணிகள் அல்லது குறியீட்டு எண்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இவை காலத்தாலும் இடத்தாலும் மாற்றம் அடைகின்றன. இதனால் தெளிவு இன்மை ஏற்படக்கூடும். இவைகளை ஒப்பிட்டுப் பார்த்து உள்ளீடாக அமைந்த உண்மையை உணரவேண்டும். இதற்குப் பொருளாதார வரலாற்றை முறையாக ஆய்ந்து அறிவது இன்றியமையாதது. மூன்றாவதாக, பொருளியல்வாதிகளான ஸ்மித், மார்க்ஸ், மார்ஷல் முதலியோர் பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகளைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்: இயற்கைச் சூழல், சமூக அமைப்பு [சொத்து (உரிமை) தொடர்புகள், தொழிலாளர் தொடர்புகள், சுயேச்சை முதலியன], அரசியல், தேசிய உணர்ச்சி, மக்களின் பலவகையான நம்பிக்கை முதலியன,[50] இவைகளின் வளர்ச்சியை வரலாற்று அடிப்படையில்தான் தெளிவாக அறிந்துகொள்ளமுடியும். இறுதியாக ஒன்றுக்கொன்று சார்புத் தொடர்புடைய காரணிகளின் நிகழ்ச்சி முறைமையாக நாம் பொருளாதார வளர்ச்சியை ஆய்ந்து வருகிறோம். அவைகளை அளந்து அறிவது இயலாத காரியம். இத்தகைய இக்கட்டான நிலைமைகளில் தேற்றங்கள் சீரழிந்து போகாமல் வரலாறு காக்கின்றது.[51]

பொருளாதார வரலாறு அனுபவ வழியில் உருவாகிய சக்தி வாய்ந்த ஒரு கருவி. இதன் உதவியால், சமூகக் குழுக்களின் இயக்கநிலைமையைப் புரிந்துகொள்ள முடியும். தேற்றங்களை நிர்மாணிக்கவல்ல கருத்துக் கோட்பாடாக உள்ளது. அதனைச் சரிபார்க்க உதவும் செயல் முறைமையாகவும் உள்ளது. இதுச் சமூகக் கொள்கைகளுக்கு உறுதுணையாக உள்ளது. பொருளியல்வாதி வரலாற்றைக் கீழ் குறிப்பிட்ட காரணங்களுக்காக நம்பியிருக்கின்றான் முதலாவதாக, பொருளியல் புள்ளிவிவரங்களை வரலாற்றுப் புள்ளிவிவரங்களிலிருந்து பிரிக்கவும். பின்னர் அவைகளைப் பரிசீலிக்கவும் வரலாறு தேவைப்படுகிறது. இரண்டாவதாக, தேற்ற

[49] **'The Journal of Economic History'**, (Supplement VII)1947, பக். 1.

[50] முன் குறிப்பின்படி, பக். 2-3.

[51] முன் குறிப்பின்படி, பக். 4-5.

மாதிரிகளைச் (Theoretical model) சரிபார்ப்பதற்கு இது அவசியம். மூன்றாவதாக, பொருளாதார வளர்ச்சியில் உள்ள பொருளியலுக்குப் புறம்பான ஏனைய காரணிகளை விளக்கவும் அது அவசியமாகிறது. இறுதியாக நீண்டகால ரீதியில் சமூகத்தின் விரிவடைந்த நிலைமையைக் காண்பதற்கு ஒருவருக்கு வரலாற்று உள்ளுணர்வு இன்றியமையாத தாகும், (குறுகிய, கால ஏற்றத் தாழ்வுகளைக் கருத்தில் கொள்ளக் கூடாது) பேராசிரியர் ஆர். எச். டானி (R. H. Tawney) அவர்கள் "அதிக கவனத்துடன் சமூக இயல் நோக்கத்தை"ப் பெறவேண்டியது அவசியம் என்கிறார்.[52] பொருளாதார வரலாற்று அறிஞர்களும், சமூக இயல்வாதிகளும் நெருங்கி ஒத்துழைக்க வேண்டுமெனப் பேராசிரியர் டானி எதிர் நோக்குகிறார். இவர்கள் தற்சார்பற்ற நிலைமையில் தற்காலத்திய சமூகப் பொருளாதார அமைப்புப் பிரச்சினைகளை சொத்துவகைகள், வகுப்புகளின் கட்டமைப்பு, பொருளாதார தொழில் துணிவு முதலியவற்றின் மூலம் அணுகவேண்டும். புராதனச் சமூகங்களை விலகி நின்று ஆய்ந்துவரும் மனிதஇயல் நூலார்களைப் போல இவர்கள் இப்பிரச்சினைகளை அணுகவேண்டும்.[53] அதாவது தற்சார்பற்ற நிலையில் ஆய்வை மேற்கொள்ளவேண்டும் என்பது வலியுறுத்தப் படுகிறது. சமூக இயல் ஆய்வுகளில் தற்சார்பற்ற நிலை தொடர்ந்து காணப்படுகின்ற ஒரு பிரச்சினையாக உள்ளது. இதற்குத் தீர்வு காணவேண்டுமானால், அவைகளைப்பற்றிய கருத்துரைகளும், விளக்கங்களும் ஆக்கரீதியில் செயல்படக் கூடியவைகளாக இருப்பது அவசியம். இங்குக் கார்ல் மார்க்சின் கூற்றைக் குறிப்பிடலாம். "தத்துவவாதிகள் உலகிற்கு பல விளக்கவுரைகள் தந்துள்ளனர். ஆனால் நாம் உலகத்தையே மாற்ற விரும்புகிறோம்." [54] இவ்வாறு முயற்சி எடுத்துக் கொண்டால்தான் தேற்றத்திற்கும் நடைமுறைக்கும், போதிய அளவு ஒருமைத்தன்மை நிலவ முடியும்.

சமூகக் கொள்கையின் ஒரு கருவியாக சமூகத் தேற்றம்

[52] Tawney, R. H., அவர்களின், "The Study of Economic History", என்ற கட்டுரை Economica சஞ்சிகையில் Vol. 13, No. 1, 1933, p. 19ல் வெளிவந்துள்ளது. வரலாற்றுக்கும், சமூக இயலுக்கும் இடையில் உள்ள தொடர்பைப் பேராசிரியர் கார் விவாதித்து எழுதுகிறார். "வரலாற்றில் சமூக இயல் அதிகமாக இருப்பதும், சமூக இயலில் வரலாறு அதிகமாக இருப்பதும் இரண்டிற்கும் நன்மை பயக்கக் கூடியவை. இவ்விரு இயல்களின் எல்லை வாயில்கள் விரிவாகத் திறக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்விரு இயல்களில் கருத்துப் பரிமாற்றம் இருவழிப் போக்குவரத்தைப் போன்று அமைய வேண்டும்". Carr, E. H., முன் கூறியபடி பக். 60.

[53] Tawney, R. H., முன் கூறியபடி பக். 20.

[54] Theses on Feurbach in Marx-Engels Selected Works, Vol. II Moscow, 1951) p. 367.

அமைந்துள்ளது.[55] சமூகப் பொருளாதார நிகழ்ச்சிகளேயும், சமூகப் பொருளாதார அமைப்புக்களேயும் விளக்கிக் கூறுவதற்கு இது ஒரு கருவியாக உள்ளது. இவைகளேத் திட்டமிட்டு அமைப்பதற்கும் சமூகத் தேற்றம் . உதவுகிறது. தேற்றம் என்பது பொதுமையானது.(குறிப்பிட்ட ஒன்றின் மூலமாகப் பொதுமையைக் காணமுற்படுகிறது). இது செயல் முறைமைகளே ஆய்கிறது. (நிகழ்ச்சிகளின் கோவையால் இது உருவாக்கப்படுகிறது. தேற்றத்தைச் சாதாரண உண்மையாகவும், அதன் பிரதிபலிப்பாகவும் கருதலாம். (இது தனியான, சிறப்பான உண்மைகளினின்றும் மாறுபட்டது.)[56]

இந்த வழியை மேற்கொண்டுதான் மார்க்ஸும், என்ஜெலும் 'கம்யூனிஸ அறிக்கை' (Communist Manifasto)யை(1848) வெளியிட்டுள்ளார்கள். முற்காலத்திலும், இப்போதும் மனித சமூகத்தின் வரலாறு ஒரு வகுப்புப் போராட்டமாக இருந்து வந்துள்ளது. சமூகத்தில் நெடுங்காலமாகவே காணப்படும் சுரண்டல் இப்போராட்டத்திற்கு ஒரு காரணமாக இருந்திருக்கக் கூடும். சுரண்டல் என்பதற்கு பின்வருமாறு இலக்கணம் கூறப்படுகிறது. உழைப்பாளிகளிடமிருந்து உபரியான உழைப்பு, உற்பத்தி, மதிப்பீடு முதலியவற்றை, உற்பத்திக்காரணிகளின் உரிமையாளர்கள் பெறுவதை சுரண்டல் என்று கூறலாம். இக்கருத்தை ஒட்டிய வகையில் மார்க்ஸ் எழுதுகிறார், "குறிப்பிட்ட பொருளாதார அமைப்பில், உழைப்பாளிகளின் உழைப்பு எந்த அளவிற்கு உறிஞ்சப்படுகிறது என்பதைப் பொறுத்து ஆள்பவர்களுக்கும், ஆளப்படுபவர்களுக்கும் உள்ளத் தொடர்பு அமையும். உற்பத்திக் காரணிகளின் உரிமை பெற்றவர்களுக்கும். உற்பத்தியில் நேரிடையாக ஈடுபட்டுள்ள பாட்டாளிகளுக்கும் இடையே உள்ள் தொடர்பு முக்கியமானது; சமூகக் கட்டமைப்பின் முழுமைக்கு அடிக்கல்லானது. சமூகத்தில் உள்ளீடாக உள்ள இரகசியத்தை அறிவதற்கு இது இன்றியமையாதது."[57]

இக்கருத்தை நாம் வேறு விதமாகவும் கூறலாம். சமூகத்தின் மூலதனத் திரட்டுக்கு ஆதாரமான இனங்கள் யாவை என்றும், அது எந்த உருவத்தில் அமைந்துள்ளது என்றும் கண்டுபிடிக்க வேண்டும். இந்த மாபெரும் பொறுப்பை பொருளாதார வரலாற்று அறிஞர்

55 பார்க்கவும், Myrdal, G., அவர்களின் **Value in Social Theory** (London, 1958), pp. 9-54.

56 Professor T. S. Ashton எழுதுகிறார்: "பொருளாதார வரலாற்றில் மிகப் பெரிய குழுக்கள் ஆயப்படுகின்றன. இது தனியாக உள்ளதைக் கருதாமல் பொதுவாக உள்ளதைக் கருதுகிறது. நிகழ்ச்சிகளேவிட அவற்றின் முறைமைகளே விளக்கிக் கூறுகிறது. சிறப்பான தனி உண்மைகளேக் காட்டிலும் பொதுவான பிரதிநிதித்துவ உண்மைகளேயும், புள்ளி விவரங்களேயும் கூறவல்லது." Ashton, T. S., முன் கூறிய படி பக். 82.

57 Marx, Karl, அவர்களின், **Capital**, Vol. III, (Moscow, 1959), பக். 772.

களும், தேற்றவாதிகளும் நிறைவேற்றி வைக்கவேண்டும். சில நெருக்கடியான சமயங்களில் இவர்கள் தற்சார்பு அற்ற நிலைமையைக் கடந்து செல்ல வேண்டியதாக உள்ளது. திரட்சிக்கு ஊறு விளைவிக்கின்ற சக்தியை இவர்கள் கண்டனம் செய்ய வேண்டி இருக்கின்றது.[58] எடுத்துக் காட்டாக ஸ்மித் அவர்கள் வாணிபத்தத்துவத்தைத் தாக்கியுள்ளார். ரிக்கார்டோ நிலம் உடைய செல்வந்தர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து உள்ளார். மார்க்ஸ் உற்பத்திக்காரணிகள் தனியார் உடைமையாக இருப்பதை அறவே ஒழிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். முதலாளித்துவத்தை சீர்திருத்தம் செய்ய முன் வந்த கெயின்ஸ் கூட முதலாளித்துவ வகுப்பினரைக் குற்றம் சாட்டத் தயங்கவில்லை. "மூலப் பொருள்களின் பற்றுக்குறையும் அதன் காரணமாக ஏற்படும் மதிப்பு உயர்வும் சுரண்டலுக்கு உதவுகின்றன. இக்கொடும் சக்திகளுக்கு ஒரு நற்சாக்காடு ஏற்பட வழி செய்ய வேண்டும்" என்றும் கூறுகிறார்,[59]

வளர்ந்து வரும் இந்தியா போன்ற நாடுகளுக்கு இத்தகைய சிந்தனையும், கருத்தாய்வும் மிகவும் அவசியமானவை. பொருளாதார வளர்ச்சியில் தோன்றும் பிரச்சினைகள் மிகவும் சிக்கலானவை. குறை வளர்ச்சி அடைந்த பகுதிகளின் "உண்மை நெறிகளுக்கு ஏற்ப, பொருளாதார இயலை மாற்றி அமைப்பது" சிக்கலான பிரச்சினை ஆகும். அந்நாடுகளின் பிரத்தியேகமான வரலாறு காரணமாக இது மேலும் சிக்கல் நிறைந்ததாக இருக்கிறது.

4. இந்தியா

இந்தியாவில் நாம் காண்பவை இக்கருத்தை ஆதரிக்கக்கூடியவையாக உள்ளன. இந்தியாவின் நவீன பொருளாதார சிந்தனை 19-வது நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து துவங்கியதாகக் கருதலாம். இது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் இந்திய தேசிய இயக்கத்தின் எழுச்சியுடன் இணைந்து காணப்படுகின்றது. பொருளாதார சிந்தனை வரலாற்றிலும் இக்காலம் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இக்காலத்தில் பிரிட்டிஷ் தொன்மைப் பொருளாதாரக் கருத்

58 Marshall, A., அவர்கள் **Principles of Economics** (London, 1961) தம் நூலில் எழுதுகிறார். "நவீனப் பொருளாதார அமைப்பு முதுகெலும்பு உடைய ஒரு விலங்காகும். இதனை ஆய்கின்ற இயல் (பொருளியல்) இதனைப்போன்று முதுகெலும்பு உள்ள ஒரு இயலாக இருக்கவேண்டும். முதுகெலும்பு இல்லாத போதிய அளவு வளர்ச்சி அடையாத - ஒரு விலங்காக - (பொருளியல்) இருக்க முடியாது. இது நேர்த்தியானதாகவும், கூர்ந்து உணரும் தன்மையை உடையதாகவும் இருக்கவேண்டும். உலக உண்மைகளுக்கு ஏற்பச் சூழ்நிலைகள் மாறுபடுகின்றபோது அவைகளுக்கு ஏற்ற வகையில் தன்னைத்தானே மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும். இவை யாவும் எப்படி இருந்தபோதிலும், அவ்வியலின் முதுகெலும்பாக அமைந்த காரண, காரிய நெறிகள், கருத்து ஆய்வுகள் செம்மையாக இருக்கவேண்டும்." (பக். 636).

59 Keynes, J. M., அவர்களின் **General Theory** (London, 1936) p. 375,-6.

தினரின் செல்வாக்கு தேய்ந்து வந்தது. மற்ருெரு புறம் இதற்கு எதிராகத் தோன்றியப் பல பொருளாதாரக் கருத்துக்கள் செல்வக்கான நிலைமையில் இருந்தன. இவ்வகையில் ஃபெடரிக் லிஸ்ட் (Friedrick List), (1786-1846) வரலாற்றுக் கருத்தினர் (the Historical School 1843-1883), கார்ல் மார்க்ஸ் (Karl Marx 1818-1883) ஆகியோர்களின் கோட்பாடுகள் செல்வாக்கான நிலைமையில் விளங்கி வந்தன. பின்தங்கிய நாடுகளின் அப்போதைய சமூக, பொருளாதார சூழ்நிலை மார்க்ஸ் கோட்பாடுகளை ஏற்கக் கூடியனவாக இல்லை. லிஸ்ட் அவர்களின் தொழிற்காப்புக் கோட்பாடும், வரலாற்றுக் கருத்தினரின் வரலாற்றுத் தராதரத்துவக் கோட்பாடும் (Historical Relativism) இந்திய மக்களின் இயற்கையான ஆதரவைப் பெற்றன. அப்போதுள்ள நிலைமையில் இந்தியத் தொழில்களுக்கு வெளிநாட்டுப் போட்டியினின்றும் பாதுகாப்பு அளிப்பது அவசியமாக இருந்தது. இதனுல் தொன்மைப் பொருளாதாரக் கோட்பாட்டை மாற்றி அமைக்க வேண்டியதாக இருந்தது. சிந்தனை வளர்ச்சிப் பெற்ற வரலாற்றின் அடிப்படையில் விஞ்ஞான முன்னேற்றத்திற்கான இருவழிகளைக் குறிப்பிடலாம். (அ) புதிய உண்மைகளைக் கண்டு பிடிக்கின்ற காரணத்தினுல், புதிய சொற்களும், புதிய தேற்றங்களும் தோன்றுகின்றன. (ஆ) காண்கின்ற உண்மைகளுக்குப் புதிய முறையில் விளக்கம் தரப்படுகின்றபோதும்புதிய சொற்களும், புதிய தேற்றங்களும் உருவாகின்றன.[60]

இந்தியாவின் வறுமை நிலையை, தேற்ற அடிப்படையில் பொருளியல் வாதிகளால் விளக்கிக் கூறமுடியவில்லை. அதற்கு வேண்டிய தேற்றங்கள் உருவாக்கப்படவில்லை. அந்நிய ஆட்சியின் காரணமாக இந்தியா ஏழ்மையில் ஆழ்த்தப்பட்டது என்று சிலர் கருதினர். 20 வது நூற்ருண்டில் முதல் 25 ஆண்டுகளில் இத்தகைய சில தேற்றங்கள் தோன்றின. அவற்றில் ஹாப்ஸன், லெனின் ஆகியவரது தேற்றங்கள் குறிப்பிடத்தக்கவை. இவை எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய காலனி ஆதிக்கம் அல்லது ஏகாதிபத்தியம் ஆகியவைகளை விளக்கிக் கூறக்கூடும். ஏனெனில் 19-வது நூற்ருண்டில் இந்தியாவில் பயங்கரமான பஞ்சங்களும், கொடிய கொள்ளை நோய்களும் ஏற்பட்டன. இவைகளுக்கு உடனடியான நிவாரணத்தை அளிப்பது அவசியமாயிற்று. இந்த நிலைமையில் தற்சார்பற்ற ஆராய்ச்சி, தேற்ற விளக்கத்தைவிட உடனடியாகத் தேவைப்பட்டது. இந்திய மக்கள் பிரச்சினைக்கான விளக்கத்தைவிட அதன் தீர்வை அதிக ஆவலுடன் எதிர்நோக்கி யிருந்தார்கள்.

இந்தியப் பொருளியல் அறிஞர்கள் இதனை உணர்ந்து, அதன்

60 பார்க்கவும். Bohm, D., முன்கூறியபடி (1957) பக். 99.

படி நடந்து வந்தார்கள். இந்நிலையில் பேராசிரியர் ஏ. கே. தாஸ் குப்தா அவர்களின் 'புகாரை' நாம் ஏற்றுக் கொள்வதற்கில்லை. அதைப் பின்வருமாறு கூறலாம். பிரிட்டிஷார் காலத்தில் இந்தியப் பொருளாதாரம் 'தேக்கமுற்று' இருந்தது. இதற்குத் தேற்ற அடிப் படையில் தக்க விளக்கங்களை இந்தியப் பொருளியல் வாதிகள் அளிக்கவில்லை. இவர்களின் 'பாராமுகம்' வியப்பூட்டக் கூடியதாக இருக்கிறது. இவ்வாறாக தாஸ்குப்தா குறை கூறுகிறார். இது தவறாக் இருப்பதுடன் வரலாற்று உண்மைகளுக்கு எதிர்மாறாகவும் உள் ளது.[61] உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய ஒரு சவாலாக இதனைக் கருத லாம். தேற்றங்களின் ஆக்கம் குறைந்த நிலைமையில் இருப்பதைக் குறிப்பிடுவதாகவும் கருதலாம். ஆனால் முந்தியத் தலைமுறையின் தேற்ற ஆக்கம்பற்றிய நியாயமான மதிப்பீடாக இதைக் கருத முடியாது. இந்தியா காலனி ஆதிக்கத்திற்குட்பட்ட நாடாகையால் இதன் வரலாற்றுக்கு ஏற்பப் பொருளாதாரச் சிந்தனையின் பரிணா மத்தைக் கருத வேண்டும். அவ்வாறு சமநிலையில் ஆய்ந்து தெளிந்த ஒரு கருத்தாக தாஸ்குப்தா அவர்களின் கூற்றை நினைக்கமுடியாது.

வாழ்க்கைத் 'தொழிலாக மேற்கொள்ளாத' (non practising) பொருளியல் வாதிகளில் முன்பு இருந்த தாதாபாய் நௌரோஜி; *[1825-1917]*யும், மகாதேவ் கோவிந்த ரானடே *[1866-1915]*யும், ரமேஷ் சந்திர டட் *[1848-1899]* அவர்களும் குறிப்பிடத்தக்கவர் கள். இவர்கள் 'வரலாற்றுச் சிந்தனை'யாளர்கள்; வரலாற்று உண் மைகளைப் புரிந்து கொண்டு, இந்தியப் பொருளாதாரச் சிந்தனையின் வளர்ச்சியில் பங்குபெற்றும் அடிப்படையான ஆக்க முயற்சிகளில் ஈடுபட்டும் வந்தனர். பேராசிரியர் தாஸ்குப்தா கூறும் 'தேக்க நிலைமை'யை இவர்கள் இந்தியாவின் ஏழ்மையைக் குறிக்க வல்ல முதுமொழியாகக் கருதினர். ஆதாம் ஸ்மித் அவர்கள், பொருளா தாரம் என்பது நாடுகளின் செல்வ அமைப்பையும், அதன் உண் மைக் காரணத்தை ஆயவல்ல ஒரு இயலாகக் கருதினர்.[62] ஆனால் இந்தியாவைப் பொறுத்த வரை ஏழ்மையின் அமைப்பையும், அதன் காரணத்தையும் ஆயவல்ல இயலாகப் பொருளாதாரம் அமைந்து விட்டது.

குடியேற்ற நாடுகள் எவ்வாறு சுரண்டப்படுகின்றன என்பதைத் தாதாபாய் நௌரோஜி விளக்கியுள்ளார். அதைச் "சுரண்டல் தேற்றம்" (Drain theory) என்று அழைக்கலாம். ஏகாதிபத்திய நாடுகள் வரிச்சுமை, வர்த்தகம், மற்றும் இராணுவ, சிவில் செலவு களுக்காக, நிதி திரட்டுதல் போன்ற முறைகளால் காலனி நாடுகளை எப்படிச் சுரண்டுகின்றன என்பதைத் தெளிவாக்கியுள்ளார். முதன்

61 **Das Gupta, A. K.,** முன் கூறியபடி.

62 பார்க்கவும், Smith, Adam, அவர்களின் **Wealth of Nation.**

முறையாக இந்தியாவின் நாட்டு வருவாயைக் கணக்கிட்டு கூறினார். அவர் 'காப்டன் சங்கத்தில்' (Copden club) உறுப்பினராக இருந்த போதிலும் கட்டுப்பாடு இல்லாத வர்த்தகத்தை ஆதரிக்கவில்லை. அவர் சுதேசி இயக்கத்தை (தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பிரசித்தி பெற்றமுறை) ஆதரித்தார். அவர் மேலும் கூறுகிறார். "தொன்மைப் பொருளாதார விதிகள் இந்தியாவிற்கு ஏற்றதல்ல. இந்தியாவின் நிலைமையை உணராது அவைகளை எடுத்து ஆளநினைப்பது வெந்த புண்ணில் வேலெறிவது போலாகும்."[63]

ரானடேயின் ஆழ்ந்த கருத்துக்கள் பொருளியல் வளத்தைப் பெருக்கியுள்ளன. பொருளியல் ஆசிரியர் என்ற வகையில் இவர் லிஸ்ட் (List) மற்றும் ஜெர்மானிய வரலாற்றுக் கருத்தினர் ஆகியோரது கருத்துக்களை ஆய்ந்து இருக்கிறார். இந்திய வரலாற்றுக் கருத்தினரின் வளர்ச்சிக்கான நாற்றங்காலை இவர் அமைத்தார்.

பன்னாட்டு தொழில் பகுப்பு முறைக் கோட்பாட்டை எடுத்து ஆள்கின்ற விதத்தில் ஏகாதிபத்தியத் தன்மை மிளிர்வதைக் கண்டார். தொன்மைப் பொருளாதாரக் கருத்துக்கள் இந்தியாவிற்கு ஏற்றதல்ல என்று கூறினார்.[64] இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் நிறுவன அமைப்புக்களும், மக்களின் மனப்பான்மையும் சார்புத்தொடர்பு உடைய காரணிகள் என்பதைச் சுட்டிக் காட்டினார். இந்தியாவின் இழிநிலையையும், மக்களின் அறியாமையையும் போக்கும் வகையில் அரசாங்கம் பல பொறுப்புக்களை மேற்கொள்ள

63 பார்க்கவும்: Gopalakrishnan, P. K., அவர்களின், **Development of Economic Ideas in India** 1880-1950 (Delhi, 1959) பக். 69. மற்றும் பக். 37.94.

64 பிரிட்டிஷ் பொருளாதார அமைப்பின் அனுமானங்களைக் குறித்து அவர் பின்வருமாறு எழுதுகிறார். "இருந்தபோதிலும், அவை முன்னேற்றம் அல்லது வளர்ச்சியின் இயக்கநிலை பற்றிய யோசனைகளைக் கூறவில்லை. முற்றிலும் முதிர்ச்சி அடைந்த சமூகங்களுக்கே இந்த அனுமானங்கள் பொருத்தமாக இல்லை. இத்தகைய அனுமானங்கள் இந்தியா போன்ற நாடுகளில் உள்ள உண்மைக்கு முற்றிலும் மாறுபட்டவையாக இருக்கும். சாதாரண மனிதன் கருத்து, செயல் ஆகியவற்றால் பொருளாதார மனிதனினின்றும் மாறுபடுகின்றான். தனி மனிதன் சுதந்திரமாக இருப்பதில்லை. இவனைவிட சக்தி வாய்ந்ததாக குடும்பமும், சாதியும் உள்ளன. இவைகள் ஒருவனது வாழ்க்கை நிலையை நிர்ணயிக்கின்றன. பொருள் திரட்டவேண்டும் என்ற ஆர்வம், ஒருவகை சுயநலம், நம்மிடத்தில் இருக்கத்தான் செய்கிறது. அதுமட்டும் ஒரு தனி உந்து சக்தியாக அமையவில்லை. அது மிக முக்கியமான ஒரு உந்து சக்தியாகவும் கூட இல்லை. செல்வத்தைப் பெறுவது நமமுடைய ஒரே குறிக்கோள் அல்ல. அதைப்போன்ற பல்வகை ஆர்வங்களுடன் இது பின்னிக் கிடக்கின்றது. எனவே சுயநல அடிப்படையில், கட்டுப்பாடு இல்லாத, தடை இல்லாத போட்டியை மேற்கொள்ளக் கூடிய ஆர்வமோ, திறனோ நம்மிடையே இல்லை என்று கூறலாம். இத்தகைய போட்டிகள், பழக்கப்பட்ட சில துறைகளில், அல்லது அனுபவம் உடைய சில குழுக்களிடையே மட்டும் நிலவு கின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை போட்டியைவிட மரபும், அரசினர் சீரமைப்பும் அதிக சதிக்வாய்ந்தவை. வர்த்தக உடன்படிக்கையைவிட தகுதி (Status), அதிக செல்வாக்குடையது". Ranade, M. G., அவர்களின் **Essays in Indian Economics** (Madras 1916) பக். 9. முன் குறிப்பில் எடுத்தாளப்பட்டது. பக். 98.

வேண்டும் என்று கூறினர். பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகளை விவாதிக்கின்றபோது, ஸ்மித், ரிக்கார்டோ (தொன்மைப் பொருளியல் கருத்தினர்) ஆகியவர்களை அதிகம் சார்ந்துள்ளது விளங்கும். வளர்ச்சிக்கான முக்கிய காரணிகளாக மக்கள்தொகை, தொழில் நுட்பம், சமூகப் பொருளாதார அமைப்புக்கள் முதலியவைகளின் மாற்றங்களைக் குறிப்பிட்டுள்ளார்.[65] உற்பத்தித் துறையில் ஈடுபட்ட உழைப்புதான் மூலதனத் திரட்சிக்குக் காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளார்,[66] இவ்வாறு பிரிட்டிஷ் தொன்மைப் பொருளியல் வாதிகளுக்கும், ஜெர்மானிய வரலாற்றுக் கருத்தினருக்கும் இடையில் நடுநிலைமையாளராக இவர் இருக்கிறார். இவர் வரலாற்றை உறுதியாக நம்பினர். தன்னுடைய வாதத்தை வலியுறுத்தும் வகையில் க்ளிஃப்(cliff)அவர்களை மேற்கோள் காட்டுகிறார். பொதுவான சமூக வளர்ச்சி காலத்தாலும், இடத்தாலும் மாறுபடுகின்றது. இந்த வரலாற்று அடிப்படையில் தான் சமூக விதிகள் அமைந்துள்ளன.[67]

"செயல் முறையின் பெருவிளக்கத் தேற்றம்" காட்சி அளிக்கிறது. மற்றும் "மிக நெருங்கிய காரணிகளுடன் தொடர்புப் படுத்தி ஆய்கின்ற தேற்றம் செயல் முறையாக பரிணமிக்கிறது. தேற்றக் கோட்பாடுகளால் முன்கூட்டியே செயல்முறை நிர்ணயிக்கப்படுகிறது. செயல் முறையின் உண்மைத் தன்மையைச் சோதித்து, அதனை வேறுபடும் சூழ்நிலைகளுக்கு ஏற்பமாற்றி அமைத்துக்கொள்ளவும் உதவுகிறது. தவிர, அடிப்படையானதும் நிரந்தரமானதும், வெவ்வேறு வகையானதுமான உண்மைகளைத் தேற்றம் நமக்கு தெளிவுபடுத்துகிறது"[68] இவரது ஆக்கப் பணியைப் பலரும் மதிப்பிட்டு இருக்கிறார்கள். திட்டமிடலில் நம்பிக்கை உடைய முதல் இந்தியப் பொருளியல் வாதியாகப் பேராசிரியர் டி.ஜி. கார்வே (D. G. Karve) இவரைக் கருதுகிறார். பேராசிரியர் பி. தத்தர் (B. Datta) இவரை ஒரு பெரிய தேசீயப் பொருளியல் வாதியாகக் கருதினர். இவர் சமூகநலக் கோட்பாடுகளைப் போதித்தார். இவரை ஒரு தராதரத்துவ வாதியாக (Relativist) ஸர் ஜே. டி. கோயாஜி (sri. J. D. coyajee) கருதுகிறார்,

நடைமுறையில் தேற்றத்தின் சவாலை துணிவுடன் டட் (Dutt) அவர்கள் ஏற்றுள்ளார். 'இந்தியப் பொருளாதார வரலாறு' என்ற

66 முன் குறிப்பின்படி, பக். 108-09.

66 முன் குறிப்பின்படி, பக். 118.

67 முன் குறிப்பின்படி, பக். 99.

68 முன் குறிப்பில் எடுத்து ஆயப்பட்டது, பக். 102.

அவரது சிறப்பான நூலில் சுரண்டல் தேற்றத்தை விவரிக்கிறார். வேளாண்மை அமைப்பு முறைகள் (நிலஉரிமை) போதிய அளவு இல்லாத காரணத்தினால் பொருளாதார வளர்ச்சி வேகம் தடைப் படுகிறது என்றும் மக்களின் வாழ்க்கைத்தரம் குறைந்துள்ளது என்றும் கூறுகிறார். '**பிரிட்டிஷ் ஆட்சியின் துவக்கத்தில் இந்தியா**'(India under Early British Rule) என்ற நூலின் முகவுரையில் பின் வருமாறு அவர் எழுதியிருக்கிறார்"...இந்திய மக்களின் ஏழ்மைக்கான மூலகாரணத்தை விளக்கும் பொருட்டு பிரிட்டிஷ் இந்தியாவின் பொருளாதார விவரங்களை எடுத்துச் கூறுவது என்னுடைய கடமையாகும்" இதற்கு அவர் கூறும் யோசனைகள்: முதலில் (நில) வார சீர்திருத்தமும் தொழில் முன்னேற்றமும் ஏற்பட வேண்டும். அதன் அடிப்படையில் பலவகை வேலை வாய்ப்புக்கள் தோன்றக் கூடும். இவையாவும் இந்தியாவின் ஏழ்மையைப் போக்க வல்ல மருந்தாகும் என்று அவர் கருதுகிறார். இது அவரது ஆழ்ந்த அறிவையும், பரந்த நோக்கத்தையும் எடுத்துக் காட்டுகிறது. பொருளாதார வரலாற்றில் பொருளாதாரம், அரசியல், பண்பாடு, சட்டம் முதலியவற்றின் செயல் முறைமைகள் ஒன்று கலந்துள்ளன என்று டட் கருதுகிறார்.[69]

பழைய பொருளியல் வாதிகள், இந்த நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து பொருளாதாரப் பிரச்சினையை, நாட்டின் சமூக, அரசியல் இயக்கங்களுடன் இணைத்துக் கூறும் பழக்கத்தைக் கைவிட்டனர்.[70]

முதியோர்களுக்கு 'மரியாதை செய்யும்' பழக்கம் இந்தியாவில் நெடுநாட்களாக உண்டு. இப்பழக்கம் பொருளாதார சிந்தனையில் உள்ள குறைபாடுகள் முழுவதையும் எடுத்துக்கூற வொண்ணாமல் தடைசெய்தமையால், இது கவர்ச்சியற்ற (சுவையற்ற) தாகி விட்டது. பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவுகளைப் பழைய மரபில் வந்த பொருளியல் அறிஞர்கள் குறைகூறத் தயங்கினர். எனவே இந்தியப் பொருளாதாரப்பிரச்சினைகளில் அடிப்படையானவைகளை நீக்கி, எஞ்சியுள்ளவைகளை மட்டும் விவரித்துக் கூறுவது அப்போதைய பழக்கமாக இருந்தது. 1920 முதல் 1939 ஈறாக உள்ள ஆண்டுகளில் தேசிய இயக்கத்தினர் அடிப்படைப் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டனர். பொருளியல் வாதிகளில் சிறுபான்மையினர் மட்

69 Ibid P. P. 143 - 172.

70 பொருளியல்வாதி அரசியல் இயக்கங்களில் பங்குகொள்ள வேண்டும் என்று இங்கு யோசனை கூறவில்லை. அரசியல் இரு பக்கங்களிலும் கூருள்ள முனைகளை உடைய ஒரு கருவியாகும். அது தேற்றத்தை ஆக்கவும் அழிக்கவும் வல்லது. ஒருவன் சமூகப் பொருளாதார நடப்புக்களை அறிந்தவனாக இருக்க வேண்டியது அவசியம்.

டும் நடப்பு சமூக நிகழ்ச்சிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தார்கள். ஏனையவர்கள் சமூகத்தினின்றும் தனித்து ஒதுங்கி நின்றூர்கள். பிற நிகழ்ச்சிகள் தங்களைப் பாதிக்காதவண்ணம் அவர்கள் காத்து வந்தமையால் சமூகத்தின் இயக்கத்தினின்றும் **தனித்து** இருந்தனர். அவர்களது சிந்தனை உண்மையான நிலைமையை பிரதிபலிக்காமலும் இந்தியாவின் இயல்பிற்கு ஒவ்வாமலும் இருந்தது. அவர்களால் அன்றுடப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியவில்லை. அதற்கு மாறுக நாட்டின் அன்றுடப் பிரச்சினைகளுடன் தொடர்பு கொண்டுள்ள சிறுபான்மையினர் பொருளாதார சிந்தனையின் ஆக்கத்திற்கு அடிப்படையான வகையில் பணி புரிந்துள்ளனர். இவ்வகையில் முதலிடம் பெறுபவர் பேராசிரியர் இராதாக்கமல் முகர்ஜி (Radhakamal Mukerjee) ஆவர். அவரது **'இந்தியப் பொருளாதாரத்தின் அடித்தளம்'** (The Foundations of Indian Economics - *1916*) என்ற நூலும், **'ஒப்புமைப் பொருளாதாரக் கோட்பாடுகள்'** (Principles of Comparative Economics - *1921*) என்ற நூலும் முக்கியமானவை. முதலாவதாக வெளி வந்த நூலில் இந்திய நிலைமைக்கு ஏற்ப சிறந்தத் தேற்றங்களை உருவாக்கக் கூடிய அமைப்பு அடிப்படைகளைத் தந்துள்ளார்.[71] பேராசிரியர் டி. ஆர். காட்கில் அவர்கள் எழுதிய **'அண்மைக் காலத்தில் ஏற்பட்ட இந்தியத் தொழிலின் பரிணுமம்'** [Industrial Evolution of India in Recent Times - *1924*] என்ற நூல் பழைய மரபின் சின்னமாக விளங்குகிறது. அவர், **"ஊதியச் சீரமைப்பும் தொழிற் துறை உழைப்பாளிகளின் இதர பிரச்சினைகளும்"** [Regulation of Wages and other problems of Industrial Labour *(1939)*] **என்ற நூலை எழுதியிருக்கிறுர்.** பொருளாதார வரலாற்று உண்மைகளுக்கு ஏற்ப்த் தேற்றங்களை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற நியதிக்கு ஒரு எடுத்துக்காட்டாக இந்நூல்

71 பேராசிரியர் முகர்ஜி அவர்கள் கீழே கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். "தற்சமயம் காணப்படுகின்ற சூழ்நிலை குழப்பமானதாகவும், சிதைவுற்றும் உள்ளது. இச்சூழலில் ஒப்புமைப் பொருளாதாரம் முக்கியப் பொறுப்பை மேற்கொண்டுள்ளது. இந்தியப் பொருளாதாரத்தின் பரிணுமத்தை இயக்குவதுடன் குழப்பங்களுக்குத் தீர்வு காணும் வகையிலும் அமைந்துள்ளது. இப்போது மூவகை வேறுபாடுகளுக்கிடையே தெளிவற்ற குழப்பமான நிலைமைதோன்றியுள்ளது. முதலாவதாக, வட்டார நிலைமைகளும், பண்பாடுகளும் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றன. இத்தகைய வேறுபடுகின்ற சூழல்களுக்கும் ஏற்ப தேற்றமும், செயல் முறைகளும் வேறுபடக்கூடும் என்ற வரையறையை உணர வேண்டும். இரண்டாவதாக, செயல் திட்டம், செயல் நோக்கம் ஆகியவற்றில், வேறுபாடுகளுக்கிடையே அடிப்படையான ஒருமித்த கருத்து நிலவுவதையும்; இறுதியாக வாழ்க்கை இயலின் அடிப்படையாக அமைந்த வரலாற்றிற்கும், மனிதாபிமான அடிப்படையில் எழுந்த சமூக இயல்களுக்கும் இடையே நெருங்கிய சார்புத் தொடர்பு இருப்பதும், ஒருமித்த கருத்து நிலவுவதும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய நுண்ணிய வேறுபாடுகளை உணர்வதற்கு ஒப்புமைப் பொருளாதாரம் அவசியமாகிறது." பார்க்கவும். **Singh B. (Ed) The Frontiers of Social Science [London 1955]** பேராசிரியர் முகர்ஜியின் பொருளாதாரக் கட்டுரை களைக்கொண்ட இந்த நூல் அவரது பலவகையான கருத்துரைகளைப் பெற்று விளங்குகிறது (இதர சமூக இயல் கட்டுரைகளும்)

விளங்குகிறது. பேராசிரியர்கள் கே, டி. ஷா (K. T. Shah) அவர்களும், கே. ஜி. கம்பதா (K. G. Khambata) அவர்களும் **"இந்தியாவின் செல்வமும், வரி ஏற்கும் சக்தி"**யும், [Wealth and Taxable Capacity of India - *1924*] என்ற நூலை எழுதியிருக்கிறார்கள். இதில் திரும்பவும் இந்தியாவின் 'தேக்கப் பிரச்சினை' ஆயப்படுகிறது. நெடு நாட்களாக இந்தியாவின் தேசீய வருவாயை அளவிட்டு அறிவது பெரிய பிரச்சினையாக இருந்தது. இதில் இந்திய தேசீயத் தலைவர்களுக்கும், பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டிருந்தது. இதனை டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் [Dr. V. K. R. V. Rao] அவர்களின் **'இந்தியாவின் தேசிய வருவாய்'** (India's National Income - *1939*) என்ற நூல் தீர்த்து வைத்தது.

1930 முதல் *1939* வரையில் உள்ள பத்தாண்டுக் காலத்தில் இந்தியப் பொருளாதார சிந்தனையின் வளர்ச்சியில் இரு முக்கியப் போக்குகள் குறிப்பிடத் தக்கவை. முதலாவதாக சோவியத் நாட்டின் வெற்றி, உலக அறிஞர்களின் ஆர்வத்தைக் கவர்ந்தது. இந்தியாவில் உள்ளவர்களும் அவ்வாறே ஆர்வம் காட்டினர். அவ்வகையில் பேராசிரியர்கள் டி. பி. முகர்ஜியும் (D. P. Mukerjee) பி. என். கயான் சந்த்தும் (B. N. Gyan Chand), பி. என். கங்குலி (B. N. Ganguli)யும் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் சிறந்த உள்ளுணர்வும், கூர்ந்து அறியக்கூடிய நுண்அறிவும் ஆய்வுத்திறனும் பெற்று இருந்தபோதிலும், இவர்களது கட்டுரைகளில் சோஷலிஸ சிந்தனை பிரதிபலிக்கவில்லை. இவர்கள் பிரச்சினைகளை விவாதிப்பதின் மூலமாக சோஷலிஸத்தை அறியவேண்டும் என்ற அறிவுப்பசியை ஏற்படுத்தினார்கள். விஸ்வேசுவரய்யா அவர்களின் **'இந்தியாவிற்குத் திட்டமிட்ட பொருளாதார அமைப்பு'** (Planned Economy for India - *1936*) என்ற நூல் சோவியத் நாட்டின் திட்டமிட்டப் பொருளாதார முன்னேற்றத்தை எதிரொலிப்பதாக அமைந்துள்ளது. இரண்டாவதாக மேலை நாடுகளில் இறுதி நிலைத்துவம் (Marginalism) சிறப்பு வழக்காக இருந்தது. அதன் காரணமாக இந்தியப் பொருளாதார சிந்தனையில் சில விளைவுகள் ஏற்பட்டன. இவ்வகையில் பேராசிரியர் ஜெ. கே. மேத்தா[72]வும், எ. கே. தாஸ் குப்தாவும்[73] குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களுடைய கட்டுரைகள் அறிஞர்களின் பாராட்டுதல்களைப் பெற்றன. இத்தகைய அறிவு

[71] Mrs. Joan Robinson அவர்கள் தன்னுடைய **Economics of Imperfect Competitons** [London, 1933] என்ற நூலின் முகவுரையில் பேராசிரியர் மேத்தாவின் பெயரைக் குறிப்பிட்டுள்ளார். 'Marginal Revenue Poll'' ஐ நோக்கிக் கூட்டமாகச் சிலர் முன்னேறிச் செல்கின்றனர் என்றும் கூறுகிறார். [p. p. vi-vii].

[73] Das Gupta, A. K., அவர்களின் **Coneeption of Surplus in Theoretial Economics** [Calcutta, 1948].

சார்ந்த கட்டுரைகள் இந்திய வரலாற்றுக்குப் புறம்பானவை. இவை இந்திய மண்ணில் நிலைபெற்றதாகவும் இருக்கவில்லை.

*1938-39*ஆம் ஆண்டுகளில் இந்திய தேசியத்தலைவர்களின் பொருளாதாரக் கருத்துக்கள், இந்தியப் பொருளியல்வாதிகளின் கருத்தை விட ஒருபடி உயர்ந்ததாகவே இருந்தது. இந்திய தேசிய காங்கிரஸின் கராச்சித் தீர்மானமும், தேசியத் திட்டமிடல் பற்றிய தீர்மானமும் சிறுபான்மை பொருளியல்வாதிகளின் கவனத்தை ஈர்த்தது. அவர்களுக்கெல்லாம் தலைவராகப் பேராசிரியர் கெ. டி. ஷா அவர்கள் இருந்தார்கள். தேசிய விடுதலை இயக்கத்தினரின் கருத்துக்களைப் பொருளாதார சிந்தனையாளர்கள் ஏற்கும்படி செய்தார். தேசிய திட்டமிடல் கமிட்டியில் (*1938*-ல்) இவர் பணியாற்றினர். முதல் உலகப் போருக்குப் பின்னர், முதல் உலக மந்தம் முடிவுறும் வரையிலும் இந்திய சிந்தனையில் ஓரளவிற்குத் தேக்கம் ஏற்பட்டு இருந்தது. இந்த சிந்தனையை உயிர்ப்பிக்கும் வகையில் தேசிய திட்டமிடல் முயற்சி அமைந்து இருந்தது. பெரும்பாலானவர்கள் இந்திய தேசிய இயக்கத்தில் கலந்துகொள்ளாமல் தனித்து இருந்தனர். எனவே தேசியத் திட்டமிடலை நாட்டிற்கு அளித்தவர்கள் தேசிய இயக்கத்தினர். இத்தகைய சூழ்நிலையில் பொருளியல்வாதிகள் தேற்ற ஆக்கத்திற்கு உதவ முடியவில்லை. இவ்விடத்தில் பேராசிரியர் தாஸ் குப்தா அவர்களின் கூற்றைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். "பொருளாதாரத் தேற்றம் வெற்றிடத்தில் உருவாவதில்லை. உண்மையில் அது அப்போதைய நிகழ்ச்சியின் பிரதிபலிப்பாகும்". இரண்டாவது உலகப் போரில் ஏற்பட்ட இன்னல்கள் இந்தியப் பொருளியல்வாதிகளின் மன உணர்வைத் தூண்டியது எனலாம். விடுதலைக்குப் பின்னர் திட்டமிட்டப் பொருளாதாரப் பாதையில் நாடு முன்னேற்றம் பெறுவதற்கு அவர்கள் ஒத்துழைத்தார்கள். இதுவரை யாரும் கண்டிராத வகையில் ஆராய்ச்சிக்கான வாய்ப்புகள் பல ஏற்பட்டன.[74] வளர்ச்சித் துறையில் உலக நாடுகளுக்கு இடையே இரு வேறுபட்ட முறைகள் போட்டியிடுகின்றன. இந்தச் சூழ்நிலை ஆய்வை மேற்கொள்ளுவதற்கு ஏற்றதாக இருக்கிறது.[75] தேற்ற ஆக்கப் பணியில் நாமும் ஓரளவிற்குத் தொண்டு செய்து வருகிறோம். இவ்வகையில் முக்கியமான கௌரவ இடத்தைப் பேராசிரியர் பி. சி. மகலனோபிஸ் அவர்களுக்கு அளிக்க வேண்டும். இந்தியத் திட்டமிடல் அடிப்படையில்

[74] Research Programme Committees யும், Ford Foundation ம், செய்முறை ஆராய்ச்சியில் [Applied Research] அதிக கவனம் செலுத்தின. திட்டமிடாத வகையில் வளர்ந்த பல உயர்கல்வி ஆய்வு நிலையங்கள் தேற்ற ஆய்வில் கவனத்தைச் செலுத்தின.

[75] Domar, E., அவர்களின் **Essays in the [Theory of Economic Growth Oxford, New York, 1958.] p. 15.**

பொருளாதார இயக்கநிலை பற்றிய[76] அவரது ஆக்கத் தொண்டு போற்றுதற்குரியது.

பொருளாதாரத் தேற்றம், பொருளாதார வரலாற்றில் வேறூன்றி உள்ளது என்பதை இந்தியா விளக்கிக் கூறுகிறது. பழைய அமைப்பை நன்முகப்புரிந்துகொண்டால்தான் தற்காலத்தை நாம் விரும்பியவண்ணம் உருவாக்க முடியும்.[77] இவ்வாறாக வரலாற்றை உருவாக்குகின்ற நிலையில்தான் தேற்றம் எழுச்சி பெறுகிறது. இது எதிர்காலத்திற்கும் ஒரு வழிகாட்டியாகும்.

76 " Some Observations on the Process of Growth of Natioal Income **Saukhya**, 1953, " The approach of Operational Research to Planning in India " முன்கூறியபடி 1955.

77 பிரிட்டிஷ் வானொலிக் கழகத்தார் (B B C) சொற்போர் ஒன்றை நடத்தினர்கள். (Third Programme) அதில் பேராசிரியர் டாய்ன்பீ (Professor Toynbee) அவர்கள் பேராசிரியர் கைலுக்கு (Professor Geyl)க் கூறுகிருர். தலைப்பு, " Can we know the Pattern of the Past?" "வரலாறு என்பது நம்மால் புரிந்து கொள்ள முடியாதவகையில் அமைந்த ஒரு புதிரா?" என்பது கேள்வி. மனித அறிவின் துணை கொண்டு இயற்கை அமைப்பின் இரகசியத்தை அறிந்துள்ளனர். அதே போல மனிதனுடைய வரலாற்றிலிருந்து மனிதனைப் பற்றிய இரகசியங்களை அறிய முடியாதா? அது ஏமாற்றத்திலே முடியும் என்று உறுதியாக நம்பிக்கொண்டு, (ex. cathedra dictum) எவ்வாறு வாளா இருக்க முடியும்? அணுவைப் பிளந்து அதன் இரகசியத்தை அறிவதை விட மனிதனின் இரகசியத்தை அறிவது கடினம் என்று சொல்லத் தேவையில்லை. நாம் அணுவைப் பிளப்பதற்கு கற்றுக்கொண்டோம். நம்மை நாமே அழித்துக் கொள்ளும் அளவிற்கு அணுவைப் பிளக்கக் கற்றுக்கொண்டோம். பௌதிக இயலுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மனித இயலில் நாம் கண்டுள்ள உண்மைகள் மிகமிகக்குறைவு என்பது புலனுகும். இவ்விரு இயல்களின் முன்னேற்றம் ஒரு சீராக அமையவில்லை. ஒன்று மற்ருென்றைப் பிடிக்க முடியாத அளவிற்கு வேறுபாடு உடையதாக இருக்கிறது. இன்றைய இக்கட்டான நிலைமைக்கு இவ்வேறுபாடு ஒரு முக்கியக் காரணமாகும். இந்நிலைமையில் அறிவியல் தனது பொறுப்பை தவிர்த்துக்கொள்ள முயலுமா?" Garduerer முன் கூறியபடி பக். 314.

2. இயற்கை வளங்கள்: தாதுப் பொருள்களும், மண் வகைகளும்:

எம். ஆர் ஸானி, (M. R. SAHNI)

முன்னுரை

இந்தியத் துணைக்கண்டத்தில் இயற்கையாக உள்ள தாது வளங்களையும், மண் வகைகளையும் பற்றிச் சுருக்கமாக இக்கட்டுரை ஆய்கிறது. மேலே கூறிய பகுதிகளைத் தவிர மேலும் சில பகுதிகளையும்,—கான் வளத்தைப்பற்றிய விவரமான குறிப்பும், நீர்வளம், நீர் மின்சக்தி முதலிய விவரங்களும்—இக் கட்டுரையில் சேர்ப்பதற்கு ஆசிரியர் கருதியிருந்தார். தவிர்க்க முடியாத அலுவல்களுக்கு இடையே இக் கட்டுரை ஆசிரியர் ஈடுபட்டு இருந்தமையால் இவற்றைச் சேர்க்க முடியவில்லை. பெருவாரியாக நீர் மின்சக்தியை உற்பத்தி செய்யாத நாடுகள் தொழில்துறையில் முன்னேற்றம் காணமுடியாது என்று உறுதியாகக் கூறலாம். அவை முக்கியமாக கனரகத் தொழில்களை வளர்க்க முடியாது. இவ்வகையில் நமது தற்போதைய வளங்களும், எதிர்காலத்தில் நாம் பயன்படுத்தக் கூடிய வளங்களும், ஏறத்தாழ வரம்பு அற்றவைகளாக உள்ளமை நமது பேறுகும். இன்றைக்கு நாம் எண்ணிறந்த ஆறுகளைப் பயன்படுத்தி வருகிறோம். பல நீர்மின் நிலையங்களை நாடெங்கிலும் தோற்றுவித்தும் நெடிது காலம் கரம்பாக உள்ள பெரிய நிலப் பரப்பிற்கு நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தியும் உள்ளோம்.

இவ்வாறே காடுகளும் ஒரு நாட்டின் முக்கியச் செல்வமாகக் கருதப்படுகின்றன. காடுகளிலிருந்து பெறக்கூடிய மரவகைகள் தேக்கு, தேவதாரு (pine) ஷிஷாம் (Shisham) ஸிடார் (Cedar) மூங்கில் முதலியன கட்டிட வேலைகளுக்கும், வீட்டிற்கான மரச் சாமான்கள் செய்வதற்கும் பயன்படுகின்றன. சிலவகைப் புல்

களும், மூங்கிலும் மிருதுவான மரங்களும் காகித உற்பத்திக்குப் பயன்படுகின்றன. தீப்பெட்டித் தொழிலிற்கும், விளையாட்டுச் சாமான்கள் செய்வதற்கும், மிருதுவான, கனக் குறைவரன மரங்கள் பயன்படுகின்றன. காடுகளிலிருந்து கிடைக்கக்கூடிய ரப்பர், நறுமணப் பொருள்கள், அரக்கு, ரோஸன் (Rosen), கதா (Katha) சந்தன மரம் முதலியன வருவாய் தரக்கூடிய முக்கிய இனங்களாகும். கச்சா ரப்பர் மோட்டார்த் தொழிலிற்கு அவசியம். மேலும், இது போர் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. எனவே இதன் வளர்ச்சி சிறப்பு உடையதாகக் கருதப்படுகிறது.

இத்தகைய வளங்களைப் பயன்படுத்துவதற்குத் தக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் நமது கான் வளம் பெருவாரியாக வளர்ச்சியடைந்து இருக்கும். காடுகள் நமக்குப் பலவகைகளிலும் பயன்படுகின்றன. முதலாவதாக, அவை நமக்குத் தேவைப்படும் கான் பொருள்களைக் கொடுக்கின்றன; மண் அரிப்பைத் தடுப்பதுடன் பாலைவனம் பரவாமலும் காக்கின்றன.

நாட்டின் தாது வளங்களின் முக்கியத்துவத்தை இங்கே போதிய அளவு வலியுறுத்திக் கூற இயலவில்லை. தனிப் பிரிவு ஒன்றில் அவை விவரமாகக் கூறப்பட்டுள்ளன.

1. இந்தியாவில் மண் வகைகள்

இந்தியா வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்ட நாடு. இதன் பொருளாதார வளர்ச்சிக்கு மண்வள ஆராய்ச்சி அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தது. வேளாண்மையின் வளர்ச்சிக்கும், கான் வளப் பெருக்கத்திற்கும், மண்வகைகளின் ஆக்க அமைவை ஆய்வது அவசியம். மழை, இயற்கை அமைப்பு. வளர்ந்துள்ள தாவரங்கள் முதலியன மண்ணின் ஆக்க அமைவை நிர்ணயிக்கும் காரணிகள்ஆகும் தாவரங்கள் மக்கி மண்ணோடு மண்ணுக ஒன்றிவிடுகின்ற காரணத்தினுல் மண்வளம் மாற்றம் அடைகின்றது. காலநிலை (Climate)யும் முக்கியத்துவம் பெற்ற காரணியாக உள்ளது. எடுத்துக்காட்டாக, இந்தியாவின் பருவக்கால நிலைச் சுழலும், அதனைத் தொடர்ந்து நீண்ட வறட்சியான கோடையும் இந்தியமண் வகைகளைப் பெரிதும் பாதிக்கின்றன.

பொதுவாகக் கூறின் இந்திய மண் வகைகளை இருபிரிவுகளாகப் பிரிக்கலாம்: அவை (அ) நகர்வு மண் (Drift soil) என்றும், (ஆ) தங்கிய மண் (Residual soil) என்றும் இருவகையாகும். இவற்றுள் (அ) நகர்வு மண் அது காணப்படுகின்ற இடத்

தில் தோன்றியதன்று. இது காற்று, நீர் முதலிய இவைகளால் இடம் பெயர்த்தப் பெற்றது. காற்றல் புலம் பெயர்ந்த மண்ணை 'லோயிஸ்; (Loess) என்றும், நீரால் இடம் பெயர்ந்த மண்ணை வண்டல் மண் (alluvial soil) என்றும் அழைக்கலாம். (உதாரணமாகச் சிந்து—கங்கை சமவெளிப் பிரதேசத்தில் உள்ள வண்டல் மண்ணைக் குறிப்பிடலாம்.) (ஆ) தங்கிய மண், அது காணப்படுகின்ற இடத்திலேயே தோன்றியதாகவும், தங்கியதாகவும் இருக்கும். உள்ளீடாகக் கீழே அமைந்த பாறை அடுக்குகள், காலநிலை மாற்றத்தால் சிதைவுற்று, மேலே மண் அடுக்குகளைத் தோற்றுவிக்கின்றன. எடுத்துக்காட்டாக, செம்பூராங்கல் சிதைந்து ஏற்படும் மண்ணையும் (Latertite), கரிசல் மண்ணையும் (Regur) குறிப்பிடலாம்.

வண்டல் மண்ணும், காற்றல் இடம் பெயர்த்தப்படும் மண்ணும், அவை தோன்றிய இடத்திலிருந்து நெடுந்தூரம் கொண்டு செல்லப்படுகின்றன. இவ்விரு மண்வகைகளைத் தவிர ஒரு வட்டாரத்தில் காணக்கூடிய மண் அங்குள்ள கீழ்ப்படிவப், பகுதியின் புவிஅமைப்புத் தோற்றுவாயுடன் நெருங்கிய தொடர்பு உடையதாக இருக்கும். கீழ்ப் படிவப் பாறைகள், காலநிலை மாற்றத்தால்—மழை, காற்று, பனி, மாறுபடும் வெப்பநிலை முதலியவற்றல் பாதிக்கப்பட்டுச் சிதைவுறுகின்றமையால் இவை தோன்றுகின்றன. மழை நீரால் சில இயற்கை விளைவுகள் தோன்றுகின்றன. இது தவிர, நிலத்தில் தோன்றக்கூடிய சிலவகை வாயுக்களை மழைநீர் கரைக்கின்றது. இவ் வாயுக்கள் (காட்டாக Co2 கரியமிலவாயு) பாறையை அரித்து, மண்ணைத் தோற்றுவிக்கக் கூடியவை.

இயற்கைப் பிரிவுகளும், அவைகளின் சிறப்பு மண்வகைகளும்:— இந்தியத் துணைக்கண்டத்தை மூன்று மண்டலங்களாகப் பிரிக்கலாம். இம்மண்டலங்கள் புவி அமைப்பு வரலாற்றலும், இயற்கை அமைப்பாலும் வேறுபடுகின்றன. இதனல் இம்மண்டலங்களில் உள்ள மண்வகைகளும் மாறுபடுகின்றன. இம் மூன்று மண்டலங்களில் முதலில் தக்காணப் பீடபூமியைக் குறிப்பிடலாம். இது தெற்கே கடற்கரை வரையிலும் பரவியுள்ள இந்தியத் தீபகற்பத்தைக் குறிக்கின்றது. இப்பகுதி மிகவும் பழைமையானது பெர்மியன் (Permian) கிரிடேஷஸ் (Cretaceous) டெர்ஷரி (Tertiary) பிளெய்ஸ்டோஸீன் (Pleistocene) முதலிய புவிஅமைப்பு சகாப்தங்கள் (eras) இம் மண்டலத்தில் அதிகமாற்றங்களை ஏற்படுத்தவில்லை. இவை தவிர, புவியமைப்பு வரலாற்றின் துவக்கத்திலிருந்து உறுதியான ஒரு நிலப்பரப்பாக இம்மண்டலம்

திகழ்கிறது. ஆகவே இங்குள்ள மண் வகைகள் முதிர்ச்சி யடைந்தவை.

தீபகற்பத்திற்குப் புறத்தேயுள்ள இமயமலைப் பிரதேசம் : தீப கற்பத்திற்குப் புறத்துள்ள மண்டலத்தை இரண்டாவது அலகாகக் குறிப்பிடலாம். இம் மண்டலத்தில் இமயமலைத் தொடர்கள் அடங்கியுள்ளன. இமயமலைத் தொடர்களின் போக்கு பாகிஸ் தானிலும், பர்மாவிலும் திடீரென்று மாறுபடுகின்றது. இம்மலைத் தொடர்கள் அந்நாடுகளில் தெற்கு வடக்காக வளைந்து திரும்பு கின்றன. அப்போது ஸின்டாக்ஸியல் (Syntaxial bend) வளைவுகள்- (கூரிய வளைவுகள்) ஏற்படுகின்றதென புவி அமைப்பு அறிஞர்கள் கருதுகிறார்கள். வடக்கே உள்ள இமயமலைப் பகுதிகளுக்கும், தெற்கே பிதிர்வின் அழுக்கத்தால் எழுச்சிபெற்ற தீபகற்பத் திற்கும் இடையே (Peninsular horst—என்று புவி அமைப்பு அறிஞர் கள் கூறுகிறார்கள்) சிந்து கங்கைச் சமவெளி பரந்து கிடக்கின்றது. இது கீழ் வளைவாக அமைந்து கொப்பரை நிலத்தை (Synclinal basin) உண்டாக்கியுள்ளது. இம் மண்டலம் புவி அமைப்பு முக்கியத்துவம்பெற்று இருக்கவில்லை. இருந்தபோதிலும் அங்குள்ள மண் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இவைகளின் தோற்றுவாய் குறித்து இரு கருத்துக்கள் நிலவுகின்றன. (அ) ஒன்று, இமயமலை எழுச்சி பெற்ற காலத்தில், அது எழுச்சி பெற்றதன் விளை வாகப் பள்ளமாக ஆக்கப்பட்ட நிலம்தான் சிந்து கங்கைச் சமவெளி என்று எட்வர்ட் சுயஸ் (Edward Suess) கருதுகிறார். (ஆ) நில அழுக்கத்தின் காரணமாக வடக்கு, தெற்கு எல்லைகளில் சுமார் 2000 மைல்களுக்கு இணையாகத் தோன்றிய புறவெடிப்புக்களால் ஏற்பட்ட ஒரு பிளவுப் பள்ளத்தாக்கு (rift like depression) என்று கருதுகின்றனர். இவ்வகையில் இதனை ஆப்பிரிக்காவின் பிளவுப் பள்ளத்தாக்குடன் ஒப்பிடலாம். இக் கருத்தை டபிள்யூ. புர்ராட் (W. Burrad) என்பவர் கூறுகிறார். இன்றும் இப் பகுதியில் அமைந்துள்ள ஆறுகள் கொண்டுவரும் படிவுகள் படிந்த வண்ணமாக இருக்கின்றன. இதனால் இம் மண்ட லத்தில் குறிப்பிடத்தக்க கனத்திற்கு வண்டல் காணப்படுகின்றது. இது தவிர மற்றும் ஒரு கருத்தும் நிலவக் காணலாம். இமயமலை யின் தீவிர எழுச்சிக் காலமான மத்திய மியோஸீன்(Mid-Miocene) காலத்தில், இமயமலை தோன்றுவதற்குக் காரணமாக உள்ள அழுக்கமுற்ற படிவுகள் ஒருபுறமாகவும், தெற்கில் அமைந்த நிலை யான நிலப்பகுதியின் அழுத்தம் மற்றொரு புறமாகவும் இருந்ததன் விளைவாக, இச்சமவெளி தோன்றியிருக்கலாம் என்றும் ஒரு விளக்கம் தரப்படுகிறது. ஆனால் கோந்துவானா நிலத்தின் (Gondwanaland) உடைவும் சிந்து-கங்கைப் பள்ளத்தின் தோற்ற

மும், இமயமலையின் எழுச்சியும் முக்கியமான பெரிய மாற்றங்கள் ஆகும். இவை எல்லாம் இயோஸீ (Eocene) காலத்திலேயே ஏற்பட்டன. தவிரவும், தென் எல்லையைவிட இமயமலையின் அடி வாரத்தில் அமைந்துள்ள வட எல்லை அதிக ஆழம்பெற்று விளங்கு வதையும் குறிப்பிட வேண்டும். இங்கு, இமயமலையின் அடிவாரத் திற்கு வெகு அருகில், இப்பள்ளம் 15000 அடி ஆழம் உடையதாக இருக்கின்றது. சிலேட் (Slate), குவொர்ட்ஸ் (Quartzite) மணற் பாறைகள் (Sandstone), சுண்ணும்புப் பாறைகள், ஆகிய படிவுப் பாறைகளை இங்குக் காணலாம். இவை பொதுவாகவே குறைந்த கனம் உடைய மண் படிவத்தைத் தோற்றுவிக்கின்றன. சிறப் பாகத் தென் சரிவில் பருவ மழையால் மண் அரிப்பு மிகுதி யாக ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மெல்லிய மண் படிவம் படிந்துள்ளதைக் காணலாம். மழையின் கொடுமையிலிருந்து வடசரிவுப் பாதுகாக்கப்படுவதால் அச் சரிவில் வளமான தேவதாரு மரக் (pine) காடுகள் தோன்றியுள்ளன. இக்காடுகள் நமது தேச உடைமையில் முக்கியமானதாகும்.

தீபகற்ப மண்டலத்தின் புறப்பகுதிகள் தொல் உயிரிகளால் (Fossiliferous) ஆகிய படிவப் பாறைகள் அடங்கியவை. இவைகள் கருங்கல் பாறைகளாலும், படிகம் போன்றுள்ள சுழற் பாறை களாலும் (Igneous rocks) ஆக்கப்பட்டுள்ளன. இப்பிரதேசம் முன்னெரு காலத்தில் கடலின் அடியில் இருந்திருக்கவேண்டும். பின்னர் மூன்று நிலைகளில் மேலெழுந்து தற்போதைய மாபெரும் இமயமலையாகத் தோற்றம் அளிக்கிறது. இம் மூன்று மேலெழுச்சி காலங்களிலும் இப் பிரதேசம், மடிப்புக்கள், பிளவுகள், அமுக்க உதைகள் (Thrusting) முதலியவற்றால் பெருத்த மாற்றங்கள் அடைந்திருக்கவேண்டும்.

தீபகற்ப இந்தியாவில் மண் வகைகள் : மூன்று மண்டலங் களும், புவி அமைப்பு இயல் வரலாற்றாலும், நில அமைப்பாலும், பெரிதும் வேறுபடுகின்றன. இவை சிறப்பான பண்புகளைக் கொண்ட மண் அடுக்குகளைப் பெற்றுள்ளன.

பீடபூமியில் பாஸால்ட் (Basalt) எரிமலைக் குழம்புப் பாறை களும் அதன் ஓரங்களில் மெஸோஸோயிக் (Mesozoic) டெர்ஷியரி (Tertiary) பாறைகளும் உள்ளன. இதைத் தவிர மற்றும் உள்ள தக்காண மண்டலப் பகுதிகள் கேம்பிரியன் காலத்திற்கு முற்பட்ட Pre Cambrian) அல்லது பாலியோஸோயிக் (Palaeozoic) காலத் திற்கு முற்பட்ட, டார்வர், (Dharwar) ஆரவல்லி, கடப்பா, விந்திய அமைப்புக்களைச் சார்ந்த படிக, உருமாறிய பாறைகளால் ஆக்கப்பட்டுள்ளன. இவற்றில் பலவகையான மண்கள் காணப்

படுகின்றன. அவை பின்வருமாறு: (அ) செம்மண்கள் (Redsoils) (ஆ) பருத்தி விளைச்சலுக்கு ஏற்ற கரிசல் மண்கள் (இ) லாட்டரைட் அல்லது லாட்டரைட் தன்மையேறிய மண்.

செம்மண் வகை: இம்மண் வகைக்கு ஆதாரமாக உள்ள அடித்தளப் பாறைகள் மிகவும் பரவலாக அமைந்துள்ளன. இந்தியாவிலேயே காணப்பெறும் மண்வகைகளில் இது மிகவும் பெரும்பான்மையாகஇருக்கிறது. இவ்வகையில் பல இனங்கள் உள்ளன. ஆர்க்கேயன் (Archaean) போன்ற பழங் காலத்திலிருந்தே இது உருவாகியிருக்க வேண்டும். மிகப் பழைமையான மண் வகையாக இருப்பதால் அதிக முதிர்ச்சி பெற்றுள்ளது. கருங்கல் பாறைகளும், மற்றும் அமிலத் தன்மையுடைய சுழற்பாறைகளும், பெரும்பாலும் செம்மண்ணைத் தோற்றுவிக்கின்றன. இதனுல், இம்மண்ணில் பொட்டாசியக் காரம் மிகுந்து இருக்கும். இதில் பாஸ்பேட்டுகள், சுண்ணும்பு, மக்னீஷியா முதலியவைக் குறைந்த அளவில் உள்ளன. விந்தியா, கடப்பா அமைப்புக்களைச் சார்ந்த மணல் பாறைகளிலும், களிமண் பாறைகளிலும், இரும்பு அதிக அளவிற்குள்ளது. ஆனுல் இவை வெவ்வேறு வண்ணங்களில்—சிவப்பு, செம்பழுப்பு, மஞ்சள், கருப்பு போன்ற வண்ணங்களில் — இருக்கின்றன. செந்நிறம், அதனுள் அமைந்த இரும்பால் ஏற்பட்டதாகும்.

செம்மண் மொத்தத்தில் சுமார் 8,50,000 சதுர மைல்கள் பரப்பில் பரவியுள்ளது. பண்டல்கண்டின் (Bundelkhand) சில பகுதிகள், இராஜஸ்தானம், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா, ஆந்திரம், தமிழ்நாடு, மைசூர், ஆகியவை இப்பரப்பில் அடங்கியுள்ளன. இப்பகுதிகளின் அடிப்பாறை அடுக்கினைப் பொறுத்து இம்மண்ணின் கனம், நிறம், தன்மை (consistency) ஆகியவை வேறுபடுகின்றன.

இம்மண் வகைகள் வளம் குறைந்தவை. இலைமக்கும், (humus) மற்றும் இதைப்போன்ற வளத்தை ஏற்படுத்தக்கூடிய சாதகமான பொருள்களும் இவற்றில் குறைவாக இருப்பதே முக்கியக் காரணமாகும். இதனுல் இம்மண்வகை மற்றவைகளைக் காட்டிலும் வளம் குறைந்துள்ளது. ஆனுல் தாழ்நிலங்களில் உள்ள செம்மண்கள் இதற்கு விதிவிலக்காக உள்ளன. இவை வளம் உடையன.

கரிசல் மண் (Regur - ரீகர் மண்): தென்னிந்திய மண் வகைகளில் முக்கியமான மற்ருெரு வகை, கரிசல் மண் ஆகும். இது செம்மண் வகைக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் பெற்றுள்ளது. இம்மண்ணின் நிறமே அதன் பெயருக்குக் காரணமாகும். இதன் பொதுவானக் கூட்டு அமைவு பருத்தி விளைச்சனுக்கு மிகவும் ஏற்றதாக உள்ளது. மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், குஜராத்

தமிழ்நாடு, ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் இம்மண் பரவியுள்ளது. இம்மண் தக்காணப் பீடபூமியில் லாவா (lava) என்ற எரிமலைக் குழம்பு வழிந்து படிந்த நிலப் பரப்புக்களில் எல்லாம் காணப்படு கின்றது. இதன் தோற்றத்திற்கு லாவா வழிவுகளே முக்கியக் காரணமாகும். இருந்தபோதிலும், வேறு இரண்டொரு வழிமுறை களாலும் இம்மண் வகை ஆக்கப்பெற்று இருக்கலாம். உதாரணமாக வண்டல் படிந்த பள்ளத்தாக்குகளிலும் இம் மண் குறிப்பிடத்தக்க அளவில் படிந்துள்ளது. பள்ளத்தாக்குகளைச் சூழ்ந்துள்ள லாவா பாறையிலிருந்து ஏற்பட்ட வழிவுதான் இம்மண் படிவு ஏற்படக் காரணமாகும். இதனுடன் கலந்துள்ள இலைமக்குகள் இதற்குக் கருமை நிறத்தை அளிக்கின்றன. நிலத்தில். விழும் இலைகள் மக்கி மண்ணோடு சேரும்போது இந்நிறத்தைப் பெறுகின்றது. பயிரிடப் படாத இடங்களில் உள்ள கரிசல்மண் (ரிகர்) செந்நிறமாக உள்ளது வேறு சில விளக்கங்களும் தரப்படுகின்றன. டைட்டானியம் இரும்பு கலந்த மாக்னெடைட் (Titaniperous magnetite) சிறிதளவு கலந்து இருப்பதால் கருநிறம் ஏற்படுகிறது என்று சிலர் கருதுகின்றனர். அடிப்பாறைகளில் இரும்பும், கருமையான சில பொருள்களும் கலந்து இருப்பதால் கருநிறம் ஏற்படுவதாக மற்றும் சிலர் கருது கின்றனர். படிக உருக்கொண்ட ஷிஸ்ட் பாறை (crystallinc schists) களிலிருந்தும், காரத்தன்மை கொண்ட 'நைஸ்' (basic gneisses) பாறைகளிலிருந்தும் இம்மண் உருவாகிறது. தமிழ்நாடு, ஆந்திரம் முதலிய இடங்களில் உள்ள கரிசல்மண் இவ்வகைப்படும். இதன் சிறப்பான பண்புகள் பின்வருமாறு :- (1) இயற்கையாகவே இது வளம் உடையது. (2) பெருமளவு களிமண் கொண்டது. சில சமயங்களில் களிமண் இதில் 65% ஆகவும் இருக்கும். (3) மிகுதி யாகச் சுண்ணம் நிறைந்தது. சிறு சுண்ணும்புக் கோளங்கள் (Kankar nodules) உடையது. (4) மக்னீஷியம் கார்போனேட் இரும்பு ஆக்ஸைட் (ferrous oxide), அலுமினியம் ஆக்ஸைட் ($Al_2{}^0{}_3$) (பாக்ஸைட்) ஆகியவற்றுடன் பொட்டாசியம் மிகுதியாக நிறைந்துள்ளது. (5) ஈரத்தை அதிக காலத்திற்குக் காக்கும் தன்மையுடையது.

கரிசல் மண் இந்தியப் பொருளாதார அமைப்பில் முக்கிய இடம் பெற்றுள்ளது. வேளாண்மை, தொழில்துறை ஆகிய இரண்டிற்கும் இது அவசியம். நெசவுத்தொழிலுக்குத் தேவையான கச்சாப் பருத்தியை அளிக்கிறது. இதனால் நமக்கு அந்நிய மாற்றுக் (Foreign Exchange) கிடைக்கிறது.

லாட்டரைட் : களிமண்ணை இலத்தீன் மொழியில் லாட்டர் (later) என்று அழைக்கிறார்கள். அதன் அடிப்படையில்தான்

லாட்டரைட் (laterite) என்ற சொல் பிறந்தது. இதை முதன் முதலில் புக்கானென் (Buchanan) என்பவர் 1807ல் பயன்படுத்தினர். இம்மண் வகையை இருபிரிவுகளாகப் பிரிக்கலாம். (1) உயரங்களில் அமைந்த லாட்டரைட். (2) தாழ்ந்த நிலங்களில் அமைந்த லாட்டரைட். உயரமான இடங்களில் அமைந்துள்ள லாட்டரைட், பெரும் பாலும் பாக்ஸைட் அடுக்குகள்மீது காணப்படுகின்றன. இவைகளிலிருந்து லாட்டரைட் தோன்றியிருக்கக்கூடும் என்பது தெளிவு. இது இரும்பின் துருக்கலந்த (ferruginous) பாறையாகும். பாறையின் மென்மையான பாகங்கள் நீக்கம் அடைவதால், சொரசொரப்பானதாகவும், கொப்புளங்கள் உடையதாகவும் (vesicular) அமைந்துள்ளன. இது பல நிறங்களில் காணப்படுகின்றது; பெரும்பாலும் செம்பழுப்பாகவோ, சிறிது செம்மை கலந்த மஞ்சள் நிறமாகவோ இருக்கும். அடுத்து (2) தாழ்நில லாட்டரைட் மண் வகையை ஆராயலாம். இது உயர்நில லாட்டரைட் மண்ணிலிருந்தே (Redeposition) தோன்றியதாகும். எனவே இது எப்போதும் தாழ்ந்தப் பள்ளத்தாக்குப் பகுதிகளிலோ, கடற்கரை ஓரங்களிலோ — காட்டாகக் கிழக்குக் கடற்கரையில் — காணப்படுகின்றது. இப்படிவுகள் கிழக்குக் கடற்கரை நெடுகிலும் தொடர்ந்து பரவியுள்ளன. கடல் ஓரத்தின் சாதகமான இட அமைப்பே இதற்குக் காரணமாகும். கேரளக் கடற்கரை ஓரம் இம்மண் திட்டுத் திட்டாக, ஆங்காங்கே அமைந்துள்ளது.

லாட்டரைட் அல்லது லாட்டரைட் ஏறிய மண்கள் பரவலாக உள்ளன. இவற்றின் கூட்டு அமைவில் வேறுபாடுகள் உண்டு. பெரும்பாலும் இவைகளில் சிறிதளவு சிலிக்கா கலந்த அலுமினிய இரும்பு ஹைடரேடட் ஆக்ஸைட் (Hydrated oxide of aluminium and iron) களும். டைட்டானியம்-டை-ஆக்ஸைட்டும் (Titanium-di-oxide). சுண்ணும்பும், மக்னீஷியாவும் அடங்கியுள்ளன. முதல் பாறையின் கூட்டு அமைவைப் பொறுத்து இதில் கலந்துள்ள சுண்ணும்பின் அளவு அமையும்.

லாட்டரைட் ஏறிய மண்கள்; நைட்ரஜன் பொட்டாசியம், பாஸ்பரஸ் முதலியவற்றை மிகக் குறைவாகக் கொண்டுள்ளது. இது வளம் குறைந்தது. எனவே உழவுத் தொழிலுக்கு ஏற்றதல்ல. இவை மான்ஸூன் (Monsoon) பிரதேசங்களில் காணப்படுகின்றன. கனத்த மான்ஸூன் மழைக் காரணமாக மண்ணில் உள்ளச் சத்துப் பொருள்கள் முழுவதும் கவரப்படுவதால், (leached) இவை வளம் குன்றியுள்ளன. உயரமான பிரதேசங்களில் இம்மண் அடுக்குப் பரல் பாறையைப்போல் அமைந்துள்ளன. ஆகவே இது ஈரத்தைக் காக்கும் திறனற்றது. இம்மண் அகப்படும் இடங்களில் பெரும்

பாலும் கட்டிடப் பொருள்களாகப் பயன்படுகிறது. இந்தியாவில் உள்ள மிக அழகிய கோயில்கள் இந்த லாட்டரைட் பாறைகளால் கட்டப்பட்டவை.

கடலோர மண்கள் : உயர்ந்த பீடபூமிப் பிரதேசத்தில் புரைத் தன்மை மிகுந்த லாட்டரைட் உள்ளது. இதிலிருந்து உருவாகியத் தாழ்நிலே லாட்டரைட் ஏறிய மண்கள் களிப்புத் தன்மை உடையன. ஆகவே உழவுத் தொழிலுக்கு ஏற்றவை. மகாநதி, கோதாவரி. கிருஷ்ணு, காவேரி, முதலிய ஆறுகள் தோட்ட மண்ணைப் போன்ற வண்டல் மண்ணை அடித்துக்கொண்டு வருகின்றன. கடலோர முகத்துவாரப் பகுதிகளில் இவை படிகின்றன. இதில் நைட்ரஜன், பாஸ்பரஸ் முதலியன குறைவு. இருப்பினும், கரும்பு, நெல் முதலியன சாகுபடி செய்வதற்கு ஏற்றதாக விளங்குகின்றது.

சிந்து - கங்கைச் சமவெளியும், இதர வண்டல் நிலவெளிகளும்: இந்தியாவின் கோதுமை, நெல் களஞ்சியங்களாகச் சிந்து கங்கைச் சமவெளி திகழ்கிறது. இவை கொப்பரைப் பள்ளங்களாகும் (basins) இமயமலேயில் தோன்றும் பேராறுகளான சிந்து, கங்கை, யமுனே, பிரம்மபுத்திரா, சட்லஜ், ரவி, சீனுப், பீயஸ், ஜீலம், ஆகியவை அடித்துக்கொண்டு வரும் வண்டல்மண் இக்கொப்பரையில் படிகின்றது. புராதனப் புவியமைப்புக் காலங்களில் தீபகற்பப் பகுதியிலிருந்து பாய்ந்த ஆறுகளும், இங்கு வண்டலேப் படிவித்துள்ளன. இப்பெரும் கொப்பரைப் பள்ளம் மேற்குப் பாகிஸ்தானில் இருக்கும் ஸிந்து டெல்டாவிலிருந்து, கிழக்கேயும், வட கிழக்கேயும் முறையே வங்காளம், அஸ்ஸாம் வரையிலும் பரவியுள்ளது. சிந்து - கங்கை ஆறுகளால் படிந்த வண்டல் மண் பரப்பு சுமார் 2,50,000 சதுர மைல்கள் ஆகும். இதன் அகலம் சுமார் 150 மைலிலிருந்து 300 மைல்கள் வரையுள்ளது. விடுதலேக்குப் பின்னர் கிட்டத்தட்ட இதில் ஐந்தில் ஒரு பாகம் பாகிஸ்தானின் பகுதியாகத் திகழ்கிறது.

சிந்து - கங்கை வண்டல் மண்களே புவி அமைப்புக்கால இறங்கு வரிசைப்படி][1] காடர் (Khadar) அல்லது புதுவண்டல் (Newer alluvium) என்றும்[2] பங்கார் (Bhangar) அல்லது பழைய வண்டல் என்றும் இருகூறுகளாகப் பிரிக்கலாம்.

கங்கை போன்ற ஆறுகளின் முகத்துவாரத்தில் சதுப்பு நிலங்கள் உள்ளன. இவை சிறப்பான பண்புகள் பெற்றுள்ளமையால் தனி அலகுகளாகக் கருதக் கூடியவை.

பார்ப்பதற்கு ஒரே தன்மையுடையனவாக தோன்றினும் வண்டல் மண்களின் கூட்டு அமைவுகளில் அதிக வேறுபாடுகள்

உண்டு. இவை தீபகற்ப மண்களினின்றும் மாறுபட்டவை. இவை முதிர்ச்சி பெறாதவை. இவற்றின் பண்புகளைத் தனித்து அறிய முடியவில்லை. இவை குறிப்பிடத்தக்க மண் பொரைகளைப் (Soil profiles) பெற்று அமையவில்லை. ஆறுகள் போன்ற இயங்கு காரணிகளால் உருவாக்கப்பட்டவை, இவை சமீப காலத்தில் தோன்றியவை; தோட்டமண்களாகவும், களிமண்ணுகவும், நன்கு கூடி அமையாத மணல்களாகவும் காணப்படுகின்றன. உஸார் (Usar) போன்ற களர்நில மண்களைத்தவிர, மற்ற எல்லா வண்டல் மண்களும், உப்புக்கள், நைட்டிரஜன் சத்து வாய்ந்த பொருள்கள், முதலியன நிறைந்தவை. இவை மண்ணின் வளத்தை அதிகரிக்கின்றன.

மத்தியப் பிளைஸ்டோஸீன் (Middle Pleistocene) காலத்தில் உருவாகிய பழைய வண்டலிலிருந்து 'பாஸ் நோ மாடிகஸ்' (Bos no madicus) என்னும் தொல்லுயிர்ப் பொருள்கள் (fossils) கிடைத்திருக்கின்றன. இவ்வண்டல் உயர்நிலங்களிலோ, ஆற்றுப் பள்ளத்தாக்குகளை அடுத்துள்ள மேட்டு நிலங்களிலோ குறிப்பிடத்தக்க அளவிற்கு அமைந்துள்ளன. இதில் கன்கார் (Kankar) படிவுகள் ஏராளம். இதனால் பங்கார் மண் வகைகளில் சுண்ணும்பு நிறைந்துள்ளன. மற்றும் மண்ணின் வளமும் பெருகுகிறது. காடர் எனப்படும் புதுவண்டல் ஆறுகளின் வெள்ளச் சமநிலங்களில் (flood plains) பரவிக் கிடக்கின்றது. இம்மண் ஆண்டுதோறும் ஏற்படுகின்ற வெள்ளங்களால் புதுப்பிக்கப்படுவதால் வளம் செறிந்துள்ளது. முகத்துவாரங்களின் நுழைவாயில்களை இங்குச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இப்பகுதிகளில் புதுவண்டல் மெல்லிழை மண்டிகளாக உள்ளன. ஆற்று ஓட்டத்தின் மத்தியப் பகுதிகளில் (middle reaches) (ஆறு தோன்றிய இடத்திற்கும், முகத்துவாரத்திற்கும் மையமான பகுதி) இம்மண் பெருமணல்களாக இருக்கும். ஆனால் இதற்கும் உயர்ந்த பகுதிகளில் மணல் செறிந்துள்ளமையால் வளம் குறைந்திருக்கும்.

இமயமலையின் அடிவாரத்திலிருந்து சமவெளிகளை நோக்கினாற் போல் உள்ள பகுதிகளில் பெரும் மணல் படிவுகளும், பெரும் பாறைகளும் மறைந்துள்ளன. இவற்றைக் கொண்ட இந்நிலங்களை பாபர் (Bhabar) என்று கூறுவர். பெருமணல்களாலான இப் பாபர் மண்ணில் புகும் மழைநீர், சமவெளி ஓரங்களில் மேல்நோக்கிக் கசிகின்றது. இதன் விளைவாக இந்நிலம் சதுப்பு நிலமாக அமைந்து விடுகிறது. இதுவே டெராய் (Terai) என்பதாகும். கரும்பு பயிரிடுவதற்கு இப்பிரதேசம் மிகவும் சிறந்தது.

காரத்தன்மை கொண்ட மண்கள்: இம்மண்களைப் பற்றிய, விளக்கம் இந்தியப் புவிஅமைப்பு சர்வே கழகத்தின் (Geological Survey of India) ஆவணங்களில் வெளியாகியுள்ள இவ்வாசிரியரின் கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ளது. (தொகுதி 81. 2-ம் பகுதி 1951) இம்மண் பரவியுள்ள பிரதேசங்களைக் கீழே குறிப்பிடலாம்: பஞ்சாப், உத்தரப் பிரதேசம், குஜராத் ஆகியவற்றின் பெரும் பரப்புக்கள் 'ரே' (Reh) அல்லது உஸார் (Usar) என்று அழைக்கப் படும் களர் நிலமாகும். இங்குள்ள மண் அடுக்குகள் ஸோடியம் பொட்டாசியம் ஆகிய உப்புக்களைக் கொண்டுள்ளன. இவை தோல் பதனிடவும், சோப் செய்யவும், பயன்படுகின்றன. இவை பயனளிக்க கூடியவையாக இருப்பினும், இவைகளைச் சீரமைப்பது (Reclamation) அவசியமாகும். இதற்குக் கூறப்படும் யோசனைகள் திருப்தி அளிக்கவில்லை. நடைமுறையில் பெரும் அளவிற்குச் செயல் படக் கூடியதாகவும் இல்லை.

மேலே குறிப்பிட்ட பகுதிகளில், இந்தியாவில் இப்போதுள்ள தாதுப் பொருள்களையும், வருங்காலத்தில் பயன்படக்கூடிய தாது வளங்களையும் பற்றிய விவரங்கள் சுருக்கமாகக் கொடுக்கப்பட் டுள்ளன. மற்றும் வேளாண்மையின் முன்னேற்றத்திற்கு இம்மண் அமைப்புக்கள் எவ்வாறு பயன்படுகின்றன என்பதையும் கண்டோம். நமது கச்சாப்பொருள் வளங்கள் ஏறத்தாழ வரை யற்றவையாக உள்ளன. அவை தொழில், வேளாண்மை முதலிய வற்றின் முன்னேற்றத்திற்கு அடிப்படையானவை. இவைகளைத் தகுந்த முறையில் பாதுகாப்பதும், சேதமின்றி பயன்படுத்துவதும் அவசியமாகும். அதற்குச் சிறந்த அமைப்பு முறையும், திட்டமும் அவசியம்.

தேசீய நெருக்கடி நிலைமையில் எந்தச் சிறு பொருளையும் வீணாக்காமல் இருக்கவேண்டும். நாம் மேலே கூறிய யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு செயல்படுத்தும் என்று நம்புகிறோம்.

2. தாதுப் பொருள்கள்

நெடுங்காலமாக இந்தியாவில் உலோகங்கள் உபயோகப்படுத் தப்பட்டுள்ளன. இந்திய உலோக இயல் அறிஞர்கள் சிறப்புத் தேர்ச்சிபெற்று விளங்கினார்கள். அவர்கள் உலோகத் தாதுக்களை யும், உலோகங்களையும், கலப்பு உலோகங்களையும் நல்லமுறையில் கையாளும் திறன்பெற்று இருந்தார்கள். 1,500 ஆண்டுகளுக்கு முன்னர் (2-வது சந்திரகுப்தர், கி. பி. 415-ல்) டெல்லியில் கட்டப் பட்ட 23 அடி உயரம் உள்ள அசோகர் கம்பம் (ஸ்தூபி) இவர்களது

திறனை எடுத்துக் காட்டவல்லது. இந்தியாவில் யாரிக்கப்பட்டத உயர்ந்தரக எஃகு ஊ(ட்)ஸ் (Wootz) என்ற பெயரில் ஐரோப்பா விற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இது 'டமாஸ்க்கஸ்' (Damascus) வாள்கள் செய்வதற்கு உபயோகிக்கப்பட்டது. பிற்காலத்தில் உலோகக் கலப்பைகளும், வீட்டுச் சாமான்களும் செய்யப்பட்டன. அதன் பின்னர் பெரிய பீரங்கிகளும், உலோகக் கவசங்களும், ஈட்டி களும், பெருவாரியாக இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் செய்யப் பட்டன. இவைகள் நேர்த்தியாகவும், திறன் உடையவையாகவும் இருந்தன.

உலோகத்தைப் பயன்படுத்துவதில் சிறந்த முன்னேற்றம் இருந்தபோதிலும், (நாட்டின்) தாதுப் பொருள்களை முறையாகப் பயன்படுத்துவதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்யாது, தாதுப் பொருள்களைக் குறைந்த அளவிற்கே பயன்படுத்தினார்கள். அவை களின் உபயோகங்களும் மிகச் சிலவே. அவையாவன: ஆபரணங் கள் செய்துகொள்வதற்காகப் பொன், வெள்ளி, இரத்தினக் கற்கள் முதலிய உலோகங்களும், தாதுக்களும், மற்றும் போர்க் கருவிகள், இராணுவச் சாதனங்கள் முதலியன தயார் செய் வதற்கு இரும்பும், மருந்துகள் தயார் செய்வதற்குச் சிறிய அளவில் தங்க ரேக்குகள். பாதரசம் முதலியனவும் ஆகும். திட்ட மிட்ட வகையில் தாதுப்பொருள்களைப் பயன்படுத்துவதற்கு முயற்சி எடுத் துக்கொள்ளவில்லை. வேளாண்மையே முக்கியத் தொழிலாக உள்ள பொருளாதாரஅமைப்பிற்கு இது அவசியம் இல்லை என்றும் கூற லாம். திட்டமிட்ட தொழில் வளர்ச்சிக்குக் கனிபொருள்களை முறையாகச் சர்வே செய்வதும், தோண்டி எடுப்பதும் அவசிய மாகும். தற்சமயம் அத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

ஆரம்ப முயற்சிகள் *1849-1947*: பிரிட்டிஷார் இந்தியாவில் நிலையாகத் தங்குவதற்கு முடிவு செய்ததும் தாங்கள் அரசியல் துறையில் பெற்ற இலாபங்களை நிலைபெறச் செய்து கொண்டனர் அதன் பின்னர் தாதுப் பொருள்களின் வளர்ச்சிக்காக கவனம் செலுத்தினர். இவ்வகையில் முதல் முயற்சியாக நிலக்கரியை எடுத்துக் கொண்டனர். மகாராணியாரின் நிலக்கரி ஆய்வாளர் (Her majesty's Coal Surveyor) என்ற முதல் அலுவலரைப் பிரிட்டிஷ் அரசாங்கம் 1849-ல் நியமித்தது. இது இன்றைய இந்தியப் புவிஅமைப்புச் சர்வேக் கழகத்திற்கும் (Geological survey of India) சுரங்க ஆய்வகத்திற்கும் (Inspectorate of Mines) உட்கரு வாக அமைந்தது. பிற்காலத்தில், 1851-ல் இந்தியப் புவிஅமைப்புச் சர்வேக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. இதன் முதல் அலுவலராகத்

தாமஸ் ஓல்ட்ஹாம் (Thomas Oldham) நியமிக்கப்பட்டார். இவர் இந்தியாவின் புவி அமைப்புப் படத்தைத் (Geological map) தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இந்தியாவின் தாதுச் செல்வத்தை முறையாகப் பயன்படுத்துவதற்கு இப்படம் இன்றியமையாதது. இந்தியா முழுவதற்கும் பொதுப்படம் தயாரிப்பதற்குப்போதிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை. காலப் போக்கில் தாதுப் பொருள்கள், எண்ணெய் அமைவுகள் போன்ற அறிக்கைகள் வரலாயின. மற்றும் அணைகள், சாலைகள். ரயில் இணைப்புக்கள் முதலியனவும் தோன்றலாயின. அன்றைய அரசாங்கம் இவற்றின் துரித வளர்ச்சியில் போதிய ஆர்வம் காட்டவில்லை. குறைந்த செயல் ஈடுபாட்டில் மிகுந்த நிறைவு கொண்டனர். இத்துறைகளில் ஈடுபட்ட உற்பத்தி நிறுவனங்கள் தங்கள் முழு உற்பத்தித்திறனையும் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. அவைகளில் குறிப்பாக நிலக்கரி, மாங்கனீஸ். எஃகு, எண்ணெய் முதலியவற்றைக் கூறலாம். மேலும், மிகப்பெரிய அளவில் தாதுப் பொருள்களை உடையப் பரந்த நிலப்பரப்புக்கள் குறைந்த குத்தகைக்கு விடப்பட்டன. தாதுப் பொருள்கள் கச்சாவாக ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்தியா விடுதலை பெறும் வரையில் சுமார் 100 ஆண்டு காலம் முழுவதும் இந்நிலை நீடித்து இருந்தது.

பொதுத்துறை : இந்திய விடுதலைக்குப் பின்னர் நாட்டில் உள்ள தாதுக்கள் அனைத்தையும் கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது. இது அவசியமானதுடன் போற்றுவதற்குரியதும் ஆகும். அதற்கென் ஒரு அமைப்பு முறை தேவைபட்டது. அவ்வகையில் 1948-ல், இந்தியா விடுதலை பெற்ற ஓராண்டிற்குள், 'இந்திய சுரங்க நிர்வாகக் குழு' (Indian Bureau of Mines) ஏற்படுத்தப்பட்டது. இது திட்டமிட்டப் பொருளாதார அமைப்பின் பல்வேறு கூறுகளையும் ஒன்று சேர்க்கும் வகையில் அமைந்த ஓர் இணைப்பாகும். இதனுடைய வளர்ச்சியை முதலாவது, இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் காணலாம். நாட்டில் கிடைக்கக்கூடிய தாதுப்பொருள்களைத் தேடிக் கண்டுபிடிக்கவும், அவற்றின் மொத்த அளவை அறியவும் முதன்முதலாக முயற்சி எடுத்துக்கொள்ளப் பட்டது. இது சம்பந்தமாகப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படும். பல துறைகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும். முக்கியமாகச் சர்வே நுட்பங்களைத் திருத்தி அமைக்கவும், புதிய தாதுக்களைக் கண்டுபிடிக்கும் முறையைப்பற்றியும், அவற்றை வீணாக்காமல் பயன்படுத்துகின்ற முறைபற்றியும் ஆராய்வது அவசியம். துவக்கத்தில் இந்தியச் சுரங்க நிர்வாகக் குழு ஆலோசனை கூறும் ஓர்

அமைப்பாக இருந்தது. நாளடைவில் முழுமையான பொறுப்புடைய அலகாக மாறியது. மேற்கூறிய நடவடிக்கைகளைத்தவிர, பூமியைத் துளைத்து, அதன் அடியில் உள்ள தாதுப் படிவங்களை அறிவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவை யாவும் நான்கு பிரிவுகளில் செயல்படுத்தப்படுகின்றன. (அ) தாதுப் பொருள்கள் சிக்கனப் பிரிவு (ஆ) கனிப்பொருளைப் பதப்படுத்தும் தாதுப் பொருள்-தொழில் நுட்பப்பிரிவு (இ) கனிவளம் தேடும் பிரிவு (ஈ) துளைத்து அறியும் பிரிவு முதலியன.

பல ஆண்டுகளாகச் சுரங்கவேலைகள் முன்யோசனை ஏதுமின்றித் தாறுமாறாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதனால் நாட்டிற்குப் பெருத்த இழப்பு ஏற்பட்டது. எவ்வளவுதான் எச்சரிக்கையாகவும், விழிப்பாகவும் இருந்தபோதிலும் இதனை முழுவதுமாகத் தடுக்கமுடியவில்லை. நிலக்கரியில் பாதி—சுரங்க வேலையின்போது—நிலத்தின் உள்ளேயே தங்கிவிடுகிறது. இத்தகைய இழப்பைத் தடுக்கும் நோக்கத்துடன் சுரங்கங்கள், தாதுப்பொருள்கள் சட்டம் இயற்றப்பட்டது.

தாதுப் பொருள் தொழிலைத் தேசீய மயமாக்குவதற்கான கொள்கையின் முதல் முயற்சியாக இந்த சட்டம் அமைந்தது. இது 1948-ம் ஆண்டு ஏப்ரல்மீ 6-ம் நாள் தொழில் கொள்கை அறிக்கையாக முதிர்ச்சியடைந்தது. இக் கொள்கை அறிக்கை 1956-ல் மறுபடியும் திருத்தி அமைக்கப்பட்டது. அரசாங்கம் இதன் முக்கியத்துவத்தை முதன் முறையாக உணர்ந்துள்ளது. "சோஷலிஸப்பாணியில் சமூகத்தை உருவாக்குவது நமது தேசீய இலட்சியமாகும். திட்டமிட்டுத் துரித முன்னேற்றம் எய்துவதற்கு இது மிகவும் அவசியமாகும். இதற்கு ஆதாரத் தொழில்களும், போர் முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களும், பொது நலப்பணிகளும் பொதுத் துறையில் இருக்க வேண்டும். இதர முக்கியத்தொழில்களும், பெருவாரியாக முதலீடு தேவைப்படுகின்ற-அந்த அளவிற்கு இன்றைய சூழ்நிலையில் அரசாங்கத்தால் மட்டுமே முதலீடு செய்யக்கூடியதுமான—தொழில்கள் பொதுத் துறையில் அமையும் மிகப் பெரிய அளவில் தொழில்களின் எதிர்கால முன்னேற்றத்திற்கான பொறுப்பை அரசாங்கம் நேரிடையாக ஏற்கவேண்டும்." [1]

சில தொழில்கள் உடனடியாகவும், சில தொழில்கள் நாளடைவிலும் பொதுத்துறையில இணைக்கப்பட இருக்கின்றன. இதற்கான பட்டியல்களை அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த இலட்சியத்தை அடையும் நோக்குடன் 1957-ல் தேசீய தாதுப் பொருள்

[1] இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம், பக். 4

கொள்கை (ஆய்வு) மாநாடு கூட்டப்பட்டது. தேசிய முக்கியத்துவம் பெற்ற தாதுக்களாவன: அணு(சக்தி) தாதுக்கள், நிலக்கரி, எண்ணெய், 'ஓல்ஃப்ராம்' (Wolfram) டங்ஸ்டன்கனி செம்பு, இரும்புக்கனி, கலப்பு எஃகிற்கான தாதுக்கள் முதலியன. இவை தேசிய முக்கியத்துவம் பெற்றுள்ளதுடன், போர் முக்கியத்துவமும் வாய்ந்தவை. ஆகையால் இவையாவும் பொதுத்துறையில், அரசாங்கத்தின் நேர்க்கட்டுப்பாட்டின் கீழ் அமைய வேண்டும் என்றும் மாநாட்டில் முடிவாகியது. அப்படி இல்லாதபோது நெருக்கடிக் காலங்களிலாவது அத்தகைய கட்டுப்பாடுகளை அமுலாக்கும் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

தாதுப் பொருள் கொள்கையின் விளைவாக 1956-ல் ரூ. 15 கோடி மூலதனத்துடன் தேசியத் தாதுப் பொருள் வளர்ச்சிக் கழகத்தை (National Mineral Development Corporation) அரசாங்கம் அமைத்தது. இக்கழகம் துவக்கத்தில் சில தாதுக்களின் பொறுப்பைமட்டும் ஏற்றது. ஜாவரில் உள்ள ஈயம், துத்த நாகம் முதலியனவும் கிரிபுரு (மத்தியப் பிரதேசத்தில்) வில் உள்ள இரும்புத் தாதுக்களும் இதன் பொறுப்பில் அமைந்தன.

போர் முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களைத் தேசிய மயமாக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை. இதனை நிறைவேற்றும் வகையில் 1956 ஆகஸ்டில். எண்ணெய் நில வாயுக் குழு (Oil and Natural gas Commission) அமைக்கப்பட்டது. இதற்கு முன்னர் இந்தியாவில் எண்ணெய் கண்டுபிடிக்கும் பொறுப்பை இரண்டு எண்ணெய்க் கம்பெனிகள் ஏற்று இருந்தன. அவையாவன: அட்டாக் எண்ணெய்க கம்பெனியும் (Attock Oil Company)' அஸ்ஸாம் எண்ணெய்க் கம்பெனி (Assam Oil Company)யும் ஆகும். இவற்றின் புவி அமைப்பு ஆய்வுப் பணியில் இக்கட்டுரை ஆசிரியர் நெருங்கி ஒத்துழைத்து இருக்கிறார்.[2] இந்த இரு எண்ணெய்க் கம்பெனிகள் தவிர, இத்துறையில் இந்திய புவிஅமைப்பு சர்வே கழகமும் சில முன்னோடியான வேலைகளில் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. முதலாவதாகக் காங்கிரா (Kangra) மாவட்டத்தில் (பஞ்சாப் மாநிலம்) உள்ள ஜ்வாலாமுகி என்ற இடத்தைச் சர்வே செய்வதற்காக எடுத்துக் கொண்டது. இந்த சர்வே இக்

[2] இந்தியாவில் கண்டு எடுக்கப்பட்ட எண்ணெயினின்றும் கிடைக்கும் பெட்ரோலியப் பொருள்கள் ஏற்கெனவே விற்பனையாகி வருகின்றன. இது யாவருக்கும் நம்பிக்கை ஊட்டவல்லதாக உள்ளது. அஸ்ஸாம் எண்ணெய்க் கிணறுகளிலிருந்து கிடைக்கும் கச்சா எண்ணெய் (Crudeoil) கௌஹாத்தியில் உள்ள அரசாங்க எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்தம் செய்யப்பட்டு அங்காடியில் விற்பனையாகின்றது. பொருளாதாரக் காரணங்களுக்காக, இது அஸ்ஸாமிலும், மற்றும் அடுத்துள்ள மாநிலங்களிலும்,—மேற்கு வங்காளம், பீகார், உத்தரப் பிரதேசம் முதலியவைகளில்—விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

கட்டுரை ஆசிரியரின் பொறுப்பில் இருந்தது. இவருக்கு உதவியாக வி. எச். பாய்லோ (V. H. Boileau) வும், ஜி. கோலி (G. Kohli) யும் பணியாற்றினர்கள். (இவர்கள் எண்ணெய்க் கண்டுபிடிப்பு முயற்சியில் அடிப்படையாக உள்ள அமைவுப் பிரச்சினைகளைப் புதியமுறையில் அணுகக் கூடியவர்கள்)

1976-ல் நமக்கு **50** மில்லியன் டன்கள் கச்சா எண்ணெய்த் (Grude Oil) தேவைப்படலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அளவிற்கு உற்பத்தி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வகையில் அந்நிய நாடுகள் பெரிதும் உதவியாக இருக்கின்றன. குறிப்பாக, ருஷ்யா. ருமானியா, மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகளைக் குறிப்பிடலாம். இவற்றின் உதவியால் நாம் பல புதிய முறைகளைக் கையாளமுடிகிறது. அவ்வகையில் புவியமைப்பு முறை, புவி அடர்த்தி அளவீட்டு (gravimetrie) முறை மின்காந்த முறை (electromagnetic) நில அதிர்ச்சிமுறை (Seismic) பூபௌதிகம் (geo - physical) ஆகிய முறைகள் சர்வேயின் போது பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய முயற்சியின் விளைவாக குஜராத்தில் எண்ணெய்க் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (காம்பே, அங்களேஸ்வரம், காலோல் ஆகிய எண்ணெய்க் கிணறுகள் சோவியத் நாட்டின் முயற்சியால் கண்டுபிடிக்கப்பட்டன.) மற்றும் இந்தியத் தீபகற்பகத்தின் கடல் ஓரப்பகுதிகளிலும், தக்காணக் கேடயம்' ("Deccan Shield") என்று புவியமைப்பு இயலாரால் அழைக்கப்படும் படிவ அமைப்புக் கொப்பரை நிலங்களிலும் எண்ணெய்க் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன.

எண்ணெய்க் கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கின்ற முக்கியமான பகுதிகளில்—பஞ்சாப், ராஜஸ்தானம், உத்தரப் பிரதேசம், வங்காளம், ஆகிய மாநிலங்களில்—எண்ணெய் தேடும் வகையில்: நிலத்தைத் துளைத்து ஆய்கின்ற வேலை தீவிரமாக நடைபெறுகிறது. இதே வேகத்தில் இம்முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டால் எண்ணெய்க் கிடைக்கும் பகுதிகளை அதிக அளவில் அறியமுடியும். இதனால் நாடு தன்னிறைவு எய்தும் என்பது உறுதியில்லை. இருந்த போதிலும், நமது உள்நாட்டுத் தேவையில் பெரும் பகுதியைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும். இதே வேகத்தில் இன்னும் 16 ஆண்டுகள் தொடர்ந்து முயற்சி செய்வதற்கு ரூ. *3000* கோடி முதலீடு செய்ய வேண்டியிருக்கும். இது மிகவும் அவசியமான முதலீடாகும். முதலீடு செய்த அளவிற்கு ஏற்றதாக உற்பத்தி அமைய வேண்டியதில்லை. எண்ணெய் நாட்டிற்கு அவசியமானது, போர் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதற்காகவும், நாம் அதிக அளவிற்கு வெளிநாடுகளை நம்பி இருக்க வேண்டியதில்லை. என்பதற்

காகவும், இதனைத் தேடும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

தொழில் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார அமைப்புக் களுக்கு நிலக்கரி இன்றியமையாத ஒன்றாகும். முக்கியமாக ரயில் போக்குவரத்தைத் திறம்பட நடத்துவதற்கு நிலக்கரித் தேவைப் படுகிறது. [மின்சார ரயில் வண்டிகளைப் பெருவாரியாகப் பயன் படுத்துவதற்கு நெடுங்காலம் ஆகலாம்] மற்றும் அனல் மின்நிலையம் எஃகு. உரம் முதலிய தொழில்களுக்கும் நிலக்கரி அவசியம் தேவைப் படுகிறது. 2-வது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 60 மில்லியன் டன்கள் நிலக்கரி தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. 3-வது ஐந்தாண்டுத்திட்ட இறுதியில் (1966-ல்) இது 100 மில்லியன் டன்களாக இருக்கும். தேசீயத் தாதுப் பொருள் வளர்ச்சிக் கழகத்தைப் போன்று 1956 அக்டோபரில் தேசீய நிலக்கரி வளர்ச்சி கழகத்தை (National Coal Development Corporation) அரசாங்கம் ஏற்படுத்தியது. அதன் முக்கியக் குறிக்கோள்களாவன. (1) புதிய நிலக்கரி வயல்களைக் கண்டுபிடித்தல். (2) நிலக்கரிவயல்களை நல்ல படியாக, முறையாகப் பயன்படுத்துதல். (3) இரயில்வேக்குத் தேவையான நிலக்கரியை அவைகளுக்குச் சொந்தமானச் சுரங்கங் களிலிருந்து உற்பத்தி செய்வது- நிலக்கரியைச் சுரங்கத்திலிருந்து தோண்டி எடுப்பதிலும். அதன்பின்னர் அவைகளைப் பயன்படுத்து வதிலும், இதுவரை முறையான ஒரு கொள்கைப் பின்பற்றப் பட வில்லை. நமது நாட்டில் உலோகத்தன்மை வாய்ந்த நிலக்கரி யும், கோக்கு செய்யப் பயன்படும். நிலக்கரியும், மொத்தத்தில் சுமார் 2000 மில்லியன் டன்கள் இருக்கின்றன. இவை உயர்ந்த ரக நிலக்கரியாகும். உருக்காலைகளில் பயன்படுத்து வதற்கு ஏற்றவை. மட்டரக நிலக்கரியைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக உயர்ந்த ரக நிலக்கரியைப் பயன்படுத்துவது இயற்கை வளத்தை வீணாக்குவதாகும். எஃகு தயாரிப்பதற்குத் தேவையான இரும்புக்கனியும். உலோகத்தன்மை வாய்ந்த நிலக்கரியும் போதிய அளவு கிடைக்கின்றன. எனவே இவ்வகை நிலக்கரியைச் சிக்கன மாகப் பயன்படுத்துவது அவசியம். மட்டரக நிலக்கரி 2000 அடி ஆழத்தில் இருப்பதாகவும். மொத்தத்தில் 40 000 மில்லியன் டன் கள் இருக்கக்கூடும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

பல ரக நிலக்கரிகளைச் சரிவர பயன் படுத்துவதற்கும், சேதத்தைத்தவிர்க்கவும், ஆலோசனை கூறுவதற்கு 1962-ல் நிபுணர் கள் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. நிலக்கரியை வீணாக்காமல் தடுக்கும் வகையில் சோவியத் நிபுணர்கள் துணையுடன் கதாரா (Kathara) என்னும் இடத்தில் கோக்குக் கரி செய்யும் நிலக்கரி

சுத்திகரிப்பு ஆலை (Coking Coal washery) ஏற்படுத்தப்படும். இங்குத் தயாரிக்கும் கோக்கு நிலக்கரியைப் பொக்காரோ (Bokaro) எஃகு ஆலைக்குப்பயன்படுத்தலாம் என்று தேசீய நிலக்கரி வளர்ச்சிக் கழகம் முடிவுசெய்துள்ளது.

இன்றைய நிலைமையும், எதிர்காலப் போக்கும்: இந்தியாவில் கடந்த 14 ஆண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சி.—குறிப்பாக தாதுப் பொருள், தொழில்துறை முதலியவற்றில்—இதற்கு முன்னர் 10 ஆண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சியைக் காட்டிலும் பன்மடங்கு அதிகம். இங்கு ஒரு செய்தியைக் குறிப்பிட வேண்டியது அவசியம். தாதுக்களைக் கச்சாவாக ஏற்றுமதி செய்வதைவிட அவற்றை உபயோகிக்கக் கூடிய பெரிய தொழில்களை ஏற்படுத்துவதால் நாட்டிற்கு அதிக நன்மை ஏற்படும். இவை நாட்டிற்குத் தேவையான நுகர்பொருள்களை அளிப்பதுடன், ஆயிரக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பையும் அளிக்கின்றன.

இந்தியாவின் பல பகுதிகளிலும், பல்வேறு அளவுகளில், 40-க்கும் அதிகமான கனிப் பொருள்களும், தாதுப் பொருள்களும் கிடைக்கின்றன. ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 165 கோடி மதிப்புள்ள கனிப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னர், 1946-ல், உற்பத்தி செய்ததை விட இது மூன்று மடங்கு அதிகம்) பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த தாதுப் பொருள்கள் அகர வரிசையில் கீழே தரப்பட்டுள்ளன. மேலும் தாதுப் பொருள்கள் பூமியில் பரந்துள்ள விவரத்தையும், இவைகளின் இருப்பின் அளவையும் (இதுவரை தெரிந்ததும் எதிர்காலத்தில் தெரிந்து கொள்ளக் கூடியதும்), முக்கிய உபயோகங்களையும் இந்த அத்தியாயத்தின் பிற்சேர்க்கையாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

1. அப்ரேஸிவ் (மெருகு ஏற்றும் பொருள்கள்) (Abrasive)
2. கார உப்புக்கள் (Alkaline salts)
3. ஆண்டிமனி (Antimony)
4. ஆர்ஸினிக் (Arsenic)
5. கல்நார் (asbestos)
6. பாரைட்டுக்கள் (Barytes)
7. பாக்ஸைட் (Bauxite—அலுமினியம் ஆக்ஸைட்)
8. கோமேதகம் (Beryl)
9. கட்டிடக்கற்கள் (building stones)
10. காட்மியம் (Cadmium)
11. க்ரோமைட் (Chromite)
12. நிலக்கரி.

13. செம்பு
14. வைரம்
15. கண்ணாடி செய்யப்பயன்படும் மணல் (Glass sands)
16. பொன்
17. கிராஃபைட் (Graphite)
18. ஜிப்ஸம் (Gypsum)
19. இரும்பு
20. க்யானைட் (Kyanite)
21. ஈயம்
22. பழுப்பு நிலக்கரி (Lignite)
23. சுண்ணாம்புக்கல்
24. மாக்னிஸைட் (magnesite)
25. மாங்கனீஸ் (manganese)
26. பாதரசம்
27. மைக்கா
28. பெட்ரோலியம்
29. பாஸ்பேட்டுக்கள்
30. ஸிலிமனைட் (sillimanite)
31. வெள்ளி
32. ஸ்டியாடைட் (Steatite or Soapstone)
33. ஸ்ரான்ஷியம் (Strontium)
34. கந்தகம்
35. தோரியம் (Thorium)
36. வெள்ளீயம்
37. டைட்டானியம் (Titanium)
38. டங்ஸ்டன் (Tungsten)
39. யுரேனியம் (uranium)
40. வனேடியம் (vanadium)
41. துத்தநாகம்
42. ஸர்க்கோனியம் (zirconium)

இவற்றைத் தவிர இன்னும் பலபொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த தாதுக்கள் உள்ளன. (நமது நாட்டில் உற்பத்தி செய்யப் படுகின்ற தாதுக்களில் பெரும்பாலானவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அவையாவன. பாக்ஸைட், கோமே தகம், குரோமைட். டைடானியம் கனி, மாக்னிஸைட். மாங்கனீஸ் கனிகள், மைக்கா, க்யானைட், ஸிலி மனைட் முதலியன.)

பல தாதுக்களைப் பொறுத்தவரையில் இந்தியா தன்னிறைவு பெற்று இருப்பதுடன், உலகத்திலேயே முன்னணியான நிலையிலும்

இருக்கிறது. அவையாவன: நிலக்கரி, அலுமினியக்கனி (பாக்ஸ் லைட்), இரும்புக்கனி. மான்கனீஸ், மைக்கா முதலியன. மற்றும் சில, அணுசக்தி உற்பத்தி செய்யக்கூடியவை. ஆகையால் இவை நேரிடையாகவோ, மறைமுகமாகவோ போர் முக்கியத்துவம் பெற்றவை. அவ்வகையில் தோரியம், ஸர்க்கோனியம், லிதியம் முதலியனவும், உயர்ந்த ரக க்யானேட். ஸிலிமனேட் போன்ற உலோகற்களும் (refractory minerals) முக்கியத்துவம் பெற்ற தாதுக்கள் ஆகும்.

எண்ணிறந்த பெரிய தொழில்களை ஏற்படுத்துவதற்குப் போதிய அளவு தாது வளங்களைப் பெற்று இருக்கிறோம். தற்சமயம் நமது நாட்டில் 7 மில்லியன் டன்கள் எஃகு உற்பத்தி செய்யப்படுகிறது. ஜாம்ஷெட்பூர், பிலாய், ரூர்க்கேலா, துர்க்காப்பூர், பத்திராவதி எஃகு ஆலைகளும் பொக்காரோவில் துவக்கப்பட இருக்கும் ஆலையும் திறன் அளவிற்கு உற்பத்தி செய்கின்ற நிலையில் நாட்டின் மொத்த எஃகு உற்பத்தி 17 மில்லியன் டன்களாக உயரும். மற்றும் குரோம், மாங்கனீஸ், ஸிலிக்கான். டைடானியம், வனேடியம் முதலிய தாதுப் பொருள்களின் சேர்க்கையால் பலவகையான கலப்பு எஃகு உலோகங்களைத் தயாரிக்கலாம்.

எஃகு ஆலைகளையும், இதர ஆலைகளையும் நிர்மாணிப்பதற்கு உயர்ந்த ரக உலைகற்களின்—ஸிலிமனேட், க்யானேட் போன்ற தாதுக்களின் உற்பத்தி பெருகவேண்டும். நமது நாட்டில் இவை போதிய அளவிற்குக் கிடைக்கின்றன. தொழில்களின் வளர்ச்சிக்கு நீர்மின்சக்தி மிகவும் இன்றியமையாதது. எல்லாத் தொழில்களுக்கும் போதுமான அளவிற்கு உற்பத்தி செய்யப்படாதபோதிலும், பெரும்பாலான தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கவேண்டும். பல நீர்மின்சக்தித் திட்டங்கள் உருவாகியும்,உருவாகிக்கொண்டும் வருவதுவரவேற்கக்கூடியது நீர்மின்சக்தியின்உற்பத்தியை அதிகரிக்கும். இந்தியாவின் பூகோள அமைப்பும் இதற்கு சாதகமாக இருக்கிறது. வடக்கே இமயமலையிலும், மற்றும் கிழக்கு, மேற்குத் தொடர்ச்சி மலைகளிலும் பல பெரிய நிலையங்களை ஏற்படுத்தலாம். உள்நாட்டில் ஓடுகின்ற ஆறுகளில் கட்டப்படும் பெரிய அணைகள் இருவகையில் பயன்படுகின்றன. நீர்ப்பாசனத்திற்கும் மின்சக்தி உற்பத்திக்கும் இவை உதவுகின்றன.

இந்தியாவில் உயர்ந்த ரக மாங்கனீஸ் கனிகள் ஒரு மில்லியன் டன்களுக்கும் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன, உலகத்திலேயே மிகப்பெரிய அளவிற்கு இந்தியாதான் இவற்றை உற்பத்தி செய்கிறது. கனியைக் கச்சாவாக ஏற்றுமதி செய்வதைக் காட்டிலும் ஃபெர்ரோ-மாங்கனீஸ் (Ferro-manganese—இரும்பு கலந்த

மாங்கனீஸ்) ஆக உற்பத்தி செய்வது அதிக லாபத்தைத் தரக்கூடிய தாக இருக்கும்.

இந்தியாவில் நீர்மின்சக்தி போதிய அளவு உற்பத்தி செய்யப் படாதக் காரணத்தினுல் பெருவாரியாகக் கிடைக்கக்கூடிய பாக்ஸைட், மாக்னெஸைட் (அதாவது முறையே அலுமினியம், மக்னீஸியக் கனிகள்) முதலியன பயன்படுத்தப்படாமல் இருக் கின்றன. இவை கனக்குறைவாகவும் வலிமை உடையனவாகவும் உள்ளன. விமானங்கள், ரயில் பெட்டிகள், போக்குவரத்து சாதனங்கள், கனரக இயந்திரங்கள் முதலியன தயாரிப்பதற்கு இவை பயன்படுகின்றன. பாக்ஸைட் படிவங்கள் நமது இயற்கை வளத்தில் குறிப்பிடத்தக்க சொத்தாக உள்ளன. மூன்றில் ஒரு பகுதி உயர்ந்த ரகக் கனிப்பொருள்கள் (58% அலுமினியம் கொண்டது) பீகார் மாநிலத்தில் மட்டும் கிடைக்கின்றன. மகாராஷ்டிரத்திலும், மைசூரிலும் பெரிய அளவில் கனிப் படிவங்கள் உள்ளன. இவற்றைப் பயன்படுத்துவதற்குப் பெரிய அளவில் பலப் புதிய ஆலைகளை ஏற்படுத்தவேண்டும். அலுமினியம்பற்றி ஆய்வதற்கு நிபுணர் குழு ஒன்றை அரசாங்கம் அமைத்தது. தற்போதுள்ள நிலைமையையும், எதிர்காலத்திய நிலைமையையும் இது ஆய்ந்து கூறும். பல புதிய அலுமினிய ஆலைகள் நாடெங்கிலும் ஏற்பட வேண்டும். (1) ரைகண்ட் (Rihand)—உத்தரப் பிரதேசத்தில் உள்ளது—என்னும் இடத்தில் பெரிய அணை முடிவுபெறும் தறுவாயில் உள்ளது. இதனின்றும் போதிய அளவு மின்சக்தி கிடைக்கும். இங்கு ஒரு ஆலையை ஏற்படுத்தலாம். (2) மகாராஷ்டிரத்தில் கொய்ஞ (Kayna) என்னும் இடத்திலும், ஒரிஸ்ஸாவில் ஹிராகுட் (Hirakude) என்னும் இடத்திலும், (4) தமிழ் நாட்டில் சேலத்திலும், (இச்சாலை இன்று இயங்கத் தொடங்கிவிட்டது,) (5) கேரளத்தில் அலுப்புரத்திலும் புதிய அலுமினிய ஆலைகள் தோன்றக்கூடும். இவ்வாருகப் பூகோள அடிப்படையில் நாட்டின் தேவை பூர்த்தி செய்துகொள்ளப்படும். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் அலுமினியத்தொழில் போதிய அளவு வளர்ச்சி அடைந்துவிடும்.

மைக்காவைப் பெருவாரியான அளவில் இந்தியா ஏற்றுமதி செய்கிறது, உலகத்தின் மொத்தத் தேவையில் மூன்றில் இரு பங்கை இந்தியா மட்டும் அளிக்கிறது, மைக்காவைக் கச்சாவாக ஏற்றுமதி செய்வதில் நாட்டிற்கு இலாபம் இல்லை. இதனைத் தரப் படுத்துவது அவசியம். அச் சமயம் சேதமாகும் துகள்களைக்கொண்டு மைக்கா கற்கள், அல்லது மைகானைட் (Micanite) தயாரிக்கலாம். இப்படிச் செய்வதால் நாட்டு வருவாய் அதிகரிக்கும். மைக்கா

ஆய்வுக் குழு ஒன்றை மத்திய அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. மைக்காத் தொழிலின் பல கூறுகளை இது ஆராய்ந்து வருகிறது.

டைட்டானியம் பல சிறப்பு இயல்புகளைக் கொண்ட ஒரு முக்கிய உலோகமாகும். இது அலுமினியத்தைப் போன்று கனக் குறைவானது, எஃகைப் போன்று உறுதியானது. கலப்பு உலோகங்களைப் போன்று அரிமானத்தை எதிர்க்கும் தன்மையைப் பெற்றுள்ளது: இது இல்மினைட் (Ilmenite) மணலிலிருந்து செய்யப் படுகிறது. இம்மணலை நாம் நெடுங்காலமாக ஏற்றுமதி செய்து வந்துள்ளோம். இவ்வுலோகம் விரைவில் தொழில் முக்கியத்துவம் பெற்று விளங்கக்கூடும். நமது நாட்டில் பற்றாக்குறையாக உள்ள உலோகங்களுக்குப் பதிலாக இதனைப் பயன் படுத்தலாம். இதனைப் பேரளவிற்கு உற்பத்தி செய்ய வேண்டும். (இவ்வகையில் சிறிதளவு முயற்சி கேரளாவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது)

இதைப் போலவே ஸர்க்கான் (zircon) இந்தியாவில் அதிக அளவு கிடைப்பதுடன், தொழில் முக்கியத்துவம் பெற்றும் விளங்குகிறது. இது மேற்குக்கடற்கரை ஓரத்தில் (கேரளாவில்) மோனஸைட் மணலாகக் (monazite) காணப்படுகிறது. அணுசக்தி நிலையங்களில் இதனைப் பயன்படுத்தலாம். கலப்பு எஃகிற்கு உள்ள சில சிறப்பு இயல்புகள், இவ் உலோக சேர்க்கையால் பெறப்படுகின்றன. டைட்டானியம், ஸர்கோனியம் முதலியத் தாதுக்களைப் பிரித்து எடுப்பதற்கான ஆக்கச்செலவு அதிகமாக இருக்கிறது. தொடர்ந்து ஆராய்ச்சி செய்வதன் மூலமாக சிக்கனமாகக் குறைந்த செலவில் இதனைப் பிரித்து எடுப்பது சாத்தியமாகும்.

விலையுயர்ந்தக் கற்களை இந்தியா நெடுநாட்களாக உற்பத்தி செய்து வந்துள்ளது. பாறை வைரங்களும், ராஜஸ்தானத்திலிருந்து மரகதம், கோமேதகம், இரத்தினம் (சிவப்புக் கற்கள்) முதலியனவும், காஷ்மீரத்தின் நீலமணிகளும் மத்தியப் பிரதேசத்திலும், மகாராஷ்டிரத்திலும் காணக் கூடிய கார்னெட் (Garnets)-செம்மையான ஒளிபொருந்திய மணிகளும், குஜராத்திலிருந்து கிடைக்கும் ஒருவகை இரத்தினக் கற்களும் (agates camelian) பீகாரிலிருந்து கிடைக்கக் கூடியக் களிமம் (felspar) முதலியனவும் குறிப்பிடத் தக்கவை. எண்ணெய் ஊற்றுக்களைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் உதவியது போல ருஷ்யா பாறைவைரச் சுரங்கங்களில் நவீனமுறைகளைக் கையாளுவதற்கு உதவியுள்ளது. இத்துறையில் ஈடுபட்டுள்ள இந்தியப் புவி அமைப்பு அறிஞர்களில் முக்கியமாக திரு எஸ். எம். மதூர் என்பவரின் அரியசாதனை பாராட்டுதற்குரியது. எனவே விரைவில் நல்ல பலன் கிடைக்கும் என்று நம்பலாம்.

சில தாதுக்களில் மட்டுமே இந்தியா தன்னிறைவு பெற்றுள்

ளது. மற்றும் சில போதிய அளவு கிடை[illegible] அவ்வகையில் பெட்ரோலியம், கோபால்ட், செம்பு, ஈயம், பாதரசம், நிக்கல், வெள்ளி, வெள்ளீயம், துத்தநாகம் ஆண்டிமனி, ஆர்ஸினிக், ஃப்ளோரைட், கிராபைஃட், பொட்டாசியம் உப்புக்கள், கந்தகம் முதலியன குறிப்பிடத்தக்கவை. இவற்றின் தொழில்துறை பயன்கள் பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளன, தாதுக்களைக் கண்டுபிடிப்பதிலும், சேதம் இன்றி ப்யன் படுத்துவதிலும் திருப்தியைத்தரக் கூடிய வகையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. குஜராத்தில் எண்ணெய்க்கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஜாவர்(zawar) சுரங்கங்களில் ஈயம், துத்தநாகம், ஆகியவற்றின் படிவங்களும், கேத்திரியிலும் (இராஜஸ்தானம்) சிக்கிமிலும், செம்பும், பஞ்சாப்பில் ஆண்டிமோனியும், பீகாரில் கந்தகமும், காஷ்மீரத்தில் நிலக்கரியும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. நமக்குத் தேவையான எரி பொருள்களும், மற்றும் தாதுப்பொருள்களும், உலோகத்தன்மை உடையதும் உலோகத் தன்மை இல்லாததும் — போதிய அளவு கிடைக்கலாம் என்று நம்பிக்கை எழுகிறது.

2. மண்கள்

புதிய தாதுப் பொருள்களைக் கண்டுபிடிப்பது நமது முயற்சியின் ஒருபகுதியேயாகும். தற்போதுள்ள இயற்கை வளங்களை நாம் செம்மையாகப் பயன் படுத்துவதற்குத் தொழில்கள் வளர்ச்சியுற வேண்டும். முதலாவதாகப் பல எஃகு ஆலைகளை ஏற்படுத்த வேண்டும். புதிய எஃகு ஆலைகளை அமைப்பதில் முக்கியமாக மாநிலங்களின் தேவையையும், அங்குக் கிடைக்கக் கூடிய தாதுக்கள் எரி பொருள் முதலியவற்றையும் கருத்தில்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக 'நார் நால்' (Narnaul) (பஞ்சாப்) இருப்புக் கனிகளைப் பயன்படுத்த வேண்டும். பஞ்சாப் தொழில்துறையில் பின்தங்கி இருப்பதாலும், இது அவசியமாகிறது. அதைப் போலவே சாதாரண உப்பைப் பெறுவதற்கும், மற்றும் இரசாயனத் தொழில்களின் வளர்ச்சிக்காகவும் மாண்டியில் (Mandi) உள்ள உப்புப் படிவங்களைப் பயன் படுத்த வேண்டியது அவசியம். பஞ்சாப்பில் உள்ள உயர்ந்தரகச் சுண்ணும்புக் கற்களைக் கொண்டு கார்பைட் (Carbide) உற்பத்தி செய்யலாம். செம்பு, துத்தநாகம். ஈயம், வெள்ளீயம், நிக்கல், ஆண்டிமனி முதலிய உலோகங்கள் போர் முக்கியத்துவம் பெற்ற தொழில்களுக்குத் தேவைப்படுகின்றன. இவைகளைத் தனி உலோகங்களாகவும் கலப்பு உலோகங்களாகவும் பயன்படுத்தமுடியுமாகையால் இவற்றைத் தேடிக்கண்டு பிடிப்பது மிகவும் அவசியம். இந்தியச் சுரங்க நிர்வாகக் குழு (The Indian Bureau of Mines) இதற்காக உலோகப்பிரிவு

(Base metal wing) ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. (கார உலோக இருப்புக்களைத் தேடிக் கண்டுபிடிக்கவும், அவற்றைச் செம்மையாகப் பயன்படுத்தவும் இது முயன்று வரும்)

குரோமியம். வனேடியம், டைட்டானியம். மாங்கனீஸ் முதலிய வற்றைக் கொண்டு பலதரப்பட்டக் கலப்பு எஃகு வகைகளைத் தயாரிக்கலாம். கனரகப்பொறிகள் கனரகத் தொழிற்சாலைகள் முதலியவற்றுக்கு இவை இன்றியமையாதவை. உடனடியாகப் பயன்படுத்தக் கூடிய வகையில் இவ்வளங்கள் போதிய அளவு இருக்கின்றன. பொறியியல் தொழில்களுக்கு மட்டும் இன்றி, போர் முக்கியத்துவம் பெற்ற தொழில்களுக்கும் கலப்பு உலோகங் கள் தேவைப்படுகின்றன.

எடுக்க எடுக்கக் குறையாத அளவிற்கு நமது நாட்டில் கதிரியக் கப்பொருள்கள் (radioactive materials) கிடைக்கின்றன: (இந்தியா வின் தோரிய இருப்பு உலக இருப்பில் மிகப்பெரும் பகுதியாகும்), அணுசக்தியை அமைதிப் பணிகளுக்குப் பெரிய அளவில் பயன் படுத்துகின்ற சில நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருக்கும்.

நமது தாதுப்பொருள்களை நீடித்து இருக்கச் செய்வது எப்படி?

நமது தாதுக்களை நீண்டகாலத்திற்கு உபயோகிப்பதற்காக இங்குக் கூறப்படும் முறைகள் முற்றிலும் புதியன அல்ல. அவை நடைமுறையில் ஓரளவிற்குப் பின்பற்றப்பட்டும் வருகின்றன. இருந்த போதிலும் அவற்றின் பொருளாதார முக்கியத்துவம் கருதி சில வற்றைக் குறிப்பிடலாம். (1) பற்றாக்குறையாக உள்ள தாதுப் பொருள்களுக்குப் பதிலியாகப் பயன் படக்கூடியவை பற்றி ஆராய்ச்சி செய்வது (2) கிளைப் பொருள்களை உபயோகப்படுத்து வது (3) சுரங்கத்தினின்றும் முறையாகத் தாதுக்களை எடுப்பதும், சேதமுறாமல் அவற்றைக் காப்பதும் ஆகும்.

இதுவரை நாம் (கனிவள) ஆராய்ச்சிக்காக அதிக கவனம் செலுத்தவில்லை. குறிப்பாக, பதிலியாகப் பயன்படும் தாதுக்களைப் பற்றி ஆராய்ச்சி மிக மிகக் குறைவு என்று கூறலாம். இது கிட்டத் தட்டப் புறக்கணிக்கப்பட்ட ஒரு துறையாகும். பற்றாக்குறையாக உள்ள தாதுக்களுக்குப் பதிலாக ஏராளமாக உள்ள தாதுக் களைப் பயன்படுத்த வேண்டும். இவற்றைத் தனி அல்லது கலப்பு உலோகங்களாகப் பயன் படுத்தலாம். ஒவ்வொரு நாட்டிலும் இயற்கை வளத்தைப் பயன்படுத்தும் முயற்சியுடன் ஆராய்ச்சி இணைக்கப்பட்டுள்ளது. தேசிய மயமாக்கப்பட்ட தொழில்

களுக்கும் தனியார் துறையில் உள்ள தொழில்களுக்கும் இது அத்தியாவசியமாகும். ஆராய்ச்சியின் மூலமாகத்தான் சிக்கன முறைகளை நாம் கண்டுபிடிக்க முடியும். மின் கம்பிகள், மின் சாதனங்கள் முதலியன செய்வதற்குச் செம்பிற்குப் பதிலாக அலுமினியத்தைப் பயன் படுத்திக் கொள்ளலாம். இது போன்று இன்னும் பல எடுத்துக்காட்டுக்களைக் கூறலாம்.

தொழில் நிறுவனங்களில் தற்சமயம் வீணாக்கப்படும் பொருள்களைக் கொண்டு துணைப் பொருள்கள் உற்பத்தி செய்ய வேண்டும். அப்போதுதான் நமது வளங்களை நல்ல படியாகப் பயன் படுத்தியதாகக் கருதலாம்: அவ்வாறுள்ள சிலவற்றைக் குறிப்பிடலாம். (1) மாக்னிஸைட்டை புடம் போடும்போது வெளிப்படும். (CO^2) கரியமிலவாயுவைப் பயன் படுத்திக் கொள்வது. (2) செம்பு உருக்காலைகளில் (பீகாரில் உள்ளவை) வெளிப்படும், கந்தக வாயுவைக் கொண்டு கந்தக அமிலம் தயாரிக்கலாம். (3) செம்பைச் சுத்திகரிக்கும்போது நிக்கல், வனேடியம் போன்ற உலோகங்களைப் பெறமுயலவேண்டும். (2) வீணாக்கப்படும் மைக்காத் துகள்களைக் கொண்டு மைக்கானைட் (micanite) செய்யலாம். மற்றும் மின் காப்புப்பலகைகள் (Insulating boards) செய்வது. (5) குளிர்பத முறையில் (condensation) உப்புத் தயாரிக்கப்படும் போது ஜிப்ஸத்தைத் துணைப் பொருளாக உற்பத்தி செய்வது. கோபால்ட், நிக்கல், வெள்ளி, முதலியவற்றைச் சுத்திகரிப்புச் செய்யும்போது வெளிப்படும் தூசிக்காற்றினின்றும் ஆர்ஸினிக் (Arsenic Acid) தயாரிக்கலாம்.

சுரங்கங்களினின்று தாதுக்களை வெளியேற்றும் முறை சிக்கனமானதாகவும் சேதக்குறைவானதாகவும் இருக்கவேண்டும். இதை எத்தனை முறைவேண்டுமானாலும் வலியுறுத்திக் கூறலாம். சுரங்கத் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறுநிறுவனங்கள் நாட்டின் நலனைக் கருதாமல், லாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு இயங்குகின்றன. இவற்றிற்குப் பதிலாக பெரிய கூட்டு நிறுவனங்களை—தேசிய நலனைக் கருதி இயங்கக்கூடியவையாகவும், சிக்கன முறைகளைக் கையாளக்கூடியனவாகவும் உள்ளவைகளை—தோற்றுவிக்க வேண்டும்.

பயிற்சிபெற்ற அலுவலர்கள்: போர்க் காரணமாகவும் பிரிவினை காரணமாகவும், ஏற்பட்ட பற்றுக் குறையைச் சமாளிக்கும் முயற்சியில் நமது நாடு ஈடுபட்டு இருந்ததை இதுவரை கண்டோம். நமது நாடு இந்தச் சவாலை ஏற்றதுடன் அதை வெற்றிகரமாகச் செயல் படுத்தியும் வந்துள்ளது. எடுத்துக்காட்டாக, அணுத் (சக்தி) தாதுக்கள், எண்ணெய், எஃகு, உரம், நிலக்கரி, முதலியவற்றை

முன்பு உற்பத்தி செய்ததைவிட அதிக் அளவில் உற்பத்தி செய்கிறோம். தாதுக்களைக் கச்சாவாக ஏற்றுமதி செய்யும் கொள்கையிலும் ஓரளவிற்கு மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் சுதேசித் தொழில்களின் வளர்ச்சி மேலும் ஊக்குவிக்கப்படுகிறது.

உலகில் சில நாடுகளே தொழில் துறையில் முன்னணியில் இருக்கின்றன. அதற்கான காரணிகளைக் காண்பது அவசியம். அவை நிலக்கரி, இரும்புக் கனி, செம்பு, பாக்ஸைட், கதிரியக்கப் பொருள்கள் போன்ற தாதுக்களையும், நீர் (மின்)சக்தியையும் செம்மையாகப் பயன்படுத்தியுள்ளன என்பதை அறியலாம். மற்றும் அங்கு தொழில்நுட்பத் துறையில் அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது, ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. கி. மு. 3000த்தில் துவங்கிய செப்புக் காலத்திலிருந்தே இந்தியாவில் சுரங்கத் தொழில் சிறப்பாக விளங்கியுள்ளது. கி. மு. 3வது நூற்றுண்டிலேயே முறைப்படி சுரங்கத் தொழில் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இத்தகைய உயர்ந்த மரபையும், இயற்கை வளத்தையும் பெற்றுள்ள இந்தியா தொழில்துறையில் முன்னணிக்கு வரக்கூடிய வாய்ப்பையும் பெற்றுள்ளது. இந்தியாவைவிடக் குறைந்த அளவு இயற்கை வளங்களை உடைய நாடுகள் (தொழில் துறையில்) முன்னேற்றம் அடையக் கூடுமானால், இந்தியாவும் அவ்வாறே முன்னேற்றம் காணமுடியும் என்பதில் சந்தேகம் இல்லை.

நாம் தொழில் வளர்ச்சியின் உச்சநிலையை எய்துவதற்குத் தாதுக்களை நல்லபடியாகப் பயன்படுத்துவதுடன், மற்றும் பல துறைகளிலும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். முதலாவதாக இத்துறையில் ஈடுபட்டுள்ள மாணவர்களின் தரம் உயர்த்தப்படவேண்டும். புவி அமைப்பு இயல், சுரங்கத் தொழில் முதலிய பாடங்கள் போதிக்கப்படவேண்டும். இவை மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டக்கூடும். சில பல்கலைக் கழகங்கள் புவி அமைப்பு இயலை இடைநிலை வகுப்புக்களில் (Intermediate) பாடமாக்கியுள்ளன. அரசாங்கத்தின் தாதுப் பொருள்துறை, தொழில் வளர்ச்சித்துறை முதலியன போதிய அளவுப் பயிற்சி பெற்ற அலுவலர்கள் இல்லாத நிலையிலும் வெகுவாகப் பெருகியுள்ளன. இவ்வகையில் இந்தியப் புவிஅமைப்பு சர்வே, இந்தியச் சுரங்க நிர்வாகக் குழு, எண்ணெய் நிலவாயுக் கமிஷன், மற்றும் நிலக்கரி, தாதுக்கள் இவற்றின் வளர்ச்சிக்காக ஏற்பட்ட இரண்டு தேசீயக் கழகங்கள் முதலியவற்றைக் குறிப்பிடலாம். தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய கச்சாப் பொருள்களைத் தேடிக்கண்டு பிடிப்பதற்கு 1965-ல் சுமார் 4000 பயிற்சிபெற்ற புவிஅமைப்பு இயலார்கள் தேவைப்படலாம். இக்குறிக்கோளை அடையும் நோக்கத்துடன்

பல்கலைக் கழகங்களும். பயிற்சி பள்ளிகளும், தொழில்நுட்பக் கல்லூரிகளும் பாடுபட்டு வருகின்றன. அவ்வகையில் தன்பாத் (Dhanbad) சுரங்கப் பயிற்சி பள்ளியும், பம்பாயிலும்,கரக்பூரிலும் உள்ள தொழில்நுட்பப் பயிற்சி கல்லூரிகளும் தேற்றப் புவி அமைப்பு இயல் பிரிவு ஒன்றையும் செய்முறைப் பிரிவு அமைப்பு இயல் பிரிவு ஒன்றையும் துவக்கியுள்ளன. (இந்த வேறுபாடு முற்றிலும் பொருந்தாதது, செயற்கையானது என்று இக் கட்டுரை ஆசிரியர் கருதுகிறார்.) இதற்குப் பல்கலைக் கழகமான்யக் கமிஷன் நிதி உதவி அளிக்கிறது. பட்டப் படிப்பிற்குப்பின் தொடர்ந்து படிக்கும் மாணவர்களுக்குப் பயிற்சி உதவி சம்பளம் கொடுகக வேண்டும். இப் புதியப் பயிற்சி நிலையங்கள், தொழில், பொறியியல் ஆகிய துறைகளின் திட்டமிட்ட வளர்ச்சித் தேவைகளையும், உள்ளூர்த் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும்.

நாட்டின் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதற்காக எல்லாத் தொழில்களையும் துவக்கத்திலேயே தேசியமயமாக்க அரசாங்கம் துணியாது என்பது தெளிவு. எனவே அரசாங்கம் ஓரளவிற்குத் தனது கொள்கையைத் தளர்த்தியிருக்கிறது. எஃகு, கலப்பு எஃகு முதலியன தயாரிக்கவும், பெட்ரோலியத்தைத் தேடிக் கண்டுபிடிக்கவும் தனியார் துறையினர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது இதனை விளக்க வல்லதாக உள்ளது.

நாம் மேலும் ஒரு விவரத்தை நினைவிற்கொள்ள வேண்டும். பல சிறிய தொழில்களில் கையாளப்படுகின்ற தொழில் நுட்பங்களின் முக்கியத்துவத்தை நம்மில் பலர் உணரவில்லை. இவை விரைவில் எழுச்சியான ஒரு நிலையை ஏற்படுத்தக் கூடியவையாகும். எனவே மிகப் பெரிய அளவில் இளைஞர்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கவேண்டும். பெரிய ஆலைகளை ஏற்படுத்தவேண்டும். (அவசியமானால் இதற்கு வெளியாரின் உதவியையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.)

தொழில் உற்பத்தியை அதிகரிப்பதற்கு முறையான புள்ளி விவரச் சர்வே மற்றும் இதர சர்வேக்கள் முதலியவற்றை நடத்துவது அவசியம். மாநில வாரியாக நாட்டின் தேவையைத்தீர்மானிக்க வேண்டும். சிறந்த, சிக்கனமான போக்குவரத்தின்மூலம்—ரயில், சாலை, ஆறுகள், முதலியன பொருள்களை நாடெங்கிலும் கொண்டு செல்வதற்கும் விற்பனை செய்வதற்குமான சாத்தியக் கூறுகளைக் கண்டுபிடிக்கவேண்டும். இவ்வாறு ஒவ்வொரு பிரிவிற்கும் ஓர் அமைப்பு முறை தேவைப்படுகிறது. இவற்றையும் பெரிய தொழில் நிறுவனங்களையும் ஒருமுகப்படுத்துதல் அவசியம். தாதுப் பொருள்களும், மற்றும் விற்பனைக்குரிய பொருள்களும் போதிய அளவிற்கு இருந்தபோதிலும், போக்குவரத்து வசதியில்லாத

காரணத்தினுல், விற்பனையாகாமல் இருக்கலாம். (காட்டாக—நிலக்கரி) இதனுல் மக்களின் தேவை பூர்த்திசெய்யப்படுவதில்லை. எனவே உற்பத்தியும் போக்குவரத்தும் ஒரே சீராகப் பெருக வேண்டும். அப்போதுதான் பொருளாதார மேம்பாடு ஏற்படும். சுரங்கங்கள் அண்மையில் உள்ள தொழிற்சாலை நகரங்களுடன் இணைக்கப்படவேண்டும். இந்நகரங்கள் துறைமுகப் பட்டினங்களுடன் இணைக்கப்பட வேண்டும், பொதுவாகப் போக்குவரத்து வசதிகள் திறம்படவும், சிக்கனமாகவும் இருக்கவேண்டும். கரையோரக் கப்பல் போக்குவரத்து வசதிகள் பெரிய அளவில் வளர்ச்சி அடைய வேண்டும்.

வேறு சில முக்கிய கூறுகளையும் குறிப்பிடலாம். (1) கீழே குறிப்பிட்ட சில பிரச்சினைகளை முறையாக ஆராய்தல் வேண்டும். அவையாவன: போக்குவரத்து, விற்பனை செய்தல், தரம் பிரித்தல், வட்டாரத் தேவைகள், அங்காடி விலை வாசிகள், மற்றும் கச்சாப் பொருள்களை உபயோகிப்பதற்கான சாத்தியக்கூறுகள் முதலியன. (2) தேசீய நலன் கருதி ஆலைகள், சுத்திகரிப்பு ஆலைகள் முதலியவற்றின் இட அமைவை முடிவு செய்யவேண்டும். ஒரு குறிப்பிட்ட மாநிலத்தைத் திருப்தி செய்வதற்காகவோ, பொருளாதார, அரசியல் குழு நலன்கள் கருதியோ ஆலைகளின் இடஅமைவைத் தீர்மானிக்கக்கூடாது. (3) தனியார் துறையில் ஆய்வு அலகுகளை ஏற்படுத்துவதற்கு ஆதரவு அளிக்கவேண்டும். தாதுக்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியிலும், அவற்றைப் பயன்படுத்தும் முயற்சியிலும் அமைந்துள்ள தொழில் ஆபத்துக்களை ஈடு செய்யும் வகையில் நிதி உதவி அளிக்க வேண்டும். தாதுப் படிவங்களைச் சிக்கனமாகத் தோண்டி எடுக்க முடியும் என்று அரசாங்கம் நிரூபிக்கின்றவரை தனியார் துறையினர் வாளா இருக்கக்கூடாது. இத் துறையில் வளர்ச்சியடைந்த நாடுகள் பின்பற்றும் சில முறைகளை நாம் தெரிந்துகொள்வது அவசியம். அங்கு தனியார்துறையில் உள்ள தொழில் நிறுவனங்கள் ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கிருர்கள். அதைச் செயல்படுத்தவும் செய்கிருர்கள். அதேபோல இந்தியாவில் பெரிய நிறுவனங்களை ஏற்படுத்தவேண்டும். அவை சுரங்கம் வெட்டுதல், தாதுக்களைக் கண்டுபிடித்தல் ஆகியவற்றில் முழு முயற்சியுடன் ஈடுபடும். இவைகளில் தகுதியுடைய, போதிய அளவு தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற அலுவலர்களையே நியமிக்கவேண்டும்.

மொத்தத்தில் நமது நாட்டில் தொழில்முக்கியத்துவம் பெற்ற தாதுக்கள் போதிய அளவிற்குக் கிடைக்கின்றன. இது ஓரளவிற்குத் திருப்தியை அளிக்கக்கூடும். போதுமானதாக இல்லாத சில தாதுக்களின் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். அவற்றை

நாடெங்கிலும் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இவற்றிற்குத் தகுந்த பதிலியைக் கண்டுபிடிப்பது அவசியம். அரசாங்கத்தின் தொடர்ந்த ஆதரவு தாதுக்களின் வளர்ச்சிக்கு அவசியம். தொழில்துறையில் வளர்ச்சியடைந்து முன்னணியில் இருப்பதற்குத் தாதுக்களை நல்லபடியாகப் பயன் படுத்தவேண்டும். இதற்கு நாம் மேலே கூறிய சில யோசனை களை அரசாங்கம் ஏற்றுச் செயல்படுத்தக் கூடுமானால் சந்தேகத் திற்கு இடமின்றி நமது இலட்சியத்தை நாம் அடைவோம்.

பிற்சேர்க்கை :

பொருளாதார முக்கியத்துவம் பெற்ற இந்தியத் தாதுப்பொருள்கள்

வரிசை எண் (1)	தாதுக்கள் (2)	கிடைக்கும் முக்கிய இடங்கள் (3)	மதிப்பிட்டுள்ள இருப்புக்கள் (4)	ஆண்டு உற்பத்தி (5)	பொருளாதாரப் பயன்கள் (6)
1.	மெருகு ஏற்றும் பொருள்களும், சாணைக் கற்களும் : (Abrasives and grinding materials)				
(அ)	கோரண்டம் (Corundum)	அஸ்ஸாம், பீகார், தமிழ் நாடு, மத்தியப் பிரதேசம், காஷ்மீரம்.	191618 டன்கள் (Tonnes)	215 டன்கள்	கோரண்டம் துணி, பொடி, உருளை முதலியன. வெட்டுவதற்கும் ஒளிகற்களை பட்டைத் தீட்டுவதற்கும், மெருகு ஏற்றுவதற்கும் பயன்படும்.
(ஆ)	வைரங்கள்	வைரங்கள் தனியாகக் குறிக்கப்பட்டுள்ளன.	3,750,000 காரட்டுகள்	997 காரட்டுகள்	—
(இ)	டையடோமைட் (Dlatomlte)	நிக்கோபார் தீவுகள்.	—	—	வடிகட்டவும். காப்புறைகள் (Insulation) வெடிமருந்துகள் முதலியன செய்யவும், மெருகு ஏற்றவும் பயன்படும்.
(ஈ)	எமரி (Emery)	இந்தியாவில் கிடைக்கவில்லை.(எனினும் பட்டியலில் இடம்பெற வேண்டும்.)	—	—	சாணைத் தீட்டவும். மெருகு ஏற்றவும் பயன்படும்.

(உ)	களிமம் (Felspar)	பீகார். இராஜஸ்தானம்.	போதிய இருப்பு உண்டு	12,838 டன்கள்	மென்மையாகச் சாணை பிடிக்கவும் மெருகு ஏற்றவும் பயன்படும்.
(ஊ)	சக்கிமுக்கி(க்கல்) (Flint)	பீகார், மத்தியப் பிரதேசம், குஜராத், ஆந்திரப் பிரதேசம், உத்திரப் பிரதேசம்.	—	—	மெருகு ஏற்றும் துணியும், காகிதமும் செய்யலாம்.
(எ)	கார்னெட் (Garnet)	பீகார், தமிழ் நாடு, கேரளம், இராஜஸ்தானம், மைசூர்.	போதிய அளவு கிடைக்கும்	322 டன்கள்	மெருகு ஏற்றும் ஒளி கற்கள் (gemstones)
(ஏ)	மணலும், மணற் பாறைகளும்	பீகார், உத்தரப்பிரதேசம், பஞ்சாப், இராஜஸ்தானம், குஜராத், காஷ்மீரம்	—	—	வெடிமண்-தேய்க்கும், மெருகு ஏற்றும் பொருள்கள் செய்யவும் கண்ணாடி செய்யவும் பயன்படும்.
(ஐ)	டால்க் (சீமைச் சுண்ணும்புக் கல்) (Talc)	கீழே பார்க்கவும் (m^2:39)	—	77,971 டன்கள்	—
(ஒ)	(க்)குவார்ட்ஸ் (Quartzite)	பீகார், இராஜஸ்தானம், முதலிய மாநிலங்கள்.	—	48,539*	சாணைத் தீட்டவும், மெருகு ஏற்றவும் பயன்படும்.
2.	கார உப்புக்கள் :				
(அ)	களர் அல்லது 'ரே' (Reh)	பஞ்சாப், உத்தரப்பிரதேசம், இராஜஸ்தானம், பீகார், மைசூர், குஜராத்.	—	—	சோப்பு, கண்ணாடி, காகிதம், மட் பாண்டங்கள் சாயம் முதலியன செய்யலாம்.

(ஆ)	வெடிச்சோடா (வெடியுப்பு) (Saltpetre)	பீகார், உத்தரப் பிரதேசம், பஞ்சாப்.	—	—	உரம், சோப்பு, தீக்குச்சி மருந்து, வெடி மருந்துகள், கண்ணாடி, மண் சாமான்கள் முதலியன தயாரிக்கலாம்.
3	ஆண்டிமனி (Antimony)	பஞ்சாப், (லாஹொல்) (Lahaul)	—	—	கலப்பு உலோகம், துருப்பிடிக்காத கூர்மையான (வெட்டும்) கருவிகள், வண்ணப் பொருள்கள் செய்யலாம்.
4	ஆர்ஸெனிக் (Arsenic)	குமாவுன் (Kumaon) டார்ஜிலிங்	—	38* டன்கள்	சாயம், நிறப் பெருாள்கள், பூச்சிக்கொல்லி, களை நீக்கி, மருந்துகள், வண்ணம் முதலியன.
5	கல் நார்	பீகார், அஸ்ஸாம், ஆந்திரப் பிரதேசம், மைசூர்.	2,79,460 டன்கள்	1,180 டன்கள்	தீப்பிடிக்காத துணிகள். அட்டைகள். வெப்ப, மின் காப்பு உறைகள், சிமெண்ட் மற்றும் இரசாயனத்கள் முதலியன.
6	பாரைட்டுகள் (Barytes)	ஆந்திரப்பிரதேசம், இராஜஸ்தானம், பீகார் மத்தியப் பிரதேசம், பஞ்சாப், காஷ்மீரம், இமயமலைப் பிரதேசம்.	போதிய அளவு கிடைக்கும்	19,828 டன்கள்	வெள்ளைச் சாயம், பீங்கான் பூச்சு (enamels) மற்றும் நெசவுத் தொழிலிலும். ரப்பர் சாமான்கள், லினோலியம், காகிதம். தோல், எண்ணெய்க்காகத் துளையிடுதல், கலப்புக் கண்ணாடிகள் ஆகிய தொழில்கள்.

7	பெரிலியம் (Beryllium)	இராஜஸ்தானம், பீகார், ஆந்திரப் பிரதேசம், தமிழ் நாடு.	—	—	அணுச் சக்தி, மின்வாய் (electrode) கலப்பு உலோகம், சோதனைச் சாலைக் கருவிகள், மட்பாத்திரங்கள், ஒளி கற்கள்.
8	பாக்ஸைட் (அலுமினிய ஆக்ஸைட்) (Bauxite)	மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், பீகார், காஷ்மீரம், ஒரிஸ்ஸா, மைசூர், தமிழ் நாடு.	30,000,000 டன்கள்	4,47,115 டன்கள்	பலவகை அலுமினியங்கள் தயாரிக்கலாம். கப்பல், விமானப் போக்குவரத்து. உந்து வண்டிகள், இரயில், மின்கம்பிகள், பல ரசாயனப் பொருள்கள், மின்சாரப் பொறியியல் தொழில்கள், வீட்டுச் சாமான்கள் முதலியன செய்யலாம். பாக்ஸைட்டை உலைக் கற்களாகவும், பெட்ரோலியத்தை வடிகட்டும் பொருளாகவும், சாயம் ஏற்றவும், சீட்டித் துணிக்கு அச்சடிக்கவும் பயன்படும் படிகாரம், மற்றும் அலுமினியக் கூட்டுப் பொருள்கள் தயாரிக்கவும் அலுண்டம் (Alundum) போன்ற பாக்ஸைட் மெருகு ஏற்றும் பொருள் தயாரிக்கவும் செய்யலாம்.

					அலுமினிய உப்புக்கள் காகிதம் தயார் செய்யவும், நிறத்தைப் போக்கவும், சாயம் ஏற்றவும் நாற்றத்தைப் போக்கவும், நீரைச் சுத்தம் செய்யவும் பயன் படுகின்றன.
9	காட்மியம். (Cadmium)	இராஜஸ்தானம், காஷ்மீரம்.	—	—	மேல் பூச்சு, மின் பூச்சு, கலப்பு உலோகங்கள், அணுச்சக்தி, புகைப்படம் எடுத்தல் வண்ணமும் வண்ணப் பொருள்கள், உலோக மின் பூச்சு, கயிற்றுப்பாலம்,(Ropeway) வண்ணம் பூசிய பீங்கான், கண்ணாடி முதலின, (Batteries) மின்கல அடுக்குகள்.
10	க்ரோமைட் (Chromite)	ஒரிஸ்ஸா, பீகார்,மைசூர், மகாராஷ்டிரம், ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, காஷ்மீரம்.	33,14,500 டன்கள்	46,620 டன்கள்	விமானங்கள், இரயில் பெட்டிகள். உந்து வண்டிகள், சைக்கிள்கள், நுண்கருவிகள், பொறிக் கருவிகள் முதலியன தயாரிக்கும் கலப்பு உலோகமாகவும், 'குரோம் பூச்சுப் பூசவும் பயன்படும் உலைக் கற்களாகவும் குரோமைட்டை உபயோகிக்கலாம்.

					தோல் பதனிடுதல், சாயம் ஏற்றுதல், அச்சிடுதல் முதலியவைகளில் பயன்படும் உப்பு தயாரிக்கவும், உயிர் வாயுவை ஏற்றவும் (oxidizing) சாயம் நீக்கவும் காரணிகளாகப்பயன்படும். கவசத் தகடுகள், போர்க் கப்பல்கள், துப்பாக்கித் தோட்டாக்கள் துரித இயக்க வெட்டுக் கருவிகள் (high speed tools) செய்வதற்கு குரோமியம் அவசியம்.
11	நிலக்கரி	அஸ்ஸாம். மேற்கு வங்காளம். பீகார், ஒரிஸ்ஸா, ஆந்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், காஷ்மீரம்.	60960 மில்லியம் டன்கள்	49,788,000 டன்கள்	இரயில் என்ஜின்களிலும், அனல் மின் நிலையங்களிலும் உலைக்களங்களிலும், வீடுகளிலும் எரி பொருளாக நிலக்கரி பயன்படுகிறது. கோக்குகரி மற்றும் இரும்பு வகைகள் உற்பத்தி செய்யப்பயனுகிறது. நிலக்கரி வாயு தயாரிக்கவும், தார், சாயம், வண்ணப் பொருள்கள் தயாரிக்கவும். முடியும்.
12	கோபால்ட் (Cobalt)	இராஜஸ்தானம், சிக்கிம்.	—	—	மண், கண்ணுடி பாத்திரங்கள் செய்யவும் கலப்பு உலோ

					கங்களைக் கொண்டு துரித இயக்கத்தில் வெட்டும் கருவிகள் பிளேடுகள் (Blades) ஜெட் (Jet) பொறியின் சில பகுதிகள் முதலியனவும் செய்யலாம். வண்ணம், வண்ணப்பொருள்களின் கூட்டுகள், நெசவுத் தொழில் மை, தரை விரிப்புக்கள், மருந்து வகைகள் செய்யவும், மின் பகுப்பு முறையிலும் (Electrolytic) பயன்படும்.
13	செம்பு	பீகார், இராஸ்தானம், வங்காளம், உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, மைசூர், ஆந்திரப் பிரதேசம், பஞ்சாப்.	3266 மில்லியன் டன்கள்	40,4287 டன்கள்	மின்சாரத் தொழில் மின் கம்பி, மின் மோட்டார், மின் ஆக்கி(generator), மின் தொடர்பு இணைப்புப் பலகை (switch board) மின் கருவிகளும், சாதனங்களும், ரேடியோப்பகுதிகள், குளிர் [சாதன]ப் பெட்டிகள், வெப்பக் கட்டுப்பாடு சாதனம் தீப்பொறி பிளக்குகள் (Blug) வெப்பநிலை நிறுத்தி (Thermostat) முதலியனவும், உந்து வண்டிகள், கப்பல்கள் இரயில் பொறிகள்

					பாத்திரங்கள், நாணயம், வெடி மருந்துகள், பொறி பகுதிகள், கைக்கடிகாரங்கள் சுவர்க் கடிகாரங்கள், வார்ப்புக்கள், தீயணைக்கும் கருவிகள், சவரக்கத்திகள் முதலியன செய்யலாம். இதன் கூட்டுப் பொருள்கள் மரங்களின் மீது தெளிக்கும் மருந்தாகவும், மின்பிரிப்பின் மூலம் சுத்திகரிப்புச் செய்யவும், சாயம் ஏற்றவும், சீட்டித் துணியில் அச்சடிக்கவும், தொற்று நீக்கி மருந்தாகவும், வண்ணங்கள் செய்யவும், மற்ற உலோகங்களுடன் பயனுள்ள கலப்பு உலோகமாகவும் பயன்படும்.
14	கோரண்டம் (Corandam)	அஸ்ஸாம், பீகார், தமிழ் நாடு, மைசூர், காஷ்மீரம், மத்தியப் பிரதேசம்.	1,91,618 டன்கள்	215 டன்கள்	சாணைத் தீட்டவும் தேய்க்கவும் மெருகுஏற்றவும்,ஒளிக் கற்கள் செய்யவும் பயன்படும்.
15	வைரம	மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், ஒரிஸ்ஸா, இராஜஸ்தானம், காஷ்மீரம்.	3,750,000 காரட்டுகள்	997 காரட்டுகள்	வைரக் கற்கள், பாறையைத் துளைக்கும் கருவிகள், துரித வேகத்தில் வெட்டும் கருவிகள், மற்றும் சாணைத் தீட்

					டவும், வெட்டவும், மெருகு ஏற்றவும். தேய்க்கவும் பயன்படும்.
16	பொன்	மைசூர், ஆந்திரப் பிரதேசம், பீகார், மற்றும் மலைகளிலிருந்து ஆற்று வண்டல் படியும் நிலங்கள்.	53,0298 டன்கள்	4328 கிலோ கிராம்	பன்னூட்டு மாற்று, நகைகள் நாணயம் (coin), கலப்பு உலோகம், மருந்து, சிறு ஆபரணங்கள், சோடனைப் பொருள்கள், மின் முலாம் பூசவும் சோதனைச் சாலைக் கருவிகள் முதலியன.
17	க்ராபைட் (Graphite)	கேரளம், இராஜஸ்தானம், ஒரிஸ்ஸா, மைசூர், ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, காஷ்மீரம், பீகார், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், பஞ்சாப், மேற்கு வங்காளம்.	—	—	மின், மின் இரசாயனத் தொழில்கள், அணுச்சக்தி உற்பத்தி நிலையங்கள், உயர் வெப்பமூசைகள்(Crucibles) உலைக் களங்கள் முதலியன. பென்ஸில் (lead pencils) வண்ணங்கள், வண்ணப் பொருள்கள், பட்டரை வேலைகளுக்கும் மெருகிடவும் (Glazing) மசகிடல் (lubrication) மின் அச்சு (Electro-typing) முதலியன.
18	கண்ணாடி மணல் (Glass Sands)	ஒரிஸ்ஸா, மேற்கு வங்காளம், பீகார், உத்தரப் பிரதேசம், பஞ்சாப், காஷ்மீரம், மத்தியப் பிரதேசம், இராஜஸ்	—	—	எல்லா வகைக் கண்ணாடிச் சாமான்கள்.

		தானம், குஜராத், மகாராஷ்டிரம், ஆந்திரப் பிரதேசம், மைசூர்.			
19	ஜிப்ஸம் (Gypsum)	இராஜஸ்தானம், தமிழ்நாடு, ஜம்மு காஷ்மீரம், குஜராத், ஆந்திரப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், இமயமலைப் பிரதேசம், பஞ்சாப், மேற்கு வங்காளம்.	47641 மில்லியன் டன்கள்	9,42.542 டன்கள்	உரம், கந்தகக் கூட்டுப் பொருள்கள். கந்தகஅமிலம், போர்ட்லாந்து சிமெண்ட்டிற்கான முக்கிய ஆக்கப் பொருள். மற்றும் காகிதம். பருத்திப்பொருள்கள். வண்ணம் முதலிய தொழில்களிலும் வெப்பக் காப்புப்பலகைகள், ஒலித் தடைப் பலகைகள் (accoustical boards) செய்வதற்கு இளக்கியாக (flux) வும் பயன்படும். மண்பாத்திரங்கள் மாதிரி உரு அமைக்கும் பாரிசு (சுண்ணம்) சாந்து, மருந்து.கட்டிடப் பொருள்கள் முதலியன அலங்கார ஆபரணப் பொருள்கள் செய்யவும். சிலைகள் செதுக்குவதற்கும் பயன்படும் அலபாஸ்டர் (Alabaster). பாறையியல் அணுப்பெருக்கித் தகடுகள் செய்யக்

				கூடிய செலினைட் (selenite)
20	இல்மினைட் (Ilmenite) (டைட்டானியக்கனி)	கேரளம், பீகார், ஒரிஸ்ஸா, தமிழ்நாடு, இராஜஸ்தானம்,	போதிய1, அளவிற்கு	1,09,206 டன்கள்	டைட்டானியம் செய்வதற்குப்பயன்படும். எஃகு தயாரிக்கவும் பொறிப்பகுதிகள், கப்பல், விமானம், டைட்டானியம் - டை - ஆக்ஸைட் (Titanium-di-oxide) வெண்மைப் பொருள் மற்றும் காகிதம், மை, தோல், லிஞேலியம், நெசவுத் தொழில்களிலும் நறுமணப் பொருள் மண் பாத்திரங்கள் வண்ணக் கண்ணுடிகள் மெருகிடுதல், பீங்கான் பூச்சு, பல்மருத்துவர் முதலியவற்றிலும் டைட்டானியத்தின் கூட்டுப் பொருளாக சாயம், நிறம் பற்றி (mordant)யாக, பருத்தி, கம்பளி, பட்டு, தோல் தொழில்களிலும், புகைப் படலம் தோற்றுவிக்கவும். (smoke screen) சலவை செய்யவும், நிறத்தைப் போக்கவும், மின் தொழில்களிலும், மெருகு ஏற்றவும் பயன்படுகின்றன.

21	இரும்புக்கனி	பீகார், ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், ஆந்திரா, அஸ்ஸாம் மேற்கு வங்காளம், மைசூர், தமிழ்நாடு, பஞ்சாப், இமயமலைப் பிரதேசம், இராஜஸ்தானம், ஜம்முகாஷ்மீரம், உத்தரப்பிரதேசம், கோவா.	21,300 மில்லியன் டன்கள்	10,707,000 டன்கள்	நாட்டின் முதுகெலும்பு போன்ற இரும்பு எஃகு தயாரிக்கலாம். எல்லா வகையான ஊர்திகள் தயாரிக்க-சைக்கிள் முதல் விண்வெளிக் கப்பல் வரை பொறிப் பகுதிகள் இராணுவச் சாதனங்கள் கட்டிடப் பொருள்கள், உத்தரங்கள் முதலியன. மற்றும் பொறியியல் கருவிகள் துணிதைக்கும் ஊசியிலிருந்து ராட்சஸ எஃகு ஆலைகள் வரை. பட்டியலில் அடக்க முடியாத அளவிற்கு. எண்ணிறந்த உபயோகங்களை உடையது.
22	க்யானைட் (Kyanite)	பீகார், ஒரிஸ்ஸா, ஆந்திரப்பிரதேசம், மைசூர், இராஸ்தானம், பஞ்சாப்.	'F' லக்ஷம் டன்களுக்கு மேல் 3 மீட்டர் ஆழத்தில்.	37,961 டன்கள்	உலைக்களங்களில் பயன்படும் முக்கிய உலைக்கற்களாகக் கண்ணாடி, மண்பாத்திர ஆலைகளில் பயன்படுகிறது. மின்பீங்கான் முதலியன.
23	ஈயம்	இராஜஸ்தானம், பீகார், ஜம்மு, காஷ்மீரம்.	84 F 4951 மெட்ரிக்	4895 டன்கள்	கலப்பு உலோகங்கள், வார்ப்பு, கந்தக அமிலம்

			டன்கள் 15 % கனிகள்		(storage batteries) சேமிப்பு மின் கலம் வடவுறை (Cable covering) வண்ணம் நிறப் பொருள்கள் கழிவு நீக்கக் கலம். (sanitary ware) கட்டிடச் சாமான்கள், வெடி மருந்துகள், பற்றீயம் (solder) ஃப்யூஸ் ரேக்குகள், (Fusible Foils) அச்சு உலோகம், உந்து பொறிகளில் ஆண்டிநாக் (antiknock) திரவமாகவும், எக்ஸ்-கதிர் பொறிகளிலும் அணுச்சக்தி நிலையங்களிலும் கேடயங்களாகவும், அதிர்வுத் தடையாகவும். (Vibration damping): கலப்பு உலோகங்கள், கூட்டுப் பொருளாகப் பிளாஸ்டிக், சாயம் தோய்த்தல், சீட்டித் துணியில் அச்சடித்தல், கண்ணாடி, மண் சாமான்கள், வெடிமருந்துகள்.
24	பழுப்பு நிலக்கரி (Lignite)	தமிழ்நாடு, குஜராத், இராஜஸ்தானம், காஷ்மீரம்.	180 மில்லியன் டன்கள்	1,30,924	மட்டரக நிலக்கரியாகப் பயன்படுகிறது.

			(காஷ்மீரத்தில் மட்டும்)		
25	சுண்ணும்புக்கல் (Limestone)	பீகார், இராஜஸ்தானம், மகாராஷ்டிரம், குஜராத், தமிழ்நாடு, மத்தியப் பிரதேசம், பஞ்சாப், மைசூர், மேற்கு வங்காளம், ஆந்திரப் பிரதேசம், உத்தரப்பிரதேசம், ஜம்மு, காஷ்மீரம்.	பல ஆயிரம் மில்லியம் டன்கள்	13,363,00 டன்கள்	கட்டிடக்கற்கள், சுண்ணும்பு தயாரித்தல்;போர்ட்லாந்து சிமெண்ட், உலோகங்களின் இளக்கு (flux) ஆகவும், சர்க்கரையைச் சுத்தம் செய்யவும், தாவர எண்ணெய் சுத்தம் செய்யவும், சலவை சுண்ணும்பு, (bleaching powder) கால்ஷியம் கார்பைட் (சுத்தமாக இருக்கும் போது) காரச்சோடா, கண்ணுடி மண், மண் பாத்திரங்கள் செய்யவும், மற்றும் வண்ணம், ரப்பர். தோல் பதனிடுதல் முதலிய தொழில்களிலும் பயனுகின்றது.
26	லீதியம் (Lithium)	பீகார், மத்தியப்பிரதேசம்,மைசூர், காஷ்மீரம்.	—	—	அணுச்சக்தி. கலப்பு உலோகம், உலோகங்களை மறுபடியும் சுத்தம் செய்தல்,வாணவெடிகள், ராணுவத்தில் சைகைக் (signals) குறியால்

					செய்தியனுப்புதல், வெப்பக் கட்டுப்பாட்டுச் சாதனங்கள். இதன் கூட்டுப் பொருள்களின் பயன்கள்: இளக்கியாகவும், புகைப்படம் எடுப்பதிலும், மருந்துகள், கண்ணடி, பீங்கான், பீங்கான் பூச்சு, மெருகிடுதல், ஆடிக்கருவிகள் (optical instruments) சேமிப்பு மின் கலம், உணவைப் பாதுகாத்தல், மசிங்கிடும் பொருள் (lubricant)
27	மார்பில் (சலவைக்கல்) (Marble)	இராஜஸ்தானம், மத்தியப்பிரதேசம், தமிழ் நாடு, மைசூர், பஞ்சாப், உத்தரப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம்.	—	—	பல்வேறு உபயோகங்களுக்குப் பயன்படும் நேர்த்தியான கட்டிடக் கற்கள், சிலைகள் செய்வதற்கான கற்கள் அலங்கரிக்கும் பொருள்கள்.
28	மாக்னி ஸைட்: (Magnesite)	தமிழ் நாடு, மைசூர், உத்தரப்பிரதேசம், பீகார், காஷ்மீரம், இராஜஸ்தானம்.	போதிய அளவு	1,71,146 டன்கள்.	மாக்னீஷியா தயாரித்தல்: உலைக்கற்களாகப் பயன்படுத்துதல், சிமெண்ட் தயாரித்தல்; காகிதம், வண்ணம், மெருகிடல் முதலிய தொழில்களிலும், ரப்பர்

					மின்காப்புப் பொருள்கள், கரியமில வாயுத் தயாரித்தல், சாணைக் கற்கள், மெருகு இடுதல்,உணவைப் பாதுகாக்கவும், சிகரெட் காகிதம் செய்தல் முதலியன.
29	மாங்கனீஸ்:	மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், மைசூர், மகாராஷ்டிரம், பீகார், இராஜஸ்தானம், கோவா.	100 மில்லியன் டன்களுக்கும் அதிகம்.	982,000 டன்கள்	எஃகுத் தொழில், கலப்பு உலோகம், கரி மின்கலம் (DryBatteries). மண், கண்ணடிச் சாமான்கள். மாங்கனீஸ்-டை-ஆக்ஸைட்(வண்ணம். வார்னிஷ். மை இவைகள் செய்யப்பயன்படும்) பொட்டாசியம் பர்மாங்கனேட் (இரசாயன வினைப்படுத்தும் பொருள் (Reagent—தொற்று நீக்கி—disinfectant.)
30	பாதரசம்	கேரளா, மத்தியப் பிரதேசம்:	—	—	விஞ்ஞானக் கருவிகள்: வெப்பமானி அமுக்கமானி, (Barometer) வெப்பநிலை நிறுத்தி (Thermostat) குளோரின் தயாரித்தல், சோடியம் ஹைட்ராக்ஸைட், அசிடிக்

					அமிலம், அஸிடோன், ரசக் கலவை முறையினல் பொன், வெள்ளி, துத்த நாகம், வெள்ளீயம் முதலியன சுத்தம் செய்யவும் (Refining) பயன்படும். இதன் கூட்டுப்பொருள்கள், மருந்தாகவும், நிறப் பொருளாகவும், பூச்சிக் கொல்லியாகவும், நச்சுக் கொல்லியாகவும், மற்றும் கரிமின் கலங்கள். வெடி மருந்துகள், பிளாஸ்டிக் சாயங்கள் முதலியன.
31	மைக்கா	பீகார், இராஜஸ்தானம், ஆந்திரப் பிரதேசம், கேரளம்.	போதிய இருப்புக் கள்.	23,081 டன் கள். (கச்சா)	முக்கிய மின்காப்புப் பொருள்கள்: தோலைபேசி, டைனமோ, குளிர்க் கலம் (Condenser) ரியோஸ்டாட் (Rheostat) ரடியோக் குழாய்கள் உந்துவண்டிகள், விமானப் பொறி (மின்) விசை மாற்று அமைவுகள் (Transformer) மின் ஓட்ட அலேகளைத் திருப்பி விடும் கருவி

(armature commutator) ஸ்பார்க் பிளக்கு (Spark plugs), எரி கம்பி இழைகள். மற்றும் வீட்டுச் சாமான்கள்: ஜன்னல் கண்ணாடிகள், சிமினி விளக்குகள், ஸ்டவ் அடுப்புகள், உலைக் களத்தில் உள்ள பார்க்கும் சன்னல்கள் (peep windows in owens). (optical lanterns) ஆடி விளக்குகள் புகை மூடிகள், சாதனங்களை மூடுதல், விளக்கு ஷேட்கள் (Lamp shades).

சுவர்க் காகிதங்கள், (Wall paper, வண்ணம். ரப்பர், மசகிடல். ஓடுகள் செய்தல், கான்கிரீட் முகப்புக்கள், குழாய், கொதிகலம் இவைகளின் மின் கடத்தா மூடிகள் (pipe and boiler laggings) மைகானைட் கற்கள் (micanite bricks) சேதமடைந்த மைகாவிலிருந்து தயாரிக்கலாம். விழாக்

				காலங்களில் - இந்தியாவில் ஹோலி, ஐரோப்பாவிய் கிருஸ்து பிறந்த வீழாக் களில் பயன்படக்கூடியது.
32	நிக்கல்.	இராஜஸ்தானம், பீகார், கேரளய், மைசூர். காஷ மீரம், ஒரிஸ்ஸா,	—	மின் வெப்ப இழைகளை ஆக் கும் கலப்பு உலோகம் ஆக வும், உந்து வண்டிகள், விமானம். இரயில், பொறிக் கருவிகள், சக்திப் பொறி கள் (Power machines) சுரங்கப் பொறிகள் துளை யிடும் பொறிகள். வேதியல் கருவிகள் வீட்டுச் சாமான் கள், கப்பல், உருட்டும் தூய்மையாக்கும் பொறி கள், குழாய்கள், வால்வு கள், காற்று அமுக்கிகள். மின் விசை மாற்று அமைவு கள், மோட்டார், ஆக்கி. (generators) வட உறை (Cable coverings) தந்தி, தொலை பேசி சாதனங்கள். வெப்ப நிலை நிறுத்திகள், நுண் கருவிகள், அளவை நாடா, கைக் கடிகாரங்கள்,

					சுவர் கடிகாரங்கள், மின் தடைக் கம்பிகள், (Elcctrictrical Resistance wires); நாணயங்கள், உலோகம், மின் முலாம் பூச்சுக்கள். இரசாயன பெட்ரோலியத் தொழில்கள், உணவைக் காப்பது, எண்ணெய்களில் ஹைட்ரஜன் செலுத்துதல், சேமிப்பு மின்கலம், இரசாயனப் பொருள்கள், பீங்கான் பூச்சுக்கள், கவசத் தகடுகள், பீரங்கி தோட்டா உறை, கடல் கருவிகள் முதலியன தயாரித்தல்.
33	பெட்ரோலியம்	அஸ்ஸாம், குஜராத்,	(அஸ்ஸாமில்) 300 மில்லியன் பீப்பாய்கள்.	(அஸ்ஸாமில்)நாள் ஒன்றுக்கு 9450 பீப்பாய்கள். (1958-ல்)	உந்து வண்டிகள். விமானம். மோட்டார் சைக்கிள் இவைகளுக்கு எரிபொருள்.
34	பாஸ்பேட்டுக்கள்:	பீகார். ஒரிஸ்ஸா. ஆந்திரப் பிரதேசம். தமிழ் நாடு,	—	—	உரம் தயாரித்தல். போ. பாஸ் போரிக்' அமிலம். பாஸ்போரஸ் பென்டாக்

					ஸைட். பென்டாகுவோரைட், தண்ணீரை மிருதுவாக்குதல், பேக்கிங் பொடி (baking powder) உலைக் கற்கள், கலப்பு உலோகம்.
35	உப்பு.	இமயமலைப் பிரதேசம்:	50·8 மில்லியன் டன்கள் உவர்களி மண்ணிலிருந்து 67,000 டன்கள் மண்டி (Mandi) படிவங்களிலிருந்து:	3,692,000 டன்கள்:	உணவாகவும், சோப்பு செய்வதற்கு சோடியம் கார்போனேட்டாகவும், சோடாக் காரமாகவும், சலவை சோடாவாகவும், செய்யலாம். மற்றும் காகிதம், காகிதக்கூழ் செய்யவும். பாக்ஸைட் (அலுமினிய ஆக்ஸைட்) டைச் சுத்தம் செய்யவும், பெட்ரோலியத்தைச் சுத்தம் செய்யவும் சோடியம் சல்பேட் பயன்படுகிறது. குளோரின் தயாரிக்க உப்பு வேண்டும். இது காகிதக் கூழ், காகிதம், (துணி) இவைகளைச் சலவை செய்யப்பயன்படுகிறது. ஹைட்ரோகுளோரிக் அமிலம் தயாரிக்கவும் நீரில் கிருமிகளை ஒழிக்க

					வும் பயன்படுகிறது. மண் பாண்டத்தொழில், தார்ப் பொருள்கள், குளிர் ஊட்டி, (refrigerants) தோல் பதனிடும் தொழில், உரம் முதலியன.
36	ஸிலிமனேட் (sllimanite)	அஸ்ஸாம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், கேரளம்,	3,56,600 டன்கள்	6,750 டன்கள்	சிறந்த உலைக்கற்கள்: உலைக் கலத்தின் உள் பொருத்தப்படுபவை. கண்ணாடி ஆலைகளில், மின் பீங்கான் ஆகப்பயன்படும்.
37	வெள்ளி	மைசூர், ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தானம்.	—	3848 கிலோ கிராம்	நாணயங்கள், நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், கலப்பு உலோகங்கள். புகைப்படம் எடுத்தல், முகம் பார்க்கும் ஆடிகள் (Mirroring) மருந்துகள் பற்றீயம் (Solder), மின் கருவிகள், மின் முலாம் பூசுதல்.
38	பலகைக்கல் (slate)	பஞ்சாப், ஆந்திரப்பிரதேசம், மைசூர், மகாராஷ்டிரம், ராஜஸ்தானம், அஸ்ஸாம்.	—	—	கூரை வேய்தல், தளம் அமைத்தல், (floorings) மேசைகளின் மேல் பொருத்துவது, எழுதும் கற்பலகைகள், சாணைக் கற்கள், வண்ணம், ரப்பர்

					தரை விரிப்புக்கள் முதலியன.
39	ஸ்டியாடைட் (steatite)	இராஜஸ்தானம், மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், பீகார், ஒரிஸ்ஸா	போதிய அளவு	77971 டன்கள்	டால்க் (talk) (சீமை சுண்ணும்புக்கல்) வண்ணம் தயாரிக்கும் தொழிலில் இணைக்கும் காரணியாகவுள்ளது. மற்றும் காகிதம், ரப்பர், பிளாஸ்டிக்ஸ், நெசவு. சோப், தரை மெருகிடுதல், கல்நார் பொருள்கள் முதலிய தொழில்கள், மற்றும் உலைக் களங்களில், பீங்கான், செங்கல், ஓடு, மண் பாண்டங்கள் தயாரிக்கவும், தூசி போக்கவும், மசகிடவும் (lubricant) அழகுச் சாதனப் பொருள்களான முகப்பொடி முதலியன செய்யவும், சிற்பங்கள், ஆபரணங்கள் செதுக்கவும் பயன்படும். உயர்ந்த ரக சீமைச் சுண்ணும்புக்கல், வண்ணச் சுண்ணங்கள், பென்சில் (pencils) செய்யவும் பயன்படும்.

					உயர்ந்த ரக சீமைச் சுண்ணும்புக் கல், வண்ணச் சுண்ணங்கள், பென்சில்கள் (Pencils) செய்யவும் பயன்படும்.
40	ஸ்ரான்ஷியம் (Strontium)	தமிழ்நாடு.	—	—	இதன் உப்புக்கள் வாணவெடி வகைகளில் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. வெடி வகைகள், விமானம், கப்பல் இவைகளுக்குக் காட்டப்படும் நிற வெளிச்சங்கள், ராக்கெட்டுகள், தடம் காட்டும் தோட்டாக்கள் (Tracer Bullets) எல்லா வகையான சிவப்பு நிற சைகைகள் (Signals) எண்ணெய்க்காகத் துளையிடும் போது மண்கள் (Muds for Oil Drilling) வண்ணங்கள், நிறப்பொருள்கள் எஃகு கலப்பாகவும், இளக்கியாகவும், 'பீட்' சர்க்கரைக் கழிவுப் பாகிலிருந்து இனிப்பை நீக்கவும் பயன்படுகிறது,

41.	கந்தகம் (பைராட்டுக்கள்) [Sulphur—(Pyrites)].	பீகார், பஞ்சாப், தமிழ் நாடு, ஆந்திரா, குஜராத் முதலியன.	156 மில்லியன் டன்கள் கந்தகம்.	அமிலம் பாதிக்காத சிமெண்ட் தயாரிக்கவும். ரப்பர் பதனிடல், பூச்சி, காளான் கொல்லியாகவும், சாயம், பீங்கான் பூச்சுத் தயாரிக்கவும் முடியும். இதன் கூட்டுப் பொருள்கள் சோதனை சாலைகளில் வினைப்படுத்துப் பொருளாகவும் (Reagent), கந்தக அமிலம், கார்பன் டை சல்பைட் (CS_2) தயாரிக்கலாம். காகிதம் தயாரிக்கும் தொழிலில் சலவைப் பொருளாக CS_3 பயன் படுகிறது. குளிர் ஊட்டி (Refrigerant)யாகவும், இதர வேதியல் பொருள்கள் தயாரிக்கவும் பயன்படும். செயற்கை நூல்கள் தயாரிப்பதில் இது ஒரு கரைபொருளாகப்பயன் படுகிறது. பல வேதியற் தொழில்களில் கந்தக அமிலம் பயன்படுகிறது. உரத் தொழில், பெட்ரோலியம் சுத்திகரிப்பு, இரும்பு, எஃகு

					உலோகத் தொழில், செயற்கை நூல் ஆக்குதல், தார்ப்பொருள்கள், வண்ணங்கள், நிறப்பொருள்கள், நெசவுத் தொழில், சர்க்கரையைத் தூய்மை செய்தல், கந்தக மருந்துகள் தயாரித்தல், தீக்குச்சி மருந்து செய்தல், சேமிப்பு மின்கலங்கள், பிளாஸ்டிக்ஸ் முதலியன.
42	தோரியம் (Thorium)	கேரளம், தமிழ்நாடு, பீகார், மேற்கு வங்காளம். இராஜஸ்தானம்.	—	—	அணுச்சக்தி, பெட்ரோமாக்ஸ் விளக்கு மாண்டில் (Mantle), மின்விளக்கு இழைகள், மருந்துகள், இரசாயனப் பொருள்கள். மெருகு ஏற்றும் பொருள் முதலியன. கூட்டாகவும், கலப்பாகவும் உபயோகிக்கலாம். அவ்வகையில் மிஸெல் (Missile) துணைக் கிரகங்கள் (Satellites), விண்வெளிக் கப்பல்கள் (Space ship), கண்ணாடி வில்லைகள், புகைப் படப் பெட்டி ஆடிகள்,

					ரேடியோ வால்வுகள் (Radio Valves), உலைக்களங்கள் முதலிய பல துறைகளில் பயன்படுவன.
43	வெள்ளீயம். (தகரம்) (Tin)	பீகார், ஒரிஸ்ஸா.	—	—	தகரக் குவளை, தகரம் பூசுதல், பாத்திரங்களுக்கு வெள்ளீயம் பூசுதல், கலப்பு உலோகம், பற்றீயம், மெழுகுப் பொருளாகப்பயன்படும் மென்மையான உலோகக் கலவை வகை, (Babbit Bearing Metals) வீட்டுச் சாமான்கள் முதலியன.
					இதன் உப்புக்கள் பட்டுத் துணிக்குச் சாயம் ஏற்றியாகவும், ஒளிசெல்லா இழைமல் பூச்சு செய்யவும் மெழுகுப் பொருள் தயாரிக்கவும் முடியும்,
44	டைட்டானியம். (Titanium) இல்மினேட் (பார்க்கவும்.)	இராஜஸ்தானம், ஆந்திரப் பிரதேசம்; மகாராஷ்டிரம்; பீகார், மேற்கு வங்காளம்.	—	—	படைச் சாதனங்கள் தயாரிக்கலாம்.

45	டங்ஸ்டன் (ஓல்ஃப்பாரம்) [Tungsten-Wolfram)	குஜராத், தமிழ்நாடு.	—	9752 கிலோ கிராம்	துரிதமாக வெட்டும்' தேய்க்கும் கருவிகள் தயாரிக்கும் கலப்பு உலோகம்: ரயில் தண்டவாளங்கள், கார்ஸ்பிரிங், அரம், மின்விளக்கு இழைகள் உலோக இரம்பம் தயாரிக்கவும் உதவும். மின் அணுச் சாதனங்கள், தீப்பொறி ப்ளக்குகள் (Spark Plugs), பற்ற வைக்கும் மின் முனைகள், மட்பாண்டங்கள், கண்ணாடிச் சாமான்கள் முதலியன. தீப்பிடிக்காதத் துணி, நிறப் பொருள்கள், அச்சுத் தொழில் முதலியவற்றிலும் பயன்படும்.
46	யுரேனியம். (Uranium)	பீகார், ராஜஸ்தானம், ஆந்திரப் பிரதேசம், கேரளம், தமிழ்நாடு.	—	—	அணுச்சக்தி உற்பத்தி செய்தல். அணு ஆயுதங்கள், கதிரியக்க ஓரகத் தனிமங்கள் (Radio I'so topes) வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கவும், கரம்பு நில மீட்சிக்கும், உணவைப் பாதுகாக்கவும், மருந்துகளுக்கும் இவை தேவைப்படுகின்றன.

	வனேடியம் (Vanadium)	பீகார், மத்தியப்பிரதேசம், கேரளா.	22.4 மில்லியன் டன்கள்.	—	அழுத்தச் சக்தியை ஏற்கும் பொறிப் பகுதிகள் தயாரிக்கும் கலப்பு உலோகம்: அதாவது, பிஸ்டன் தண்டுகள் ஸ்பிரிங்குகள், கிரான்க்கு ஷாஃப்ட்டுகள் (Crank Shaft) டையர் விளிம்புகள். மலையைக் குடையும் கருவிகள், இரம்பக் கருவிகள், பீரங்கியின் குழாய்ப் பகுதி, கவசத் தகடுகள் முதலியன. மற்றும் இரயில்வே, உந்து வண்டிகள், விமானங்கள் முதலியன. கந்தக அமிலத் தயாரிப்பில் ஊக்கியாகவும் மருந்துகள், வண்ணம், சாயம் முதலியன தயாரிக்கவும் தேவைப்படும்.
48	துத்தநாகம். (Zinc) (செறிவானது)	இராஜஸ்தானம், காஷ்மீரம்.	8,4 F4. 951 மெட்ரிக் டன்கள். 3-6% கனி.	8191 டன்கள்.	இரும்புத் தகடுகளுக்கு முலாம் பூசுதல், கலப்பு உலோகம், மின்கலம், வார்ப்பட ஆசுத் தயாரித்தல், வேதியல் தயாரிப்புக்களில் குறைப்புக் காரணி (Reducing Agent) யாகவும் உள்ளது. இதன்

					கூட்டுப்பொருள்கள் வண்ணம், ரப்பர் மற்றும் லிதோபோனில் (Lithophone) 30 % துத்தநாக சல்பேட்டுக்கள் உள்ளன.
49	ஸர்கோனியம். (Zirconium)	கேரளம். பீகார், மேற்கு வங்காளம், ராஜஸ்தானம், தமிழ்நாடு.	—	—	ஸர்க்கேனியம் ஆக்ஸெட் ஒரு சிறந்த உலேக்கள், ஸர்க்கோனியம் கார்பைட் சானேக் கல்லாகவும், கண்ணுடி அறுப்பதற்கும் பயனுகும். நிறப்பொருள் செய்வதற்கும், ஒளிபுகா இனுமல் செய்வதற்கும், ஸர்க்கோனியக் கூட்டுப் பொருள்கள் அவசியம். கண்ணுடி, பீங்கான் வகைகள் தயாரிக்கவும். ஸ்பார்க்ப்ளக்குகள் (Spark Plugs), ரேடியோ வால்வுகள், வெடிமருந்திற்குத் தீ வைக்கும் சாதனங்கள் (Primers for-ammunition) ஒளி வீச்சப் பொடிகள் (Flash Light Powders) ஒளிக் கற்கள் (Gem Stones).

4 1959 ஆண்டு புள்ளிவிவரங்கள்.

3. சமூக அமைப்பு

டி. என். மதன் (T. N. Madan)

1. சமூக அமைப்பும், பொருளாதார வளர்ச்சியும்.

ஒரு நாட்டின் பொருளாதார வரலாற்றைப்பற்றி எழுதப்படும் புத்தகத்தில் சமூக அமைப்பை விளக்கிக்கூறுவது சம்பிரதாயமாகும்.[1] இதற்கான காரணத்தை வலியுறுத்திக் கூறியபின்னரே இதன் அவசியத்தை உணரவைக்க வேண்டும் என்பதில்லை. ஏனெனில், பொருளாதார வரலாறு என்பது சமூக வரலாற்றின் ஒரு கூறேயாகும். சமூக வரலாற்றுப் பின்னணியில் அமையாதப் பொருளாதார வரலாற்றை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாது. இக்கருத்தை வேறுவகையிலும் கூறலாம். மக்கள் தங்களுடைய எண்ணற்ற அவசியமான தேவைகளை எவ்வாறு இயற்கைச் சாதனங்களைக்கொண்டு, குழு அமைப்புக்களின் மூலம் நிறைவேற்றிக்கொள்ளுகிறார்கள் என்பதைக் கூறும் வரலாறுதான் பொருளாதார வரலாறாகும். சமூகத்தின் அமைப்புமுறை, அதன் கட்டுத்திட்டங்கள் ஆகியவற்றிற்கும் பொருளாதார வரலாற்றிற்கும் நெருங்கிய பிணைப்பு உண்டு. சுருங்கக்கூறின்[2] சமூகக் காரணிகளால் பொருளா

1 சமூக இயல் அறிஞர்கள் 'சமூக அமைப்பு' என்ற சொல்லை மூன்று வேறுபட்டப் பொருள்களைக் குறிக்கும் வகையில் பயன்படுத்துகிறார்கள். (காண்க : ஃபர்த் **Firth 1954**) சமூகத்தில் உள்ள முக்கியக் குழுக்களையும், நிறுவனங்களையும் குறிக்கும் வகையில் 'சமூக அமைப்பு' என்ற சொல் இக்கட்டுரையில் பயன்படுத்தப்படுகிறது. இது மிக எளியதாக மட்டுமன்றி, எல்லோராலும் எடுத்தாளப்படுகின்ற பொருளைக் குறிக்கும் வகையிலும் உள்ளது.

2 பொருளாதாரக் காரணிகளின் அடிப்படைத் தன்மையை வலியுறுத்துவதோ இவை 'செயல்படும் தன்மையின் முக்கியத்தை' ஆய்வதோ இக்கட்டுரையின் நோக்கம் இல்லை. மார்க்ஸும் **(Marx)**, அவரைப் பின்பற்றுபவர்களும், கருத்தாய்வாளர்களும் இதுபற்றி அதிகமாக எழுதியிருக்கிறார்கள். என்ஜெல்ஸ் **(Engels—1888)** பின்வருமாறு எழுதியுள்ளார். ''ஒரு முக்கியத்துவம் பெற்ற வரலாறு துவங்கப்படும் சகாப்தக் காலங்களில் உற்பத்தி, பண்ட மாற்றுமுறை முதலியப் பொருளாதாரப் பாணியின் அடிப்படையில்

தார வளர்ச்சி ஏற்படுவதைப்போல, பொருளாதார வளர்ச்சியினுல் சமூகத்தில் பல விளைவுகள் ஏற்படுகின்றன.

பொருளாதார வளர்ச்சிக்கு இயற்கைவளத்தையும், தொழில் நுட்பத்தையும் போல மக்கள் செயல்படுகின்ற முறையும் முக்கியமாகும், இக்கருத்தினை லூயிஸ் (Lewis) அழகாக எடுத்துக் கூறுகிருர். பொருளாதார வளர்ச்சிக்கு "ஆதாரமான காரணங்களை"[3] ஆராய்வது பொருளாதார இயலின் பணிகளில் முக்கியமானதாகும். "சில சமூகங்களிலும், வரலாற்றின் சில காலங்களில் மட்டும் ஏன் பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகள் தீவிரமாகச் செயல்படுகின்றன என்பதையும், பிற சமூகங்களிலும் பிறகாலங்களிலும் அவை அவ்வாறு ஏன் செயல் படுவதில்லை என்பதையும் அறிவதே பொருளாதாரத்தின் முக்கியப் பணியாகவுள்ளது" என்று லூயிஸ் கூறுகிருர். இதற்கான காரணங்களை அறிய முற்படும்போது எத்தகைய நிறுவனங்கள் வளர்ச்சிக்குச் சாதகமாக இருக்கின்றன என்றும், ஏவை மக்களுடைய முயற்சிக்கும் புதுமைக்கும், முதலீட்டிற்கும் தடையாக இருக்கின்றன என்றும் அறியவேண்டும்...........இதன்பின்னர்...... ......ஓரளவு.........நம்பிக்கை மதிப்பீடு முதலியவற்றில் ஈடுபடவேண்டும்... ... ..." (1955. ப. 11) இத்தகைய பிரச்சினைகள் பொருளாதார வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றுள்ளதைப்போலவே குறிப்பிட்ட மக்களின் குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்திலும் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

அப்போது பொருளாதார நிறுவனங்களும், நிகழ்ச்சிகளும் தனித்தன்மை (Sui generis) வாய்ந்தவை என்று பொருளாதார அறிஞர்கள் ஒருபோதும் வலியுறுத்தமாட்டார்கள். இவை பொருளாதார நியதிகளால் மட்டும் இயக்கப்படவில்லை. ஏனைய சமூக நிறுவனங்களுடன் நெருங்கியத் தொடர்புடைய காரணத்தால் அவற்றின் மாற்றங்களும் பொருளாதார நிகழ்ச்சிகளைப் பாதிக்கும். அவ்வாறே செயல் ஆர்வத்தைத் தூண்டும் மனப்பாங்குகளும் இவற்றைப் பாதிக்கும். இவ்வுண்மையைப்

தோன்றும் சமூக அமைப்பு முதலியன அக்காலத்தின் அறிவுசார்ந்த அரசியல் வரலாற்றை விளக்க வல்லதாக அமையும்." போபர் (Bober, 1950). மார்க்ஸின் கருத்துக்களையும், அதன் விமர்சனத்தையும் தெளிவாகப் புரிந்து கொள்ள மாணவர்கள் இதைப் பார்க்கவும்.

நடுநிலைமைக் கோட்பாடுடைய அறிஞர்கள் 'பொருளாதாரத்திற்கும்' ஏனைய கலாசாரத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு என்றும், இவை ஒன்றுக்கொன்று காரண காரியமாக உள்ளன என்றும், 'போயஸ்'ஸை (Boas)ப் போலக் கூறுவார், முன் கூறியபடி 1958. p. 256.

[3] லூயிஸ் (1955. P. 11) கூறும் மூன்று 'ஆதாரக் காரணங்கள்': சிக்கன முயற்சி, அறிவைப் பெறுதலும், பயன்படுத்தலும், தன் மூலதனத்தையும், இதர சாதனங்களையும் அதிகரித்தல் முதலியன.

பொருளாதாரம் நெடுங்காலமாக உணர்ந்துள்ளது. ஒன்றையொன்று சார்ந்துள்ள முறைமையின் அடிப்படையில்தான் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியின் உண்மைத்தன்மையை உணரமுடியும் எனவே ஒரு குறிப்பிட்ட செய்தியை விளக்குவதற்கு அத்துடன் நெருங்கியத் தொடர்புடைய ஏனையவற்றின் மாற்றங்களையும் அறிவது அவசியம்! [பார்சன்ஸ் 1952. P. 28, Parsons et al] அதைப்போலவே சமூக வாழ்க்கையின் முழு உண்மையை அறிய முற்படும் மானிடவியல் அறிஞர்களும் (anthropologists), சமூக இயல் அறிஞர்களும் (sociologists) பொருளாதாரக் கூறுகளை அறிய வேண்டியது அவசியம். இக்காரணம்பற்றியே "மானிடவியல் அறிஞர்கள் பொருளாதாரச் செயல்களின் அமைப்பு முறைகளின் நாட்டம் கொண்டுள்ளனர். பெரும்பாலான சமூகத் தொடர்புகள் பொருட்கெழுவையும், பொருள்மதிப்பையும் ஆதாரமாகக் கொண்டுள்ளன." (ஃபர்த், 1951. பக். 122 Firth)

2. இக்கட்டுரையின் நோக்கம் :

இந்தியச் சமூக அமைப்பை நாம் உற்றுநோக்குவோமாஞல் அதன் சமூகக்குழுக்கள் கீழ்க்கண்டவாறு இருப்பதைக்காணலாம். பழங்குடிச் சமூக அமைப்பில் குடும்பம், குலம் (Clan), பழங்குடி (Tribe) என்ற குழுக்களும்; கிராமச் சமூக அமைப்பில் குடும்பம், சாதி, கிராமச் சமுதாயம் என்ற குழுக்களும்; நகரச் சமூக அமைப்பில் குடும்பம், சாதி, மற்றும் அலுவல்களிலும் செய்தொழில்களிலும், அரசியலிலும் ஈடுபட்டுள்ள பல்வேறு குழுக்கள் முதலானவையும் நிலவுகின்றன.[4]

இந்தியக் கிராமச் சமுதாயத்தைப்பற்றித் தனியே ஓர் அத்தியாயம் இத்தொகுப்பில் உள்ளது. எனவே இங்கு இந்து மக்களிடையே நிலவும் ஏகக்குடும்பம், சாதி ஆகிய முக்கியக் குழுக்களை எடுத்துக்கொள்வோம். அவற்றை விளக்குவதுடன் அண்மையில் அவற்றில் ஏற்பட்ட மாற்றங்களையும், அவற்றிற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உள்ள தொடர்புகளை எடுத்துக் காட்டவும் முயற்சி செய்வோம்.

4 இத்தகைய சமூகங்கள் தம்முள் தனித்து நிற்பதாகக் கருதுவது தவறு இவைகளுக்கிடையே நெருங்கிய தொடர்புண்டு. பல பழங்குடிகள் சாதிகளாக மாறி மாறி வருவதை நெடுங்காலத்திற்கு முன்னமேயே ரிஸ்லே (1908) சுட்டிக்காட்டியிருக்கிருர். அண்மையில் (1957-60) பழங்குடி இனத்திற்கும், சாதிச்சூழலில் அமைந்துள்ள கிராமச் சமூகத்திற்கும் இடையே உள்ளத் தொடர்புகளை பெய்லி எடுத்துக்காட்டியிருக்கிருர். தற்காலத்திய நவீன நிருவாக, பொருளாதார, அரசியல் முறைகள் இவை இரண்டையும் இணைத்து வருகின்றன.

நகரச் சமூகக்குழு என்று குறிப்பிடத்தகுந்தக் குழுவாகவுள்ள 'வர்த்தக வகுப்பினரை'க் குறிப்பிடலாம் (காண்க : காட்கில், 1959)

3. இந்து ஏகக்குடும்பம் : விளக்கமும் சிறப்பியல்புகளும்.

ஏகக்குடும்பமும், சா தி யு ம் பொதுவாக, இந்து சமூக வாழ்க்கையின் அடிப்படை என்று விவரிக்கப்படுகின்றன. இந்து அல்லாத பிற சமுதாயத்தினரின் சமூக வாழ்க்கைக்கும் அவை ஓரளவு அடிப்படையாக விளங்குகின்றன.[5] நூலறிவு மட்டும் உடையவர்களின் கவனத்தை மட்டுமன்றிச் சமூக பணிக்கள ஊழியர்களின் கவனத்தையும் சாதி கவர்ந்துள்ளது. குறிப்பிடத் தக்க அளவில் சாதியைப்பற்றி, பலநூல்கள் எழுந்துள்ளன.[6] ஆனல் ஏகக்குடும்பம் சாதியைப்போன்று பிறருடையக் கவனத்தைக் குறிப்பாகச் சமூகப் பணிக்கள ஊழியர்களின் கவனத்தை அவ்வளவாகக் கவரவில்லை.[7] ஏகக்குடும்பம் சாதியில் அல்லது கிளைச்சாதியில் உள்ளடங்கியிருப்பது இதற்கு ஓரளவு காரணமாக

5 ''ஏகக் குடும்பம் பொதுவாக இந்துக்களின் தனிப்பட்டச் சிறப்புச் சின்னமாகக் கருதப்படுகின்றது. உண்மையில், இது இந்தியா முழுவதிலும் உள்ள எல்லாச் சமூகத்தினரிடத்திலும், இந்துக்களிடத்திலும் இந்துக்களைத் தவிர்த்துள்ள ஏனையவர்களிடத்திலும் காணக்கூடியதாக உள்ளது.'' (கபடியா. 1958 பக். 233) கபடியா தன்னுடையப் புத்தகத்தில் ஓர் அத்தியாயத்தில் இந்துக்களைத் தவிர்த்து உள்ள பிற சமுதாயத்தினரிடையே காணப்படும் ஏகக் குடும்பங்கள் பற்றிக் கூறுகிறார். மற்றும் இந்துக்களிடையே நம்பூதிரிகள், நாயர்கள் ஆகியோரிடத்தில் காணப்படும் சிறப்பான ஏகக்குடும்பங்களைப் பற்றியும் விளக்குகிறார்.

'' 'சாதிமுறை ஓர் இந்துக் கோட்பாடு என்றும், இந்துமத அமைப்பு முறையின் அடிப்படையாகச் சாதிமுறை அமைந்துள்ளது' என்றும் கருதப்படுகிறது. (சீனிவாஸ், 1952, பக். 212) இந்தியாவில் உள்ள இந்துக்களைத் தவிர்த்துள்ள ஏனைய சமுதாயத்தினர், இந்தியாவைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும் சரி, அல்லது வெளிநாட்டிலிருந்து வந்தவர்களாக இருந்தபோதிலும் சரி, தங்களுடைய சமூக அமைப்பைச் சாதி அடிப்படையில் அமைத்திருக்கிறார்கள் (அன்சாரி, 1960. பக். 1.)

6 சாதி அமைப்பைப்பற்றி அறியவேண்டிய ஆதார நூல்கள் : பெய்லி (Bailey-1957-1960), ப்ளண்ட் (Blunt-1931), குர்யே (Ghurye-1957), ஹட்டன் (Hutton-1946), லீச் (Leach-1960), மேயர் (Mayer-1960) முதலியன. ப்ளண்ட், குர்யே, ஹட்டன் ஆகிய மூவரும் (சாதியைப் பற்றி) பொதுவான விளக்கங்களையும், பெய்லி மேயர் ஆகிய இருவரும் கள ஆய்வு அடிப்படையில் ஓரினப் பொருள் பற்றிய (monograph)க் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்கள். தென்னிந்தியா, இலங்கை, வடமேற்கு பாகிஸ்தான் ஆகிய இடங்களில் கள ஆய்வுகள் நடத்திய மானிடவியலார்கள் எழுதிய கட்டுரைகளை லீச் தொகுத்து வெளியிட்டு இருக்கிறார். இக்கட்டுரைகள் சிந்தனையைத் தூண்டும் வகையில் உள்ளன.

7 குடும்பம் பற்றிய சில ஆதார நூல்கள் : கபடியா (Kapadia) 1958, கார்வே 1953 (Karve), சீனிவாஸ் 1952 (Shrinivas) முதலியன. கபடியா, கார்வே ஆகியோரது நூல்கள் பொதுவான விளக்கம் தரக்கூடிய வகையில் அமைந்துள்ளன. கார்வே இந்தியாவில் நிலவிவரும் உறவுமுறைப்பற்றி பொதுவான ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியிருக்கிறார். இந்திய சமுதாயத்தில் ஏகக்குடும்பம் எவ்வாறு செயல்படுகிறதென்பதை மிகச் சிறப்பாக இதுவரையில் யாரும் விவரிக்காத வகையில் சீனிவாஸ் எழுதியிருக்கிறார். மேயர் தமது நூலில் 'மால்வா'வில் நிலவும் சாதியமைப்பை விளக்கிக் கூறும்போது இந்தியாவில் நிலவும் உறவுமுறை (குடும்பம் உள்பட) பற்றியும் விரிவாகக் கூறுகிறார்.

இருக்கலாம்.[8] ஆனால், "ஏகக்குடும்பம்" என்றசொல் எதைக் குறிப்பிடுகிறது என்று தெளிவில்லாமலும், ஒரே மாதிரியாக இல்லாமல் பற்பல விதங்களிலும் எடுத்தாளப்படுகிறது.

அது குடும்பக் குழுவின் விரிவான ஒருவகையைக் குறிக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். சில ஆசிரியர் கள் [2-ம் கானே, 1946, பக். 590] ஒரு பொதுவான ஆண் மூதாதையின் வழிவந்த எல்லா ஆண்களும், அவர்தம் மனைவி மார்களும், திருமணமாகாத பெண்களும் அடங்கிய ஒரு குடும்பமே "ஏகக்குடும்பம்" என்று கருதுகின்றனர். மற்றும் சிலர் [2-ம் மெய்ன் 1953. பக். 323] குடும்ப மூதாதைக்குப்பின்னால் ஒவ் வொரு தலைமுறையிலும் குடும்பத்தில் ஒற்றுமை குறைந்து வருமே யன்றி வளராது என்று கருதுகின்றனர். எனவே எந்த அள விற்கு ஏகக்குடும்பம் விரிவடைந்து இருக்கவேண்டும் என்று தெளிவாக்கப்படவில்லை.[9] மாண்டல்பாம் [1949. பக். 93-94] நான்கு தலைமுறைகளை ஒரு வரம்பாகக் கொள்ளலாம் என்கிறார்.

ஏகக்குடும்பத்தில் உள்ளவர்களிடையே நிலவும் உறவு எந்த அடிப்படையில் அமைந்தது என்று தெளிவாக வரையறுத்துச் சொல்வதற்கில்லை. தேசாயும், மாண்டலபாமும் ஒரே மூதாதை யிலிருந்து தொடரும் வம்சாவளிமுறையே ஏகக் குடும்பத்திற்குச் சிறந்த அடிப்படை என்று கருதுகிறார்கள். சில ஏகக் குடும்பங் களில் ஒரே மூதாதையின் வம்சாவளியினர் என்ற முறையில் —உணர்வில்—உறவு நிலை அமைந்துள்ளது. சில ஏகக் குடும்பங் களில் அண்ணன் தம்பி என்ற சகோதர உணர்வின் அடிப்படை யில் உறவுநிலை அமைந்துள்ளது. இவற்றைப்பற்றிப் பின்னர் விரிவாகக் காண்போம்.

ஆனால், ஏகக் குடும்பம் என்பது சொத்துரிமையுடைய ஒரு குழு என்பதை எல்லா ஆசிரியர்களும் ஒப்புக்கொண்டுள் ளார்கள். ஆனால், ஏகக்குடும்பம் சொத்துரிமை முழுவதையும் தனக்கே உரியதாக கொண்ட குழுவா [அஃதாவது, தனி ஒருவருக்குப் பங்கோ, உரிமையோ, இல்லாதவாறு சொத்து அனைத்தும் குடும்பம் என்ற குழுவின் முழுப்பொறுப்பில் அமை

8 தேற்ற ரீதியில் சாதியமைப்பும், ஏகக்குடும்ப முறையும் வெவ்வேறாக இருந்த போதிலும், நடைமுறையில் இரண்டும் ஒரு பொதுவான நிறுவனம் என்று கூறும்படி பின்னிப் பிணைந்துள்ளன.

9 "ஒரு கருக்குடும்பத்தினின்றும் (nuclear Family) தோன்றியவர்கள் மூன்று அல்லது நான்கு தலைமுறைகளாக ஒரே குடும்ப அமைப்பாக வசிப்பார்களேயானால், அவர்களை ஏகக்குடும்பம் என அழைக்கலாம்." என்று ஐ. பி. தேசாய் கருதுகிறார். (1957-பக். 148) கபடியாவும் தேசாயின் இக்கூற்றை ஏற்றுக்கொண்டுள்ளார் (பார்க்கவும், கபடியா, 1958, Passim.)

யப் பெற்றுள்ளது [allodial group] அல்லது கூட்டு நிறுவனமா (Corporation)—அஃதாவது பலருடைய பங்கு சொத்துக்களை யும் ஒரே நிருவாகத்தின் கீழ் நிருவகிக்கும் குழுவா என்பது தெளிவாகவில்லை. தேசாய் (பக். 148) "ஏகக்குடும்ப உறுப்பினர் கள், சொத்து, வருவாய், பரஸ்பர உரிமைகள், கடப்பாடுகள் என்றவகையில் ஒருவருக்கொருவர் ஒன்றுபட்டுள்ளனர்" என்று கூறுகிறார். கார்வே (பக். 10) முகர்ஜி (1922. பக். 22) மெய்ன் (பக். 323) மாண்டல்பாம் (பக். 94) முதலியோரும், மற்றும் பலரும் இன்னும் ஒருபடி மேலே சென்று, ஏகக்குடும்பத்தில் சொத்து பொதுவாக அமைந்து நிருவகிக்கப்படுகிறது என்றும், ஏகக்குடும்ப்ம் சொத்துரிமையில் இணையான உரிமை உடைய பங்காளிகளைக்கொண்டது (Coparcenary) என்றும் கருதுகிறார்க்ள். ஆனால், கானே [பக். 91] இக்கருத்தை வெளிப்படையாக மறுத் துள்ளார். இந்துப்பங்காளிகள் குடும்பம் ஏகக் குடும்பத்தைவிடச் சிறியதென்று கூறுகிறார். ஏகக் குடும்பத்தில் பங்காளிகளின் மனைவியரும், அவர்தம் திருமணமாகாத பெண்களும் உள்ளனர். ஆனால் பங்காளிகள் குடும்பத்தில் இப்படிக் கிடையாது. இத்த கைய முக்கிய வேறுபாட்டைப்புறக்கணிப்பது குழப்பத்தை உண்டுபண்ணும்.

கிடைக்கக்கூடிய ஆதாரங்களிலிருந்து பிரிட்டிஷார் காலத்தில் ஏகக் குடும்பமானது ஒரு தந்தையின் வழியில் பல தலைமுறை களாக வரும் ஆண்களும், அவர்தம் மனைவியரும், திருமண மாகாத பெண்கள், சகோதரிகள் முதலியோர்களைக் கொண்ட குழுவாக விளங்கியது என்று தெரிகிறது. மேலும் ஏகக்குடும் பம் ஒரே கூரையின் கீழ்ப்பொதுவான குடும்ப அமைப்பாகவோ பலகுடும்ப அமைப்புக்களும் சேர்ந்த முறையிலோ இருக்கலாம். குலதெய்வ வழிபாடு பொதுவாக அமைந்திருந்தது சமையற் கட்டு அனைவருக்கும் பொதுவான முறையில் புழங்கப்பட்டது. சேர்ந்து உண்பதுடன், பொருள் உற்பத்தியிலும், நுகர்விலும் ஏகக் குடும்ப உறுப்பினர்கள் கூட்டாகவே பணியாற்றினர். அனைவருடைய தேவைகளையும் கருத்தில்கொண்டு, ஒவ்வொரு வரின் தேவையையும் எப்படி, எந்த அளவில் நிறைவேற்றுவது என்று கூட்டாகவே சேர்ந்து முடிவுசெய்தனர். ஆனால் பங்காளி கள் குடும்பத்தில் பெண்கள், முக்கியமாக மனைவியர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படவில்லை. ஆண்களுடைய உடைமை களிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானமே குடும்பவருவாயாக அமைந்திருந்தது. யாராவது தனிப்பட்டமுறையில் பொருளீட்டி னாலும் சரி, அது குடும்பத்தின் 'கர்த்தா'விடம்—தலைவர் அல்லது நிருவாகி—ஒப்படைக்கப்பட்டது. இத்தகைய தனிப்பட்ட

வருவாய் ஏகக் குடும்பத்திற்குச் சம்பந்தப்படாத வகையில் தனி முயற்சியில் ஈட்டியதாக இருந்தபோதிலும்சரி, இதனை ஈட்டியவரே சட்டப்படி வைத்துக்கொள்ள உரிமைபெற்று இருந்தபோதிலும்சரி, நடைமுறையில் தனி ஒருவரின் வருவாய் என்று தனியாகப்பிரிப்பதில்லை. உதாரணமாகத் தமது கல்வி அறிவைக்கொண்டு யாராவது பொருளீட்டினால் [கல்வி கற்றதன் மூலம் கிடைக்கும் வருமானம்] அதைத் தனி ஒருவரின் வருவாய் என்று பிரிப்பதோ, குடும்பவருவாய் என்று பொதுப் படக் கூறுவதோ இயலாது. சுருங்கக்கூறின் தனிப்பட்ட முறை யில் பொருளீட்டும் முயற்சி ஏகக் குடும்பத்தில் இல்லை என்றே சொல்லலாம். பொருள் ஈட்டுவோரின் உரிமைகள் பங்காளிக் குழுவிற்கு உட்பட்டதாக் இருந்தன.

பங்காளிகள் சேர்ந்து வாழும் ஏகக் குடும்பத்தில் வயதில் மூத்தவரே 'கர்த்தா'வாக (தலைவராக அல்லது நிருவாகியாக) இருப்பார். குடும்பத்தின் உறுப்பினர்களுக்குள்ள பொறுப்புக்களை நிர்ணயிப்பது கர்த்தாவின் உரிமையும், கடமையும் ஆகும் முக்கியத் தீர்மானங்களைச் செய்வதற்குத் தலைவர் பிறரைக் கலந்தா லோசிப்பதுண்டு. ஆனால் குடும்பம் முழுவதற்கும் அதன் சார் பாக இறுதிமுடிவு எடுக்கக்கூடிய அதிகாரம் அவருக்குண்டு.

எந்த அளவிற்குக் கர்த்தா சுயேச்சையாகத் தீர்மானங்கள் செய்யமுடியும் என்பது குடும்ப அமைப்பையும், அதில் அவருக் குள்ள நிலைமைவயயும் பொறுத்தது. அண்ணனுக்கோ. சித்தப்பா விற்கோ உள்ள நிலையைக் காட்டிலும், தந்தைக்கோ, பாட்ட னுக்கோ உள்ளநிலை உயர்ந்ததாகும். தந்தையோ, பாட்டனே தங்களுடைய வயதுவந்த பிள்ளைகள், பேரன்களுடைய விருப் பங்களைப் பொருட்படுத்தாமல் அவர்கள் சம்பந்தமாக ஏதாவது முடிவுசெய்தால் பிள்ளைகளுக்கும் பேரன்களுக்கும் அம்முடிவுகள் மனத்தாங்கலை அளித்தபோதிலும், அவற்றிற்குக் கட்டுப்பட வேண்டும் என்ற கடமை உணர்வாலும், பெரியவர்களின் வார்த்தைகளைத்தட்டக்கூடாது. என்ற மரியாதை உணர்வாலும் உந்தப்பட்டு அவற்றிற்குக் கட்டுப்படுவர். ஆயினும் எப்போதா வது பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கும் இடையே பாகப்பிரி வினை ஏற்படுவதுண்டு. ஆனால் இணையுறவுக்குடும்பங்களில் (ஒரே மூதாதையைச்சேர்ந்த மக்களைக்கொண்டக் குடும்பம்) பாச வுணர்ச்சி நலிவுற்றுவருகிறது. 'கர்த்தா'வாக உள்ள அண்ணனே, நம்பிக்கையாகச் செயலாற்ற முடியாது. அப்படிச் செய்தால் பங்காளிகள் பாகப் பிரிவினைக்கோருவது உறுதி. தவிர்க்கமுடியாத

நிலையில் உடனடியாகவோ, காலங்கடந்தோ, பிரிவினை ஏற்பட்டு விடுகிறது.

ஏகக் குடும்பம் மூன்றுவகையான அமைப்புக்களைக்கொண்டது. அவை யாவன; (1) வம்சாவளிமூலம் விரிவடைந்த குடும்பம் (Lineally extended Family); (2) வம்சாவளிமூலமும், இணையுறவின்மூலமும் விரிவடைந்த குடும்பங்கள். (Lineally—Collaterally extended Family); (3) இணையுறவின்மூலம் விரிவடைந்த குடும்பங்கள். (Collaterally extended Family). முதலாவது வகை ஏகக் குடும்பத்தில் குறைந்தது ஒருதலைமுறைக்காவது பிரிவினை ஏதும் நேராமல், உறவுத்தளைத் தளராமல் குடும்ப அமைப்புக் கட்டொடு இருக்கும். இம்மூன்றுவகைகளுக்கும் உள்ள அமைப்பு வேறுபாடுகளைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம்.

வம்சாவளி மூலம் விரிவடைந்த குடும்பங்கள்

தலைமுறை	I	பாட்டனர் (குடும்பத்தலைவர்)
,,	II	மகனும், மருமகனும்,
,,	III	பேரன், பேத்திகள்

வம்சாவளி மூலமும், இணையுறவின் மூலமும் விரிவடைந்த குடும்பங்கள்

தலைமுறை-I	பாட்டனர்	(குடும்பத்தலைவர்)
தலைமுறை-II	மூத்தமகனும்	இளையமகனும்
	மூத்தமருமகனும்	இளையமருமகனும்
தலைமுறை-III	பேரன்,பேத்திகள்	பேரன், பேத்திகள்

இணையுறவின் மூலம் விரிவடைந்த குடும்பம்

தலைமுறை-I	பெரிய அண்ணன்	சின்னஅண்ணன் களும்	இளைய தம்பியும்
	பெரிய அண்ணி	சின்னஅண்ணிகளும்	அவன் மனைவியும்
தலைமுறை-II	குழந்தைகள்	குழந்தைகள்	குழந்தைகள்

மேலே விளக்கப்பட்ட மூவகைக் குடும்பங்களில் முதல்வகையில் இரண்டாவது தலைமுறையில் குடும்பத்தலைவரின் ஒரேமகன் ஏகவாரிசாகவும் இருப்பதால் பிரிவினை ஏற்படுவதற்கில்லை. ஆனால் மற்ற இருவகைக் குடும்பங்களிலும் இரண்டாவது தலைமுறை முறையில் ஒன்றுக்கும் மேற்பட்ட மக்கள் இருப்பதால் பிரிவினைக்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகக் கூறலாம்.

அதாவது இந்து ஏகக்குடும்பம் ஒரே குடும்ப அமைப்பாக இருப்பதோடன்றி ஓர் உறவுக்குழுவாகவும் இருக்கின்றது. இது வரை கூறியவை ஏகக் குடும்பத்தைத் தெளிவாக விளக்கக் கூடியன. ஆனால், பொருளாதார மாணவர்களோ ஏகக் குடும் பத்தின் பொருளாதார அம்சங்களைக் கவனிப்பதில் அதிக நாட்டங்கொண்டு இருப்பார்கள். நெடுங்காலமாக இந்து ஏகக் குடும்பம் ஒரு பொருளாதார அலகாக விளங்கிவருகிறது. இன்றும் கிராமப்புறங்களில் அது பொருளாதார அலகாகவே இயங்கிவருகிறது. மேலும் உற்பத்தி, நுகர்வு அலகாகவும் இயங்கி வருகிறது. குடும்பத்தலைவர் ('கர்த்தா') யார்யார்க்கு என்ன என்ன வேலைகள் அளிப்பது என்பதை நிர்ணயிப்பார். இவ் வுரிமை மரபாக வரக்கூடியதாகும். வேலையைப் பகிர்ந்து அளிக் கும்போது அவருடைய வயது, தலைமுறை, வம்சாவளி உறவில் தமக்கும் (தலைவருக்கும்) அவருக்கும் உள்ளபிணைப்பு, பால் (Sex), திறன் முதலியவைகளும் கருத்தில் கொள்ளப்படும். பெரும்பாலும் திறன் அதிகமாக வலியுறுத்தப்படுவதில்லை. சாதாரணமாக ஆக்கச்செயல்களில் பெண்களுக்குப் பங்குதருவதில்லை பெருமபாலும் வீட்டுவேலைகளே அவர்களுக்குத்தரப்படும். வயது வந்த ஆண்கள் மட்டுமே ஆக்கச்செயல்களில் ஈடுபடுவார்கள். குழந்தைகள் பெரியவர்களுக்குத் துணையாக இருப்பார்கள். சிறு வர்கள் ஆண்களுக்குத் துணையாகவும், சிறுமிகள் பெண்களுக் குதவியாகவும் இருப்பார்கள். குடும்பத்தின் பொறுப்பில் உள்ள பொருள்கள், பணம், ஆகியவற்றின் அளவைப்பொறுத்து நுகர் பொருள்கள் (உணவு, உறைவிடம், ரொக்கப்பணம் முதலியன) பகிர்ந்து அளிக்கப்படும். எல்லா உறுப்பினர்களின் தேவைகளை யும் கருத்தில்கொண்டே அவரவருடைய தேவைகள் கவனிக்கப் படும். பெண்களுக்கு முன்னதாகவே ஆண்களுக்கு உணவு பரி மாறப்படும். வயதுமுதிர்ந்த பெரியவர்களுக்குக் குழந்தைகளைக் காட்டிலும் அதிக அக்கறை காட்டப்படும். குறிப்பாகக் குடும்பத் தில் குறைந்த அளவேஉள்ள ஆடம்பரப்பொருள்களை அனுபவிப் பதில் பெரியவர்களுக்கே சலுகைகள் உண்டு. குடும்ப கௌர வத்தை வெளிக்காட்டும் வகையில் மூலதனத்தை நிலமாகவும், கால்நடையாகவும், நகையாகவும், சேமித்துவைப்பார்கள். சேர்த்து வைத்த மூலதனத்தைத் திருமணம், மரணம், வழக்காடுதல் முதலிய இனங்களுக்காகச் செலவிடுவார்கள். 'கர்த்தா'வே குடும் பத்தின் பகிர்வு, நுகர்வு, செலவு முதலியவற்றைத் தீர்மானிப் பார். அப்படிச்செய்யும் முன்பு, குடும்பத்திலுள்ள வயதுக்கு வந்த ஆண்களையும், தம்முடைய மனைவியையும் கலந்தாலோ சிப்பது வழக்கம். குடும்பத்திலுள்ள பெண்கள் தங்கள் கருத் துக்களை கணவன்மார்கள் மூலமாக வெளியிடுவார்கள். வெளியே

தெரியாவிடினும், அவர்களுடைய செல்வாக்கு குடும்பத்தில் ஓங்கியிருக்கும். குடும்ப அமைப்பில் அவருக்குள்ள நிலையைப் பொறுத்து கர்த்தா 'தன்னிச்சையாகத் தீர்மானங்கள் மேற்கொள்ளும்' நிலை அமையும். பொதுவாகத் தலைவருடைய சொல்லை மீறக்கூடியப்போக்கு, ஏகக்குடும்ப அமைப்பைப்போலவே மரபாக வந்துள்ளதென்று கூறலாம். எவ்வாருயினும் கடந்த நூற்ருண்டுகளாகப் பல புதிய காரணிகள்தோன்றி ஏகக்குடும்ப அமைப்பின் ஒற்றுமையைக் குலைத்து வருகின்றன.

4. அண்மையில் ஏகக்குடும்பத்தில் தோன்றிய மாற்றங்கள்

பிரிட்டிஷார் தங்களுடைய ஆட்சிக்காலத்தில், இயன்றவரை இந்தியர்களுடைய சாதி, மதப் பழக்கவழக்கங்களில் தலையிடுவதில்லை என்ற கொள்கையைப் பின்பற்றிவந்தனர். இருந்தபோதிலும் நடைமுறையில் அவர்களது செயல்களும், தீர்மானங்களும் இந்தியர்களின் சமூக வாழ்க்கையைப் பாதிக்கக்கூடியனவாக இருந்தன. இந்துமத நியதிகள் அடிக்கடி மாற்றப்பட்டும், திருத்தப்பட்டும் வந்தன. அவற்றிற்கு முற்றுப்புள்ளிவைக்கும் வகையில் இந்துமத நியதிகளைச் சீர்திருத்தி கோவையாகத் தொகுத்தனர். (காண்க: கபடியா, அத்தியாயங்கள் 10, 12) பதினென்ரும், பன்னிரண்டாம் நூற்ருண்டைச்சேர்ந்த 'மிதாக்ஷரா' "தயாபாகா" விளக்கவுரைகளை (Commentaries) அடிப்படையாக அமைத்துக்கொண்டு இந்துமத நியதிகளைச் சீர்திருத்தி அமைத்தனர். "தயாபாகா" நியதிகள் வங்காளத்திலும், 'மிதாக்ஷரா' நியதிகள் இந்தியாவின் இதர பகுதிகளிலும் அமுல் செய்யப்பட்டன. இந்த விளக்கவுரைக்ள் எழுதப்பட்டு இன்றைக்கு சுமார் 800 'ஆண்டுகள் ஆகின்றன. இந்நெடுங்காலத்தில் பல முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமான இரண்டைக் கபடியா (பக். 248) வலியுறுத்திக் கூறுகிருர். தந்தை வழிப்பட்ட உறவை மட்டுமன்றி, தாய்வழிப்பட்ட உறவையும் ஒருங்கே அங்கீகரித்துள்ள நிலைமையையும் (recognition of bilateral kinship), தனித்துவப்போக்கையும் சிறப்பாகக் குறிப்பிடுகிருர். குடும்பத்தில் உள்ள ஒருவருடைய நிலை பல வகைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளது. இருந்தபோதிலும் ஏகக் குடும்பப்பிணைப்பைத் துண்டித்துச்செல்லும் அளவிற்குத் தனித்துவப்போக்கு ஓங்கவில்லை. கபடியா மேலும் எழுதுகிருர். "இந்துக்களின் குடும்ப வரலாறு ஒரு சிறப்பான உண்மையைத் தெளிவுபடுத்துகிறது. தனித்துவப்போக்கு அங்கீ

கரிக்கப்பட்டபோதிலும், அதனுல் ஏகக் குடும்ப நலன் சிதைவுருதபடி இணைப்பு முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனுல் குடும்ப அமைப்பு ஏகக் குடும்பமாக, ஒன்றுபட்ட சகோதரக் குடும்பமாகக் கூறப்பட்டதற்கு ஏற்ப அவ்வாறே இயங்கியும் வந்தது." [பக். 232] காலத்திற்கு ஏற்றவண்ணம் இந்துமத நியதிகளைத் திருத்தி அமைப்பது நின்றுவிட்டபோதிலும், இந்துக்களின் சமூகவாழ்க்கை மாறிக்கொண்டே வந்துள்ளது. இதனுல் நியதிகள் (சட்டங்கள்) ஏகக்குடும்பங்களின் செயல்முறைக்ளுக்கு மாருனதாக அமைந்திருந்தன. காலப்போக்கில் தனித்துவ மனப்போக்கு வளரலாயிற்று. இதற்குதவியாக அமைந்த காரணிகளாவன: நிலப்பற்ருக்குறை, சொத்துரிமை மாற்றம், நகரங்கள், பட்டணங்கள் இவற்றின் செல்வாக்கான வளர்ச்சி, நகரங்களில் குடியேறும் கிராமமக்கள், கிராமங்களில் பரவிய கல்வியறிவு, புதியவேலை வாய்ப்பு வசதிகள், இந்து குடும்ப நியதிகள் தெளிவாக்கப்பட்டமை முதலியன.

இந்து குடும்ப நியதிகளைத் தெளிவுபடுத்தப்பட்டதைச் சற்று ஆராய்வோம். இந்தியர்களின் சமூக, சமயவாழ்க்கையில் தலையிடுவதில்லை என்று பிரிட்டிஷார் அறிவித்தனர் என்பதை மேலே கண்டோம். ஒரு கொள்கையைக் கூறுவது எளிது. ஆனுல் அதை உண்மையாகச் செயல்படுத்துவது அவ்வளவு எளிதன்று. இதைக் குறிப்பிடும்போது முகர்ஜி கூறுகிருர் "நமது நீதிமன்றங்கள் தனிச்சொத்துரிமை, சொத்துரிமை மாற்றம் முதலியவற்றை ஒப்புக்கொண்டுள்ளன; அப்படியிருக்க சொத்து உரிமை மாற்றத்தை எதிர்க்கின்ற 'மிதாக்ஷரா' நியதியை அவற்ருல் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. வெளிப்படையாக 'மிதாக்ஷரா' நியதியை, அதன் வாசகங்களை மீருவிட்டாலும், பங்காளிக் குடும்பத்தில் ஏற்படும் பாகப்பிரிவினையையும், சொத்துரிமை மாற்றத்தையும் மறைமுகமாக ஆதரிப்பதன்மூலம், 'மிதாக்ஷரா' நியதியின் நோக்கத்தை நீதிமன்றங்கள் மீறியிருக்கின்றன." [பக். 24] [10] பிரிட்டிஷ் ஆட்சியினர் இந்து குடும்ப நியதிகளை நிர்வகித்த விதம் (காரணமாக) ஏகக் குடும்பங்களைப் பாதித்துள்ளன என்பதை நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளிலிருந்து அறியலாம். இந்து ஏகக் குடும்பத்தின் முக்கிய அம்சமாக ஒன்றைக் குறிப்பிடலாம். அதாவது பூர்வீக சொத்தில் உறுப்பினர்களுக்குத் தனிப்பட்ட முறையில் பாத்தியதை இல்லை.

10 ஏகக்குடும்பங்கள் நலிவுற்றுள்ளமைக்காக முகர்ஜி வருத்தப்படுவதைப்போல இக்கட்டுரை ஆசிரியர் வருத்தம் தெரிவிக்கத் தயாராக இல்லை. கபடியாவும், (பக். 250.51), மற்றும் பல எழுத்தாளர்களும், நீதிமன்றங்களால் ஏகக்குடும்பம் பாதிக்கப்படுகின்றது என்ற கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

பங்காளிகளின் சந்ததியார்களுக்கும் நேர்வழி வாரிசுகளுக்கும் பூர்வீக சொத்தில் உரிமையுண்டு. ஆனால் 'பிரிவிகவுன்ஸில்' (Privy Council) அளித்துள்ள தீர்ப்பு இந்நியதியை மாற்றி யமைக்க வல்லதாக உள்ளது. கைம்பெண் ஒருத்தி தன் கணவனின் பெயரால் சொத்துக்கு ஒரு வாரிசைத் தத்து எடுத்துக்கொள்ள லாம். அதற்குக் கணவனுடைய பங்காளிகளின் இசைவு தேவை யில்லை என்றும் மேற்படித் தீர்ப்பு கூறுகிறது. இது ஏகக் குடும்பத்தின் சொத்துரிமை நியதியைப் பாதித்தது (கபடியா பக். 250)

பொதுமக்களின் கருத்திற்கிணங்க ஏற்பட்ட சட்டங்கள் ஏகக்குடும்பத்தைப் பாதிக்கும் வகையில் இருந்தன. ஆனால், ஏகக் குடும்பத்தைப் பாதிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு அவை இயற்றப்படவில்லை. அவ்வாறுள்ள சட்டங்களில் இவற்றைக் கீழே குறிப்பிடலாம். (1) 1930,ல் இயற்றப்பட்ட 'கற்பதால் உள்ள பயன்கள் பற்றிய சட்டம்' (The gains of Learning Act of 1930); ஒருவர் ஏகக்குடும்பத்தின் செலவில் கல்வி பயின்ற போதிலும், அதன் பயனாகப்பெறும் வருவாய் அவருடைய உரிமைக்குட்பட்டது என்று இச்சட்டம் கூறுகிறது. (2) 1937-ல் இயற்றப்பட்ட 'இந்துப் பெண்களின் சொத்துரிமைச் சட்டத்தின் (The Hindu woman's Right to Property Act of 1937) படி கணவன் இறந்தபின்னர் குடும்பத்தின் பொதுச்சொத்தில் அவனுக்குள்ள உரிமையாவும் அவனுடைய மனைவிக்குப் போய்ச் சேரும். அவளுக்குக் குடும்பப் பொதுச் சொத்தில் பிரிவினை கோரும் உரிமை வழங்கப்பட்டபோதிலும், பங்காளிக்குச் சமமான உரிமை அளிக்கப்படவில்லை (3) 'இந்துத் திருமணச்சட்டம் 1954 (The Hindu Marriage Act of 1955) இந்து நியதிக்கும், மரபிற்கும் புறம்பானதொரு பழக்கத்தை, மணவிலக்குக் கோரும் உரிமையை, அனுமதித்தது. (4) 1956-ல் ஏற்பட்ட 'இந்து வாரி சுரிமைச் சட்டம்' (The Hindu Succession Act. of 1956) இதற்கு முன்னர் 1929-ல் ஏற்பட்ட 'இந்து சொத்துரிமைப்பேறு (திருத்தா) சட்டத்'தினும் ஒருபடி உயர்ந்தது. இச்சட்டத்தின் படி, உயில் எழுதாமல் இறந்துவிடும் ஒருவரின் சொத்து, அவருடைய மகன், மகள், (விதவையான) மனைவி, தாயார், இறந்துவிட்ட மகனுடைய (Predeceased son) பிள்ளைகள் (ஆணும், பெண்ணும்) இறந்துவிட்ட மகளுடைய பிள்ளைகள்—பேரன் பேத்திகள்—ஆகிய அனைவருக்கும் சொத்தில் பங்கு உண்டு. இவர்கள் ஒவ்வொருவருக்கும் சொத்தில் சமமான ஒரு பங்கு உண்டு. இந்தச்சட்டமும், இன்னும் பலவும், ['இந்து சிறுவர்கள், பொறுப்பாளர் சட்டமும்' The Hindu Minority

and Guardianship Act, இந்து தத்து, பராமரிப்புச் சட்டம், *1956*,—The Hindu Adoptions and Maintenance Act.' இந்து ஏகக்குடும்ப அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தின] இதன் விவரங்களைப் பின்னர் காணலாம்.

ஏகக்குடும்பத்தைப் பாதிக்கும் வகையில் பல பொருளாதரக் காரணிகள் இயங்கி வந்துள்ளன. சாகுபடி செய்யக்கூடிய நிலப்பரப்பு ஏறத்தாழ அதே அளவில் இருந்தபோதிலும், பத்தொன்பதாவது, இருபதாவது நூற்றாண்டுகளில் மக்கள் தொகை தொடர்ந்து பெருகிவந்துள்ளது. *1871*-ல் 255 மில்லியன் களாக இருந்த மக்கட்தொகை *1941*-ல் 400 மில்லியனுகப் பெருகியுள்ளது.[11] இவ்வாறு குறிப்பிடத்தக்க அளவிற்கு மக்கட் தொகைப் பெருகியதாலும், ஏகக்குடும்ப அமைப்பில் நெடுங் காலமாகவே பிரிவினைகள் ஏற்பட்டு வந்தமையாலும், நிலம் சிதறுண்டது, சிறிய நிலப்பரப்பு காரணமாகப் பொருளாதார அனுகூலங்கள் இல்லாமல் போயின. மக்கள் பொதுவாக ஏழ்மையில் 'உழன்று வந்தனர்'. வசதிகுறைவான குடியானவர் களுக்கு, திருமணம், மரணம், போன்ற தவிர்க்கமுடியாததும், அதிகப்படியானதுமான செலவுகள் ஏற்பட்டமையால், தங்களின் ஒரே உடைமையான நிலத்தை விற்கவேண்டியதாயிற்று. நிலத்தை விற்க மனம் இல்லாதவர்கள் லேவாதேவிக்காரர்களிடம் அதிக வட்டிக்கு நிலத்தை அடமானம் வைத்தனர். இதனுல் இறுதி யில் நிலத்தை இழக்கவேண்டியநிலை ஏற்பட்டது[12] இவ்வாருக நிலத்தையிழந்த குடியானவர்கள் தோன்றலாயினர். [ஏகக் குடும்பம் பொதுவான சொத்து அடிப்படையில் அமைந்துள்ள தால், சொத்துக்களை இழந்தவர்கள் தனித்தனியே பிரிந்து சென்றனர்'] இவர்கள் தனியே செல்வம் திரட்ட முயன்றனர். இவர்களால் உறவினர்களைக் காப்பாற்ற இயலவில்லை. முதல் நிலை உறவினர்களைமட்டுமே காப்பாற்றும் பொறுப்பை ஏற்றனர்.[13] அதிலும்கூட பல வேலைகளில் முக்கியமான சிலரையே அவர் கள் காப்பாற்றினர்.

நிலம் உடையவர்களிடையே மட்டும் தொடர்ந்து ஏகக் குடும்பம் நீடிக்கலாயிற்று. அண்மையில் சில மாநிலங்கள் கொண்டுவந்த சட்டங்களால் ஏகக்குடும்பத்தின் சொத்து அமைப்புக்

11 காண்க : டேவிஸ், 1951. பக். 25. (Davis).

12 குடியானவர்கள் தங்கள் நிலத்தை விற்பனைக்குக் கொண்டுவரும் பிரச்சினையைத் தெளிவாக பெய்லி (1957) (Bailey) விளக்குகிருர், சிறப்பாக (பக். 47-93).

13 முதல்நிலை உறவு என்பது பெற்ருேர்கள், மனைவி, மக்கள், சகோதரர்கள் முதலியோரைக் குறிக்கும்.

கள் மதிக்கப்பட்டன. காட்டாக. காஷ்மீரப் 'பண்டிட்'களை எடுத்துக்கொள்வோம்.[14] காஷ்மீரக் கிராமங்களில் பெரும்பாலான பண்டிட்கள் நிலக்கிழார்கள் ஆவர். அவர்களுடைய நிலத்தை முஸ்லீம்களே சாகுபடிசெய்தார்கள். நிலக்கிழார்கள் ('பண்டிட்'கள்) உடலுழைப்பைப் பெரிதும் வெறுத்தார்கள் (ஸ்பானியப்பெருமகனைப் போல — hidalgo). இந்நிலையில் 1950-54 ஆண்டுகளில் ஏற்பட்ட சட்டங்கள் ஒரு குடும்பத்திற்கு அதிக பட்சம் 23 ஏக்கர் நிலம்மட்டுமே சொந்தமாக இருக்கலாம் என்று நிர்ணயித்தது. எஞ்சியுள்ள நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இச் சூழலில் 'பண்டிட்'கள் இதரத்தொழில்களை நாடிச்செல்ல வேண்டியதாயிற்று. பெரும்பாலனவர்கள் வணிகத்திலும், மற்றும் உள்ளவர்கள் உடலுழைப்பிலும் ஈடுபட வேண்டியிருந்தது. (சொத்து அமைப்பு பாதிக்கப்பட்டதால் குடும்ப அமைப்பும் சிதறியது.)

ஏகக் குடும்பத்திற்குப் போதிய வருவாய் ஒரே இனத்திலிருந்து கிடைக்கும்வரை உறுப்பினர்கள் மனநிறைவு பெற்று இருக்கின்றனர். உறுப்பினர்களுள் சிலருக்கு நாளடைவில் தனிப்பட்ட சிலருக்குக் குறைந்த வருவாயும் கிடைக்கின்றது. இந்த ஏற்றத் தாழ்வு கருத்து வேறுபாட்டை வளர்க்கின்றமையால் ஏகக் குடும்பங்கள் பிளவுபடத் தொடங்குகின்றன.

ஏகக் குடும்பத்திற்கு நிலம், பழத் தோட்டம், வணிகம் (கடை, கண்ணி வைத்திருத்தல்) முதலியவற்றாலும், பால், பாலிலிருந்து கிடைக்கும் பொருள்கள், கான் பொருள்கள் முதலியவற்றை விற்பதாலும் வருவாய் கிடைக்கின்றது. இவ்வாறு பல இனங்களிலிருந்து பெறும் வருவாய் போதுமானதாக இல்லை. ஒவ்வோர் உறுப்பினரும் தனியாக முயன்று குடும்ப வருவாயை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இதற்கான வாய்ப்புக்கள் கிராமங்களைவிட நகரங்களில் அதிகம். கிராமங்களில் உள்ளத் தொழில்கள் மிகக் குறைவாக இருப்பதுடன் பெரும்பாலும் சாதி அடிப்படையில் (தொழில்) அமைந்து இருப்பதால் பொருளீட்டுவதற்கான வேலை வாய்ப்புக்கள் குறைவு. இவர்களைக் கிராமங்கள் பிடித்துத் தள்ளவும், நகரங்கள் விரும்பி ஏற்கவும் செய்கின்றன. கிராம மக்கள் நகரங்களிலும், பட்டணங்களிலும் குடிபுகலாயினர். கிராமங்களில் பெருகிவரும் கல்வியறிவு இதற்குத் துணையாக உள்ளது. கல்வி அறிவு பெற்றவர்கள் எளிதாக நகரங்களில் வேலை

14 இக்கட்டுரை ஆசிரியர் காஷ்மீரில் உள்ள கிராமங்களில் 'பண்டிட்களிடையே ஓராண்டு (1957-58) வசித்துக் களப்பணி (Field work) மேற்கொண்டுள்ளார். (காண்க: Madan 1959)

தேடிக் கொள்கின்றனர். இவ்வாறு புலம் பெயர்தல் (migration) காரணமாகப் பல அடிப்படை மாற்றங்கள் ஏற்படுகின்றன. தலை முறை தலைமுறையாக ஓர் இடத்தில் வாழ்ந்து, ஓர் இடத்தில் உணவு பொங்கி, ஒருங்கே உணவு அருந்தி ஏகக் குடும்பமாக வாழ்ந்தவர்கள், புலம் பெயர்தல் காரணமாக இப்பிணைப்புக்களினின்றும் தங்களை விடுவித்துக் கொள்கின்றனர். ஏகக் குடும்பத்தை வட இந்தியாவில் 'சூளா' (chulah) என்று அழைக்கின்றனர். ('சூளா' என்றால் அடுப்படி, சமையற்கட்டு என்று பொருள். தமிழ்நாட்டில் ஏகக் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப் பிரிவினையைக் குறிக்கும் வகையில் "தனி உலை" வைத்துக் கொண்டார்கள்' என்று கூறுவார்கள்.) ஏகக் குடும்பத்தில் பொதுவான அடுப்படியும், சமையற்கட்டும் இருக்கின்ற காரணத்திஞல் 'சூளா' என்ற பெயர் ஏற்பட்டு உள்ளது.

புலம் பெயர்ந்த பின்னரும் தங்கள் நலன் பாதிக்கப்படாத வரை புலம் பெயர்ந்தவர்கள் பிரிவினை கோருவதில்லை. உண்மையில் அவர்கள் வீட்டில் இல்லாமல் இருப்பது பிரிவினையைத் தள்ளிப் போடக்கூடும். ஆனால் ஒருவர் வருவாய் திரட்டுவதற்காக ஏகக் குடும்பத்தை விட்டு வெளிக் கிளம்பும் நிலையிலேயே அதன் பிளவிற்கான வித்து விதைக்கப்படுகின்றது.

நகரங்கள், பட்டணங்கள் ஆகியவற்றின் செல்வாக்கான வளர்ச்சி நாளடைவில் கிராமங்களைப் பாதிக்கின்றன. இதனால் கிராமங்களில் உள்ள வேலை வாய்ப்புக்களும் மாற்றம் அடைகின்றன. முதலாவதாகக் கிராமங்களில் நிலமற்ற சாகுபடியாளர்களின் தொகை உயர்ந்து வருகிறது. கிராமத்திலேயே வசதியுடைய சிலர் இவர்களுக்கு வேலை அளிக்கின்றனர்.[15] அரசாங்கம் மேற்கொண்ட பணிகளாலும் வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. முக்கியமாகச் சாலைகள் அமைத்தல். பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் முதலியன கட்டுதல், குழாய்க் கிணறுகள் இறக்குதல், அணைகள் கட்டுதல், சமுதாய நலத் திட்டத்தின் பிற்பட்ட இதரச் செயல்கள் முதலியன குறிப்பிடத் தக்கவை.

படித்தவர்கள் கிராமப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களாகப் பணியாற்றுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இவ்வாறே உள்ளூரிலேயே மருத்துவமனைகளிலும், கூட்டுறவுச் சங்கங்களிலும் மருத்துவ

[15] உத்தரப்பிரதேசத்தில் உள்ள ஜமீன்தார்கள் தங்கள் நிலத்தைச் சாகுபடி செய்வதற்காக நிலமற்றக் குடியானவர்களைக் கூலியாட்களாக அமர்த்திக்கொள்கின்றனர்கள். ஜமீன்தார்கள், லேவாதேவிக்காரர்கள், செல்வந்தர்கள் முதலியோர் தங்களுக்குச் சொந்தமாகக் கல் வீடுகள் (Pucca houses) கட்டுவதற்கும் இவர்களைக் கூலியாட்களாக வைத்துக்கொள்கின்றனர். இவ்வுண்மையை ரீவ்ஸ் (Reeves) குறிப்பிட்டுள்ளார்.

உதவியாளர்கள், கணக்கர்கள், விற்பனையாளர்கள் முதலிய பலதரப் பட்ட வேலை வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. கிராம மக்களில் சிலர் உள்ளூர் காவலர்களாக (Chawkidar) நியமிக்கப்படுகின்றனர். இவர் கள் மாநில காவற்படை (State Police)யுடன் தொடர்புடையவர் களாக இருப்பார்கள். மற்றும் சிலர் ‘பத்துவாரி’ (Patwari கிராம ஊழியர்கள்)களாகவும், வேட்டைக்காடுகளில் காவலர்களாகவும் (Gamekeepers), கான் காவலர்களாகவும் (forest guards) ஆயத் துறை ஆய்வாளர்களாகவும் (Excise Inspector) பணியாற்றுகிறார் கள். சுருங்கக் கூறின் தகுதி, திறன் முதலியவற்றின் அடிப்படையில் அனைவருக்கும் தங்கள் ஊரிலோ, அடுத்துள்ள கிராமங்களிலோ வேலை வாய்ப்புக்கள் பெருகி வருகின்றன.[16] கிராம மக்கள் முதன்மையான உற்பத்தியாளர்களாக அல்லாமல் தரமான ஊழியர்கள் என்ற முறையில் முக்கியத்துவம் பெற்றுள்ளார்கள். (முதல் நிலை, வேளாண்மை உற்பத்தியிலிருந்து விலகுகின்ற தன்மை குறைவாக இருந்தபோதிலும், நகர வளர்ச்சியின் ஒரு முக்கியக் கூறாக விளங்குகிறது.)

நகரங்களுக்கும், பட்டணங்களுக்கும் புலம் பெயர்ந்தக் கிராம வாசிகள் அங்குப் போட்டி அடிப்படையில் அமைந்துள்ள தனித்துவ வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர். குடும்பப்பிணைப்புக்களிலிருந்து விடுபட்டதனாலும், சுயமுயற்சி யால்தான் வாழ்க்கை அமையும் என்பதை உணர்ந்தமையாலும், தாங்கள் ஈட்டிய வருவாயைத் தாங்களே வைத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தை உணரலாயினர். இதனால் குடும்ப அமைப்பில் உள்ள இதர உறவினர்களுடன் தங்கள் வருவாயைப் பகிர்ந்துகொள்ள இவர்களால் முடியவில்லை.

ஏகக்குடும்பச் சிதைவு என்றால் என்ன என்பதை நாம் உணர்தல் நலம். தற்போது இந்துக்களிடையே ஏகக் குடும்பங்கள் மறைந்து, அதற்குப் பதிலாக ஐரோப்பாவில் உள்ளதைப்போன்ற கருக்குடும்பங்கள் (nuclear family), — கணவன், மனைவி குழந்தைகளைக்கொண்டு அமைவன—பெருகி வருகின்றன என்று இந்தியச் சமூகவியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். இக்கருத்து உண்மையில் இதுவரை ஏகக் குடும்பத்தில் ஏற்பட்ட, ஏற்படுகின்ற மாறுதல்களைப் புரிந்துகொள்ளாமல், குழப்பிக்கொள்வதாக அமைந் துள்ளது. கபடியாவும், தேசாயும் முரண்பட்டக் கருத்துக்களைக்

16 இக்கட்டுரை ஆசிரியர் காஷ்மீரத்தில் ஒரு கிராமத்தில் பாரத சேவா சமாஜத் தின் ஊதியம் பெற்று பணியாற்றும் பிரதிநிதி ஒருவரைக் கண்டு உரையாடியிருக்கிறார். இதைப்போன்று பலர் இந்தியா முழுவதும் உள்ள பல கிராமங்களில் இருக்கக்கூடும் என்று கூறுகிறார்.

கொண்டிருக்கக் காணலாம். இவர்கள் இந்து ஏகக்குடும்பங்களில் ஏற்பட்ட மாற்றங்களைத் தெளிவாக விவரித்துள்ளார்கள். பின்னர் தங்கள் ஆய்வுரையின் முடிவில் மக்கள் ஏகக்குடும்பத்தை ஆதரிப்பதாகக் கூறுகிறார்கள். தேசாய் (பக். 154) பின்வருமாறு கூறியுள்ளார். அதாவது "கருக் குடும்பங்கள் அதிகரித்துக் கொண்டும், ஏகக் குடும்பங்கள் நலிவுற்றும் வருகின்றன" என்று கூறியுள்ளார். இக்கூற்றில் முரண்பாடு இருப்பதைக் காணலாம். [மக்கள் ஏகக் குடும்பத்தை ஆதரிப்பது உண்மையானால் அது நலிவுற்று இருக்க முடியாது.] இத்தகைய முடிவிற்கு ஆதாரமாக இருந்த காரணிகள் எவை என்பது தெளிவாகவில்லை.

நெடுங்காலமாக மேற்கொள்ளப்பட்ட குடும்ப ஆய்வுகள் குடும்ப வகைகளைப்பற்றியதாகவே இருந்தன. பல எழுத்தாளர்கள் அண்மையில் குறிப்பிடத்தக்க அளவில் குடும்பத்தைப்பற்றியக் கணிப்புக்களை வெளியிட்டுள்ளார்கள். ஆனால், இவையாவும் குறிப்பிட்ட ஒரு காலத்தில் நிலவியக் குடும்ப அமைப்புக்களைப் பற்றியதாகவே உள்ளன. குடும்பம் என்பது என்ன என்பதை உணராமல் குடும்ப அமைப்பு வகைகளைக் கணக்கெடுப்பது பயனுள்ள ஒரு முடிவைத்தராது. அதுமட்டுமன்று. அது குடும்பம் பற்றிய கணிப்பும் ஆகாது. மக்களின் குடும்ப வாழ்க்கையை உண்மையாக உணரவேண்டுமானால் குடும்பத்தினின்றும் குடும்ப அமைப்பை வேறுபடுத்துதல் அவசியம். ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிலவிய குடும்ப அமைப்பு வகையை ஆராயாமல் வரலாற்று நோக்குடன் குடும்ப அமைப்பின் தோற்றம், வளர்ச்சி, மாற்றம் முதலியவற்றைப் பொதுப்பட ஆராய்தல் வேண்டும். குடும்ப அமைப்பு மாறுபடக் கூடியது. கருக் குடும்பமாகவுள்ள குடும்ப அமைப்பானது திருமணங்கள், மகப்பேறுகள் முதலிய வற்றால் விரிவடைந்த குடும்பமாக மாறும். மரணங்கள் காரண மாக விரிவடைந்த நிலைகுன்றி மறுபடியும் கருக் குடும்பமாக அமையும். அவ்வாறே சகோதரர்கள் சேர்ந்துவாழும் விரிவடைந்த குடும்பங்கள் பாகப்பிரிவினையால் குலைந்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டக் கருக் குடும்பங்களைக் கொண்ட கருக் குடும்ப அமைப்புக்களாக மாறும்.

ஏகக் குடும்பம் தலையான ஒரு குடும்ப அமைப்பாகும். குடும்ப அமைப்பு ஒரு பொருளாதார அலகாக இருக்கிறது. பாகப்பிரிவினை காரணமாக பொருளாதார அலகாக உள்ள அமைப்பு பிரிக்கப் படுகிறதே தவிர (உறவின் பிணைப்பில் உருவாகிய) குடும்பம் பிரிக்கப்படுவதில்லை. குடும்பத்தினர்களுக்கு இடையே உள்ள தொடர்புகளும், அதன் தன்மையும், ஓரளவிற்குக் குறையக்

கூடுமானாலும், உறவின் பிணைப்பு பாதிக்கப்படுவதில்லை. இந்நிலையில் சில ஆதார உண்மைகளின் அடிப்படையில் சில முடிவுகளை மேற்கொள்ளலாம். சொத்துரிமை, சட்டங்கள் போன்றவைகளில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு முன்னரும், பிரிட்டிஷ் ஆட்சி தோன்றுவதற்கு முன்னரும் பாகப்பிரிவினைகள் ஏற்பட்டுள்ளன. கூட்டுக் குடும்பங்கள் அளவிலும், விரிவிலும் பெருவாரியாக வளர்ச்சி அடைந்த பின்னரே இத்தகைய பிரிவினைகள் ஏற்பட்டன. இவைகளை யாரும் மறுக்கமுடியாது. அப்போது ஏற்பட்ட பாகப்பிரிவினைகளுக்கும், தற்காலத்தில் ஏற்படும் பாகப்பிரிவினைகளுக்கும், அதிக வேறுபாடுகள் உண்டு. இப்போது பாகப் பிரிவினைகள் சற்று முன்னதாகவே ஏற்பட்டு விடுகின்றன, அதாவது குடும்ப அமைப்பின் விரிவையும், வளர்ச்சியின் அளவையும் அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில் பாகப் பிரிவினை இதற்கு முன்பு ஏற்பட்டதைவிட அதிக விரைவாக ஏற்படுவதைக் காணலாம். இதனை அண்மையில் ஏற்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாகக் கருதவேண்டும். உடன்பிறந்தவர்களிடையே ஏற்படும் பாகப்பிரிவினை இதற்கு முன்னர் குறைவாகவும், இப்போது அதிகமாகவும் உள்ளது. ஆந்திராவில் 'ஷமிர்பேட்' (Shamirpet) என்னும் கிராமத்திலும், உத்தரப் பிரதேசத்தில் 'மோகனு' (Mohana) என்னும் கிராமத்திலும் தந்தைக்கும், மகனுக்கும் இடையே ஏற்படும் பாகப்பிரிவினைகள் பற்றி ட்யூபேயும், (1955 - பக். 133) மஜூம்தாரும் [1958-பக். 203] குறிப்பிடுகிறார்கள். இத்தகையப் பாகப்பிரிவினைகள் ஷமிர்பேட் பகுதிகளில் வெகு சாதாரணமாக உள்ளன. "திருமணமாகி ஐந்து ஆண்டுகள் சென்றபின்னர் தந்தையுடன் வசிக்கக்கூடிய மகன்கள் மொத்தத்தில் 22 விழுக்காட்டினரேயாவர்" என்று 1957-58-ல் கண்டுபிடித்துள்ளார்கள். [முன் கூறிய ஆதாரம்.)

தற்காலத்தில் அடிக்கடி பாகப்பிரிவினைகள் ஏற்படுகின்றமையால் குடும்ப அமைப்புக்கள் பெரிய அளவினதாக வளர்ச்சியுறாத நிலையிலேயே பிரிக்கப்படுகின்றன. இதனால் முன்பு இருந்ததைக் காட்டிலும் அதிகமான கருக் குடும்பங்கள் ஒரு குடும்ப அமைப்பில் தோன்றுகின்றன. இவ்வுண்மை 1951-ம் ஆண்டு மக்கட் தொகைக் கணிப்பின்போது புலனாகியது. "பல கருக் குடும்பங்களை உடைய குடும்ப அமைப்புக்கள் அதிகமாக வளர்ந்துள்ளதை [கிராமங்களில் 33 % மும், பட்டணங்களில் 38%மும்] நோக்கும்போது ஏகக் குடும்பத்தினின்றும் விலகித் தனியாகக் குடித்தனத்தை ஏற்படுத்திக்கொள்ளும் மனப்பான்மை அதிகரித்துள்ளது என்றும், இனி ஏகக் குடும்பங்கள் மரபு வழியான வழக்கப்படி நீடிக்க மாட்டாதென்றும் புலப்படுகிறது" என்று

மக்கட் தொகை ஆணையாளர் கூறுகிறார். (கபடியாவினால் எடுத்தாளப்பட்டது. பக். 259)

இவ்வாறு குடும்ப அமைப்பு பாகப்பிரிவினை காரணமாக இரு கருக் குடும்பங்களாகப் பிரிக்கப்பட்ட போதிலும் இவை ஒரு கூட்டுக் குடும்ப அமைப்பாகவே (Joint household) வாழமுடியும் என்பதை மக்கட் தொகைக் கணிப்பின் ஆணையாளரோ ஆய்ந்துரையாளர்களோ (கபடியா, தேசாய், போன்றவர்கள்) உணரவில்லை. [பிரிவினையால் இரு குடும்ப அமைப்புக்கள் தோன்றினாலும் அவைகளுக்கு இடையே தொடர்பு அற்றுப்போகாதக் காரணத்தினால் ஓர் ஏகக் குடும்ப அமைப்பாக—ஒற்றுமையுடைய இரு குடும்ப அமைப்புக்களாக வாழக்கூடும்.] இந்து நியதிப்படி மகன் பிறக்கின்ற போதே தந்தையின் பூர்வீகச் சொத்தில் சம உரிமையுடையவனாகவே பிறக்கின்றான். எனவே சொத்தைப் பொறுத்த வரையில் தந்தையும், மகனும் சமவுரிமை உடைய பங்காளிகள் (Coparcenese) ஆவர்.

முடிவாக இந்து ஏகக் குடும்பத்தின் அளவும், விரிவும் உள்ளீடாக அமைந்த பிணைப்பும், ஒற்றுமையும், பொருளாதார மாற்றங்கள் காரணமாகவும், சட்டங்கள் காரணமாகவும், பலவாறு மாற்றம் அடைந்துள்ளன. ஆனால் இந்து ஏகக் குடும்பங்கள் மறைந்து, அதற்குப்பதிலாக மேலை நாடுகளில் உள்ளதைப் போன்றத் தனிக் குடும்ப வகைகள் தோன்றியுள்ளன என்பது பொருந்தாக் கூற்றாகும்.

5. இந்து சாதி முறையின் சிறப்பியல்புகள்

இந்து ஏகக் குடும்பத்தைவிட இந்தியாவில் விளங்கும் சாதியைப் பற்றி ஒருமித்தக் கருத்து அதிக அளவு நிலவுவதைக் காணலாம்.[17] சுருக்கமாக சாதியின் இலக்கணத்தை கூறுதல் இயலாது. அப்படிக் கூறமுற்படும் போது அது தெளிவற்றதாகி விடுகிறது. ஆயினும், இந்து சாதியின் முக்கியக் கூறுகள் குறித்துப் பல எழுத்தாளர்களிடையே போதிய அளவு கருத்தொற்றுமை நிலவக் காணலாம். இந்து சாதி முறையின் சிறப்பு

17 அடிப்படையில் சாதி ஒரு இந்துக் கோட்பாடு என்பதைப் பல ஆசிரியர்கள் ஏறத்தாழ ஒருமுகமாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இவர்களில் முக்கியமாக மாக்ஸ் வெபர் (Maxweber) 1958, ஹோகார்ட் (Hocart) 1950, பூகிள் (Bougle) 1958, லீச் (Leach) முதலியவர்கள் இதை உறுதியாகவும் தெளிவாகவும் கூறுகின்றனர். "இந்தியர் அனைவரின் நாகரிகத்தினின்றும் பிரிக்கமுடியாத அளவிற்குச் சமூக அமைப்பில் பிணைக்கப்பட்டுள்ள ஒரு பகுதியாகச் சாதிமுறை அமைந்துள்ளது" என்று லீச் கூறுகிறார். (முன்கூறியபடி பக். 5.)

இயல்புகள் எனக் கருதப்படுபவற்றை ஹட்டன் (Hutton) தொகுத்துக் கூறியுள்ளார். அக மணமும் (Endogamy) ஒரே பந்தியில் உணவு அருந்துவதற்கானத் தடைகளும், பிராமணர்களை முதன்மையாகக் கொண்டு படிப்படியாக ஏனைய சாதிகள் அதன் கீழாக அமைந்துள்ள தன்மையில் தீட்டு அடிப்படையில் சாதிகள் தனித்து விலகி நிற்பதும், பரம்பரைச் சாதித் தொழில்களும், நிலை மாருத சாதி அந்தஸ்தும், குறிப்பிடத் தக்க சிறப்பு இயல்புகள் என்று கருதுகிருர். குர்யே (Ghurye பக். 19) கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடுகிருர்: சமூகம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள தன்மையும், படிப்படியாகச் சாதிகள் அமைந்துள்ள முறையும், உணவு சமூக உறவு சம்பந்தப்பட்ட தடைகளும், சில சாதிகள் மட்டும் மத பொதுநல உரிமைகளை அநுபவிக்கவும் பிற சாதிகள் அவற்றை அநுபவிக்க முடியாமல் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலைமையும், விரும்பியபடி தொழிலைத் தேர்ந்தெடுக்கவும், திருமணம் செய்து கொள்ளவும் முடியாத அளவிற்கு விதிக்கப்பட்டுள்ளக் கட்டுப்பாடுகளும் முக்கியமானவை. இந்திய சாதிமுறையின் பொது இயல்புகளை டேவிஸ் (1948 பக். 378-9) கூறுகிருர். பரம்பரையாக அனைவரும் சாதியிலேயே தொடர்ந்து இருக்க வேண்டிய நிலையும் மாருத அந்தஸ்தும், ஒரே சாதிக்குள் அமைந்த அகமணமும், சமூகத் தொடர்புகள், சேர்ந்து உணவு அருந்துதல் முதலியவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளும் குறிப்பிடத்தக்க அம்சங்கள் ஆகும். "ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவன் என்ற உணர்வு அச்சாதியின் பெயரைச் சொல்லும்போதும், அந்த சாதியோடு இணைத்த வகையிலேயே தன்னைச் சமுதாயம் கருதுகின்றபோதும், சாதிக்குரியப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்கும் போதும், அச்சாதியின் கட்டளைகளுக்கு உட்பட்டு ஒழுகும்போதும் வலியுறுத்தப்படுகிறது." டேவிஸ் கூறியவற்றுடன் இன்னும் சில அம்சங்களையும் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். அவையாவன: பொதுவான பரம்பரைத் தொழில், ஒரு குறிப்பிடப்பட்ட பழங்குடி வகுப்பிலிருந்தோ, ஓர் இனத்திலிருந்தோ வந்தவர்கள் என்ற ஒரு பொதுவான நம்பிக்கை, ஒரு பொது மதப் பிரிவைத் தழுவி வாழ்தல், நிலையான மாருத அந்தஸ்து முதலியன.

மேலே கூறியவற்றினின்றும் இந்து சாதியின் சிறப்பியல்புகள் பற்றிப் பல அறிஞர்களிடையே கருத்தொற்றுமை நிலவுவதைக் காணலாம். இருந்தபோதிலும், ஒவ்வொரு ஆசிரியரும் சில சிறப்பு இயல்புகளையே வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

நெடுங்காலமாக இந்து சமூகம் உறவு அடிப்படையில் அமைந்த சிறு குழுக்களாகப் பிரிந்து இருப்பதற்கும், இவைகளுக்கு

இடையே ஒற்றுமையின்றி இருப்பதற்கும், சாதிதான் முக்கியக் காரணம் ஆகும். சாதி அமைப்பில் சமூகம் பல உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள நிலைமையும், ஒரே சாதியிலேயே வாழ்நாள் முழுவதும் ஒருவர் வாழ்கின்ற நிலைமையும், பெரிதும் சிறப்பாகக் காணப்படுகின்றன.[18] பூகிள் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்: "சாதியுணர்வு சமூகத்தை ஆள்கிறது என்று கூறும்போது, நாம் இதைத்தான் கருத்தில் கொண்டு இருக்கிறோம். அதாவது சமூகம் வெவ்வேறு குழுக்களாகப் பிரிந்துள்ளது என்றும், அவை ஒன்றையொன்று நேசிப்பதற்குப் பதிலாக வெறுக்கின்றன என்றும், இவை ஒருங்கே செயல்படாமல் தனித்தனியே செயல்படுகின்றன என்றும், இதன் உறுப்பினர்கள் இதர சாதியிலோ, அவற்றின் உறுப்பினர்களுடனோ நெருங்கியத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது தடுக்கப்பட்டுள்ளது என்றும் நினைக்கிறோம்." இது போன்ற தீவிரக் கருத்துடைய ஆசிரியர்கள் சாதியைப் பற்றி நேர்முகமாக அறிந்து கொள்ளாமல், நூல்களின் வாயிலாக அதைப் பற்றித் தெரிந்து கொண்டுள்ளார்கள். இதனால் இந்தியக் கிராமங்களில் காணக் கூடிய உண்மை நிலை இவர்கள் சொல்வதினின்றும் மாறுபட்டுள்ளது.

தாங்கள் விரும்பும் வேலையை மேற்கொள்ளும் சுதந்திரம் அனைவருக்கும் சமூகத்தில் இருக்க வேண்டும். அஃதில்லாத நிலையில் சமூகத்தின் பல பிரிவுகளுக்கு இடையே நெருக்கமான பொருளாதாரக் கூட்டுறவு நிலவ வேண்டும். சாதியின் அடிபடையில் சமூகம் பிளவுபட்டுள்ள நிலைமையை வலியுறுத்துகின்ற ஆசிரியர்கள் இந்த தலையாய உண்மையைக் குறிப்பிட மறந்து விடுகிறார்கள்.[19] சாதிகள் ஒன்றுக்கொன்று பண்டம், பணி இவைகளை மாற்றிக் கொள்வதுடன், கொண்டு கொடுத்து வாழவேண்டியதுமான அவசியத்தை (1936-ல்) வொய்சர் (Wiser) வலியுறுத்துகிறார். வொய்சரின் இக்கருத்துக்கு ஆதரவாக வட இந்தியக் கிராமங்களில் உள்ள சமூக

18 சாதி வேறுபாடு இருவகைகளில் செயல்படுகின்றது. பிறப்பின் அடிப்படையில் ஒருவர் ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர் ஆகிறார். அதன் காரணமாக இதரச் சாதிகளில் சேரும் உரிமை அவருக்கு இல்லை. இரண்டாவதாகத் தீண்டாமை, சாதிக் கௌரவம் போன்ற கோட்பாடுகள் சாதிகளுக்கு இடையே உள்ள சமூகத் தொடர்பைத் தடைசெய்கின்றன. இருந்தபோதிலும், எந்த சாதியும், தீண்டப்படாத சாதியுள்பட—முற்றிலும் தனித்து இயங்குவது இல்லை. சாதிமுறையானது ஒன்றுக்கொன்று தொடர்புடையச் சாதித் தொகுப்புக்களாகவே செயல்படுகின்றன. சாதிகள் தனித்தனியே விலகி வாழ்வதில்லை. அதே நேரத்தில் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்தும் வாழ்வதில்லை. இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் வாழ்கின்றன.

19 இவ்வகையில் சிலர் வேறுவிதமானக் கருத்தைக் கொண்டிருக்கின்றனர். எடுத்துக்காட்டாக நேடல் (Nadel) அவர்களைக் குறிப்பிடலாம். சாதியைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக இருக்கும் சூழ்நிலையை அவர் விவரிக்கிறார். 'சமூகத்தில் பல காரியங்கள் நடக்கின்றன. அவற்றை வெவ்வேறு வகைகளாகப் பிரித்து அத்தகைய முறையை நிரந்தரமானதாகவும், நெகிழ்ச்சியற்றதாகவும் செய்வதால் சமூகத்தின் பல பகுதிகள் ஒன்றையொன்று சார்ந்து வாழமுடியும்".

வாழ்க்கையைச் சுட்டிக் காட்டுகிறர். ஜர்ஜ்மன் (Jajman) சாதிகளுக்கும், காமின் (Kamin) சாதிகளுக்கும் இடையே சமூக ஏற்றத் தாழ்வுகள் இருந்த போதிலும் அவை ஒன்றுக்கொன்று உதவியாக வாழ்வதை வொய்சர் குறிப்பிடுகிறர். ஜாஜ்மனி முறையில் அமைந்துள்ள சமூக, பொருளாதாரத் தொடர்புகளை எடுத்துக் காட்டுகிறர்.

அண்மையில் லீச் இதுபற்றி நம் கவனத்தைத் திருப்பி இருக்கிறர். "டர்க் கெயம்', (Durkheim) கருதுவது போலச் சாதி அடிப்படையில் உள்ள சமூகம் கட்டுககோப்பானது. ஒவ்வொரு சாதியும், கிளைச் சாதியும் தனித்தனியாக ஒரு சிறப்புப் பணியைச் செயலாற்றும் வகையில் அமைந்துள்ளன. சாதிகள் படிப்படியாக அமைந்துள்ளதும், சாதிகள் தொடர்பு இல்லாமல் பிரிந்து நிற்பதும் சமூகவியல் ஆய்வில் வலியுறுத்தப்படுகின்றன. ஆனல் இவற்றை விடச் சாதியமைப்பில் நிலவும் தொழிற் படிப்பு முறையில் ஒவ்வொரு சாதியும், பிறவற்றைச் சார்ந்து வாழுகின்ற முறையே சமூகவியல் ஆய்வில் முக்கிய இடத்தைப் பெறுகிறது" என்று குறுப்பிடுகிறர். (முன் குறித்தபடி பக். 5)

நாம் மேலே கூறியவற்றிலிருந்து இந்துக்களின் சாதிமுறையைப் பல கோணங்களிலிருந்து ஆராயலாம் என்பதை உணரலாம். புனிதமாகக் கருதப்படுகின்ற சடங்கு முறையின் அடிப்படையில் உருவாகியது என்றும், படிப்படியாக உள்ள ஏற்றத் தாழ்வில் உருவாகியது என்றும், மாருத தன்மையுடைய தொழிற் பகுப்பின் அடிப்படையில் தோன்றியது என்றும், ஒருவரை ஒருவர் சார்ந்து வாழும் பொருளாதார வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது என்றும், சாதியைப் பற்றிக் கூறலாம். கிராமக் களஆய்வின் முடிவுகள் இறுதியாகக் கூறிய கருத்தை உறுதிப் படுத்துகின்றன; இது பொருளாதார மாணவர்களுக்கு ஆர்வம் ஊட்டும் வகையில் உள்ளது.

இதனல் கடந்த காலத்தில் அறிஞர்கள் சாதிமுறையின் பொருளாதாரக் கூறுகளைப் புறக்கணித்தாகக் கருதுவது தவறு. உண்மையில் அவ்வாறு இல்லை. சாதியின் தொழில் அம்சத்தைச் சிறப்பாகக் கருதினர். ஒவ்வொரு சாதிக்கும் (அதற்கென்று) குறிப்பிட்டத் தொழில் இருக்கிறதென்று பல எழுத்தாளர்கள் நிலை நாட்டியுள்ளார்கள். அவர்களில் நெஸ்ஃபீல்ட் (Nesfield) (1885) என்பவரை முக்கியமாகக் குறிப்பிடலாம். சாதியின் தோற்றுவாய்க்கும், வளர்ச்சிக்கும், தொழிற் சிறப்புப் பயிற்சிக்கும் பரம்பரை பரம்பரையாகத் தொழில் செய்வதே அடிப்படை என்று

இவர்கள் கருதினர். சாதிக்கும் தொழிலிற்கும் இடையே நெருங்கிய உறவு இருப்பதைக் குறைவாக மதிப்பிடக்கூடாது; அவ்வாறே சாதியை ஒரு தொழில் வகுப்பு என்ற நிலைக்குத் தாழ்த்துவதும் கூடாது. நெஸ்ஃபீல்ட் இத்தகைய தவற்றைச் செய்து இருக்கிறார். அவர் தொழிலின் அடிப்படையில்தான் இந்தியாவில் சாதி உருவாகியுள்ளது என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார். ஆனால், இக்கருத்தில் உள்ளக் குறைபாடுகளைப் பூகிளும், மற்றும் பலரும் எடுத்துக் காட்டுகிறார்கள். "மரபு வழியாக வரும் தொழிற் உற்பத்திக்கு அவசியம். இயந்திரத் தொழில்கள் இல்லாத நிலையில் இது மிக அவசியம். கைவினைஞன் தனக்குப் பின்னர் அத் தொழிலை மேற்கொள்ளும் ஒருவனுக்கு அதை விளக்கிக் கூறப் பயிற்சி தருவது அவசியம். அவனிடம் தொழில் பயில வருகின்றவன் அவனுடைய மகனாகவே இருக்கவேண்டும் என்பதில்லை. அவனுடைய உதவியாளனாகக்கூட இருக்கலாம். எனவே ஒரு கைவினைஞனுக்குப் பிறகு அவனுடைய மகனே அத்தொழிலை மேற்கொள்வான் என்பது பொருத்தமில்லை, (Dumont and Pocock, 1958. p. 35). பரம்பரைத் தொழிலின் அடிப்படையில் சாதி தோன்றியது என்றோ, சாதியின் சிறப்பு இயல்புகளான தொழிற் பகுப்பும், தொழிற் சிறப்புப் பயிற்சியும் பரம்பரை வழியில் தொழில் அமைவதற்குக் காரணிகள் என்றோ கூறுவதற்கு இல்லை.[20]

தொழில் அடிப்படையில் சாதி தோன்றியது என்று சொல்வதில் உள்ளக் குறைபாடுகளைக் கவனிக்கவேண்டும். வழிவழியாக சில குறிப்பிட்ட தொழில்கள், சில குறிப்பிட்ட சாதியினரால் செய்யப்படுகின்றன. இது இந்தியாவில் சாதியின் பொதுக் கோட்பாடாகக் கருதப்படுகிறது. இத்தகைய நிலை கைவினைத் தொழில்களில் (artisan crafts) அமைந்திருப்பதைக் காணலாம்." என்று மெக்ஐவரும், பேஜும் Mac Iver and Page பக். 357) கூறுகிறார்கள். எவ்வாறாயினும், வெவ்வேறான சில சாதிகளுக்குச் சில பொதுவான தொழில்கள் பொதுப்படையாக அமைந்திருக்கின்றன. ஆஹிர் (Ahir) காதரியா (Gadaria) கோலா (Goala) குஜார் (Gujan) ஆகிய நான்கு சாதிகள் வட இந்தியாவில் உள்ளன. இவை தனித்தனியே தமக்குள் அகமணத்தைப் பின்

[20] சாதி முறையையும், தொழிற் பகிர்வையும் புரிந்துகொள்ளவேண்டுமானால் இந்து சமயக் கோட்பாடுகளையும், மதிப்பீடுகளையும் ஓரளவு தெரிந்து வைத்திருக்க வேண்டுமென்று பூகிள், ஹோகார்ட், முதலியவர்கள் கருதுகிறார்கள். சாதியடிப்படையில் அமைந்த சமூகத்தில் உறவினர்கள் தங்களுக்குள் பற்று மாறுது இருப்பது வலியுறுத்தப்படுகிறது. எனவே தந்தையின் வாரிசாகவும், தந்தையிடம் உதவியாளனுகப் பணியாற்றுகின்றவனுகவும் மகன் அமைவதைத் தற்செயலாக ஏற்பட்டதென்று கருதமுடியாது.

பற்றுகின்றன. இருந்தபோதிலும், இவற்றைச் சார்ந்தவர்கள் பொதுவாக ஆடுமாடுகளை மேய்த்தல், வளர்த்தல், பால்விற்பனை செய்தல், முதலிய தொழில்களைச் செய்து வாழ்க்கை நடத்துகிறார்கள். இத்தொழில்கள் இச்சாதிகளுக்காகப் பொதுப்படையாக அமைந்துள்ளன, இந்தியா முழுவதிலும் வேளாண்மையும், வாணிகமும் எல்லா சாதியினருக்கும் பொதுப் படையான தொழில்களாக அமைந்துள்ளன. ஆந்திராவில் "வேளாண்மை காபு (Kapu) சாதிகளுடைய (தொழிலாகும். தங்களுக்குச் சொந்தமாக நிலம் இருக்குமேயானால் எல்லா சாதியினரும், மேல் சாதியினரும், கீழ்ச்சாதியினரும், வேளாண்மையை மேற்கொண்டு இருப்பதைக் காணலாம். அத்துடன் மரபு வழிவரும் தங்களது சாதித்தொழிலையும் இவர்கள் கைவிடுவதில்லை. இவ்வாறே வாணிகம் தொடக்கத்தில் கோமுட்டிச் (Komti) சாதியினருடையதாக இருந்தது. ஆனால் இன்று ஏனைய சாதியினரும் இதனை மேற்கொண்டுள்ளன) (Dube பக். 57)

கடந்த நூறாண்டுகளாக ஏற்பட்டுள்ள பொருளாதார, தொழில்நுட்ப மாறுதல்கள் இந்தியாவின் தொழில் பகிர்வு முறையைப் பெரிதும் மாற்றியமைத்துள்ளன. புதிய வேலை வாய்ப்புக்கள் தோன்றியுள்ளன. ஒரு தொழில் செய்கிறவர்கள் மற்றொரு தொழிலில் ஈடுபடுகின்ற நிலையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. சாதிமுறையில் ஏற்பட்டுள்ள இத்தகைய மாற்றங்களைக் கீழே காண்போம்.

6. சமீப காலத்தில் சாதியில் ஏற்பட்ட மாற்றங்கள்

இந்து சமூக அமைப்பு மாறாதத் தன்மையுடையது என்று தவறாகக் கருதப்படுகிறது. இது தொன்மையான அமைப்பு என்பதிலும், பல எதிர்ப்புக்களைச் சமாளித்து வந்துள்ளது என்பதிலும் சிறிதும் ஐயப்பாடு இல்லை. ஆனால், இவை நிலையானவை. மாற்றம் இல்லாதவை என்று கூறுவது வரலாற்றுக்குப் புறம்பானதாகும். பிரிட்டிஷார் பதினொன்றாவது, பன்னிரண்டாவது நூற்றாண்டுக் கருத்துரைகளைத் தொகுத்து அவைகளை நியதிகளாக வெளியிட்டனர் என்றும், இந்து ஏகக் குடும்பம் மாறிவரும் சந்தர்ப்பச் சூழ்நிலைக்கேற்ப மாறிக்கொண்டே வந்தது என்றும் முன்பே கண்டோம். இந்து சாதியும், அவ்வாறே மாறிக்கொண்டே வந்துள்ளது. சாதி என்பது வர்ணம் (Varna) என்பதிலிருந்து வேறுபட்டது என்று தற்காலத்திய அறிஞர்கள் அனைவரும் கருதுகின்றனர். இந்திய சமூகம் முற்காலத்தில் நான்கு அல்லது ஐந்து வர்ணங்களாக—

பிராமணர்கள். க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள். தீண்டப்படாதவர்கள் என்று பிரிக்கப்பட்டிருந்தது. சாதி முறையானது வர்ணப்பிரிவுகளை விடச் சிக்கலானது. [காண்க Hutton 64-67 and Srinivas 24-25] வேத காலத்திய வர்ணப் பிரிவுகள் சாதிப்பிரிவைப் போன்று நெகிழ்ச்சியற்றதாக இல்லை. சாதிமுறை கூட என்றைக்கும் நிலையான, மாறுதத் தன்மை உடையதாக இருக்கவில்லை. சாதியானது முழுமையுடையதாக, மாற்றம் தேவையில்லாத வகையில் நிறைவு பெற்றதாக இருக்க முடியாது என்று டேவிஸ் (1948; பக் 3825) கருதுகிறார். சமூகத்தில் உள்ள குழுக்கள் படிப்படியாக அமைந்துள்ளமையால், அவற்றை வேறுபடுத்துவதற்கு ஒரு தர அடிப்படை தேவைப்படுகின்றது. இவ்வமைப்பில் உயர்ந்த நிலையை எய்துவதற்குச் சில நெறி முறைகளைப் பின்பற்றுவது இயற்கை. "இத்தகைய தர அடிப் படையில் சாதிமுறை அமைக்கப்பட்டதால், தங்கள் அந்தஸ்தை உயர்த்திக்கொள்ளும் நோக்கத்துடன் மக்கள் முயலுவது நிலையான (மாறுத) சாதி அந்தஸ்துக் கோட்பாட்டை மீறுவதாக உள்ளது." [முன் கூறியபடி பக். 382] வரலாற்றுண்மை என்னவென்றால் சாதிகளில் இருக்கின்றவர்களால் தங்களுடைய சாதியையோ, அந்தஸ்தையோ மாற்றிக்கொள்ள முடியாமலிருந்தாலும், சாதி அல்லது கிளைசாதியைப் பொறுத்தவரை அவற்றின் அந்தஸ்தை உயர்த்திக்கொள்வதில் வெற்றிபெற்று இருக்கின்றனர்.[21]

தங்கள் அந்தஸ்தைச் சாதிகள் உயர்த்திக்கொண்ட முறையை சீனிவாஸ் "சமஸ்கிருத மயமாகுதல்" (Sanskritisation) என்று கூறுகிறார். இதன்படி 'ஒரு கீழ்சாதியானது' ஒன்று அல்லது இரண்டு தலைமுறைகளில் உயர்ந்த நிலையை எய்துவதற்கு முதலாவதாகச் சைவ உணவை (மட்டும்) அருந்தவேண்டும். (அதாவது புலால் உண்பதைக் கைவிட வேண்டும்). மதுவை அறவே நீக்குதல் வேண்டும். இறை வழிபாட்டிலும், சடங்கு களிலும், சமஸ்கிருத முறையைப் பின்பற்றவேண்டும். பிராமணர் களின் பழக்க வழக்கங்களையும், சடங்குகளையும், நம்பிக்கைகளையும், பிராமணீய வாழ்க்கை முறையையும், பின்பற்றுவதற்கான உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்த போதிலும் நடைமுறையில் இவற்றை இயன்றவரை பின்பற்றவேண்டும்! இவ்வாறு சமஸ்கிருத மயமாகுதல் முறையைப் பின்பற்றிக் கீழ் சாதிகள் தங்கள் அந்தஸ்தை உயர்த்திக்கொண்டன. [பக் 30] சமஸ்கிருத மயமாகுதல் முறைக்கு அடிப்படையாக அமைந்த காரணங்களை சீனிவாஸ் விளக்கிக் கூறுகிறார். "பொருளாதார மேம்பாடு

21 ப்ளண்ட் (Blunt) [பக். 222, 236.8, மற்றும் நூல் எங்கெனும்] வடஇந்தியா விலுள்ள பல சாதிகளை இதற்கு உதாரணமாகக் காட்டுகிறார்.

எய்தவும், அரசியல் அதிகாரங்களைக் கைப்பற்றவும், கல்வி பெறவும், தலைமைப் பதவி எய்தவும், சமூகப் படித்தர அமைப்பில் உயர்ந்த நிலையை எய்தவும்,'' இம்முறை பின்பற்றப்படுகிறது என்கிறார். *[1956. பக். 492,]*

இந்தியாவில் சாதிக்குத் தொன்மையான வரலாறு உண்டு.[22] இது வேதகாலத்திய **வர்ண** (Varna)ங்களிலிருந்து தோன்றியது. *[கி. மு. 1500 முதல் கி. மு. 800 வரை]* '**வர்ணம்**' என்றால் நிறம் என்று பொருள். ஆரியர்களையும், ஆரியர் அல்லாதவர்களையும், நிற அடிப்படையில் வேறுபடுத்துவதற்காக வேதகாலத்தில் '**வர்ணம்**' என்ற சொல் சமூகத்தின் நான்கு பிரிவுகளை,—பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என்பவர்களைக்—குறிக்கும் வகையில் எடுத்தாளப்பட்டது. இந் நான்கு சமூக வகுப்புக்களும் 'ரிக் வேதத்தில்' காணப்பட்ட போதிலும் அவைகளை வர்ணங்கள் என்று குறிக்கவில்லை. (காண்க: குர்யே பக். 47) நாளடைவில் வர்ணங்களின் அடிப்படையில் உருவான சமூக அமைப்பு அதைவிட சிக்கலானதும், நெகிழ்ச்சி அற்றதுமான சாதிமுறையைத் தோற்றுவிப்பதற்கு வழிகோலியது.

சாதிமுறை சில காலங்களில் பல இன்னல்களை எதிர்நோக்கிய போதிலும் நிலையான அமைப்பை அது இழந்துவிடவில்லை. இவ்வகையில் முதல் புரட்சி பௌத்தர்களால் ஏற்பட்டது. இவர்கள் இந்து சமயத் ''திருத்தவாதிகள்'' (Revisionists) என்ற வகையில் அவ்வமைப்பினுள் இருந்துகொண்டு க்ஷத்திரியர்களின் முக்கியத்துவத்திற்காகப் புரட்சி செய்தனர். (குர்யே-பக். 69) அதன் பிறகு, ''13-வது 14-வது, 15-வது நூற்றாண்டுகளில் பல யோகிகள், முனிவர்கள், முதலியோர் தோன்றினர். இவர்கள் மனித சமுதாயத்தின் சமத்துவத்தை வலியுறுத்தும் இயக்கங்களைத் தோற்றுவித்தனர். அன்பு, பரிவு, பக்தி ஆகியவற்றின் மூலமாக இவர்களது இயக்கங்கள் இலட்சக்கணக்கான இந்தியர்களின் இதயத்தில் இடம் பெற்றன. இவர்களில் இராமனுஜர், இராமானந்தர், மாத்துவர், ஜனனேஸ்வரர், சைதனியர், வல்லபர் ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்கள் சாதி, சமய அமைப்புக்களை மாற்றுவதற்கு முற்படவில்லை. ஆனால் மக்களிடையே சுயேச்சையான சமூகப் போக்கை உருவாக்க பாடுபட்டனர். மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் இல்லை என்றும், சாதி வேறு

22 இந்திய சாதிமுறையின் ஆதி வரலாற்றை கேட்கர் (1909) அவர்கள் எழுதிய நூலில் காணலாம். குர்யே (**Ghurye**) காலப்போக்கில் சாதியமைப்பில் ஏற்பட்ட மாறுதல்களைத் தெளிவாகவும், சுருக்கமாகவும் எழுதியுள்ளார். பிரிட்டிஷ் ஆட்சியில் தோன்றிய மாறுதல்களையும் அவர் குறிப்பிட்டுள்ளார். சீனிவாஸ் (1957) தற்கால இந்தியாவில் சாதியின் நிலைமையைப்பற்றி ஆராய்ந்துள்ளார்.

பாடுகளினின்று மேம்பட்ட நிலையில் இறைவழிபாடு அமைந்துள்ளது.'' என்றும் பிரசாரம் செய்தனர். [முகர்ஜி, 1951 பக். 37-38]

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இந்திய சாதிமுறை அரசியல், பொருளாதார, சமூக ரீதிகளில் பலவித மாற்றங்களுக்கு உள்ளானது. இவைகளில் பொருளாதார அரசியல் மாற்றங்கள் மிகமுக்கியமானவை. பிரிட்டிஷ் ஆட்சியின் சட்ட-ஒழுங்கு அமைதி காரணமாக (Pax Britannica) சாதியின் அரசியல், நிருவாக செயல்களுக்கு இடையூறுகள் ஏற்பட்டன.

சாதிப் பஞ்சாயத்துக்கள் நெடுங்காலமாகச் சாதி வழக்குகளை விசாரித்து தீர்ப்பு அளிக்கும் பணியைச் செய்து வந்தன. ஆனால் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இப்பஞ்சாயத்துக்களின் அதிகாரங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இதற்கு இந்தியா முழுவதிலும் ஏற்பட்ட நீதிமன்றங்கள் ஒரு முக்கியக் காரணமாகும். இந்தியா முழுவதற்கும் பொருந்தக்கூடிய வகையில் அனைவருக்கும் ஒரே அடிப்படையில் நீதி வழங்குவதற்கான ஒரே மாதிரியான நியதிகள் தொகுக்கப்பட்டன. இத்தகைய நீதிமன்றங்களின் தீர்ப்புக்களும், சட்டமன்றங்களில் இயற்றப்பட்ட சட்டங்களும், சாதிப்பஞ்சாயத்துக்களின் அதிகாரங்களைப் பெரிதும் கட்டுப்படுத்தின. 1876-ல் பம்பாய் உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பு அளித்தது. அதில் "ஒரு திருமணத்தை மறுக்கவோ, ஒரு பெண் மறுமணம் செய்து கொள்வதை அனுமதிக்கவோ சாதிப் பஞ்சாயத்துக்களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை'' என்றும், இத்தகைய அதிகாரங்களை நீதிமன்றங்கள் அங்கீகரிக்காது'' என்றும் கூறப்பட்டுள்ளது. (எடுத்தாள்பவர், குர்யே—முன்கூறியபடி—பக். 186.) நாடு முழுவதும் ஒரே நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்ததால் சாதிப் பஞ்சாயத்துக்களின் முக்கியத்துவமும், நடவடிக்கைகளும் குறைந்தன.

பிரிட்டிஷ் ஆட்சி நிலைநாட்டப்பட்டபோது பல விளைவுகள் தோன்றின. முதலில் சாதித் தலைமையான சிறு குடித்தலைமை [Chieftainship] அகற்றப்பட்டது. ஒரு சாதியின் உள்தொடர்புகளும், நடவடிக்கைகளும் குறிப்பிட்ட பகுதிகளில்தான் அமைய வேண்டும் என்று நெடுங்காலமாக இருந்துவந்த கட்டுப்பாடு பிரிட்டிஷ் ஆட்சியின் போதுதான் நீக்கப்பட்டது. நவீனப் போக்குவரத்துத் தொடர்புகள் ஏற்பட்டமையால் இத்தகைய பெரியமாறுதல் ஏற்படுவது சாத்தியமாயிற்று. நாளடைவில் சாதிகள் அரசியலில் ஈடுபடலாயின. நாட்டின் பல பகுதிகளிலும்,

நாடெங்கிலும் சாதிகள் அரசியல் கழகங்களாகச் செயல்படத் தொடங்கின. சாதி சங்கங்கள் இந்திய அரசியலில். இது வரையிலும், இன்றும் எத்தகைய முக்கியத்துவம் பெற்றுள்ளன என்பதை விளக்கிக் கூருமலேயே புரிந்துகொள்ள முடியும்.[23] சாதி சங்கங்கள் அரசியல் கழகங்களாக மாறியதைச் சீனிவாஸ் பின்வருமாறு கூறியுள்ளார். ' 'பிரிட்டிஷ் ஆட்சியானது குப்பியில் அடைக்கப்பட்டிருந்த ஒரு பூதத்தை வெளியில் விட்டுவிட்டது'' இது மிகவும் பொருத்தமான ஒரு கூற்ருகும்.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் பொருளாதாரத் துறையில் சாதியமைப்பிற்கு ஏற்பட்ட மாற்றங்கள் மிகவும் முக்கியமானவை. பிரிட்டிஷ் ஆட்சியின்போது நவீன மயமான தொழில் நுட்ப முறையும், பொருளாதார அமைப்பும் தோன்றின. இத்தகைய மாற்றங்களின் வேகம் நாடு விடுதலைபெற்ற பின்னர் மேலும் அதிகரிக்கலாயிற்று.

பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னர் தன்னிறைவு பெற்ற கிராமச் சமுதாயங்கள் இந்தியக் கிராம சமூகத்தில் சிறந்து விளங்கின.[24] ஆனுல், பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவாகக் கிராமங்களின் தன்னிறைவுபெற்ற நிலை குலைந்தது. நில உடைமை தனி ஒருவர் உரிமையாக்கப்பட்டதால், சில அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டன. இதனுல் சாதிகளுக்கு இடையே இருந்த தொழிற் பகிர்வு அமைப்பில் மாறுதல்கள் தோன்றின. தொழில் வளர்ச்சியும், தொழிலை மையமாகக்கொண்ட நகரங்களின் வளர்ச்சியும் புதியதொரு சமூக அமைப்பை உருவாக்கின. தனி ஒருவரின் சொத்துரிமை வலியுறுத்தப்பட்டது. பரம்பரையாகத் தொடர்ந்து வரும் தொழிற் சிறப்புப்பயிற்சி, தொழிற் பகுப்பு முறை ஆகியவற்றின் அடிப்படையிலல்லாமல் திறன், போட்டி இவற்றின் அடிப்படையில் இது அமையலாயிற்று.[25]

23 ருடால்ஃபும், ருடால்ஃபும் எழுதிய நூலில் (1960) சாதிப் பஞ்சாயத்துக்களின் அரசியல் பணிகள் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

24 தாராசந்த் (1931 பக். 107-26). 18-வது நூற்ருண்டின் கிராமச் சமுதாயங்களின் தோற்றுவாய், அமைப்பு, செயல் ஆகியவற்றைச் சுருக்கமாக விளக்கியுள்ளார்.

25 இதுபற்றிய பொதுவான விளக்கத்திற்கு ஏ. ஆர். தேசாய் (1959) எழுதியதைப் படிக்கவும். பிரிட்டிஷார் காலத்தில் முன்னரும் பின்னரும், வங்காளக் கிராம சமூகங்களில் பொருளாதார அமைப்பு, சாதிமுறை ஆகியவற்றிற்கு இடையே உள்ள தொர்டபை சிறப்பாக முகர்ஜி அவர்கள் எழுதியுள்ளார். (1957) முகர்ஜியின் இப்புத்தகம் பொருளாதாரத் தேற்றம், வரலாறு இவற்றை ஆர்வத்தோடு படிக்க விரும்புகிறவர்களுக்கு உபயோகமாக இருக்கும். 'சமூகத்தின் இயக்க நிலையைத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு பொருளாதார அமைப்பை ஆராய்வது அவசியம்' என்று முகர்ஜி கூறுகிருர்.

மேற்கூறிய காரணிகளின் சேர்க்கையால் சாதிகளுக்கு இடையே தொழில் பெயர்ச்சி ஏற்பட்டது. மரபாக மேற் கொள்ளப்பட்ட தொழில்களின் முக்கியத்துவம் குறைந்தது. சாதி முறைக்குள் அத்தொழில்களைப் பகிர்ந்துகொள்ளும் முறை மாறியது. குறைவான சமூக அந்தஸ்தை உடைய மரபுத் தொழில்கள் நாளடைவில் கைவிடப்பட்டன. அவற்றிற்குப் பதிலாகப் புதிய நுட்பமுறைகளையும், திறனையும் கொண்ட தொழில்கள் தோன்றின. இவை அதிக வருவாயை நல்கின. அம் மக்களின் சமூக, பொருளாதார அந்தஸ்து உயர்வு அடைந்தது. (காண்க : ராவ் 1955 பக் 65-6) புதிய தொழில்களும், அவற்றோடு இயைந்த திறன்களும், தொழிற்சங்கங்கள் அரசியற் கட்சிகள் முதலியன தோன்றுவதற்கு வழிகோலின. இவை சாதித்தடைகளை யெல்லாம் தகர்த்து எறிந்தன. இத்தகைய முன்னேற்றங்கள் சாதியின் சீர்குலைவைக் குறிக்கின்றன என்று பலர் எண்ணு கின்றனர்.[26]

சில அறிஞர்கள் சாதி அமைப்பிற்குத் தொழில் அடிப்படை முக்கியமானதல்ல என்று கருதுகின்றார்கள். எனவே தொழிற் பெயர்ச்சியால் சாதிமுறை நசித்துவிடப் போவதில்லை என்றும் கூறுகின்றனர். "சாதியின் சமூகச் செயல் கோட்பாடுகள் பொருளாதார முன்னேற்றம் காரணமாக அழிந்துவிடும் என்ற கூற்றை நம்புவதற்கில்லை" என்று ராவ் கூறுகிறார். (பக். 68)

சாதிகளுக்கு இடையே உள்ள பொருளாதாரத் தொடர்புகள் முக்கியமானவை என்றாலும் முதன்மையானதாக இல்லை. அதைவிட சுற்றத்தைப் பேணுதலே முதன்மையானதாகும். இவ்வகையில் பொருளாதாரப் பற்றுக் கோடுகள் உறவினர்களின் நலனுக்கு

26 எடுத்துக்காட்டாக, காண்க லீச் **(Leach)** பக். 67 கௌஃப் **(Cough)** 1960, பக். 58-9.

ஒரு தொழிலிலிருந்து மற்றொன்றுக்கு மாறக்கூடிய நிலை நெடுங்காலமாக ஒரு வரையறைக்கு உட்பட்டதாக இருந்துள்ளது. ஆனால் தற்காலத்தில் தொழிற் பெயர்ச்சி அதிக அளவிலும், அடிக்கடியும் ஏற்படுகிறது. மரபாக வந்துள்ளச் சாதித் தொழில் களினின்றும் புதிய தொழில்கள் முற்றிலும் மாறுபட்டவை. கான்பூருக்கு அருகே உள்ள ஒரு கிராமத்தில் மேற்கொண்ட ஆராய்ச்சியின் அடிப்படையில் சர்மா பின் வருமாறு எழுதுகிறார். "ஒரு சாதிக்கு ஒன்று அல்லது பல தொழில்கள் மரபுத் தொழில்களாக இருந்துள்ளன. ஆனால் தலைமுறை தலைமுறையாகவே வேளாண்மை எல்லோராலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு சாதியினருடைய மரபுத் தொழிலைப் பிற சாதியினர் மேற்கொள்வது இயலாத காரியம். அதற்கு சமூகத்தின் இசைவு கிடைப்பதில்லை. இருந்தபோதிலும் மரபு வழிவந்த தொழிலுடன் நெருங்கியத் தொடர்புடைய பிற தொழில்களை மேற்கொள்ளலாம். அவற்றின் அந்தஸ்து, வருவாய் ஆகியவை அதிக வேறுபாடு இன்றி இருக்கவேண்டும். காட்டாக, நெடுங்காலமாக வந்துள்ள நெசவுத் தொழிலைக் கூறலாம். கிராமங்களில் இரண்டு புதியத் தொழில் அமைப்புக்கள் வெளித்தொடர்புகளால்—வாணிகம், நகரத்தில் உள்ள வேலைகள் முதலி யன—ஏற்பட்டுள்ளன. எனவே எல்லாச் சாதியினரும் மேற்கொள்ளுகின்ற தொழில்கள் வேளாண்மை, வாணிகம், நகரத் தொழில்கள் முதலியன ஆகும். (1960. பக். 25)

இயன்றவரை துணையாக உள்ளன. சாதிகளுக்கிடையே ஒற்றுமை இருப்பது உண்மைதான். இது சுயநலத்தால் விளைந்ததேயல்லாமல் பிறருக்கு உதவவேண்டும் என்ற பொது நல உணர்ச்சியால் அல்ல. ஒன்றுக்கு ஒன்று சாதகமாக இருப்பதாலும், பிரதிபலன் தரக் கூடியதாக இருப்பதாலும் ஒற்றுமை ஏற்படுகிறது எனலாம். ஆகையால் பொருளாதாரத் தொடர்புகளில் மாற்றம் ஏற்பட்டால் சாதிமுறை அதனால் அழிந்து விடுவதில்லை. இதனை கௌல்ட் (Gould 1961) தெளிவாகக் கூறுகிறார். நாட்டின் தொழில் வளர்ச்சியால் தோன்றும் மாற்றங்கள் பாரம்பரியமாக அமைந்துள்ள தொழிற்பயிற்சியையும், தொழில் பகிர்வு முறையையும் மாற்றி அமைக்கக்கூடும். ஆனால் சாதிமுறை தொடர்ந்து நீடித்து வரும். அதிகார வர்க்க ஆட்சி உடைய (bureaucratic society) சமூகத்திலும் சாதி அடிப்படையில் தனி உறவுகள் தொடர்ந்து நீடிக்கக் கூடும். உறவினர்களுக்குச் சலுகைகள் வழங்கும் வகையில் சாதி முறையினும் மேம்பட்ட ஒரு முறையைக் காண்பது அரிது.

ஒரிஸ்ஸாவில் பிசிபாரா (Bisipara) என்னும் கிராமத்தில் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் பெய்லி(Baileey)யும் இதைப்போன்ற முடிவுக்கு வந்துள்ளார். கடந்த நூற்றாண்டுகளில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார மாற்றங்கள் அந்தக் கிராமத்தில் உள்ள சாதிகளைப் பெரிதும் பாதித்துள்ளன. இருந்தபோதிலும், "ஒப்புமையாக நோக்கும்போது சாதியானது மாறவில்லை. ஆனால் அதன் உள் அமைப்பில் அடிப்படைமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதன் அரசியல் பொருளாதாரச் செயல் ஆக்கங்கள் குறைந்துள்ளன." (1957-பக். 275)

மரபாக அமைந்த சாதிமுறையில் தொழில் (Occupation) முக்கிய இடத்தைப் பெற்று இருந்தது. ஆனால் இன்றைய நிலை அப்படி இல்லை. அவ்வாறே மதச்சடங்குகள் அடிப்படையில் முக்கியமான ஒரு சமூகப் பிரிவாகச் சாதிமுறை அன்றைக்கு இருந்தது. ஆனால் அவ்வாறு இன்று கருதப்படவில்லை. இன்றைய சமூகத்தில் அரசியலின் ஒரு பிரிவு என்ற வகையில் சாதி புத்துயிர் பெற்றுள்ளது.[27] வெவ்வேறு சாதியினர் சேர்ந்து உண்பதில் உள்ள சாதித் தடைகள் இன்னும்பல கிராமங்களில் நிலவுகின்றன. எல்லாவற்றையும்விட முக்கியமாக சாதிக்குள் அமைந்த அகமண முறை (Endogamy) இன்னும் பின்பற்றப்படுகிறது. இம்முறை சாதியைக் கிராமங்களிலும் நகரங்களிலும் பட்டணங்களிலும் சிதைவுறாமல் பாதுகாக்கின்றது. ஒருவன் தன்னுடைய சாதியில்

27 'Caste and Political Actions' என்ற என்னுடைய கட்டுரையில் இக் கருத்தை மேலும் தெளிவாக விவரித்துள்ளேன்.

(அதன் உட் பிரிவுகளில்) பெண் கொள்ளுகின்றவரை அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அந்தச் சாதியைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் எந்தத்தொழிலை மேற்கொண்டாலும், யாருடன் உணவு அருந்தியபோதிலும், யாருடன் பழகிய போதிலும், அவை அவர்களுடையசாதியைப் பாதிப்பது இல்லை. அவ்வப்போது சாதியினுடைய போக்கு மாற்றப்பட்டுள்ளதே தவிர அது இன்றுவரை நசித்துவிடவில்லை.

7. ஏகக்குடும்பமும், சாதியும், பொருளாதார முன்னேற்றமும்

இந்தியாவின் பொருளாதார நிலைமை பிற்போக்காக இருப்பதற்கு சாதியும், ஏகக்குடும்பமும்தான் காரணமென்று சில பொருளாதார வரலாற்று அறிஞர்கள் குறை கூறுகின்றனர். இது அவர்களுக்குச் சாதியின் மீதும், ஏகக் குடும்பத்தின் மீதும் உள்ள சீற்றத்தை எடுத்துக் காட்டுகிறதேயல்லாமல் அவர்களது சமூகவியல் நுண்ணறிவைக் காட்டவில்லை. வீரா அன்ஸ்டே (Vera Anstey), *1949*, இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறார். பொருளாதார முன்னேற்றத்திற்கான தடைகள் "மக்களது அன்றாட வாழ்விலும், பழக்க வழக்கங்களிலும். சமூக அமைப்பிலும் வேரூன்றி இருக்கின்றன." என்று வலியுறுத்திக் கூறுகிறார். (பக். 8) அவர் சாதி அடிப்படையில் அமைந்த ஏற்றத்தாழ்வுகளையும் (பக். 52-54) இந்துக்களின் மதச்சார்புடைய பிற்போக்கு மனப்பான்மையையும் (பக். 53). சிறுவர்களிடையே பாலுணர்ச்சியைத் தூண்டக்கூடிய அளவில் மக்கள் கொண்டுள்ள மிதமிஞ்சிய சிற்றின்பத் தோய்வையும், ஆண் பெண் இருபாலாரிடையேயும் மிகப் பரவலாக உள்ள மேக நோயையும், சோரமுற்ற ஆண்களின் ஒழுக்கக்குறைவான நடத்தையையும் கண்டனம் செய்கிறார் (பக். 58) இன்னும் பல பழக்க வழக்கங்களையும் குறை கூறியுள்ளார். அவற்றுள் பசுவை வணங்குதலும் ஒன்றாகும். (பக். 54)

வீரா அன்ஸ்டேயின் விமரிசனம் சொற் கோவையால் மூடப்பெற்று இருப்பதால் அதன் உட்கருத்தை விளக்க வேண்டியது அவசியமாகும். அது ஏகக் குடும்பம், சாதி, அவற்றுடன் தொடர்புடைய நிறுவனங்கள் முதலியவற்றைப் பற்றியதாகும்.

ஒருவருடைய ஆக்கமுயற்சியை ஏகக் குடும்பம் அழித்து விடுகின்றது. ஏகக் குடும்பத்தில் குடும்பத்தலைவரின் (கர்த்தாவின்) விருப்பத்தையும், இதர உறுப்பினர்களின் விருப்பத்தையும் புறக்கணிப்பதோ, தான் விரும்பிய தொழிலை மேற்கொள்ளுவதோ இயலாத காரியம். உறுப்பினராக இருக்கின்றவரை, குடும்ப

கௌரவத்தையோ, ஏகக் குடும்ப அமைப்பின் தேவைகளையோ புறக்கணிக்கமுடியாது. ஈட்டியப்பொருளின் முழுப்பலனை ஒருவர் அனுபவிக்க முடியாது. பொருள் ஈட்டியதற்காக அவர் பாராட்டப் படுவதும் இல்லை. இதனால் திறன் உடையவர்களின் பொருளீட்டும் ஆர்வம் குறைகிறது, சோம்பல் வளருகிறது, பெண்கள் ஆக்க வேலைகளில் ஈடுபட முடியாமல் தடுக்கப்படுகின்றனர்.

விரும்பிய தொழிலை மேற்கொள்ளும் உரிமையை சாதி அளிப்பதில்லை. போட்டி மனப்பான்மையும் வளருவது இல்லை. மேலை நாடுகளின் வளத்திற்கு இம்மனப்பான்மை அடிப்படையாக அமைந்துள்ளதை உணரவேண்டும். இந்தியாவில் தொழில்கள் (occupations) பாரம்பரிய அடிப்படையில் மேற்கொள்ளப் படுகின்றன. இதனால் புதிய திறன்களைப் பெறுவதற்கான ஊக்கம் அளிக்கப்படவில்லை. தொழில் நுட்பப் புதுமைகளைக் காண இயலாமையால் பொருளாதார முன்னேற்றம் தடைப்படுகிறது.

மத நம்பிக்கைகள், [எல்லா உயிர்களையும் மதித்தல் 'கர்மம்' அல்லது விதிக்கோட்பாடுகள்] சமூகப் பழக்க வழக்கங்கள் [குமரப் பருவத்தில் மணம் புரிதல், வரதட்சிணை கொடுத்தல், சடங்கு விருதுகள்] முதலியன பிற்போக்கான மனப்பான்மையை வளர்த்து விடுவதுடன் வாழ்க்கையில் போதுமென்ற மானப்பான்மையை ஏற்படுத்தி, அதனால் தொழில் துணிவை வளரவிடாமல் செய்து, வீண் செலவையும், அதிக (மக்கள்) பிறப்பு வீதத்தையும் ஏற்படுத்து கின்றன. இக்காரணிகள் பொருளாதாரப் பிற்போக்கு சக்திகளை வலுப்படுத்துகின்றன.

மேலே கூறியபடி சமூக நிறுவனங்கள், சமூகப் பழக்க வழக்கங்கள் முதலியன பொருளாதார முன்னேற்ற வேகத்தைக் குறைக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.[28] இந்திய ஏகக்குடும்ப வாழ்க்கையில் சமதர்மக் கோட்பாடுகள் பொதிந்

[28] இக்கருத்தைச் சிலர் ஏற்கவில்லை. தொழில் முன்னேற்றத்திற்கு ஏகக்குடும்பம் ஒரு தடையாக அமையவில்லை என்று சில எழுத்தாளர்கள் கருதுகின்றனர். வலிவுடன் அமைந்த குடும்பமுறை தொழில் வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்காது என்றும், குடும்ப உறுப்பினர்களுக்குச் சலுகை காட்டுவது தொழில் வளர்ச்சியைப் பாதிக்காது என்றும் கருதுகின்றனர். அப்படி சலுகை காட்டுவதால் தொழில் பாதிக்கும் என்றால் அதை எந்த வகையிலும், எந்தத் துறையிலும் ஏற்றுக்கொள்ளுவது தவறாகும். தொழில்துறையில் முன்னணியில் உள்ள அமெரிக்காவில் (U.S.A) சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில், தொழில் துறையிலும், அரசியல் துறையிலும் மலிந்துள்ள சலுகைகளை எவ்வாறு விளக்கிக் கூறமுடியும்? அல்லது ஆசியாவிலேயே தொழில் துறையில் சிறந்து விளங்கும் ஜப்பானின் தொழில் வளர்ச்சியை எவ்வாறு விளக்கிக் கூறமுடியும்? "எனவே நாம் ஏற்கவேண்டிய முடிவு இவ்வாறு இருக்கவேண்டும். தொழில் சமூகங்கள் பல வகையானவை. அவைகளிடையே—தொழில், அரசியல், குடும்பம் முதலியன—உள்ள தொடர்புகள் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறாக அமையும் என்பதையும் அறியலாம்" நிம்காஃப் (Nimkoff) 1960. பக். 118.

துள்ளன என்பதை ஓரளவிற்கு உயர்வு நவிற்சி கூற்ருகக் கருத வேண்டும்.[29] ஆனால், இந்தியாவின் இப்போதையப் பொருளாதாரப் பிற்போக்கிற்கு புராதன சமூக நிறுவனங்களை மட்டும் குறை கூறுவது வரலாற்று உண்மைகளைத் திரித்துக் கூறுவதாக அமையும். குடியேற்ற நாடுகளின் அரசியல் பொருளாதார நலன்கள் அவைகளின் மேம்பாட்டிற்காக அல்லாமல், அவற்றை ஆளும் நாட்டின் மேம்பாட்டிற்குத் துணைசெய்யும் வகையில் அமைந்துள்ளன. பிரிட்டிஷ் ஆட்சியில் ஏற்பட்ட இந்தியாவில் பொருளாதார வீழ்ச்சியைப்பற்றி ஆர். சி. டட் (R. C. Dutt) *[1956-*(a) and (b)*]* போன்ற பொருளாதார வரலாற்று அறிஞர்கள் தெளிவுபட எழுதியிருக்கிருர்கள். உண்மையில் இவ்வீழ்ச்சி மொகலாயப் பேரரசின் காலத்திலிருந்தே தொடங்கியதாகக் கூறுவர். (காண்க: தாராசந்த் : முன்கூறியபடி)

சமூக நிறுவனங்களான சாதி, ஏகக் குடும்பம் முதலியன இதர காரணிகளுடன் சேர்ந்து இந்தியப் பொருளாதாரத்தின் முன்னேற்ற வேகத்தைக் குறைத்துள்ளன என்று பொருளாதார, சமூக வரலாற்று அறிஞர்கள் கூறுவர். இது ஏற்கக்கூடியதாக உள்ளது. ஆனால் இவைதாம் பொருளாதார முன்னேற்றத்தைத் தடை செய்து விட்டதாக வலியுறுத்துவது தவறு. அப்படிக் கூறுவது சமூக நிறுவனங்களுக்குத் தேவையில்லாத முக்கியத்துவத்தைக் கொடுத்ததாக அமைவதுடன், இவை காலத்தால் மாற்றம் அடையாமல் இருந்துள்ளன என்பதை ஏற்றுக்கொண்டதாகவும் அமையும். உண்மையில் அரசியல், பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்பச் சாதியும், ஏகக் குடும்பமும் காலத்தோடு மாறிக்கொண்டே வந்துள்ளன. இது இந்தியாவிற்கு மட்டுமன்றி ஏனைய நாடுகளுக்கும் பொருந்தும். லூயிஸ் இக்கருத்தைத் தெளிவுபடுத்துகிருர். "ஒரு சமுதாயம் வளம் அடைந்து வரும் நிலையில் குடும்பம் என்ற எண்ணம் குறுகி விடுவதுண்டு." ஏழ்மை நிலையில், குறைந்த வருவாயை உடைய சமூகத்தில் பெரிய குடும்பங்கள் பொதுநலப் பாதுகாப்பு அளிக்கும் அமைப்புக்களாக உள்ளன." (பக். 113) இப்போது இந்தியாவில் உள்ள ஏகக் குடும்பங்கள் இதற்கு விளக்கம் தருவனவாக அமைந்துள்ளன.[30]

29 "சமதர்ம இலட்சியங்களின் பொருளாதாரக் கூறுகளுக்குத் தீர்வு காணும வகையில் சீனு, இந்தியா ஆகிய நாடுகளில் குடும்பம் அமைந்துள்ளது. எல்லோருடைய நலனுக்காகத் தனி ஒருவருடைய வருவாய் செலவிடப்படுகிறது. ஒருவகையான சமதர்மத் தத்துவம் இக்குடும்ப அமைப்புக்களில் செயல்படுகின்றது. அதே சமயம் தனி ஒருவரின் முக்கியத்துவம் இழக்கப்படவில்லை." முகர்ஜி 1922. பக். 5.

30 உத்தரப்பிரதேசத்தில் ஃபைஸாபாத் (Fysabad) மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் உள்ள பெண்கள் இந்து வாரிசுரிமைச் சட்டத்தை அறிந்த பின்னர், நெடுங் காலமாக நிலவிவரும் முறைக்கு மாருக, அதாவது புக்கக(Virilocal)மான மாமனர் வீட்டில் வாழ்ந்துவரும் முறைக்கு மாருக, தற்போது பிறந்தகமான தாயகத்திலேயே (Uxorilocal) வாழ விரும்புகிருர்கள். இதை டாக்டர் ஹெரால்ட். ஏ. கொல்ட் (Dr. Harold A. Gould) என்பவர் குறிப்பிடுகிருர். (இக்கட்டுரை ஆசிரியர் இவருக்குத் தனிப்பட்ட முறையில் தாம் கடமைப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.)

இந்தியச் சமூகத்தைப் பல அரசியல், பொருளாதார மாற்றங்கள் பாதித்து உள்ளன. இம்மாற்றங்களுக்கு ஏற்ப சாதியின் அரசியல், பொருளாதாரப் பணிகளும் மாறிக்கொண்டே வந்துள்ளன. சாதியின் இத்தன்மைதான் இதனை இன்றுவரை தொடர்ந்து நீடிக்க உதவியுள்ளது. இந்தியாவில் தற்போது தொழில் அடிப்படையிலும், மக்கள் ஆட்சியின் அடிப்படையிலும் புதிய சமூகம் ஒன்று உருவாகி வருகிறது. இப்புதிய அமைப்பு சாதிச் சமூகத்தில் உயரமுடியும் என்ற நம்பிக்கையில்லாதவர்களுக்குப் புதிய நம்பிக்கையை ஊட்டும் வகையில் அமைந்துள்ளது, சாதிச் சமூகத்தின் உயர்ந்த நிலையில் (இந்நிலை தற்சமயம் வலி குன்றியுள்ளது) உள்ளவர்களுக்கும், "இரு பிறப்பாளர்களின்" உயர்ந்த நிலையைத் தங்களால் என்றுமே எய்தமுடியாது என்று நம்பிக்கை இழந்து (சாதிச் சமூகத்தில்) கீழ்நிலையில் வாழ்வோர்களுக்கும், புதிய நம்பிக்கையை ஊட்டும் வகையில் இது அடைந்து உள்ளது.

ஏகக் குடும்பமும், சாதியும், சமூகத்தின் இதர அமைப்புக்களுடன் இணக்கமான வகையில் அமைந்து மரபாக வரும் அமைப்புக்களாகும். வேளாண்மையும், கைவினைத் தொழிலும் இதன் பொருளாதார அடிப்படையாக அமைந்துள்ளன. இந்த நிறுவனங்களைக் கொண்ட ஒரு சிறந்த சமூக அமைப்பாகக் கிராம சமுதாயம் விளங்குகிறது. இவ்விரு நிறுவனங்களும், மாற்றம் அடையாமல் அப்படியே இருந்து இருக்குமேயானல் இவை செயலாற்ற முடியாமற் போயிருக்கும். இவை மாற்றங்களைத் தடுக்கவில்லை; ஏற்றுக்கொண்டன. தடுத்து இருந்தால் இவை அழிந்து போயிருக்கும். பொருளாதார முன்னேற்றத்திற்கும், இதர முன்னேற்றங்களுக்கும் ஏற்ப இவை சிறிதளவாவது மாற்றம் அடைந்து வந்தமையால்தான் இன்றுவரை அழிந்து விடாமல் இருக்கக்காண்கிறோம். இவை பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கும் வகையில் அமையவில்லை. இருந்தபோதிலும் அதன் வேகத்தையும், புறவடிவத்தையும் மாற்றும் சக்தியை இவை பெற்றுள்ளன.

4. கிராமச் சமுதாயம்

வி. பி. சிங் (V. B. SINGH)

இந்திய சமூக மரபுரிமையின் பேருகக் கிராமச் சமுதாயம் அமைந்துள்ளது.[1]. ரிக்கு வேதத்தில் இது தெளிவாகவிவரிக்கப் பட்டுள்ளது. கிராம அமைப்பைப் பற்றிய விவரங்கள் பௌத்த ஜாதகக் (Jatak) கதைகளிலும் கௌடில்லியத்திலும் காணலாம். டாக்டர் இராதா கமல் முகர்ஜியின் 'கீழ்த்திசை நாடுகளில் மக்கள் ஆட்சி' (Democracies of the East) (பக். *238-41*) என்ற நூலில் கிராமச் சமுதாயத்தில் காணக் கூடிய ஆரிய, முண்டா திராவிட (Munda-Dravidian) இயல்புகளைப் பற்றி விவரிக்கிருர்.[2]

1. நோக்கம்

முக்கியமாக *1857* முதல் *1956* வரையில் உள்ள காலத்தை எடுத்துக் கொள்வோம். *1870* முதல் *1900* வரையில் உள்ள காலத்தில் கிராமச் சமுதாயத்தைப் பற்றி சில முக்கிய நூல் கள் வெளிவந்தன. இவற்றில் முக்கியமானவை பின்வருமாறு: ஸர் ஹென்றி மெய்ன் (Sir Henry Maine) எழுதிய கீழ்த்திசை மேல்திசை நாடுகளில் கிராமச் சமுதாயங்கள்' (Village Communities in the East and the West) *(1871)* என்ற நூலும், பி. எச். பேடன் பௌவல் எழுதிய (B. H. Baden-Powele)

[1] பார்க்கவும், ஓ'மாலி எல். எஸ். எஸ். [O'Malley L. S. S.] எழுதிய இந்தியவின் சமூக மரபுரிமை **(India's Social Heritage)** ஆக்ஸ்போர்ட் (1934)

[2] இக்கட்டுரை ஆசிரியரின் ''மாறுபட்டு வருகின்ற கிராமச் சமுதாய வகைகள் Changing patterns of Indian Village Community) என்ற கட்டுரை **Agra University Journal of Research Vol. III,** டிசம்பர், 1955-ல் வெளிவந்ததைப் பார்க்கவும். இக்கட்டுரையின் முக்கியக் கருத்துக்கள் அதனைச்சார்ந்துள்ளன.

'இந்தியக் கிராமச் சமுதாயம்' (The Indian Village Community) *(1896)* என்ற நூலும் குறிப்பிடத்தக்கவை. இதற்குப் பின்னர் அவர் எழுதிய 'இந்தியக் கிராமச் சமுதாயத்தின் தோற்றமும், வளர்ச்சியும்' (The Origin and Growth of the Village Communities in India 1899.) என்ற நூல் சிறியதாக இருந்த போதிலும், பிரசித்தி பெற்று விளங்குகிறது.

இன்றைக்கும் கிராமங்கள் செறிந்த நாடாக இந்தியா விளங்குகிறது. இருந்த போதிலும், எல்லோரும் ஏற்கக்கூடிய வகையில் கிராமத்திற்கு ஒரு இலக்கணம் (definition) இல்லை. பொதுவாக இது ஒரு நிலப்பரப்பைக் குறிப்பதாகக் கருதலாம்; அதாவது மக்கள் வாழ்கின்ற இடத்தையும், சாகுபடி நிலத்தையும், மேய்ச்சல் நிலத்தையும், புறம்போக்கு நிலத்தையும் குறிப்பதாகக் கருதலாம். சமூக வாழ்க்கைக்கு அடிப்படையான ஒரு அலகாக கிராமம் அமைந்துள்ளது. ஒவ்வொரு கிராமமும் சுய ஆதரவில் அமைந்த சமுதாயமாக உள்ளது. அதன் உறுப்பினர்கள் ஒரு முதல் நிலைக் குழுவாக உள்ளனர். கிராமத்தைப் பற்றி சார்லஸ் எச். கூலி (Charles H. Cooley) அவர்கள் கூறியதை நாம் ஏற்றுக் கொள்ளலாம். பொதுவானக் கூட்டு வாழ்க்கைக்காக ஏற்பட்ட அமைப்புக்களில் இது முதல் நிலைக் குழுவாகும். இது குறைந்த அளவு உறுப்பினர்களை உடையது. இவர்கள் ஒருவருக் கொருவர் தோழமையுடன் பழகவும், உதவிசெய்து கொள்ளவும் கூடியவர்கள். தங்களுடையப் பொதுவான பிரச்சினைகளை விவாதித்துத் தீர்வு காண்பார்கள் இது சமூக அமைப்பின் முதல் நிலைக் கூறாக உள்ளது. [3]

இந்தியாவில் உள்ள கிராமங்கள் இரு வகைப்படும். *(அ)* பஞ்சாப், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் காணக்கூடிய கூட்டுக்கிராமங்களை (Joint Village) ஒரு வகையாகவும், *(ஆ)* ஏனைய மாநிலங்களில் காணக்கூடிய 'இரயத்துவாரி' அல்லது பன்மைக் (Severality) கிராமங்களை மற்றொரு வகையாகவும் கூறலாம். முதலாவதாகக் கூறிய கூட்டுக்கிராமங்களில் "அமைப்பு உடையதும், சொத்துரிமை பெற்றதுமான நிறுவனத்தின் *(ஸ்தாபனத்தின்)* கூட்டுச் சொத்தாக கிராம நிலங்கள் உள்ளன." எனவே அவைகளைக் கூட்டுக்கிராமங்கள் என்று அழைக்கலாம்" என ஓ. மாலி கூறுகிறார். அத்தகைய சொத்துரிமை 'சகோதரத்துவ' அடிப்படையில் அமைந்துள்ளது. இதன் தோற்றுவாய் இதனை மேலும் விளக்கக் கூடும்.

[3] C. H. Cooley, Social Organisation, New York, 1909.

ஒரு பொதுவான மூதாதையின் வழிவந்த உறவினர்கள் இவ்வமைப்பின் உறுப்பினர்களாக இருந்தார்கள். பிற்காலத்தில் கிராம நிலத்தின் ஒரு பகுதி, பிற குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு மாற்றப்பட்டது. அப்போது சகோதரத்துவம் என்ற சொல் விரிவடைந்த பொருளுடன் ஆளப்பட்டது. அது உறவினர்களின் கூட்டத்தைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப் படவில்லை. குறிப்பிட்ட நிலப்பரப்பில் எழக்கூடிய பொதுவான [உரிமை] நலனைக் குறிக்கும் வகையில் 'சகோதரத்துவம்' என்ற சொல் ஆளப்பட்டது.[4]

இரயத்துவாரி (பன்மை) கிராமங்களின் தோற்றம்பற்றிக் கருத்து வேறுபாடு நிலவுகின்றது. இரயத்துவாரி கிராமங்கள் பழங்குடி இனத்தினின்றும் தோன்றியதாக பேடன் பௌவலும், அவரது கருத்தை ஆதரிப்பவர்களும் கருதுகிறார்கள். பழங்குடி இனங்களின் குழுவால் கிராமம் உருவாக்கப் படுகிறது. அங்குள்ள நிலத்தை வெவ்வேறு குடும்பங்களுக்கும் பகிர்ந்து கொடுக்கின்ற பொறுப்பு அதன் தலைவருடையதாகும். ஜே. டி. மெய்ன் (J. D. Mayne) அவர்கள் (இந்து நியதி Hindu Law 7-ம் அத்தியாயம்) மற்றொரு விளக்கம் தருகிறார். அவருடைய கருத்தை ஸர் பால் விநோகிரடாஃப் (Sir Paul Vinogradoff.) ஆதரிக்கிறார். (வரலாற்றுச் சட்டவியல் முதல் தொகுப்பு பக். 325. Historical Jurisprudence) மேற்கு இந்தியாவிலும், மத்திய இந்தியாவிலும் கிராம நிறுவனங்கள் அழிந்து போனமைக்கு மகமதியர்கள். மராத்தி

4 **O'Malley L. S. S.** (முன்கூறியபடி—பக். 102.3) மேலும் கூறுகிறார் "சொத்துரிமை உடைய உறுப்பினர்களின் அமைப்பு பிரிவுகளாகவும், உட்பிரிவுகளாகவும் அமைந்துள்ளன. இவை ஒவ்வொன்றும் சாகுபடி நிலத்தின் பங்குகளைப் பெற்று பிரிக்கப்பட்டு இருந்தன. ஏகக் குடும்ப முறையின் சொத்துப்பேறு, பாகப்பிரிவினை நியதிகளுக்கு ஏற்ப ஒவ்வொரு பகுதியின் பங்குகளும் அமைந்துள்ளன. நிலம் குடும்பங்களின் கூட்டு உடைமையாக இருந்தது. நிலம் உடைமை தனி ஒருவருக்கு அளிக்கப்படவில்லை. மேற் கூறியபடி சாகுபடி நிலம் மட்டுமே பிரிவினைக்குட்பட்டது. கிராமத்தின் இதர பகுதிகள்—வசிக்கின்ற இடம், புறம்போக்கு நிலம், மேய்ச்சல் நிலம் முதலியன—பிரிக்கப்படவில்லை. இவை முழுக் கிராம அமைப்பின் உடைமையாகவும், கூட்டுச் சொத்தாகவும் கருதப்பட்டன. இது பங்காளிகளின் கூட்டைவிட ஒருபடி மேலானது. இதை நிருவாகத்திற்காக ஏற்பட்ட ஒரு கூட்டு நிறுவனமாகக் (**Corporation**) கருதலாம். நிலவரியைச் செலுத்துகின்ற பொறுப்பை இது ஏற்றுள்ளது. சாதாரணமாக கிராம நிருவாகப் பொறுப்பை, பிரதிநிதிகள் சபை—பஞ்சாயத்து—மேற்கொள்ளும். இருந்தபோதிலும் நிலவரியை வசூலிக்கவும், செலுத்தவும் அரசாங்கத்தின் பதிலாளி ஒருவர் நியமிக்கப்படுவதுண்டு. இவரைக் கிராமத் தலைவர் என்று அழைப்பர். நாளடைவில் ஏனைய பதவிகளைப் போன்று கிராமத் தலைவர் பதவியையும் ஒரு குடும்பத்தின் பரம்பரை உரிமையாக்கிவிட்டது.

"இவ்வகைக் கிராமங்களை ஐக்கிய மாகாணங்களில் (தற்போது உத்தரப் பிரதேசம்) 'பாத்திதாரி' **Pattidari** என்று அழைக்கின்றார்கள். இது தவிர வேறு வகையான கூட்டுக் கிராமங்களும் இருக்கின்றன. அவை எண்ணிக்கையில் குறைவானவை. அதை ஜமீன்தாரி என்று அழைக்கலாம். இங்கு கிராம நிலங்கள் பிரிக்கப்படாமல் பொதுவான நிருவாகத்தின்கீழ் அமைந்து இருக்கின்றன." (முன் குறிப்பின்படி, பக். 103).

யர்கள், பிந்தாரிகள் (Pindaris) முதலியவர்களால் ஏற்பட்ட போரும், நாசவேலைகளும் காரணமாகும். ஆனால், தமிழ் நாட்டில் இவ்வாறு கிராம நிறுவனங்கள் அழிக்கப்படாமையால் நிலவுடைமை பெற்றுள்ள ஒவ்வொருவரும் தனித்தனியாக நிலவரி செலுத்தலாயினர். [கிராமம் முழுவதற்கும் அல்ல] கிராமம் முழுவதற்கும் நிலவரி செலுத்துகிற பழக்கம் ஒரு காலத்தில் இருந்து இருக்கக்கூடும். (தற்சமயம் அவ்வாறு இல்லை.) [5] ஆந்திரம், தமிழ்நாடு. கேரளம், குஜராத் மகாராஷ்டிரம், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இரயத்துவாரிக்கிராமங்களைக் காணலாம். இரயத்துவாரிக் கிராமங்களுக்கும், கூட்டுக் கிராமங்களுக்கும் இடையே உள்ள இரு பொதுவான கூறுகளைக் குறிப்பிடலாம். அவையாவன; (அ) கிராமத்தின் பொதுச் செலவுகளுக்காகப் பொது கிராமநிதி இருந்தது. இதன் வருவாய் பல இனங்களிலிருந்தும் பெறப் பட்டது. முக்கியமாக நிலக்குத்தகை, மீன் இனங்கள், மரங் கள், மேய்த்தல், சந்தை முதலியன. (ஆ) பஞ்சாயத்து.

2. சிதைவுறுதல்

ஸர் ஹென்றி மெய்ன் (Sir Henry Maine), லாரன்ஸ் பிரபு (Lord Laurence), மெக்டால்ப் பிரபு (Lord Mactalf) திரு. மெக்கென்ஸி (Mr. Mackenzie) ஆகியவர்கள் இந்தியக் கிராமச் சமுதாயத்தைப்பற்றிக் கூறியுள்ளக் கருத்துக்களை யாவரும் அறிவார்கள். அவைகளை இங்குத் திரும்பவும் கூறவேண்டிய அவசியம் இல்லை. இந்தியக் கிராமச் சமுதாயம் எளிய முறையில் உற்பத்தி செய்து வருவதை மார்க்ஸ் (Marx) தெளிவாக விளக்கிக் கூறுகிறார். "மிகவும் புராதனமான இந்தச் சமுதாயங்கள் சிறிய அளவில் அமைந்துள்ளன. அவைகளில் சில இன்றுவரை தொடர்ந்து நீடிக்கின்றன. அங்கு நிலம் பொதுவான உடமையாகக் கருதப்பட்டது. வேளாண்மையும் கைநுட்பத் தொழிலும் பிணைக்கப்பட்டு இருந்தன. இவை மாற்றமுறாத தொழில் பகுப்பு முறையின் (Division of Labour) அடிப்படையில் உருவாக்கப்பட்டன. புதிதாகத் தோன்றக் கூடிய சமுதாயத்திற்கு முன்னேற்பாடாக அமைந்தத் திட்டமாக இது உள்ளது. இது குறைந்தது 100 ஏக்கர் முதல் அதிக பட்சம் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பை உடைய தாக இருக்கும். ஒவ்வொரு சமுதாயமும் சுய தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் முழு அமைப்பாக இயங்கும்.

[5] பார்க்கவும் : ஓ'மாலி எல். எஸ். எஸ். பக். 108.9.

உற்பத்தியின் பெரும்பாலான பகுதிகள் சமுதாயத்தால் நேரிடையாக உபயோகிக்கப் படுகின்றன. பண்டங்கள் விற்பனைக்காக ஆக்கப் படுவதில்லை. கிராமச் சமுதாயத்தின் உற்பத்தி தன்னிச்சையாக நடைபெறக் கூடியது. இந்தியச் சமூகத்தின் பிற பகுதிகளில் காணக்கூடிய பண்டமாற்று முறையும், தொழில் பகுப்பு முறையும் இதனைப் பாதிக்கவில்லை. நுகர்வு போக எஞ்சியுள்ள பொருள்களை விற்பனை செய்வதற்கு முன்னர், (அதில்) ஒரு பகுதியை அரசாங்கத்திற்குத் திரையாகச் செலுத்த வேண்டும்.

இப் பழக்கம் நெடுங்காலமாக நிலவி வருகிறது. இந்தச் சமுதாயங்களின் உள் அமைப்பு இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளில், வெவ்வேறு விதமாக உள்ளன. இவற்றில் மிக எளிய அமைப்புக்களில் நிலத்தைப் பொதுவாகப் பயிரிடுகிறார்கள். உற்பத்தியை எல்லோரும் பகிர்ந்து கொள்ளுகிறார்கள் அதேசமயம் நூற்றலும், நெய்தலும் ஒரு குடும்பத்தின் துணைத் தொழில்களாக மேற்கொள்ளப் படுகின்றன. இவ்வாறாகப் பல வேலைகளிலும் ஈடுபட்டவர்கள் ஒருபுறம் இருக்கின்றனர். இவர்களின் 'தலைவராக' உள்ளவர் நீதிபதியாகவும், காவலராகவும், வரி வசூலிப்பவராகவும் இருப்பார். ஏனைய தொழில்களை மேற்கொண்டவர்களையும் காணலாம். கணக்கர் ஆக உள்ளவர் பயிர்த்தொழில் சம்பந்தமான கணக்குகளைப் பதிவாக வைத்துக் கொண்டிருப்பார். குற்றவாளிகளின்மீது வழக்குத்தொடரவும், யாத்திரையாக வந்த அயலார்களைப் பாதுகாப்பதும், தக்கத் துணையுடன் பக்கத்துக் கிராமத்திற்கு அனுப்பி வைப்பதும் ஒரு அலுவலரின் பொறுப்பாகும், கிராம எல்லையை அருகில் உள்ள சமுதாயங்களினின்றும் பாதுகாக்கும் பொறுப்பை எல்லைக் காவலர் மேற்கொண்டு இருப்பர். பொதுவான குளங்களிலிருந்து சாகுபடிக்கான நீரைப் பகிர்ந்து அளிக்கும் பொறுப்பை நீர்க்கண்காணிப்பாளர் மேற்கொண்டு இருப்பார். சமயச் சடங்குகளைச் செய்விப்பவர்கள் பிராமணர்கள். ஆசிரியர் மணற்பரப்பில் சிறுவர்களுக்கு எழுதவும், படிக்கவும் கற்றுக் கொடுப்பார். பஞ்சாங்க பிராமணர் என்று அழைக்கப்படும் சோதிடர் விதை விதைக்கவும், அறுவடை செய்யவும் மற்றும் ஒவ்வொரு சாகுபடி காரியங்களுக்கும் அதிர்ஷ்டமான நாட்களைக் குறித்துக் கொடுப்பார். கருமானும், தச்சனும் வேளாண் கருவிகளைச் செப்பனிட்டுத் தருவார்கள். குயவன் கிராமத்திற்குத் தேவையான மண்பாத்திரங்களைச் செய்து தருவான். மற்றும் கிராமத்திற்கு ஒரு நாவிதனும், துணிகளைச் சுத்தம் செய்யும் வண்ணானும் இருப்பார்கள். வெள்ளி சாமான்கள் செய்யும் பத்தர்களும்

இருப்பார்கள். சில இடங்களில் இவர்கள் கவிஞர்களாகவும் மற்றும் சில இடங்களில் ஆசிரியர்களாகவும். இருப்பார்கள். இவர்கள் யாவரும் சமுதாயத்தின் செலவில். பராமரிக்கப்படு வார்கள். மக்கள் தொகை அதிகரிக்குமேயானுல் புதிய சமு தாயம் உருவாக்கப்படும்.

இது பழைய சமுதாயத்தைப் போன்ற அமைப்பைப் பெற்று இருக்கும். இதில் காணக்கூடிய தொழில் பகுப்புமுறை பொறித் தொழில்களில் காணக்கூடிய தொழில் பகுப்பு முறை யினின்றும் மாறுபட்டது. கிராமச் சமுதாயத்தில் உள்ளத் தொழில் பகுப்பு முறை எளிமையானது. அங்குள்ள கொல்லன், தச்சன் முதலியவர்கள் தங்கள் பிழைப்பிற்காகச் சந்தை தேடி அலேய வேண்டியதில்லே. அவர்களது பணியை ஏற்றுக்கொள்ள நிரந்தரமான வாடிக்கைதாரர்கள் உண்டு. ஒரு கிராமத்தின் அளவிற்கு ஏற்ப 2 அல்லது 3 தச்சர்கள் அல்லது கொல்லர்கள் இருப்பார்கள். இந்தச் சமுதாயங்களில் தொழில் பகுப்பு விதி கள், இயற்கையின் நியதிகளேப்போன்று ஆதிக்கம் பெற்றுள்ளன. கைவினேஞர்களின் தொழில் பட்டறைகள் மாற்றம் இன்றி மரபாக வந்த அமைப்புக்களாக இருக்கும். இவர்களில் சிறப் பாகக் கொல்லர்களேயும் தச்சர்களேயும் குறிப்பிடலாம். இவர்கள் பிறருடைய ஆதிக்கத்திற்குட்படாமல் தன்னிச்சையாக வாழக் கூடியவர்கள். தன்னிறைவு பெற்ற இந்தச் சமுதாயங்களின் உற்பத்தி முறை மிகவும் எளிமையானது. எதிர்பாராத வகை யில் இவை அழிய நேரிட்டபோதிலும், உடனடியாகத் திரும்ப வும் இவை அதே இடத்தில் தோன்றி, அதேமாதிரியாக, அதே பெயருடன் செயல்படக் கூடியவை. உற்பத்தி பாதிக்கப் படுவதில்லே. இந்த அமைப்புமுறை எளிமையானது. இதனுல் தான் ஆசியாவில் உள்ள சமூகங்கள் மாற்றம் இன்றி இருக் கின்றன. ஆசியாவில் இடைவிடாது பல அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அரசுகள் (States) தோன்றியும், மறைந்தும் உள்ளன. அரச பரம்பரையினர்கள் மாறிக்கொண்டே வந்துள் ளனர். இருந்தபோதிலும், அங்குள்ள சமுதாயங்கள், அதன் அமைப்பு முறைகள் மாற்றம் இன்றி இருக்கின்றன. அரசியல் மாற்றங்கள் சமூக அமைப்புகளேயோ, பொருளாதார அமைப்பு களேயோ பாதிப்பதில்லே. அரசியல் வானத்தைப் புயல் மேகங் கள் சூழ்ந்தபோதிலும், பொருளாதார அமைப்புமுறையின் கூறுகள் மாற்றம் அடைவதில்லே,[6]

கருத்து விளக்கம்: கிராமச் சமுதாயத்தின் சீர்குலேவிற்குக் காரணிகளாக அமைந்தவைகளேக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன்

6 Marx. K., Capital தொகுப்பு-I, மாஸ்கோ 1954, பக். 357.8.

மேலே உள்ள பகுதிகளில் சிலவற்றைக் குறித்துக்கொண்டு அவற்றிற்கான கருத்து விளக்கங்களைக் காணவேண்டும். அவைகள் பின்வருமாறு; (அ) "[புராதன இந்தியச் சமுதாயங்கள்] சில இன்று வரை தொடர்ந்து நீடிக்கின்றன" என்பதால் ஏனைய சமுதாயங்கள் சிதைவுற்று உள்ளதைக் குறிப்பால் அறிகிறோம். (ஆ) "இதனின்றும் எஞ்சியவைமட்டுமே விற்பனைக்குரிய பண்டங்களாகக் கருதப்பட்டன. அதில்கூட அரசாங்கத்திற்கு ஒரு பகுதியைத் திறையாகக் கொடுக்கும்வரை அப்படிக் கருதுவதற்கில்லை" இது உற்பத்திக்கு எதிர்மறையாக உள்ளது. (இ) மார்க்ஸ் கூறிய விவரங்கள் 'மிக எளிய அமைப்புக்களுக்கு' மட்டுமே பொருந்தக் கூடியன. சிக்கலான அமைப்புக்கள் இதில் அடங்கவில்லை என்பதும், அவைகளில் உற்பத்திநிலை வேறுவிதமாக இருந்ததையும் குறிக்கின்றது. (ஈ) "மாறுபடாத ஆசியச் சமூகங்கள்" என்று மார்க்ஸ் கூறுவதை ஒப்புமைக் கூற்றாகத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். (உ) மார்க்ஸ் 1853-ம் ஆண்டு ஜூன் மீ 14 உ என்ஜெல்ஸ் (Engels)க்கு எழுதியக் கடிதத்தில் பின் வருமாறு குறிப்பிடுகிறார். "இந்தியாவில் சொத்துப் பிரச்சினை பற்றி ஆங்கில எழுத்தாளர்களிடையே மிகுந்த கருத்து வேறுபாடு இருக்கிறது" என்றும், "கிருஷ்ணா நதிக்குத் தெற்கே மலைகள் பிளவுபட்டப் பகுதிகளில் நிலம் [பராதீனம் செய்யக்கூடிய] சொத்தாக இருந்திருக்கவேண்டும்" என்று வலியுறுத்துகிறார்.[7] (ஊ) இந்தியாவின் புரதானக் கிராமச் சமுதாயங்களின் அழிவிற்கு பிரிட்டிஷாரின் ஆட்சி ஒரு காரணம் என்று மார்க்ஸ் கூறும்போது, பழைமையானப் பொருளாதார அமைப்புக்களின் சிதைவுக்கு வெளிக்காரணிகள் தான் காரணம் என்று குறிப்பிடுகிறார். உள்ளீடான காரணி (களால் இது ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை ஆகையால் இவை)கள் பொறுப்பாக இருக்கமுடியாது. எனவே கிராமச் சமுதாயத்தின் சிதைவுக்கு உள்ளீடாக அமைந்த காரணிகளை ஆய்வதற்கு வேறு ஆதாரங்களைத் தேட வேண்டியிருக்கிறது.

கிராமச் சமுதாயத்தில் இன அடிப்படையில் அல்லாமல், பொருளாதார அடிப்படையில்தான் பிளவுகள் தோன்றியுள்ளன இது வேளாண்மையில் ஈடுபட்ட உயர்நிலை வகுப்பினர்களுக்கும் கீழ்நிலை வகுப்பினர்களுக்கும் உள்ள போராட்டமாகத் திகழ்கிறது. இன அடிப்படையில் பார்க்கும்போது ஒருபுறம் சார்ந்த காரணிகளால் இது தோன்றியதாகக் கருதலாம். ஆனால் கிராமச்சமுதாய அமைப்பில் வறியவர்களும், செல்வந்தர்களும்

7. **Marx Engels Selected Correspondence, (Moscow, 1956) p. 104.**

மேல் வகுப்பினரும், கீழ் வகுப்பினரும், உயர்ந்த சாதியும் தாழ்ந்த சாதியும் இருக்கின்றன. இவைகளுக்கு இடையேயும், இவைகளில் ஒரு பிரிவினுள்ளும் ஏற்படும் பூசல்கள் உள்ளீடாகத் தோன்றும் மாற்றங்களுக்குக் காரணமாகின்றன. இவ்வகையில் மரபாக மேற்கொள்ளப்படும் கருத்து ஒன்றுண்டு. ரோமானியர்களின் படையெடுப்பால் சிதைவுற்ற கிரேக்க அடிமைமுறையைப் போல, பிரிட்டிஷ் ஆட்சியால் கிராமச் சமுதாயங்கள் சிதைவுற்றதெனக் கூறுவர். இந்தியாவில் மறுமலர்ச்சி தோன்றிய காலத்தில், சமூக அரசியல் காரணங்களுக்காக இக்கருத்தை எளிதாக ஏற்றுக்கொண்டனர். இதனால் இந்தியக் கிராமச் சமுதாயத்தின் அழிவிற்குப் பிரிட்டிஷ் ஆட்சி [வெளிக்காரணி] முக்கியக் காரணியாக உள்ளதென்பதை நாம் குறைத்துக் கூற முற்படவில்லை. இப்படி புறம் சார்ந்த காரணிகளை வலியுறுத்துவதால், உள்ளீடாக அமைந்த காரணிகளை நாம் சரியாகப் புரிந்து கொள்ளாமல் போகக்கூடும். எனவே அவைகளில் முக்கியமானவை சில கீழே தொகுத்துக் கொடுக்கப் பட்டுள்ளன.

உள்ளீடாக அமைந்த காரணிகளில் முக்கியமாக உட்பூசல்களைக் குறிப்பிடலாம். வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மேல் நிலை வகுப்பினர்களுக்கு இடையே உதாரணமாக, ஜாகீர்தார், தாலுக்தார் [பண்ணை மானிய பிரபுக்கள்] ஆகியோர்களுக்கு இடையே—உள்ள பூசல்களைக் குறிப்பிடலாம். அயோத்தியில் இதன் காரணமாகப் பல கோட்டைகள் கட்டப்பட்டுள்ளன.[8] அண்மையில் நடத்திய ஆய்வைப்பற்றி டாக்டர் ஆஸ்க்கார் லூயிஸ் [Dr, Oscar Lewis] பின்வருமாறு குறிப்பிடுகிறார். "உட்கட்சி (Faction) உறவினர்களின் அலகாக உள்ளது. அதில் ஒன்று அல்லது அதிகமான ஏக குடும்பங்கள் அல்லது "குன்பா"க் (Kunpa)கள் (ஒரு மூதாதையின் வழிவந்தவர்களை குன்பா என்று கூறுவர்) இருக்கலாம். குடும்பக் குழுவினர் என்ற வகையில்தான் உட்கட்சியின் உறுப்பினர்களாக இருக்கமுடியும், தனிநபர் என்ற வகையில் இதன் உறுப்பினர்களாக இருக்க முடியாது. சிலசமயம் பல 'குன்பா'க்களைச் சேர்ந்தவர்கள் ஒரு விரிவடைந்த குடும்பத்தில் அமையக்கூடும். அத்தகைய விரிவடைந்த குடும்பங்கள் ஒரு உட்கட்சியாக அமையும். சில சமயங்களில் ஒரு குன்பாவைச் சேர்ந்தவர்கள் பல குடும்பங்களில் உறுப்பினர்களாக உள்ள காரணத்தினால் பல உட்கட்சிகளில் இருக்கக் கூடும், உறவின் அடிப்படையில் உட்கட்சி

8 ஃபிஸாபாத் மாவட்ட விவரச்சுவடி (District Gazetteers) தொகுப்பு. 43 எச். ஆர். நீவில் பக். 160.

அமைந்துள்ளது என்பதற்கு தக்க ஆதாரங்கள் உள்ளன. இதுவரை கிடைத்துள்ள ஆதாரங்களிலிருந்து (உடன் பிறந்த) சகோதரர்கள் வெவ்வேறு உட்கட்சிகளில் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் ஒன்று விட்ட சகோதரர்களும், இரண்டுவிட்ட சகோதரர்களும் வெவ்வேறு உட்கட்சிகளில் இருந்ததாக அறிகிறோம். சில சமயங்களில் மூன்றுவிட்ட உடன்பிறந்த 'குன்பா'க்கள் கூட ஒரு அலகாக ஒன்றுபட்டு செயல் படுகின்றன'' [9] உறவுமுறை; இங்கு அதிகமாக வலியுறுத்தப் படுகிறது. எனவே இது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. கிராம உட்கட்சி என்பது ஒரு அதிகாரக் குழுவாகும். அதன் உறுப்பினர்களின் சமூகப் பொருளாதார நலன்களைக் காப்பதற்காக ஏற்பட்டுள்ளது; சில சமயங்களில் வெவ்வேறு கிராம உட்கட்சியினர் வெவ்வேறு அரசியல் கட்சிகளை ஆதரிக்கக் கூடும். ஒரு உட்கட்சியினர் காங்கிரஸ் கட்சியை ஆதரித்தால் இதரகட்சியினர் சோஷலிஸ்ட் கட்சியையோ, கம்யூனிஸ்ட் கட்சியையோ ஆதரிக்கக்கூடும். பிணக்குடைய உட்கட்சிகளின் தலைவர்களாக, கருத்து வேறுபட்ட உடன்பிறந்த சகோதரர்களோ ஒன்றுவிட்ட சகோதரர்களோ இருப்பார்கள். ஒரு குடும்ப உறுப்பினர்களின் நலன்களும், கருத்துக்களும் முரண்படுவதால் உட்கட்சி தோன்றக்கூடும். அவ்வாறே ஒரு குலம் (கோ... அல்லது ஒரு பழங்குடி இனத்தைச் சேர்ந்த உறுப்பின... முரண்படுகின்றபோது உட்கட்சிகள் தோன்றுகின்றன. கிராமச் சமுதாயத்தின் சீர் குலைவிற்கு இது முக்கியக்காரணமாக இருந்துள்ளதை இந்திய வரலாறு முழுவதிலும் காணலாம். அதிகாரங்கள் குவிக்கப்பட்டு இருந்த மொகலாய ஆட்சி இறுதியாகச் சிதைவுற்ற காலத்திலும், [10] பிரிட்டிஷார் ஆதிக்கம் நிலை பெற்ற காலத்திலும் இத்தகைய வளர்ச்சி (உட்கட்சிகளால் கிராம சமுதாயம் சிதைவுறுதல்) அதிகமாக இருந்துள்ளது.

இரண்டாவதாகப் படைமானிய முறையைக் குறிப்பிடலாம் படைமானியப் பிரபுக்கள் ஆடம்பர வாழ்க்கையை மேற்கொண்டு இருந்தார்கள். அவர்களுக்கு இடையே அடிக்கடி போர்கள் மூண்டு வந்தன. எனவே இவர்களுக்கு அதிகப்பணம் தேவைப்பட்டது. அதற்காக (இவர்களால்) சாகுபடியாளர்களும் கைவினைஞர்களும் அதிக வரிச்சுமைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இவ்வாறு கிராம மக்கள் சூறையாடப்பட்டதைக் கிராமத்திற்கு

9 குழு இயக்கநிலை (group dynamics) இந்திய அரசாங்க வெளியீடு பக். 14.15.

10 பார்க்கவும் : ஹபீப் ஐ. எம். (Habib. I. M.) ''மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கான வேளாண் காரணங்கள்'' என்கொயரி—Enquiry நெ. 2, 3.ல் உள்ளது. புதுடெல்லி.

ஏற்பட்ட பேரழிவாகக் கருதவேண்டும். ஆனால், இவைகளைத் தொகுத்துத் தொடர்புடையதாகக் கூறக் கூடிய இணைப்பு ஒன்று இந்திய வரலாற்றில் இடம்பெறவில்லை. உள்ளூரில் ஆங்காங்கே நிலவுகின்ற சில 'கர்ண பரம்பரை கதைகள்' இக்கருத்தை ஆதரிக்கும் வகையில் உள்ளன. சாகுபடியை மேற்கொண்ட கிராம மக்களுக்கு இத்தகைய பயம் ஏற்பட்டமையால் (தங்கள்) இக்கிராமத்தை விட்டு நீங்கி, பாதுகாப்பான காடுகளுக்கும் ஆற்றங்கரைகளுக்கும் சென்று குடியேறினர். இது நிலைபெற்ற வாழ்க்கையின் சீர்குலைவையும் கிராமச் சமுதாயத்தின் சிதைவையும் குறிக்கின்றது.

மூன்றாவதாக, வளர்ந்துவரும் மக்கட்தொகைக்கு வேளாண் துறையால் உணவு அளிக்க முடியவில்லை. இதனால் பஞ்சங்கள் தோன்றியபோது கிராமப்பொருளாதாரப் பிணைப்புக்கள் அழிந்தன நாஸிர் அக்பர்பாடி (Nazir Akbarbadi 1736-1830) என்ற ஆசிரியர் **ஷாகார்-இ-ஆஷோப்பில்** [Shahar-i-Ashop] ஆக்ரா மாநகரில் ஏற்பட்டப் பஞ்சத்தின் விளைவுகளைப் பின்வருமாறு விளக்கியுள்ளார்: (அக்கால சமூகப் பொருளாதார நிலைமையை விளக்கும் வகையில் அமைந்துள்ள கவிதை மொழிபெயர்க்கப் பட்டுள்ளது) "கரையை உடைத்துக்கொண்டு வெள்ளம் புகுவதைப்போல, வறுமை ஒவ்வொரு வீட்டிலும் புகுந்துவிட்டது. இதனால் 36 வகையான தொழில்களை மேற்கொண்ட சாதியினர்களும் வேலையற்றுப்போனார்கள். [12]

நான்காவதாக இந்த நிலைமையில் கடும் வட்டி வளர்ந்தது. பொருளாதார அமைப்பு அழிவதற்கு இது ஒரு முக்கியக் காரணமாகும். வணிகர், கடும் வட்டி வாங்குபவர், வர்த்தகர்

12 36 வகையான சாதிச் சங்கங்கள் வடஇந்தியா முழுவதிலும் வலிமை பெற்று விளங்குகின்றன. அவைகளின் பெயர் இடத்திற்கு இடம் மாறுபடும். அவற்றின் தலைவர்களின் கூட்டத்தை மிக உயர்ந்த பஞ்சாயத்தாகக் கருதுவார்கள். சில இடங்களில் அந்த சாதிகளுக்கு வழங்கப்படும் பெயர்கள் பின்வருமாறு : (1) கலைஞன் **Musawwar** (2) சோதிடர் **(Jotshi)** (3) கழைக் கூத்தாடி (Acropat) **Nalti** (4) நாவிதன் **Nai** (5) பனியா **Bania** (6) தரகர் **Dalal** (7) பாணன் **Bhant** (8) சமையல் செய்பவர் **Nan pai** (9) கருமான் **Lokaff** (10) பொன் வியாபாரி **Saragt** (11) பாரி **Bari** (தையல் இலை, பல்குச்சி முதலியன தயாரிப்பதும், மற்றும் கீழ்த்தரச் சடங்குகளை செய்பவர்கள்) (12) 'துனியா' (Corder) **Dhunia** (13) குமாஸ்தா **Munshi** (14) சக்கிலி **Mochi** (15) மீனவர் **Mallah** (16) தானியத்தை வறுப்பவர் **Bharbhunl** (17) பொற்கொல்லர் **Sonat** (18) பலசரக்கு வணிகர் **Pansuri** [19] [ஒரு வகையான] இயந்திர துப்பாக்கியைச் செய்பவர் **Mali** (20) பண வணிகர் **Sahukar** (21) குற்றேவல் புரிபவர் Khadim(22) பால்காரார் **Ahir** (23) வாணியர் **Teli** (எண்ணெய் வியாபாரி) (24) தலைச்சுமை அங்காடியர் **Bisati** (Pedler) (25) புரோகிதர் **Prohit** (26) குய்வர் Kumhar (27) கயிறு செய்பவர் Batia (28) தெரு பெருக்கி **Mohtar** (29) ஆட்டு இடையர் Garania (30) வணிகர் **Beopari** (31) தையற்காரன் **Darzi** (32) சாணார் **Pasi** (கள் இறக்குபவர்) (33) நெசவாளர் Jolaha (34) ஊர்க் காவல்காரர் **Chaukidar** (35) வண்ணான் **Dhobi** (36) நீர் சுமப்பவர் **Kanhar.**

முதலிய வேளாண்மையை மேற்கொள்ளாத வகுப்பினர்களிடம் நில உடைமை மாற்றப்பட்டது. கிராமச் சமுதாயத்தின் நெகிழ்ச்சி அற்றத் தன்மையை அகற்றும் சக்திவாய்ந்த கருவியாகப் பஞ்சம் இருந்தது. மக்கள் தங்கள் தொழில்களை விடுத்து வேறுஇடங் களுக்குக் குடியேறத் தலைப்பட்டனர். கிராமங்களில் சாகுபடி செய்வதை விட்டு வளம்பொருந்திய வட்டாரங்களுக்கும் நகரங் களுக்கும் சென்றனர். அங்குள்ள நிவாரண வேலைகளில் (Relief work) அவர்கள் ஈடுபட்டனர். [லக்னௌவின் மகிமைபொருந்திய 'இமாம்பார' (Imambara) அரசர்கள் ஏற்படுத்திய நிவாரண வேலையால் உருவாக்கப்பட்டது-]

3. பிரிட்டிஷ் ஆட்சி

பிரிட்டிஷார் ஆட்சிக்காலத்தில் கிராமச் சமுதாயம் சிதை வுற்று வந்தது, தொழிற்புரட்சிக்குக் காரணமான தொழில் நுட்ப பொருளாதார சக்திகள் இவைகளின் அழிவை துரிதப்படுத் தின. அவர்கள் அதிகாரக் குவிப்புடைய நிருவாகத்தையும், வரி வசூல் முறையையும் புகுத்தினர்கள். போலீஸ் படையும், நீதிமன் றங்களும் ஏற்படுத்தப்பட்டன. நவீனப்போக்கு வரத்துசாதனங்கள் ரயில், பஸ் முதலியன—விரிவடைந்தமையால் கிராமங்கள் தனித்து இயங்கமுடிவதில்லை. உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இறக்குமதிப்பொருள் கள் கிராமங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன. அதிகக் குத்தகையும், தாங்கமுடியாதக் கடன் சுமையும் கிராமத்தில் உள்ள இளைஞர்களை வெளியேற்றின. அவர்கள் வேலைதேடி நகரங்களுக்குச் சென்றனர். நகரங்களில் வளர்ச்சியடைந்து வரும் தொழில்கள் இவர்களை ஏற்றுக்கொண்டன. ஆதரிப்போரில்லாத நிலைமையில் கிராமக் கைவினைத்தொழில்கள் ஆதரிப்பார் இல்லா மல் அழிந்தன. இதனால் கிராம மக்கள் புலம்பெயர்தல் மேலும் அவசியமாயிற்று. இத்தகைய சூழலில் தன்னுடைய நிலத்தின் விளைவைக்கொண்டு வாழ்க்கை நடத்துவது இயலாத தாயிற்று. கிராமங்கள் ஒருபோதும் சுயேச்சையாக இருந்தது இல்லை. இத்தகைய மாறுபட்ட சூழலில் அது இயலாத ஒன்றாகி விட்டது. இவ்வாறு தன்னிறைவுபெற்ற கிராமச் சமுதாயங்கள் அழிந்துபோயின. மரபாக வந்த கிராமச் சமுதாயம் சமூகக் கட்டுப்பாட்டையும், சமூகப் பாதுகாப்பையும் நிருவகிக்கும் பழைமையான அமைப்பாக இருந்ததுடன் சமூக மாற்றத்தை எதிர்க்கும் ஓர் அரணாகவும் இருந்துள்ளது. தன்னிறைவு பெற்ற கிராமங்கள் வெகுகாலத்திற்கு முன்னமேயே சிதைவுற்றன. ஆனால், பணப் பேரங்களால் இன்றைய கிராமப்

பொருளாதாரம் உலக அங்காடியின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டுள்ளது, ஓரளவு படைமானியத்தன்மையும், ஓரளவு 'காலனி ஆதிக்கத்தன்மையும் கொண்ட நிலப் பிரபுத்துவத்தைப் பிரிட்டிஷார் ஏற்படுத்தினர். இதனால் பல நிலைகளில் உள்ள சாகுபடியாளர்களுக்கும், நிலக்கிழார்களுக்கும் [பெரும்பாலும் தலத்தில் இல்லாதவர்கள்] இடையே ஏற்பட்ட புதியதொடர்பு முறைகளில் பெரும்பாலான உழவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. கிராமச் சமுதாயத்திற்குப் பதிலாக, கிராமத்தில் உள்ள மிராசுதாரர்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் சமூக அடிப்படையாக அமைந்தனர். வழக்காறாக வந்த நீதி நிருவாகம் பெருத்த மாறுதல்களுக்கு உள்ளாகியது. வழக்காடும் இருதரப்பினரும் நேருக்கு நேராக வாதம் செய்துகொள்ளுதல் போன்ற பழக்க வழக்கங்கள், நியதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் மரபாக நீதி நிருவகிக்கப்பட்டுவந்தது. இதற்குப் பதிலாக இந்தியத் தண்டனை விதித் தொகுப்பு [Indian Penal Code] ஏற்படுத்தப்பட்டது. மாவட்ட நகரமன்றங்கள் மூலமாக தலசுய ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. வரையறுக்கப்பட்ட அடிப்படையில் குறைந்த வருவாயை அவை பெற்று இருந்தன. இந்நிலையில் பஞ்சாயத்தை உயிர்ப்பிக்கச் செய்த முயற்சிகள் தோல்வி அடைந்தன. [காட்டாக, உ. பி. யின் பஞ்சாயத்துச்சட்டம், 1920,] பஞ்சாயத்துக்கள் பொதுமக்களின் கருத்தைப் பிரதிபலிக்கவில்லை. இதனால் பஞ்சாயத்துக்களின் நோக்கம் நிறைவேறவில்லை, பஞ்சாயத்துக்களின் தோல்விக்கு அதன் சூழ்நிலையே காரணமாக இருந்தன எனலாம். பழைய மதிப்பீடுகள் (Values) மறைந்தன. ஆனால் இந்திய வரலாற்றுக்கு ஏற்ற புதிய மதிப்பீடுகளைத் தோற்றுவிக்க முடியவில்லை. இது பழைய உலகத்திற்கு ஏற்பட்ட பெரிய இழப்பாகும். இதனால் "புதிய' உலகத்திற்கு லாபம் ஏதும் இல்லை. [மார்க்ஸ்]

இவ்வாறு அடிப்படை மாற்றங்கள் பல ஏற்பட்டபோதிலும் கிராமச் சமுதாயத்தின் நெகிழ்ச்சியற்றத் தன்மை மாறுபடாமல் உள்ளன. **1930-39** ஆண்டுகளில் கூட சில கிராமச்சமுதாயங்கள் தொன்மை குன்றாமல் இருந்துள்ளன.[13]

[13] **The Statement exhibiting the moral and material Progress of India during the year 1930—31 (1932)** நாட்டின் பகுதிகளில் தனித்து ஒதுங்கிய சிறப்பான இந்திய கிராமச் சமுதாயங்களைக் காணலாம். அவைகள் பல நூற்றாண்டுகளாக மாற்றம் இன்றி வந்துள்ளன. நமது ஆர்வத்தையும் வியப்பையும் தூண்டக் கூடிய அளவிற்கு நுண்ணிய உயிர் இயக்கம் உடைய சமூக அமைப்பாகும். ஐரோப்பாவின் இடைக்கால வரலாற்றில் அழகாக அமைந்த கிராமங்களின் இயல்புகள் பல இவற்றைப்போன்று இருப்பதைக் காணலாம். இவற்றில் நில உடைமையாளர்களும், சாகுபடியாளர்களும், வேளாண் கூலிகளும், புரோகிதரும், இரந்து வாழும் சமயஞானிகளும், பண வணிகர்களும், ஏனைய கைவினைஞர்களும்—குயவன், வாணியன் முதலியோர்

பெரிய மந்தத்தின் காரணமாக (Great Depression) கிராமச் சமுதாயத்தின் நெகிழ்ச்சி அற்ற தன்மைகள் இறுதியாக மறைந்தன. 1937க்குப்பின்னர் மக்கள் ஆதரவைப்பெற்ற மந்திரி சபைகள் நாடெங்கிலும் ஏற்பட்டன. கிராமத்தில் ஜனநாயகத்தை (பஞ்சாயத்து) மறுபடியும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஆர்வம் காட்டியது. அதற்கான சில திட்டங்களையும் வரைந்தது. ஆனால், அவைகளை நிறைவேற்றுவதற்குள் நிலைமை மாறிவிட்டது இரண்டாவது உலகப்போர் பொருள் உற்பத்தியைப் பெருக்கிய துடன், பண அடிப்படையில் பொருளாதார அமைப்பைத் தீவிரமாகப் பிணைத்தது. இவைகள் வேளாண்துறையில் புதிய தொடர்புகளை ஏற்படுத்தின.

4. விடுதலையும், அதற்குப் பின்னரும்

விடுதலை பெற்ற இந்தியாவில், நிலப்பிரபுத்துவம் ஒழிக்கப் படும் என்றும், கிராம முன்னேற்றம் ஏற்படும் என்றும் பஞ்சா யத்து ஆட்சி (Panchayat Raj) ஏற்படும் என்றும், விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் எண்ணியிருந்தனர். பிரிட்டிஷார் காலத்துக்கு முன்பு பஞ்சாயத்துக்கள் பொருளாதாரம், சமூகம் நீதி ஆகிய மூன்று துறைகளில் செயலாற்றிவந்தன. விடுதலைக்குப் பின்னர் கிராம வாழ்க்கைக்குப் புத்துயிர் அளிக்கும் இயக்கத்தை இம்மூன்று துறைகளிலும் தோற்றுவித்தனர்.

—ஒவ்வொருவரும் குறிப்பிட்ட பணியைப் பலநூற்றுண்டுகளாக வந்த மரபின் தூய்மையில் மேற்கொண்டுள்ளார்கள்'' (பக். 135) ஓ மாலி எல். எஸ். எஸ். ஆல் எடுத்தாளப்பட்டது. (O Malley L. S. S.) பக். 115—116.

இதேநிலை தென்னிந்தியாவிலும் நிலவியதாக அறிகிறோம். ''கிராமங்களில் உள்ள சிறு சமுதாயங்கள் வலிவான கூட்டு உணர்ச்சியை உருவாக்கவல்ல எல்லா முக்கியக் கூறுகளை யும் பெற்று இருக்கின்றன. ஒரு பொதுவான கோயிலும், சாவடியும் (ஒரு கிராமக்கூடம், சில சமயங்களில் சாதாரணக் கொட்டகையாகவும் இருக்கலாம்) உள்ளன. அவை களில் கிராம மக்கள் கூடி உரையாடுவர். கிராமக் காவலாளி (தலையாரி)யும், இதர கைவினைஞர்களும் பொதுமக்களால் ஆதரிக்கப்படுகின்றனர். அங்குள்ள மேய்ச்சல் நிலமும், கால்நடை தொழுவமும், போரடிக்கும் களமும் யாவருக்கும் பொதுவானவை. ஊருக்குப் பொதுவான கண்மாய், வாய்க்கால் இவைகளைச் சரிவர கவனித்துக் கொள் வதில் எல்லோரும் ஆர்வம் காட்டினர் சில கிராமங்களில் கிராமச் நிதி ஒன்று இருந்தது. சமுதாயத்திற்குச் சொந்தமான நிலம், மீன் பிடிக்கும் உரிமை, பொதுவான மரங்கள் முதலியவற்றை வருடக் குத்தகைக்கு விடுவதால் கிடைக்கும்வருவாய் கிராம நிதியைச் சேரும். சில கிராமங்களில் எல்லா நிலக் கிழார்களிடமும் விகிதாசார அடிப்படையில் நிதி வசூலிக்கப்படும். இது அண்மையில் தோன்றிய பழக்கமாகும். இவ்வாறு பலவகை களிலும் திரட்டப்பட்ட நிதி கண்மாய், வாய்க்கால் முதலியவற்றைத் தூறு எடுத்து சுத்தம் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது. சில சமயங்களில் உரம் வாங்கவும், அதனைப் பகிர்ந்து அளிக்கவும், அதற்காகக் கீழ்நிலை அதிகாரிகளின் சலுகையைப் பெறுவதற்காகவும் இந்த (கிராம) நிதி செலவிடப்படுகிறது.'' பாதே, எச். ஆர். (Pate, H. R.). திருநெல்வேலி மாவட்ட விவரச் சுவடி (Thirunelveli Disttric Gazeteer) சென்னை 1917, பக். 103, எடுத்து ஆள்பவர் O'Malley L. S. S. பக். 116.

நிலச்சீர்திருத்தம் காரணமாகப் பெரும்பாலான இடைநிலையாளர்கள் அகற்றப்பட்டனர். இதனால் இரு மாறுபட்ட விளைவுகள் தோன்றின, சில இடங்களில் முன்னாள் மிராசுதாரர்களுக்கு பூமிதாரி(**Bhumidari**) உரிமைகள் வழங்கப்பட்டன. இதனால்நிருவாக சாகுபடியாளர் (**managerial farmers**) என்ற ஒரு வகுப்பினர் தோன்றலாயினர். இவ்வுரிமைகள் வழங்கப்படாத இடத்தில் வாரம் அதிகரித்தது; தலத்தில் இல்லாத கிழார்கள் (**absentee landlords**) வளம் பெற்றனர். சாகுபடியாளர்கள் வெளியேற்றப் படுவதை நிறுத்த முடியவில்லை, எளியவர்களை அதிகம் பாதிக்கக் கூடிய வகையில் தேய்வு வீதத்தில் குத்தகை அமைந்திருந்தது. ஏதாவது ஒரு காரணம்காட்டி, நில உச்சவரம்பு சட்டத்தை ஏமாற்றிவந்தனர். அதிகபட்சம், திட்டக்குழுவின் கொள்கைக் குரலாகவும் தெளிந்த அறிஞர்களின் குரலாகவும் இது, (நில உச்ச வரம்பு) அமைந்துவிட்டது. நில உடைமைப்பகிர்வில் ஏற்றத்தாழ்வு மலிந்தது. மிகச்சிறிய குழுவினர் பெரும்பாலான நிலத்தை உடையவர்களாகவும், பெரும் பாலானவர்கள் பிழைப்பு மட்டத்திலும், இதற்கும் தாழ்ந்த நிலையிலும் வாழ்ந்து வருகிறார்கள்.

இத்தகைய அமைப்புமுறையின் பின்னணியில்தான் சமுதாய நலத்திட்டமும், கிராம வளர்ச்சித்திட்டமும் ஏற்படலாயின. இவை ஏற்றத்தாழ்வுடைய வளர்ச்சியை ஏற்படுத்தின. இந்த வளர்ச்சி ஒரு சீராக இல்லாததுடன். போதுமானதாகவும் இல்லை. பரந்த வேளாண்துறையில் ஏற்பட்ட சிறிது அளவு முன்னேற்றத்தைப் பெருங்கடலில் தோன்றிய சிறுதீவுகளுக்கு ஒப்பிட்டுக் கூறலாம். ஜனநாயக அடிப்படையில் நிலச்சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமையால் செல்வந்தர்கள் மேலும் செல்வந்தர்களாகவும், வறியவர்கள் மேலும் வறியவர்களாகவும் ஆக்கப்பட்டனர். (*காண்க ;* The Report of the Team for The Study of Community Projects and N. E. 3., 1957) இது அரசாங்கக் கொள்கையின் இயக்க நெறிக் கோட்பாடுகளுக்கு தோற்ற அளவிலும், நோக்கத்திலும் மாறுபட்டுள்ளது.

கிராமங்களின் இயைபிற்கு ஒவ்வாத வெளி உதவியினால் எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. கிராமங்களில் ஜனநாயக அடிப்படையை ஏற்படுத்தக்கூடிய உள்ளீடான சக்திகளை (*காரணிகளை*) அவை உருவாக்கவில்லை.

நமது அரசியல் சட்டத்தின் 40-வது பிரிவு கூறுவதாவது "கிராமப் பஞ்சாயத்துக்களை அமைப்பதற்கு மாநிலங்கள் முயல வேண்டும் என்றும், அவை சுயஆட்சியின் அலகுகளாகச் செயல்

பட வேண்டும் என்றும், அதற்குப்போதிய அளவு வலிவும்' அதிகாரமும் அளிக்கப்படவேண்டும்'' என்றும் கூறுகிறது. பஞ்சாயத்து ஆட்சிச் சட்டத்தை முதன்முதலாக உத்தரப்பிரதேச அரசாங்கம் இயற்றியுள்ளது. (தற்சமயம் எல்லா மாநிலங்களிலும் அத்தகைய சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.) மாறுபட்டு வருகிற கிராமச் சமுதாய அமைப்பு வகைகளைப் புரிந்துகொள்வதற்கு இவைகளை விரிவாக ஆய்ந்து அறிவது அவசியம். பஞ்சாயத்தின் அலுவல்களைத் தெளிவாக அறிந்துகொள்வதற்கு இவைகளை இருகூறுகளாகப் பிரிக்கலாம். ஒன்று, நிருவாக அமைப்பு; மற்றொன்று நீதி அமைப்பு. இது மிகவும் அடிப்படையான ஒரு பிரிவாகும். இவ்விரு பிரிவுகளும் ஒரேமாதிரியான நிலைமையில் வெவ்வேறுவிதமாகச் செயல்படக் கூடியவை (இக்கட்டுரையில் கிராமப் பஞ்சாயத்துக்களின் நீதித்துறைப் பொறுப்புக்கள் இணைக்கப்படவில்லை. மரபாக நிருவகிக்கப்பட்ட நீதி சட்டமாக (நியதிகளாக) அங்கீகரிக்கப்பட்டமையால் கிராம மக்கள் விரைவிலும், குறைந்த செலவிலும், ஜனநாயக அடிப்படையிலும் நீதியைப் பெற்றனர்).

ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கிராமசபை (பஞ்சாயத்து) இருக்கும். சில சமயங்களில் பல சிறிய கிராமங்களுக்கு ஒரு கிராமசபை இருக்கக்கூடும். இது ஒரு கூட்டு அமைப்பாகும். வயதுவந்த அனைவரும் இதன் உறுப்பினர்களாவர். இச்சபை ஆண்டிற்கு இருமுறைகள் கூட்டப்படும். முன்பருவப்பயிர் (Kharif) அறுவடை சமயத்திலும், பின்பருவப்பயிர் (Rabi) அறுவடை சமயத்திலும் இவ்விரு கூட்டங்களும் நடைபெறும். இந்த சபைகளுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. (அவை இரு தலைப்புகளில் அமையும்; கட்டாயமானவை (Compulsory) சமயோசிதமானவை (discretionary) கிராமத்தின் துப்புரவு, வைத்தியம், கல்வி, பொழுதுபோக்கு, பணிகள் முதலியவற்றைத் தக்கமுறையில் பராமரிக்கவும், வேளாண்மை நீர்ப்பாசனம், தோட்டக்கலை (horticulture), கால்நடை முதலியவைகளின் வளர்ச்சிக்குப் பாடுபடவும், வர்த்தகம், தொழில் இவைகளின் முன்னேற்றத்திற்கான அமைப்புக்களைத் தோற்றுவிக்கவும், சொத்து சம்பந்தமான வழக்குகளையும், குற்ற விசாரணையையும் நிருவகித்தல் முதலியன முக்கியமானவை. வாழ்க்கையின் எல்லா முக்கியக்கூறுகளும், சமூகம், பொருளாதாரம், பண்பாடு முதலியவை, பஞ்சாயத்து சபையின் அதிகாரத்திற்கு உட்பட்டு இருக்கும்.

கிராமங்களில் இன்றுவரை ஏன் புதிய வாழ்க்கை தோற்றுவிக்கப்படவில்லை? இதற்கான காரணத்தை அறிவது அவசியம்.

இதுவரை கூறப்பட்டுவந்த விளக்கங்கள், கிராம மக்களின், ஏழ்மை, கல்லாமை, அறியாமை பிற்போக்கானத்தன்மை முதலிய மரபாகக் கூறப்படும் விளக்கங்கள் அவை சரியான விடைகளாக இருக்கமுடியாது. இவைகளை நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. இக்குறைகளை உணர்ந்து அவைகளை நீக்கவும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. கிராமப்பஞ்சாயத்து சபைகள் அதிக அதிகாரங்களைப் பெற்று இருக்கின்றன. அவைகளை நிறைவேற்று வதற்குப் போதிய சாதனங்கள் அளிக்கப்படவில்லை. அதாவது பஞ்சாயத்துக்களின் நிதிவசதி போதுமானதாக இல்லை. கிராம வளத்தை (ஜனநாயக முறையில்) நிருவகிக்கத் தேவையான கட்டுப்பாடுகளும் இல்லை. இந்த நிலையில் குறைந்த நிதிவசதி களை உடைய பஞ்சாயத்துக்களின்மேல் சுமத்தப்பட்ட எண்ணிறந்த பணிகள் அதனை அலங்கரிப்பதாக மட்டுமே உள்ளன.

பஞ்சாயத்துக்கள் கிராமத்திற்கு உண்மையான பணிபுரியு மானால், தேர்ந்து எடுக்கப்பட்ட அதன் பிரதிநிதிகள் செல்வாக் கையும் அந்தஸ்தையும் பெறுவார்கள். இது கிராம மக்களிடையே போட்டியையும், பகைமையையும் வளர்க்கிறது. அவர்களை ஒருங்கே கூடச்செய்வது பிரிந்து ஓடும் சக்திகளை ஒன்றாகத் திரட்டுவதைப் போலாகும். அதன் உட்கட்சிகளின் தலைவர்களாக முன்னாள் மிராசுதாரர்கள் இருப்பார்கள். சொத்து அடிப்படையில் தோன்றும் சிறு போட்டிகள் உட்கட்சிகளைத் தோற்றுவித்து, சூழ்ச்சியையும், எதிர் சூழ்ச்சியையும் ஏற்படுத்துகின்றன. நடை முறையில் கிராமவாழ்க்கை சக்திவாய்ந்த ஒரு உட்கட்சியின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாக அமைந்துவிடுகிறது.

தற்சமயம் சாதாரண பெரும்பான்மையான வாக்குகள் அடிப்படையில் கிராமப் பஞ்சாயத்துத் தேர்தல் நடைபெறுகிறது. இதனால், ஆதிக்கம்பெற்ற ஒரு உட்கட்சி கிராமப்பஞ்சாயத்துக் குத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. மக்களை உற்சாகப்படுத்தி ஜன நாயக புனர் அமைப்பில் கிராம வாழ்க்கையை ஏற்படுத்தக்கூடிய உள்ளூர் கூட்டுத்தலைமை இதுவரை உருவாக்கப்படவில்லை, சமூக வெறுப்புக்கள் காரணமாக மத்திய வகுப்பினர் தாழ்ந்த வகுப் பினருடன் கலந்து பழகுவதில்லை. உயர்வகுப்பினர் [பெரிய முன்னாள் ஜமீன்தார், மகாஜன், வசதியுடைய சாகுபடியாளர் கள் முதலியோர்கள்]களை மக்கள் நம்புவதில்லை. எனவே ஜனநாய கத்திற்குத் தேவையான தலைமையை அவர்களால் அளிக்க முடியவில்லை. இந்திய அரசியல் கட்சிகள் கிராம மக்களுக்கு ஏற்ற தலைமையை அளிக்கவில்லை. இவர்களாது திறன் வெளிப்படுவதற் கான வாய்ப்புக்கள் இல்லாமையால், இவர்கள் அறியாமை

பயத்தால் ஏற்படும் பணிவு, போலியான (மன) நிறைவு, தோல்வி மனப்பான்மையில் தோன்றிய ஊழ்வலிக் கோட்பாடு முதலிய வற்றுல் அவதியுறுகின்றனர். இதனுல் எதிலும் ஆர்வம் இல்லாத வர்களாக இருக்கின்றனர். இந்த சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாக உயர்வகுப்பினர் பயன் படுத்திக்கொண்டனர். சில சமயங்களில் செயற்குழுவின் பெரும்பான்மையான ஆதரவால் நேரிடையாகத் தலைமைப்பதவியை ஏற்கின்றனர். (பஞ்சாயத்து தலைவர் பதவியை) சிலசமயங்களில் மறைமுகமாக செயற்குழுவிற்குத் தங்கள் "கையாட்களை" (Yesmen) அனுப்பியும் பஞ்சாயத்தைக் கட்டுப்படுத்துகின்றனர். மேற்கூறியபடி எல்லா கிராமப்பஞ்சாயத் துக்களும் செயல்படுவதாகக் கூறுவதற்கில்லை. அண்மையில் இந்த முறையில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது.

பொருளாதார சக்திகளைக் கட்டுப்படுத்தும் சிலவகுப்பினர் (class) சாதி வெறுப்புகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டுள்ளனர். இவ்வகையில் இந்திய சமூகத்தில் குறிப்பிடத்தக்க ஒரு இயல்பு உண்டு. மேல்சாதியைச் சேர்ந்த வர்கள், (க்ஷத்திரியர், பிராமணர், சீக்கியர், முதலானோர்) நிலம் உடையவர்களாகவும்; இடைநிலை சாதியைச் சேர்ந்தவர்கள் [அகிர், (Akir) குர்மி (Khurmi) காராரியா (Gararia) முதலியவர்கள்] பெரும்பான்மையான சாகுபடியாளர்களாகவும். தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள், [சாமர் (chamar) பார் (Bhar) லோத் (Lodh) முதலியவர்கள்] வேளாண் கூலிகளாகவும் இருக்கின்றனர். எனவே சாதிகளின் இணைப்பில் தோன்றும் வகுப்பு ஒரு சக்திவாய்ந்த கருவியாகிவிட்டது. இதனைப் பயன் படுத்திக்கொண்டு இந்தியச் சமூகப்படியமைப்பில் தங்களுக்குச் சாதகமான சூழ்நிலையை நிலக்கிழார் வகுப்பினர் ஏற்படுத்தியுள்ள னர். நாம் சந்தித்த பல மாவட்ட பஞ்சாயத்து அலுவலர்கள் இவ்வாறு கூறுகிறார்கள் "கிராமத்தில் நடைபெறும் எல்லாத் தேர்தல்களும்—பஞ்சாயத்துத் தேர்தல்கள் உள்பட—சாதித்தேர் தல்களாக உள்ளன. இவை கிராமத்தில் உள்ள உட்கட்சிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன" என்று அவர்கள் கூறுகின்றார்கள் சாதித்தேர்தல் முறையில் காணக்கூடிய வகுப்புத்தன்மையை அவர்கள் முற்றிலும் உணர்ந்து இருக்கமாட்டார்கள்.

உண்மையில் கிராமப்புறங்களில் உள்ள உயர் வகுப்பினர் சாதிமுறையை, கீழ்ச்சாதியினரை ஏழ்மையில் ஆழ்த்துவதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர். இதனுல் கிராமங்களில் பாட்டாளிகள், ஏழைக்குடியானவர்கள் ஆகியவர் களது படை மிகப் பெரிய அளவில் அமைகிறது. இதனுல்

மலிவான ஊதியத்தில் போதுமான ஆட்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ள முடிகிறது. இவ்வகையில் சாதிப்பிரிவு ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. மேல்வகுப்பினர் தங்களது இலட்சியங்களை அடைவதற்குச் சட்டரீதியான அரசியல் கருவியாகப் பஞ்சாயத்தைப் பயன்படுத்தக் கூடாது.

இந்த ஒழுங்கீனத்தை ஒருவகையில் தவிர்க்க முடியும். சாதாரணப் பெரும்பான்மை வாக்குத் தேர்தல் முறைக்குப்பதிலாக விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை மேற்கொள்ளலாம். இரகசிய வாக்கெடுப்புமுறையில் ஒற்றை மாற்றுவாக்கின் (**Single transferable Vote**) மூலமாக இவர்களை (பிரதிநிதிகளை)த் தேர்ந்தெடுக்கலாம். இந்த அமைப்பில் குறைந்தபட்ச வாக்குகளை உடைய ஒவ்வொரு பிரிவும் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பிவைக்க உத்தரவாதம் அளிக்கமுடியும். இவ்வாறு செய்வதால், செயற்குழுவில் ஒன்றுக்கும் அதிகமான உட்கட்சிகள் இருக்கும் (இவைகள்) பொதுவான நலன் கருதியும் பொதுவான அடிப்படையில் செயல்பட வேண்டியிருப்பதாலும் இக்கட்சிகள் ஒற்றுமையாகச் செயல்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும். பொதுவாக தற்சமயம் கிராமப்பஞ்சாயத்துக்கள் ஆதிக்கம் உடைய ஒரு உட்கட்சியின் சர்வாதீனத்தில் அமைந்து இருக்கின்றன. இத்தேர்தல்களைக் கட்சி அடிப்படையில் நடத்தக் கூடாது.

இத்துடன் மற்றொரு பிரச்னை இணைந்து உள்ளது. ஜனநாயக அடிப்படையில் மரபுவழிவந்ததாகக் கிராம நிறுவனங்கள் அமையவேண்டும். அவற்றைத் தக்கபடி பயன்படுத்திக்கொள்வது அவசியம். ஜனநாயகக் கோட்பாட்டுக்குப் புறம்பான படைமானிய முறையையும், பழைமையான முறைகளையும் அடியோடு அகற்றவேண்டும். பழக்கத்தில் உள்ள நல்ல ஜனநாயக மரபுகளைத் தேசீய வாழ்க்கையுடன் இணைத்து, அதனை மேலும் சிறப்படையச் செய்ய வேண்டும்.

5. அமைப்பு முறை மாற்றம்

சமூகப்பொருளாதார நிறுவனங்களின் நெகிழ்ச்சியற்றத் தன்மை காரணமாக, கிராமங்களில் தலசுய ஆட்சி எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி பெறவில்லை. எனவே அத்தகைய நிறுவன அமைப்புக்களை மாற்ற வேண்டும். இம்மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய சக்திவாய்ந்த காரணிகள் யாவை? ஓரளவிற்கு இந்தியப் பொருளாதார வரலாற்றை அறிந்தவர்களுக்கு இவை தெரிந்திருக்கலாம்.

அவர்கள் கிராமங்களில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய சக்தி களை இரு கூறுகளாகப்பிரித்தனர். அவர்களில் பலர் பிரிட்டிஷ் வல்லுநர்கள் இருந்தார்கள். அண்மையில் டாக்டர். டபிள்யூ, பர்னஸ் (W. Burnes) அவர்கள் கூறுவதாவது ; கிராமச் சூழ் நிலையை மாற்றியமைப்பதற்கு, தொழில் நுட்ப வளர்ச்சி அவசியம். சிறந்த விதை, கால்நடை, உரம், நவீன வேளாண் கருவிகள், நீர்ப்பாசன வசதிகள் முதலியவை பெருகவேண்டும். அப்போது தான் கிராமத்தில்உள்ள குறைகளைப்போக்கமுடியும் என்று, அவர் எழுதிய "இந்தியாவின் வேளாண்மை முன்னேற்றத்திற்கான தொழில் நுட்ப சாத்தியக்கூறுகள்" என்ற நூலில் (Technological Possibilities of Agricultural Development in India) கூறியிருக்கிறார். ஜனநாயக இந்தியாவில் பல அறிஞர்கள் இதற்கு முரணான கருத்து உடையவர்களாக இருக்கிறார்கள். இவ்வகையில் திரு ஆர். சி. டட் (R. C. Dutt) முதலாக இன்றுவரை உள்ள பல ஆசிரியர்கள் இக்கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். பொரு ளாதார நிலைஅமைப்புக்களை மாற்றி அமைக்காதவரை தொழில் நுட்ப வளர்ச்சியால் பலன் கிடைக்காது என்று இவர்கள் கருது கிறார்கள். இவ்வாறு பிரிட்டிஷ் நிபுணர்களும், இந்திய நிபுணர் களும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டு இருந்தபோதிலும் வங்காளப் பஞ்ச விசாரணைக்குழுவில் (The Bengal Famine Enquiry Commission) *1944-ல்* பிரிட்டிஷ் நிபுணர்களும் இந்திய நிபுணர்களும் உறுப்பினர்களாக இருந்தனர். இக்குழு இந்திய வல்லுநர்களின் கருத்தை அதாவது பொருளாதார அமைப்பை மாற்றி அமைக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. *(பக். 249)*

இந்திய விடுதலைக்குப்பின்னரும், இத்தகைய கருத்து வேறுபாடு புதிய வடிவத்தில் தொடர்ந்து நீடிக்கக்காண்கிறோம். அமெரிக்க நிபுணர்கள் நவீனதொழில் நுட்பமுறைகளைக்கொண்டு நேரிடை யாகக் கிராமப்பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்கமுடியும் என்று கருதுகிறார்கள். தொழில் நுட்பமாற்றங்களைப் புகுத்துவதற்கு முன் னதாக சமூக, பொருளாதார நிலை அமைப்புக்களில் மாற்றங்கள் ஏற்படவேண்டியதன் அவசியத்தை அவர்கள் உணரவில்லை.[14] இதுபற்றி, இந்திய பொருளாதார நிபுணர்கள், ஏதோ ஒரு காரணத்தினால் தங்கள் கருத்து என்ன என்பதைத் தெளிவாக, உறுதியாகக்கூறவில்லை. இதனால் குழப்பமான நிலை மேலும் பரவு கிறது. பிழைப்புப்பண்ணையம் செய்து வருகின்றபோது தொழில் நுட்ப வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் மிகமிகக் குறைவு என்பதை

14 பார்க்கவும், ஃப்ரான்க்கெல் எஸ். ஹெர்பெர்ட் Frankle S. Herbert குறை வளர்ச்சியுடைய சமூகங்களின் பொருளாதார விளைவு (The Economic Impaet on Underdeveloped Societies) ஆக்ஸ்போர்ட் : 2-ம் அத்தியாயம்.

அநுபவ வழியில் நிரூபிக்க வேண்டும். தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்படுவதற்கு முன்னர் தற்போதுள்ள நிலச்சர்வாதீனத்தை அகற்றவேண்டும்; நிலத்தைக் கூட்டுறவு மூலமாகவும், மறுபகிர்வு மூலமாகவும், சாகுபடிக்குப் போதுமானஅளவு பொருளாதார உடைமைகளாகப் பிரித்தல் வேண்டும். பணவணிகர்களிடமிருந்து ஒவ்வொரு குடியானவனையும் மீட்கும் வகையில் விவசாயிகளுக்குக் கொடுத்த கடனை வற்புறுத்தித் திருப்பிகேட்பதற்குத் தடை விதிக்கவேண்டும். ஒவ்வொரு சாகுபடியாளருக்கும் நிறுவனக்கடன் வசதிகள் உத்தரவாதம் அளிக்கப்படுமேயானுல், அவர்கள் சொந்தமாக மாடுகள், கருவிகள் முதலியன வைத்திருக்கமுடியும். குறை வளர்ச்சியுடைய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற் கான முயற்சிகள் பற்றி ஐ. நா. அறிக்கை ஒன்று வெளிவந்துள்ளது அதில் (பக். 159) 3-வது அத்தியாயத்தில் பொருளாதார முன்னேற்றத்திற்கான முன் நிபந்தனைகள் கூறப்பட்டுள்ளன, படைமானிய சமூகங்களிலும், செல்வந்தர்களின் ஆதிக்கமும் ஓங்கிய சமூகங்களிலும் பொருளாதார முன்னேற்றத்திற்கு சாதகமான சூழ்நிலை நிலவவில்லை என்றும் அங்கு நிலச்சீர்திருத்தங்களை உட னடியாகச் செயலாக்கவேண்டும் என்றும் சிபாரிசு செய்யப்படு கின்றது. வளர்வீதவரிகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அந்த துரிதத்தொழில் வளர்ச்சிக்காகத் திட்டமிடவேண்டும் என்றும் அறிக்கை கூறுகிறது. இதுபற்றி முதல் ஐந்தாண்டுத்திட்டத்தில் தெளிவாகக்கூறப்பட்டுள்ளது. "முன்னேற்றத்தின் ஒவ்வொரு நிலைக்கும் ஏற்ப, பொருளாதார சமூக படியமைப்புக்கள் தோன்று கின்றன. தற்சமயம் கையாளப்பட்டுவரும் தொழில் நுட்பத்தினுல் பெறக்கூடிய லாபத்தை சேமித்து வைப்பதற்கு இவ்வமைப்பு சாதகமாக இருக்கிறது. ஆனுல் ஒரு நிலையைக் கடந்தபின்னர் இந்தமுறை புதுமையையும், மாற்றத்தையும் தடைசெய்கின்றது. இவ்வமைப்பு வலியுடையதாக இருக்குமேயானுல் சமூகத்தின் முன்னேற்றத்தைத் தடுக்கும் சாதனமாக மாறிவிடும். இது சமூகத் தின் பலவீனத்தைக் குறிக்கிறது. முன்னேற்றம் தடைபெறுமல் இருப்பதற்கு சமூக நிறுவனங்களும், சமூகத்தொடர்புகளும் மாறிக்கொண்டே இருக்கவேண்டியது அவசியம். மேம்பாடுடைய பொருளாதார அமைப்பிற்காகத் திட்டமிடுகின்றபோது, முன்னேற் றத்தின் இருகூறுகளான, தொழில்நுட்பக்கூறுகளுக்கும், சமூகக் கூறுகளுக்கும் இடையே உள்ள தொடர்புகளை [என்றும்]க் கவனத் தில் வைத்திருக்கவேண்டும். நம்மை சூழ்ந்துள்ள உடனடியான பிரச்னைகளைத் தீர்த்துவைக்கவேண்டியது அவசியம். அதேசமயம், பொருளாதாரத்திட்ட அமைப்பை மேற்கொண்ட சமுதாயத்தில் சமூகம் செயல்படுகின்ற விதத்தை முழுமையாகக் காணவேண்டும். அவைகளை நாம் விரும்புகின்றவகையில், ஒரு குறிப்பிட்ட

காலவரைக்குள் மாற்றியமைக்கும் வகையில் காரியங்களில் ஈடு பட வேண்டும்” (பக்.7)

திட்டமிடும்போது நிலைஅமைப்புத் தேவைகளைப் புறக்கணிப்பதால்தான் இத்தகைய இன்னல்கள் ஏற்படுகின்றன, திட்டமிடும் கோட்பாடு, அதிகார வர்க்கக்கோட்பாட்டினின்று மாறுபட்டது; முரணானது. எனவே புதுவகையான நிருவாக அமைப்புத் தேவைப்படுகின்றது. தற்போதுள்ள அதிகார வர்க்கத்தினால் புதிய ஜனநாயகத்தலைமையை உருவாக்கமுடியவில்லை. ஏனெனில் அதிகார வர்க்கத்தின் இயல்பான தன்மைகள் திட்டமிடுவதற்குப் பாதகமான சூழ்நிலையை உருவாக்குகின்றன. அதிகார வர்க்கத்தின் தலைமைப் பீடங்களில் இளைஞர்களை அமர்த்துவது நமது சமூகத்தின் வயது அமைப்பு நெறிகளுக்கு மாறானது. செறிந்த வேளாண்மையில் சுதேச முறைகளை அறிந்துகொள்வதற்குப் பதிலாக இந்த அதிகார வர்க்கத்தினர் (கிராம ஊழியர்) வயதில் முதிர்ந்தவர்களை—அவர்களது தாத்தாவாக இருக்கக் கூடிய முதியவர்களை—அடக்கியாள முற்படுகிறார்கள்.

கிராமங்களில் சமூகச் சீரமைப்பைக் கொஞ்சம், கொஞ்சமாகத் தவணை முறையில் ஏற்படுத்த முயலுவது நிச்சயமாகத் தோல்வியுறும் என்பது தெளிவு. சீரமைப்பு பிரச்சினையை முழுமையான அடிப்படை மாற்றங்களின் பிரச்சினையாகக்கருதவேண்டும். அப்போதுதான், சமூக மாற்றத்தின் கருவாக கிராமச்சமுதாயங்கள் அமைந்து இருப்பதைக்காணலாம். இந்தியா சோஷலிஸ பாணியில் சமூகத்தை உருவாக்க உறுதிகொண்டுள்ளது. இந்த முயற்சியில் கிராமங்களின் பங்கு முக்கியமானது. சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைத் தகர்த்து எறிவதற்குப் பரவலான அடிப்படையில் செயல்படும் கிராமச்சமுதாயங்கள் அவசியமாகும். நாம் உன்னதமான ஒரு சமூகத்தை உருவாக்க அடிக்கல் நாட்டுகிறோம். அந்த சமூகத்தின் இலட்சியங்கள்—நீதி, சுயேட்சை, சமத்துவம், சகோதரத்துவம் முதலியன ஆகும். இவை யாவும் நமது அரசியல் சட்டத்தின் முன்னுரையில் உள்ளன. இந்த இலட்சியங்களை நாம் அடைந்தே தீருவோம்.

5. மக்கள் தொகைப் போக்கு

ஜே. என்- ஸின்ஹா (J. N. Sinha)

1871-ல் இந்தியாவில் முதல்முறையாக மக்கட் தொகைக் கணிக்கப்பட்டப் பின்புதான் அதன் போக்குப்பற்றிய முறை யான ஆய்வு ஏற்பட்டது எனலாம். கீழ்க்காணும் அட்டவணையில் மக்கட் தொகையின் வளர்ச்சி விவரங்கள் ஐக்கிய இந்தியா விற்கும் பாரதத்திற்கும் (அதாவது இந்திய யூனியனுக்கும்) முறையே தரப்பட்டுள்ளன. (பார்க்கவும் அட்டவணை 1)

கிங்ஸ்லே டேவிஸ் (Kingsley Davis) என்பவர் முந்தையக் கணிப்பு விவரங்களை மறுபரிசீலனை செய்து இருப்பது குறிப்பிடத் தக்கது. அதற்கு முக்கியமாக இரண்டு வெளிக்காரணிகள் உள்ளன. (1) கணிப்பு வேலைகள் புதிய இடங்களில் ஏற்பட்டதும் புள்ளிவிவரங்களைக் கணக்கிடும் திறன் ஓங்கியதும் குறிப்பிடத் தக்கவை. இந்த விவரங்கள் ஓர் உண்மையைத் தெளிவுபடுத்து கின்றன. இந்தியாவின் மக்கட் தொகை வரலாற்றை ஆராய் வின் பொருட்டு இரு கால அளவுகளாகப் பிரிக்கலாம். முதலாவ தாக 1921-ம் ஆண்டிற்கு முற்பட்டகாலம். இக்காலத்தில் வளர்ச்சி வேகம் குறைவாக இருந்ததுடன் ஏற்றத்தாழ்வுகள் மிகுந்தும் இருந்தன. இரண்டாவதாக 1921-ஆம் ஆண்டிற்குப் பின்னுள்ளகாலம். இக்காலத்தில் வளர்ச்சி வேகம் சீராக இருந் துள்ளது. ஆனல், தற்சமயம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. 1871-1921-ல் இந்தியாவின் மக்கட் தொகை வளர்ச்சி 20%தை விடக் குறைவாக அதிகரித்தது. அதாவது ஆண்டு ஒன்றுக்கு 0·4% அதிகரித்தது. அதே காலத்தில் உலக சராசரி 0·7% ஆக இருந்தது. எனவே இந்தியாவில் ஏற்பட்ட உயர்வு, உலகத்தில் ஏற்பட்டதைக் காட்டிலும் குறைவு. 1921-1951ஆம் ஆண்டுகளில் இந்திய மக்கட் தொகையின் மொத்த உயர்வு சுமார் 44% அதே

அட்டவணை 1

காலம்	ஐக்கிய இந்தியா (இந்தியாவும், பாகிஸ்தானும்) மக்கள் தொகைக் கணிப்பு விவரங்கள். (மில்லியன்கள்)	கே. டேவிஸ் அவர்களின் மதிப்பீட்டின்படி. (மில்லியன்கள்)	இந்திய யூனியன் (பாரதம்) மக்கள் தொகைக் கணிப்பு விவரங்கள்.	சதவீத அதிகரிப்பு % டேவிஸ் அவர்களின் மதிப்பீடு.	சதவீத அதிகரிப்பு % இந்திய யூனியன் (பாரதம்)
1867.72	203·4	255·2	—	—	—
1881	205·2	257·4	—	0·8	—
1891	279·6	282.1	235·9	9·6	—
1901	283·9	285·3	235·5	1·0	0·2
1911	303·0	303·0	249·0	6·2	5·7
1921	305·7	305·7	248·1	0·9	0·4
1931	338·2	338·2	275.5	10·6	11·0
1941	389·0	389·0	312·8	15·0	13·5
1951	—	—	256.9	—	14·1

காலத்தில் ஏற்பட்ட உலக அதிகரிப்பு 33%. 1921-க்கு முன்னர் உலக மக்கட் தொகை வளர்ச்சியைவிடக் குறைவாக இருந்த நிலை மாறி, 1921-க்கு பின்னர் உலக சராசரி வளர்ச்சி வேகத்தை விட அதிக வேகத்தில் இந்தியாவின் மக்கட் தொகை வளர்ந்து வருகிறது. மக்கட் தொகை வளர்ச்சிப் போக்கில் இது ஒரு திருப்பு மையம் என்று கூறலாம். இந்தியாவின் மக்கட் தொகை வட அமெரிக்காவின் மக்கட் தொகையைப்(45%)போல அதிகரித்துள்ளது.

ருஷ்யாவின் ஆசியப் பகுதிகளை உள்ளடக்கிய ஐரோப்பாவின் (20%) அதிகரிப்பைவிட இது அதிகமாக உள்ளது. 1921 லிருந்து இந்திய மக்கட் தொகை நிதானமாக 1·3%த்தில் வளர்ந்து வருகிறது. 1951-61 ஆண்டுகளில் இந்த விகிதம் 2·1% ஆக உயர்ந்தது.

1921-க்கு முன்னர் மக்கட் தொகை வளர்ச்சி குறைவாக இருந்தது. ஆனால் ஒரு சீராக இருக்கவில்லை. முதல் பத்து ஆண்டு

காலத்தில் கணிசமாக உயர்ந்தும், அடுத்த பத்து ஆண்டுகளில் வளர்ச்சிக் குறைவாகவும் சில சமயங்களில் மக்கட் தொகை குறைந்தும் இருக்கக் காண்கிறோம். சில ஆண்டுகளில் எண்ணிறந்த மக்கள் பஞ்சம், கொள்ளை நோய்கள் முதலியவற்றால் இறந்தனர். மற்றும் சில ஆண்டுகளில் இவ்வகையில் இறந்தவர்கள் தொகை மிகக் குறைவாகவும் இருந்தது. 1867-68—ல் இந்தியாவில் ஒரு மிகப் பெரிய பஞ்சம் ஏற்பட்டது. பின்னர் 1891-1901 ஆண்டுகளில் நாடெங்கிலும் பஞ்சம் ஏற்பட்டது. 1896-செப்டம்பரில் முதன்முதலாக பம்பாய் மாநகரில் ஏற்பட்ட ப்யூபோனிக் பிளேக்கு (Bubonic Plague) பின்னர் நாடெங்கிலும் பரவியது. பஞ்சத்தினாலும் கொள்ளை நோய்களான பிளேக்கு, முறைக் காய்ச்சல் (Malaria) கருங்காய்ச்சல் (Kala-azar) போன்றவைகளாலும் நாட்டின் பெரும்பான்மையான பகுதிகள் பாதிக்கப்பட்டிருந்தன. 1901 முதல் 1910 வரையுள்ள பத்து ஆண்டுகளை ஒப்புமையாக நோக்கும்போது சாதாரணமாக இருந்ததாகக் கூறலாம். அடுத்துள்ள பத்து ஆண்டுகளில் (1911-20) மிகப் பெரிய பேரழிவு ஏற்பட்டது. 1918-ல் பேரளவில் 'இன்ஃப்ளூயன்ஸா' (Influenza) ஒரு கொள்ளை நோயாகப் பரவியது. மிக்வும் குறைந்த மதிப்பீட்டின்படி 12 முதல் 13 மில்லியன் மக்கள் இதனால் மடிந்திருக்கலாம் என்று கணித்துள்ளார்கள். இத்துடன் இதர கொள்ளைநோய்களும், மற்றும் கழிச்சல் (Cholera), பிளேக்கு, முறைக்காய்ச்சல் முதலியனவும் சேர்ந்துகொண்டன. இத்துடன் முதல் உலகப் போரைத் தொடர்ந்து இருதடவை மழை பெய்யத் தவறியதால் பயிர்கள் பேரளவுக்குப் பாதிக்கப்பட்டுப் பஞ்ச நிலைமைகள் தோன்றின.

1921க்குப் பின்னர் நாட்டில் குறிப்பிடத்தக்க எத்தகைய பேரழிவும் நிகழவில்லை. 1943-ல் வங்காளப் பஞ்சம் ஏற்பட்டது. இதன் விளைவுகள் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திற்குள் அமைந்திருந்தன என்றாலும் கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ மில்லியனிலிருந்து 3 மில்லியன்வரை மக்கள் மடிந்து இருக்கக்கூடும் என்று கருதுகின்றனர். நீர்ப்பாசன வசதிகள், போக்குவரத்து, செய்தித் தொடர்பு வசதிகள் முதலியன ஏற்படுத்தப்பட்டமையால் நாடெங்கிலும் பஞ்சங்கள் ஏற்படாமல் தவிர்க்கமுடிந்தது. அவ்வாறே பொதுச் சுகாதார முன்னேற்றத்தாலும் பொது இடங்கள் சுத்தமாக இருந்தமையாலும் மிகப் பேரளவில் கொள்ளை நோய்கள் ஏற்படாமல் தடுக்க முடிந்தது.

இருந்தபோதிலும் நாட்டில் கழிச்சல், பெரியம்மை, முறைக் காய்ச்சல், கருங்காய்ச்சல் முதலிய கொள்ளை நோய்கள் ஏற்பட்

டன. இவைகளினால் ஏற்பட்ட மொத்த சாக்காடு 1918-ம் ஆண்டில் பரவிய கொள்ளைநோயான 'இன்ஃப்ளுயன்ஸா'வினால் ஏற்பட்டதைவிடக் குறைவு. மரண விகிதம் மிக அதிகமாக இல்லாதபோதிலும் ஓரளவிற்கு அதிகமாகவே இருந்தது. இது துரிதப் பொருளாதார வளர்ச்சி வேகத்தைத் தடைபடுத்தக்கூடும். உலகில் குறை வளர்ச்சியுடைய நாடுகளின் பெரும் பகுதிகளில் இது ஒரு பொதுவான அனுபவமாக இருக்கிறது. இவ்வாறாக 1951 வரை மக்கட் தொகை ஆண்டு ஒன்றுக்கு 1·4%க்கும் குறைவான வேகத்தில் அதிகரித்து வந்தது. ஆனால் எகிப்து, சிலோன், தாய்வான், பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, ஆகிய நாடுகளில் இவ்விகிதம் 2·5%லிருந்து 3% ஆக இருந்தது.

பிறப்பு இறப்பு விகிதங்கள்

மக்கட் தொகை வளர்ச்சியின் போக்கை அறிந்துகொள்வதற்கு ஒரு காலத்தின் பிறப்பு, இறப்பு விகிதத்தை ஆராய்வது அவசியமாகும். பிறப்பு, இறப்புப் பற்றிய விவரங்கள் இரு ஆதார ஏடுகளிலிருந்து பெறப்படுகின்றன ; அதாவது அத்தியாவசியப் புள்ளிவிவரங்கள் பற்றிய அலுவலக அறிக்கைகள் மற்றும் மக்கட் தொகைக் கணிப்பு அறிக்கைகள் முதலியன. அத்தியாவசியப் புள்ளி விவரங்கள் இந்தியாவில் பதிவு செய்யப்படுகின்ற முறை முழுமையானதாகவோ, பூர்த்திபெற்றதாகவோ, திருத்தமானதாகவோ இல்லை. மக்கட் தொகைக் கணிப்பிலிருந்து பெறப்பட்ட நம்பிக்கைக்குரிய பிறப்பு—இறப்பு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன. (பார்க்க அட்டவணை 2)

பிறப்புக்களும், இறப்புக்களும் முழுமையாகப் பதிவு செய்யப்படாமல் இருப்பதை மேற்கூறிய அட்டவணையிலிருந்து அறியலாம். 1921 வரையில் மதிப்பிடப்பட்ட இறப்பு விகிதமும் ஆயுட்கால அட்டவணை இறப்பு விகிதமும் (Life table death rate) அதிகமாக இருந்ததுடன் அவைகளின் போக்கில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதையும் காணலாம். அதற்குப் பின்னர் இறப்பு விகிதம் ஓரளவுக்குக் குறையத் தொடங்கியது. நடப்பு 10 ஆண்டுக் காலத்தில் இது மிகவும் குறைந்திருக்கிறது. பிறப்பு விகிதம் 1941 வரையில் நிதானமாக உயர்ந்த நிலையில் இருந்துள்ளது. அதில் அதிக ஏற்றத்தாழ்வுகள் இல்லை. 1941க்குப் பின்னர் இந்த விகிதமும் சிறிது குறையத் தொடங்கியது. இதற்கு 'வயது அமைப்பு' (Age Composition) ஓரளவுக்குக் காரணமாக இருக்கலாம்.

அட்டவணை 2

ஆண்டுகள்	மதிப்பிடப்பட்ட பிறப்பு விகிதம்.	மதிப்பிடப்பட்ட இறப்பு விகிதம்.	ஆயுட்கால அட்டவணை இறப்பு விகிதம் (Life Table Death Rate)	பதிவு செய்யப் பட்ட பிறப்பு விகிதம்.	பதிவு செய்யப் பட்ட இறப்பு விகிதம்.
1881-91	*48·9*	*41·3*	*40·0*	—	—
1891-1900	*45·8*	*44·4*	*42·0*	*34*	—
1901-10	*48·1*	*42·6*	*43·7*	*37*	—
1911-20	*49·2*	*48·6*	*49·8*	*37*	*34*
1921-30	*46·4*	*36·3*	*37·3*	*33*	*26*
1931-40	*45·2*	*31.2*	*31·5*	*34*	*23*
1941-50	*39·9*	*29·4*	*31·2*	*28*	*20*

[1881—1940 காலத்திற்கான விவரங்கள் கிங்ஸ்லே டேவிட் (Kingsley David) அவர்களாலும், 1941—50 காலத்திற்கான விவரங்கள் எஸ். பி. ஜெயின் (S. P. Jain) அவர்களாலும் மதிப்பிடப்பட்டுள்ளன.]

அதாவது மக்கட் தொகையில் குழந்தைகளின் விகிதம் அதிகரிப்பதாலும், மகப்பேறு எய்தும் பருவப்பெண்களின் விகிதம் குறைவதாலும் ஏற்பட்டிருக்கக்கூடும்.

'கருவளக்' (Fertility) குறைவும் ஓரளவிற்குக் காரணமாக இருக்கலாம் என்றாலும், இதனால் எந்த அளவிற்குப் பிறப்பு விகிதம் குறைந்து உள்ளது என்பதை நிச்சயமாகக் கூறமுடியாது.

கொள்ளை நோய்களாக உள்ள பிளேக்கும், பெரியம்மையும் அதிக மரணவிகிதத்தை ஏற்படுத்தின. இதர நோய்கள் பரவலாகவும், ஆண்டுதோறும் ஏற்பட்டபோதிலும் அவை கொள்ளை நோயாக இருப்பதில்லை. அதுவரை கண்டிராத வகையில் *1901-10* ஆண்டுகளில் பிளேக் நோய் ஏற்பட்டது. அதனால் *5·12* மில்லியன் மக்கள் இறந்தனர். *1936-45* ஆண்டுகளில் இத்தொகை *0·19* மில்லியனாக குறைந்தது. *1901-10* ஆண்டுகளில் பெரியம்மையும், கழிச்சலும் முறையே *0·93*, *3·74* மில்லியன் மக்களின் சாக்காட்டிற்குக் காரணமாக இருந்தன. *1936-45* ஆண்டுகளில் இத்தொகை முறையே *0·81*, *2·16* மில்லியனாக குறைந்தது. இந்தக் கொள்ளை நோய்கள் மக்களிடையே பீதி ஏற்படுத்துகின்ற

காரணத்தினுல் அதிக கவனத்தை ஈர்க்கின்றன. இவைகளால் மடிந்தவர்களின் தொகையைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது இவைகளுக்கு நாம் அளிக்கும் முக்கியத்துவம் சற்று அதிகமானது என்று தோன்றலாம். மொத்த சாக்காடுகளில் 5% முதல் 10% வரையிலான சாக்காடுகள் இத்தகைய கொள்ளை நோய்களினுல் ஏற்படுகின்றன. முறைக்காய்ச்சலைப்பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் இந்தியாவில் பலர் பலவிதமாக மதிப்பிட்டுள்ளார்கள். இதனுல் இந்தியாவில் அதிக மரணம் சம்பவிப்பதாகக் கருதுகிருர்கள். கியான் சந்த் (Gyan chand) என்பவர் மொத்த இறப்புக்களில் 20% முறைக்காய்ச்சலினுல் ஏற்பட்டுள்ளது என்று கூறுகிருர். ஒரு வருடத்தில் இந்நோயினுல் ஆயிரத்தில் ஐந்து பேர் மடிவதாக டேவிஸ் கண்டுபிடித்துள்ளார். பிளேக், கழிச்சல், பெரியம்மை ஆகிய இம்மூன்று நோய்களின் மொத்த சாக்காட்டைப் போல மூன்று மடங்கு சாக்காடுகள் முறைக்காய்ச்சலால் மட்டும் ஏற்பட்டுள்ளன. முறைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இலங்கையைப்போலவே இந்தியாவிலும் இறப்பு விகிதம் இருக்கக்கூடும். அதாவது அங்கு முறைக்காய்ச்சல் தடுப்பு இயக்கத்தைத் தோற்றுவிப்பதற்கு முன்னுல் இருந்த இறப்பு விகிதத்தைப் போன்று இந்தியாவின் இறப்பு விகிதம் இருக்கக்கூடும் என்று கோலும் ஹூவரும் (Coale and Hoover) மதிப்பிட்டு உள்ளார்கள்.[1] அதன்படி 1951 வரை, இந்தியாவில் ஆண்டு ஒன்றின் மொத்தச் சாக்காடு 10 முதல் 11 மில்லியன் என்றும் அதில் சுமார் இரண்டு மில்லியன் சாக்காடுகள் முறைக்காய்ச்சலால் ஏற்பட்டிருக்கவேண்டும் என்றும் அவர்கள் கணித்துள்ளார்கள். முறைக்காய்ச்சலில் இறந்தவர்களைக் காட்டிலும் அதிகமானவர்கள் இந்நோயால் பீடிக்கப்பட்டிருக்கவேண்டும். இந்த நோய் மக்களின் உடல் வலியையும், உழைக்கும் ஆற்றலையும் நீண்டகாலத்திற்குக் குறைத்துவிடுகிறது. அவர்கள் உற்பத்தி வேலைகளில் ஈடுபடமுடியாத காரணத்தினுல் நாட்டின் உழைப்புச் சக்திகள் விரயமாகின்றன.

இந்தியாவின் அதிக மரணத்திற்குக் காரணமாக உள்ள இதர வியாதிகள் காசம் (க்ஷயம்), சீதபேதி (வயிற்று அளைச்சல்), வயிற்றுப்போக்கு, சுவாசம், நுரையீரல் சம்பந்தமான தொற்று நோய்கள் மற்றும் உணவில் ஊட்டம் இன்மை காரணமாக ஏற்படும் நோய்கள் முதலியன, சத்தற்ற உணவை மக்கள் உட்கொள்ளுவதாலும் அதன் காரணமாக வியாதிக் கிருமிகளை எதிர்க்கின்ற ஆற்றல் உடலில் குறைந்துவிடுவதாலும் இத்த

1 முன் குறிப்பிட்டுள்ளபடி.

கைய நோய்கள் ஏற்படுகின்றன. மக்கள் வசிக்கின்ற இடங்கள் பொதுவாகச் சுகாதாரக் குறைவானவை. இவர்கள் தங்களது உடல்நலத்தைச் சரியாகப் பேணுவது இல்லே. இதனால் இவர்களைத் தொற்றுநோய்கள் விரைவில் பீடிக்கின்றன. இந்தியாவின் மரணவிகிதத்தைக் குறைப்பதற்கு நீண்டகாலம் காத்திருக்கவேண்டியது இல்லே. பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதற்கு முன்னரே தொழில் நுட்பங்களினால் தோன்றிய முன்னேற்றங்கள் இறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்தக்கூடியக் கருவிகளை, முக்கியமாக டிடிடி (DDT), பிசிஜி மருந்து (BCG Vaccins), நச்சிக்கொல்லிகள் (Antibiotics) முதலியனவற்றை அளித்துள்ளன. இவைகளின் உதவியால் விரைவிலும், அதிக செலவில்லாமலும் வியாதிகளை ஒழிக்கமுடியும். அவ்வகையில் தான் தாய்வான், இலங்கை, எகிப்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் ஆயுட்காலம் (Expectation of life) அதிகரித்துள்ளது. மேலநாடுகளில் துவக்கத்தில் இதுபோன்ற முன்னேற்றங்களைப் பெறுவதற்கு 50 ஆண்டிற்கும் அதிகமான காலம் தேவைப்பட்டது. ஆனால், மேலே கூறிய நாடுகள் 25 ஆண்டுகளில் இதனைச் சாதித்துள்ளன.

வாழ்க்கையின் ஆரம்பகாலத்திலேயே முக்கியமாகக் குழந்தைப் பருவத்தில் அதிகமான இறப்பு விகிதம் இந்தியாவில் ஏற்படுகின்றது. இது இந்திய இறப்பு விகிதத்தின் குறிப்பிடத்தக்க கூறாக உள்ளது. 1941 முதல் 1950 வரையிலான பத்து ஆண்டுகளில் மக்கட் தொகைக் கணிப்பில் எஸ். பி. ஜெயின் (S. P. Jain) அவர்கள் இந்தியா முழுவதற்குமான ஆயுட்கால அட்டவணையைக் கணித்துள்ளார்.[2] குழந்தைகள் மரணம் குறைந்தபட்சம் 155 ஆகவும் அதிகபட்சம் 240 ஆகவும் இருக்கும் என்றும் கருதி அதன் சராசரியான 185ஐ அதிகாரபூர்வமான குழந்தை மரண விகிதமாக எடுத்து ஆள்கிறார். கோலும், ஹூவரும் பல நேர்முகமான ஆதாரங்களையும், மறைமுகமான ஆதாரங்களையும் ஆராய்ந்து இவ்விகிதம் அதிகபட்சம் 250 ஆகவும் குறைந்தபட்சம் 200 ஆகவும் இருக்கும் என்றும், இதன் சராசரியான 225ஐ குழந்தை மரண விகிதமாக எடுத்துக்கொள்ளலாம் என்றும் கூறினர். இதன் உதவியால் எதிர்கால மக்கட் தொகை வளர்ச்சியைக் கணக்கிட முயன்றனர்.

குழந்தைப் பருவத்தின் துவக்கத்திலும்—அதாவது ஓராண்டிற்கு உட்பட்ட குழந்தைகள்—மற்றும் குழந்தைப் பருவத்தின்

[2] பார்க்கவும், Census of India, கட்டுரை (Paper No. 2,) 1954 "Life Table — 1951 Census," பக், 20,

இறுதியிலும் மரணவிகிதம் அதிகமாக உள்ளது. மொத்த சிறுவர்களில் 20 வயதை அடைவதற்கு முன்னர் இறந்துவிடுகின்றவர்கள் பற்றிய விவரம் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. (அட்டவணை 3)

அட்டவணை 3

காலம்	20 வயது முடிவதற்கு முன்னர் இறக்கின்ற குழந்தைகளின் சதவீதம்.
1881—91	53
1890—91	55
1901—1911	56
1911—1921	62
1921—30	49
1931—41	44
1941—51	40

மேலே கூறிய புள்ளிவிவரங்களிலிருந்து பாலர்கள், குழந்தைகள் ஆகியவர்களது மரணம் மிக அதிக அளவில் இருப்பதையும் இது 1921-லிருந்து ஓரளவிற்குக் குறைந்துகொண்டு வந்தபோதிலும்கூட இவ்விகிதம் இன்றும் அதிகமாக இருப்பதைக் காணலாம். இது சமுதாயத்தின் ஒரு பெருஞ்சுமையாக உள்ளது. நமது சமுதாயத்தின் வளங்களில் பெரும் பகுதிகள் குழந்தைகளைப் பராமரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன, ஒவ்வோர் ஆண்டிலும் குழந்தைகளை இழந்துவிடுவோமோ என்பதற்காக புதியக் குழந்தைகளைப் பெறுகின்றார்கள். அவர்களில் பெரும் பகுதி 20 ஆண்டுகள் நிறைவதற்கு முன்னர் இறந்துவிடுகின்றனர். அதாவது அவர்கள் உற்பத்தியில் ஈடுபட்டு தேசீய வருவாயை அதிகரிக்கக்கூடிய பருவத்தின் தொடக்கத்திலேயே இறந்துவிடுகின்றனர்.

கருவளத்தின் போக்கு

மேற்கத்திய நாடுகளின் மக்கள் இயல் அனுபவத்தின்மூலம் ஓர் உண்மையை உணருகிறோம். கருவளத்திறன் (Fertility) குன்றும்போது வகையீட்டுக் கருவளம் (Differential-Fertility) உயரக்கூடும். குழந்தைகள் (வயது 0-4)—பெண்கள் (15—39 வய

தினர்) விகிதத்தை கருவளத் திறனின் அளவையாகக் கொள்ள லாம் என்று டேவிஸ் கூறுகிறார். இந்த விகிதம் நகரங்களின் வளர்ச்சிக்கு எதிர்வீதத்தில் உள்ளது. 1931-ல் இந்திய கிராமங் களில் காணப்பட்ட விகிதத்தில் 68%தான் பெரிய நகரங் களில் (5 00,000 க்கும் அதிகமான மக்கள் தொகை உடையவை.) காணப்பட்டன. டேவிஸ் கண்ட உண்மை பின்வருமாறு: "1891 முதல் 1941 வரையில் உள்ள காலத்தில் நகரத்திற்கும் கிரா மத்திற்கும் உள்ள வேறுபாடுகளும் பல அளவுகளில் உள்ள நகரங்களுக்கிடையே உள்ள வேறுபாடுகளும் எத்தகைய மாற்ற மின்றி இருந்தன'. இந்த வேறுபாடுகள் 1951-ல் ஓரளவு குறைந் தன. இதனால் கிராமத்திற்கும் நகரத்திற்கும் வகையீட்டுக் கருவளம் இருப்பதாகக் கூறமுடியாது. நகரங்களில் முன்னர் காணப்பட்டக் குறைவான விகிதத்திற்குப் பல காரணங்கள் உள்ளன. முற்காலத்தை ஒப்புமையாகக் கருதும்போது குழந்தை மரணமும், சிறுவர் ம ர ண மு ம் அதிகமாக இ ரு ந் த ன. மிகப் பெரிய குடும்பங்களில் பெண்கள் கிராமங்களிலேயே தங்கி விடும் பழக்கம் இருந்தது. கருவள சர்வே உத்தரபிரதேசம், மத்தியபிரதேசம், திருவாங்கூர் முதலிய மாநிலங்களில் 1951 மக்கட் தொகை கணிப்பின்போது மேற்கொள்ளப்பட்டது. மைசூ ரில் ஐ. நா. அமைப்பின் சார்பில் ஒரு சர்வே மேற்கொள்ளப் பட்டது. இவை யாவற்றிலும் கிராம மக்களுக்கும் நகர மக் களுக்கும் இடையே எந்தவிதமான கருவள வேறுபாடு இருப்ப தாகத் தெரியவில்லை. கருவளம் பல்வேறு மக்களின் சமூகப் பொருளாதார நிலை வேறுபாட்டினால் மாறவில்லை என்று சர்வே யின்மூலம் அறிகிறோம். இருந்தபோதிலும் சில மாதிரி சர்வேக் கள் (Sample Survey) பெரிய நகரங்களில் மேற்கொள்ளப்பட்டன. வகையீட்டுக் கருவளத் திறன் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு உட் பட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. வங்காளப் பெண்களின் கருவள வகைப்பற்றி சி. சந்திரசேகரனும் (C. Chandrasekaran) முக்தா சென்னும்[3] (Mukta sen) ஒரு சர்வே நடத்தினார்கள் கீழ்நிலை நடுத்தரவகுப்புப் பெண்களுக்குப் பிறக்கின்ற உயிருள்ள குழந்தைகளில், மூன்றில் இரண்டு பங்குதான் உயர்தர வகுப்புப் பெண்களுக்குப் பிறக்கின்றன. கிராமத்தில் கீழ்நிலை நடுத்தர வகுப்புப் பெண்களுக்குப் பிறக்கின்ற உயிருள்ள குழந்தைகளில் ஐந்தில் நான்கு பங்குதான் நகரத்தில் அவ்வாறுள்ள பெண் களுக்குப் பிறக்கின்றன.

இதைப்போன்று லக்னோ, கான்பூர் ஆகிய நகரங்களில் இக் கட்டுரை ஆசிரியர் ஒரு சர்வே நடத்தியுள்ளார். அதன்படி

3 **Populatjon of India and Pakistan** என்ற நூலில் Davis, K., அவர்களால் டுத்து ஆளப்பட்டது.

உயர்தர இந்துப் பெண்களின் கருவளத்திறன் கீழ் வகுப்பு இந்து மற்றும் முஸ்லிம் பெண்களைவிட 20% குறைவாக உள்ளது. கருவளத்திறனும் வருவாயும் எதிர்விகிதத்தில் அமைந்து உள்ளதாகவும் இந்த ஆய்வு கூறுகிறது. மாதம் ரூ. 500/-க்கும் அதிகமான சராசரி வருவாய் பெறுகின்ற குடும்பத்தினரின் கருவளம், மாதம் ரூ. 100-பெறும் குடும்பங்களின் கருவளத்தைவிட 25% குறைவு.[4] இந்தக் கருவள வேறுபாடுகளுக்கு அவர்கள் மேற்கொள்ளும் கருத்தடை முறைகள் ஓரளவிற்குக் காரணமாக இருக்கக்கூடும். சந்திரசேகரரின் சர்வேயின்படி கல்கத்தாவில் பணக்காரப் பெண்களில் 38%த்தினரும், கீழ்நிலை நடுத்தர வகுப்பு இந்துக்களில் 13%த்தினரும், கீழ்நிலை நடுத்தர வகுப்பு முஸ்லிம்களில் 3%த்தினரும் கருத்தடைமுறைகளைப் பின்பற்றுகிறார்கள். ஆனால், கிராமங்களில் மொத்தமாக 0·3% மக்கள்தான் கருத்தடை முறைகளைப் பின்பற்றுகின்றனர். இந்தக் கட்டுரை ஆசிரியர் நடத்திய முன்கூறிய சர்வேயும் (லக்னோ—கான்பூர்) இதே உண்மையைத் தெளிவுபடுத்தியது. மேல் ஜாதி இந்துக்களில் 20%த்தினரும் முஸ்லிம்களில் 4·6%த்தினரும் கருத்தடை முறைகளைப் பின்பற்றுகிறார்கள். கீழ்ச்சாதி இந்துக்களில் ஒருவர்கூட கருத்தடை முறையைப் பின்பற்றவில்லை. வருவாய் அதிகரிக்க, அதிகரிக்க கருத்தடை அதிக அளவில் பின்பற்றப்படுகிறது. ரூ 100/-க்கும் குறைவாக மாதவருவாய் பெரும் குடும்பங்களில் இது பின்பற்றப்படுவதில்லை, ரூ. 500/-ம் அதற்கு அதிகமான வருவாயும் பெரும் குடுப்பத்தினர்களில் 33%த்தினர் இதனைப் பின்பற்றுகின்றனர். இத்தகைய ஆதாரங்களையெல்லாம் ஒன்றுதிரட்டிப் பார்க்கும்போது குடும்பத்தைக் கட்டுப்படுத்தவேண்டும் என்பதற்கான முயற்சிகள் சமூகத்தின் சில வகுப்பு மக்களால் மட்டுமே கடைப்பிடிக்கப்படுகின்றன. அவ் வகுப்பு மக்கட்தொகை மிகக் குறைவாக இருப்பதால் நாட்டின் சராசரி கருவளத்திறன் குறிப்பிடத்தக்க அளவு மாற்றம் அடையவில்லை.

இந்தியர்களின் வயதுப் பகிர்வு
(Indian Age Distribution)

இந்தியாவில் கருவளம் (Fertility) தொடர்ந்து உயர்ந்த நிலையில் இருப்பதால் வயதுப் பகிர்வை ஒப்புமையாக நோக்கும் போது மாறாது இருப்பதைக் காணலாம். புள்ளிவிவரங்களில் உள்ள பெருந்தவறுகள் காரணமாக வயதுப்பகிர்வு பற்றிய முழு

[4] Sinha, J. N., அவர்களின் **Differential Fertility and Family Limitation in an Urban Community of U. P.,** Population, Studies November 1957.

விவரங்கள் தெளிவற்று இருக்கின்றன. அவைகளில் பொதுவான அமைப்பு 'பிரமிட்'டைப்போல் உள்ளது. அது அகலமான அடிப்பாகத்தையும், அதிக வயதைக் குறிக்கும் மேல் பகுதிகளில் —அதன் முனைகூர்ந்து மெலிந்தும் காணப்படுகின்றது. 1891-லிருந்து 1951 வரையிலுள்ள ஆண்டுகளில் 15 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் தொகை மொத்தத்தில் குறைந்தபட்சம் 38·3% ஆகவும், அதிகபட்சம் 39·3% ஆகவும் உள்ளது. 15 வயதிற்குமேல் 64 வயதுவரை உள்ளவர்கள் 60%விட சற்றுக்குறைவாகவும் 65 வயதிற்மேல் உள்ளவர்கள் 2 முதல் 3% வரையிலும் உள்ளனர். இது தொழில் வளர்ச்சியுற்ற மேல்நாடுகளில் காணப்படுவதினின்றும் முற்றிலும் மாறுபட்டு உள்ளது. அங்கு மக்கட் தொகையில் முதியோர்கள் அதிகம் காணப்படுகின்றனர். அமெரிக்காவில் (1950) 15 வயதுக்கு உட்பட்டவர்கள் மொத்தத்திற் 27·6% ஆகவும் 15 வயதுக்குமேல் 64 வரையுள்ள வயதுகளின் உள்ளவர்கள் 64·7% ஆகவும் 65 வயதுக்குமேல் உள்ளவர்கள் 7·6% ஆகவும் இருக்கின்றனர். ஸ்வீடன் (1943) நாட்டில் இவ்வயதுகளில் உள்ளவர்கள் விகிதம் முறையே 22·6 விழுக்காடு, 67·5 விழுக்காடு. 9·9 விழுக்காடு ஆகும். பிரான்ஸ் நாட்டில் (1950) 21·7 விழுக்காடு, 66·7 விழுக்காடு, 11·7 விழுக்காடு ஆகும். இவ்வாறாக இந்தியாவின் வயதுப் பகிர்வு மேலைநாடுகளில் உள்ளவற்றிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது. ஆனால் துரிதமாக மக்கள் தொகை வளர்ச்சி அடையும் (நாடுகளான) எகிப்து, இலங்கை முதலிய நாடுகளுடன் ஒப்பிடக்கூடியவகையில் இந்திய வயதுக் கட்டமைப்பு உள்ளது. எகிப்தில் இவை முறையே 39·2%, 57·0%, 3·6% ஆகவும் சிலோனில் இவை 37·2%, 59·3%, 3·5% ஆகவும் உள்ளன. இந்திய மக்கட் தொகையின் வயதுப் பகிர்வு துரிதமாக வளர்ச்சியடையும் பகுதிகளைப் போன்று அமைந்துள்ளது.

உயர்ந்த அளவு கருவளம் தொடர்ந்து இருப்பதாலும், மக்கள் குடியேற்றம் இல்லாமல் இருப்பதாலும், இறப்பு விகிதத்தில் காணக்கூடிய மாறுபாடுகள் மக்கட் தொகையின் வயதுப் பகிர்வை அதிக அளவிற்குப் பாதிக்கவில்லை. [5]

உழைப்பவர்களும் அவர்களைச் சார்ந்துள்ளவர்களும்

வயதுக் கட்டமைப்புப்பற்றிய ஆய்வு நாட்டின் பொருளாதார அமைப்பை நேரிடையாகப் பாதிக்கக்கூடியது. உழைக்கின்ற வய

[5] Coale, A. J., அவர்களின் "The Effects of Changes in Mortality and Fertility on Age Composition," கட்டுரை, **The Milbank Memorial Fund Quarterly, (Vol. XXXIV, 1956)** என்ற சஞ்சிகையில் பார்க்கவும்.

தில் உள்ளவர்கள் அதாவது 15—16 வயதில் உள்ளவர்கள் மொத்த மக்கட் தொகையில் எந்தவிகிதத்தில் இருக்கிறார்கள் என்பதை இதன்மூலமாக நாம் அறிகிறோம். இந்திய மக்கட் தொகையில் 15 முதல் 64 வயதுக்கு உட்பட்டவர்கள் விகிதம் குறைவாகவே உள்ளது. இதனால் உழைக்கும் மக்களைவிட அவர் களைச் சார்ந்து உள்ளவர்கள் அதிகமாக இருப்பதை அறிகிறோம். இதைத்தவிர மற்றும் பல காரணிகள் நாட்டின் உழைப்பு சக்தி யின் மொத்த அளவை நிர்ணயிக்கின்றன. உழைப்பாளிகளில் பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் கலந்துகொள்வதற்கான சம்பிரதாயங்கள், ஊதிய வேலை நிலைக்கும் (Wage Employment), குடும்ப வேலை நிலைக்கும் (Family Employment) உள்ள ஒப்புமை விகிதங்கள், பொருளாதார அமைப்பில் முதல்நிலைத் துறைகள் (வேளாண்மை) (Primary Scctor), இரண்டாம்நிலை துறைகள் தொழில் முதலியன (Seconday Sector) மூன்றாம்நிலை துறைகள் Tertiary Sector) (வாணிகம் இதர பணிகள் முதலியன) ஆகிய வற்றின் தராதர முக்கியத்துவத்தைப் பொறுத்தது. அத்துடன் உழைக்கின்ற மக்கட் தொகையின் வளர்ச்சிப் போக்கையும் மொத்த மக்கட் தொகையின் வளர்ச்சிப் போக்கையும் ஒப்பிட்டு பார்ப்பது பயன் உள்ளதாக இருக்கும்.

ஒவ்வொரு மக்கட் தொகைக் கணிப்பின்போதும் லாபகர மான வேலையில் ஈடுபட்டுள்ளவர்கள் பற்றிய செய்தி நமக்குக் கிடைக்கிறது. இந்த செய்தியைக் கொண்டு மக்கட் தொகைக் கணிப்பின் தலைமைப் பதிவாளர் (Registrar General of Census) அலுவலகத்தில் ஒவ்வொரு 10 ஆண்டுகளிலும் வேலை நிலையின் போக்கு பற்றிய அறிக்கை வெளியிடப்படும். பாரதத்தில் அவ் வகையில் அண்மையில் வெளிவந்த ஒரு அறிக்கையிலுள்ள சில முடிவுகளை அட்டவணை 4-ல் காணலாம். (பார்க்கவும் அட்டவணை 4)

1901-51 ஆகிய ஆண்டுகளில் மொத்த மக்கள் தொகை 50% அதிகரித்துள்ளது என்பதை இந்த அட்டவணையிலிருந்து அறிய லாம். அதே சமயம் உழைக்கின்ற மக்கள் 21% மட்டுமே அதி கரித்துள்ளனர். 1901-ல் மொத்த மக்கட் தொகையில் உழைப் பாளிகளின் விகிதம் 50% ஆக இருந்தது. 1951-ல் அது 40% ஆக குறைந்தது. மக்கட் தொகையின் வயது கட்டமைப்பில் பெருத்த மாறுதல்கள் இல்லாமையால் உழைக்கும் மக்கட் தொகைக் குறைவை மக்கள் இயல் காரணிகளின் அடிப்படையில் விளக்க முடியாது.

உழைப்பாளிகளாகப் பங்குபெறுகின்றவர்கள் விகிதம் குறை வாக இருந்தது என்றும், தேக்கமுற்றப் பொருளாதார அமைப்பில்

அட்டவணை 4

ஆண்டு	மொத்த மக்கட் தொகை. (மில்லியன்களில்)	உழைப்பவர்களின் மொத்த தொகை.	உழைப்பவர்களின் தொகை, மொத்த மக்கள் தொகையின் % ஆக.
1901	235·5	117·2	50
1911	249·0	124·2	50
1921	248·1	121·3	49
1931	275·5	129·6 *	47
1941	314·8	122·4	39
1951	356·8	142·3	40

ஆதாரம், திட்டக்கமிஷனின் **Labour and Employment Division**-ல் தயாரித்து, பிரசுரிக்கப்படாத ஒரு கட்டுரை **"Occupational Pattern of Indian Union From 1901-1951"**

* 1931-க்கான விவரப்படி உழைப்பாளிகளின் தொகை உயர்வாக இருக்கிறது அதில் 7·3 மில்லியன் பெண்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் வீட்டு வேலையில் ஈடுபட்டு இருந்தவர்களாகக் கூறப்படுகிறது. வேறு வகையாகப் புள்ளி விவரங்கள் பிரிக்கப்பட்டு இருக்குமேயானால், இவர்கள் வேளாண்மைத் துறையில் சார்ந்துள்ளவர்களாகவோ (Dependents), அல்லது சார்ந்துள்ள உழைப்பாளிகளாகவோ (Working Dependents) கருதப்பட்டு இருக்கலாம். மேலே இரு பிரிவுகளில் இவர்களை எந்தப் பிரிவில் சேர்ப்பது என்பதுகூடக் கடினம்தான். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் சார்ந்துள்ள உழைப்பாளிகளாக இருக்கவேண்டும் என்ற கருத்தை ஆதரிக்கும் வகையில் மக்கட் தொகைக் கணிப்பிலிருந்து கிடைத்துள்ள உண்மைகள் அமைந்துள்ளன,

அதன்படி 1921-31 ஆண்டுகளில் வேளாண்மையில் ஈடுபட்டுள்ள பெண் உழைப்பாளிகளின் தொகை குறைந்துள்ளதாக அறிகிறோம். இதில் ஏற்பட்ட குறைவை சார்ந்துள்ள உழைப்பாளிகளின் உயர்வைக் கொண்டுதான் விளக்கிக் கூறமுடியும்.

ஆண்டுதோறும் கூடுதலாகின்ற மனித உழைப்பைப் பயன்படுத்திக்கொள்ளுகின்ற திறன் குறைந்துள்ளது என்றும் கூறலாம். ஓரளவிற்கு புள்ளிவிவரங்களை வகைப்படுத்துவதில் உள்ள தெளிவற்ற தன்மையும் காரணமாக இருக்கக்கூடும். உழைத்துப் பிறரைச் சார்ந்துள்ளவர்களாக (Working Dependents) முன்பு கருதப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் வேலையில் ஈடுபட்டவர்களாகக் கருதப்பட்டனர். பின்னர் உள்ள 10 ஆண்டுகளில் அவர்கள் வேலையில் ஈடுபடாது பிறரைச் சார்ந்து உள்ளவர்கள் என்று கருதப்பட்டனர். 1951 மக்கள் தொகைக் கணிப்பின்படி மொத்தம் 142·3 மில்லியன் உழைப்பாளிகள் இருந்தனர். அதில் 37·9 மில்லியன் அல்லது 27·0% சார்ந்துள்ள உழைப்பாளிகள் (Working Dependents) [அவர்கள் ஈட்டுகின்ற வருவாய் அவர்

களுடையத் தேவைக்குப் போதுமானதாக இருப்பதில்லை) 104·4 மில்லியன் மக்கள் அதாவது 73·% தங்களுடைய வருவாயில் வாழக் கூடியவர்கள்.

வேலைத் தொகுப்பு

கீழே உள்ள அட்டவணையில் உழைக்கும் மக்கள் ஈடுபட்டுள்ள பெருவாரியான வேலைப்பிரிவுகளைக் காணலாம். (பார்க்கவும் அட்டவணை 5)

அட்டவணை 5

காலம் (1)	மொத்த உழைப் பாளிகள். (மில்லியன்) (2)	வேளாண்மை யில் ஈடுபட்டுள்ள உழைப் பாளிகள். (மில்லியன்) (3)	மொத்த உழைப் பாளிகளின் % ஆக. (4)	வேளாண்மை அல்லாத துறைகளில் ஈடுபட்டுள்ள உழைப் பாளிகள். (மில்லியன்) (5)	(2) மொத்த உழைப் பாளிகளின் % ஆக. (5) (6)
1901	*117·2*	*73·3*	*62·4*	*43·9*	*37·6*
1911	*124·2*	*85·5*	*67·7*	*40·7*	*32·3*
1921	*121·3*	*83·1*	*68·6*	*38·2*	*31·4*
1931	*129·6*	*81·4*	*63.1*	*48·1*	*36·9*
1941	*122·4*	*84·9*	*69·6*	*37·4*	*30·4*
1951	*142·3*	*98·2*	*69·0*	*43·1*	*31·0*

மேலே உள்ள மக்களின் வேலைப்பகிர்வு பற்றிய அட்டவணை யில் (நெ. 5) கண்டபடி 1901-ல், வேளாண்மையில் ஈடுபட்டுள்ள வர்கள் மொத்தத்தில் 62·4% ஆகவும் 1911-இல் 67·7% ஆகவும் இருந்தனர். அதன் பின்னர் இந்த விகிதம் மாறாமல் இருந்துவந் துள்ளது. 1931-இல் வேளாண் தொழிலாளர்களின் தொகை குறைந் துள்ளது. இது தோற்ற அளவில் தெரிகின்ற ஒரு காட்சியே யல்லாமல் உண்மை என ஏற்றுக்கொள்ள முடியாது. முன்பு வேளாண்மையில் ஈடுபட்டு இருந்ததாகக் குறிப்பிடப்பட்ட சுமார் 7 மில்லியன் குடும்பப் பெண்கள் இப்போது வீட்டு வேலை களில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுவதை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். 1959-இல் மொத்த உழைப்பாளிகளின் தொகை

1901-ல் இருந்ததைவிட 25 மில்லியன் அதிகமாக இருக்கிறது. வேளாண்மை அல்லாத இதர துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் இக்காலத்தில் கிட்டத்தட்ட அதே நிலையில் இருந்ததாக அறிகிறோம். அதிகப்படியான வேலையாட்கள் அனைவரும் வேளாண் துறையிலேயே ஈடுபட்டிருப்பதை உணரலாம். வேலையில் ஈடுபட்டு இருப்பவர்களை முன்னேற்ற குறியீட்டு எண்ணாகக் கருத முடியுமேயானால் தொழிற்துறைத் தேக்கமுற்று இருப்பதாகவும் வேளாண் துறை முன்னேற்றம் அடைந்துள்ளதாகவும் முடிவு செய்ய வேண்டியிருக்கும். இது உண்மைக்கு நேர்மாறானதாகும். வேளாண்மை நீங்கலாக உள்ள துறைகளில் வேலை செய்பவர்கள் தொகை அதிகரிக்காமல் இருப்பதால் தொழில்துறை வளராமல் தேக்கமுற்று உள்ளது என்று கருதுவது தவறு. உழைப்புச் செறிந்த குடிசைத் தொழில்களுக்குப் பதிலாக உழைப்புக் குறைவான பெரிய தொழில்கள் பெருகியதால்தான் இத்துறையில் வேலை செய்பவர்களின் தொகை உயரவில்லை. நெடுங்காலமாக நிலைத்து வந்துள்ள கைவினை தொழில்களின் உற்பத்தி இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் பெரிய அளவில் பாதிக்கப்பட்டது என்பதை எடுத்துக்காட்டும் வகையில் 1901-12 ஆண்டுகளில் வேளாண்மை அல்லாத துறைகளில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள் குறைந்து காணப்படுகின்றனர். பயிரிடப்படும் நிலப்பரப்பும் விளைச்சல் வீதமும் அதிகரிக்காதபோதிலும், உழைக்கும் மக்கட் தொகையில் ஏற்பட்டக் கூடுதல்களை வேளாண்மைத் துறை ஏற்றுக் கொள்ளவேண்டியிருந்தது. வேளாண் அமைப்பில் குடும்பம் ஒரு அலகாக இருப்பதாலும், குடும்ப உறுப்பினர்களுக்கு வேறு வேலை கிடைக்காததாலும் கூடுதலாகும் குடும்ப உறுப்பினர்களுக்கு வேளாண் துறையிலேயே வேலை அளிக்கவேண்டியிருந்தது. உண்மையில் வேளாண் உழைப்பாளிகளின் தொகை விரைவாக அதிகரிப்பதையும் மொத்த மக்கட் தொகையில் வேளாண் உழைப்பாளிகளின் விகிதம் குறைவேகத்தில் அதிகரிப்பதையும் காணலாம். இந்தப் போக்கு முன்னேற்றம் அடைந்த, அமெரிக்கா (USA), பிரிட்டன் (UK) ஜப்பான் போன்ற நாடுகளின் பொருளாதார அமைப்புக்களில் உள்ளதற்கு நேர்மாறாக உள்ளது. எனவே, இந்தியாவில் காணப்படும் இப்போக்கு தேக்கமுற்றப் பொருளாதார அமைப்பினை சந்தேகத்திற்கு இடமில்லாமல் தெளிவாக்குகிறது.

இந்தியாவின் திட்டமிட்ட வேலைக் கட்டமைப்பின் போக்குப் பொருளாதார வளர்ச்சியின் காரணமாக ஓரளவிற்கு மாறியிருப்பதைக் காணலாம். முதல் இரு ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் 1951 முதல் 1961 வரையிலுள்ள ஆண்டுகளில் மொத்

தத்தில் சுமார் 18-19 மில்லியன்வரை புதிதாக வேலை தேடி வந்தனர். அவர்களில் 13-14 மில்லியன் மக்களுக்கு மட்டுமே திட்டமிட்ட முயற்சிகளின் விளைவாக வேளாண்மை அல்லாத இதர துறைகளில் வேலை கிடைத்தது. எஞ்சியுள்ள 5-6 மில்லியன் மக்கள் வேளாண்மையிலேயே தங்கவேண்டியிருந்தது. இது ஒரு இறுதி நிலை மாற்றமேயாகும். இந்தியப் பொருளாதாரத்தின் வேலைக் கட்டமைப்புக்களை மாற்றக்கூடிய அளவிற்குத் திட்டமிட்ட வேலைநிலை வாய்ப்புக்கள் முக்கியத்துவம் பெற்று இருக்கவில்லை. இருந்தபோதிலும் கடந்த 50 ஆண்டுகளாக நீடித்து வந்துள்ள மோசமான ஒரு போக்கை உடனடியாக நிறுத்தும் வகையில் இது அமைந்துள்ளது. அந்த வகையில் இதனை ஒரு மாபெரும் வெற்றியாகக் கருதலாம். திட்டமிட்ட முயற்சிகளால் ஏற்படும் பொருளாதார முன்னேற்றத்தின் முதல்படியாக இது அமைந்துள்ளது. எதிர்காலத்தில் வேலைக் கட்டமைப்பை சமநிலைப் படுத்தக்கூடிய அடித்தளத்தை இது உருவாக்குகிறது. இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தையும், வேளாண்மையல்லாத வேலைநிலை முன்னேற்ற வேகத்தையும் தடைசெய்யக்கூடிய அளவிற்கு இந்தியப் பொருளாதார அமைப்பில் உள்ளீடான குறைபாடுகள் ஏதும் இல்லை எனலாம்.

மக்கட் தொகை வளர்ச்சியும் வேளாண்மையின் போக்கும்

வேளாண்மையைச் சார்ந்துள்ள நிலை அதிகரித்து வருவதற்கு ஏற்ப சாகுபடியாகும் நிலப்பரப்பும், வேளாண் உற்பத்தித் திறனும் அதிகரிக்கவில்லையானால் :பல பொருளாதார இன்னல்கள் ஏற்படக்கூடும். மக்கட் தொகைக் கணிப்பு ஆணையாளரின் மதிப்பீட்டின்படி மக்கள் தொகை வளர்ச்சியடைந்த அளவிற்கு சாகுபடியாகும் நிலப்பரப்பு பெருகவில்லை என்று அறிகிறோம். சராசரியாக ஒருவர் பயிரிடும் நிலப்பரப்பு பற்றிய விவரங்களிலிருந்து இதனை அறியலாம். அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. **(பார்க்கவும் அட்டவணை 6)**

முதல் முப்பது ஆண்டுகளில் சராசரியாக ஒருவர் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு கூடியும், குறைந்தும் காணப்படுகிறது. ஆரம்பத்தில் இருந்ததைவிட 1921-இல் இது ஓரளவிற்கு அதிகரித்துள்ளது. அதன் பின்னர் 30 ஆண்டுகளில் ஒவ்வொரு கணிப்பின்போதும் இது ஒரு சீராகக் குறைந்துகொண்டே வந்துள்ளது. 1921-இல் இருந்ததைவிட 1951-இல் இந்த அளவு கால் பகுதி குறைந்துள்ளது. வேளாண்மை வேலை நிலை விகிதம் உயர்ந்துள்ளதைக் கருதும்போது வேளாண்மையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவருக்கும் சராசரியாகக் கிடைக்கக்கூடிய நிலம் மேலும் குறைந்துள்ளதைக் காணலாம். 1951 ஆம் ஆண்டு மக்கட்

அட்டவணை 6

மக்கள்தொகைக் கணிப்பு ஆண்டு	தலா (சராசரி) சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பு ('சென்ட்'டுகளில்)
1891	*109*
1901	*103*
1911	*109*
1921	*111*
1931	*104*
1941	*94*
1951	*84*

தொகைக் கணிப்பு அறிக்கையில் இருபோக சாகுபடி நிலப்பரப்பும், நீர்ப்பாசன வசதியுடைய நிலபரப்பும், மக்கட் தொகையை விடக் குறைவான வேகத்தில் அதிகரித்துள்ளன என்று அறிகிறோம். *1891*இல் சராசரியாக இருபோக சாகுபடி நிலப்பரப்பு *12* சென்ட் ஆக இருந்தது. *1921* இல் *13* சென்ட் ஆக உயர்ந்தது. *1951*-ல் *10* சென்ட்டாக வீழ்ச்சியடைந்தது. அவ்வாறே நீர்ப்பாசன வசதிபெற்ற நிலப்பரப்பின் சராசரியும் *1891*-ல் *16* சென்ட் ஆக இருந்தது. *1921*-ல் *18* செகன்ட் ஆக உயர்ந்தது பின் *1951*-ல் *14* சென்ட் ஆகக் குறைந்தது. சராசரி நிலப்பரப்பு குறைவதனுல் ஏற்படும் விளைவுகளை ஈடுசெய்வதற்கு மாருக, நிலைமையை மேலும் மோசமாக்கும்வகையில் செறிந்த வேளாண்மையை மேற்கொள்வதற்கான இரு முக்கிய வசதிகள், இருபோக சாகுபடியும், நீர்ப்பாசனமும், குறைவீதத்தில் அதிகரித்துள்ளன. சிறந்த விதை, சிறந்த உரம், சிறப்பான உற்பத்தி நுட்பம் முதலியனவும் செறிந்த வேளாண்மை முறையேயாகும். ஆனுல், அவைகளை அளந்து அறிவது கடினம். இருந்தபோதிலும் இவ்வகையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களின் கூட்டு விளைவை நிலப்பரப்பு, வேளாண் உற்பத்தி ஆகியவற்றின் போக்குகளைக்கொண்டு ஆய்ந்து அறியமுடியும்.

1900-45-ல், உணவுப் பயிர்கள், நிலப்பரப்பு, வர்த்தகப் பயிரின் உற்பத்தி, பயிர்களின் மொத்த உற்பத்தி முதலிய அகில இந்திய மதிப்பீடுகள் கீழேயுள்ள அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ளன. (பார்க்கவும் அட்டவணை 7 (அ) (ஆ))

அட்டவணை 7 (அ)

(1)	(மில்லியன் ஏக்கர்களில்) உணவுப் பயிர் சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்பு. (2)	வர்த்தகப் பயிர் சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்பு. (3)	மொத்தம் சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்பு. (4)	1938·39 விலையில் உணவுப் பயிர்களின் மதிப்பு. (மில்லியன் ரூபாய்களில்) (5)	வர்த்தகப் பயிர்களின் மதிப்பு. (6)	வேளாண் உற்பத்தியின் மொத்த மதிப்பு. (7)
1900-05	*221*	*53*	*274*	*7630*	*5620*	*13250*
1910-15	*238*	*66*	*304*	*8110*	*5920*	*14030*
1920-25	*237*	*64*	*301*	*7730*	*5450*	*13180*
1930-35	*247*	*68*	*315*	*8350*	*5750*	*14100*
1940-45	*258*	*72*	*330*	*8700*	*5780*	*14480*

அட்டவணை 7 (ஆ)

	ஒரு ஏக்கர் நிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வேளாண் பொருள்களின் மதிப்பு.			வேளாண்மையில் ஈடுபட்டுள்ள சராசரி ஓர் உழைப்பாளியின் வேளாண் உற்பத்தி மதிப்பு.	மொத்த மக்கட் தொகையின் சராசரி (தலா) வேளாண் உற்பத்தி மதிப்பு.	
	சராசரி	உணவுப் பொருள்கள்	வர்த்தகப் பொருள்கள்		மொத்தம்	உணவுப் பொருள்கள்
1900-05	28	26	38	105	26	20
1910-15	27	25	33	97	27	20
1920-25	26	23	36	93	25	18
1930-35	26	23	38	103	25	17
1940-45	26	22	41	103	22	15

பின் குறிப்பு: தலா உற்பத்தியை மதிப்பிடுகின்றபோது, மக்கட் தொகைக் கணிப்பில் உள்ள விவரங்களிலிருந்து மேலே கண்ட 5 ஆண்டு காலத்திற்கான விவரங்கள் மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்ட அட்டவணையில் சுமார் அரை நூற்றாண்டிற்கும் சற்றுக் குறைவான காலத்தை எடுத்துக்கொண்டுள்ளோம். அக்காலத்தில் உணவுப் பயிர்கள் சாகுபடிசெய்யப்பட்ட நிலப்பரப்பு 17% அதிகரித்துள்ளபோதிலும், மொத்த உணவு உற்பத்தி 3% மட்டிலுமே அதிகரித்துள்ளது. அதாவது ஒரு ஏக்கர் நிலத்தின் சராசரி உணவுப் பயிர் விளைச்சல் 15% குறைந்துள்ளது. அதே காலத்தில் வர்த்தகப் பயிர்களின் விளைச்சல் 45% மும், இவற்றைப் பயிரிட்ட நிலப்பரப்பு 36%மும் அதிகரித்துள்ளன. அதாவது வர்த்தகப் பயிர்களின் விளைச்சல் சராசரியாக ஒரு ஏக்கருக்கு 9% உயர்ந்துள்ளது. உணவுப் பயிர், வர்த்தகப் பயிர் ஆகியவற்றின் விளைச்சல் விகிதங்களின் போக்குகள் ஒன்றுக்கொன்று நேர்மாறாக உள்ளன. வர்த்தகப் பயிர்கள் அதிகப் பண வருவாயை நல்குவதால், இவற்றின் சாகுபடிக்கு அதிக கவனமும், முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் அல்லது இவ்விரு பயிர்களின் இறுதிநிலை நிலத்தின் தரவேறுபாடுகளும் ஒரு வகையில் காரணமாக இருக்கக்கூடும். ஒப்புமையாகப் பார்க்கும்போது உணவு அல்லாத வர்த்தகப் பயிர்களின் சாகுபடிக்காக உயர்ந்தரக நிலங்கள் மாற்றப்பட்டுள்ளதை அறியலாம். இருந்தபோதிலும் வர்த்தகப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்பு ஒரு குறிப்பிட்டவரைக்குட்பட்டு இருந்த வர்த்தகப் பயிரின் ஒப்புமையான உற்பத்தித்திறன் உயர்வு உணவுப் பயிர்களில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஈடுசெய்யவில்லை. இவ்வாறு மேலே குறிப்பிட்டக் காலம் முழுவதிலும் நிலப்பரப்பு 20%ம் அதிகரித்து உள்ள போதிலும், மொத்த வேளாண்மை உற்பத்தி மாறாத விலையில் 14% மட்டுமே அதிகரித்து உள்ளது. இதன் விளைவாக ஒரு ஏக்கர் நிலத்தின் உற்பத்தி சராசரியாக 7% குறைந்துள்ளது. இது செறிந்த வேளாண்மையின் வீழ்ச்சியைக் காட்டுகிறது. [வளரும் மக்கட் தொகை ஒருபுறமும், மாறாத நிலப்பரப்பு மற்றொரு புறமும் ஆக இருப்பதால்] பயிரிடப்படும் தலா (சராசரி) நிலம் குறைந்துள்ளது. இந்த சமயத்தில் நிலத்தின் உற்பத்தித்திறனும் குறையுமேயானால் பிரச்சினை மேலும் சிக்கலாகி விடுகிறது.

நிலத்தின் உற்பத்தித்திறன் குறைந்துள்ளதைக் கருதும்போது அதன் பின்னணியில் பெருகி வளர்ந்துவரும் மக்கள் தொகையை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். இவ்விரு போக்குகளும் எதிர்நோக்கிச் செல்வதை உணரலாம். இந்த நிலைமை குறிப்பாகப் பிற்பகுதியில் (1921க்குப் பின்னர் 1951 வரை) தெளிவாகக் காணப்படுகிறது. இதனை அட்டவணை (7 ஆ)யின் இரண்டாவது பகுதி தெளிவாக்குகிறது. இதில் வேளாண் உழைப்பாளி

களின் சராசரியாகவும், மக்கட் தொகையின் சராசரியாகவும் வேளாண் உற்பத்தி தரப்பட்டுள்ளது. வேளாண்மையில் ஈடுபட்ட உழைப்பாளிகளின் சராசரி உற்பத்தித் திறன் முதல் பத்தாண்டு களில் பெருவீழ்ச்சி அடைந்தது. அடுத்த 20 ஆண்டுகளில் இது சீர்பெற்றுள்ளதாகத் தோன்றினுலும், இந்தப் போக்கை முழுமை யாக நம்புவதற்கு இல்லை. ஏனென்றுல் பின்னுள்ள பத்தாண்டு களில் வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களின் விகிதம் குறைந்து உள்ளது. அதாவது உழைப்பாளிகளின் தொகை குறைந்துள்ள மையால் தலா உற்பத்தி ஓரளவிற்கு அதிகரித்து இருப்பதாகத் தோன்றக்கூடும். மொத்த மக்கட் தொகையின் சராசரியாக வேளாண் உற்பத்தியை வெளியிடுகின்றபோது நாட்டின் பொருளாதாரச் சீர்கேட்டைத் தெளிவாக அறியலாம். மக்கட் தொகையின் சராசரி வேளாண்மை உற்பத்தி 15% குறைந்து உள்ளது. மக்கட் தொகையின் சராசரி உணவு உற்பத்தி அதிக அளவிற்கு, அதாவது 25%, வீழ்ச்சி அடைந்துள்ளது. இதிலிருந்து நாட்டின் மிகப்பெரிய தொழில் (அதாவது வேளாண்மை) தேக்கமுற்று இருப்பதுடன் சீரழிந்தும் வருவதை உணரலாம். மால்தஸ் (Malthus) அவர்கள் கூறிய பிழைப்பு மட்டத்திற்கும் கீழான ஏழ்மை நிலையில் மக்கட் தொகை ஆழ்த்தப்பட்டிருப்பதை அறியலாம்.

வேளாண்மை சிறப்பாக உள்ள நாடுகளில் மக்கட் தொகை அதிகரித்துக்கொண்டும் சாகுபடிக்கான நிலப்பரப்பு மாறுபடா மலும் இருக்கவேண்டுமேயானுல், ஒவ்வொரு ஏக்கரா நிலத் தின் விளைச்சலையும் அதிகரிப்பது ஒன்றுதான் வழி. நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதன்மூலமாகவும், சிறந்த விதை, உரம் மற் றும் மேம்பட்ட வேளாண்மை நுட்பங்கள் முதலியவற்றை மேற் கொள்வதாலும் நிலத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்கமுடி யும். இதற்கு அதிக அளவிற்கு அமைப்பு முறைகளும் மூலதனமும் தேவைப்படுகின்றன. மக்கள் அடர்த்தியும், நிலப் பற்றுக்குறையும், இந்திய வேளாண்மையில் முதலீட்டுக்கான வாய்ப்புகளைத் தடைசெய்கின்றன என்று கூறலாம். இதை டேவிஸ் (Davis) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்: “[இந் திய வேளாண்மையில்] உற்பத்தித் திறன் குறைவாக இருப்பதற்கு நிலம் கையாளப்படுகின்ற விதமும், மற்றும் குறைந்த அளவு மூலதனம் முதலீடு செய்யப்படுவதும் காரணமாகும். அதாவது குடியானவர்களின் ஏழ்மையும், மக்களின் அடர்த்தியும் குறைந்த உற்பத்தி வீதத்துடன் இணைந்து உள்ளன”. குடியானவனின் உற்பத்தித்திறன் குறைவாக இருப்பதால் அவன் ஏழையாக இருக்கிறுன். ஆனுல், அவன் ஏழ்மைக் காரணமாக உற்பத்தித்

திறன் குறைந்துள்ளது என்று கூறுவது முன் சொன்னதை மறுபடியும் திரும்பக் கூறுவதாகும். மக்கள் நெரிசலுக்கும், குறைந்த உற்பத்தி வீதத்திற்கும் நேரிடையான தொடர்பு இருப்பதாகக் கருதுவதும் தவறு. நில உடைமைகள் சிறியதாக இருக்கின்ற காரணத்திஞல் வேளாண்மையில் பொறிகளை ஈடுபடுத்த முடியவில்லை என்றும், அதஞல் தலா (அதாவது சராசரியாக ஒரு வரின்) உற்பத்தித் திறனை அதிகரிக்க முடியவில்லை என்றும் கூறுவது ஓரளவிற்கு உண்மையாகும். ஆஞல் ஒரு ஏக்கரின் சராசரி உற்பத்தித் திறனைக் கருதும்போது மேலே கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியது இல்லை. ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளைவிட மக்கட் தொகை செறிந்த நாடுகளான எகிப்து, சீஞ, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகளின் ஒரு ஏக்கரின் சராசரி விளைச்சல் விகிதம் அதிகமாக உள்ளது, முன்னர் கூறிய நாடுகள் பரந்த நிலப்பரப்பைப் பெற்றுள்ளமையால் அதிக அளவிற்குப் பொறிகளைப் (வேளாண்மையில்) பயன்படுத்துகிருர்கள். உண்மையில் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் அமைந்த நெரிசல், செறிந்த சாகுபடியை மேற்கொள்வதற்குத் தடையாக இல்லாமல் சாதகமான ஒரு காரணியாக இருக்கின்றது. நீர்ப்பாசன வேலைகளுக்கும், பாசனக்கால்வாய்களை அமைக்கவும், கரைகளை உயர்த்துவதற்கும், கலப்பு (Compost) உரங்களைத் தயாரிப்பதற்கும், சாகுபடிக்கு நிலத்தைத் தயார் செய்வதற்கும் வளரும் பயிர்களை ஒவ்வொரு நிலைகளிலும் போதிய அளவு கவனமாகப் பார்க்கவும் எண்ணிறந்த உழைப்பாளிகள் முயலவேண்டியது அவசியம். இந்தியாவின் எண்ணிறந்த மக்கள வளத்தையும், உள்ளூரில் கிடைக்கக்கூடிய இதரவளங்களையும் வேளாண் அமைப்பு முறைகள் நன்கு பயன்படுத்திக்கொள்ளாமையால் வேளாண்மையின் முன்னேற்றத்திற்குப் போதிய மூலதன திரட்சி எற்படவில்லை. இந்த சூழ்நிலையில்தான் இந்தியப் பண்ணைகளில் ஏக்கர் ஒன்றின் சராசரி உற்பத்தித் திறன் மிகக் குறைந்த அளவிலேயே இருந்துவந்திருக்கிறது. இந்தியாவில் காணப்படும் நிலஉரிமை முறைகள் வேளாண்மை உற்பத்தியையும் முதலீட்டையும் அதிகரிக்கவொண்ஞமல் செய்ததுடன் தலத்தில் இல்லாத நிழக்கிழார் முறையையும், ஜமீன்தார்கள் தடையின்றி சாகுபடியாளர்களை அண்மைக்காலம்வரை சுரண்டுவதற்கும் உதவியாக இருந்தது. மற்றும், நாட்டின் உரிமைப்பேறு (Laws of Inheritance) சட்டங்கள் காரணமாக நிலம் துண்டாடப்பட்டுச் சிதறுண்டன. இவை காரணமாக வேளாண்மையில் முதலீட்டுக்கான வாய்ப்புக்கள் குறைந்தன. பணவணிகர்களின் கடும் வட்டியும், ஜமீன்தார்களின் மிரட்டலுக்கும் உட்பட்டமையால் குடியானவர்களின் முதலீட்டுத் திறன் பெரிதும் குறைந்தது.

எனவே, மக்கள் நெரிசலின் விளைவாகக் கடும் வட்டியும் வதைக் கின்ற வாரமும் ஏற்படவில்லை. சுரண்டல் அடிப்படையில் உரு வாகிய நிறுவன அமைப்பில் மக்கள் நெரிசல் காணப்பட்டமை தான் இதற்குக் காரணமாகும். கிராமங்களில் வேறுவகையான நிறுவன அமைப்புகள் இருந்திருக்குமேயானால் ஆள் நிலம் விகிதம் சீர்கேடு அடைந்தபோதிலும் வேளாண்மை பாதிக்கப்படாமல் இருந்திருக்கக்கூடும். அதாவது நிலத்தை முறையாகவும் சீராக வும் பயன்படுத்தவும், வேளாண்மையில் போதிய அளவு முதலீட்டை மேற்கொள்வதற்கும், கிராமப் பஞ்சாயத்துக்களும் கிராமக் கூட்டுறவு நிறுவனங்களும் உதவியாக இருந்திருக்கக் கூடும்.

மக்கட் தொகை வளர்ச்சியும் தொழில் மயப்போக்குகளும்

வேளாண்மைக்கு மாறுபட்ட வகையில், வேளாண்மையல் லாத துறைகளின் மொத்த நடவடிக்கைகள், சந்தேகத்திற்கு இடமில்லாமல், இந்தியாவில் கடந்த அறுபது ஆண்டுகளாக அதிகரித்துள்ளது. தொழிலின் மொத்த உற்பத்தி, உள்நாட்டு வர்த்தகம் பற்றிய திட்டவட்டமான மதிப்பீடுகள் ஏதுமில்லை. என். ஏ, கான் (Khan) [6] அவர்கள் சில பெரிய ரகத் தொழில் உற்பத்தியின் அடிப்படையில் தொழில் உற்பத்திக் குறியீட்டு எண் ஒன்றை அண்மையில் தயாரித்து உள்ளார். **1934-1935லி ழிந்து 1938-39** வரையிலுள்ள ஆறு ஆண்டு உற்பத்தியை அடிப் படையாகக் (Base) கொண்டு தொழில் உற்பத்தி உயர்வை கான் அவர்கள் கணக்கிட்டு உள்ளார். இந்தக் குறியீட்டு எண் **1914-15** முதல் **1923-25** வரையிலுள்ள ஆண்டுகளில் **40** ஆக இருந்தது. **1939-40** முதல் **1946-47** வரையிலுள்ள காலத்தில் இது **133.3** ஆக உயர்ந்தது. இதே காலத்தில் வேளாண்மைத் தொழில் இவ்விரண்டின் கூட்டுக் குறியீட்டு எண் **94·9**யிலிருந்து **103·4** வரை உயர்ந்துள்ளது. அதாவது இது8·5 புள்ளிகளே உயர்ந் துள்ளது,

இக்காலத்தில் தொழில்துறையின் குறியீட்டு எண் கணிசமாக உயர்ந்துள்ளதையும், வேளாண் துறையை உள்ளிட்ட மொத்த உற்பத்திக் குறியீட்டு எண் மிகவும் சொற்பமான அளவில் அதி கரிப்பதையும், உற்றுநோக்கும்போது வேளாண்மையின் தேக்க நிலையை நாம் உணரமுடியும். நாட்டு வருவாயில் தொழில்

[6] முன்கூறியபடி

துறையின் பங்கை ஒப்புமையாகப் பார்க்கும்போது மிகவும் குறைவாகவுள்ளது. தொழில்துறையில் கணிசமான அளவிற்கு உற்பத்தி உயர்வு ஏற்பட்டபோதிலும், இந்தியப் பொருளாதார அமைப்பின் மொத்தமான தேக்கமுற்ற நிலைமையில் எந்தவிதமான மாறுபாட்டையும் தோற்றுவிக்க முடியவில்லை.

6. வேளாண்மையும் கூட்டுறவும்

பி. எம். பாத்தியா (B. M. Bhatia)

பிழைப்பு மட்டத்தில் உள்ள விவசாயிகளின் நிலையமைப்பாகச் சிறு கிராமச் சமுதாயங்கள் இருந்தன. இந்தச் சூழலில்தான் இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வேளாண்மை மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இந்நிலை கிட்டத்தட்ட 1850 வரை நீடித்ததாகக் கூறலாம்.[1] கிராமம், கிட்டத்தட்ட தன்னிறைவு பெற்ற ஒரு பொருளாதார அலகாக இருந்தது. கிராமங்கள் உலகத்துடன் மிகக் குறைந்தளவு தொடர்பைப் பெற்று இருந்தன. நிலவரியை அரசர்க்குச் செலுத்துவதற்காக வெளிஉலகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டியிருந்தது. இதனைப் பொதுவாகத் தானியமாகக் கொடுத்து வந்தார்கள். அடுத்து வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருள்களை வாங்குவதற்கு வெளிஉலகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டியிருந்தது. உப்பு, இரும்பு போன்ற பொருள்கள் கிராமங்களிலோ, நகரங்களிலோ நடைபெறும் சந்தைகளிலிருந்து பெற்று வந்தனர். விவசாயிகள் தங்களுக்குத் தேவையான உணவு தானியங்களை உற்பத்தி செய்துகொண்டதுடன். தங்கள் குடும்பத்தின் நுகர்வுக்குத் தேவையான எளிய செய்பொருள்களை ஆக்கித் தந்தக் கிராமக் கைவினைஞர்களுக்கும், பண்ணையிலும், வீட்டிலும் பலவகை பணிகளைப் புரிந்து உதவிய கிராம ஏவலாளர்களுக்கும் போதிய அளவு உணவுப் பொருள்களை அளித்து வந்தார்கள். இவ்வாறு கொடுக்கப்படும் ஊதியங்கள் பழக்க வழக்கங்களினால் நெகிழ்ச்சி அற்ற முறையில் நிர்ணயிக்கப்படுகின்றன. செய்தித் தொடர்புகளும், வர்த்தகமும், புராதன நிலைமையில் இருந்தமையால் கிராமங்களுக்கும், நகரங்

1 பிரிட்டிஷார் இந்தியாவை வென்ற காலத்தில் உள்ள சமூகப் பொருளாதார அமைப்பு முறை பற்றிய விவரங்களைப் பற்றி அறிய வேண்டுமானால் கேம்ப்பெல் ஜார்ஜ் Campbell George) அவர்களின் **Modern India (Chapter) III** ஐப் பார்க்கவும்.

களுக்கும், இடையே வேளாண் பொருள்களின் வர்த்தகம் மிகவும் குறைந்த அளவில் இருந்தது. விவசாயிகள் சாதாரணமாக உற்பத்தி செய்கின்ற உணவுப் பொருள்கள், அவர்களுக்கும் மற்றும் வேளாண்மையில் ஈடுபடாத ஏனைய கிராம உறுப்பினர்களுக்கும், போதுமானதாக இருக்கும். கால நிலை சாதகமாக உள்ள ஆண்டில் அவர்களுடைய நுகர்வுத் தேவைகளுக்கும் அதிகமாக உள்ள தானியத்தைச் சேமிப்பார்கள். இதனை விளைச்சல் குறைவாக உள்ள ஆண்டுகளில் பயன்படுத்துவார்கள். உண்மையில் விவசாயிகள் உணவு தானியத்தைச் சேமித்து வைப்பது, சாதாரணமான ஒரு பழக்கமாக இருந்தது. அப்போதுள்ள புராதன நிலைமைகளில் பஞ்சங்களைச் சமாளிப்பதற்கு இது ஒரே வொரு வழிதான் இருந்தது.[2]

பழைய கிராமச் சமுதாயங்கள் சிதைவுற்றமைக்கும் இந்தியக் கிராமப் பொருளாதார அமைப்பில் இயக்க நிலையைத் தோற்றுவிப்பதற்கும் காரணமாக இருந்த இரு காரணிகளை இங்குக் குறிப்பிடலாம். முதலாவதாக, புதிய நிலஉரிமை அமைப்புக்களால் சொத்துரிமை தொடர்புகளில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிடலாம். இரண்டாவதாக இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகின்ற வேளாண்மைப் பொருள்களின் ஏற்றுமதி வர்த்தகம் பெருவாரியாக இருப்பதைக் குறிப்பிடலாம். பிரிட்டிஷ் ஆட்சியில் மேற்கு நாடுகளுடன் ஏற்பட்ட (வர்த்தகத்) தொடர்பே இவ்விரண்டிற்கும் காரணமாகும்.

நில உரிமைகள்

பிரிட்டிஷார் இந்தியாவில் புதிய நிலவரி முறையை ஏற்படுத்தினார்கள். அதன் காரணமாக நில சொத்துரிமைத் தொடர்புகளில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டன. இந்தியாவின் பெரும் பகுதிகளில், மலையாளக் கடற்கரை, மற்றும் வங்காளத்தில் சில பகுதிகள் தவிர ஏனைய பகுதிகளில், பிரிட்டிஷார் ஆட்சி ஏற்படும் வரை சாகுபடி நிலம் விற்பனைக்குரியப் பொருளாக இருக்கவில்லை[3]. தவறாது நிலவரியைச் செலுத்துகின்றவரை ஒருவருக்கு அந்

[2] Connel அவர்களின் **"Indian Wheat and Railways"** என்ற கட்டுரை **Journal of Statistical Society** (1885) என்ற சஞ்சிகையில் வெளிவந்துள்ளதைப் பார்க்கவும். பிரிட்டிஷாரின் காலத்திற்கு முன்பு இந்தியாவின் பல பாகங்களில் உணவு தானியங்களைச் சேமிப்பதற்கான களஞ்சியங்கள் இருந்தமைக்குத் தகுந்த ஆதாரங்கள் இருப்பதாக திரு. கொன்னல் (**Mr. Connel**) அவர்கள் குறிப்பிட்டுள்ளார். (பக். 247) அவ்வாறு சேமிக்கப்படுகின்ற உணவு தானியங்கள் 30 முதல் 40 ஆண்டுகள் வரை தரம் கெட்டுப் போகாமலும், அளவு குறையாமலும் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

[3] கொடை ஜில்லாக்களின் [(**Ceded Districts**) தற்கால உத்தரப் பிரதேசங்களின் பகுதிகள்]-முக்கிய மாவட்ட அதிகாரி **Collector** ஆக இருந்த **Sir Thomas Manro** அவர்கள் வங்காள **Board of Revenue** விற்கு 1807ல் பின் வருமாறு

நிலத்தைச் சாகுபடி செய்கின்ற உரிமை உண்டு. அவர் இறந்தபின் அவருடைய மகன்களுக்கோ, வாரிசுதாரர்களுக்கோ இவ்வுரிமை மாற்றப்படும். ஆனால் பணத்திற்காக நிலத்தை விற்கவோ, உரிமைகளை மாற்றவோ, அல்லது அடமானம் வைக்கவோ (அவருக்கு) உரிமை கிடையாது. இந்நிலைமைக்கு முக்கியமாக இரு காரணங்கள் உண்டு. முதலாவதாகப் பதினெட்டாவது நூற்றாண்டின் தொடக்கம் வரை, இந்நாட்டின் நிலம் - ஆள் விகிதம் மிகவும் சாதகமாக இருந்தது.

நிலப்பரப்பு அதிக அளவில் இருந்தமையால் சாகுபடி செய்ய விரும்பியவர்கள் கேட்ட மாத்திரத்தில் வளமான நிலம் கிடைத்தது. இரண்டாவதாக, கிராமச் சமுதாயம் முழுமையான அதிகாரம் பெற்று விளங்கியது. அதன் அனுமதியில்லாமல் உறுப்பினர்கள் நில உரிமையை அயலாருக்கு நிரந்தரமாகப் பராதீனம் செய்ய முடியாது. [4] வேளாண்மைப் பொருள்களின் வர்த்தகம் சொற்ப அளவில் இருந்தமையால் நிலத்தில் முதலீடு செய்வது வணிகர்களுக்கு லாபகரமாக இல்லை. பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் ஏற்படுத்திய நிலச்சட்டங்கள் கிராமச் சமுதாயத்தின் செல்வாக்கைப் பாதிக்கக் கூடியவைகளாக இருந்தன. இதனால் நிலம் ஒரு வகையான தொழில் முதலீடாக மாற்றப்பட்டது. இந்தியாவில் நிலவரியைத் தவறாமல் பெற வேண்டும் என்ற பேரார்வத்துடன் நிலவரியைச் செலுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட சில இடை நிலையாளர்களுடன் அரசாங்கம் ஓர் 'உடன்படிக்கை' செய்து கொண்டது. வங்காளத்தில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பும் அங்கு ஜமீன்தார்கள் இருந்தனர். அக்காலத்தில் இருந்த ஜமீன்தார்கள் வரி வசூலிக்கும் விவசாயிகளாகவே (Revenue farmers) இருந்தனர். அவர்களுக்கு நிலத்தில் உள்ள 'உரிமைகள்' ஒரு வரையறைக்குட்பட்டு இருந்தன. அவர்கள் விளைச்சலில் ஒரு பகுதியைப் பெற்றுக் கொள்ளும் உரிமை பெற்று இருந்தார்கள். நிலத்தைச் சாகுபடி செய்பவர்கள் அதன் சொத்து உரிமையைப் பெற்று இருந்தார்கள் அவர்கள் நிலவரியைத் தவறாமல் செலுத்துகின்றவரை ஜமீன்தார்களால் அவர்களுடைய இந்த உரிமையைப் பறிக்க முடியாது. சாகுபடியாளர்கள் தாங்கள் விரும்பியபடி அதனைப் பயன்படுத்திக்

எழுதி இருக்கிறார். "இந்தியாவில் மலையாளக் கடற்கரையைத் தவிர எஞ்சியுள்ள பகுதிகளில் நிலம் [பராதீனம் செய்யக் கூடிய] சொத்தாக இருந்தது இல்லை என்பது மிகவும் தெளிவாக உள்ளது." மற்றும் இது பற்றிய ஆதாரங்கள் Deccan Riot Commission அறிக்கையில் பார்க்கலாம். மற்றும் S. S. Thorburn அவர்களின் **Mussalmans and Moneylenders in the Punjab** பக்கம் 49; **Report of the Board of Commissioners** (Messrs Cox and Tucker) in the Ceded and Conquered Provinces (U. P.) dated 13 April 1808 para 67.

4 பார்க்கவும் Campbell, George.

கொள்ளலாம். 1793ல் வங்காளத்தில் ஏற்பட்ட சாஸ்வத நிலவரி முறை (Permanent Settlement) காரணமாக வரி வசூலிக்கும் விவசாயிகளாக இருந்த ஜமீன்தார்கள், நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக மாற்றப்பட்டார்கள். அவர்கள் அரசாங்கத்திற்குத் தவருமல் வரி வசூலித்துக் கொடுப்பதற்காக இதுவரை வரி வசூலித்து வந்து நிலங்களின் முழுமையான சொத்து உரிமை அவர்களுக்கு அளிக்கப்பட்டது. இந்த உடன்படிக்கையில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினர்களும் லாபம் அடைந்தார்கள். இந்த உடன்படிக்கையில் இடம் பெருத சாகுபடியாளர் இதனல் பெரிய இழப்பை அடைந்தனர். நிலத்தின் உடமையாளராக இருந்த நிலையினின்றும் நிலத்தின் சாகுபடியாளராக ஆக்கப்பட்டுள்ளனர். இவர்களை மிராசுதார்கள் நிலத்தினின்றும் வெளியேற்றும் உரிமை பெற்று இருந்தனர். மிராசுதார்கள் விரும்புகின்ற வரைதான் சாகுபடியாளர்கள் நிலத்தைப் பயிரிடலாம். கடந்த காலத்தில் அனுபவித்து வந்த நிலையான நில உரிமைகளை (அவர்கள்) இழந்தனர். நிலையான வாரமும் அவர்களுக்கு மறுக்கப்பட்டது. மிராசுதார்கள் செலுத்த வேண்டிய நிலவரியைத்தான் அரசாங்கம் நிர்ணயித்ததே தவிர, அவர்கள் சாகுபடியாளர்களிடம் இருந்து வசூலிக்கும் வாரத்தை நிர்ணயிக்கத் தவறிவிட்டது. வங்காளத்தில் நிலத்திற்கான தேவை அதிகரித்தமையால் சாகுபடியாளர்களின் போட்டியும், நில வாரமும், மிராசுதார்களின் லாபமும் அதிகரித்தன.

கல்கத்தாவில் உள்ள வணிகர்களில் பெரும்பாலானவர்கள் புதிய நில உடமையாளர்களாக இருந்தார்கள். இவர்கள் "ஜமீன்தாரியை" (நில உடைமை) வருவாய் நல்கும் ஒரு சொத்தாகக் கருதினர்கள். அவர்கள் வேளாண்மை பற்றிய எந்த உண்மைகளையும் அறிந்திலர். நிலத்தில் நிரந்தரமான முன்னேற்றங்கள் ஏற்படுத்தவும் ஆர்வம் கொண்டிலர். அவர்கள் தலத்தில் இல்லாத நிலக்கிழார்களாக இருந்தார்கள். நிலத்தின் குத்தகையை உச்ச நிலைக்கு உயர்த்துவதில் ஆர்வம் கொண்டு இருந்தார்கள். குத்தகை அதிகரித்தமையால் இதற்கும் நிலவரிக்கும் உள்ள வித்தியாசம் அதிகரித்தது. இதனல் உண்மையான மிராசுதார்களுக்கும் சாகுபடியாளர்களுக்கும் இடையே பல இடைநிலையாளர்கள் அமைந்திருந்தனர். இவ்வாருக நில உட்குத்தகைகள் வங்காளத்தில் கேடு விளைவிக்கும் வரையை எட்டியதாகக் கூறலாம், நிலத்தின் விளைவில் பலர் பல நிலைகளில் உரிமை பெற்று இருந்தமையால் வேளாண்மையில் நுட்ப முன்னேற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைந்தன. 19 வது நூற்ருண்டில் இந்தியாவின் மக்கட்தொகை அதிகரித்தமையாலும், வேளாண் பொருள்களின் ஏற்றுமதி வர்த்

தகம் வளர்ச்சி அடைந்தமையாலும், வேளாண் பொருள்களுக்கான தேவை அதிகரித்தது. ஆனால், தேவைக்கேற்ப சாகுபடி நிலப்பரப்பு அதிகரிக்கவில்லை. மற்றும், வேளாண் உற்பத்தி முறைகள் கிட்டத் தட்ட மாற்றம் இன்றி இருந்தன.

இரயத்துவாரிப் பகுதிகளான பம்பாய், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் நிலவிய நிலைமையும் இதனின்றும் அதிகம் மாறுபட்டு இருக்கவில்லை.

வங்காள அரசாங்கம் இடைநிலையாளர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டதைப் போன்ற தவறுகளை, இங்குள்ள அரசாங்கங்கள் செய்யவில்லை. இவை சாகுபடியாளர்களான 'இரயத்து'க்களுடன் நேரிடையாக உடன்படிக்கைச் செய்து கொண்டன. இரயத்துக்களை நில உடைமையாளர்களாக ஏற்றுக் கொண்டமையால் அவர்கள் நிலவரியைத் தவறாமல் செலுத்துவதற்கு ஒப்புக் கொண்டார்கள். ஜமீன்தாரி நிலவரி அமைப்பை விட, குடியானவர்களைப் பொறுத்தவரை, இது மிகவும் சிறந்தது என்று கூறலாம். ஆனால் நிலவரி வசூலிக்கும் முறை நெகிழ்ச்சி அற்றதாக இருந்தது. நிர்ணயிக்கப்பட்ட நிலவரியை எக்காலத்திலும், (பயிர்களின் விளைச்சல் எப்படியிருந்த போதிலும்) சாகுபடியாளர்கள் செலுத்தியாக வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்கள். பருவ மழைகள் பொய்ப்பதனால், (இந்தியாவில்) தானிய உற்பத்தி பாதிக்கப்பட்டக் காலங்களில் கூட நிலவரியைச் செலுத்த வேண்டியிருந்தமையால், இரயத்து நில உரிமை வேளாண்மையின் சீரழிவிற்குக் காரணமாக இருந்தது என்று கூறலாம். மக்கட் தொகை வளர்ச்சி அடைந்ததாலும், வேளாண் பொருள்களின் வர்த்தகம் அதிகரித்ததாலும், நிலத்தின் மதிப்பு நாளடைவில் அதிகரித்தது. எனவே நிலத்தை ஒரு சிறந்த ஈட்டுப் பொருளாகப் பண வணிகர்கள் கருதினார்கள். அதன் பேரில் கடன் கொடுக்கவும் முன் வந்தார்கள். இந்தச் சமயத்தில் சாகுபடியாளர்களின் கடன் தேவைகளும் அதிகரித்தன. அடிக்கடி வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்பட்டதாலும், நிலவரியை ஆண்டுதோறும் தவறாமல் செலுத்த வேண்டும் என்று அரசாங்கம் கட்டாயம் செய்ததாலும் நாளடைவில் சாகுபடியாளர்கள் பண வணிகர்களின் உதவியைப் பெற வேண்டியிருந்தது. அவர்களுக்குத் தேவையான சமயத்தில் வேண்டிய அளவு கடன் அளிக்கக் கூடிய நிறுவனம் ஒன்றுகூட இல்லை. இந்நிலையில் பணவணிகர்கள் கணக்குகளைத் திரித்து எழுதினார்கள். மிகவும் அதிகமான வட்டியை வசூலித்தார்கள். கடன் பெற்றவர்களிடமிருந்து அசலுக்காகவும் வட்டிக்காகவும் வேளாண்மை உற்பத்தியின் பெரும் பகுதியைப் பண வணிகர்கள் பெற்றுக் கொண்டார்கள், இவ்வாறு பணவணிகர்களின் இரும்புப்பிடியில் சிக்கிக் கொண்ட சாகுபடியாளர்கள்

அவர்களிடமிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள இயலாதவர்களாக இருந்தார்கள். இறுதியில் தங்களுடைய கடனைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் தாங்கள் சாகுபடி செய்கின்ற நிலத்தையும் இழக்க வேண்டியிருந்தது.

இத்தகைய சூழ் நிலைகளில் வேளாண்மை முன்னேற்றம் அடையக்கூடும் என்று எதிர்பார்க்க முடியாது. அரசாங்கத்திற்கு வரி செலுத்துவதற்காகவும் உற்பத்தி சாதாரணமாக உள்ள ஆண்டுகளில் தன்னையும், தன் குடும்பத்தினரையும் பராமரித்துக் கொள்வதற்காகவும், உற்பத்திக் குறைவான ஆண்டுகளிலும் பண்ணைகளின் விளைச்சல் முற்றிலும் பொய்த்து விடுகின்ற காலங்களிலும், (குடும்பத்தை)ச் சமாளிப்பதற்காகவும், சிறப்பான விழாக் காலங்களில் சமூகச் சூழ் நிலைகள் காரணமாக மேற்கொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத செலவுகளுக்காகவும், சாகுபடியாளர்கள் தங்களுடைய பணம் (வருவாய்) முழுவதையும் பணவணிகர்களிடம் முடக்கி விட்டனர். உற்பத்தியை அதிகரிக்கக் கூடிய வகையில் விதை கால்நடை, முதலியவை தவிர, ஏனைய முயற்சிகளுக்காகக் கடன் வாங்குவதில்லை. மண் வளத்தை அதிகரிப்பதற்கும், இல்லத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில் நவீனக் கருவிகளையும் உரங்களையும் பயன்படுத்துவதற்குப் போதிய அளவு வசதிகளைச் சொந்தமாகப் பெற்று இருக்கவில்லை 19வது நூற்றாண்டில் வேளாண் பொருள்களுக்காகத் தேவை அதிகரித்த போதிலும், வேளாண்மையும், விவசாயிகளும், வாட்டமுற்று இருந்தார்கள், ஆனால், தானிய வணிகர்களும், பண வணிகர்களும், மிராசுதார்களும், வளமான வாழ்வு பெற்று இருந்தார்கள்.

வேளாண்மையில் வர்த்தகப் பயிர்கள்

இந்தியாவில் 18-வது நூற்றாண்டின் இறுதியில் சொத்து உரிமைத் தொடர்புகளில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டன. இந்த நாட்டில் சுமார் 1860-வது ஆண்டை யொட்டி ஒரு வர்த்தகப் புரட்சி உருவாகியது எனலாம். இரயில்வேக்கள் துரிதமாக வளர்ச்சி அடைந்தன. 1857-ல் 288 மைலாக இருந்த இருப்புப் பாதையின் நீளம் 1861-ல் 1599 மைல்களாகவும், 1865-ல் 3373 மைல்களாகவும் 1871-ல் 5077 மைல்களாகவும், 1896-ல் 20209 மைல்களாகவும், 1908-ல் 20576 மைல்களாகவும் வளர்ச்சி அடைந்தன. 1869-ல் திறக்கப்பட்ட சூயஸ் கால்வாய் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக இங்கிலாந்திற்குச் செல்லும் தூரத்தைச் சுமார் 3000 மைல்கள் குறைத்தது. இதனால் இரு நாடுகளுக்கு இடையேயும் நெருங்கிய வர்த்தகத் தொடர்பு ஏற்படலாயிற்று. 1878லிருந்து, 1886 வரை

யில் ஏற்பட்ட மந்தம் காரணமாக இங்கிலாந்தின் கப்பல் தொழில் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டது. நவீன நீராவிக்கப்பல் தோன்றியமையால் பாய்மரக் கப்பல்கள் பயனற்றதாகப் போய் விட்டன. இந்தியாவுடன் மேற் கொண்ட வர்த்தகத்தில் பெரிய அளவிற்குப் பாய்மரக் கப்பல்களுக்குப் பதிலாக நீராவிக் கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கான கட்டணங்கள் பெருவாரியாகக் குறைந்தன. சூயஸ் கால்வாய் திறக்கப் பட்ட 12 ஆண்டுகளுக்குள் கட்டண விகிதங்கள் பாதிக்கும் குறைவாகக் குறைந்தன. அரிசி, கோதுமை போன்ற சரக்குகளுக்கு கல்கத்தாவிலிருந்து லிவர்பூல் வரையில் 55 ஷில்லிங்காக இருந்த கட்டணம் 27 ஷில்லிங் காகக் குறைந்தது.[5] இவை யாவும் வேளாண்மைப் பொருள்களின் ஏற்றுமதியை ஊக்குவித்தமையால் அவைகளின் அளவும் மதிப்பும் துரிதமாகப் பெருகின.

அமெரிக்காவில் உள்நாட்டுப்போர் ஏற்பட்டக் காலத்தில்தான் இந்தியாவில் வர்த்தகப் புரட்சி தோன்றியதாகக் கூறலாம். அது சமயம் பிரிட்டிஷார் தங்களுக்குத் தேவையான கச்சாப் பஞ்சை அமெரிக்காவிலிருந்து தருவிப்பதற்குப் பதிலாக இந்தியாவிலிருந்து தருவித்துக் கொண்டார்கள். இந்தியாவின் பஞ்சு ஏற்றுமதி 1862க்குப்பின்னர் திடீரென்று குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளது. 1859—60ல் பஞ்சு ஏற்றுமதியின் மதிப்பு ரூ. 5.6 கோடியாக இருந்தது. 1864-65ல் இது ரூ, 37.5 கோடியாக உயர்ந்தது. இவ்வாறே அரிசி, கோதுமை இதர தானியங்கள் முதலியவற்றின் ஏற்றுமதியும் கணிசமாக உயர்ந்தது. இவைகளின் மதிப்பு 1859—60ல் ரூ. 3.6 கோடியாக இருந்தது. 1864-65ல் ரூ. 6 கோடியாக உயர்ந்தது. உள்நாட்டுப் போர் முடிவுற்றதும் கச்சாப் பஞ்சின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தது. இவ்வாறு வெளிநாட்டுத் தேவையில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஈடு செய்யும் வகையில் இந்தியாவில் நவீன நூற்பு ஆலைகளும், நெசவு ஆலைகளும் தோன்றின. உணவு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், சணல், தேயிலை, ஆகியவற்றிற்கான வெளிநாட்டுத் தேவை 19வது நூற்றுண்டின் இறுதிவரை தொடர்ந்து அதிகரித்தது. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட இதரப் பொருள்களில் அபினும். அவுரியும், உரிவையும், தோலும் குறிப்பிடத்தக்கவை. 1859-60ல் ரூ. 28.9 கோடியாக இருந்த மொத்த ஏற்றுமதியின் மதிப்பு 1879—80ல் ரூ. 69.2 கோடியாகவும். 1906-07ல் ரூ. 165.7 கோடியாகவும் உயர்ந்தது.

இந்தியாவில் உற்பத்தியான வேளாண் பொருள்களுக்கான வெளிநாட்டுத் தேவை பெருவாரியான அளவில் அதிகரித்துள்

[5] Joshi, G. V., Writings and Speeches P. 628

ளது. இந்தியாவின் இந்திய வேளாண்மையின் வளர்ச்சிக்கு இவை பெரிய தூண்டுகோலாக இருந்து இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு ஏற்படவில்லை. இந்நாட்டின் வேளாண்மை நிலையமைப்புக் காரணமாகவும், வளர்ச்சிக்குத் தேவையான நுட்ப முன்னேற்றங் களை மேற்கொள்ளுவதற்குப் போதிய வசதிகளை விவசாயிகள் பெறுமையாலும், வேளாண்மை வளர்ச்சி அடையவில்லை என்று கூற லாம். ஏற்றுமதி அதிகரித்ததாலும் அதன் விளைவாகத் தோன்றிய விலை உயர்வாலும், சிறு விவசாயிகள் பலன் அடையவில்லை. சிறு பண்ணையாளர்கள் விளைச்சலில் தங்கள் நுகர்விற்கு வேண்டிய வற்றை எடுத்துக் கொண்டதுபோக குறைந்த அளவு, இறுதிநிலை உபரியே சந்தையில் விற்பனை செய்வதற்கு மிச்சப்படுகின்றது. பெரும்பாலும் பயிரிடும் நிலத்தின் உடைமையாளனுகக் குடியான வன் இருப்பதில்லையாகையால் தான் விரும்பிய முன்னேற்றங்களை ஏற்படுத்தவோ, பயிரிடும் முறைகளில் உற்பத்தி நுட்ப மாற்றங்களை ஏற்படுத்தவோ இயலவில்லை. சொந்த நிலத்தைச் சாகுபடி செய் கின்ற குடியானவர்கள் கூட இத்தகைய முன்னேற்றச் செலவுகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய வசதி பெற்றவர்களாக இல்லை. இவை களின் காரணமாக வேளாண் பொருள்களின் தேவை மிகவும் அதிக மாக உயர்ந்த போதிலும் நிலங்களின் உற்பத்தி வீதம் அதிகரிக்க வில்லை.

உணவு தானியங்கள், மாட்டுத் தீவனம், மற்றும் பரம்பரை யானப் பயிர்களுக்குப் பதிலாக வர்த்தகப் பயிர்களைச் சாகுபடி செய் தமையால், சாகுபடி நிலப்பரப்பும் உற்பத்தித் திறனும் உயர்வு அடையாதபோதும், வேளாண் பொருள்களின் தேவை அதிகரிப் பால் ஏற்பட்டப் புதியச் சூழ் நிலையை விவசாயிகளால் சமாளிக்க முடிந்தது.

வெவ்வேறு பகுதிகளின் வெட்பதட்ப நிலைகளுக்கு ஏற்ப வெவ் வேறு வகையான வர்த்தகப் பயிர்கள் பயிரிடப் படுகின்றன. பம் பாய் மாநிலத்தில் உள்ள தக்காண மாவட்டங்களில் பருத்தி சாகு படி செய்யப்படுகிறது. சணலும், அவுரியும், வங்காளத்தில் சாகு படி செய்யப்படுகின்றன. பீகாரில் அபினும், அஸ்ஸாமில் தேயிலையும் பஞ்சாப் கால்வாய் காலனிகளில் கோதுமையும், பருத்தியும் சாகு படி செய்யப்படுகின்றன. இவ்வாறு வர்த்தகப் புரட்சியின் விளை வாகச் சில வட்டாரங்களில் குறிப்பிட்ட சில பயிர்களைச் சிறப்பான வகையில் சாகுபடி செய்யலாயினர்.

வர்த்தகப் புரட்சியின் காரணமாக இந்திய வேளாண் பொரு ளாதார அமைப்பின் பழைய மரபுகளில் பெரிய மாற்றங்கள்

ஏற்பட்டன. வேளாண் பொருள்களின் வர்த்தகம் பெருகியமை யால் கிராமங்கள், மற்றும் பெரிய அளவில் வட்டாரங்கள் முதலிய வைகளுக்கு உணவு தானியங்களிலும் மற்றும் அத்தியாவசியமான பொருள்களிலும் தன்னிறைவு பெற்று இருக்க வேண்டும் என்பது அவசியமில்லாமல் போயிற்று. உண்மையில் வர்த்தகப் பயிர்களை உற்பத்தி செய்யும் வட்டாரங்களில் வாங்கும் திறன் (Purchasing Power) திடீரென்று அதிகரித்தது. வர்த்தகப் பயிர்களை விற்பனை செய்தமையால் கிடைக்கும் தொகையைக் கொண்டு தங்களுக்குத் தேவையான உணவு தானியங்களையும் மற்றும் ஏனைய பொருள்களை யும் நாட்டின் இதர பகுதிகளிலிருந்து தருவித்துக் கொண்டார்கள். இதனால் விவசாயிகள், விளைச்சல் குறைவான ஆண்டுகளுக்காகவும் அடுத்த ஆண்டு மகசூல் காலம் வரையிலும், தங்களுக்குத் தேவையான தானியங்களைச் சேமிக்க வேண்டிய அவசியமில்லாமல் போயிற்று. வேளாண் பொருள்களுக்கு ஒரு வளர்ச்சி அடைந்த ஒரு சந்தை நாட்டில் வளர்ச்சி அடைந்தமையால் அவர்கள் உற்பத் தியை அப்படியே விற்பனை செய்து விடுவார்கள். பின்னர் நுகர்வுத் தேவைகளுக்காக வேண்டிய அளவு அப்போதைக்கு அப்போது வாங்கி வந்தார்கள். கிராமம் தனித்து இருந்த நிலையும், தன்னி றைவு பெற்று இருந்த நிலையும் முற்றிலும் மாறி விட்டன. உலகச் சந்தைகளில் ஏற்படும் விலை மாற்றங்களும், வர்த்தக ஏற்றத் தாழ்வு களும். இந்திய விவசாயிகளின் வருவாயைப் பெரிதும் பாதிக்கலா யின. இதற்கு முன்னர் வெளிச் சக்திகள் விவசாயிகளின் வரு வாயை இம்மாதிரியாகப் பாதித்தது இல்லை. விவசாயிகள் தங்களு டைய வீட்டுத் தேவையையும், கிராம மக்களின் தேவையையும் விட அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அங்காடியின் தேவையை யும், அங்காடி விலையையும் மதித்தார்கள். எனவே அத்தியாவசிய மான பயிர்களுக்குப் பதிலாக அதிக ஆதாயமானவற்றைச் சாகுபடி செய்தார்கள்.

பழைமையில் ஏற்பட்ட மாற்றங்கள் அனைத்தும் விவசாயிக ளுக்கு நன்மைப் பயப்பனவாக இல்லை. ஒரு வகையில் இதனால் அவர்கள் அதிக அளவிற்கு இன்னல் உற்றார்கள். வேளாண் பொருள்களின் வர்த்தகம் வளர்ச்சி அடைந்தமையால் உணவுப் பயிர்களைச் சாகுபடி செய்வதற்குப் பதிலாக வர்த்தகப் பயிர்களைச் சாகுபடி செய்தார்கள். இந்த வளர்ச்சியை நாட்டின் உணவு உற் பத்திக்கு ஏற்பட்ட பெரிய இழப்பாகக் கருதலாம். வங்காளத் திலும், ஒரிஸ்ஸாவிலும், 1866-ல் பஞ்சம் ஏற்பட்டது. அதைப்பற்றி துளசிப்பூர் ஜமீன்தாரான பாபு ஷிபோ பார்கேஷ் மிஸ்ஸர் (Babu Shibo Parkesh Misser of Tulsipur) அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார். பஞ்சத்திற்கான காரணங்களை அவர் பின் வருமாறு கூறுகிறார்:

"மாங்கீர் மாவட்டத்தில் உள்ள வளமையான நிலங்களில் அவுரி சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த 5 ஆண்டுகளில் அவுரி உற்பத்தி நிறுவனங்கள் அதிகரித்துள்ளன என்றும், நெல் சாகுபடி செய்வதற்கான நிலப்பரப்பு குறைந்துள்ளது என்றும் தற்போதைய இன்னல்களுக்கு இதுதான் முக்கியக் காரணமென்றும்" அவர் கூறியுள்ளார்.[6] காக்கரெல் (COCKERELL) அவர்கள் இந்தப் பஞ்சத்திற்கான காரணங்களை நேரிடையே விசாரித்துப் பின்னர் உணவு தானியப் பற்றுக் குறைக்கான காரணங்களைப் பின் வருமாறு கூறுகிறார்: "தானியங்கள் சாகுபடி செய்யக்கூடிய நிலப்பரப்பின் பெரும் பகுதியில் அவுரி சாகுபடி செய்யப்பட்டது என்றும், ஆண்டு தோறும் அவுரி சாகுபடி செய்கின்ற நிலப்பரப்பு அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது என்றும். இதன் காரணமாக உணவுதானியப் பற்றுக்குறை ஏற்பட்டு இருக்கக் கூடும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.[7] வடமேற்கு மாகாணங்களின் இலையுதிர்காலப் பயிர்களான சோளம், கம்பு, பருப்பு, மொச்சை முதலியவைகளுக்குப் பதிலாகப் பெரும்பாலும் பருத்தியும். ஓரளவிற்குக் கோதுமையும் சாகுபடி செய்யப்பட்டன என்று வருவாய்த்துறைக் கழகத்தினர் (Board of Revenue) கருதுகின்றனர்.[8] ஐக்கிய ப்ரெஸ்பைடேரியன் கோயிலைச் (United Presbyterian Church) சார்ந்த டாக்டர் மாக்கில் (Dr. Macgill) அவர்கள் 1870ல் இந்தியா மந்திரிக்கு (Secretary of State for India) ஒரு கடிதம் எழுதினார். அதில் "இராஜபுதனத்தில் உள்ள பற்றுக்குறைக்கான காரணத்தை" அவர் குறிப்பிட்டுள்ளார். "மால்வாவிக்கு உணவு தானியத்தை அளித்து வந்த வளமான நிலங்களில் இப்போது கசகசாச் செடிகள் பயிரிடப் படுகின்றன. இதன் உற்பத்திக்கு அரசாங்கம் ஆதரவு அளிக்கிறது" என்று குறை கூறி உள்ளார்.[9]

முன் எடுத்துக் கொண்ட காலத்தைப் பற்றி மேலே கூறிய அபிப்பிராயங்களைக் கொண்டு நாம் திருப்தி அடைய வேண்டியவர்களாக இருக்கிறோம். 1880க்கு முன் தனித்தனி பயிர்களின் சாகுபடி நிலப்பரப்புப் பற்றிய புள்ளி விவரங்கள் எதுவும் இல்லை.

6 பார்க்கவும். Government of India Proceedings. Home (Public) No. 44. June 1867.

7. 1867 ஆண்டில் பிப்ரவரி 15ம் நாள் வங்காள அரசாங்கத்திற்கு எழுதிய கடிதத்தில் பார்க்கவும் Home (Public) Proceedings No. 196, March 1967.

8 விவரத்திற்குப் பார்க்கவும் Report on extention of area under cotton in North Western Provinces letter No. 766 dated No 24 November 1864.

9 Letter dated 17 May 1870 Vide despatches (Famines) from Secretary of state to Government of India 1869 - 1904.

அதன் பின்னர் கிடைத்துள்ள விவரங்கள் எதுவும் இல்லை. அதன் பின்னர் கிடைத்துள்ள விவரங்கள் உணவுப் பயிர்களுக்குப் பதிலாக வர்த்தகப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன என்ற நமது முடிவை ஆதரிக்கும் வகையில் அமைந்து உள்ளன. இந்த உண்மையைத் தெளிவாக்கும் வகையில் கீழே உள்ள அட்டவணை(எண் 1)உள்ளது. இதனைப் பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஜார்ஜ் ப்ளீன் (George Blyn) அவர்கள் தயாரித்துள்ளார்கள்.[10]

அட்டவணை 1

அனைத்து இந்தியாவின், உணவுப் பயிர், வர்த்தகப் பயிர் மற்றும் மொத்தப் பயிர் உற்பத்தி பற்றிய மதிப்பீடுகள்: 1893-94 முதல் 1945-46 வரை

ஆண்டுகள்:	வருட சராசரி பயிர் விளைச்சலின் குறியீட்டு எண்: உணவுப் பயிர்:	வர்த்தகப் பயிர்:	மொத்தம்:	வர்த்தகப் பயிர்—உணவுப் பயிர் விகிதம்:
1883—94 முதல் *1895—96* வரை	*100*	*100*	*100*	*0·22*
1896—97 முதல் *1905—06* வரை	*96*	*105*	*98*	*0·24*
1906—07 முதல் *1915—16* வரை	*99*	*126*	*104*	*0·28*
1916—17 முதல் *1925—26* வரை	*98*	*142*	*106*	*0·32*
1926—27 முதல் *1935—36* வரை	*96*	*171*	*108*	*0·41*
1936—37 முதல் *1945—46* வரை	*93*	*185*	*110*	*0·44*

10 Blyn George. "The Agricultural Crops of India, 1813-14 to 1945-46, A Statistical study of out put and trends." Quoted in Thorner, Daniel "Long Term-Trends in Output in India."

1895—96லிருந்து 1945—46 வரையில் உள்ள 50 ஆண்டுக்காலத்தில் வர்த்தகப் பயிர்கள் விளைவு 85 சதவீதம் அதிகரித்துள்ளதையும் உணவுப் பயிர்கள் விளைவு 7 சத வீதம் வீழ்ச்சி அடைந்து இருப்பதையும் இந்த அட்டவணையில் காணலாம். வர்த்தகப் பயிர்களின் விளைவை உணவுப் பயிர்களின் விகிதமாகக் கூறும்போது அது ஆரம்ப காலத்தில் 0·22 ஆகவும், இறுதியில் 1936—37 முதல் 1945—46 வரையான பத்து ஆண்டுகளில் 0·44 ஆகவும் உயர்ந்துள்ளது.

வர்த்தகப் பயிர்களின் விளைவு அதிகரித்து உள்ளமையால் இவற்றின் சாகுபடிக்கான நிலப்பரப்பும் அதே விகிதத்தில் அதிகரித்திருக்க வேண்டும் என்று கருதுவது தவறு. குடியானவர்கள் உயர்ந்த ரக நிலத்தையும் நீர்ப்பாசன வசதியுடைய நிலத்தையும் வர்த்தகப் பயிர்களின் சாகுபடிக்காக ஒதுக்கி வைத்தார்கள். இதன் காரணமாக ஒரு ஏக்கர் நிலத்தில் விளையக் கூடிய வர்த்தகப் பயிர்களின் விளைச்சல் அதே அளவு நிலத்தில் விளையக் கூடிய உணவுப் பயிர்களை விட அதிகமாக இருந்தது. உணவுப்பயிர், வர்த்தகப் பயிர் ஆகியவைகளின் உற்பத்திப் பெருக்கத்தை ஒப்புமையாக நோக்குகின்ற போது அவை பயிரிடப்படும் நிலத்தின் தரவேறுபாட்டை நாம் நினைவில் (வைத்துக்) கொள்ள வேண்டும் என்றாலும் உணவுப் பயிர்களுக்குப் பதிலாக வர்த்தகப் பயிர்களைச் சாகுபடி செய்கின்ற இயல்பை மறுக்கவோ அல்லது மாற்றவோ முடியாது. இந்த நிலை இரண்டாவது உலகப் போர் முடிவு பெறும்வரை நீடித்தது என்று கூறலாம்.

பல்வகைப் பயிர்களின் சாகுபடி நிலப்பரப்பு

பிரிட்டிஷ் இந்தியாவில் பயிரிடப்படுகின்ற மொத்த நிலப்பரப்பு 188 மில்லியன் ஏக்கர்கள் என்று 1880ம் ஆண்டின் பஞ்ச ஆய்வுக் குழு தயாரித்தப் புள்ளி விவரங்களிலிருந்து நாம் அறிகிறோம். 1891—92ல் சாகுபடி செய்யப்படும் நிகர நிலப்பரப்பு அதே அளவில் இருந்தது. ஆனால் பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் 1901—02-ல் 199-71 மில்லியன் ஏக்கர்களாக உயர்ந்தது.— 1939-40ல் இது 209·96 மில்லியன் ஏக்கர்களாக அதிகரித்தது. சாகுபடி செய்கின்ற நிலப்பரப்பு மொத்தத்தில் 41 விழுக்காடு என்று கிராமப் பத்திரங்கள் (Village Papers) மூலமாக அறிகிறோம். இந்த நூற்றாண்டில் முதல் 40 ஆண்டுக் காலத்தில் இந்தியாவின் நிலப்பரப்புக்களைப் பயன்படுத்திய விவரங்கள் அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 2

பிரிட்டிஷ் இந்தியாவில் நில உபயோகம் பற்றிய புள்ளிவிவரங்கள்

	ஏக்கர்கள் (மில்லியன்) 1901—02	கிராமப் பத்திரங்களின்படி நிகரப் பரப்பு அளவின் விழுக்காடாக	ஏக்கர்கள் (மில்லியன்) 1939—40 *	கிராமப் பத்திரங்களின்படி நிகரப் பரப்பு அளவின் விழுக்காடாக
நிபுணர்கள் சர்வேயின்படி நிகரப்பரப்பு	552•92	—	512•70	—
கிராமப் பத்திரங்களின்படி நிகரப் பரப்பு	553•70	—	511•90	—
காடுகளின் பரப்பு	66•36	12•0	68•11	1•3
சாகுபடியில் அடங்காத நிலப் பரப்பு	137•96	24•9	89•31	17•4
தரிசாக இல்லாததும் இதர வகைகளில் சாகுபடி செய்யப்படாததுமான நிலம்	107•52	19•4	97•19	19•0
தரிசு நிலம்	42•15	7•6	44•33	9•3
பயிரிடப்பட்ட நிகர நிலப் பரப்பு	199•71	36•1	209•96	41•0
மொத்தம் பயிரிடப்பட்ட நிலம் : (இரு போகமும் அதற்கு அதிகமாகவும் சாகுபடி செய்யப்படும் நிலம் உட்பட)	220•35	—	244•57	—
நீர்ப்பாசனம் பெற்ற நிலப் பரப்பு	32•58	—	55•08	—

* 1901—02 ஆண்டிற்கான விவரங்கள், பர்மாவை உள்ளடக்கியதாகவும் 1938—39 விவரங்களில் பர்மா நீக்கப்பட்டுமுள்ளது.

வேளாண்மை சிறப்பாக உள்ள நாடுகளின் இலட்சிய நிலப் பகிர்வு பற்றிய நிபுணர்களின் கருத்தை இங்கே குறிப்பிடலாம். மொத்த பரப்பில் மூன்றில் ஒரு பங்கைப்பயிரிடும் நிலமாகவும், மற்றொரு பங்கைக் காடுகளாகவும், எஞ்சியுள்ள பகுதியைத் தரிசாகவும் புறம்போக்காகவும், கட்டிடங்களுக்காகவும் பயன்படுத்த வேண்டும் என்று கூறுகிறார்கள். இந்த அடிப்படையில் இந்தியாவின் நிலப் பகிர்வைக் காண்போமானால் வேளாண்மைக்காக நாம் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமான நிலத்தைப் பயன்படுத்துவதையும், காடுகளுக்காக ஒதுக்கிய நிலம் மூன்றில் ஒரு பங்கைவிடக் குறைவாக இருப்பதையும் காணலாம். அதாவது வேளாண்மைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலப்பரப்பு இலட்சியப் பகிர்வைவிட அதிகமாக உள்ளதையும், காடுகளுக்கான நிலப்பரப்பு நாட்டின் தேவைக்குப் போதுமானதாக இல்லை என்பதையும் காணலாம். இவ்வாறு காடுகளாக இருக்க வேண்டிய நிலப்பரப்பைச் சாகுபடிக் காகப் பயன்படுத்திய போதிலும், பயிர்களின் சாகுபடித் தேவைகளின் அதிகரிப்பிற்குப் போதுமானதாக இல்லை.

இவ்வுண்மையை விளக்கும் வகையில் நிலத்தின் உபயோகத்திற்குப் பல்வகைப் பொருள்களும் போட்டியிடுவதைக் காணலாம். உணவுப் பயிர்களுக்கும், வர்த்தகப் பயிர்களுக்கும் இடையே உள்ள போட்டியைப் பற்றி நாம் முன்பே குறிப்பிட்டுள்ளோம். 1901-லிருந்து 1939 வரையில், உள்ள காலத்தில் பலவகைப் பயிர்களின் சாகுபடிக்கான நிலப்பகிர்வில் உள்ள மாற்றங்களை முன் பக்கத்தில் உள்ள அட்டவணையில் காணலாம். (எண். 2)

நாட்டில் உணவுப் பொருள்களின் தேவை குறைந்துள்ளமையால் உணவுப் பயிர்களுக்கான நிலப்பரப்பு விழுக்காடு குறைந்துள்ளது என்று கருதுவது தவறு. ஒப்புமையாகப் பார்க்கின்றபோது வர்த்தகப் பயிர்களின் தேவை சந்தைகளில் அதிகரித்துள்ளதையும், அதன் விளைவாக உணவுப் பயிர்களின் நிலப்பரப்பு விழுக்காடு குறைந்துள்ளதையும் அறியலாம். இந்தப் போக்கு இந்தியா விடுதலை அடைந்த பின்னரும் நீடிக்கக் காண்கிறோம். விடுதலைக்கு முன்னர் நாட்டில் உணவு தானியங்கள் மட்டுமே பற்றாக் குறையாக இருந்தன. பிரிவினை காரணமாக சணல், பருத்தி முதலிய கச்சாப் பொருள்கள் விளையும் பெரும்பாலான நிலப்பகுதிகளை இந்தியா இழந்தது. இவைகளை ஏற்றுமதி செய்த நிலை மாறி, இறக்குமதி செய்ய வேண்டியதாயிற்று. 1952ல் முக்கியமான இரு உணவு தானியங்களான அரிசியும், கோதுமையும் ரூ. 175 கோடிக்கு இறக்குமதி செய்யப்பட்டன. ஆனால் அதே ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட கச்சாப் பஞ்சின் மதிப்பு ரூ. 115.44 கோடியாகவும், கச்சா சணலின் மதிப்பு ரூ. 23.5 கோடியாகவும் இருந்தன. வர்த்தகப்

பயிர்களின் உற்பத்திக்கும், தேவைக்கும் உள்ள வேறுபாடு காரணமாக நாட்டின் உணவுப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில், நமது முழுமையான கவனத்தைச் செலுத்த முடியவில்லை.

டவணை 3

பல வகைப் பயிர்களின் நிலப்பரப்பு

	1901-02		1939-40	
	நிலப்பரப்பு (மில்லியன் ஏக்கர்கள்)	மொத்தம்சாகுபடியாகும் நிலபரப்பின் சதவீதமாக.	நிலப்பரப்பு (மில்லியன் ஏக்கர்கள்)	மொத்தம் சாகுபடியாகும் நிலப்பரப்பின் சதவீதமாக.
உணவுப் பயிர்கள்	187.63	5	197·45	80.7
எண்ணெய் வித்துக்கள்	11.97	5.4	16.29	6.6
நார்ப் பயிர்கள்	13.14	5.9	17.23	7.1
இதர வர்த்தகப் பயிர்கள்	7.61	3.7	13.6	5.56
மொத்தம்	220.35	100	244.57	100

உணவு நிலைமை நெருக்கடியாகவுள்ள முழு ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கூட உணவுப் பொருள்களின் உற்பத்தி அதிக அளவு உயர்ந்துள்ளதைக் காணலாம். 1949—50ம் ஆண்டின் அடிப்படையில் (100 ஆக இருந்தது) உணவு தானிய உற்பத்தியின் குறியீட்டு எண் 1956—57ல் 120·5 ஆக உயர்ந்தது. அதே காலத்தில் நார்ப் பொருள்களின் குறியீட்டு எண் 174.4 ஆகவும், கரும்பின் குறியீட்டு எண் 135·3 ஆகவும் உயர்ந்துள்ளன.

நிலம் பயன்படுத்துகின்ற விதத்தைத் தெளிவாக்கும் வகையில் பல்வேறு பயிர்களுக்கு 1955—56ல் நிலம் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளதை அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணையில் காணலாம்

அட்டவணை 4.

பாரதத்தில் நில உபயோகம் பற்றிய புள்ளி விவரங்கள்.

நிலத்தின் உபயோகம்	மில்லியின் ஏக்கர்களில்
மொத்த பூகோளப் பரப்பு	806
மொத்தம் விவரங்கள் கிடைத்துள்ள பரப்பு.	720
சாகுபடி செய்யப்படாத நிலம்.	126
தரிசு நீங்கலாகவும். இதர வகைகளில் சாகுபடி செய்யாததுமான நிலம்.	97
தரிசு நிலம்.	60
பரிடப்பட்ட நிகரப் பரப்பளவு.	318 *
மொத்தம் பயிரிடப்பட்ட பரப்பு	362
இரண்டு அல்லது அதற்கு அதிகமான போகங்கள் சாகுபடியாகும் நிலம்.	44
உணவு தானியங்கள்.	273·2
கரும்பு	4·5
நிலக்கடலை	22·7
பருத்தி	19·98
சணல்	1·7
தென்னை	1·6

* சாகுபடி செய்யும் நிலப்பரப்பு இதர தலைப்புக்களில் உள்ளதைப் போல இந்திய யூனியனில் உள்ள நிலப்பகுதிகள் ஆகும். எனவே முன்பு சுதேசராஜ்யங்களாக இருந்த பகுதிகளையும் உள்ளடக்கி இருக்கிறது. இந்த விவரங்களை, இரண்டாவது அட்டவணையில் உள்ள சாகுபடியாகும் நிலப் பரப்புடன் ஒப்பிடக்கூடாது.

உணவு உற்பத்தி

பிரிட்டிஷ் இந்தியாவின் உணவு உற்பத்தியை முதன் முதலாக 1880ல் பஞ்ச ஆய்வுக் குழு (Famine Commission) கணித்துக் கூறியது. மாகாண அரசாங்கங்களின் உதவியால் "பல மாகாணங்களில் மக்கட் தொகையும், உணவு உற்பத்தியும்" [11] என்ற புள்ளி விவரத்தை அந்த ஆய்வுக் குழு சேகரித்தது.

பிரிட்டிஷ் இந்தியாவில் ஒவ்வொரு மாகாணமும் சாதாரணமாக உணவு தானிய உற்பத்தியில் உபரியாக உள்ளது என்றும், [பர்மாவை உள்ளிட்ட] இந்தியாவில் வருடாந்தர உபரி தானியத்தின் அளவு 5·16 மில்லியன் டன்கள் என்றும், இந்த ஆய்வுக் குழுவினர் கணக்கிட்டுள்ளனர். இதனின்றும் இக்குழுவினர் பின்வரும் முடிவுக்கு வந்தனர். "இந்தியாவில் உபரியாக உள்ள உணவுப் பொருள்களைக் கொண்டு நாட்டில் ஏதாவது ஒரு பகுதியில் குறிப்பிட்ட காலத்தில் ஏற்படக் கூடிய உணவுப் பஞ்சத்தைச் சமாளிக்க முடியும்.[12]

இருந்த போதிலும் இப்போது கணக்கிடப்பட்டுள்ள வருடாந்திர உபரி எதிர்காலத்தில் அதிகரிக்கக்கூடிய மக்கள் தொகையினரின் நுகர்வில் அழிந்துவிடக்கூடும் என்று எதிர்பார்ப்பது முற்றிலும் பொருத்தமாக இருக்கும். எனவே எதிர்காலத்தில் உற்பத்தி வேகம் மக்கட் தொகை அதிகரிப்பிற்கு இணையாக இருக்க வேண்டும்" என்றும் கூறியுள்ளார். குழுவில் உள்ள இரு உறுப்பினர்கள் புள்ளி விவரங்கள் உண்மையானவை என்று நம்பவில்லை. ஆகையால் அவர்கள் "உபரியாகக் கருதப்படும் அளவு மிகையான மதிப்பீடு ஆகும்" [13] என்று கருதுகிறார்கள். "இதனால் மிகப்பெரிய தானியப்பஞ்சம் ஏற்படுமேயானால் அதனை சமாளிப்பதற்குப் போதிய அளவு உபரி தானியம் இருக்காது." என்றும் கூறுகிறார்கள்." [14]

---

11 Report Part 1 Para 156

12 முன் கூறியபகுதி பத்தி 158

13 Dissent on certain points from the Report of the Famine Commission by Messrs James Caird and Sullivan, பார்க்கவும் Report பக்கம் 89.

14 முன் கூறியபடி

அட்டவணை 5

1880-ல் உணவு உற்பத்தி மதிப்பீடு

மாநிலம் :	மக்கட் தொகை:	உணவுப பயிர் நிலப் பரப்பு:	உணவுப பொருள் விளைவு :	வர்த்த ப் பயிர் நிலப் பரப்பு :	உணவு :	விதை :	மாட்டுத் தீவனம் :	சாதாரண நுகர்வு : சேதம் :	சாதாரண நுகர்வு : மொத்தம்:	சாதாரண நுகர்வு : உபரி :
		ஏககர் (000)	டன்கள் (000)	ஏக்கர் (000)	டன்கள் (000)	டன்கள் (000)	டன்கள் (000)	டன்கள் (000)	டன்கள் (000)	டன்கள் (000)
பஞ்சாப்	17,600	18,500	5,330	2,500	3,800	390	250	270	4,710	620
வடமேறகு மாநிலம் அயோத்தி	41,000	31,450	11,300	5,200	8 420	820	830	500	10,570	660
வங்காளம்	60,000	48,000	17,100	(?)	13,000	1,000	1,000	900	15,900	1,200
மத்திய மாகாணம்	8,200	12,000	2,750	2,500	1,660	460	180	150	2,450	300
பேரார்	2.250	3,700	620	2,800	400	30	80	30	40	80
பம்பாய்	16,000	21,500	4,500	5,500	3,300	29 0	260	210	5'150	350
தமிழ்நாடு	31,000	26,000	8500	2,500	6,300	400	440	420	7,560	940
மைசூர்	5,000	5,100	15,000	500	1,100	60	50	25	1,283	215
பர்மா	—	—	—	—	—	—	—	—	—	8,00,000
மொத்தம்:	181,350,000	166,250,000	515,30,000	21,500,000	37,980,000	3,450,000	30,90,000	2,555,000	47,165,000	5,165,000

1951ல் இந்திய மக்கள் தொகைக் கணிப்பின் ஆணையாளராக இருந்த திரு. கோபால்சுவாமி அவர்கள், மாறுபட்ட ஒரு அடிப் படையிலிருந்து, அதாவது நிகர உணவு, தானியங்களின் ஏற்றுமதி யின் அடிப்படையில் உறுதியான ஒரு முடிவுக்கு வந்துள்ளார். "1880 வது ஆண்டை ஒட்டிய காலத்தில் இந்தியாவில் சாதாரண மாக அரிசி, கோதுமை ஆகிய உணவு தானியங்கள் உபரியாக இருந்தன அவற்றின் உபரி சுமார் 12 இலட்சம் டன்கள்" என்றும் கூறுகிறார்.[15]

திரு. கோபால்சுவாமி அவர்கள் கூறியது சந்தேகத்திற்கு இட மில்லாத வகையில் சரியாக இருக்க வேண்டும். இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற உணவு தானியங்களின் வருட சராசரி 1·25 மில்லியன் டன்களாக உள்ளன, உணவு தானியங்களை இந் தியா ஏற்றுமதி செய்ததால், திரு. கோபாலசாமி அவர்கள் விளக் கிக் கூறியதைப் போல, ஏற்றுமதியாகும் அளவு நாட்டின் உபரியைக் குறிப்பதாகக் கருதலாம். ஆனால் ஏற்றுமதி உபரியை, நாட்டு மக்க ளின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்த பின்னர் எஞ்சியுள்ள பொருளாகக் கருதுவது தவறு. அதாவது மக்கள் உணவுத் தேவை களைப் பூர்த்தி செய்து கொள்ளும் அளவுவருவாய் உடையவர்களாக இல்லை. பெரும்பாலான மக்கள் பிழைப்பு மட்டத்திலே வாழ்கின் றனர். அவர்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய குறைந்த பட்ச பருப்பு வகைகளைக்கூட அவர்களால் நுகர முடியவில்லை. அவர்கள் அத்தியாவசியமானவைகளைத் தேவைகளாக மாற்ற முடி யாத அளவிற்குக் குறைந்த வருவாய் உடையவர்களாக இருந்தனர். வேளாண்மையில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான மக்கள் அந்த அள விற்கு ஏழ்மையாக இல்லாமல் தங்களுடைய பசியைப் போக்கிக் கொள்ளும் அளவிற்கு வசதி பெற்று இருப்பார்களேயானால், 1880-வது ஆண்டில் உற்பத்தியான உணவுப் பொருளால் மக்களின் தேவை முழுவதையும் பூர்த்தி செய்ய முடியாது; உணவு உபரியாக இருப்பதற்குப் பதிலாக (உணவு) பற்றாக் குறையாக இருந்திருக்கக் கூடும். எனவே 1880ல் இந்தியாவில் உணவுப் பொருள்கள் உபரி யாக இருந்தது என்று கூறுவது உண்மைக்கு மாறான ஒரு கூற் றாகும். இந்தியா ஒரு குறை வளர்ச்சியுடைய நாடு ஆகையால், உணவைப் பொருத்தவரை வருமானத் தேவை நெகிழ்ச்சி (Income -elasticity of demand) மிகவும் அதிகமாக இருக்கும். அதாவது வருவாய் அதிகரிக்கின்ற வேகத்தை விட அதிக வேகத்தில் உணவுப் பொருள்களின் தேவை அதிகரிக்கக் கூடும். அதாவது வருவாய் ஒரு சிறிது அதிகரித்த போதிலும், உணவுப் பொருள்களுக்கான

[15] Census Report of India 1951, Part I A, p. 164.

மொத்தத் தேவை பெருவாரியாக அதிகரிக்கும். அப்போது உணவுப் பொருள் உபரியாக உள்ள நிலைமை மாறி பற்றுக்குறையாகிவிடும். 1880 லிருந்து தான் இந்தியாவின் உணவுப் பிரச்சினையை விரிவாக ஆய்ந்து காண முற்பட்டுள்ளோம். அந்த சமயத்தில் இருந்த வருமான மட்டத்தையும், மக்கட்தொகையையும், அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது, உணவுப் பொருள்களின் தேவையும், உற்பத்தியும், நிலையற்ற சமன்பாட்டை பெற்று இருந்ததாகக் கூறலாம். அதாவது மக்கட் தொகையோ, வருமானமோ அதிகரிக்கின்றபோது இந்தச் சமன்பாடும் பாதிக்கப்படலாம். அந்நிலையில் இந்தியா உணவு தானியங்களை ஏற்றுமதி செய்யும் நாடாக இல்லாமல், இறக்குமதி செய்யும் நாடாக மாறிவிடும்.

இந்த இரு காரணங்களாலும் அடுத்துள்ள முப்பது ஆண்டுகளில் உணவு தானியங்களின் தேவைக்கும், உற்பத்திக்கும் உள்ள சமன்பாடு பாதிக்கப்பட்டது. 1889-ல் கஞ்சத்தில் பஞ்சம் (Ganjam Famine) ஏற்பட்டது. அதைத் தவிர அந்தப் பத்தாண்டு காலத்தில் (1880 முதல் 1889 வரை) நாட்டில் எத்தகைய இயற்கை உற்பாதங்களும் நேரவில்லை. இதனால் மக்கட்தொகை இந்த பத்தாண்டு காலத்தில் (1881—91) துரிதமாக வளர்ச்சி அடைந்தது. உண்மையில் 9·6 விழுக்காடு அதிகரித்து உள்ளது, இதற்கு அடுத்த பத்தாண்டுக் காலத்தில் 1896 லும், 1899 லும் நாட்டில் இரு பெரிய பஞ்சங்களும், பம்பாயில் பிளேக்கும் ஏற்பட்டன. இத்தகைய உற்பாதங்கள் காரணமாக மரண விகிதம் உயர்ந்தது. அக்காலத்தில் மக்கட் தொகை வளர்ச்சி விகிதம் 1·4 விழுக்காடாகக் குறைந்தது 1901க்குப் பின்னரும் நாட்டில் பஞ்சம், பிளேக்கு முதலியன தொடர்ந்து நீடித்த போதிலும், மரண விகிதம், இதற்கு முன்புள்ள பத்தாண்டில் இருந்ததைப் போல அதிகமாக இல்லை. மக்கட் தொகை வளர்ச்சி 1901—11 ஆண்டுகளில் 6·4 விழுக்காடாக இருந்தது, அடுத்துள்ள பத்தாண்டுகளில் (1914—21) இது 1·2 விழுக்காடாகக் குறைந்தது, 1871 லிருந்து 1911 வரையிலான இருபது ஆண்டுகளில் மக்கட் தொகை அதிகரித்ததுடன், நாட்டின் வர்த்தகமும், தொழிலும் கணிசமான அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ள[16] மையால் வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களின் வருவாயும் ஓரளவிற்கு உயர்ந்துள்ளது. இதனால் உணவுப் பொருள்களின் தேவை மேலும் அதிகரித்தது. இந்தக் காலத்தில் இந்தியாவில் விலை உயர்வு ஏற்பட்டது. இதற்கான காரணங்களை ஆய்ந்து கூறுமாறு இந்திய அரசாங்கம் நிதி அமைச்சகத்தில் பணியாற்றும் திரு. கே. எல், டட்டா (Mr.K.L. Dutta) அவர்களை நியமித்தது.

16 பார்க்கவும் Bhatia B, M. அவர்களின் Famines in India Since 1860 Bombay 1962) அத்தியாயம் 8

அவர் தந்துள்ள விளக்கத்தில் வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசிய மாக உள்ள பொருள்கள் தட்டுப்பாடாக உள்ளன என்றும், முக்கிய மாக உணவுத்தானியங்கள் அவ்வாறு உள்ளன என்றும், இது விலை உயர்வுக்கு ஒரு முக்கியக் காரணம் என்று கூறியுள்ளார்.[17]

நாடு முழுவதுமாகப் பார்க்கும் போது உணவு தானியங்கள் பற்ருக் குறையாக இருக்க முடியாது என்று இந்திய அரசாங்கம் கருதியதால் டட்டாவின் கூற்றை ஏற்க மறுத்தது. இருந்த போதி லும், இந்திய அரசாங்கம் பின் வருமாறு அறிக்கை வெளி யிட்டது: உலக உற்பத்தியில் பெரும்பகுதி இந்தியாவில் அமைந்துள்ளது. இ ந் தி ய ா வி ல் மொத்தமாகப் பார்க் கின்றபோது பற்ருக்குறை நிலைமை உள்ளதாகத் திரு. டட்டா அவர்கள் கூறுவதற்கு எத்தகைய முக்கியத்துவமும் கொடுக்க முடி யாது. நாட்டின் உண்மையான பிரச்சினை என்ன வென்ருல் மக்க ளின் பொதுவான [வருவாய் அதிகரித்துள்ளதா என்பதையும், அத ஞல் மக்களின்] வாங்கும் திறன் அதிகரித்துள்ளதா என்பதையும் தீர்மானிக்க வேண்டும். திரு. டட்டா அவர்கள் முடிவு செய்துள்ள தைப் போல, இந்தியாவில் அத்தகைய நிலைமை இருப்பதாக நிலை நாட்ட முடியுமேயாஞல், நாம் ஓர் உண்மையை அதனின்றும் பெற லாம். இந்திய சமுதாயத்தினர் இந்த வளர்ச்சிக்கு ஓரளவிற்குப் பாடு பட்டுள்ளார்கள் என்றும், அதன் காரணமாக வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களையும், ஓரளவிற்கு உற் பத்தி செய்து இருக்கிருர்கள் என்பதையும் உணரலாம்.[18] இத்த கைய சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் இந்தியாவின் மக்கட் தொகையும் வருவாயும் 1880 லிருந்து அதிகரித்துள்ள வேகத்திற்கு ஏற்ப (வேளாண்) உற்பத்தி இல்லை என்று திரு. டட்டா அவர்கள் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். வருவாயில் ஏற்பட்ட உயர்வை நாம் உதாசீனம் செய்த போதிலும், மக்கட்தொகை வளர்ச்சி அடைந்த அளவிற்குக்கூட நாட்டின் உணவு உற்பத்தி அதிகரிக்க வில்லை என்பதையும், முதல் உலகப் போருக்கு முன்னதாகவே உணவு நிலைமை மோசமடைந்து வந்தது என்பதையும் அறியலாம். கீழே கொடுக்கப்பட்ட அட்டவணை திரு. டட்டா அவர்களின் அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டது.[19]

17 **Report on Rise in Prices. P. P. 58-61**

18 Resolution of the Government of India, No. 1614 F. Finance Department Misc. Dated 25, October 1914, Para 17.

19 **Report on Rise in Prices: P. 58**

அட்டவணை 6

மக்கட் தொகை வளர்ச்சி, சாகுபடி நில அதிகரிப்பு பற்றிய குறியீட்டு எண்

	ஐந்து ஆண்டுகளுக்கான சராசரி—			
	1890-91 முதல் 1894-95 வரை	1895-96 முதல் 1899-1900 வரை	1900-01 முதல் 1904-05 வரை	1905-06 முதல் 1909-10 வரை
மக்கட் தொகை :	*100*	*101·6*	*103·7*	*105·7*
சாகுபடி செய்யப் படும் மொத்த நிலப்பரப்பு		*98*	*103*	*105*
உணவு தானியங் கள் சாகுபடியாகும் நிலப்பரப்பு	*100*	*96*	*101*	*102*
உணவு தானியங் களின் உற்பத்தி	*100*	*98*	*105*	*99*

மேலே கண்ட அட்டவணையிலிருந்து 1909—10ல் முடிவு பெறும் 20 வருட காலத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி நிலப்பரப்பு ஆகியவற்றைவிட மக்கள் தொகை அதிக வேகத்தில் அதிகரித்துள்ளதைக் காணலாம். 19வது நூற்றுண்டின் இறுதியிலேயே நாட்டில் ஏற்பட்ட விலை உயர்வின் மூலமாக உணவு தானியங்களின் மொத்த தேவைக்கும், உற்பத்திக்கும், இடையே உள்ள வித்தியாசத்தை மக்கள் உணரத் தலைப்பட்டனர். இந்த வேறுபாடு காலப் போக்கில் மேலும் அதிகரிக்கலாயிற்று.

1921க்குப் பின்னர் இந்தியாவின் உணவுப் பிரச்சினை ஒரு நெருக்கடியானக் கட்டத்தை அடைந்தமையால் இந்தியா நிகர இறக்குமதி செய்யும் நாடாக மாறியது. வர்த்தக அடிப்படையிலும் இந்தியா ஒரு பற்றுக்குறை நாடாக இருந்தது. இந்தியாவின் பற்றுக்குறை இரண்டு உலகப் போர்களுக்கும் இடையே உள்ள காலத்தில் அதிகரித்ததை அடுத்த பக்கத்தில் பார்க்கலாம்.[20]

[20] Census of India 1951 Part I. A. Report P. 166

அட்டவணை 7

உணவு தானியங்கள் வர்த்தகம்

ஐந்து ஆண்டு காலம்	(லட்சம் டன்களில்)		
	இறக்குமதி	ஏற்றுமதி	நிகர இறக்குமதி
1915—16 முதல் *1919—20* வரை	*11·9*	*15·9*	*4·0*
1920—21 முதல் *1924—25* வரை	*11·4*	*9·8*	*1·6*
1925—26 முதல் *1929—30* வரை	*15·9*	*8 3*	*7·6*
1930—31 முதல் *1934—35* வரை	*18·4*	*5·7*	*12·7*
1935—36 முதல் *1939—40* வரை	*20·7*	*6·9*	*13·7*

1919—20 வரை உணவு தானியங்களை நிகர ஏற்றுமதி செய்யும் நாடாக இந்தியா இருந்தது. அப்போது *4* லட்சம் டன்கள் உபரியாக ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் *1921*க்குப் பின்னர் உணவு தானியங்களை நிகர இறக்குமதி செய்யும் நாடாக மாறி விட்டது. இறக்குமதி செய்யப்படும் உணவு தானியங்கள் ஆண்டு தோறும் அதிகரித்துக் கொண்டே சென்றது. இந்த நிலைமை இரண்டாவது உலகப் போர் தொடக்கம் வரை தானிய இறக்குமதி ஒவ்வொரு ஆண்டிலும் அதிகரித்து வந்தது. அந்த சமயம் நாட்டின் இறக்குமதி *1·38* மில்லியன் டன்களாக இருந்தது, *1940—41*ல் இறக்குமதி *9·6* லட்சம் டன்களாகக் குறைந்தது. அதற்கு அடுத்த வருடம், *4·3* லட்சம் டன்களாகக் குறைந்தது. பர்மா *1942*-ல் வீழ்ச்சி அடைந்த பின்னர் *1942-43*ல் இறக்குமதி முற்றிலும் நிறுத்தப்பட்டது. அந்த சமயம் நாம் சிறிய அளவிற்குத் தானியங்களை ஏற்றுமதி செய்யலானோம். அவ்வகையில் இலங்கை, மற்றும் ஏனைய நாடுகளுக்கு சுமார் *2·3* லட்சம் டன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதனால் நாட்டில் துன்ப விளைவுகள் பல ஏற்படலாயின. *1943-44*ல் மிகவும் கடுமையான வங்காளப்பஞ்சம் ஏற்பட்டது. பஞ்சம் ஏற்பட்ட வருடத்தில் சர்வதேச பங்கீட்டுத் திட்டத்தின் அடிப்படையில் இந்தியாவிற்கு *5* லட்சம் டன்கள் உணவு தானியங்கள் கிடைப்பதற்கு வழி செய்தார்கள். அடுத்துள்ள இரு ஆண்டுகளிலும் இறக்குமதி *7·3* லட்சம் டன்களாகவும், *9·3* லட்சம் டன்களாகவும் முறையே அதிகரித்தது. உணவு தானியங்களின் நுகர்வில் கடைப்பிடித்த சிக்கன முறைகள் காரணமாகவும், பழைய இருப்புக்களைப்

பயன்படுத்திக் கொண்டமையாலும், கிடைத்த உற்பத்தியைக் கொண்டு, நாடு ஒருவாறு சமாளித்துக் கொண்டது. இரண்டாவது உலகப்போர் முடிந்த பின்னரே சாதாரண அளவிற்கு இறக்குமதிகள் மேற்கொள்ளப்பட்டன. 1946—47ல் ஓராண்டிற்கான நிகர இறக்குமதி 2·58 மில்லியன் டன்களாகும்.

பாரதத்தின் உணவு நிலைமை பிரிவினை காரணமாக மேலும் மோசமடைந்தது. பிரிவினை ஏற்பட்ட பின்னர் ஒரு முழு ஆண்டில், அதாவது 1948—49ல் நாட்டில் இறக்குமதி செய்யப்பட்ட மொத்த உணவு தானியங்கள் 3·05 மில்லியன் டன்களாகும். முதல் ஐந் தாண்டுத் திட்டக் காலத்தில் ஆண்டு ஒன்றுக்கான சராசரி உணவு பற்றுக்குறை சுமார் 3·27 மில்லியன் டன்களாக இருக்கும் என்று முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டுஇருந்தது. எனவே முதல் திட்ட இறுதியில் அதிகப்படியாக 6·5 மில்லியன் டன்கள் உற் பத்தி செய்யவேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்தார்கள். உண்மையில் திட்டக் காலத்தில் அதிகரித்த உணவு தானிய உற்பற்தி 7.6 மில்லியன் டன்களாகும். இது திட்ட இலக்கைவிட 1.1 மில்லியன் டன்கள் அதிகமாக இருந்த போதிலும் உணவுப் பிரச்சினையை நாம் தீர்த்து விட்டதாகக் கூறமுடியாது. இரண்டாவது திட்டக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பெருவாரியான முதலீடு காரணமாகவும், சில பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாகவும், சில பகுதிகளில் ஏற்பட்ட வறட்சி காரணமாகவும் பயிர்களின் விளைச்சல் குறைந்தது. இவைகளின் விளைவாக உணவு தானியங்களின் விலை வெறுப்பூட்டும் வகையில் உயர்ந்துள்ளது. தானியங்களின் இறக்குமதியை வெகுவாக அரசாங்கம் அதிகரித்தது. கூலப்பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள் முதலியவைகளின் விலை உயராமல் இருப்பதற்கும் பணவீக்க நிலைமையைக் கட்டுப்படுத்தவும் அரசாங்கம் முயன்றது. முதல் இரண்டு திட்டக் காலத்தில் உணவுப் பொருள்களின் உற்பத்தி, 58 மில்லியன் டன்களிலிருந்து 80 மில்லியின் டன்களாக உயர்ந்தது. அதாவது 38 விழுக்காடு அதிகரித்துள்ளது. ஆனால், அதே காலத்தில் 1951-61 ஆண்டுகளில் மக்கட்தொகை அபரிமிதமாக ஆண்டு ஒன்றுக்கு 2 விழுக்காடு வீதம் வளர்ச்சியடைந்துள்ளது. அத்துடன் வேளாண் துறையின் (மக்களின்)வருவாய் அதிகரித்தமையால் உணவு தானியங்களின் தேவை வெகுவாக உயர்ந்தது. இவ்விரு காரணங்களாலும் நாட்டின் உணவுப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய நிலையை நாம் எய்தவில்லை. 3-வது திட்டத்தில் உணவு உற்பத்தியின் இலக்கு 100 மில்லியன் டன்களாக உள்ளது.

இந்திய வேளாண்மைப் பிரச்சினைகள்

(i) சிறிய அளவு நில உடைமைகள்:-

இந்த நாட்டில் வேளாண்மை வளர்ச்சியைத் தடை செய்யும் ஒரு காரணியாக நிலத்தில் சிறு உடைமைகள் இருக்கின்றன. கடந்த நூற்றாண்டு காலத்தில் தான் சிக்கனமற்ற நில உடைமைகள் (un economic holdings) ஒரு பிரச்சினையாகத் தோன்றியுள்ளது.

மக்கட் தொகை குறைவாக இருக்கின்ற வரை, சாகுபடி நிலம் போதியளவு கிடைக்கின்றவரை, விவசாயிகளிடம் உள்ள மூலதனம், உழைப்பாளிகள் முதலியவைகளைப் பொறுத்து அவர்களுடைய நில உடைமைகளின் அளவு அமைந்து இருந்தது. சுமார் 1750 வரை இந்தியாவில் நிலம்—ஆள் விகிதம் மிகவும் சாதகமாக இருந்தது. அக்காலத்தில் வேளாண் உற்பத்தியில் உழைப்புதான் தட்டுப் பாடான ஒரு காரணியாக இருந்தது. அப்போது வேளாண் நிலத்திற்கு எவ்வித மாற்று மதிப்பும் இல்லை. அடுத்த நூற்றாண்டுக் காலத்தில், உற்பத்தியின் இரு முக்கிய காரணிகளான நிலம், உழைப்பு ஆகியவற்றின் தொடர்புகள் பல காரணங்களால் மாற்றம் அடைந்தன, 18 வது நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19வது நூற்றாண்டின் துவக்கத்திலும் ஏற்பட்ட இரு மாற்றங்கள் குறிப்பிடத்தக்கவை. அப்போது மக்கட்தொகை அதிகரித்தமையாலும் கைவினைத் தொழில்கள் நசித்துப்போனதாலும் செய்பொருள் தொழிலில் (manufacturing industries) ஈடுபட்டு இருந்த தொழிலாளர்கள் நில சாகுபடியை மேற்கொண்டதாலும் பிரிட்டிஷார் புதிதாக ஏற்படுத்திய நிலச்சட்டங்கள் காரணமாகவும், சாகுபடி செய்யப்படுகின்ற நிலம் செல்வந்தர்களின் லாபகரமான முதலீட்டுப் பொருளாக மாறியது. பல வகுப்புக்களைச்சார்ந்த மக்களிடையே நிலத்திற்காகச் செறிந்த போட்டி ஏற்பட்டது. 19வது நூற்றாண்டின் இடைக்காலத்தில் நிலம் ஒரு பற்றாக்குறைக் காரணியாகவும், உழைப்பு அபரிமிதமாகக் கிடைக்கக்கூடிய ஒரு காரணியாகவும் மாறியது. வட மேற்கு மாகாணத்தில் [தற்சமயம் உத்தரப் பிரதேசமாக உள்ளது] உழைப்பாளிகள் மிகவும் அதிகமாக இருந்ததாக ஜெனரல் ஆர். ஸ்டராச்சி (General R. Strachey) குறிப்பிட்டுள்ளார். "பல மாவட்டங்களில் மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பகுதி மக்கள் பயனற்றவேலையில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும், இதனால் எஞ்சியுள்ளவர்கள் ஏழ்மையாக்கப்படுகிறார்கள்" என்றும் குறிப்பிட்டுள்ளார். "இப்போது விளைவிக்கப்படுகின்ற அதே அளவு விளைச்சலை, வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களில் மூன்றில்

ஒரு பகுதியினர் நீடிக்கப்பட்ட போதிலும் விளைவிக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை" என்று கூறியுள்ளார்.[21]

[நாட்டின் வேலை அளிப்பிற்கான வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதுடன்] வேளாண்மையிலிருந்து நீக்கப்படுகின்ற உழைப் பாளிகளுக்கு மற்றொரு வேலை(வாய்ப்பு) கிடைப்பதற்கான வாய்ப்பு கள் இல்லாமையால் நிலத்தில் உபரியாக உள்ள உழைப்பாளி களை நீக்கமுடியவில்லை. நாட்டில் அமைந்துள்ள ஒரு குறிப்பிட்ட அளவுடைய நிலப்பரப்பை, பெருகிவரும். எண்ணிறந்த குடும்பங் கள் பகிர்ந்து கொள்ளவேண்டி இருக்கிறது. மக்கட்தொகை அதிகரிக்கின்றமையால் ஒரு குடும்பத்தின் சராசரி நில உடைமை குறையலாயிற்று. இந்தியாவில் பொதுவான மூதாதையர்களால் திரட்டப்பட்ட சொத்தில் எல்லா மகன்களுக்கும் சமஉரிமை உண்டு என்று அறிவித்த சொத்துரிமைப்பேறுச்சட்டங்கள் காரண மாகவும் ஏகக் குடும்ப முறையில் ஏற்பட்ட பிளவுகள் காரணமாக வும் நிலவுடைமை மேலும் குறையலாயிற்று.

ஹெரால்ட் மான் (Harold Mann) அவர்கள் இந்த நூற்றாண் டின் துவக்கத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்: "கடந்த 60 அல்லது 70 ஆண்டு காலத்தில் நிலத்தின் தன்மை முற்றிலும் மாறி விட்டது. பிரிட்டிஷாரின் காலத்திற்கு முன்பும், பிரிட்டி ஷார் ஆட்சியின் துவக்கத்திலும், குறைந்த பட்ச நில உடைமை கள் 9 முதல் 10 ஏக்கர் அளவினதாக இருந்தன. அக்காலங்களில் 2 ஏக்கருக்கும் குறைவான நிலவுடைமைகள் இல்லை என்றே சொல்லலாம். இப்போது நில உடைமைகள் இருமடங்காக அதி கரித்துள்ளன. இதில் 81 விழுக்காடு உடைமைகள் 10 ஏக்கர் பரப்பைவிட குறைவானவை. 60 விழுக்காடு 5 ஏக்கரை விட குறைவானவையாகும்"[22] ஜடேகாவன் பாத்ரக் (Jategaon Badruk) என்னும் கிராமத்தில் அவர் நில அளவை செய்துள்ளார். அந்தக் கிராமத்தில் 1771-ல் சராசரி உடைமையின் அளவு 40 ஏக்கராக இருந்தது. 1820-40 ல் 14 ஏக்கராகவும் குறைந்துள்ளது. போர்ஸாத் (Borsad) தாலுக்காவில் இந்த நூற்றாண்டின் முதல் 20 ஆண்டுகளில் நில உடைமைகளின் எண்ணிக்கை 79 விழுக்காடு அதிகரித்து உள் ளது. அதேசமயம் நில உடைமையின் பரப்பளவு 7-லிருந்து 3.8 ஏக்கராகக் குறைந்துள்ளது. பிவாந்தி(Bhiwandi) தாலுக்காவை விசாரணை செய்த டாக்டர் பாகத் (Dr. Bhagat) அவர்கள் 1886 லிருந்து 1937 வரையிலான ஆண்டுகளில் 5 ஏக்கருக்கும் குறை வான நில உடைமைகளின் விழுக்காடு 49.7லிருந்து 69.1 ஆக

21. Report on the Iron-works in the Kumaon Bahbur, 1856
22. Mann, H., Land and Labour in a Deccan Village, vol. I. P. 46.

உயர்ந்தது என்றும், 5 முதல் 25 ஏக்கர்வரையிலான நில உடைமைகளின் விழுக்காடு 40.5 லிருந்து 25.5 ஆகக் குறைந்துள்ளது என்றும் கூறுகிறார். இவ்வாருக நிலத்தைப் பிளவுபடுத்துகின்ற முறைமை ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திலோ, மாகாணத்திலோ, மட்டுமின்றி நாடெங்கிலும் கடந்த 100 ஆண்டு காலமாக இயங்கி வந்துள்ளது.

பல மாநிலங்களில் நில உடைமைகள் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ள நிலைமையையும், அவைகளின் அளவையும் பற்றிய ஆய்வு ஒன்றைத் திட்டக் கமிஷன் மேற்கொண்டது. இந்த ஆய்வுகள் (disquieting state of affairs) கவலைக்கிடமான நிலைமையை விளக்குகின்றன. இவ்வாறு 1953-54ல் நடத்தப்பட்ட சர்வேயில் 10 ஏக்கர் நிலப்பரப்பை விடக் குறைவான சில உடைமைகள்கள் ஆந்திரப் பிரதேசத்தில் 82.8 விழுக்காடாகவும், குஜராத்திலும், மகாராஷ்டிரத்திலும் 66.0 விழுக்காடுகளாகவும் மத்தியப் பிரதேசத்தில் 77.2 விழுக்காடாகவும், கேரளத்தில் 98.4 விழுக்காடாகவும், ராஜஸ்தானத்தில் 62.4 விழுக்காடாகவும், உத்தரப்பிரதேசத்தில் 94·9 விழுக்காடாகவும் கணக்கிட்டுள்ளார்கள்.[23] இந்த அளவுடைய நில உடைமைகள் ஒரு குடும்பத்தைப் போதியவசதியுடன் காப்பாற்றக்கூடிய வருவாயை நல்குவதாக இல்லாததுடன், நிலச்சாகுபடியில் இயந்திரங்களையும் நவீன உற்பத்தி நுட்பமுறைகளையும் பயன்படுத்த முடியாமலும் செய்கின்றன சில உடைமைகள் சிறிய அளவினதாக இருக்கின்றமையால் வேளாண்மை ஒரு பிற்போக்கானத் தொழிலாக இருப்பதுடன் அதில் ஈடுபட்டுள்ளவர்களை மீளாத ஏழ்மையிலும், இன்னல் செறிந்த தாழ்வான வாழ்க்கைத்தரத்திலும் அவை ஆழ்த்தியுள்ளன.

நில உடைமைகள் சிறு அளவினதாக மட்டுமின்றி சிதறுண்டும் இருக்கின்றன. இதனுல் பிரச்சினை மேலும் மோசம் அடைந்துள்ளது எனலாம். நிலஉடைமைகள் சிதறுதலும் துண்டு படுதலும் ஒரேகாலத்தில் ஏற்படக் கூடியன. சிதறுதல் என்பதைப் பின்வருமாறு விளக்கிக்கூறலாம் : ஒருவருக்கு சொந்தமான நிலம் சிறு அளவினதாக இருந்தபோதிலும் ஒரே இடத்தில், ஒரே துண்டாக இல்லாமல் கிராமத்தில் பல இடங்களில் சிதறுண்டு சிறு சிறு பகுதிகளாகப் பரவிக் கிடப்பதைத்தான் சிதறுதல் என்று குறிப்பிடுகிறோம், நாட்டின் பல பாகங்களிலும் சாகுபடி செய்யப்படும் நிலம் சிதறுதல் பற்றி நடத்தப்பட்ட ஆய்வுகள் மூலம் நிலம்

23. Third Five year Plan (New Delhi) 1961. PP. 241-9

சிதறுதல் நம்பமுடியாத அளவிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிகிறோம். ஓர் இடத்தில் அரை ஏக்கர் நிலம் சுமார் 20 துண்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பஞ்சாபில் ஜலந்தர்(Jullunder) மாவட்டத்தில், பைராம்பூர் கிராமத்தில் ஷாதிலால் பெல்லா (Shadilal Bhalla) என்பவர் ஓர் ஆய்வு நடத்தினர். ஒரு ஏக்கரில் 5 ல் ஒரு பாகத்தை விடக் குறைவான நிலப்பரப்பையுடைய துண்டுகள் 1898 இருக்கின்றன என்றும், 25க்கும் அதிகமான துண்டுகளை உடைய நில உடமைகள் மொத்தத்தில் 34.5 விழுக்காடாக உள்ளன என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.[24] இது நாட்டின் இதரப் பகுதிகளில் காணப்படுகின்றவற்றினின்றும் மாறுபட்ட, அல்லது அசாதரணமான ஒரு அனுபவமாகக் கருதுவதற்கில்லை. நாடெங்கிலும் இதைப்போன்ற நிலைமையிருப்பதாகக் கூறலாம்.

1912-ல் கீட்டின்ஞ் [Keatinge] அவர்கள் மகாராஷ்டிரத்தில் உள்ள தக்காண மாவட்டங்களைப் பற்றிப் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார். "ஒருவூரது உடைமை கிராமம் முழுவதும் பல சிறு துண்டு நிலங்களாகச் சிதறிக் கிடந்தன. பல இடங்களில் தோட்ட நிலங்களை மிகச் சிறிய அளவிற்குப் பகுத்திருக்கிறார்கள். அதாவது ஒரு துண்டு நிலத்தின் பரப்பு ஒரு ஏக்கரில் 4-ல் ஒரு பங்கு முதல், 10-ல் ஒரு பங்கு வரை உள்ளது."[25] தமிழ் நாட்டில் ஒரு கிராமத்தில் 1658 ஏக்கர்கள் கொண்ட நிலப்பரப்பை 1027 துண்டு நிலங்களாகப் பகுத்துள்ளனர். இவை 170 சாகுபடியாளர்களின் உடைமைகளாக இருந்தன. ஒவ்வொருவருக்கும் சராசரியாக 6 துண்டு நிலங்கள் இருப்பதைக் காணலாம்.[26] வங்காளத்தில் பல உடைமைகளின் பரப்பு 0.4 ஏக்கர் என்று டாக்டர் முகர்ஜி அவர்கள் கூறியுள்ளார்.

வேளாண்மையில் ஈடுபட்டுள்ள உழைப்பாளிகளின் ஒரு பகுதியினரைத் தொழில்துறைக்கு மாற்றுவதே சிறிய அளவு வேளாண் உடைமைக்கான மிக முக்கியத் தீர்வாகும். அதிகரிக்கும் மக்கட் தொகை காரணமாக, எதிர்காலத்தில் கூடுதலாகும் தொழிலாளர்கள் அனைவருக்கும் வேளாண்மையல்லாத துறைகளில் வேலை அளிப்பதற்குச் செய்பொருள் தொழில்கள், மூன்றும் துறைகள் (Tertiary Sectors) முதலியவற்றில் வேலை வாய்ப்பு நிலைகளை அதிகரிக்க வேண்டும். வேறு வகையாகச் சொல்ல வேண்டுமானல் அடிப்படையில் இது ஒரு பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினையாக

24. Board of Economic Punjab: Survey of Bairampur Village.

25 Rural Economy in Bombay Deccan, P. 41.

26 Thomas and Ramakrishnan Some South Indian Villages-A, Resurvey. பக். 340.

உள்ளது. அதாவது நாட்டைத் தொழில் மயமாக்கும் பிரச்சினை யாக உள்ளது. ஆனால், இவைகளை நிறைவேற்றுவதற்கு நீண்ட காலம் ஆகலாம். நாம் கடந்த 100 ஆண்டுகளாகத் தொழில் வளர்ச்சியைப் புறக்கணித்தமையால் தற்சமயம் அதனை ஈடு செய்யும் வகையில் அதிகக் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. எனவே சிக்கனமற்ற நில உடைமைகள் (uneconomic holding) நெடுங் காலத்திற்குத் தொடர்ந்து ஒரு பிரச்சினையாகவே இருக்கும். சிக்கன மற்ற அளவில் உள்ள சாகுபடி உடைமைகளினால் ஏற்படும் பாதக விளைவுகளைத் தவிர்ப்பதற்குக் கூட்டுறவு சாகுபடி முறை ஒரு சிறந்த வழியாகும். நாடு எங்கிலும் கூட்டுறவு சங்கங்கள் அமைத்துக் கூட்டுச் சாகுபடி செய்வதை ஆதரிப்பது அரசாங்கத்தின் கொள்கையாக உள்ளது. கூட்டுறவுச் சாகுபடிக்குப் பலவகை எதிர்ப்புகள் இருந்தபோதிலும் கூட்டுறவு கோட்பாடுகளின் அடிப் படையில் நிலத்தைச் சாகுபடி செய்யவேண்டும் என்று வற்புறுத்து கின்றபோது தற்சமயம் எண்ணிறந்த மக்களுக்கு லாபகரமாக வேறு தொழிலில் வேலை கிடைக்காமையால் நிலத்தைச் சார்ந்து இருக்கிறார்கள் என்பதையும், நாட்டில் உள்ள சாகுபடி நிலத்தைத் திறமையாகச் சாகுபடி செய்வதற்குத் தேவையான உழைப்பாளி களை விட, அதிகமான மக்கள் அதில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை யும் அரசாங்கம் கருத்தில் கொள்ளவில்லை. இப்போது காணப் படுகின்ற நிலம் ஆள் விகிதத்தின் காரணமாகவும் கிராமப்பகுதி களில் நிலவுகின்ற குறைவேலை நிலைமைக் (under employment) காரணமாகவும், இந்தியாவில் சாகுபடி செய்கின்ற நிலப்பரப்பில் பெரும் பகுதியை எதிர்காலத்தில் உடனடியாகக்கூட்டுறவு சாகுபடி முறைக்குக் கொண்டு வரும் திட்டம் நம்பிக்கை அளிக்கக் கூடிய தாக இல்லை.

நில உடைமைகள் சிதறுண்டுள்ள பிரச்சினையை எளிதில் தீர்த்து விட முடியும். அவ்வகையில் இருவகை மாற்று உபாயங்கள் உள்ளன. (1) சட்டங்கள் மூலம் கட்டாயப்படுத்தியோ, மக்க ளிடையே மன மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமாகவோ சிதறுண்டுள்ள உடைமைகளை ஒன்றாகத் தொகுக்கலாம் (consoli- dation) (2) அடுத்து சாகுபடி செய்யப்படுகின்ற நில உடைமைகளை ஒரு குறிப்பிட்ட குறைந்த பட்ச அளவிற்கும் குறையாமல் தடுப்பது. இவ்விரு தீர்வுகளும் ஒன்றுக்கொன்று துணையாக உள்ளன.

கூட்டுறவு சங்கங்களின் மூலமாக நில உடைமைகளை ஒன்றாகத் தொகுக்கும் முயற்சி முதன் முதலில் 1921-ல் பஞ்சாபில் மேற் கொள்ளப்பட்டது. இந்த இயக்கத்தில் முதல் பத்தாண்டு காலத் தில் திருப்திகரமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அப்போது ஒரு மில்லியன் ஏக்கர்களுக்கும் அதிகமான நிலப்பரப்பு தொகுக்கப்

பட்டது. டார்லிங் (Darling) அவர்கள் குறிப்பிட்டபடி சம்பவங்கள் நடைபெற்ற பின்னர் "அவைகளின் விளைவுகளைத் தொகுத்துப் பதிவு செய்வது மிகவும் சுலபம். ஆனால் அந்த விளைவுகளை ஏற்படுத்துவதுதான் மிகவும் கடினம்". பஞ்சாப்பின் உதாரணத்தை ஏனைய மாகாணங்கள் பின்பற்ற முடியவில்லை. எனவே ஓரளவு கட்டாயப்படுத்தும் வகையில், மத்திய மாகாணத்திலும் (மத்திய பிரதேசம்) பம்பாயிலும் (மகாராஷ்டிரம், குஜராத்) சட்டங்கள் முறையே 1928-லும் 1927-லும் இயற்றப்பட்டன. இருந்தபோதிலும், நாடு விடுதலை பெறுகின்ற வரை இதன் முன்னேற்றம், திருப்தியாக இருக்க முடியவில்லை. நில உடைமைகளைத் தீவிரமாகத் தொகுக்கின்ற வேலை முதல் ஐந்தாண்டு திட்டக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. அது சமயம் பம்பாயில் 21 லட்சம் ஏக்கர்கள் நிலமும், மத்தியப்பிரதேசத்தில் 29 லட்சம் ஏக்கரும். பஞ்சாபில் 48 லட்சம் ஏக்கரும், உத்தரப் பிரதேசத்தில் 44 லட்சம் ஏக்கரும், பெப்சு (தற்சமயம் பஞ்சாபில் இணைந்துள்ளது) 13 லட்சம் ஏக்கர்களும் தொகுக்கப்பட்டன.

முதல் திட்டக் காலத்திற்கு முன்னரே நிலம் சிதறுதலைத் தவிர்க்கும் சட்டங்கள் பம்பாய், டெல்லி, பெப்சு, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் இயற்றப்பட்டன. திட்டக்காலத்தில் நிலம் மேலும் சிதறுண்டு போகாமல் இருப்பதற்கு 15 மாநிலங்களில் தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மத்திய பாரதத்தில் குறைந்த பட்ச அளவு 15 ஏக்கர் என்றும், போபால் பகுதிகளில் 5 ஏக்கர் என்றும் மத்தியப் பிரதேச அரசாங்கம் தீர்மானித்தது. வேளாண்மை நில உடைமைகளுக்கான குறைந்தபட்ச அளவை நிர்ணயிக்கும் சட்டங்கள் ஹைதராபாத்திலும், விந்திய பிரதேசத்திலும், டெல்லியிலும், உத்தரப்பிரதேசத்திலும் கொண்டு வரப்பட்டன. கீழே உள்ள அட்டவணையில் நில உடைமைகளைத் தொகுக்கின்ற முயற்சியில் பல மாநிலங்களில் 1957-ஆண்டு டிசம்பர் மீ 31உ வரை ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் காணலாம்.

(ii) பிற்போக்கான சாகுபடி நுட்ப முறைகள்

நில உடைமைகள் சிறு அளவினதாக இருக்கின்றமையாலும், இந்திய வேளாண்மையில் உற்பத்தி முறைகள் பிற்போக்காக இருப்பதாலும் ஒரு ஏக்கரின் விளைவு உலகத்திலேயே மிகக் குறைவானதாக உள்ளது. 1952-ல் இந்தியாவில் சராசரி ஒரு ஏக்கரில் விளைந்த நெல் 1038 பவுண்டுகள், அமெரிக்காவில் 2411 பவுண்டுகள், பிரேஸிலில் 1355 பவுண்டுகள், ஜப்பானின் 3634 பவுண்டுகள் ஆகும். அதுபோல கோதுமையை எடுத்துக் கொள்வோமானால் இந்தியாவில் 572 பவுண்டும், பிரிட்டனில் 2508 பவுண்டும், அமெரிக்

அட்டவணை 8

நில உடைமைகள் தொகுப்பு

மாநிலங்கள் / யூனியன் பிராந்தியங்கள்	1957-டிசம்பர் 31-ம் தேதிவரை முடிவு பெற்றுள்ள அளவு	1957-டிசம்பர் 31-ம் தேதியன்று செயல் பட்டுவருகின்ற அளவு
	ஏக்கர்கள் :	ஏக்கர்கள் :
ஆந்திரப் பிரதேசம்	இல்லை	1,92,341
அஸ்ஸாம்	இல்லை	இல்லை
பீகார்	இல்லை	2,55,885
பம்பாய்	12,65,275	11'79,542
மத்தியப் பிரதேசம்	29,95,435	2,19,642
தமிழ் நாடு	இல்லை	இல்லை
மைசூர்	3,88,334	4,51,110
பஞ்சாப்	85,80.874	56,17.438
இராஜஸ்தான்	22,10.000	3,62,119
உத்தரப்பிரதேசம்	13,98,592	37,35,129
மேற்கு வங்காளம்	இல்லை	இல்லை
டெல்லி	2,01,834	இல்லை
இமயமலைப் பிரதேசம்	21;762	26,104
மொத்தம்	1,48.73,179	1,20,39,310

காவில் 1082 பவுண்டும், ஃப்ரான்ஸில் 1751 பவுண்டும், மேற்கு ஜெர்மனியில் 2428 பவுண்டும், கனடாவில் 1566 பவுண்டும் ஆகும் சோள (Maize) உற்பத்தி இந்தியாவில் 651 பவுண்டும், அமெரிக்கா 2235 பவுண்டும், இத்தாலியில் 1654 பவுண்டும், பிரேஸிலில் 1064 பவுண்டும், சீனாவில் 1170 பவுண்டும், அர்ஜென்டைனாவில் 1328

பவுண்டும் விளைகின்றன. பஞ்சு உற்பத்தி இந்தியாவில் 79 பவுண்டு ஆகவும், அமெரிக்காவில் 273 பவுண்டு ஆகவும், பிரேஸிலில் 158 பவுண்டு ஆகவும் சீனாவில் 141 பவுண்டு ஆகவும். பாகிஸ்தானில் 167 பவுண்டும், எகிப்தில் 475 பவுண்டாகவும் உள்ளது. நிலக் கடலையின் உற்பத்தி வீதம், இந்தியாவில் 537 பவுண்டும், அமெரிக் காவில் 924 பவுண்டும் ஆகும். உற்பத்தி வீதத்தில் இந்தியாவிற்கும் ஏனைய நாடுகளுக்கும் உள்ள வேறுபாடு, இந்திய வேளாண்மை உற்பத்தி முறையின் பிற்போக்கான நிலைமையை எடுத்துக் காட்டு வதுடன் அதனை மற்ற நாடுகளுக்குச் சமமாக உயர்த்துவதில் உள்ள இடர்ப்பாட்டையும், அதனைச் சமாளிப்பதற்கு நாம் மேற்கொண் டுள்ள முயற்சியையும் எடுத்துக் கூறுகிறது.

வேளாண்மையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் 1778-முதல் முயன்று வந்துள்ளது. அந்த ஆண்டில் கிழக்கு இந்தியக் கம்பெனியின் நெறியாளர்கள் மன்றம் இந்தியாவில் பஞ்சு உற்பத்திக்கு ஆதரவு அளிக்குமாறும், உற்பத்தி முறையில் முன்னேற்றம் ஏற்பட முயற்சி செய்யவேண்டும் என்றும் இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டது. 19-வது நூற்றாண் டின் முதல் பாதியில் பல தனியார் சங்கங்கள் தோன்றின. அதில் சில ஐரோப்பியர்களும் உறுப்பினர்களாக இருந்தார்கள். இந்தியாவில் பல புது வகையான பருத்திகளைச் சாகுபடி செய்வ தற்கு உதவுவது இச்சங்கங்களின் நோக்கமாகும். அமெரிக்காவில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரின் காரணமாக, இந்திய அரசாங்கம் பருத்தி சாகுபடியில் கவனம் செலுத்தியதுடன், அதற்கு ஆதரவும் அளித்தது. மத்திய மாகாணத்தில், பருத்தி ஆணையாளர் நியமிக் கப்பட்டார். சில சோதனைப் பண்ணைகள் நிறுவப்பட்டன. வெளி நாடுகளிலிருந்து கொண்டு வந்த சில புதிய வகைகளை இந்தியாவில் சாகுபடி செய்ய அவர்கள் முயன்றார்கள். இவ்வாறு மேற் கொண்ட முயற்சிகள் அதிக அளவு வெற்றியை நல்கின. அந்த வகையில் புதிய வகை பருத்தியும், மற்றும் உருளைக் கிழங்கு, சின்கோனா, (Cinchona) தேயிலை முதலியன இந்தியாவில் புதிதாகப் பயிரிடப்பட்டன. ஆனால், இந்த வெற்றிகள் புராதன வேளாண் பயிர்களின் விளைச்சல் வீதத்தை அதிகரிக்கவோ, அவைகளின் தரத்தை உயர்த்தவோ இல்லை.

விவசாய இலாகாவை ஒவ்வொரு மாகாணத்திலும் ஏற்படுத்த வேண்டும் என்று 1880-ல் பஞ்ச ஆய்வுக் குழு சிபாரிசு செய்துள்ளது. இந்த இலாக்காக்களை மாகாண அரசாங்கங்கள் ஏற்படுத்துவதற்கு அதிக காலம் பிடித்தது. அப்படி ஆரம்பித்த பின்னரும் துவக்கத் தில் சில ஆண்டுகளில் ‘உள்ளூர் நிலையத்தை’ (Local Agency) அமைப்பதிலும், வளர்ப்பதிலும் கவனம் செலுத்தினர். இத்தகைய

உள்ளூர் நிலையங்கள்தான் வேளாண்மைப் புள்ளி விவரங்களைச் சேகரிக்கவும், கிராமப் பத்திரங்களைத் தயாரிக்கவும் செய்தன. இவைகளைக் கவனிப்பதற்கு நியமிக்கப்பட்ட நிபுணர்கள்கூட வேளாண் வளங்களின் வளர்ச்சியைக் கவனிக்காமல் வகைப்படுத்தும் அலுவல்களில் ஈடுபட்டு இருந்தார்கள். இவ்வாறுகத் "தாவர நூல் இயலார் தாவர வர்க்கங்களைக் கண்டுபிடித்து அவைகளை வகைப்படுத்தினுர்கள். புவி அமைப்பு இயலார்கள் மலைகளையும் படிவங்களையும் ஆராய்ந்தனர். இவ்வாறுக விஞ்ஞான ஆய்வு வகைப்படுத்தும் நிலையிலும், முறைப்படுத்தும் நிலையிலும் இருக்கக் காண்கிறேம்." [27]

வேளாண்மை ஆய்வை உறுதியான அடிப்படையில் அமைக்கும் முதல் முயற்சி 1889-ல் ஏற்பட்டது எனலாம்.இந்தியாவில்வேளாண்மையை அபிவிருத்தி செய்வதற்கான ஆலோசனைகளை இந்திய அரசாங்கத்திற்குக் கூறுவதற்கு டாக்டர் வோல்க்கர் (Dr. Voelker) அவர்களைப் பிரிட்டனிலிருந்து இந்திய மந்திரி அனுப்பி வைத்தார். இந்திய விவசாயிகளுக்குப் போதிய வள வசதிகள் இல்லை என்றும் இந்திய விவசாயிகள் சாகுபடி செய்கின்ற உற்பத்தி முறைகளை நன்கு உணர்ந்தவர்கள் என்றும், எனவே இந்தியா வேளாண்மையின் பிற்போக்கிற்கு, அறியாமையை விட, வளவசதி இன்மைதான் முக்கிய காரணம் என்றும் தனது அறிக்கையில் அவர் வலியுறுத்தியுள்ளார்.[28] "சில சமயங்களில் இந்திய விவசாயிகள், பிரிட்டிஷ் விவசாயிகளுக்குச் சமமாகவும்' சில சமயங்களில் பிரிட்டிஷ் விவசாயிகளை விட உயர்ந்தவர்களாகவும் இருக்கின்றுர்கள். இப்படி இருந்த போதிலும் வேளாண்மை இந்த நிலைமையில் இருப்பதற்கு முக்கிய காரணம் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான வசதிகள் நாட்டில் இல்லாமையாகும். இத்தகைய நிலைமை வேறு எந்த நாட்டிலும் இருக்க முடியாது." என்று டாக்டர் வோல்க்கர் அவர்கள் எழுதியுள்ளார்கள்.[29]

புள்ளி விவரங்களைச் சேகரிப்பதிலிருந்தும், ஆவணங்களைப் பாதுகாக்கும் பொறுப்புக்களிலிருந்தும் மாகாண வேளாண்மை இலாக்காக்களை விடுவிக்க வேண்டும் என்று 1891-ல் இந்திய அரசாங்கம் முடிவு செய்தது. நீண்டகால தாமதத்திற்குப் பின்னர் மாகாண அரசாங்கங்கள் இந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்டன. இதனுல் இந்த நூற்றுண்டின் துவக்கம் வரை பல மாகாணங்களி

27 **Moral and Material Progress Report** (Decennial) 1901-02, பக் 329

28 **Report** Chapter VIII:

29 முன் கூறியபடி பக், 10

லும் வேளாண்மை சிறந்த அமைப்பையோ, நிலையான அடித்தளத்தையோ பெறவில்லை.

1826ல் வேளாண்மையை ஆய்வதற்காக அரசர் ஆணைக் குழு (Royal Commission) ஒன்று நியமிக்கப்பட்டது. இக் குழு நில உரிமையைத் தவிர வேளாண் உற்பத்தியின் ஏனைய கூறுகளை விரிவாக ஆய்ந்தது. வேளாண்மைப் பழக்கங்களையும், வேளாண் கருவிகளையும் அபிவிருத்தி செய்வதற்குப் பல சிபாரிசுகளைச் செய்துள்ளது. இதன்பேரில் 1929-ல் ஏகாதிபத்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தை (Imperial Council of Agricultural Research) அரசாங்கம் ஏற்படுத்தியது. விவசாயக் கல்விக்கு ஆதரவு தரும் வகையிலும் ஆராய்ச்சியை வளர்ப்பதற்காகவும், 1908ல் பூனாவில் விவசாயக் கல்லூரி ஒன்று துவக்கப்பட்டது. அதன் பின்னர் கான்பூர், நாக்பூர், லயால்பூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் விவசாயக் கல்லூரிகள் துவக்கப்பட்டன. கிராம அபிவிருத்திக்கான ஒரு திட்டம் 1935ல் உருவாக்கப்பட்டது. அதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியதுடன் அதனை மாகாணங்கள் கிராமங்களின் முன்னேற்றத்திற்காகவும், பொருளாதார வளர்ச்சிக்காகவும் செலவிட வேண்டும் என்றும் வற்புறுத்தியது. வேளாண் உற்பத்தியின் உயர்வை நோக்குகின்ற போது இத்தகைய முயற்சிகள் திருப்திகரமாக இல்லை என்பதை உணரலாம். இதனை அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணையிலிருந்து காணலாம். (எண். 8) 1918—19 முதல் 1950—51 வரையான காலத்தில் சில தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டுகளில் பல பயிர்களுக்கு ஒரு ஏக்கரின் சராசரி விளைச்சல் கொடுக்கப்பட்டுள்ளது.

வேளாண்மையைப் பொறுத்தவரையில் 1950—52 ஒரு மோசமான ஆண்டாக உள்ளது. அந்த ஆண்டில் பெரும்பாலான பயிர்களின் உற்பத்தி சாதாரணமாக இருக்கக் கூடிய அளவைவிட குறைவாக உள்ளது. கரும்பைத் தவிர ஏனைய பயிர்களின் ஒரு ஏக்கர் (நிலத்தின்) உற்பத்தி பொதுவாக கடந்த 30 ஆண்டு காலமாக மாறுத அளவினதாகவோ, விளைச்சல் குறைந்தோ காணப்படுகின்றது.

இந்திய வேளாண்மை வளர்ச்சிக்கான [உற்பத்தி] நுட்ப முறை வாய்ப்புக்கள் (Technological Possibilities of Agricultural Development in India) என்ற அறிக்கையை 1944ல் டாக்டர் பேர்ன்ஸ் (Dr. Burns) வெளியிட்டுள்ளார். அதில் விவசாயிகளுக்குச் சிறந்த விதையும். கலப்பு உரமும் (Compost Manure), இரசாயன உரமும் கிடைக்கச் செய்வதுடன், நீர்ப்பாசன வசதிகளையும் அதிகரிக்க வேண்டும் என்றும், இவ்வாறு விவசாயிகளுக்குச் சிறிதளவேனும்

அட்டவணை 9

இந்தியாவில் பயிர்களின் விளைச்சல்

(ஒரு ஏக்கருக்கான விளைச்சல் பவுண்டுகளில்)

பயிர்கள்	1918-19	1923-24	1936-39	1940-41	1947-48	1950-51
அரிசி (சுத்தம் செய்யாதது)	701	798	809	680	739	596
கோதுமை	707	694	623	643	599	592
விதை நீக்கிய பருத்தி	76	87	—	101	80	78
சணல்	1195	1169	—	1015	1017	931
தோல் நீக்காத வேர்க்கடலை	997	864	878	946	758	691
கரும்பு வெல்லம்	1897	2544	—	2829	3213	2983
ஆளிவிதை (Linseed)	265	—	257	268	243	235

வசதிசெய்து கொடுக்க முடியுமேயானால் ஒரு ஏக்கரில் விளையக்கூடிய பயிர்களின் விளைச்சலை வெகுவாக அதிகரிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக அரிசியின் விளைவு ஒரு ஏக்கருக்கு 735 பவுண்டு (1938—39) லிருந்து 959 பவுண்டு ஆகவும் கோதுமையின் விளைவு 640 பவுண்டு (1933—34) லிருந்து 1200 பவுண்டு ஆகவும், சணலின் விளைவு 16லிருந்து 20 மணங்காகவும், கரும்பு 15லிருந்து 30 டன்களாகவும் அதிகரிக்கக்கூடும் என்று அவர் கூறினார்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் துவக்கத்தில் இருந்து, இரசாயன உரம், மற்றும் உயர்ந்த ரக வித்துக்கள் முதலியவற்றின் உற்பத்திக்குப் போதிய அளவு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சமுதாயநல, தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் துவக்கப்பட்டதும் வேளாண்மையை அபிவிருத்தி செய்வதற்கான பொறுப்பை அவை ஏற்றுக் கொண்டன. சமுதாய நலத்திட்டப் பகுதிகளில், உரங்களையும் நல்வகை வித்துக்களையும் பகிர்ந்து அளிப்பதில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளன, 1957—58-ல் சுமார் 22 லட்சம் டன்கள்

கலப்பு உரம் (Compost Manure) கழிவுப் பொருள்களிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளள; அதில் 19—25 லட்சம் டன்கள் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன. நைட்ரஜன் உரங்களின் உபயோகம் 1957—58ல் 9 லட்சம் டன்களாக உயர்ந்து உள்ளது. 1956—57ல் சமுதாய நல தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் பல மணங்கு நல்வகை விதைகள் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன. தற்சமயம் பூச்சிகளினின்றும். நோய்களினின்றும் பயிர்களைப் பாதுகாக்க திட்டமிட்டுள்ளனர். நவீன வேளாண் கருவிகளை உற்பத்தி செய்யவும், அதனைப் பகிர்ந்து அளிக்கவும், மற்றும் இந்திய விவசாய ஆராய்ச்சி மன்றத்தின் (Indian Council of Agricultural Research) ஆதரவில் ஆராய்ச்சியை மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளார்கள். இவ்வகையில், கால் நடை, கிராமப் பொருளாதாரம், காளான் ஆய்வும் (mycology) பூச்சி ஆய்வு (entomology) தாவர இயல், மண் வேதியல் முதலிய துறைகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும். இவைகளைத் தவிர அரிசி, உருளைக்கிழங்கு, கான் பொருள்கள், பால் பண்டங்கள், (Dairy Products) கால் நடை நோய்கள் முதலியவற்றைத் தனித்தனியாக ஆய்வதற்கும் வழி செய்யப்பட்டுள்ளது.

(iii) நீர்ப்பாசனமும் மண் வளம் காத்தலும்

இந்தியாவில் நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவத்தை நெடுங்காலமாகவே நாம் உணர்ந்துள்ளோம். பலவகையான நீர்ப்பாசனங்கள் நமது நாட்டில் நெடுங்காலமாகவே இருந்து வந்துள்ளன. பல பல பழைய நீர்ப்பாசன அமைப்புக்கள் சரியாகப் பராமரிக்கப்படாமையால் கவனிப்பாரற்ற நிலையில் பிரிட்டிஷ் ஆட்சியின் துவக்கத்திலேயே சிதைந்து போயின. (மேற் கொண்ட விவரங்களுக்கு நீர்ப்பாசனம் என்ற அத்தியாயத்தைப் பார்க்கவும்.)

விற்பனை செய்தல்

விவசாயிகளின் பொருளாதார நிலைமை மேம்பாடு அடைவதற்குச் சாகுபடி செய்கின்ற நிலத்தின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதுடன் அப்பொருள்களைச் சிறந்த விலைக்கு விற்பனை செய்வதும் அவசியமாகும் இந்தியாவில் வேளாண் பொருள்களை விற்பனை செய்வதில் பல குறைபாடுகள் இருக்கின்றன. ஆனால், வேளாண்மை பற்றிய அரசினர் ஆணைக்குழு விற்பனை முறையை அபிவிருத்தி செய்வதற்காகச் சில சிபாரிசுகள் பின் வருமாறு; (1) கிராமச் செய்தித் தொடர்புகளும், போக்கு வரத்து வசதிகளும். அபிவிருத்தி அடைய வேண்டும். (2) சரக்குகளுக்கான இரயில்வே கட்டணத்தைக் குறைப்பதுடன் மற்றும் பல சலுகைகளையும் ரயில்வே அளிக்க

வேண்டும், (3) மாநிலச் சட்டங்களின் மூலமாக ஒழுங்கு படுத்தப் பட்ட சந்தைகளை ஏற்படுத்த வேண்டும். (4) எடைகளையும், அளவைகளையும் தரப்படுத்துதல் வேண்டும். (5) வேளாண் பொருள் களை வகைப்படுத்துவதுடன், தரப்படுத்துவதும் அவசியமாகும். (6) வேளாண்துறை இலாக்காவில் சந்தை அலுவலர்கள் நியமிக் கப்பட வேண்டும்.

ஒழுங்கு படுத்தப்பட்டச் சந்தையை ஏற்படுத்தும் முதல் முயற் சியாக 1897ம் ஆண்டின் பேரார் (Berar) பருத்தி, தானிய சந்தைச் சட்டம் அமைந்தது. இந்த சட்டத்திற்குப் பதிலாக 1927ல் பம்பாய் பஞ்சு சந்தைச் சட்டம் ஏற்பட்டது. அவ்வாறே மத்திய மாகாணத் திலும் 1997ம் ஆண்டின் மத்தியமாகாணச் சட்டத்திற்குப் பதிலாக 1932ம் ஆண்டில் மத்திய மாகாணச் சந்தைச் சட்டம் ஏற்பட்டது. 1937ல் ஏற்பட்ட மாகாண சுய ஆட்சியும், மக்களின் ஆதரவு பெற்ற மந்திரி சபைகள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் ஒழுங்கு படுத்தப் பட்ட சந்தைகளை அமைக்க வேண்டும் என்ற இயக்கத்திற்கு தூண்டு கோல்களாக அமைந்தன. பம்பாய் சட்டத்திற்கு பதிலாகப் 1939ம் ஆண்டின் பம்பாய் வேளாண் பொருள்கள் சந்தைச் சட்டம் ஏற்பட் டது. இதைப் போன்ற சட்டங்கள், மற்றும் பஞ்சாப், தமிழ்நாடு, ஹைதராபாத், பரோடா, மைசூர் முதலிய மாகாணங்களிலும் ஏற் பட்டன. 1935ல் இந்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதற் கும் சந்தைகளை ஆய்வதற்கும், விற்பனை ஆலோசகர் ஒருவர் நியமிக் கப்பட்டார்.

வேளாண் பொருள்களைத் தரப்படுவதற்கும், தரக் கட்டுப்பாடு செய்வதற்கும், வேளாண்பொருள் (தரம் பிரித்தல், விற்பனை செய்தல்) சட்டம் 1937-ல் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத் தின்படி தரத்தின் அளவுகளுக்கு இலக்கணம் கூறப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு பெயர் வைக்கப்பட்டது. பட்டியலில் உள்ள வேளாண் பொருள்களுக்குத் தரக்குறியீட்டு அடையாளங் கள்பொறிக்கப்பட்டன. இந்தச் சட்டம் 1943-ல் திருத்தப்பட்டது. இதனால் மேலும் பல பொருள்கள் இந்தச் சட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. எடைகளையும், அளவைகளையும் தரப் படுத்துவதற்காக 1939-ல் எடைகள் அளவுச் சட்டம் நிறைவேற்றப் பட்டது.

இரண்டாவது உலகப் போருக்கு முன்னர், விற்பனையை அபி விருத்தி செய்யும் நோக்கத்துடன் ஒரு முக்கிய முயற்சி மேற் கொள்ளப்பட்டது. வேளாண் பொருள்களின் விற்பனை, கூட்டுற வுக் கோட்பாட்டின் அடிப்படையில் அமையவேண்டும் எனக் கருதினர். பஞ்சாபில் விவசாயிகள் உற்பத்தி செய்த பொருள்

களை விற்பனை செய்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தைகளில் கூட்டுறவுக் கமிஷன் கடைகள் திறக்கப்பட்டன. இச் சோதனை தோல்வி அடைந்தது. தமிழ் நாட்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விளை பொருள்களை இடை நிலையாளர்களின் குறுக்கீடு இன்றி விற்பனை செய்ததுடன், இவற்றின் பொறுப்பில் விற்பனைக் காகவும், கிடங்கில் இடுவதற்காகவும் சேமிக்கப்பட்ட பொருள்களின் பேரில் கடன் வழங்கும் பணியையும் இணைத்துள்ள காரணத்தினால் மேற்படி திட்டம் மாபெரும் வெற்றியை அளித்தது. இந்தியா வின் ரிசர்வ் பாங்கு இத் திட்டத்தைப் பாராட்டியதுடன் நாட்டின் இதரப் பகுதிகளும் இதனை மேற்கொள்ள வேண்டும் என்று பரிந்துரைத்து.

ரிசர்வ் பாங்கு ஏற்படுத்திய கிராமாந்திரக் கடன் விசாரணைக் குழுவினர் பரிந்துரைத்தபடி கடன், விற்பனை, பதப்படுத்துதல், கிடங்குகளில் சேமித்து வைத்தல் முதலிய பல கூறுகளை ஒருங்கு இணைக்கும் வகையில், கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் ஒன்று உருவாகியது. இத் திட்டத்தின்படி 1960-61க்குள் விவசாயிகள் விற்பனை செய்யக்கூடிய உபரிப் பொருள்களில் 10% கூட்டுறவு விற்பனை நிறுவனங்களின் மூலமாக விற்பனை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் 1956-ல் வேளாண் பொருள் (வளர்ச்சி, கிடங்கில் இடுதல்) சட்டம் நிறைவேற்றப்பட்டது. தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிப் பண்ட சாலைக் கழகம் (National Co-operative Development and Warehousing Board) ஒன்று நிறுவப்பட்டது. வேளாண் பொருள் களை உற்பத்தி செய்தல், அவைகளைப் பதப்படுத்துதல், சேமித்து வைத்தல், கிடங்கில் இடுதல், முதலிய செயல்களைக் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக இக் கழகம் திட்டமிட்டுச் செயல்படுத்தும்.

ஒழுங்கு படுத்தப்பட்ட சந்தைகளை ஏற்படுத்தும் திட்டமும் விடுதலைக்குப் பின்னர் திருப்திகரமாக முன்னேறியுள்ளது. 1957-வரை ஏழு மாநிலங்களில் மொத்தம் 550 ஒழுங்குப் படுத்தப்பட்ட சந்தைகள் ஏற்பட்டுள்ளன. நெய், தாவர எண்ணெய், பாலாடைக் கட்டி போன்ற பொருள்களும், வெண்ணெய், அரிசி, கோதுமை ஆட்டா, வெல்லம், முட்டைகள், பழங்கள் முதலியப் பொருள்களை வகைப்படுத்துவதற்கும், தரப்படுத்துவதற்கும், மேற்கொண்ட திட்டத்தின் கீழ் 380 நிலையங்கள் 1956-ல் செயல்பட்டு வந்தன.

இந்த முன்னேற்றங்கள் திருப்திகரமாக இருக்கின்றன கிராமாந்திரக் கடன் விசாரணைக் குழுவினர் சிபாரிசு செய்தபடி ஒருங்கிணைந்த கிராமக் கடன் மூலமாகத்தான் விற்பனைப்

பிரச்சினையை இறுதியான வகையில் தீர்வுக்காண முடியும். இந்திய வேளாண்மையில் காணப்படுகின்ற ஏனைய குறைகளைப் போல விவசாயிகளின் விற்பனை பிரச்சினையையும் கூட்டுறவு நிவர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கலாம்.

கிராமக் கடன்

1870-1879 ஆண்டுகளில் தக்காணக் கலகம் ஏற்பட்டது. அது முதல் கிராமக்கடன் பிரச்சினை நாட்டில் உள்ள எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது. 19-வது நூற்றாண்டில் கடைசி 25 ஆண்டுகளில் நாட்டின் பல பகுதிகளிலும் அரசாங்கம் ஆதரவு பெற்றவர்கள் விசாரணையை மேற்கொண்டார்கள். இதனால் நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள குடியானவர்களில், பெரும்பாலானவர்கள் கடன் பட்டு இருப்பதை அறிய முடிந்தது. திரு. தோர் பர்ன் (Mr. Thor-Burn) அவர்கள் *1892*-ல் பஞ்சாபில் *12* கிராமங்களை தீவிர விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். அங்கு "மொத்தம் உள்ள *742* குடும்பங்களில் *566* குடும்பங்கள் நடைமுறையில் கடன் சுமையால் சிதைவுற்றோ மிகவும், பெருவாரியான அளவு கடன் பட்டோ இருந்தன. இவ்விரு வகையினரும் 1871-லிருந்தே கடன்பட்டிருந்தனர். ஏதாவது ஒரு காலத்தில் கடன் பட்டிருந்த மொத்தக் குடும்பங்கள் 650. இவற்றில் 13தான், அதாவது 2 விழுக்காடு குடும்பங்கள தங்களுடைய கடன்களைத் தீர்த்துக் கொள்வதில் வெற்றி கண்டார்கள்." *1888*-ல் நடைபெற்ற டஃப்ரின் விசாரணை (Dufferin Enquiry)[30] யின் மூலம் வங்காளம் மத்திய மாகாணம், வடமேற்கு மாகாணம், அயோத்தி (தற்காலத்தில் உத்தரப் பிரதேசத்தின் பகுதிகள்) முதலிய மாகாணங்களின் விவசாயிகள் வருந்தத்தக்க அளவிற்குக் கடன் சுமையில் ஆழ்ந்திருந்தார்கள். 1901-ம்ஆண்டின் பஞ்ச ஆய்வுக் குழுவினரின் மதிப்பீட்டின்படி "பம்பாய் மாநிலத்தில் உள்ள சாகுபடியாளர்களில் கால் பகுதியினர் தங்களுடைய நிலத்தை இழந்துவிட்டார்கள். அவர்களில் 5-ல் ஒரு பகுதிக்கும் குறைவானவர்கள்தான் கடன் இன்றி இருக்கின்றார்கள். ஏனையவர்கள் குறைந்த அளவிலோ, அதிக அளவிலோ கடன் பட்டு உள்ளவர்கள்." [31].

தமிழ் நாட்டில் மொத்தக் கிராமக் கடன் ரூ *45*/= கோடி என்று *1895*-ல் ஸர் ஃபிரடெரிக் நிக்கல்சன் (Sir. Frederick-

[30] பார்க்கவும். Bhatia, B. M., "Economic Condition of Agriculturist-in 1888" in **Contributions to Economic History, Edited by Dr. Raychaudry, No I**

[31] **Report. Para** 334.

Nicholson) அவர்கள் மதிப்பிட்டு உள்ளார்கள். இந்த நூற்றுண்டின் துவக்கத்தில் இந்தியா முழுவதிலுமான மொத்தக் கிராமக் கடன் ரூ 300 கோடியாக ஸர். எட்வெர்ட் மாக்லகன் (Sir. Edward Maclagan) அவர்கள் கருதுகிருர்கள். திரு. டார்லிங் (Mr. Darling) அவர்கள் பஞ்சாபில் சேகரித்த விவரங்களின் அடிப்படையில் இந்தியா முழுவதற்குமான மொத்தக் கிராமக் கடன் 1924-ல் ரூ 600 கோடியாக இருக்கக் கூடும் என்று கண்டு பிடித்துள்ளனர்.[32] மத்திய பாங்கு விசாரணைக் குழுவினர், முழுமையான விசாரணைக்குப் பின்னர் கிராமக் கடன் ரூ 900 கோடியாக இருக்கும் என மதிப்பிட்டுள்ளார்கள்.[33] பெரிய மந்தம் ஏற்பட்ட காலத்தில் பிரிட்டிஷ் இந்தியாவின் கடன் சுமை ரூ 1200 கோடியாக உயர்ந்துள்ளதெனக் கணக்கிட்டுள்ளார்கள்.[34]

கடன் எப்போதும் கெடுதியை விளைவிக்கக் கூடியதாக இருக்கவேண்டியதில்லை. ஒவ்வொரு வர்த்தகருக்கும் தங்களுடைய தொழிலை நடத்துவதற்குக் கடன் தேவைப்படுகிறது. பொருள் உற்பத்தியைப் போல, வர்த்தகத்தைப் போல சாகுபடியும் ஒரு தொழிலாதலால், விவசாயிகள் கடன் வாங்குவதில் தவறு இல்லை. இந்தியாவில் விவசாயக் கடனை [நாம்] கருதுகின்ற போது இரு முக்கிய உண்மைகளை நினைவில் கொள்ள வேண்டும். முதலாவதாக இந்திய விவசாயிகள் தங்களுடைய குடும்ப வரவையும் செலவையும், சமன்படுத்துவதற்காகவும், தங்களுடைய இழப்புக்களை ஈடு செய்வதற்காகவும், கடன் எழுப்புகிருர்களே அல்லாமல் உற்பத்திக்காக அவர்கள் கடன் வாங்குவதில்லை. இரண்டாவது அவர்கள் பெரும்பாலும் கடும் வட்டியைப் பெறும் கிராமப் பண வணிகர்களிடம் கடன்பட்டுள்ளார்கள் கடனை வசூலிப்பதற்கு நெறியற்ற முறைகளைக் கையாளுகிருர்கள். சாகுபடியாளர்களின் வருடாந்தர உற்பத்தியில் பெரும் பகுதியை வட்டியாகப் பெற்றுக் கொள்ளுகிருர்கள். விவசாயிகள் ஒரு முதை இவர்களது பிடியில் சிக்கிக் கொள்ளுவார்களேயாஞல், இவர்களிடமிருந்து விடுபடுவது கடினமான காரியம். இறுதியில் கடனைத் தீர்ப்பதற்காகத் தங்களுடைய நிலத்தை விற்றுவிடுகின்ற வரை பண வணிகர்களின் பிடியிலிருந்து தப்ப முடிவதில்லை.

தக்காணத்தில் ஏற்பட்ட கலவரத்தின் மூலமாக கிராமக்கடன் சுமை மோசமான நிலைமையில் இருந்ததை அரசாங்கம் உணர்ந்தது.

32 **Punjab Peasant in Prosperity and Debt.** (1928) பக். 18—19.

33 **Report** பக். 55.

34 **Thomas, P. J., The Problem of Rural Indebtedness, P. 19.**

நிலைமையைத் திருத்துவதற்காக அரசாங்கம் மேற்கொண்ட முயற்சியில் முதலாவதாக லேவாதேவித் தொழிலைக் கட்டுப் படுத்தவும், ஒழுங்குபடுத்தவும், சட்டம் இயற்றியது. தக்காண விவசாயிகள் நிவாரணச் சட்டம் 1879-ல் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி விசாரணைக்கு வரும் வழக்குகளை, நன்றாகப் பரிசீலனை செய்யும் அதிகாரங்கள் நீதி மன்றத்திற்குக் கொடுக்கப் பட்டன. கடன் பத்திரங்களில் உள்ள விதிகள் நேர்மையான தாகவும், கடன் வாங்குபவருக்கு நீதியை நல்கக் கூடியதாகவும், இருக்கின்றதா என்பதை நீதிமன்றங்கள் தீர்ப்பளிப்பதற்கு முன்பு பரிசீலிக்க வேண்டும். வசூலிக்கப்படும் வட்டிவீதம் மிக அதிகமாக உள்ளதென்று நீதி மன்றம் கருதுமேயானால், அதில் ஒரு பகுதியைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கலாம். பண வணிகர்கள் ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் (இச் சட்டத் தில்) தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தச் சட்டம் பிரச்சினையின் ஆணி வேராக உள்ள காரணத்தைக் கவனிக்காமை யால், கடன் சுமை அதிகரிப்பதைத் தவிர்க்கமுடியவில்லை. ஏற்பட்ட சிறப்புச் சட்டங்களின் விளைவுகளை ஆய்ந்த குழு இந்தச் சட்டத்தைப்பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளது : இத்தகைய சட்டங்கள் “வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்கள் கடன் படுவதற்கான அடிப்படைக் காரணங்களை மாற்றவில்லை.”[35] நாட்டின் பல பகுதிகளிலும் கிராமக்கடன் ஏற்படுவதற்கான காரணத்தையும், அதன் அளவையும் வேளாண்மை இலாக்கா முழுமையாக விசாரித்துக் கூறவேண்டியதன் அவசியத்தை 1893-ல் வைஸ்ராயாக இருந்த லான்ட்ஸ்டௌனி பிரபு அவர்கள் வற்புறுத்தியுள்ளார். இந்த விசாரணை 1894-ல் மேற்கொள்ளப் பட்டது. ஆனால், இதனைத் தொடர்ந்து உடனடியாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இவ்வகையில் 1900-ம் ஆண்டின் பஞ்சாபில் நிலப்பராதீன சட்டம் நிறைவேற்றப் பட்டது. விவசாயி தன்னுடைய நிலத்தை வேளாண்மையில் ஈடுபடாத ஒருவருக்கு நிரந்தரமாகப் பராதீனம் செய்வதை இச்சட்டம் தடைசெய்கிறது. அக்காலத்தில் இது ஒரு புரட்சி கரமான முயற்சியாகக் கருதப்பட்டது. அதைப்பற்றிக் கர்ஸன் பிரபு அவர்கள் ‘வேளாண்(மை’ வகுப்பினர் ஒருவித மனக்கிலியில் சிக்குண்டு இருக்கிறார்கள் என்றும், இது அவர்களை நிதானமாக நாளடைவில் மனச் சோர்வடையச் செய்கின்றது என்றும், இத்தகையச் சக்தியினின்றும் அவர்களை விடுவிப்பதற்காக மேற் கொண்ட ஒரு தீவிர முயற்சி”[36] என்றும் கூறியுள்ளார். ஆனால்

[35] **Moral and Material Progress Report** (Decennial) 1891-92. பக். 477.

[36] **Speech on the Punjap Alienation of Land Bill in Governor-general's Council on 19 Octoper 1900.**

இந்தச் சட்டம் உண்மையில் நாட்டை அரசியல் அபாயத்திலின்றும் காக்கும் நோக்கத்துடன் ஏற்பட்டதாகக் கூறலாம் "பஞ்சாபில் வலிமை பெற்று இருந்த மிராசுதாரர்களின் நிலம் கடன்சுமை காரணமாகத் துரிதமாக மாற்றப்பட்டதை நிலம் அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டதற்கு இணையாகக் கருதலாம்"[37] இத்தகைய சட்டங்கள் உத்தரப்பிரதேசத்திலும் (பந்தல் கண்ட் நிலப் பராதீனச் சட்டம், 1903) மத்திய மாகாணத்திலும் (1916) ஏற்பட்டன. பாரதம் புதிய அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொண்ட பின்னர் பஞ்சாப் நிலப்பராதீனச் சட்டம் இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று கருதியமையால் இந்திய ஜனாதிபதியால் அது ரத்து செய்யப்பட்டது.

பெரிய மந்தம் ஏற்பட்ட காலத்தில் பல விவசாயிகள் கடன் சுமையால் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்கத்துடன் பல மாகாணங்களில் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அவைகள் பண வணிகர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தக் கூடியனவாகவும் இருந்தன. கடன் சுமையை இணக்கமான பேச்சுக்களின் மூலமாகக் குறைப்பதற்கும் வழி செய்தன. மாகாண அரசாங்கங்கள் 1930-லிருந்து 1939 வரை கொண்டு வந்த சட்டங்களின் முக்கிய கூறுகள் பின்வருமாறு. (1) பண வணிகர்களின் கணக்குகளை ஒழுங்குபடுத்துவது (2) பண வணிகர்களைப் பதிவுசெய்வதும் லேவாதேவித் தொழிலுக்கு லைசென்சு வழங்குவது (3) உயர்ந்தபட்ச வட்டி விகிதங்கள் நிர்ணயிப்பது அத்துடன் டாம்டுபாட் (Damdupat) என்ற கோட்பாட்டின்படி, கடன்பட்ட ஒருவரிடமிருந்து ஒரு குறிப்பிட்டக் கடன் தொகைக்காக வசூலிக்கப்படும். மொத்த வட்டியின் அளவினைத் திட்டவட்டமாகக் கட்டுப்படுத்துவது. (4) அடமானங்கள் திருப்பிக் கொடுக்கப்படுவது. (5) பயிர்கள், வேளாண் கருவிகள், வீட்டு உடைமைகள் முதலிய பொருள்களைக் கடனுக்காக பறிமுதல் செய்யக்கூடாது என்பன ஆகும்.

நெருக்கடியானக் காலத்தில் விவசாயிகளுக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்பட்ட நிவாரணத்தை இக்கடன் சட்டங்கள் அளித்தன. ஆனால், இவைகளால் கடன் அமைப்புப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. உலகப்போர் சமயத்திலும், அதற்குப் பின்னரும் இருந்த பணவீக்க சூழ்நிலையில்தான் பிரச்சினையின் தன்மையில் ஓர் அடிப்படை மாற்றம் ஏற்பட்டதாகக் கூறலாம்.

[37] Speech of Sir. Charles Rivaz on Punjab Land Alienation Bill in the Legislative Council.

பண வணிகர்களிடம் கடன் பட்டவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்குப் பதிலாக, விவசாயிகளுக்கு நியாயமான வட்டி வீதத்தில் கடன் அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்திய ரிசர்வ் பாங்கு, 1943-ல், பின் வருமாறு கூறியது: "பொருளாதார மந்தத்தின் விளைவாகக் கிராமியக் கடனும் அதனைச் சார்ந்தே ஏனையப் பிரச்சினைகளும் அரசாங்கம், பொதுமக்கள் ஆகிய எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தன. அதனால் பல சட்டங்களை இயற்ற வேண்டியிருந்தது. அதன் பின்னர் ஏற்பட்ட விலை உயர்வு காரணமாக நிலைமை சீர்பெற்றமையால், இப்பிரச்சினை எல்லோருடைய நினைவிலிருந்தும் நீங்கியிருக்குமோ என்று கருதும் அளவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது,"[38]

கிராமியக் கடன் விசாரணைக் குழு அறிக்கை
(Rural Credit Survey Committee Report)

கிராமியக் கடன் பிரச்சினையை 1945-யிலிருந்து 1951-வரை பல குழுக்கள் ஆய்ந்துள்ளன. அவைகளில் வேளாண் நிதி துணைக்குழு (1945)வும், கூட்டுறவுத் திட்டமிடல் ஆய்வுக்குழு (1946)வும், கிராமிய பாங்கு விசாரணைக்குழு (1949)வும் குறிப்பிடத் தக்கவை. 1951-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் கிராமியக் கடன் விசாரணைக்குழுவை ரிசர்வ் பாங்கு நியமித்தது. இக்குழு "1. விசாரணையைத் திட்டமிட்டு அமைத்து மேற்பார்வையிட்டு இயக்குதல். 2. ஆய்வின் முடிவுகளை விளக்கிக் கூறுதல், 3. தக்க சிபாரிசுகளைச் செய்வது" முதலியன இக்குழுவின் பொறுப்பாகும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்தக் குழுவினர் கிராமியக் கடன் பிரச்சினையுடன் தொடர்புள்ளதும் மிகவும் பயனுள்ளதுமான உண்மைகளைச் சேகரித்தனர். இவைகளின் துணையைக் கொண்டு பிரச்சினையின் பல்வகைக் கூறுகளையும் ஆய்ந்த பின்னர் ஒருங்கு இணைக்கப்பட்ட கிராமியக் கடன் திட்டத்தைச் செயல்படுத்துமாறு சிபாரிசு செய்தனர்.

விவசாயிகளின் கடன் தேவைகளில் 93 விழுக்காடு தனிப்பட்ட நபர்களிடமிருந்து பெறப்படுகிறதுஎன்றும், இதில் 6 விழுக்காட்டை அரசாங்கமும், கூட்டுறவு சங்கமும் அளிக்கின்றன என்றும் (இவை இரண்டும் தனித்தனியே 3% அளிக்கின்றன) வர்த்தக பாங்குகள்

[38] Circular letter to State Governments, August 1943. quoted in **Rural Credit Survey Report p. 2**

1 விழுக்காடு அளிப்பதாகவும் இக்குழு கண்டுபிடித்துள்ளது. இந்தத் துறையில் மிகவும் அவசரமாகச் சீர்திருத்தம் தேவைப் படுகிறது என்றும், தனியார் கடனிற்குப் பதிலாக, நிறுவனக்கடன் வசதிகள் உடனடியாக ஏற்பட வேண்டும் என்றும் இக்குழு கருதுகிறது. இத்தகைய நிலைமையை ஏற்படுத்துவதற்கு வேளாண் நிதியில், அரசாங்கமும், ரிசர்வ் பாங்கும், தீவிரமாகப் பங்குபெற வேண்டும். "குறிப்பிட்ட இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கான நிறுவன அமைப்புக்கள் வளர்ச்சி அடைய வேண்டும், என்றும் அவைகளில் அரசாங்கம் பங்குபெறவேண்டும் என்றும் கூறியது. இவ் வகையில் (1) கூட்டுறவு கடன் (2.) பதப்படுத்துதல், விற்பனை செய் தல்போன்ற கூட்டுறவுப் பொருளாதார நடவடிக்கைகள் (3) தானி யங்களைச் சேமித்து வைத்தல், கிடங்கில் இடுதல். (4) அவ்வாறே வர்த்தகப் பாங்குகளிலும் அரசாங்கம் ஈடுபட்டுள்ள பாங்குகள் முக்கியமான பகுதியாக இருக்க வேண்டும்." [39] என்றும் சிபாரிசு செய்தது. இக்குழு கூட்டுறவு நிறுவனங்களை வலிவுடையதாகச் செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. அவ்வகையில் தலைமைக் கூட்டுறவு பாங்குகளுக்கு மூலதனத்தை அளிப்பதன் மூலம் அரசாங்கம் அவைகளின் நிதித்துறையில் பங்கு பெறலாம் என்றும் கூறியது. அரசாங்கத்தின் நிதி, நிர்வாக, நுட்ப உதவியுடன் விற்பனை, பதப்படுத்துதல் போன்றவைகளின் முன்னேற்ற அமைப்புகளைக் கூட்டுறவு அடிப்படையில் அமைக்கவும்; அரசாங்கத்தின் நிதி நிர்வாக, நுட்ப உதவியுடன் கிராமீயப் பொரு ளாதாரத்துறையில் பெரும்பாலான நடவடிக்கைகளான சாகுபடி, நீர்ப்பாசனம், போக்குவரத்து, பால் உற்பத்தி, பால் பொருள்கள் கால்நடை அபிவிருத்தி, குடிசைத் தொழில்கள் முதலியவற்றின் முன்னேற்ற அமைப்புகளைக் கூட்டுறவு அடிப்படையில் அமைக்க வும் சிபாரிசு செய்தது, இம்பீரியல் பாங்கையும், மற்றும் அரசாங் கம் பங்கு பெற்ற இதர பாங்குகளையும் இணைத்து இந்திய ராஜ்யப் பாங்கு (State Bank of India) ஏற்படுத்த வேண்டும் என்றும், கூட் டுறவு இலாகாவிலும், கூட்டுறவு நிறுவனங்களிலும் வேலை செய் கின்ற அலுவலர்களுக்கு ஒருமுகப்படுத்திய முறையில் கூட்டுறவுப் பயிற்சியை அளிக்க வேண்டும் என்றும் இக்குழு சிபாரிசு செய்தது. மேலே கூறிய திட்டத்தைச் செயல்படுத்துவது மாநில அரசாங்கங் களின் நேரிடையான பொறுப்பு என்றாலும், கிராமக் கடன் வளர்ச் சிக்காகவும், புனர் அமைப்பிற்காகவும், இதர முக்கியமான சில அமைப்புகளும் பொறுப்பு ஏற்றுள்ளன. அவையாவன: இந்திய ரிசர்வ் பாங்கு, இந்திய அரசாங்கத்தின் உணவு, விவசாய அமைச்ச கம். மற்றும் இந்திய அரசாங்கம் ஈடுபட்டுள்ள தேசியக் கூட்டுறவு

[39] முன் கூறியபடி பக். 533

வளர்ச்சி, பண்டசாலைக்கழகம், அகில இந்திய பண்டசாலைக் கழகம், மாநிலப் பண்டசாலை நிறுவனங்கள், இந்திய ராஜ்ய (ஸ்டேட்) பாங்கு கூட்டுறவுப் பயிற்சிக்கான மத்தியக் கமிட்டி, மற்றும் கூட்டுறவு இயக்கம் முதலியன.

பல புதிய நிதிகளை ஏற்படுத்துவதற்குக் கிராமீயக் கடன் விசாரணைக்குழு சிபாரிசு செய்துள்ளது. அந்த நிதிகள் இந்திய ரிசர்வ் பாங்கு உணவு, வேளாண். அமைச்சகம், தேசீயக் கூட்டுறவு வளர்ச்சி பண்டசாலைக் கழகம், மாநில அரசாங்கங்கள் மற்றும் இந்திய ராஜ்ய (ஸ்டேட்) பாங்கு முதலியவைகளின் ஆதரவில் அமையும். கிராமீயக் கடன் புனர்அமைப்புத் திட்டத்தைச் செயல் படுத்து வதும், நிதி உதவி அளிப்பதும், இவற்றின் பொறுப்பாகும்.

கிராமீயக் கடன் விசாரணைக்குழு சிபாரிசு செய்த கிராமீயக் கடன் கொள்கை பழைமையிலிருந்து மாறுபட்டுள்ளமையால் வர வேற்கத் தக்கதாக உள்ளது. இறந்த காலத்தில் கூட்டுறவு இயக் கம் செயல்பட்டு வந்த சூழ்நிலையில் உள்ள குறைபாடுகளும், மற் றும் கூட்டுறவு இயக்கத்தாலேயே காணக்கூடிய குறைபாடுகளும் வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. கிராமீயக் கடன் புனரமைப்பில் அரசாங்கத்தின் முக்கியப் பங்கு வலியுறுத்தப்பட் டது. இக்குழுவின் பெரும்பாலான பரிந்துரைகளை ரிசர்வ் பாங்கும் இந்திய அரசாங்கமும் ஏற்றுக் கொண்டன. “இம்பீரியல் பாங்கு” 1955-ம் ஆண்டு மே மாதத்தில் தேசீய மயமாக்கப்பட்டது. அதற்கு இந்திய ராஜ்ய (ஸ்டேட்) பாங்கு (The State Bank of India) என்று பெயர் சூட்டப்பட்டது,

இரு நிதிகளை ஏற்படுத்துவதற்காக அதே ஆண்டில் இந்திய ரிசர்வ் பாங்குச் சட்டம் திருத்தப்பட்டது. (அ) ரூ. 10 கோடி மூல தனத்துடன் தேசீய வேளாண் கடன் (நீண்ட காலம்) நிதியானது ஏற்படுத்தப்பட்டது. (ஆ) தேசீய வேளாண் கடன் நிலை பெறச் செய்தல் நிதி ரூபாய் ஒரு கோடி மூலதனத்துடன் ஏற்பட்டது. இக்குழு சிபாரிசு செய்த பயிற்சித்திட்டத்தை கூட்டுறவு பயிற்சிக் கான மத்தியக்குழு கவனித்து வருகிறது. 1956-ல் தேசியக் கூட் டுறவு வளர்ச்சிப் பண்டசாலைக் கழகம் ஏற்பட்டது. சில மாநில அரசாங்கங்கள் மாநில பண்டசாலைக் கழகங்களை ஏற் படுத்தியுள்ளன. வளங்களைச் சேதமின்றிப் பயன்படுத்தவும், பல அலுவலகங்களின் இரட்டிப்பு முயற்சிகளைத் தவிர்க்கும் வகையிலும் கிராமீயக் கடன் வளர்ச்சிக்கான ஒருமுகப்பட்ட கொள்கையை உருவாக்குவதற்காக 1955-அக்டோபரில் ஒரு குழுவை இந்திய அர சாங்கம் நியமித்தது.

கூட்டுறவு

தக்காணக் கழகத்திற்குப் பின்னர் ஸர் வில்லியம் வெட்டர்பன் அவர்கள் ஒரு புதிய திட்டத்தைக் கூறினர். கிராமங்களில் பண வணிகர்களுக்குப் பதிலாக விவசாயப் பாங்குகளை ஏற்படுத்த வேண்டும் என்றும், அவை கடன் வழங்கும் முக்கிய அமைப்பாக இருக்க வேண்டும் என்றும் கூறினர். 1881-ல் விவசாய பாங்கு ஒன்றைப் பூனவில் துவக்குவதற்கானத் திட்டத்தில் பொதுநலத்தில் ஆர்வம் உடைய பம்பாய் வாசிகள் ஈடுபட்டனர். இது ஒருசோதனை முயற்சியாகையால், இத்தகைய நிறுவன அமைப்பை ஏற்படுத்துவதற்கான மசோதாவை சட்டமன்றத்தில் திரு. மாண்ட்லிக் அவர்கள் கொண்டு வந்தார். இதே சமயம் ஸர். வில்லியம் வெட்டர்பர்ன் அவர்கள் தன்னுடைய திட்டத்திற்கு இங்கிலாந்திலும், இந்தியாவிலும் ஆதரவு திரட்டலாயினர். இந்திய அரசாங்கமும். பம்பாய் அரசாங்கமும் இதற்கு ஆதரவு அளித்தன. ஆனல், இந்தியா மந்திரி இதற்கு ஆதரவு அளிக்காமையால் இது நிறைவேற்றப்படவில்லை.

தமிழ்நாட்டு அரசாங்கம் 1892ல் திரு ஃபிரெடெரிக் அகஸ்டஸ் நிக்கல்சன் (Mr. Frederick Augustus Nickolson) அவர்களிடம் "இந்த மாநிலத்தில் விவசாய பாங்குகள், அல்லது நிலப் பாங்குகளை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்ந்து கூறும் சிறப்புப் பணியை ஒப்புவிக்கப்பட்டது." [40] நிக்கல்சன் அவர்கள் தன்னுடைய அறிக்கையின் துவக்கத்திலேயே பின் வருமாறு கூறியுள்ளார்: "பண வணிகர்களுக்குப் பதிலாக நிலைய அமைப்பின் வழி கடன் கிடைக்கச் செய்வது நாகரிக வளர்ச்சியின் முக்கியக் கூறுகும். தனியார் கடன் வழங்கும் முறை ஆரம்ப காலத்தில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. ஆனல், பொதுவாகச் செல்வம், ஒழுங்கு(order) வர்த்தக நம்பிக்கை, தொழில் ஈடுபாட்டின் காரணமாகத் தோன்றும் பழக்க வழக்கங்கள் வளர்ச்சி அடையும்போது இந்த முறை கைவிடப்பட வேண்டும்" [41] நிறுவனக் கடன் அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்று எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள். இது எந்த வடிவத்தில் இந்தியாவில் அமைய வேண்டும்? இதுதான் அன்றையப் பிரச்சினையாக இருந்தது. நிக்கல்சன் அவர்கள் ஜெர்மன் ரெய்ஃபீஸன் (Raiffeisen) பாணியில் கூட்டுறவு சங்கங்களை அமைக்க வேண்டும் என்று கூறினர். இந்தியாவின் கிராமக் கடன்

[40] Proceedings of the Madras Government Puplic Department Order 15 March 1892.

[41] Nicholson's Report, Reserve Bank of India Reprint (May 1960) பக், 5

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு "உண்மையான ஆர்வமும், சோர்வு இன்மையும் பொறுமையும், மாறுத ஈடுபாடும் தேவைப்படுகின்றன. இந்தப் பண்புகள் பெரிய சீர்திருத்தவாதிகளிடம் காணக்கூடிய அளவிற்கு இருக்க வேண்டும். இந்த முறையிலும் இதைப் போன்ற முறைகளிலும் கூட்டுறவு உணர்ச்சியும், சிக்கனமும் சுய உதவி முழுமையாக வளர்ச்சியுற்று இருக்க வேண்டும்" (எனவே) அவர் தனது அறிக்கையை இரு வார்த்தைகளில் சுருக்கியுள்ளார்: "ரெய்ப்ஃபீஸனைத் தேடவும்," [Find Raiffeisen] [42]

இந்த அறிக்கை 1895 லேயே சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அரசாங்கம் உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, (ஆனுல்) கூட்டுறவு சங்கங்களை அமைப்பதற்கான சோதனைகளைப் பல அலுவலர்கள் மேற்கொண்டுள்ளார்கள். அவ்வாறு பஞ்சாபில் (ஸர் எட்வர்ட் மாக்லகனும்' (Sir Edward Maclagan), 'காப்டன் கிராஸ்த்வைத்தும் (Captain Gross Waite) ஐக்கிய மாகாணத்தில் திரு. 'ட்யூபர் நெக்'கும் (Depernex) வங்காளத்தில் திரு 'லையானு' (Lyon) ம் சோதனைகளை மேற் கொண்டார்கள். அந்தக் காலத்தில் ஏற்பட்ட சங்கங்களைச் சாதாரண கம்பெனி சட்டத்தின் [Company Law] கீழ்ப்பதிவு செய்ய வேண்டியதாயிருந்தது. இது கூட்டுறவின் நோக்கத்திற்கும், ஆர்வத்திற்கும் பொருத்தமாக இல்லை. கூட்டுறவு சங்கங்களைப் பதிவு செய்வதற்குத் தனியாக ஒரு சட்டம் தேவை என்பதை யாவரும் உணர்ந்தனர்.

இந்தியாவில் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்துவது பற்றி பரிசீலனை செய்து கூறுமாறு ஸர் எட்வர்ட் லா (Sir Edward Law) அவர்கள் தலைமையில் இந்தியஅரசாங்கம் 1904-ல் ஒரு குழுவை நியமித்தது. இக்குழுவின் அறிக்கை, காரணமாக 1904-ல் கூட்டுறவு சங்கங்கள் சட்டம் இயற்றப் பட்டது. இச்சட்டத்தின்படி ஒருகிராமம், அல்லது நகரத்தில் வசிப்பவர்கள் அல்லது ஒரு வகுப்பு அல்லது இனத்தைச் சேர்ந்த பத்துபேர்கள் "தங்களுக்குள் சிக்கனத்தையும் சுய உதவியையும் ஏற்படுத்தும் வகையில்" ஒரு கூட்டுறவுக் கடன் சங்கத்தை அமைக்கலாம். ஒவ்வொரு மாநிலத்திலும், கூட்டுறவு சங்கங்களைப் பதிவு செய்வது, அமைப்பது, கட்டுப்படுத்துவது முதலிய பொறுப்புக்கள் கூட்டுறவுப் பதிவாளரைச் சாரும். இவ்வியக்கம் துவக்கத்தில் கடன் வழங்கும் பணியை மட்டுமே மேற்கொண்டு இருந்தது. இவற்றின் முக்கிய நோக்கங்கள் "உறுப்பினர்களின் வைப்பு நிதி மூலமாகவும், உறுப்பினர் அல்லாதவர்கள் அரசாங்கம் இதர கூட்டுறவுசங்கங்கள் முதலியன அளிக்கும் கடன்களைக்

42 முன்கூறியபடி, பக் XIV

கொண்டு நிதிதிரட்டுவதுமாகும்; இவ்வாறு திரட்டப்பட்ட நிதியை உறுப்பினர்களுக்குக் கடன் அளித்தல், சில சமயங்களில் பதிவாளரின் பிரத்தியேக அனுமதியின் பேரில் இதர கூட்டுறவு சங்கங்களுக்குக் கடன் கொடுத்தல் முதலியன ஆகும். இச்சட்டத்தின் கீழ் அமைந்த சங்கங்களுக்குப் பத்திரம் பதிவு செய்தல், வருமான வரி, முதலிய சட்டங்களின்படி செலுத்த வேண்டிய கட்டணங்களினின்றும் விலக்கு அளிக்கப்பட்டன. கிராமச் சங்கங்கள், நகர சங்கங்களினின்றும் வேறுபடுத்தப்பட்டன. மொத்த உறுப்பினர்களில் 5-ல் 4 பகுதியினர் விவசாயிகளாக இருந்தால் அதனைக் கிராமச் சங்கம் என்றும், மொத்த உறுப்பினர்களில் 5-ல் 4 பகுதியினர் வேளாண்மையில் ஈடுபடாதவர்களாக இருந்தால் அதனை நகர சங்கங்கள் என்றும் அழைத்தனர். இவ்வாறு வேறுபடுத்துவதன் மூலமாக இவற்றின் நோக்கத்தை வரைக்குட்படுத்த வேண்டும் என்பது அரசாங்கத்தின் குறிக்கோள் இல்லை. இவ்வியக்கம் வளர்ச்சி அடையும் துவக்க காலத்தில் இதற்கு அவசியமாகத் தேவைப்படுகின்ற அமைப்பு, எளிமையையும், நெகிழ்வுத் தன்மையையும் நிச்சயமாக ஏற்படுவதற்கு வழி செய்வதற்காகத்தான் இவ்வேறுபாடுகள் மேற் கொள்ளப்பட்டன.[43]

இவ்வியக்கம் துரிதமாக வளர்ச்சி அடையலாயிற்று. 1906-07ல் 843 ஆக இருந்தக் கூட்டுறவு சங்கங்கள் 1911—12ல், 8177 ஆக அதிகரித்தன. இவ்வைந்து ஆண்டுகளில் உறுப்பினர்களின் தொகை 90,844 லிருந்து 403318 ஆகவும், நடப்பு மூலதனம் ரூ. 23·7 லட்சத்திலிருந்து ரூ. 335·7 லட்சமாகவும் உயர்ந்தன. இத்தகைய முன்னேற்றம் காரணமாக 1904-ம் ஆண்டு சட்டத்தில் உள்ள பல குறைபாடுகளும், நிறைவின்மையும் தெளிவாயின. கூட்டுறவுக் கோட்பாட்டின் அடிப்படையில் கடன் வழங்காத சங்கங்கள் (Non Credit Soeieties) அமைக்கப்பட்டன. ஆனால் 1904ம் ஆண்டுச் சட்டத்தில் இத்தகைய சங்கங்களைப் பதிவு செய்து கொள்வதற்கு வழி இல்லை. அவ்வாறே இடையூறு ஏதும் இன்றி மூலதனம் பெறுவதற்கும், பிற்காலத்தில் மத்திய பாங்குகள் (Central Banks)என்றும், 'யூனியன்' (union) என்றும் அழைக்கப்பட்ட வளர்ச்சியுற்ற மத்திய பதிலாளி அமைப்புக்கள் (Central Agencies) மிகவும் அவசியமானவை என்று உணர்ந்த போதிலும் 1904ம், ஆண்டுச் சட்டத்தில் அவை குறிப்பிடப்படாமையால் ஏற்படுத்த முடியவில்லை. மற்றும் கிராமச் சங்கங்களையும் நகர சங்கங்களையும் வேறுபடுத்தும் அடிப்படை விஞ்ஞான ரீதியில்அவை அமையவில்லை. கிராம சங்கங்களின் லாபத்தை

[43] காண்க: Sir Denzil Ibbetson's Explanatory Memorandum on Cooperative Societies Act, 1904.

அதன் உறுப்பினர்கள் பகிர்ந்து கொள்ளக் கூடாது என்று விதிக்கப் பட்டத்தடை அவர்களைப் பெரிதும் பாதித்தது. இதனால் 1911ல் இந்திய அரசாங்கம் நிலைமையை மறு பரிசீலனை செய்ததன் விளைவாக 1912ல் புதிய சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது,

கிராம சங்கங்களுக்கும், நகர சங்கங்களுக்கும் இடையே உள்ள பழைய வேறுபாடுகள் 1912ம் ஆண்டு சட்டத்தினால் நீக்கப்பட்டது. இதன்படி மூவகையான மத்திய அமைப்புக்கள் அங்கீகரிக்கப்பட்டன. அவையாவன; யூனியன்கள், மத்திய பாங்குகள், மாநிலப் பாங்குகள் முதலியன. இச்சட்டத்தின்படி பொறுப்புக்கள் வரையறுக்கப்படாத சங்கங்கள் மாநில அரசாங்கத்தின் பொதுவான அல்லது சிறப்பான அனுமதியின் பேரில் இலாப ஈவுகளை வெளியிடலாம். எல்லா வகையான பொருளாதார செயல்களும் இதனுள் அமைந்தமையால் இந்த இயக்கத்தின் நோக்கம் விரிவடைந்தது. இந்தச் சட்டப்படி, மாகாண கூட்டுறவு அமைப்பின் அடிப்படையாக முதல்நிலை (Primary) சங்கங்கள் உள்ளன. முதல்நிலை சங்கங்கள் இணைந்து யூனியன் உருவாகிறது. யூனியன்களும் முதல்நிலை சங்கங்களும் இணைந்து மத்திய பாங்கை உருவாக்குகின்றன. இந்த 'பிரமிட்' அமைப்பின் உச்சியில் மாநிலக் கூட்டுறவு பாங்குள்ளது. அதில் கூட்டுறவு நிறுவனங்களுடன் தனியாரும் உறுப்பினராக இருக்கலாம்.

இந்தச் சட்டம் கூட்டுறவு இயக்கத்திற்குப் புதிய ஊக்கத்தை அளித்தது. கூட்டுறவு நிறுவனங்களும், அவைகளின் உறுப்பினர்களும், துரிதமாக வளர்ச்சி அடைந்தனர். இந்தச் சமயத்தில் 1914ல் ஸர். எட்வர்ட் மாக்லகன் (Sir Edward Maclagan) அவர்கள் தலைமையில் ஒரு ஆய்வுக் குழு நியமிக்கப்பட்டது. இந்த இயக்கத்தின் முன்னேற்றத்தையும், அது சரியான அடிப்படையில் அமைந்துள்ளதா என்பதையும் பரிசீலனை செய்வது இதன் நோக்கம் ஆகும். இந்தக் கமிட்டி தன்னுடைய அறிக்கையை 1915-ல் சமர்ப்பித்தது. இந்நாட்டில் கூட்டுறவு இயக்கம் திறமையாக வளருவதற்கான ஆக்கவழித் திட்டங்களை அளித்துள்ளது. அக்குழுவின் பெரும்பாலான சிபாரிசுகள் அன்றைய நிலைமைக்குஏற்றதாக இருந்ததைப் போலவே, இன்றைய நிலைமைக்கும் ஏற்றதாக உள்ளன.

1919ல் ஏற்பட்ட அரசியல் சட்ட சீர்திருத்தங்கள் காரணமாகக் கூட்டுறவு மாநில அரசாங்கத்தின் பொறுப்பில் அமைந்தது. அதாவது கூட்டுறவை இயக்குவதும், கட்டுப்படுத்துவதும், மாநில அரசாங்கத்தின் பொறுப்பாகும். பம்பாய் அரசாங்கம் 1925-ல் கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தை இயற்றியது. சில மாநில அரசாங்

கங்கள் 1912-ம் ஆண்டில் கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தில் முக்கிய மான சில திருத்தங்களைச் செய்து கொண்டன. 1926—27ல் வேளாண்மைக்கான அரசர் ஆணைக்குழு நிலைமையை மறுபரி சீலனை செய்தது. அதுவரை அந்த இயக்கத்தில் ஏற்பட்ட முன் னேற்ற வேகம் திருப்தியை அளிக்கக் கூடியதாக இல்லாத போதி லும், கூட்டுறவு அடிப்படையில்தான் இந்திய விவசாயிகளின் முன் னேற்றமும், வளமும் அமையும் என்ற நம்பிக்கையை இக்குழு தெரிவித்தது. இக்குழுவின் கூற்றை இங்கே குறிப்பிடலாம். "கூட்டுறவு இயக்கம் தோல்வி உறுமானால் இந்தியக் கிராமங்களுக் கான மிகச் சிறந்த நம்பிக்கையும் தோல்வியடையும்,"

பெரிய மந்தம் ஏற்படுவதற்கு முன்னர், அதாவது 1929 வரை இந்த இயக்கம் கணிசமான அளவு முன்னேற்றம் அடைந்துள்ளது. சங்கங்களின் தொகையும், அவைகளின் உறுப்பினர்களும் 1911-12ல் முறையே 8177 ஆகவும், 4,03,318 ஆகவும் இருந்தனர். இவை 1920—21ல் முறையே 52,182 ஆகவும் 19,74,290 ஆகவும், 1929—30ல் முறையே 1,04,187 ஆகவும், 41.81,904 ஆகவும் உயர்ந்தன. இந்த முன்னேற்றம் ஊக்கத்தை அளிக்கக் கூடியதாக இருந்த போதிலும் கிராமீயக் கடன், கிராமீய நிதி போன்ற பிரச் சினைகளின் அளவைப் பார்க்கின்றபோது இவை மிகக் குறைவாக இருப்பதை உணரலாம். இந்த இயக்கம், தமிழ்நாடு. பம்பாய், பஞ் சாப், ஆகிய மாநிலங்களின் இரயத்துவாரிப் பகுதிகளில் அதிக அளவு வளர்ச்சி அடைந்து இருப்பதையும், வங்காளம், பீகார், உத்த ரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள ஜமீன்தாரி பகுதிகளில் குறைவாக வளர்ந்து இருப்பதையும் காணலாம். இந்தியாவில் கூட்டுறவு சங்கங்களின் மொத்த நடப்பு மூலதனம் ரூ. 89.5 கோடி மட்டுமேயாகும். வேளாண்மையின் கடன் தேவைகளில் 2 முதல் 3 விழுக்காடு தேவைகளை மட்டுமே இந்த இயக்கம் அளித்து வந் துள்ளது. இவ்வியக்கத்தின் கடன் வழங்கும் துறையில் பல குறை கள் ஏற்பட்டன. கடன் வாங்கிய உறுப்பினர்கள் காலத்தில் திருப் பிக் கொடுக்காமையால் பாக்கிகள் அதிகமாகத் தேக்கமுற்றன. கடன்களை அடைப்பதில் ஒரு சிலருக்குப் பிரத்தியேக சலுகைகள் காட்டப்பட்டன. கடன் கோரிக்கைகளை பரிசீலனை செய்வதற்கு அதிக காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இந்தக் காலத்தில் விவசாயிக ளுக்கு நீண்டகாலக் கடன்களை அளிக்கக் கூடிய நில அடமான பாங் கிகள் தோன்றியதைக் குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகக் கருதலாம். இக்காலத்தில் இந்த இயக்கத்தின் கடன் அல்லாத (Non-Credit) துறையிலும் கூட, மேலே குறிப்பிட்டக் காலத்தில் கணிசமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

1929-ம் ஆண்டில் ஏற்பட்ட உலக மந்தம் இந்த இயக்கத்திற்கு

ஒரு சோதனைக்காலமாக இருந்தது. வேளாண் பொருள்களின் விலை பெருவாரியாக வீழ்ச்சி அடைந்தமையால் விவசாயிகள் கடனைத் திருப்பிக் கொடுக்கும் சக்தி பெருவாரியாகக் குறைந்தது. இதனால் கூட்டுறவு சங்கங்களுக்கு கொடுக்க வேண்டிய பாக்கித் தொகை அதிகரித்துக் கொண்டே சென்றது. இதன் காரணமாக 'D' பிரிவிலும் 'U/L' * பிரிவிலும் உள்ள கூட்டுறவு சங்கங்கள் அதிகரித்தன. இந்த இயக்கம் அனைத்துமே நசித்துப் போகும் தருவாயை எய்தியதால் இவைகளை நீடித்து இருக்க செய்வதும் மறு சீரமைப்பு செய்வதும், அத்தியாவசியப் பிரச்சினைகளாக இருந்தமையால் மேற்கொண்டு வளர்ச்சி பற்றி யாரும் கருதவில்லை. 1935-ல் இந்திய ரிசர்வ் பாங்கு ஏற்பட்டது. கூட்டுறவு இயக்கத்திற்கு இந்த பாங்கு அதிக அளவு உதவியாக இருக்கும் என்று எல்லோரும் நம்பியிருந்தார்கள். ஆனால், இந்த உதவியைப் பெறுவதற்கு நீண்டகாலம் ஆகியது. இந்த பாங்க் ஏற்பட்ட சில ஆண்டுகளில் வேளாண் கடன் பற்றிய நிலைமையை ஆய்வதிலும், கூட்டுறவு இயக்கத்தின் சீர்திருத்தம், மறு சீரமைப்பு இவைகளுக்கான திட்டங்களைப் பரிசீலிப்பதிலும் இதுதான் கவனத்தைச் செலுத்தியது.

இரண்டாவது உலகப்போர் நிகழ்ந்தபோது ஏற்பட்ட விலை உயர்வு காரணமாக வேளாண்மை பூரிப்பான நிலைமையை எய்தியது. இந்த இயக்கத்தின் முன்னேற்றத்தில் ஒரு புதிய துவக்கம் ஏற்பட்டது என்று கூறலாம். சராசரி 1936 முதல் 1940 வரையிலான ஐந்து ஆண்டுகளில் உள்ள சங்கங்கள் 1,16,960 ஆக இருந்தது. இது 1941-45ல் 1,49,190 ஆக உயர்ந்தது. அதே காலத்தில் இவைகளின் உறுப்பினர்கள் தொகை 50.77 இலட்சத்திலிருந்து 72.18 லட்சம் ஆக உயர்ந்தது. 1938-39லிருந்து 1945-46 வரையிலான ஆண்டுகளில் சங்கங்கள் 41 விழுக்காடும் உறுப்பினர்கள் 70 விழுக்காடும், நடப்பு மூலதனம் 54 விழுக்காடும் அதிகரித்துள்ளன. 1938-39 வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களில் 6 விழுக்காட்டினர் இந்த இயக்கத்துடன் தொடர்பு உடையவர்களாக இருந்தார்கள். இவ்விகிதம் 1945-46ல் 10 விழுக்காடாக அதிகரித்துள்ளது சங்கங்களுக்குத் தரவேண்டிய பாக்கித் தொகைகள் திருப்பித் தரப்பட்டன. புதிய கடன்களுக்கான தேவை குறைந்தது. இதனால் பல கூட்டுறவு சங்கங்களிலும்

* முதல் நிலைக் கூட்டுறவு சங்கங்களை, கூட்டுறவு இலாக்காவினர் அவைகளின் நிதி நிலைக்கு ஏற்ப 5 பிரிவுகளாக வகைப்படுத்தினர். நிதி நிலைமை மிகவும் செம்மையாக உள்ள சங்கங்களை 'A' பிரிவு சங்கங்கள் என்றும், நிதி நிலைமை பெருவாரியான அளவில் திருப்தியாக உள்ளவைகளை 'B' பிரிவிலும், சாதாரண அளவில் திருப்தியாக உள்ள சங்கங்களை 'C' பிரிவிலும், திருப்தியற்ற நிலைமையில் உள்ள சங்கங்களை 'D' பிரிவிலும், மற்றும் 'E' அல்லது 'ப | ட என்ற பிரிவில் உள்ளவை மூழ்கிவிடும் நிலைமையில் உள்ளவைகளாகவும் வகைப்படுத்தப்பட்டன.

மத்திய பாங்குகளிலும், உபரியான தொகை கைவசம் இருந்தது. இவைகளை லாபகரமான மாற்று வழிகளில் முதலீடு செய்ய வேண்டும் என ஆர்வம் காட்டினர். கூட்டுறவு கோட்பாடுகளைப் பல புதிய துறைகளில் செயல்படுத்தலாயினர். சர்க்கரை, துணி, மண்ணெண்ணெய், தீப்பெட்டி முதலிய நுகர் பொருள்களின் பொதுவான பற்றுக்குறை காரணமாக, பலப் புதியக் கூட்டுறவு, நுகர் பொருள் விற்பனை நிலையங்கள் ஏற்படலாயின. அவ்வாறே பலப் புதிய கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்கள் தோன்றின. அவையாவனகூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்கள், கூட்டுறவு விற்பனை சங்கங்கள், கூட்டுறவு பால் உற்பத்தி யூனியன், பழ உற்பத்தியாளர்கள், மற்றும் கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கங்களும் மோட்டார் போக்குவரத்து சங்கங்களும் ஏற்படலாயின.

இந்த இயக்கம் குறிப்பாக பஞ்சாபில் பிரிவினையால் பெரிதும் பாதிக்கப்பட்டது. 1948-49க்குப் பின்னர் மீண்டும் வளரலாயிற்று. அன்று முதல் சங்கங்களின் எண்ணிக்கையிலும், உறுப்பினர் தொகையிலும், நடப்பு மூலதனத்திலும், ஒரு சீரான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 1948-49ல் 1,63,880 ஆக இருந்த சம்பவங்களின் எண்ணிக்கை 1955-56ல் 2,40.390 ஆக உயர்ந்தது. அதே காலத்தில் அவைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 127 இலட்சத்திலிருந்து 165 லட்சமாக உயர்ந்தது. அவைகளின் நடப்பு மூலதனம், அதே காலத்தில் ரூ 219·49 கோடியிலிருந்து ரூ 468.82 கோடியாக உயர்ந்துள்ளது. 1956-57 இறுதியில் 9.69 கோடி மக்கள் (அதாவது குடும்பத்தில் சராசரியாக 5 பேர்கள் என்று எடுத்துக் கொள்ளப்பட்டது.) அதாவது 25 விழுக்காடு மக்கட்தொகை கூட்டுறவு இயக்கத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டனர். கீழே உள்ள அட்டவணையில் முதல் திட்டத்தின் முதல் ஆண்டிற்கும், இரண்டாவது திட்டத்தின் முதல் ஆண்டிற்குமான கூட்டுறவு சங்கங்களின் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதாவது முதல் (ஐந்தாண்டு) திட்டக்காலத்தில் இந்த இயக்கத்தின் முன்னேற்றத்தை இவை எடுத்துக் காட்டுகின்றன. (பார்க்கவும் அட்டவணை 10)

ரிசர்வ் பாங்கும், கூட்டுறவு இயக்கமும்

விடுதலைக்குப் பின்னர் கூட்டுறவு இயக்கத்தின் முன்னேற்றத்திலும், வளர்ச்சியிலும் இந்திய ரிசர்வ் பாங்கு அதிக ஆர்வம் காட்டியது. 1945ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட கூட்டுறவு திட்டமிடல்ஆய்வுக்குழு(Co-operative Planning Committee)அடுத்துள்ள பத்து ஆண்டு காலத்தில் குறைந்தது. 50 விழுக்காடு கிராமங்களுக்கும், 30 விழுக்காடு கிராம மக்கட்தொகைக்கும் கூட்டுறவு இயக்கம்

அட்டவணை 10

	1951-52	1956-57
சங்கங்களின் எண்ணிக்கை	1,85,650	2,44,769
முதல்நிலை சங்கங்களின் உறுப்பினர்கள்	1,37,91,687	1,93,73,349
	(லட்சம் ரூபாய்களில்)	
நடப்பு மூலதனம்	3,06,34	5,67,67
(அ) செலுத்தப்பட்ட பங்கு மூலதனம்	49,08	9246
(ஆ) காப்பு நிதியும், இதர நிதிகளும்	43.51	60,53
(இ) பெற்ற கடன்கள்:		
(1) கூட்டுறவு நிறுவனங்கள்	49,77	1,11.56
(2) ரிசர்வ் பாங்கு	6,85	25,76
(3) அரசாங்கம்	14,12	33,91
(4) இதர இனங்கள்	9,73	15,06
(ஈ) பெறப்பட்ட வைப்பு நிதிகள்:		
(1) கூட்டுறவு நிறுவனங்கள்	4,76	10,08
(2) முதல்நிலை சங்கங்கள்	15,86	28,62
(3) தனியார்களும், மற்றும், உள்ள இனங்களும்	96,44	1,58,68
(உ) நில அடமான பாங்கியிலிருந்தும், சங்கத்திலிருந்து பெற்ற கடன்கள்		
(1) கடன் பத்திரங்கள்	7,91	17,02
(2) இதர வகைகளில்	8,28	13,98

பணி புரிய வேண்டும் என்றும், இயக்கத்தின் இத்தகைய வளர்ச்சிக்கு ரிசர்வ் பாங்கு அதிக நிதி உதவி கொடுக்க வேண்டும் என்றும் சிபாரிசு செய்தது. அவ்வாறே 1949-ல் நியமிக்கப்பட்டக் கிராமீய பாங்கு ஆய்வுக் குழுவும், கூட்டுறவு சங்கங்களுக்கு ரிசர்வ் பாங்கு அதிகக் கடன் வசதி அளிக்க வேண்டும் என்று கூறியது. கூட்டுறவு சங்கங்களுக்கு அதிகக் கடன் வசதி அளிக்கும் பிரச்சினையை பரிசீலிக்கும் நோக்கத்துடன் 1951-ம் ஆண்டு பிப்ரவரி மீ ஒரு மாநாட்டைத் தனிப்பட்ட முறையில் ரிசர்வ் பாங்கு கூட்டியது. (Informal Conference) அதில் கூட்டுறவாளர்களும் பொருளியல் வாதிகளும், மற்றும் இதற்கு அழைக்கப்பட்டிருந்த பலருள் சில மாநிலங்களிலிருந்து கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்களும் இருந்தார்கள். "சாகுபடியாளர்களுக்குக் கூட்டுறவு கடன்முறை வழியாக ரிசர்வ் பாங்கு அளிக்கும் வேளாண் நிதியின் அளவைப் பெருக்குவதற்கு அவசியமான கொள்கை மாற்றங்களைத் தெளிவு ஏற்படும்படி திட்டவட்டமாகக் கூறுவதற்கும், செயல்முறை சீர்திருத்தங்களையும், மற்றும் அவசியமான முயற்சிகளையும் மேற்கொள்ளுவதற்கு ரிசர்வ் பாங்கிற்கு உதவி செய்வது இதன் நோக்கமாகும்."

இம் மாநாட்டின் சிபார்சுகளுக்கு இணங்க திரு. ஏ. டி. கோர்வாலா (A. D. Gorwala) அவர்கள் தலைமையில் ஓர் இயக்கக் குழுவை பாங்கு நியமித்தது. இக்குழு கிராமீயக் கடன்களை ஆய்ந்து கூறும் என்றும் அறிவிக்கப்பட்டது. "எல்லா நிலைகளிலும் உள்ள கிராமங்களையும், கிராமப் பகுதிகளில் மூலதனத் திரட்சி பற்றிய பிரச்சினைகளையும், கடன் தேவைகளையும், இக்குழு ஆய்ந்து கூறும்."

இக்குழுவின் அறிக்கை 1954-ல் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் "ஒருங்கு இணைக்கப்பட்டக் கிராமீயக்கடன் திட்டம்" சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. இத்திட்டத்தில் கூட்டுறவு சங்கங்களும் அரசாங்கமும். இந்திய ரிசர்வ் பாங்கும் முக்கிய பங்கு பெற்றுள்ளன. இதன் முக்கியக் கூறுகளாவன: (அ) எல்லா நிலைகளிலும் உள்ள கூட்டுறவு நிறுவனங்களுடன் அரசாங்கம் பங்கு பெற வேண்டும். (ஆ) கடனையும், இதரப் பொருளாதார நடவடிக்கைகளையும் முக்கியமாக விற்பனை, பதப்படுத்துதல் முதலியவைகளை முழுமையாக ஒருமுகப்படுத்த வேண்டும். (இ) அடிப்படையாக உள்ள முதல் நிலை விவசாயக்கடன் சங்கங்கள் வளர வேண்டும். (ஈ) பண்டசாலை அமைப்புக்கள் நாடெங்கிலும் ஏற்பட வேண்டும். (2) எல்லா நிலைகளிலும், உள்ள கூட்டுறவு அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும்.} இக்குழு 'இம்பீரியல் பாங்கை' தேசீய மயமாக்கும்படி பரிந்துரைத்தது. இதன் கிளை

அலுவலகங்கள் மூலமாகக் கூட்டுறவு சங்கங்களுக்கும், பாங்குகளுக் கும் பணம் அனுப்பும் வசதிகளை ஏற்படுத்தவும், கடன், விற்பனை. பதப்படுத்துதல் முதலிய துறைகளில் ஈடுபட்ட கூட்டுறவு நிறு வனங்களின் அவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் இது அமைந்து இருக்கும். தேசீய விவசாயக் கடன் (நீண்டகால) நிதி மற்றும் தேசீய விவசாயக்கடன் (நிலைபெறச் செய்யும்) நிதி முதலிய இரண்டு சிறப்பு நிதிகளும் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச் சிக்கு அவசியமாகையால் அவைகளை நிறுவும்படி ரிசர்வ் பாங்கைக் கேட்டுக்கொண்டது.

இக்குழுவின் சிபாரிசுகளை உடனடியாகச் செயல் படுத்துவதற் கான முறைகளை மத்திய அரசாங்கமும், ரிசர்வ் பாங்கும், மேற் கொண்டன. இம்பீரியல் பாங்கு தேசீயமயமாக்கப்பட்டது. இதற்கு இந்திய ராஜ்ய பாங்கு ['The State Bank of India'] என்று பெயர் சூட்டப்பட்டது. இது 1955-ஆம் ஆண்டு ஜுலை மீ 1 உ முதல் செயல்படத் தொடங்கியது. 1955-ம் ஆண்டு ஏப்ரல் மீ இந்திய ரிசர்வ் பாங்கு சட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. இதன் காரணமாக ரூ 10 கோடி துவக்க மூலதனத்துடன், தேசீய விவசாயக் கடன் (நீண்டகால) நிதி ஏற்படுத்தப்பட்டது. மற்றும் தேசீய விவசாயக்கடன் (நிலைபெறச் செய்யும்) நிதியும் ஏற்படுத்தப் பட்டது. இந்நிதிக்கு ரிசர்வ் பாங்கு 1956 ஜுன் 30-லிருந்து தொடங்கும் ஒவ்வொரு 5 ஆண்டு காலத்திற்கும் ஒரு கோடி ரூபாய் அளிக்கும். மத்திய நில அடமான பாங்குகளுக்கும், கூட்டுறவு நிதி நிறுவனங்களுக்கும். பங்கு மூலதனத்தை அளிப்பதற்காக மாநில அரசாங்கங்களுக்குக் கடனும். முன் பணமும் வழங்குவதற்கு நீண்ட கால நிதி பயன்படுத்தப்படும். குறுகிய காலக் கடன்களை மத்தியக் காலக் கடன்களாக மாற்றவேண்டிய அவசியம் ஏற்படும்போது நிலைபெறச் செய்யும்நிதியிலிருந்து மாநிலக் கூட்டுறவு பாங்கு களுக்குக் கடனும் முன்பணமும் கொடுக்கப்படும்.

கூட்டுறவு இயக்கத்திற்கு அளிக்கும் கடன்தொகையின் அளவை ரிசர்வ்பாங்கு அண்மையில் வெகுவாக அதிகரித்துள்ளது. மாநிலக் கூட்டுறவு பாங்குகளுக்கு ரிசர்வ் பாங்கு அளித்துள்ள நிகர கடன் தொகைகள் 1956-57.ல் ரூ. 22 கோடியாகவும், 1957-58 ல் ரூ.35 கோடியாகவும் 1958-59 ல் ரூ. 50 கோடியாகவும் இருந்துள்ளன. பருவக்கால வேளாண் நடவடிக்கைகளுக்காகவும், பயிர்களின் விற் பனைக்காகவும். 18 மாநில கூட்டுறவு பாங்குகள் 1957-58-ல். ரூ. 50·38 கோடியைக் குறுகியகாலக் கடனாகக் கொடுத்தன. 1958-59ல் 17 மாநில கூட்டுறவு பாங்குகளின் குறுகிய காலக்கடன் தொகை ரூ. 70.85 கோடியாகும். இச்சட்டத்தின் பிரிவு 17 (4A)யின் படி மாநிலக்கூட்டுறவு பாங்குகளுக்குப் பாங்கு விகிதத்தை விட 2 விழுக்

காடு குறைவான வட்டிவீதத்தில் மத்தியக்காலகடன் ரிசர்வ் பாங்கு கொடுக்கும். [சட்டத்தின் இப்பிரிவின்படி] 1957-58 ல் 14 மாநிலக் கூட்டுறவுபாங்குகளுக்கு; ரூ. 5·42 கோடிகடனுகக் கொடுக்கப்பட்டுள்ளது. நீண்டகாலக்கடன்களேயும் ரிசர்வ்பாங்கு அளித்து வருகிறது. இவ்வகையில் 1957 ல் ஒருதிட்டம் வகுக்கப்பட்டது. அதன்படி மத்திய நிலஅடமான பாங்குகள் வெளியிடுகின்ற கிராமக்கடன் பத்திரங்களே ரிசர்வ் பாங்கு வாங்குவதன் மூலம் அவைகளுக்கு நிதிஉதவிசெய்யும். 1958—59-ல்இத்திட்டத்தைத் தொடங்கிவைக்கும் வகையில் சௌராஷ்டிரமத்தியக்கூட்டுறவு நிலஅடமான பாங்கு மற்றும் ஒரிஸ்ஸா மத்தியக் கூட்டுறவு நில அடமான பாங்கு முதலியவைகளின் கடன் பத்திரங்களே ரிசர்வ் பாங்கு வாங்கியதுமுதல் இது வெற்றிகரமாகச்செயல் பட்டுவருகிறது.

அரசாங்கமும் கூட்டுறவு இயக்கமும்

மக்களும் அவர்களின் தலைவர்களும் இயல்பாக விரும்பிஏற்காத நிலையிலேயே கூட்டுறவு இயக்கம் இந்தியாவில் வளர்ச்சி அடைந்துள்ளது. இது அரசாங்கக்கொள்கையின் ஒரு பகுதியாகவும்,சர்க்காரின் ஒருசெயல் அமைப்பாகவும் இருக்கிறது. ஆரம்பத்திலிருந்தே இந்த இயக்கத்தின் வளர்ச்சியில் அரசாங்கம் அதிகஅளவிற்கு ஈடுபட்டுள்ளது. இந்த இயக்கத்திற்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் ஆலோசனை கூறிவந்துள்ளது. அலுவலர்களுக்குத் தணிக்கை செய்விலும் மேற்பார்வை செய்வதிலும் பயிற்சி அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றது. இதரத்தொழில் அமைப்புக்கள் செலுத்தும் வரி,தீர்வை முதலியவற்றிலிருந்து இவைளுக்கு விலக்குஅளித்தது, ஆனல், இதுவரை கொள்கை அடிப்படையில் அரசாங்கம் இந்த இயக்கத்தில் நேரிடையாக, நிதி கொடுத்து உதவவில்லை. ஆனல் கிராமீயக்கடன் ஆய்வுக்குழுவின் சிபாரிசின்படி ஒருங்கு இணைக்கப்பட்ட கிராமீயக்கடன் திட்டத்தை ரிசர்வ்பாங்கு அமைக்க வேண்டி இருந்து. கூட்டுறவு நிறுவனங்களின் மூலதனத்தில் பங்கு பெறுவதுடன் வேளாண் பொருள்களேச் சேமித்து வைக்கவும், விற்பனை செய்யவும் யூனியன் அளவில் மத்தியப் பண்டசாலைக் கழகத்தையும் மாநில அளவில் மாநிலப் பண்டசாலைக்கழகத்தையும், ஏற்படுத்த வேண்டியபொறுப்பை அரசாங்கம் மேற்கொண்டுள்ளளது. இக்குழுவின் சிபாரிசின்படி வேளாண் பொருள் (வளர்ச்சி, பண்டசாலை) கழகச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 1956-ம் வருடம்ஆகஸ்டுமீ 1ம் தேதி முதல் அமுலாக்கப்பட்டது. தேசீயக்கூட்டுறவு வளர்ச்சிப் பண்டசாலைக்கழகம் 1956ம் வருடம் செப்டம்பர் மாதம் 1ம் தேதி ஏற்படுத்தப்பட்டது. இதுபொதுவான கூட்டுறவுச்

செயல்களையும் குறிப்பாகப் பண்டசாலைகளைப் பதபடுத்துதல், விற்பனை செய்தல் முதலியதுறைகளின் முன்னேற்றத்திற்கு உதவிய செய்கின்றது. மத்தியப்பண்டசாலைக் கழகம் ஒரு சட்டத்தின் மூலமாக ஏற்படுத்தப்பட்டது. அதன் வெளியிடப்பட்ட மூலதனம் (Issued Capital) ரூ. 10 கோடியாகும். இந்தக்கழகம் பல முக்கியத்துவம் பெற்றஇடங்களில் குறிப்பாக தபால், ரயில்வே சந்திப்புபோன்ற இடங்களில் பண்டசாலைகளை அமைக்கும். இவ்வாறே 14 மாநிலங்களில் அமைக்கப்பட்ட பண்டசாலைக் கழகங்களும் பல முக்கிய இடங்களில் தானியக்களஞ்சியங்களை ஏற்படுத்தும்.

1958ம் வருடம் நவம்பர் மாதத்தில் தேசிய வளர்ச்சிக்கவுன்சில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அதன்படி கிராம சமுதாயத்தில் முதல் நிலை அலகாகக்கூட்டுறவு நிறுவனம் அமைக்கப்படவேண்டும் என்றும் கிராமங்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கான பொறுப்பையும் முயற்சியையும், கிராமப் பஞ்சாயத்தும் கிராமக்கூட்டுறவும் ஏற்கவேண்டும் என்றும் கூறப்பட்டது. இவ்வாறாக முதல்நிலை கூட்டுறவு சங்கமானது கடன், விற்பனை, முதலியவசதிகளை விவசாயிகளுக்கு அளிப்பதுடன் நில்லாமல், இந்தியாவின் கிராமப் பொருளாதாரத்தின் மூன்னேற்ற சக்தியாகவும் ஒருசெயல்காரணியாகவும் விளங்குகிறது. கூட்டுறவு இயக்கம் துரிதமாக வளர்ச்சி அடையவேண்டும் என்றும் 3-வது திட்டஇறுதிக்குள் எல்லாக் கிராமங்களிலும் உள்ள எல்லாக் குடும்பங்களும் கூட்டுறவு சங்கங்களினால் பயன் பெற்றிருக்கவேண்டும் என்றும் இந்தக்கவுன்சில் முடிவு செய்தது. இவ்வியக்கத்தின் குறிக்கோளுக்கும், வெற்றிக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்டுகின்ற அளவுக்குக் கீழேஉள்ள அட்டவணை அமைந்திருக்கிறது.

விடுதலை பெற்ற இந்தியாவில் கூட்டுறவு, ஒருபுதிய முக்கியத்துவத்தைப் பெற்று விளங்குகிறது. நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி துரித வேகத்தில் அமையவேண்டும். அப்போதுதான் வளர்ச்சி அடைந்தநாடுகளின் பொருளாதாரநிலையை நாம் அடைமுடியும். அதே சமயம் முதலாளித்துவ நாடுகளின் தவறுகளைத் தவிர்க்கமுடியும். இதற்காகத்தான் நாம் நமது குறிக்கோள்களை அடைவதற்கு சோஷலிச பாதையைத்தேர்ந்து எடுத்து இருக்கின்றோம். முதலாளித்துவப் பாணியில் ஏற்படும் வளர்ச்சி வருமானப்பகிர்வில் ஏற்றத்தாழ்வுகளைத் தோற்றுவிக்கின்றன. கூட்டுறவு முறையில் ஏற்படும் வளர்ச்சி, கல்விஅறிவில்லாத கிராம மக்களுக்கு முன்னேற்றத்திற்கான ஆர்வத்தை ஏற்படுத்துகின்

அட்டவணை 11

	இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் சாதனைகள்	மூன்றாவது திட்ட இலக்குகள்
முதல்நிலைகூட்டுறவுசங்கங்களின் எண்ணிக்கை,	2·1 லட்சங்கள்	2·3 லட்சங்கள்
உறுப்பினர்கள்.	1·7 கோடிகள்	3·7 கோடிகள்
பலனடைந்த கிராமங்கள்	—	100 சதவீதம்
பலனடைந்தவேளாண் உற்பத்தி:	33 சதவீதம்	60 சதவீதம்
குறுகியகால இடைக்காலத் தவணையில் கொடுக்கப்பட வேண்டிய கடன்கள்.	ரூ 200 கோடிகள்	ரூ 230 கோடிகள்
நீண்டகாலக்கடன் (கொடுக்கப் பட்டவை)	ரூ 35 கோடிகள்	ரூ 230 கோடிகள்

றது. வேளாண்மை வாட்டமுற்று இருக்கின்றவரையிலும், கிராம மக்கள் பின்தங்கிய நிலையில் உள்ளவரையிலும், இந்தியா வளர்ச்சி அடையமுடியாது. இந்தியாவின் கிராம வளர்ச்சிக்கும் நாட்டினுடைய முழுமையான வளர்ச்சிக்கும் கூட்டுறவு உயர்ந்த நம்பிக்கையை அளிக்கக்கூடியதாக இருக்கிறது,

7. நீர்ப்பாசனம்

எஸ். ஆர். சர்மா. (S. R. Sharma)

பிரிட்டிஷ் ஆதிக்கம் ஏற்பட்ட காலம் தொடங்கி 1956 வரையில் உள்ள காலத்தை, நீர்ப்பாசன ஆய்விற்காக நான்கு காலக் கட்டங்களாகப் பிரிக்கலாம். அவ்வகையில்முதற்காலம் 1757-ல் பிரிட்டிஷ் ஆதிக்கம் தோன்றியகாலம் முதல் 'ராணி விக்டோரியா விடம் 1837-ல் நாடு ஒப்படைக்கப்பட்ட காலம் வரை'யிலும்; இரண்டாவது காலம் '1837-ல் ராணி விக்டோரியாவிடம் நாடு ஒப்படைக்கப்பட்ட காலம் முதல் 20-ம் நூற்றுண்டின் தொடக்கம் வரை'யிலும்; மூன்ருவது காலம் '20-ம் நூற்ருண்டின் தொடக்கத்திலிருந்து நாடு விடுதலை பெற்றக்காலம் வரை'யிலும்; நான்காவது காலம் 1947-ல் நாடு விடுதலை பெற்ற காலம் முதல் 2-வது ஐந்தாண்டுத் திட்டம் தொடக்கம் வரையிலும்.

இக்கட்டுரையில் 2-வது பருவத்தின் இடைக்காலத்திலிருந்து தான் விவரமான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு முன்பு உள்ள காலத்தில் உள்ள நீர்ப்பாசன வசதிகளைப்பற்றி மேலோட்டமாக உள்ள குறிப்புக்களைக் கொண்டு நாம் திருப்தி அடையவேண்டி இருக்கிறது.

இதில் பலவகையான நீர்ப்பாசனங்களும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவையாவன ; 1. கிணறுகள், 2. நீர்த்தேக்கங்கள், 3. கால்வாய்கள், வற்ருக் கால்வாய்கள், நீர்த்தேக்கக் கால்வாய்கள் என்று பலவகைப்படும். ஆனால், அரசாங்கம் நீர்ப்பாசனங்களை வகைப்படுத்தும் முறை இதனின்றும் வேறுபட்டுள்ளது. இதனைக் கீழே காணலாம்.

1. உற்பத்திக் கால்வாய்கள் ; இவை கட்டி முடிக்கப்பட்ட 10 ஆண்டுக் காலத்திற்குள்ளாக அவைகளுக்கான மூலதன முதலீட்டுத் தொகையின் வருடாந்தர வட்டிக்கு ஈடான தொகையை நிகர வருவாயாக நல்கக் கூடியக் கால்வாய்கள்.

2. காப்புக் கால்வாய்கள் : இவை நேரிடையாகப் போதிய அளவு வருவாய் நல்கக் கூடியவைகளாகக் கருதப்படவில்லை. மழை பெய்வது நிச்சயமில்லாத பகுதிகளில் பஞ்சங்கள் ஏற்படாமல் இருப்பதற்காக இவை அமைக்கப்படுகின்றன.

3. சிறிய நீர்ப்பாசனங்கள் : இவை பிரிட்டிஷார் காலத்திற்கு முன்பே கட்டப்பட்டுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் முதலிய வற்றைக் குறிக்கின்றன.

நாம் எடுத்துக்கொண்ட ஆய்வில் அவ்வப்போது காணப்பட்ட நீர்ப்பாசனங்கள் தான் முக்கியமானதாகும். அவை உற்பத்திக் கால்வாய்களா? என்று வகைப்படுத்துவதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டியதில்லை.

முதற் காலம்

பிரிட்டிஷார் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னதாகவே இந்தியா வில் பலவகை நீர்ப்பாசனங்கள்—குளங்கள், நீர்த்தேக்கங்கள், கால் வாய்கள், முதலியன இருந்துள்ளன. இதில் சந்தேகத்திற்கோ வாதத்திற்கோ இடமில்லை. 1800-வது ஆண்டில் வெல்லஸ்லி பிரபுவின் ஆணைப்படி, டாக்டர் புச்சானன் அவர்கள் ஒரு பிரயாணத்தை மேற்கொண்டார். இவர் சென்னையிலிருந்து கிளம்பி கர்நாடக மைசூர், கோவை, மலபார் வழியாகக் கன்னடத் திற்குச் சென்றார். இப்பகுதிகளில் உள்ள மக்களின் பொதுவான பொருளாதார நிலைமையை அறியவும், குறிப்பாக வேளாண்மை, செய்பொருள் உற்பத்தி முதலியவைகளை ஆய்ந்து அறிவது இப் பயணத்தின் நோக்கம் ஆகும். 'சென்னையிலிருந்து தொடங்கிய பயணம்' என்ற குறிப்பில் கீழ்க்கண்ட நீர்ப்பாசனங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. (பார்க்க: அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணை 1).

தெற்கே உள்ளதற்கு மாறாக வடக்கே கால்வாய்ப் பாசனங்கள் அதிக அளவில் இருக்கின்றன. இதை நீர்ப்பாசனம் பற்றிய அரசர் ஆணைக்குழு (1901) தக்க ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டி யுள்ளது. மேற்கு யமுனைக் கால்வாயை, 14-வது நூற்றாண்டில், ஃபெரோஸ்-ஷா அவர்கள் அமைத்தார்கள். பின்னர் 1568-ல் அலி

அட்டவணை 1

வரிசை எண்	இடம்.	பாசன வகை	விளக்கம்.
1.	கொண்டத்தூர்.	நீர்த்தேக்கம்:	7 × 3 மைல்கள், பல கால்வாய் களுக்கு நீர் அளிக்கிறது, 32 கிரா மங்களில் உள்ள நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கிறது.
2.	ஸ்ரீ பரமாத்தூர்.	நீர்த்தேக்கம்:	நெல் சாகுபடி செய்கின்ற 2000 ஏக் கர்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கிறது.
3.	காஞ்சிபுரம்:	நீர்த்தேக்கம்:	} நெல் வயல்கள் நீர்ப்பாசனம்.
4.	காஞ்சிபுரம்:	ஏரி	
5.	தானேரு, ஐயலூர் இரண்டிற்கும் நடு வில்.	கால்வாய், (பாலாறு)	—
6.	ஆற்காடு	நீர்த்தேக்கம்	காவேரிப்பாக்கம் என்று அழைக்கப் படும்.
7.	பள்ளிக்கொண்டா.	பாலாற்றிலிருந்து பிரி யும் கால்வாய்கள்.	6'.6' ஆழம் உள்ளது.
8.	பங்களூர்.	நீர்த்தேக்கம்	புழக்கத்தில் இல்லை.
9.	ஸ்ரீரங்கப்பட்டணம்.	காவேரியிலிருந்து பிரியும் கால்வாய் கள்.	கால்வாய்களின் தலைப்பில் அணைகள்.
10.	மாதுரு	நீர்த்தேக்கம்	அண்மையில் உள்ள ஆற்றின் அணையிலிருந்தும், கால்வாயிலிருந் தும், நீர் பெறப்படுகின்றது.
11.	தோனுரு, (மயில் கோட்டைக்கும் தெற்கே உள்ளது.)	நீர்த்தேக்கம்	யாதவ நதி என்றும் அழைக்கப்படும். 3—4 மைல்கள் அளவிற்கு சமநிலங் களுக்கு பாசனம் அளிக்கின்றது.
12.	பெரிய பட்டம் (நஞ் செய் நிலம்)	நீர்த்தேக்கம்	—
13.	பெரிய பட்டம் தென் பகுதிகள்.	கால்வாய்கள்.	லக்ஷ்மணத் தீர்த்த ஆற்றிலிருந்து பிரிகின்றது.
14.	திஞஜ்பூர் (பீகார்)	செயற்கை ஏரிகள்.	—
15.	கோரக்பூர் (பீகார்)	கால்வாய்கள்; ஏரி கள், கிணறுகள்.	—

மர்தான் கான் அவர்களால் திருத்தி அமைக்கப்பட்டது. தற்போது உள்ள கிழக்கு யமுனைக் கால்வாய் 17-வது நூற்றுண்டில், ஷா-ஜகான் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்டிருக்கவேண்டும். அவ்வாறே சிந்து நதியில் இருந்து பிரியும் வெள்ளக் கால்வாய்களும், 'பாரி தோ ஆப்' பகுதிகளில் நெடுங்காலமாகவே இருந்து வருகின்றன.

இந்தியாவின் மகசூலிற்கு நீர்ப்பாசனங்களின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும், மிகவும் தொன்மையான காலத்திலிருந்தே நாம் உணர்ந்துள்ளோம். பிரிட்டிஷாரும் அவர்களுக்கு முன்பு இருந்த ஆட்சியாளர்களின் கருத்தை இவ்வகையில் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். 19-வது நூற்றுண்டில் கிழக்கு இந்தியக் கம்பெனியில் பணியாற்றிய இரு முக்கிய அலுவலர்கள் தெரிவித்தக் கருத்துக்களினின்றும் இதனை நாம் அறியலாம். இதனை திரு. ஆர். ஸி. டட், அவர்கள் எழுதியுள்ள "இந்தியாவின் பொருளாதார வரலாறு" (தொகுதி-I) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு இந்தியக் கம்பெனியின் நெறியாளர்கள் மன்றத்திற்கு 1816-ல் கோவை மாவட்ட கலெக்டர் பின் வருமாறு எழுதியுள்ளார்: "இந்தியாவின் இப்பகுதிகளில் உள்ள நிலங்களின் முன்னேற்றத்திற்குக் கிணறுகள் இன்றியமையாதவை. இவைகளின் மூலமாக அதிகபட்ச முன்னேற்றத்தை ஏற்படுத்தமுடியும். இந்தியாவில் பருவக்காலங்கள் அதிக அளவில் மாறுபடுகின்றன. இவை பேரழிவை ஏற்படுத்தும் வகையில் உள்ளன. இவைகளினின்றும் பயிர்களைக் காப்பதற்கும், போதிய அளவு நீர் கிடைக்கும்படிச் செய்வதற்கும் கிணறுகள் இன்றியமையாதவைகளாக உள்ளன. எனவே கிணறுகள் தோண்டுவதற்கு ஊக்கம் அளிக்கப் படவேண்டும். இதைவிட அதிகம் பயன் தரக்கூடியது வேறு ஒன்றும் இருக்கமுடியாது." கலெக்டருக்கு ஆதரவாக ஸர் சார்லஸ் டிரெவெல்யன் (Sir Charles Trevlyan) அவர்கள் கூற்று அமைந்துள்ளது. "நீர்ப்பாசனமே இந்தியாவில் எல்லாமாக உள்ளது. நிலத்தைவிட நீர் அதி முக்கியமானது. நீர்ப்பாசனம் காரணமாக நிலத்தின் உற்பத்தி குறைந்தபட்சம் 6-மடங்கு அதிகரிக்கக் கூடும். இந்தியாவில் பரந்த நிலப்பரப்பின் உற்பத்திக்கு இது காரணமாக உள்ளது. நீர்ப்பாசனம் இல்லாவிடில் விளைச்சல் ஒன்றுமே இருக்காது எனலாம். அப்படி ஏதாவது இருந்தாலும் அது பெயரளவிற்கு மிகவும் சொற்பமாக இருக்கும்."

இரண்டாவது காலம்

இருந்தபோதிலும் இந்தியாவில் வாணிப வளர்ச்சிக்கு இருப்புப் பாதைகள் சாதகமாக இருந்தமையால் கால்வாய்களை விட

இருப்புப்பாதைகள் அமைப்பதற்குப் பிரிட்டிஷார், அதிக முக்கியத் துவம் கொடுத்தார்கள். கால்வாய்களால் வேளாண்மை பெரிதும் பயன்பெற்று இருக்கும். பிரிட்டிஷ் வர்த்தகர்களுக்கு இந்திய வேளாண்மையில் எவ்வித அக்கரையும் இல்லை. லாரன்ஸ் பிரபு நீர்ப்பாசனத்தின் அவசியத்தை நன்கு உணர்ந்தவர். அவரால் கூட இங்கிலாந்தில் உள்ள அலுவலர்களின் அசட்டைத் தன்மையை மாற்றமுடியவில்லை. ஆனால், இதே அலுவலர்கள் இந்தியாவில் இருப்புப்பாதை அமைக்கும் கம்பெனிகளுக்கு இந்திய அரசாங்கம் தனது வருவாயிலிருந்து ஒரு குறிப்பிட்ட வட்டி வீதத்தை உத்தர வாதம் அளிக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்கள். 1877-ல் தமிழ்நாட்டில் ஏற்பட்ட பயங்கரமான பஞ்சம் இந்தியாவில் நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவத்தைப் பிரிட்டிஷ் மக்கள் உணரு வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. அவ்வகையில் சிறந்த பொறி யியல் வல்லுநரும் கோதாவரி, காவேரி நீர்ப்பாசன வேலைகளில் பொறுப்பு ஏற்றவருமான ஸர் ஆர்தர் காட்டன் (Sir Arthur Cotton) அவர்கள் பிரிட்டிஷார் பின்பற்றும் கொள்கையில் உள்ள மடைமையைப் பிரிட்டிஷ் மக்களுக்கு எடுத்துக் கூறினார். 1880-ல் இந்தியாவில் இரயில்வேக்காக 125 மில்லியன் ஸ்டர்லிங்கும், நீர்ப்பாசனத்திற்காக 12 மில்லியன் ஸ்டர்லிங்கும், செலவு செய்யப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார். அவரது முயற்சி களால் ஜார்ஜ் ஹாமில்டன் பிரபுவை (Lord George Hamilton) தலைவராகக் கொண்ட 'செலெக்ட்கமிட்டி' (Selcet committee) இப்பிரச்சினையை ஆய்வதற்காக நியமிக்கப்பட்டது. பஞ்சங்களை தவிர்ப்பதற்காகவும் காட்டன் அவர்கள், ஆழ்ந்து யோசித்து உருவாக்கிய ஒரு நீர்ப்பாசனத்திட்டக் கோரிக்கையை இக்கமிட்டி ஆதரிக்கவில்லை. இக் கமிட்டியின் கருத்துப்படி தமிழ்நாட்டின் கழிமுகப் பகுதிகளில் உள்ள நீர்ப்பாசன வேலைகள் லாபகர மானதாக இருப்பதால் மேற்கொள்ளப்படலாம் என்றும், கங்கை யமுனை நீர்ப்பாசனத்திட்டங்கள் கூட அவ்வாறு இல்லை என்பதால் சிபாரிசு செய்யப்படவில்லை. இவற்றால் மக்கள் வளம் பெருகியிருப் பதையும், பஞ்சங்கள் தவிர்க்கப்பட்டிருப்பதையும் நாம் அறிவோம். கீழே உள்ள அட்டவணையானது ஆர். சி, டட் (R. C. Dutt) அவர்கள் இந்தியாவில் பொருளாதார வரலாறு (தொகுதி-2 பக். 214) என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது காலத் தின் (Period) இறுதியில் இருந்த நீர்ப்பாசன நிலைமையை விளக்க வல்லதாக உள்ளது. (அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணை 2 ஐப் பார்க்கவும்)

மூன்றாவது காலம்

1897-லும் 1900-லும் பஞ்சங்கள் திரும்பவும் ஏற்பட்டன.

அட்டவணை 2

மாநிலம்	கால்வாய்.	பாசனம் செய்யப்படும் ஏக்கர்கள்.
வங்காளம்:	ஒரிஸ்ஸாக் கால்வாய்கள்	2,01,198
	மிட் நாப்பூர்க் கால்வாய்.	82,134
	சோணக் கால்வாய்.	5,57,494
ஆக்ராவும் அயோத்தியும்	கிழக்கு யமுனைக் கால்வாய் இருகங்கைக் கால்வாய்கள் இதர நீர்ப்பாசனங்கள்	27,41,400
பஞ்சாப்	மேற்கு யமுனைக் கால்வாய்.	5,89,955
	பாரி தோவாப் கால்வாய்.	8,56,041
	ஸர்ஹிண்ட் பிரிட்டிஷ்க் கால்வாய்.	7,28,908
	சின்னுக் கால்வாய்.	17,48,129
	ஜீலம் கால்வாய்.	67,367
	சித்நய், பாரே, ஸோகாக் முதலிய கால்வாய்கள்.	1,61,885
பம்பாய்:	நிரா, முத்தா, மற்றும் பல கால் வாய்கள்.	1,39,040
தமிழ்நாடு.	காவேரி, கிருஷ்ணு, கோதாவரி கால் வாய் அமைப்புக்கள்.	25,00,000
	பெரியாறு அமைப்பு	1,54,000
	புஷிக்குல்யா அமைப்பு	8,43,000
	பெண்ணுறு, மற்றும் இதரக் கால் வாய்கள்.	விவரம் இல்லை.

இவை இந்திய விவசாயிகளுக்குத் தோன்ரு நன்மையாக அமைந்தன. கர்ஸன் பிரபு (Lord Curson) அவர்கள் காலத்தில் நீர்ப்பாசனக் கமிட்டி ஒன்றை, 1901-ல், அரசாங்கம் நியமித்தது. அதற்கு ஸர் கோலின் ஸ்காட் மான்கிரீயப்ஃ (Sir Colin Scott Moncrieff) அவர்கள் தலைமை தாங்கினார்கள். அவர் இந்திய நீர்ப்பாசன இலாக்காவில் முன்னாள் பணியாளராக இருந்து அனுபவம் பெற்றவர். இதனால் இந்தக் கமிஷன் அதிகப் பயன் உள்ளதாக இருந்தது. அப்போதுள்ள நீர்ப்பாசன வேலைகளில் முன் னேற்றத்தை ஏற்படுத்திப் புதிய நீர்ப்பாசன வேலைகளை மேற் கொள்வதற்கான சிபாரிசுகளைச் செய்யும் பொறுப்பை இக்கமிஷன் ஏற்றுக்கொண்டுள்ளது. இக்கமிஷன் அறிக்கை லக்னௌவில்

1903-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ம் தேதி சமர்ப்பிக்கப்பட்டது. அக்கமிஷன் மாநில வாரியாகப் பாசனத் திட்டங்கள்பற்றிக் கூறிய முக்கிய யோசனைகளை மேலே கொடுத்திருக்கிறோம்.

பஞ்சாபில் ஓடுகின்ற ஆறுகள், பனிக்கட்டிகள் உருகுவதால் வற்றாத நதிகளாக இருக்கின்றன. பரந்த அளவு நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களை அவை ஏற்படுத்துகின்றன. பஞ்சாபில் உள்ள பரந்த கரம்பு நிலங்களைச் சாகுபடி செய்வதற்கு நீர்ப்பாசனங்கள் இன்றியமையாதவை. எந்த அளவிற்குப் பாசனத் தேவைகள் இருக்கின்றனவோ அந்த அளவிற்கு நீர்ப்பாசன வசதிகள் அளிக்கப்பட வேண்டும்.

கமிஷன் செய்துள்ள முக்கியமான முடிவுகளில் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது: "பஞ்சாபில் வெள்ளப் பாசனம் செய்த நாட்கள் மறைந்துவிட்டன. தற்சமயம் அணைகள் எழுப்புவதன் மூலமாகக் கோடை வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி அவ்வாறு தேக்கம் உற்ற நீரை நாடெங்கிலும் விஞ்ஞான ரீதியில் பகிர்ந்து அளிக்கவேண்டும். இதனால் ஆற்றில் ஓடுகின்ற நீரைக்கொண்டு அதிகப் பரப்பளவு நிலங்களைச் சாகுபடி செய்யலாம். முன்பெல்லாம் (வெள்ளக் கால்வாய்களில்) வினாடிக்கு ஒரு கன அடி வீதம் போகும் நீரைக்கொண்டு 30 முதல் 40 ஏக்கர் நிலத்தைச் சாகுபடி செய்து வந்தார்கள். இப்போது அணைகள் கட்டப்பட்டமையால் (வற்றாக் கால்வாய்கள் மூலமாக) அதே அளவு நீரைக்கொண்டு 200 ஏக்கர் நிலத்தைச் சாகுபடி செய்யமுடியும்."

இந்தக் கமிஷன் ஸட்லஜ் நதியின் குறுக்கே பல அணைகள் கட்ட வேண்டும் என்று ஆலோசனை கூறியது. இதனால் வற்றாத நீர்ப்பாசனம் சுமார் ஒன்பது மில்லியன் ஏக்கர் நிலத்திற்குக் கிடைக்கக் கூடும். அவை, பாவல்பூர், பிகானிர் ராஜ்யங்கள், ரவிப் பள்ளத்தாக்கு, மற்றும் சிந்து சாகர் தோ ஆப்பில் உள்ள மியான்வாலி, முஸாபர்கர், ஜாங் முதலிய மாவட்டங்கள். நீர்ப்பாசனத் திட்டத்தின் நிதி முதலீட்டைக் கருதும்போது இது உடனடியாக வருவாய் நல்கக் கூடியதாக இல்லை. ஒருக்கால் இதனால் நஷ்டம் வரக்கூடுமேயானால் கீழ்பாரி தோ ஆப் கால்வாயிலிருந்து கிடைக்கக் கூடிய லாபத்தில் ஈடுசெய்து கொள்ளலாம் என்று கமிஷன் கருதுகிறது. ஸட்லஜ் பள்ளத்தாக்குத் திட்டத்தையும், இக்கால்வாய் வெட்டுவதையும் ஒரே சமயத்தில் மேற்கொள்ளவேண்டும் என்றும் கூறியது. எதிர் காலத்தில் ஜீலம் நதியை ஜுனாப் உடன் இணைக்க வேண்டியிருக்கலாம். அப்போது பிகானிர், பாவல்பூர் திட்டங்கள் பாதிக்கப்

படாமல் இருப்பதற்குக் காஷ்மீரத்தில் உள்ள வூலார் ஏரியில் நீரைத் தேக்குவதற்குக் கமிஷன் அநிகீகாரம் அளித்தது. மியான் வாலி, முஸா பர்கர் மாவட்டங்களில் ஒரு பரந்த பாலைவனமாக் சிந்து சாகர் தோ ஆப் பகுதிகளில் அமைந்து உள்ளன. இந்தப் பகுதி நெடுகிலும் இரு புறங்களில் மணற் குன்றுகள் இருக்கின்றன. அங்கு தோட்ட மண் நிறைந்த மேய்ச்சல் நிலங்கள் இருக்கின்றன. இப்பகுதியை தால் (Thals) என்று அழைக்கிறார்கள். 1878-1880 ஆண்டின் பஞ்ச ஆய்வுக்குழு(கமிஷன்)இப்பகுதிகளில் 1·75மில்லியன் ஏக்கர்களுக்கு நீர்ப்பாசனவசதி அளிக்கக்கூடியவைகளில் சிந்து சாகர் கால்வாய் அமைக்கக் கருதினர். நீர்ப்பாசனத்திற்கு ஏற்றவை தாஞ என்று தீர்மானிப்பதற்குச் சிந்து பகுதிகளில் குறைந்த செலவில் வெள்ளக் கால்வாய் அமைக்கவேண்டும் என்று நீர்ப் பாசனக் கமிஷன் சிபாரிசு செய்துள்ளது. வேளாண்மைப்பற்றிய அரசர் ஆணைக்குழு 1926-ல் நீர்ப்பாசன கமிஷன் சிபாரிசு செய்த வூலார் ஏரித் திட்டத்தையும் தால் திட்டத்தையும் நிறைவேற்ற மைக்காக வருத்தம் தெரிவித்தது.

பஞ்சாபில் உள்ள எல்லா ஆறுகளும் சிந்துநதியில் கலக்கின்றன. இதனால் இங்கு வெள்ளக் கால்வாய்களில் இடைவிடாது நீர் ஓட்டம் இருந்த போதிலும் சுக்கூர் அணையை எழுப்பவேண்டும் என்று கமிஷன் கருதியது. இதனால் வெள்ளக் கால்வாய்கள் வற்றாக் கால்வாய்களாக மாற்றப்படும் என்றும் சுமார் அரை மில்லியன் முதல் 1 மில்லியன் ஏக்கர் நிலப்பரப்பிற்குப் புதிதாகப் பாசன வசதிகள் ஏற்படும் என்றும் இத் திட்டத்திற்குச் செலவிடப் படுகின்ற ரூ. 4 கோடியும் லாபகரமான அளவில் உற்பத்தியைத் தரக்கூடும் என்றும் கூறியது.

குஜராத்தில் ஹாத்மதி காரிகட் என்றும் இரு கால்வாய் களையும், 387 சிறியப் பாசனத் தேக்கங்களையும் கமிஷன் சிபாரிசு செய்தது. இதைத்தவிர சபர்மதி, மதி, முதலியவற்றின் தலைப் பிலும் நர்மதையின் உப நதிகளிலும் நீரைத் தேக்கும் வகையில் விஞ்ஞான ரீதியில் முழுமையான பரிசீலனை மேற்கொள்ளவேண்டும் என்றும் அது சிபாரிசு செய்தது. இந்த நிலப்பகுதிகள் போர் (Bhor) பரோடா, திருவாங்கூர் முதலிய சுதேச ராஜ்யங்களில் அமைந் துள்ளன. இப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சர்வேயிற்கான செலவுகளை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் கூறியது. முக்கிய நீர்ப்பாசனத் திட்டங்கள் முடிவடைந்த பின்னர் சூரத்பகுதிகளில் தபதியிலிருந்து கால்வாய்கள் அமைக்கும் திட்டத் திற்குக் கவனம் செலுத்துவது அவசியம் என்றும் அது யோசனை கூறியுள்ளது.

தக்காணத்தில் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்களை 5 வகைகளாகக் கமிஷன் பிரித்துள்ளது. அவைகள் பின்வருமாறு: (பார்க்கவும் அறிக்கை 2-ம் பகுதி report Part II பக். 65).

பிரிவு : (அ) மூத்தாக் கால்வாய்கள்.

பிரிவு: (ஆ) மலைத் தொடர்களிலிருந்து தோன்றும் கால்வாய்களால் நிரப்பப்படுகின்ற நீர்த் தேக்கங்கள் அவ்வகையில் நிரா, கோர்தாக கீழ்ப்புஞ்சரா, மேல் மான், மற்றும் எர்லா, (yerla) ஆறு முதலியன.

பிரிவு: (இ) நீர்த்தேக்கம் இல்லாத கால்வாய்கள்: உதாரணமாக கிருஷ்ணு, (Krishna) காத்வா, (Kadva) லாக், (Lakk) ஓஜ்ஹார், (Ojhar) ரேவாரி, (Rewari) சிக்ளி, (Chikli) ஜம்தா, (Jamda) கால்வாய்கள்.

பிரிவு ; (ஈ) மழையினுல் நிரப்பப்படுகின்ற பெரிய நீர்த் தேக்கங்கள் அவையாவன : மாஸ்வாத் (Mhasvad) எக்ருக், (Ekruk) அஷ்தி, (Ashti) மெய்ன், (Maine) முதலியன.

பிரிவு : (உ) மழையினுல் நிரப்பப்படுகின்ற சிறிய நீர்த் தேக்கங்கள்.

இக்கமிஷன் அங்கீகரித்த நீர்ப்பாசனத் திட்டங்கள் பின்வருவன: மாலாதேவி நீர்த்தேக்கம், சானக்காபுரம் நீர்த்தேக்கம், கோகாக் கால்வாயில் இரண்டாவது பிரிவும் ஒயிட்டிங் ஏரிக்கு வடபால் உள்ள காஜாவனி நீர்த்தேக்கம், நிராவின் வலப்புறக் கால்வாய், கோதாவரி, பீமர், கோத்முரா, பைய்னு, ஆற்றுத் திட்டங்கள்; சதாரா, பிஜப்பூர் மாவட்டங்கள், கோல்காட்பூர் ராஜ்யம் முதலியப் பகுதிகளுக்கு நீர்ப்பாசனம் ஏற்படும் வகையில் கிருஷ்ணு கால்வாயை மேலும் நீளமாக்குதல் மற்றும் சிவ-தின்லி, மாலா பிரபா நீர்த்தேக்கங்கள் முதலியன.

1878-80 ஆண்டின் பஞ்ச ஆய்வுக்குழு தமிழ்நாட்டிற்குச்சிபாரிசு செய்துள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் (பார்க்கவும், அறிக்கை (Report 2.ம் பகுதி-பக். 99. நீர்ப்பாசனக் கமிஷன் அறிக்கையில் வெளிவந்துள்ளது.)

1. கோதாவரி, கிருஷ்ணு, காவேரி முதலிய ஆறுகளின் டெல்டா பகுதிகளில் மேற்கொண்ட நீர்ப்பாசனத் திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றுதல் வேண்டும்.

2. துங்கபத்ரா ஆற்றைத் தேக்கி, அந்த நீரைக்கொண்டு, பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பெல்லாரி மாவட்டத்திற்கு நீர்ப் பாசன வசதியை ஏற்படுத்தும் திட்டத்தைக் கவனமாகப் பரிசீலிக்க வேண்டும்.

3. கீழே உள்ள திட்டங்களை நிறைவேற்றவேண்டும்.

(அ) [முன்பு] சேலம் மாவட்டத்தில் கிருஷ்ணகிரி அணையும்

(ஆ) மதுரை மாவட்டத்தில் உள்ள பெரியாறு திட்டம்.

(இ) (Garyam) கார்யாத்தில் உள்ள ருஷிகுல்யாத்திட்டம்.

(ஈ) நெல்லூரில் உள்ள சங்கம் திட்டம்.

4. மதராஸ் பாசனக் கம்பெனிக்குச் சொந்தமான கர்நூல், கடப்பாக் கால்வாயை அரசாங்கத்திற்குச் சொந்தமானதாக மாற்ற வேண்டும்.

1901-ல் நீர்ப்பாசனக் கமிஷன் அறிக்கை வெளியிடப் படுவதற்குள் மேலே கூறிய சிபாரிசுகளில் 3-வது 4-வது பகுதிகள் நிறைவேற்றப்பட்டுவிட்டன. துங்கபத்திரை திட்டம்பற்றி மறு படியும் பரிசீலனை செய்யவேண்டும் என்று இந்தக் கமிஷன் சிபாரிசு செய்துள்ளது. அடிக்கடி மழையின்மைக்காரணமாகப் பஞ்சத்தால் பாதிக்கப்படுகின்ற பெல்லாரி, அனந்தப்பூர், கர்நூல், கடப்பை, நெல்லூர் முதலிய மாவட்டங்களின் நீர்ப்பாசனத்திற்குக் கர்நூல் கடப்பைக் கால்வாயைச் சீர்ப்படுத்துவது பற்றியும், நீளமாக்குவது பற்றியும் பரிசீலனை செய்யுமாறு கூறியுள்ளது. காவேரியிலோ அதன் உபநதிகளிலோ ஒரு பெரிய நீர்த்தேக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும், அவ்வாறே கிருஷ்ணாவிலும் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறியது. 'திவி' நீர் இறைப்பு (Divi Pumping) திட்டமும், தாம்பரபரணியின் உபநதிகளில் ஒரு நீர்த்தேக்கமும், ருஷிகுல்யா, பெண்ணாறு முதலிய திட்டங்களுடன் அதிகப்படியான நீர்த்தேக்கங்கள் ஏற்படுத்துவது மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்று கமிஷன் கருதியது. காவேரியில் அதிக செலவில் நீர்க்தேக்கத் திட்டத்தை அமைக்க கமிஷன் ஆதரிக்க (அளிக்க) வில்லை. பெரியாறு திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதால் ஏற்படும் பயனை நன்கு உணர்ந்தமையாலும், அதற்கான செலவுகள் அப்போது மதிப்பிடப்படாமல் இருந்தமையாலும் இத்திட்டத் தைப்பற்றிக் கமிஷன் ஏதும் கூறவில்லை. கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம், பயனுள்ளதாக இருக்குமா என்பதில் ஐயப்பாடு இருந்தது. தாவது இந்த அணைக்கு அண்மையில் அமைந்த பெரும்பாலான நிலப்பரப்பிற்குப்போதிய அளவு பாசன வசதிகளை அளிக்கமுடியாது என்று கருதப்பட்டது. புஞ்சை (புன்செய்) பயிர்களின் நீர்ப்பாச

னத்திற்காக நீரோடைகளின் கரைகள், நீர் தேங்கியுள்ள இடங்கள், சிறிய அளவில் நீர் இறைப்பு நிலையங்கள் முதலியவற்றை அமைக்க லாம் என்று கமிஷன் யோசனை கூறியுள்ளது. 1878-80 ஆண்டு பஞ்ச ஆய்வுக்குழு சுமார் 39,000 நீர்த்தேக்கங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்று கூறியது. அதன்படி மேற்கொள்ளப்பட்டத் திட்டங்களை அதிகக் கவனத்துடன் தீவிரமாக நிறைவேற்றியிருக்க வேண்டும் என்றும் இந்த நீர்த்தேக்கங்கள் அதிக முக்கியத்துவம் பெற்றவை என்றும் இந்த மாநிலத்தில் சுமார் 3 மில்லியன் ஏக்கர்கள் சாகுபடி செய்வதற்கு இவை பயன்படுகின்றன என்றும் கூறியுள்ளது.

கமிஷனின் கருத்துப்படி மத்திய மாகாணத்தில் நர்மதா, மகாநதி, வைங்கங்கா முதலிய மூன்று பெரிய ஆறுகள் ஓடிய போதிலும் நீர்ப்பாசன வசதிகளை அளிக்கக் கூடிய வகையில் அரசாங்கத்திடம் பாசனத்திட்டம் ஏதும் இல்லை என்று சொல்லலாம். இக்கமிஷன் கருத்துப்படி நர்மதா பள்ளத்தாக்கில் உள்ள லேசான மண்ணை பாதுகாப்பதற்கு இருவழிகள் உண்டு. ஒன்று அந்தப் பள்ளத்தாக்கில் ஒரு கால்வாயைத் தோண்டுவது. இரண்டு, சாத்பூரா மலைகளிலிருந்து தோன்றும் சிறு ஓடைகளின் நெடுகிலும் பல இடங்களில் நீர்த் தேக்கங்கள் அமைப்பது. இந்த இரண்டில் முதலாவதாகக் கூறியது மிகவும் சிக்கனமானது. இந்தக் கமிஷன் மகாநதியிலிருந்தும் அதன் உபநதியிலிருந்தும் சிறு கால்வாய்களை அமைக்கும் திட்டத்தை அங்கீகரித்துள்ளது. இப் பகுதிகளில் நீர்ப்பாசனத்திற்கு அதிக அளவில் நீர்த்தேக்கங்களை நம்பவேண்டியுள்ளது என்றும், அவைகளைச் சீர்படுத்தி, பராமரிப்பது மிகவும் முக்கியமானது என்றும் இக்கமிஷன் கூறுகிறது. ராம்டெக் கிற்கு எதிரில் உள்ள பென்ச் ஆற்றில் பெரிய நீர்த்தேக்கம் ஒன்றை அமைப்பதன் பென்ச், கான்ஹன் ஆகிய ஆறுகளின் நீரைப் பயன் படுத்துவதற்கு இக்கமிஷன் அங்கீகாரம் அளித்துள்ளது.

நீர்ப்பாசனத்திற்காக வங்காளத்தை 5 பிரிவுகளாகக் கமிஷன் பிரித்துள்ளது. 1. ஒரிஸ்ஸா, மிட்நாப்பூர் 2. தாமோதர் நதித் திட்டங்கள் 3. கங்கைக்குத் தெற்கே உள்ள பீகார் பகுதிகள் 4. கங்கைக்கு வடக்கே உள்ள பீகார் பகுதிகள் 5. சோட்டா நாக்பூர்.

முதல் பிரிவில் ஒரிஸ்ஸா மிட்நாப்பூர் பிரிவில் அமைந்த நீர்ப்பாசனத் திட்டத்தால் ஏற்படும் லாபம் மிகவும் குறைவு எனக் கமிஷன் கருதியது. எனவே பாசனத் திட்டத்தைக் கட்டாக் பகுதியுடன் நிறுத்திவிட்டது. வடக்கில் உள்ள பாலாசோர்

பகுதிக்கும், தெற்கில் உள்ள பூரிப்பகுதிக்கும் பாசனத்திட்டத்தை விரிவுபடுத்த முடியாது என்றும் கமிஷன் கூறுகிறது. இங்கு கப்பல் போக்குவரத்துக்கு ஏற்ற கால்வாய் அமைக்கப்பட்டபோதிலும் மக்கள் அதனைப் பயன்படுத்தவில்லை. ஒரிஸ்ஸாவில் பொதி மாடுகள் தான் முக்கிய போக்குவரத்து சாதனங்களாக இருந்தன. இந்த நிலைமையில் ஒரிஸ்ஸாவில் உள்ளக் கால்வாய்கள் வெள்ளத்தின்றும் பாதுகாப்பு அளிக்கக்கூடிய அளவில் உயரமானக்கரைகளைப் பெற்று இருக்கின்றன. காசாய் ஆற்றிலிருந்து தோண்டப்பட்ட மிட் நாப்பூர் கால்வாய்களைப் போல தாமோதரநதி ஆற்றிலிருந்து ஈடன் கால்வாய் கட்டப்பட்டது. இது சோட்டா நாக்பூரில் உள்ள ராஞ்சி மாவட்டத்தில் உற்பத்தியாகி பர்த்வான் ஹூக்ளி,ஹௌரா முதலிய மாவட்டங்களின் வழியாக ஓடுகிறது, ஹூக்ளி, பர்த்வான் முதலிய மாவட்டங்களின் தேக்கமுற்றுள்ள ஆற்றுப் படுகைகளில் கடுமையான காய்ச்சல் ஒரு கொள்ளை நோயாக மிகப்பெரிய அளவில் இருந்தது. எனவே இப்பகுதியில் சுத்தமான தண்ணீர் அவசியமாகத் தேவைப்பட்டது. இதற்காகத்தான் ஈடன் கால் வாய் தோண்டப்பட்டது. பிற்காலத்தில் இக்கால்வாய் பாசனத் திற்காகப் பயன்படுத்தப்பட்டது. கால்வாயின் தலைப்பில் ஒரு அணை கட்டவேண்டும் என்றும், அப்போதுதான் இது பாசன முறைக்கு ஏற்றதாக இருக்கும் என்றும் கமிஷன் கருதுகிறது.

கங்கைக்குத் தெற்கில் உள்ள பீகார் பகுதிகளில் ஏற்கனவே சில கால்வாய்கள் கட்டப்பட்டுள்ளமையால் அந்தப் பகுதிகளில் புதிதாகக் கால்வாய் அமைப்பதற்கு க்கமிஷன் சிபாரிசு ஏதும் செய்யவில்லை.

கங்கைக்கு வடபால் உள்ள பீகார் பகுதிகளில் சாம்ப்பரன், சாரன் முசாப்பர்ப்பூர், தார்பாங்கா முதலிய மாவட்டங்களில் உள்ளன. சாம்பரனில் உள்ள திரிவேணி, தாக்கா (Dhaca) முதலிய கால்வாய்கள் திருப்திகரமாக உள்ளன என்று கமிஷன் கூறியது. முஸாபர்ப்பூர் மாவட்டத்தில் உள்ள பாக்மதித் திட்டத்தை ப் பூர்த்திசெய்யவேண்டும் என்றும் டௌஸ். கமீலா முதலிய நதித் திட்டங்களை மேலும் பரிசீலனை செய்யவேண்டும் என்றும், சரன்மா வட்டத்தின் பாசனத்திற்காக காண்டாக் ஆற்று நீரைப் பயன்படுத்தலாம் என்றும் கூறியது. மற்றும் காக்ரா, காண்டாக் ஆகிய இரு ஆறுகளுக்கும் இடைப்பட்ட தோஆப் பகுதிகளில் பாசனக் கால்வாய்கள் அமைக்கவேண்டும், காண்டாக் ஆற்றில் வெள்ளப் பாதுகாப்பிற்காக மிக உயரமாக எழுப்பப்பட்ட கரைகளில் மதகுகள் அமைத்து அவைகளினின்றும் கால்வாய்களை ற்படுத்தவேண்டும் என்றும் கமிஷன் கருதியது.

புதிய நீர்ப்பாசன வேலைகள் மேற்கொள்ளப்படுவதற்கு சோட்டாநாக்பூர் சிறிதுகூட தகுதியில்லை என்று கமிஷன் கூறியது. இருந்தபோதிலும் அப்போதுள்ள பாலமான் நாதௌரா, கோரார்பார், காரோ முதலியத் திட்டங்களை முழுமையான அளவிற்குப் பயன்படுத்தவேண்டும் என்று கூறியது.

ஆய்விற்காக உத்தரப்பிரதேசத்தை நீர்ப்பாசனக் கமிஷன் கிட்டத்தட்ட 4 இணையான நிலத்துண்டுகளாகப் பிரித்துள்ளது.

1. மலைக்குக் கீழாக உள்ளபகுதிகள்: இந்த மாகாணத்தில் இமயமலையை ஒட்டினாற்போல் 30 மைல்கள் முதல் 50 மைல்கள் அகலத்தில் உள்ள நிலப்பரப்பு.

2. மத்தியப்பகுதிகள்: கங்கைக்கும் மலைக்குக் கீழாக உள்ள பகுதிகளுக்கும் இடையே உள்ள பகுதிகள்.

3. கங்கைக்கும் யமுனைக்கும் இடையில் உள்ள தோஆப் பகுதிகள்: சிவாலிக் அடிவாரத்திலிருந்து 'கங்கையும் யமுனையும் சங்கமம் ஆகின்ற அலகாபாத்வரை.

4. தெற்குப்பகுதிகள்: யமுனை ஆற்றிற்கு தெற்கே உள்ள நிலப் பகுதிகள்.

கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டபோது நான்கு உற்பத்திக் கால்வாய்கள் (Productive) இருந்தன. அவையாவன? மேல் கங்கை, கீழ்க்கங்கை, ஆக்ரா, கிழக்கு யமுனை முதலிய கால்வாய்கள். பெட்வா என்ற காப்புக் கால்வாய் இருந்தது. துன், பிஜ்னோர், ரோகில் கண்டு என்ற மூன்று சிறு கால்வாய்களும் மற்றும் தாரை, பாவர் போன்ற 20 கொடி வாய்க்கால்களும், ஜான்ஸி, ஹாமிர்பூர் என்ற இரு ஏரிகள் முதலியனவும் நீளமாக்கப் பட்ட கங்கை, ஆக்ரா கால்வாய்கள் அதாவது ஃப்டேபூர் விரிவு மற்றும் மாட்ப்ரான்ச், கால்டா, நான் கோவன், முதலிய (Distributing) கிளைக் கால்வாய்களும் உள்ளன.

மலைக்கீழ் உள்ள பகுதிகளின் நெல்சாகுபடியைக் காப்பதற்காகவும், மலை அருவிகளை நன்ருகப் பயன்படுத்திக் கொள்வதுபற்றிப் பரிசீலனை செய்யவேண்டும் என்று கமிஷன் கூறியது. மத்தியப் பகுதிகளில் கீழ்க் கங்கை, ராம் கங்கா, சாரதாக் கால்வாய் முதலிய திட்டங்களை இக்கமிஷன் ஆதரித்துள்ளது. 'தோஆப்' பகுதிகளில் பாசனத் திட்டங்களை விரிவுபடுத்துவது மிகவும் முக்கியத்துவம் பெற்ற ஒன்ருகும். இதற்குக் கங்கையிலும் யமுனையிலும் நீர்மட்டம்

உயரவேண்டும். கங்கை, யமுனை முதலிய ஆறுகளின் தலைப்புக்களில் நீரைத் தேக்குவதற்கு ஏற்ற இட வசதி இல்லை. ராம் கங்கா, சாரதா நதிகளிலிருந்து தான் கங்கைக்கும் யமுனைக்கும் அதிகப்படியான நீரை அளிக்கமுடியும். சாரதாவில் ஓடும் நீரை கங்கைக்கும் யமுனைக்கும் திருப்பிவிடுவதற்கு இக்கமிஷன் ஆதரவு தந்தது. இதனை நிறைவேற்றுவதில் பல பொறியியல் சிக்கல்கள் உள்ளன. இவ்வாறு செய்வதால் சாரதாவின் நீர் வற்றிவிடக் கூடும். துத் பகுதிகளில் (Dudh) கால்வாய்ப் பாசனத்தை விரிவுபடுத்த வேண்டுமானால் காங்கிராவிலிருந்து சாரதாவிற்கு நீரைத் திருப்பி விட வேண்டியிருக்கும். பண்டல்கண்ட் பகுதிகளில் பண்டா மாவட்டத்தில் பாசன வசதிகள் ஏற்படுத்துவதற்கு கென் (Ken) ஆற்றிலிருந்து கால்வாய் வெட்டுவதற்கானத் திட்டத்தை முழு அளவில் பரிசீலிக்கவேண்டும் என்று கமிஷன் கருதியது. ஹாமிர்ப்பூர் மாவட்டத்தில் தாஸன் கால்வாய், அலகாபாத்தில் டன்ஸ் கால்வாய் மிர்ஸாப்பூரிலும் காசியிலும் (வாரணாஸியிலும்) உள்ள பெலான், காரம்நாஸா கால்வாய்கள் முதலிய பாசனத் திட்டங்கள் அமைப்பதற்கு இக்கமிஷன் ஆராய்ந்தது. ஜாலரன் மாவட்டத்தில் உள்ள பெட்வாக் கால்வாயைச் செப்பனிடுவதற்கும், பண்டில் கண்டு வட்டாரத்தில். ஜான்ஸி, ஹாமிர்பூர் மாவட்டங்களில் 12 நீர்த்தேக்கங்களைச் செப்பனிடுவதற்குமான திட்டங்களைக் கமிஷன் பரிசீலனை செய்தது.

கமிஷனின் சர்வேயில் இந்திய சுதேச ராஜ்யங்களின் பாசன வளங்களும் அமைந்துள்ளன. இராஜபுதனத்தில் உள்ள ஜய்ப்பூர், ஜோத்பூர், கிஷன்கார், பாரத்பூர், ஷாபுரா, அல்வார், கோட்டா, பிகானிர், தோல்பூர், ஸிரோஹி, டோன்க், பண்டி, பிரதாப்கார், ஜைஸல்மர், மேவார் முதலிய சுதேச சமஸ்தானங்களின் நீர்ப் பாசனத் தேவைகள் வரையற்றதாக உள்ளன. ஆனால், அதே சமயம் அவைகளை அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக்கள் குறைவாக உள்ளன. இந்தப் பகுதிகளில் கால்வாய் பாசனத்திற்கான வாய்ப்புக்கள் மிக மிகக் குறைவு. காகர் (Ghaggar) நதி நீங்கலாக அங்குள்ள ஏனைய ஆறுகள் மாகி, சாம்பல் மற்றும் இவைகளின் உபநதிகள் யாவும் அந்தப் பகுதிகளில் பெய்யும் மழையை எதிர்நோக்கியுள்ளன. மழைக் காலத்திற்குப் பின்னர் இவை வரண்டுவிடும். இமாலய மேற்கு மலைத்தொடர்களில் உள்ள பனிமலைகள் போன்ற இடங்களில் இந்த ஆறுகள் உற்பத்தியாகவில்லை. இந்தப் பகுதிகளில் விரிவாகவும், முறையாகவும் சர்வே மேற்கொள்ளுவதால் வறட்சியான நிலைமைகளினின்றும் ஓரளவு பாதுகாப்பு அளிப்பதற்கான சாத்தியக் கூறுகளை அறியலாம் என்று கமிஷன் கருதியது.

கத்தியவார் தீபகற்பத்தில் உள்ள எண்ணிறந்த சமஸ்தானங்

களில் பெரிய அளவில் நீர்ப்பாசனத் திட்டங்கள் ஏதும் இல்லை என்று கூறலாம். போர்ப்பந்தரில் உள்ள பாதார் என்னும் ஆற்றில் உள்ள அணையையும் கலிங்குகளையும் ஓரளவிற்கு சுமாரான அளவில் உள்ள பாசனத் திட்டமாகக் கூறலாம். இந்தத் தீபகற்பப் பகுதியில் பாசன வசதிகளை ஏற்படுத்துவதற்கு நீர்த்தேக்கங்களை அமைக்கவேண்டும்—என்று கமிஷன் கருதியது. இதனை ஏற்படுத்து வதற்கு அப்பகுதியில் முறையான சர்வே மேற்கொள்ளப்பட வேண்டும்.

மைசூரில் போதிய அளவுக்குக் கால்வாய்களும், நீர்த்தேக்கங் களும் இருப்பதால், நீர்ப்பாசன வசதிகள் திருப்தியளிப்பதாகக் கமிஷன் அறிவித்துள்ளது. தவருது மழை பெய்கின்ற மேற்குப் பகுதிகளில் பெரிய அளவில் நீர்த் தேக்கங்களை ஏற்படுத்தி அவற்றிலிருந்து நீர் கிடைக்கச் செய்யலாம் என்றும் அறிவித்தது.

ஹைதராபாத்தில் உள்ள நீர்ப்பாசனங்கள் பெரும்பாலும் நீர்த்தேக்கங்களாகவும், சிறு கால்வாய்களாகவும், உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை தெலிங்கானு, கர்னுடகம், ஆகிய மாவட்டங்களில் தான் அமைந்துள்ளன. இம் மாவட்டங்களில் இப்போதுள்ள பாசனங்களைச் செப்பனிடவேண்டும் என்றும், மற்றும் மரத்துவாடா மாவட்டங்களில் உள்ள எண்ணிறந்த சிறு ஓடைகளைச் செம்மையாகப் பயன்படுத்தவேண்டும் என்றும் கமிஷன் பரிந்துரைத்தது

இவ்வாறே பேராரிலும், சிறிய நீர்த்தேக்கங்கள் மட்டுமே இருந்தன. இதைத்தவிர குறிப்பிடத்தக்க அளவில் பெரிய பாசனங்கள் எதுவும் இல்லை. பூர்னு, வார்தா நதிகளில் கலக்கும் பல உப நதிகளின்றும், ஓடைகளிலிருந்தும் கால்வாய்கள் வெட்ட வேண்டும் என்றும், இவைகளைக் கொண்டு இப்பகுதிகளில் பல நீர்த்தேக்கங்களையும், சிறு கால்வாய்களையும் அமைக்கவேண்டும் என்றும் கூறியுள்ளது.

பரோடா சமஸ்தானத்தின் பாசன வளர்ச்சிக்காக அந்த அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகளில் கமிஷன் திருப்தி அடைந்தது.

மத்திய இந்தியாவில் உள்ள பகல்கண்ட், பண்டில்கண்ட், குவாலியர், மால்வா, இந்தூர், முதலிய சுதேச சமஸ்தானங்களில் நீர்ப்பாசன வசதிகளை அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம்.

இவ்வகையில் பண்டில்கண்டில் ஓடும் பெட்வா, கென், தாஸன் போன்ற ஆறுகளும், குவாலியரில் ஓடும் மோரார் ஆறும், மால்வாவில் ஓடும் காலி சிந்தும், இந்தூரில் ஓடும் சம்ப்பனும் குறிப்பிடத்தக்கவை.

நீர்ப்பாசனக் கமிஷன் (1901) கூறிய பெரும்பாலான ஆலோசனைகளை, 1926-ல் வேளாண்மைக்காக நியமிக்கப்பட்ட அரசர் ஆணைக்குழு முழுமையாக ஏற்றுக்கொண்டது. உத்தரப் பிரதேசத்தில் உள்ள சாரதாக் கால்வாய்த் திட்டங்கள். தமிழ் நாட்டில் காவேரி, கிருஷ்ணு, துங்கபத்திரா, மேல் பவானித் திட்டங்கள், பூனாவில் உள்ள கடக்வத்ஸலா அணையைப் போன்று பாட்கரில் உள்ள லாயிட் அணையும் திருப்தியளிப்பதாக அரசர் ஆணைக்குழு கருத்துத் தெரிவித்தது. உத்தரப்பிரதேசத்தில் செங்கல் கிணறுகளும் குழாய்க்கிணறுகளும் இறக்கப்பட்டன. தென் இந்தியாவில் பல கண்மாய்களும், நீர்த்தேக்கங்களும் புதுப்பிக்கப்பட்டதுடன், புதிதாகவும் அமைக்கப்பட்டன. இவற்றைத் தீர்வு காணும் வகையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் துவக்கம் என்று கமிஷன் உறுப்பினர்கள் எண்ணினர். 1919-ஆம் ஆண்டு சீர்திருத்தங்கள் காரணமாக மாநிலங்கள் அதிகப் பொறுப்புக்களை ஏற்றன. முக்கிய மாக நீர்ப்பாசனக் கமிஷன் [யோசனை] கூறிய பல திட்டங்களை நிறைவேற்றுவதிலும், புதிய பாசன வேலைகளை மேற்கொள்ளு வதிலும் மாநிலங்கள் திறமையாகச் செயல்படுகின்றன என்றும் கூறியது. 1922-க்குப்பின்னர் பல மாநிலங்களிலும் உள்ள நீர்ப் பாசனத்துறைகள் விழிப்புணர்ச்சியுடன் செயல்படுவதை அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணையினால் (அட்டவணை 3) அறிய லாம். மிண்டோ-மார்லி சீர்திருத்தங்களுக்குப் பின்னர் 20 ஆண்டு காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தைச் சித்தரிக்கும் வகையில் இது அமைந்துள்ளது. இது வேளாண்மைக்கான அரசர் ஆணைக்குழுவின் அறிக்கையிலிருந்து தயாரிக்கப்பட்டது. [ஜாதரும் பெர்ரியும் — இந்தியப் பொருளாதாரம் — முதல் தொகுதி].

பஞ்சாபின் பாசன வளர்ச்சி சிறப்பாக உள்ளது. அதையடுத்து பீகார், ஒரிஸ்ஸா, சிந்து, உத்தரப்பிரதேசம், முதலிய மாநிலங் களின் வளர்ச்சி அமைந்துள்ளன. கால்வாய்ப் பாசனம் வெகுவாக அதிகரித்துள்ளதுதான் இதற்கு முக்கியக் காரணம், ஏனைய முறை களைவிட கால்வாய்ப் பாசனம் எப்போதும் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதை விளக்கும் வகையில் வேளாண்மை அரசர் ஆணைக்குழுவின் அட்டவணை (அட்டவணை 4) அமைந்துள்ளது.

அட்டவணை 3

மாநிலங்கள்	நீர்ப்பாசன வசதி உடைய பரப்பு, மொத்தப் பரப்பின் சதவீதமாக. (1925-26)	நீர்ப்பாசன வசதி உடைய பரப்பு மொத்தப் பரப்பின் சதவீதமாக. (1938-39)
அஸ்ஸாம்	5·7	8·7
வங்காளம்	6·2	6·4
பீகார், ஒரிஸ்ஸா	17.4	42·4
பம்பாய்	3·9	4·5
மத்திய மாகாணம் பேரார்	4·2	6·6
தமிழ்நாடு	29·7	29·2
வடமேற்கு எல்லை மாகாணம்	34·4	43·1
பஞ்சாப்	44·1	102·8
உத்தரப் பிரதேசம்	22·0	29·0
சிந்து	73·7	88.1
சிறிய நிருவாகங்கள்	19·3	35·5

தமிழகத்தில் நீர்த்தேக்கங்களும், உத்தரப்பிரதேசத்திலும், பஞ்சாபிலும் கிணறுகளும், மற்றும் உத்தரப்பிரதேசம், பீகார், ஒரிஸ்ஸா முதலிய மாநிலங்களில் "இதர வகை' நீர்ப்பாசனங்களும் முறையாக முக்கியத்துவம் பெற்றுள்ளன என்பதை அறியலாம்.

அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணை முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் கொடுக்கப்பட்டதை ஒட்டி அமைந்துள்ளது. மாநில வாரியாக உள்ள முக்கியமானக் கால்வாய்களையும் அவைகள் கட்டப்பட்ட காலத்தையும், பாசன நிலப்பரப்பையும் இதில் காணலாம்.

அட்டவணை 4

மாநிலங்கள்	கால்வாய்ப் பாசனம் ஏக்கர்கள் (-000-ல்)	கிணற்றுப் பாசனம் ஏக்கர்கள் (-000-ல்)	ஏரிப் பாசனம் ஏக்கர்கள் (-000-ல்)	இதரப் பாசனங்கள் ஏக்கர் (-000-ல்)	மொத்தப் பாசனப் பரட்பு ஏக்கர் (-000-ல்)
அஸ்ஸாம்	191	—	1	172	364
வங்காளம்	289	32	615	557	1493
பீகார், ஒரிஸ்ஸா	1812	628	1709	1205	5354
பம்பாய்	290	531	109	38	968
சிந்து	2930	43	1	127	3101
மத்திய மாகாணம் பேரார்	946	117	—	46	1109
தமிழ்நாடு	3803	1654	3362	467	9286
வடமேற்கு எல்லை மாகாணம்	769	89	—	57	915
பஞ்சாப்	9836	3385	15	120	13356
உத்தரப்பிரதேசம்	2080	4737	65	2317	9199
சிறிய நிர்வாகங்கள்	28	88	28	—	144

4-வது காலம்

இந்திய வேளாண்மையின் பூரிப்பான வளர்ச்சிக்கு நீர்ப்பாசனம் இன்றியமையாத முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதைப் பிரிட்டிஷார் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் தங்களுக்கு முன் ஆட்சி செலுத்தியவர்களிடமிருந்து தெரிந்து கொண்டார்கள். விடுதலைப் பெற்றவுடன், பிரிட்டிஷாரிடமிருந்து இவ்வுண்மையை இந்தியர்களும் உடனடியாகத் தெரிந்துகொண்டார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர்ப்பாசனக் கமிஷனின் அறிக்கை 1901—03-லிருந்து எடுத்தாளப்பட்டுள்ள பெரிய பத்தி ஒன்று இதனை விளக்க வல்லதாக உள்ளது,

அட்டவணை 5

மாநிலத்தின் பெயர்	கால்வாய்	கட்டப்பட்ட வருடம்	பாசன நிலப்பரப்பு ஏக்கர் [000ல்
பீகார்	ஸோன் கால்வாய்	1875	655
	திரிவேணிக் கால்வாய்	1914	114
பம்பாய்	நிராக் (இடதுகரைக்) கால்வாய்	1906	90
	கோதாவரிக் கால்வாய்கள்	1916	63
	பிரவாராக் கால்வாய்கள்	1926	90
	நிராக் (வலக்கரைக்) கால்வாய்	1938	89
மத்தியப் பிரதேசம்	தான்துலாக் கால்வாய்கள்	1925	158
	மகாநதிக் கால்வாய்கள்	1927	199
தமிழ்நாடு	காவேரி டெல்டா அமைப்பு	1889	1070
	கோதாவரி டெல்டா அமைப்பு	1890	1229
	கர்னூல் கடப்பாக் கால்வாய்	—	88
	பெண்ணாறுக் கால்வாய்கள்	1894	178
	பெரியாறு அமைப்பு	1897	202
	கிருஷ்ணு டெல்டா அமைப்பு	1898	1002
	கொள்ளிடம் கீழ் அணைக்கட்டு	1903	123
	கிருஷ்ணு கிழக்குக்கரைக் கால்வாய் விரிவு	1913	100
	காவேரி—மேட்டூர் அணை	1934	232
ஒரிஸ்ஸா	ஒரிஸ்ஸாக் கால்வாய்கள்	1795	233
பஞ்சாப் (இந்தியா)	மேற்கு யமுனைக் கால்வாய்கள்	1820	1018
	மேல் பாரி தோ ஆப் கால்வாய்	1879	783
	ஸர் ஹிந்த் கால்வாய்	1884	2,312
	கிழக்குக் கால்வாய்கள்	1928	190
உத்தரப் பிரதேசம்	கிழக்கு யமுனைக் கால்வாய்	1831	446
	கங்கைக் கால்வாய்	1856	1,620
	ஆக்ராக் கால்வாய்	1875	343
	கங்கைக் கீழ்க் கால்வாய்	1880	1,251
	பெத்வார்க் கால்வாய்	1893	221
	கென் கால்வாய்	1909	140
	சார்தாக் கால்வாய்	1930	1,297
மேற்கு வங்காளம்	தாமோதர் கால்வாய்கள்	—	184
	மிட்நாப்பூர் கால்வாய்	—	74
ஹைதராபாத்	நிஜாம் சாகர் கால்வாய்	1940	275
மைசூர்	கிருஷ்ணராஜ சாகர் கால்வாய்கள்	1932	92

"நீர்ப்பாசனத் திட்டங்களை அதிகரிப்பதன் மூலமாகப் பஞ்சத்தின் கொடுமைகளை அதிக அளவிற்குக் குறைப்பதும், கட்டுப்படுத்துவதும் சாத்தியமாகும். இக்காலத்தில் இரயில்வேக் கட்டணங்கள் மலிவாக இருப்பதால் பாசன வசதிகளால் விளைவிக்கப்படும் பொருள்களை நாட்டில் மிகவும் அவசியமாகத் தேவைப்படுகின்ற பகுதிகளுக்கு எடுத்துச் செல்லமுடியும். இத்தகையக் காரணங்களால் நீர்ப்பாசன வேலைகளுக்காக எதிர்காலத்தில் நாம் மேற்கொள்ளவிருக்கும் செலவுகளில் இயன்ற அளவிற்கு உற்பத்தியைப் பெருக்கக்கூடியவைகளை, நாட்டின் எந்தப் பகுதியில் அமைந்து இருந்த போதிலும், உடனடியாக மேற்கொள்ளவேண்டும். இவைகள் அமைக்கப்படுகின்ற இடங்களின் பாதுகாப்பு அவசியத்தைக் கருதாமலும் மேற்கொள்ளலாம், பல வகையிலும் சிறப்பாகக் கருதப்படுகின்ற புதிய திட்டங்களைப்பின்வரும் காரணங்களுக்காகத் தள்ளிப்போடலாம். போதிய அளவு பணம் ஒதுக்க முடியாதபோது ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பாசனத் திட்டங்கள் இடையூறுகள் இன்றி நிறைவேற்றப்படுவதற்கும், மிகவும் அவசியமான பாதுகாப்பு (Protective) காரணங்களுக்காகவும், பாசன வேலைகளுக்குப் போதிய அளவு சாதனங்களும், அலுவலர்களும் கிடைக்காத போதும், பாசனத் திட்டத்தின் வெற்றி ஒரு இடத்தில் மக்களைக் குடியேற்றுவதைச் சார்ந்து இருக்கின்றது போன்ற பொதுவான காரணங்களுக்காகவும் தள்ளிப்போடலாம்.

1951-லிருந்து திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சி நமது நாட்டின் கொள்கையாக அமைந்துள்ளது. எனவே, நீர்ப்பாசன வளர்ச்சி ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது, இத்திட்டங்கள் பாசனத் தேவைகளையும், பாசனத்திற்கான வளத்தையும், அடிப்படையாகக் கொண்டவை. இவைகளினல் கூடுதலாகும் பலன்கள் காலப்போக்கில் அதிகரிக்கக் கூடிய வகையிலும் உடனடியாகப் பலன் அளிக்கக்கூடிய வகையிலும் அமைந்து இருக்கும். இதன் காரணமாகத் திட்டக் கமிஷன் சிறிய நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம், கொடுத்துள்ளது. பெரிய அளவில் உள்ள பல நோக்குத் திட்டங்களுக்கு இரண்டாவது முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. 1945-ல் உலகப் போர் முடிவு பெற்றபின் முதல் ஐந்து ஆண்டுத் திட்டம் ஏற்படும் வரையில் உள்ள ஆறு ஆண்டு காலத்தில் பல பெரிய நீர்ப் பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு கணிசமானத் தொகைகளும் செலவிடப்பட்டுள்ளன.

எனவே 1951-க்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களை விரைவில் முடிக்கவேண்டும் என்பதற்காகவும், அவை

களுக்காக இதுவரை செலவிட்ட தொகையின் உற்பத்தி பயனை விரைவில் அடைவதற்காகவும் அத்தகைய திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

திட்டக் கமிஷன் முதல் திட்டத்தைத்துவக்கியபோது நாட்டில் நீர்ப்பாசனத்தின் முன்னேற்றத்தை அறிவதற்கு வழிகாட்டியாக உள்ள அட்டவணை [முதல் ஐந்தாண்டு திட்டம் பக். 344] கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 6

ஐந்தாண்டு சராசரி	சாகுபடி செய்யப்படும் மொத்த பரப்பு	அரசாங்க நீர்ப் பாசன வசதி பெற்ற பரப்பு	நீர்ப்பாசன மொத்த பரப்பு
	(மில்லியன் ஏக்கர்கள்)		
1899 — 1900	*179·6*	*16·0*	*29·6*
1901 — 1905	*192·9*	*18·6*	*32·5*
1905 — 1910	*204·5*	*21·2*	*39·4*
1911 — 1915	*207·7*	*23·5*	*44·5*
1916 — 1920	*203·9*	*25.9*	*46·5*
1921 — 1925	*208·4*	*25·8*	*46·0*
1926 — 1930	*209·4*	*27·2*	*46·8*
1931 — 1935	*210·0*	*28·1*	*48·8*
1936 — 1940	*212·0*	*30·5*	*54·5*
1941 — 1945	*216·6*	*33·6*	*58·1*

பாசனத்திற்குப் பயன்படுத்தக் கூடிய நீர்வளத்தைக் கமிஷன் மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளது. (1) சாதாரணமாக ஆற்று ஓட்டத்திலிருந்து நீரை,சாகுபடிக்காகக் கால்வாய்களில் திருப்புதல் (2) வெள்ள நீரைத் தடுத்துத் தேக்கி வைத்தல் அல்லது மழைநீர் திரண்டுவரும் ஆறுகளைத் தடுத்துத்தேக்கி வைத்தல். (3) ஊற்று நீர் கிணறுகள் குழாய்க் கிணறுகள் முதலியவை.

1901-ல் நீர்ப்பாசனக் கமிஷன் இந்தியாவில் ஓடுகின்ற நீரோட்டத்தின் அளவைக் கணித்துள்ளது, இதன்படி *1170* மில்லியன் ஏக்கர் அடி தண்ணீர் என்று மொத்தத் தண்ணீரின் அளவு கூறப்படுகிறது. அண்மையில் நடைபெற்ற ஒரு சர்வே

மூலம் ஒவ்வொரு கொப்பரை நிலத்திலும் (Basin) ஓடுகின்ற நீரின் அளவு, வெப்பநிலே, மழைநீர் முதலியவைகளுடன் இயைபுபடுத்தி ஒரு சர்வே மேற்கொள்ளப்பட்டது. அதன்படி பாரத நிலத்தின் மேல் ஓடுகின்ற நீரின் அளவு 1356 மில்லியன் ஏக்கர் அடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு கிடைக்கின்ற மொத்த நீரில் 76மில்லியன் ஏக்கர் அடிதான் நீர்ப்பாசனத்திற்காகப்பயன்படுத்தப் படுகின்றது. முக்கியமான ஆறுகளின் கொப்பரை நிலங்களில் பயன்படுத்தப்படுகின்ற விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. (முதல் ஐந்தாண்டுத் திட்டம் பக். 336)

அட்டவணை 7

	ஆறுகள்	மதிப்பிடப்பட்டுள்ள வருடசராசரி நீர் ஓட்டம்:	தற்போது பயன்படுவதும், ஆலோசனையில் உள்ள திட்டங்களும்:
1.	சிந்து	170 மில்லியன் ஏக்கர் அடி (இந்தியாவிற்கும் பாக்கிஸ்தானிற்கும்)	இந்தியாவில் சுமார் 8 மில்லியன் ஏக்கர் அடி. பக்ரா-நங்கல் திட்டத்தின் மூலமாக மற்றும் 8 மில்லியன் ஏக்கர் அடி.
2.	கங்கை	400 மில்லியன் ஏக்கர் அடி.	தற்போது பயன்படும் அளவு மிகக் குறைவு. தாமோதரப் பள்ளத்தாக்கின் மூலமாக 2·7 மில்லியன் ஏக்கர் அடி பயன்படுத்தலாம்.
3.	பிரம்மபுத்திரா	300 மில்லியன் ஏக்கர் அடி.	தற்போது பயன்படும் அளவு மிகவும் குறைவானது.
4.	கோதாவரி	84 மில்லியன் ஏக்கர் அடி.	சுமார் 14 விழுக்காடு இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ளது.
5.	மகாநதி	74 மில்லியன் ஏக்கர் அடி.	ஹிராக்குட் திட்டத்தின் மூலமாக 11 மில்லியன் ஏக்கர் அடி நீர் பயன்படுத்தப்படும்.
6.	கிருஷ்ணு	50 மில்லியன் ஏக்கர் அடி.	சுமார் 18 விழுக்காடு பயன்படுகிறது துங்கபத்திரை திட்டத்தின் மூலமாக 6 மில்லியன் ஏக்கர் அடி பயன்படக்கூடும்.
7.	காவேரி	12 மில்லியன் ஏக்கர் அடி.	60 விழுக்காட்டிற்கும் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.
8.	நர்மதை	32 மில்லியன் ஏக்கர் அடி	கக்ரா பாராத்திட்டம்-தபதி ஆற்றில் உள்ளது. இது ஒரு முதல் பெரிய திட்டமாக இருக்கும்.
9.	தபதி	17 மில்லியன் ஏக்கர் அடி	

1376-மில்லியன் ஏக்கர் அடித் தண்ணீரில் இதுவரை பயன் படுத்தியது போக எஞ்சியுள்ள நீரையும் பயன்படுத்துவதுதான் பல வகையான திட்டங்களின் நோக்கமாக உள்ளது. நீர்ப்பாசன கமிஷனின் அறிக்கை வெளிவந்து 60 ஆண்டுகள் ஆனபோதிலும் அணைகள் கட்டுவதிலும், நீர்ப்பாசனப் பொறியியல் நுட்பத்தில் முன்னேற்றம் ஏற்பட்டபோதிலும் 500 மில்லியன் ஏக்கர் அடி நீரைத்தான், அதாவது மொத்தம் உள்ள நீரில் மூன்றில் ஒரு பங்கிற்கும் சற்று அதிகமான அளவுதான் அதிகபட்சம் பயன்படுத்த முடிகிறது.

முதல் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பெரிய பாசனத் திட்டங்கள் அதாவது முதல் திட்டத்திற்கு முன்பே மேற்கொள்ளப் பட்டு, ஆனால் முடிவு பெறாத திட்டங்களையும் உள்ளடக்கியவை களைக் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 8

	திட்டம்	முடிவு பெற்றதும் பாசன வசதியைப்பெற்ற பரப்பு [— 000 ஏக்கர்களில்]
1.	பக்ரா—நங்கல்	3,604 (1954-ல்)
2.	ஹரிக்கா	—
2.	தாமோதர் பள்ளத்தாக்கு	1,141
4.	ஹிராகுட்	1,785
5.	கோஸி (முதல்நிலை)	2,620
6.	கொய்னா	—
7.	கிருஷ்ணா	—
8.	சாம்பல் (முதல்நிலை)	1,200
9.	ரைஹண்ட்	—

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சிறு பாசனங்களினால் பயன் அடைந்த பகுதிகளைப் பற்றிய விவரம் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. (முதல் ஐந்தாண்டுத்திட்டம் பக். 221)

அட்டவணை 9

	பாசன வகை	பாசன வசதி பெற்ற நிலப்பரப்பு [—000 ஏக்கர்களில்]
1.	புதிய கிணறுகள்	1,103
2.	பழைய கிணறுகள்	544
3.	குழாய்க் கிணறுகள்	660·1
4.	ஏரிகள்	769.6
5.	ஆறுகளிலிருந்து நீர் இறைத்தல்	311·8
6.	கிணறுகளிலிருந்து நீர் இறைத்தல்	441·2
7.	அணைகள், கால்வாய்கள் முதலியன	4,446·8

கால்வாய்களுக்குக் கரை அமைத்தல், அவைகளின் பிரிவுகள், கிளைகள் முதலியவைகளில் பூமியால் கவரப்படுகின்ற நீரின் அளவைக் குறைக்கும் வகையிலும் நிலத்திலும் நீர் சேதமுறுமல் இருக்கும் வகையில் நீர் பிரித்து அளிக்கப்படுவதற்கும் திட்டத்தில் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணை 2-வது 5 ஆண்டுத் திட்டத்தில் உள்ளது. (பக். 323) இந்தியாவில் பல மாநிலங்கள் முதல் திட்ட இறுதியிலும் மற்றும் நீர்ப் பாசனத் திட்டங்கள் முழுவதும் முடிவுபெற்ற பின்னரும் பலன் அடையும் நிலப் பரப்புக்கள் தரப்பட்டுள்ளன.

அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணையில் முதல் திட்டத்தில் முடிவு பெற்ற பெரிய நீர்ப்பாசன வேலைகள் அல்லது 2-வது திட்டத்தின் முதல் ஆண்டில் முடிவுபெறக் கூடியவை தரப்பட்டுள்ளன. (2-வது 5 ஆண்டு திட்டம் பக். 358)

அட்டவணை 10

	மாநிலம்	1956-ல் உள்ள நீர்ப்பாசனம்	முழுவதும் பூர்த்தி யடைந்த பின்னர் நீர்ப்பாசனம்
		(ஆயிரம் ஏக்கர்களில்)	
1.	ஆந்திரா	89	1,960
2.	அஸ்ஸாம்	152	234
3.	பீகார்	689	2,576
4.	பம்பாய்	309	1,505
5.	மத்தியப் பிரதேசம்	10	244
6.	தமிழ்நாடு	240	396
7.	ஒரிஸ்ஸா	90	1,875
8.	பஞ்சாப்	1,520	3,280
9.	உத்தரப் பிரதேசம்	1,674	1,920
10.	மேற்கு வங்காளம்	639	2,144
11.	ஹைதராபாத்	72	1,517
12.	மத்தியப் பிரதேசம்	120	706
13.	மைசூர்	39	384
14.	பெப்சு	204	1,011
15.	இராஜஸ்தான்	182	1,758
16.	சௌராஷ்டிரா	116	270
17.	திருவாங்கூர், கொச்சின்	38	138
18.	ஜம்மு, காஷ்மீர்	35	170
19.	ஆஜ்மீர்	1	10
20.	இமயமலைப் பிரதேசம்	24	100
21.	கட்ச்	24	48
22.	விந்தியப் பிரதேசம்	—	37

அட்டவணை 11

மாநிலம்*	முடிவுபெற்ற பாசன வேலைகளின் பெயர்	ஆண்டு	நீர்ப்பாசனப் பரப்பு 1000 ஏக்கர்கள்)
	ரொம்பெரு வடிகால்	1956	10
ஆந்திரா	துங்கபத்திரா	1956	167
	ரொல்லாபாத்	1956	8
பீகார்	திரிவேணி வாய்க்கால் விரிவு	1957	62
பம்பாய்	கங்காப்பூர் நீர்த் தேக்கம்	1957	45
	காட்பிரபா இடதுகரைக் கால்வாய்	1957	138
	கக்ரா பாராக் கால்வாய்கள்	1957	562
தமிழ்நாடு	கிழ் பவானி	1955	207
	மாலம் புழா	1957	46
	அரணியாறு நீர்த்தேக்கம்	1957	3
	வாளையாறு நீர்த்தேக்கம்	1957	7
பஞ்சாப்	நங்கல்	1954	—
உத்தரப்பிரதேசம்	சாரதாக் கால்வாய் விரிவு	1955	176
	சாரதாக் கால்வாய் நீர்த்தேக்கம்(முதல்நிலை)	1957	172
	மாடா தில்லா (முதல்நிலை)	1956	265
மேற்கு வங்காளம்	மயூராட்சி	1958	600
ஹைதராபாத்	கோதாவரி (முதல்நிலை)	1957	67
மைசூர்	துங்கா அணைக்கட்டு	1957	22
	நுகு	1957	20
	துங்கபத்திரா	1956	93
இராஜஸ்தானம்	ஜாவாய்த் திட்டம்	1956	45
	பார்பத்தித் திட்டம்	1956	15
	மேஜாத் திட்டம்	1956	43
திருவாங்கூர் கொச்சின்	குட்ட நாடு	1956	21
	பீச்சி	1956	46
	பேரிஞ்சானி	1955	6
—	நெய்யாறு	1956	31
ஜம்மு, காஷ்மீர்	சிந்துப் பள்ளத்தாக்கு	1956	18
சௌராஷ்டிரா	ரன்கோலா	1952	—
	பிராமணி	1956	27
	மோஜ்	1954	15
	அஜி	1955	6
	மாச்சூ	1956	22

* அட்டவணை ஐந்தினைப் பூர்த்தி செய்யும் வகையில் இது உள்ளது.

8. விடுதலைக்குப் பின்னர் நிலச் சீர்திருத்தங்கள்

ஏ. எம். குஸ்ரோ (A. M. Khusro)

பிரிட்டிஷார் இந்தியாவில் ஏற்படுத்த விரும்பிய முக்கிய நில உரிமை முறைகள் இந்த நூற்றாண்டின் துவக்கத்திலேயே நிலை பெற்றுவிட்டன. அடுத்துள்ள 50 ஆண்டுகளில் இதன் சிறப்புக் கூறுகள் மேலும் தெளிவாயின. விடுதலை பெறுகின்றவரை இந்திய வேளாண்மை அடிப்படையின் அமைப்புச் சூழலில் எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை. நிலவுரிமை முறைகளை இரு முக்கியக் கூறுகளாகப் பிரிக்கலாம்—ஜமீன்தாரி நிலவுரிமை என்றும், இரயத்து வாரி நிலவுரிமை என்றும் இருவகைப்படும். இதன் ஒவ்வொரு வகையிலும் பல வேறுபாடுகள் இருந்தன. இவை நிலத்தில் பல வகையான உரிமைகளைப்பெற்றுள்ள அரசாங்கம், உடைமையாளர்கள், சாகுபடியாளர்கள் முதலியவர்களுக்கும், நிலத்திற்கும் இடையில் உள்ள தொடர்புகளை விவரித்துக் கூறுகின்றன. இவர்களுக்கு இடையே உள்ள பரஸ்பர உரிமைகளையும் கடமைகளையும், இவை நிர்ணயிக்கின்றன. மற்றும், மொத்த உற்பத்தியில் ஒவ்வொருவருக்கும் உள்ள பங்கையும், உபரியாக உள்ள உற்பத்தியின் அளவையும், அதன் உபயோகத்தையும் முடிவு செய்கின்றன. இது இந்திய வேளாண்மைக்கு ஒரு பொருந்தாத உரையாக உள்ளது. இவ்வுரையினுள் பல காலமாக வேளாண்மை இயங்கி வருகிறது.

ஜமீன்தாரி முறையில் சாகுபடியில் ஈடுபடாதவர்களுக்கு நிலத்தின் சொத்து உரிமை அளிக்கப்பட்டது. இவர்கள் அந்த வட்டா

* 1857 முதல் 1947 வரையிலான நிலவுரிமை வரலாற்றை இக் கட்டுரையில் சேர்க்க முடியாமைக்கு வருந்துகிறோம். இக் கட்டுரை ஆசிரியர் வெளிநாட்டுப பயணத்தை மேற்கொண்டமையால் இது பூர்த்தி பெறவில்லை. இருந்த போதிலும், இந்தப் பகுதியை நாம் இரண்டாவது பதிப்பில் கட்டாயம் சேர்க்க முடியும் என்று நம்புகிறோம். இப் பகுதியின் சுருக்கம் தொகுப்பாசிரியர் எழுதியுள்ள முன்னுரையில் கொடுக்கப்பட்டுள்ளது.

ரத்தில் செல்வாக்கு உடையவர்கள். எனவே, சாகுபடி செய்கின்ற குடியானவர்களிடமிருந்து வரி வசூலிக்கின்ற ஆற்றல் மிக்கவர்கள். அந்நிய அரசாங்கம், போதிய அளவு நாட்டில் வேர் ஊன்ருத நிலையில் குடியானவர்களுடன் நேரிடையாகத் தொடர்பு கொள்ள முடியவில்லை. அப்போதிருந்த சூழ்நிலையில் இது அவசியமாக இருந்தது. ஜமீன்தாரி முறையில் மூன்று வகையான உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அரசாங்கம், நில உடைமையாளர்கள், வாரச்சாகுபடியாளர்கள் (tenant cultivators) முதலிய முத்தரத்தவர்களுக்கும் நிலத்தில் உரிமை இருந்தது. இவர்கள் இருவகையான கட்டணங்களைச் செலுத்துவார்கள். வாரச் சாகுபடியாளர்கள் நிலக்கிழார்களுக்குச் செலுத்தும் குத்தகையும், மற்றும் நிலக்கிழார்கள் அரசாங்கத்திற்குச் செலுத்தும் நிலவரியும் ஆகும். வங்காளமும், ஐக்கிய மாகாணமும், (தற்சமயம் உத்தரப் பிரதேசம்) ஜமீன்தாரி முறைக்கு எடுத்துக்காட்டாக விளங்கின. சாசுவத நில வரித் திட்டம் அமுலாக்கப்பட்ட பகுதிகளில், அரசாங்கம் நில வரியை அதிகரிக்க முடியாது. இதனல் நிலங்களின் விளைச்சல் உபரியாக இருந்த காலத்திலும் அரசாங்கம் அதனைப் பெற முடியவில்லை. இத்தகைய உபரியான விளைச்சலினல் ஏற்படும் வருவாயும், [அரசாங்கத்தின்] ஆக்க வேலைகளுக்குப் பயன்படுவதில்லை. இதற்கு நில உரிமை முறைதான் முக்கியக் காரணம் ஆகும். அரசாங்கத்தின் நிலவரி நிரந்தரமாக நிர்ணயிக்கப்பட்டதைப் போல குத்தகை ஒரே நிலையில், மாருது இருப்பதற்கு எவ்விதமான முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே நிலக்கிழார்கள் அடிக்கடி குத்தகையை உயர்த்திக்கொண்டே வந்தார்கள். இதனுல் சாகுபடியாளர்களிடையே இருக்க வேண்டிய உபரியான வருவாய் இடைநிலையாளர்களுக்கு மாற்றப்பட்டது.

இத்தகைய இடைநிலையாளர்கள் ஆதிக்கம்பெற்ற நிலஉரிமை முறையில் ‘ஜாகிர்தாரி’ (Jagirdari) முறை குறிப்பிடத்தக்கது. இராஜஸ்தானத்திலும், ஹைதராபாத்திலும், பரந்த நிலப்பரப்புக்கள் இந்த முறையின் கீழ் இருந்தன. அக்காலத்திய அரசர்கள், இராணுவ, நிர்வாகத் துறைகளில், சிறப்பாகப் பணிபாற்றிய அரசவை உறுப்பினர்கள், பெருங் குடிமக்கள், முதலியவர்களுக்கு நிலத்தை மான்யமாக வழங்கி வந்தனர். இவ்வாறு நிலம் பெற்றவர்கள், ‘ஜாகிர்தார்’ என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் நிலக்கிழார்கள் அல்லர். இவர்கள் நிர்வாகம் செய்பவர்கள். நிழக்கிழார்களிடமிருந்து அதிகமான நிலவரியைப் பெற்று வந்தனர். பெரும்பாலான நிலக்கிழார்கள் சொந்தமாகச் சாகுபடி செய்தார்கள். சிலர் வாரக் குடியானவர்களைக் கொண்டு சாகுபடி செய்தார்கள். இவ்வாருக நான்கு படிகளைக் கொண்ட உரிமை முறை நாட்டில் நிலவி வரலாயிற்று. முதலாவதாக, ‘ஜாகிர்தார்’களின்

உண்மையான பற்றிற்காகவும், அவர்கள் செய்துள்ள பணிக்காக வும, நில நிர்வாக உரிமையை அரசாங்கம் அவர்களுக்கு மான்ய மாக அளித்துள்ளது. இரண்டாவதாக, 'ஜாகிர்தார்' நில உரிமையை வழங்கவும், நிலவரியை வசூலிக்கவும் அதிகாரம் பெற்று இருந்தார்கள். மூன்றாவதாக, நிலக்கிழார்கள் நிலத்தை குத்த கைக்கு விடும் உரிமையையும், வாரம் வசூலிக்கும் உரிமையையும் பெற்று இருந்தார்கள். இறுதியாக, சாகுபடியாளர்கள் குத்தகை யைச் செலுத்தியதால் நிலத்தைச் சாகுபடி செய்யும் உரிமை பெற்று இருந்தார்கள். இந்த முறையில் குறைந்த பட்சம் இரு வகைக் கட்டணங்கள் செலுத்தப்படுகின்றன. அவை குத்தகை யும், நிலவரியும் ஆகும். இவை தவிர மற்றும், சில படைமானியக் கட்டணங்களும் உள்ளன. அவையாவன : 'நாஸரானு' (Nazarana) 'பெஷ்காஷ்' (Peshkash) முதலியன.

இரயத்துவாரி முறை பிற்காலத்தில், பிரிட்டிஷார் ஆட்சி உச்சக் கட்டத்தில் இருக்கும்போது ஏற்பட்டது. அதாவது இடை நிலையாளர்களின் குறுக்கீடு இல்லாமல், குடியானவர்களிடம் அர சாங்கம் நேரிடையாகத் தொடர்பு கொண்ட காலத்தில் இம் முறை ஏற்படலாயிற்று. பம்பாயிலும், ஹைதராபாத்திலும், இது சிறப்பாக வழக்கில் இருந்தது. நிலத்தைச் சாகுபடி செய்பவர்கள் நில உடைமையையும், சாகுபடி உரிமையையும் பெற்று இருந்தார் கள். அதாவது அரசாங்கத்திற்கும், சாகுபடியாளர்களுக்கும் இடையே நிலச்சுவான்தாரர்களோ, இடைநிலையாளர்களோ இருக்கவில்லை. இதனால் நிலத்தைக் குத்தகைக்கு விடும் பழக்கமும் நீங்கிவிடும் என்று எதிர்பார்த்தனர். மற்றும் உபரியான விளைச்சல், குடியானவர்கள் பொறுப்பில் விடப்படும் என்றும், அதில் ஒருபகுதி நிலவரியின் மூலமாக அரசாங்கத்திற்கு மாற்றக்கூடும் என்றும், எதிர்பார்த்தனர். தேற்ற அடிப்படையில் தருகின்றபோது, இரயத் துவாரி முறையில் நிலத்தில் உரிமை உடையவர்கள் இருசாரார் ஆவார். அதாவது அரசாங்கமும், நிலத்தை சாகுபடி செய்கின்ற நிலக்கிழாரும் ஆவர். இம்முறையில் நிலவரி மட்டும்தான் ஒரே கட்டணமாக இருக்கும். இதில் உள்ள குறைகள் காலப் போக்கில் வெளிப்பட்டன. அதாவது மூன்று படிகளில் அமைந்த ஜமீன்தாரி முறைமைக்கும், இம்முறைமைக்கும் சிறிதுகூட வேறுபாடு இல்லை.

இலக்கணப்படி, உடைமை என்ற சொல் பல்வகை உரிமை களைக் குறிக்கின்றது. உடைமையாளர் தன்னுடைய பொருளை விற்கவும், அடமானம் வைக்கவும், குத்தகைக்கு விடவும், சொத்து உரிமையை மாற்றவும், உரிமை பெற்று இருப்பார். ஆனால் குறை வளர்ச்சி பெற்ற வேளாண்மை சூழ்நிலையில், சுரண்டல் தன்மை உடைய அரசாங்கத்தின் நிலவரிக் கோரிக்கை குடியானவர்களைக்

கடனாளிகளாகஆக்கியது. இதன் காரணமாக, இரயத்துவாரி பகுதி களிலும் கூட, சாகுபடி செய்கின்றக் கிழார்கள் நிலத்தைப் பரா தீனம் செய்யவும், விற்கவும் செய்தனர். இதற்குக் காரணமாக அமைந்த பல சம்பவங்கள், 19-வது, 20-வது, நூற்றுண்டுகளில் நிகழலாயின. அவைகளாவன: மக்கள் தொகை அதிகரித்தது, துறைமுகங்கள், இரயில்வேக்கள் மற்றும் இதர போக்குவரத்து சாதனங்கள் முதலியன வளர்ச்சி அடைந்தன. பின் நிலங்கள் ஏற்படலாயின. நிலத்தின் மதிப்பு தொடர்ந்து அதிகரிக்கலாயிற்று. இதனுல் நிலத்தை வருவாய் நல்கக் கூடிய ஒரு சொத்தாகக் கருதி னர். எனவே நிலத்தை விலைக்கு வாங்குவதற்குத் தயாராக இருந் தவர்களில் பெரும்பாலானவர்கள் பரம்பரையாக நிலச்சுவான்தார் களாக இருந்தவர்கள், மற்றும் வர்த்தகர்கள், பணவணிகர்கள் முதலியோர் இவர்கள் சாகுபடியில் சிறிதும் அக்கறையில்லாதவர் கள். குத்தகையை வருவாயாகக் கருதியமையால் நிலத்தை வாங்க வேண்டும் என்று எண்ணினர். இந்தியா விடுதலை பெற்ற சமயத் தில், இரயத்துவாரி முறையில் சாகுபடி செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பில் குறைந்தது 5-ல் ஒரு பகுதி நிலம் வெளிப்படையாகக் குத்தகைக்கு விடப்பட்டு இருந்தது. ஆனுல் பெரும்பகுதியான நிலப்பரப்பு வாரச் சாகுபடியின் கீழ் உள்ளது. இதற்கும், குத்தகை முறைக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

இவ்வாறுக இரு முக்கிய நில உரிமை முறைகளுக்கும் இடையே ஒருமைத்தன்மை அதிகமாகக் காணப்பட்டது. அத்துடன், நிலவரி விகிதமும் அதிகமாகவே இருந்தது. அதாவது ஒரு ஏக்கர் நிலத் தின் உற்பத்தி மதிப்பை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது நிலவரி விகிதமும் அதிகமாக உள்ளது என்பது தெரியும். இந்த நிலை இரண்டாவது உலகப்போர் தொடங்கும்வரை நீடித் தது. இத்தகைய சுரண்டல் வரி விகிதத்தை, விடுதலை இயக்கத் தின் தேசீயக் கருத்தினர் தீவிரமாகக் கண்டனம் செய்தனர். அதிகப்படியான நிலவரி காரணமாக, சொந்தச் சாகுபடி செய்ப வர்களிடம் மறு முதலீட்டுக்குத் தேவையான உபரி வருவாய் மிஞ்சவில்லை. மக்கள் நெரிசல் காரணமாக, நிலத்தின் தேவையும், குத்தகையும் அதிகரித்தன. இதனுல் சாகுபடியாளர்களிடம் இருக்க வேண்டிய உபரி நிலக்கிழார்களுக்கு மாற்றப்பட்டது. வேளாண்மை உற்பத்தித் திறனை அதிகரிக்கக் கூடிய முதலீடு அத்தியாவசியமாக இருந்த போதிலும், அதனை அதிகரிக்க முடியவில்லை. அரசாங்கம் இவ்வகையில் செயலற்று இருந்தது. தலத்தில் இல்லாத கிழார்கள் உபரியான வருவாயைப் பெற்று இருந்தனர். இவர்கள் நுகர்வைப் பெரிதும் விரும்பினர். வேளாண்மைக்கு அவசியமான முதலீட்டை இவர்கள் மேற்கொள்ளவில்லை. குடிவாரச் சாகுபடியாளர்களிடம் போதிய அளவு வருவாய் இல்லாத காரணத்தினுல் முதலீடு செய்ய

முடியாதவர்களாக இருந்தனர். அதாவது முதலீட்டை மேற்கொள்ள இயலாத சாகுபடியாளர்கள், முதலீட்டைச் செய்ய விரும்பாத நிலக்கிழார்கள், செயலற்ற அரசாங்கம். முதலியன வேளாண்மையின் உற்பத்தித் திறனை அதிகரிக்க வொண்ணுமல் செய்தன. நில உரிமை முறை நிலையற்றதாக இருந்தது. சாகுபடியாளர்கள், தங்களை எப்போது நிலத்திலிருந்து வெளியேற்றி விடுவார்களோ என அஞ்சினர். நிலத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தியதாலும், நிரந்தர முன்னேற்றத்தை ஏற்படுத்தக்கூடிய முதலீட்டை மேற்கொள்ளாமையாலும், சாகுபடியாளர்கள் என்றென்றும் வறுமையில் அவதிப்பட்டனர். மூலதன முதலீட்டைச் சார்ந்து நுட்ப மாற்றங்கள் அமைகின்றன. இந்திய வேளாண்மையில்—1947-க்கு முன்னர் நுட்ப மாற்றங்கள் ஏற்படாமல் இருந்ததற்கு பலகாரணங்கள் இருந்தபோதிலும் மந்தமான முதலீட்டுச் செயல்களை முக்கியக் காரணமாகக் குறிப்பிடலாம். இதற்கும் நிலவுரிமையில் உள்ள குறைபாடுகள்தான் காரணம். ஒரு ஏக்கர் நிலத்தின் உற்பத்தித் திறனை அடிப்படையாகக் கொண்டு, உலக நாடுகளுடன் இந்தியாவை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்தியாவின் உற்பத்தித் திறன் மிகவும் குறைவாக அடிமட்டத்தில் இருப்பதைக் காணலாம். இதில் வியப்பு அடைவதற்கு ஒன்றும் இல்லை.

1947-க்கு முன்னர் இந்தியாவில், இடைநிலையாளர்கள் பிரச்சினையைத் தவிர இன்னும் பல பிரச்சினைகள் பரவலாகவும், பொதுவாகவும் காணப்பட்டன. எனவே இடைநிலையாளர்கள் பிரச்சினைதான்—அதாவது நில உடைமையும், நில சாகுபடியும், வேறுபட்டு இருப்பதால் தோன்றும் பிரச்சினைதான்—மிகவும் முக்கியமானதாகக் கருதுவது தவறு. உண்மையில் பெரும்பான்மையான நிலப் பரப்புக்கள் சொந்தச் சாகுபடியில் இருந்தன. இவற்றின் பிரச்சினைகள் நில உரிமை முறையில் உள்ள சிக்கல்களினுல் தோன்றியவை அல்ல. தேசிய மாதிரி சர்வே (National Sample Survey)யின் 8-வது சுற்றறிக்கையில் பின்வரும் விவரங்கள் தரப்பட்டுள்ளன[1] பரம்பரையாகவும், நிரந்தரமாகவும், வாரக் குடியானவன் சாகுபடி செய்யும் நிலப் பகுதிகளைச் சொந்த நிலமாகக் கருதுவோமேயானுல், கிராமத்தில் உள்ள மொத்த நிலப்பரப்பில் சுமார் 14 விழுக்காடு மட்டுமே குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. தேசிய மாதிரி சர்வேயில் வேளாண்மைக்காகப் பயன்படுத்தப்படாத நில உடைமைகளும், (அதாவது வீட்டு, மனை முதலியன) சேர்க்கப்பட்டுள்ளன. வேளாண்மை நிலங்களை நில உடைமைகளாக எடுத்துக் கொள்ளப்பட்டக் கணிப்பின் அடிப்படையில்தான் நாம் வாதிக்க

1. N. S. S., **Eighth Round, Tenth Report,** Tables 5·2 and 5-4 pp. 18-1 and 21-22.

முடியும். சில மாநிலங்களில் நில உடைமைகள் பற்றிய முழு புள்ளி விவரங்களும்சேகரிக்கப்பட்டுள்ளன.[2] நிரந்தரமான வாரக்குடிகளை உடைமையாளர்களாகக் கருதுவோமேயானால், குத்தகைக்கு விடப் பட்ட நிலத்தின் பரப்பு சொந்த நிலப் பகுதிகளின் மொத்தப் பரப்பில் ·11 விழுக்காடாக உள்ளது. தேசீய மாதிரி சர்வேயும், மற்றும் பெரும்பாலான நிலக் கணிப்புக்களும் 1953—54-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டவை. அந்த ஆண்டிற்கு முன்ன தாகவே நிலச் சீர்த்திருத்த முயற்சிகளில் ஓரளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டது. எனவே 1947-ல் குத்தகைக்கு விடப்பட்ட நிலப் பரப்பு மொத்தத்தில் 11 விழுக்காட்டிற்கும் அதிகமாக இருந்து இருக்கவேண்டும். சொந்தச் சாகுபடியில் இருப்பதாகக் கூறப் படும் நிலத்திலும் ஒரு பகுதி வாரத்திற்கு விடப்பட்டு இருக்கலாம். [இது குத்தகைச் சாகுபடியிலிருந்து எவ்வகையிலும் மாறுபட்டது அல்ல.] இத்தகைய வாரச் சாகுபடி நிலத்தையும் எடுத்துக் கொள்வோமானால் குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தின் விகிதம் குறைந்தபட்சம் 20 விழுக்காடாக இருக்கும். சொந்தச் சாகுபடி யில் உள்ள மொத்த நிலப்பரப்பில் 10 முதல் 20 விழுக்காடு வரையி லான நிலப் பரப்பு, வாரச் சாகுபடிக்கு விடப்பட்டுள்ளது.[3]

இந்திய வேளாண்மையின் வளர்ச்சி நில உரிமை முறையினால் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளாலும், ஊக்கத்தடைகளாலும் மட்டும் இன்றி மற்றும் பல காரணிகளாலும் தடைபட்டுள்ளது. அவைகளில் முக்கியமானது மக்கள் தொகை நெரிசல் ஆகும். இதனால் நிலம்—ஆள் விகிதம் பாதிக்கப்பட்டது. நில உடைமை களின் சராசாரி அளவு சுமார் 8 ஏக்கராகக் குறைந்தது. பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ள உடைமைகளின் அளவில் ஏற்றத் தாழ்வுகள் இருந்தன. நிலம் சிதறுண்டுள்ள நிலைமை அச்சுறுத்தக் கூடிய அள விற்கு இருந்தது. முதல் விவசாயத் தொழிலாளர் விசாரணைக் குழு, [Agricultural Labour Enquiry] *(1951)* சில அரிய விவரங் களைக் கொடுத்துள்ளது. விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மொத்தக் குடும்பங்களில் 5-ல் ஒரு பகுதியினர், நிலம் இல்லாத உழைப்பாளி கள். 2½ ஏக்கருக்கும் குறைவான அளவு நிலத்தில் சொந்த சாகுபடி செய்யும் குடும்பங்கள் மொத்தத்தில் சுமார் 38 விழுக்காடாகும். இவ்வகையில் சாகுபடி செய்கின்ற நிலப் பரப்பு மொத்தத்தில் 6 விழுக்காடாகும். 5 ஏக்கருக்கும் குறைவான அளவு நிலத்தைப்

2 **Third Five Year Plan,** Government of **India, Planning** Commission 1961, பக். 24—249. இந்த விவரங்கள் மற்றொரு இடத்தில் விவரமான ஒரு கருத்தாய் விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. பார்க்கவும், Khusro A. M. "An Analysis, of Agricultural Land in India by Size of holdings and tenure." Research Paper at the Institute of Economic Growth (mimeo-graphed).

3 **Khusro A. M.,** முன் கூறிய விவரப்படி.

பெற்றுள்ள குடும்பங்கள், சாகுபடி செய்கின்ற மொத்தக் குடும்பங்களில் 59 விழுக்காடாக உள்ளது. இவ்வாறுள்ள நிலப்பரப்பு சாகுபடி செய்யப்படும் மொத்த நிலப்பரப்பில் 16 விழுக்காடாகும், நிலம் அதிக அளவிற்குச் சிதறுண்டு கிடப்பதை இந்திய அரசாங்கம் மேற்கொண்ட பண்ணை நிர்வாக ஆய்வு (Farm Management Studies)களிலிருந்து தெரிய வருகிறது. உத்தரப் பிரதேசத்திலும், மேற்கு வங்காளத்திலும் 2½ ஏக்கருக்கும் குறைவான அளவுடைய பண்ணைகள் சராசரியாக 3·6 துண்டுகளாகச்சிதறுண்டு உள்ளன என்றும், 25 முதல் 100 ஏக்கர் வரை உள்ள பெரிய பண்ணைகள் உத்தரப் பிரதேசத்தில் 23 துண்டுகளாகவும், மேற்கு வங்காளத்தில் 17 துண்டுகளாகவும் சிதறுண்டுள்ளன. இவை யாவும் வளர்ந்து செல்லும் வேலையின்மையை எடுத்துக் காட்டுகின்றன. பண்ணைகள் மிகச் சிறிய அளவினதாக இருக்கின்றமையால் உள்ளிடும் பொருள்கள் (Input) முழுவதையும் திறமையாகப் பயன்படுத்த முடியவில்லை. இதனால் மனித சக்தியும், எருதுகளின் உழைப்பும் விரயமாயின. இவற்றினின்றும் பெறக் கூடிய வருவாயைக் கொண்டு ஒரு குடும்பத்தையும், ஒரு ஜோடி எருதுகளையும் சாதாரணமாக வைத்துக் காப்பதற்குக்கூட இயலவில்லை. இந்நிலையில் அவர்கள் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான உபரியை உற்பத்தி செய்வது முற்றிலும் சாத்தியமில்லாத ஒன்றாகும் அமைப்பு முறையில் உள்ள இத்தகைய குறைகளை நீக்குவதற்கு மறு பகிர்வு மூலம், சாகுபடி செய்கின்ற நிலம் அனைத்தையும் தொகுத்து நில உடைமைகளின் அளவை அதிகப்படுத்துதல் அவசியம்.

இந்திய வேளாண்மை இத்தகையப் பிரத்தியேக இயல்புகளைப் பெற்று இருக்கின்றன. விடுதலைக்குப் பின்னர், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தவும், சமூக நீதியை நிலைநிறுத்தவும், திட்டக் கமிஷனும், மத்திய, மாநில அரசாங்கங்களும் பாடுபட்டன. நிலச் சீர்திருத்தம் செய்வதற்கும், அமைப்பு முறை மாற்றங்களை ஏற்படுத்தவும், முழுமையான செயல் திட்டத்தை வகுத்தனர். இந்திய நிலச் சீர்திருத்தங்கள் மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளன. சில பகுதிகளிய் இத்தகைய சீர்திருத்தங்கள் குடியானவர்களின் கிளர்ச்சியைத் தொடர்ந்து ஏற்படச் செய்தன. இவை நாடு முழுவதுமாக அல்லாமல், அங்கு ஒன்றும், இங்கு ஒன்றுமாகப் பரவலாக இருந்தன. இது ஒரு தேசீயப் போராட்டமாகவோ இயக்கமாகவோ இருந்ததில்லை, 1950 முதல் 1959 வரையில் மேற்கொண்ட நிலச்சீர்திருத்தங்கள். நன்றாகச் சிந்தித்து உருவாக்கப்பட்டனவாகும். இந்த திட்டம் பல கூறுகளை உடையது. நாட்டின் நிர்வாகத்தினர் குடியானவர்களுக்கு அளித்துள்ள ஒரு பரிசாக இதைக் கருதவேண்டும். இத்திட்டத்தின் முக்கியப் பகுதிகளா

வன. (1) இடைநிலையாளர்கள் நீக்கப்படுதல். (2) நிலையான நில உரிமைகளை ஏற்படுத்துவதற்கும், குத்தகையைக் குறைக்கவும், சாகுபடியாளர்களுக்குச் சொத்துரிமையை வழங்கவும் குடி வாரச் சீர்திருத்தங்கள்ஏற்படலாயின. (3) நில உடைமைகளுக்கு உச்ச வரம்பு ஏற்பட்டது. எதிர்காலத்தில் நிலக்குவிப்பு ஏற்படாமல் தடுக்கவும், தற்போதுள்ள மிகப் பெரிய உடைமைகளைப் பிரிக்கவும் நில உச்சவரம்பு தேவையாக இருந்தது. மற்றும் குடிப்பெயர்ந்த வாரக் குடியினர்களையும், நிலமற்ற உழைப்பாளிகளையும் குடி யமைக்கவும், சிக்கனமற்ற உடைமையாளர்களின் சீரமைப்பிற்கும் நில உச்சவரம்பு அவசியமாயிற்று.

2. இடை நிலையாளர்களின் நீக்கம்:

சாகுபடியாளர்களுக்கும், அரசாங்கத்திற்கும் நேரிடையானத் தொடர்பை ஏற்படுத்துவதற்காக இடை நிலையாளர்களை நீக்க வேண்டும். அவசியம் இவர்கள்.—ஜமீன்தார்கள், ஜாகீர்தார்கள் என இருவகைப்படுவார்கள். ஜமீன்தார்களை நிலக்கிழார்களாகக் கருதலாம். நிலவரியை வசூலிப்பதைத் தவிர அவர்களுக்கு நிர் வாகப் பொறுப்பு ஏதும் இல்லை. வசூலித்த பணத்தின் ஒரு பகுதியை—உண்மையில் ஒரு குறிப்பிட்ட தொகையை—அரசாங் கத்திற்கு வரியாகச் செலுத்துவார்கள். எஞ்சியுள்ள தொகையைக் குத்தகையாக (வருவாயாக)க் கருதி தாங்களே வைத்துக் கொள்ளுவார்கள். மற்றொரு வகையான இடைநிலையாளர்களை 'ஜாகீர்தார்' என்று அழைப்பார்கள். இவர்கள் நிலத்தின் உடைமை யாளர் அல்லர். இவருக்கு அளிக்கப்பட்ட நிலப்பகுதிகளின் நிர்வாகி ஆவர். ஜாகீர்தார்கள் வரிவசூலிக்கும் அதிகாரத்தையும், நீதி, நிர்வாகப் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இவர்கள் பல இடங்களில் தங்களுடைய சொந்த 'தாசில்தார்'கள், 'முன்சீப்'கள், மற்றும் ஏனைய அலுவலர்களை நியமிப்பார்கள். பல ஜாகீர்தார்கள் சொந்தமாகப் போலீஸ் படை வைத்திருந்தார்கள். சிலர் இராணுவத்தையும் வைத்திருந்தார்கள். அவர்கள் சமூகப் பொதுப் பணிகள், சாலைகள், மருத்துவ விடுதிகள், பள்ளிக் கூடங் கள் முதலியவற்றை நிர்வகித்தும் வந்தார்கள். இவைகள் பெரும் பாலானவை பெயரளவிற்கே இருந்தன. ஜாகீரில் உள்ள அலுவலர் கள் ஜாகீர்தாருக்கு மட்டுமே பொறுப்பாக இருந்தார்கள். எனவே அவர்கள் தங்களுடைய எஜமானர்களைத் திருப்தி செய்வதற்காக நிலவரியை அதிகரிப்பதிலேயே நாட்டம் உடையவர்களாக இருந் தனர். நாட்டின் இதரப் பகுதிகளில் உள்ளதைக்காட்டிலும் ஜாகீர்தாரி, ஜமீன்தாரி ஆகிய முறைகளில் நிலவரி அதிகமாக இருந்தது. ஜாகீரில் உள்ள அலுவலர்கள் ஊழல் நிறைந்தவர்களாக

இருந்தனர். இவர்களை வேறு இடங்களுக்கு மாற்ற இயலாமையும், மாற்றுவதற்கு வேறு இடங்கள் இல்லாமையும் காரணமாகக் கூறலாம். ஜாகீர்தார்கள் ஆடம்பரமாகச் செலவு செய்பவர்கள். அவர்கள் தங்களுடைய வரி வசூலில் மிகச் சிறு பகுதியைத்தான் நிர்வாகம் மற்றும் இதர பொறுப்புகளுக்காகச் செலவிடுகின்றனர். பெரும்பாலான ஜாகீர்தார்கள் அரசாங்கத்திற்கு நிலவரி ஏதும் செலுத்த வேண்டியதில்லை. அதே சமஸ்தான மன்னர்களிடம் மாறுதப் பற்று உடையவர்களாக இருந்தமைக்காக, இவர்களுக்கு ஜாகீர் அளிக்கப்பட்டுள்ளது. பொதுவாக ஜாகீரிலும் ஜமீன்தாரி முறையிலும் நிலத்தில் இருந்து கிடைக்கக் கூடிய உபரி வருவாயை ஆடம்பரச் செலவுகளில் ஈடுபடுத்தக் கூடிய கூறுகள் உள்ளீடாக அமைந்து இருக்கின்றன. இதனால் சில கலைகளும், கைவினைத் தொழில்களும் வளர்ச்சியடைந்தன. வேளாண்மை புறக்கணிக்கப் பட்டது. போதிய முதலீடு இல்லாத காரணத்தால் இது வளம் குன்றி இருந்தது. இடைநிலையாளர்களின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள பகுதிகளை விவரமாகப்பொருளாதார மாணவர்கள் ஆய்ந்து பார்ப்பார்களேயானால் வளர்ச்சிக் குன்றியப் பொருளாதார அமைப்புக்களில் வருவாய் உபரியாக இல்லை என்ற காரணத்தினால் மக்கள் ஏழ்மையின் நச்சுச் சுழலில் (Vicious circle) சிக்கித் தவிக்க வில்லை என்பதையும், கிடைக்கின்ற உபரி வருவாயை ஆடம்பரத் திற்காகவும், அனுவசிய நுகர்விற்காகவும் விரயமாக்குவதால்தான் வளர்ச்சியைத் தோற்றுவிக்க முடியாத நிலை நீடிக்கின்றது என் பதையும் உணரக் கூடும்.

எனவே, நிலச் சீர்திருத்தத்தில் முதல் பகுதியாக இடைநிலை யாளர்களான ஜாகிர்தார்,மற்றும் ஜமீன்தார்களின் நீக்கம் அமைந் துள்ளது. 1950 முதல் 1959 வரை ஆன ஆண்டுகளில் இடைநிலை யாளர்களின் நீக்கத்தைக் கோரி, தீவிரமான இயக்கம் ஒன்று இயங்கி வந்தது. விடுதலைக்குப் பின்னர் இந்த இயக்கத்திற்குப் பொது மக்களுடைய ஆதரவு அதிகமாயிற்று. எனவே, தீவிரமான வகையில் சீர்திருத்தங்களை உடனடியாகச் செய்ய வேண்டிய அவசி யம் ஏற்பட்டது. இக்காலத்தில் சுதேச இராச்சியங்கள் பாரதத் துடன் இணைந்ததையும், அவைகளை ஆண்டுவந்த மன்னர்கள் கட்டாய ஓய்வு பெற்றதையும் குறிப்பிட வேண்டும். காலம் சென்ற பண்டித கோவிந்த வல்லப பந்த் அவர்கள் தலைமையில் உத்தரப் பிரதேச ஜமீன்தாரி நீக்கக் குழு நியமிக்கப்பட்டது. இது இடைநிலையாளர்களின் நீக்கத்திற்கு முதல்படியாக இருந்தது. இந்த உதாரணத்தை இதர மாநிலங்களும் பின்பற்றின. ஜன நாயக சமூகத்தில் இத்தகைய செயல்கள் துரிதமாக நிறைவேற் றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இடை நிலையாளர்கள் தனிப்பட்ட முறையில் வைத்திருக்கும் நிலங்களை அதாவது, "குத்கஷ்" (Khudkasht) சொந்த சாகுபடி செய்வதாகக் கருதலாம். வாரக்குடியானவர்களிடம் உள்ள இடை நிலையாளர்களின் ஏனைய நிலத்திற்கும், அதிலிருந்து பெறக் கூடிய குத்தகைக்கும் தக்க முறையில் நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது. அரசாங்கம் வாரக்குடிகளிடம் (சர்தார்) நேரிடையானத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டது. ஜமீன்தார்களுக்கும் ஜாகீர் தார்களுக்கும் கொடுக்கப்பட்ட ஈட்டுத்தொகை விகிதம் மாநிலத் திற்கு மாநிலம் வேறுபட்டது. இந்த ஈட்டுத்தொகை அளித்த விதமும் மாறியது. நிலவரியின் குறிப்பிட்ட மடங்காகவோ, குத்தகை அல்லது நிகர வருவாயின் குறிப்பிட்ட மடங்காகவோ ஈட்டுத் தொகை நிர்ணயிக்கப்படும். இதற்கு ஒரு கோட்பாட் டினை மேற்கொண்டனர். இடைநிலையாளர்கள் ஒரு வருடத்தில் பெறும் சராசரி மொத்த வருவாய் கண்டுபிடிக்கப்பட்டது. இதி லிருந்து இராணுவம், நிர்வாகம் முதலியவற்றிற்கான செலவைக் கழிப்பதால் கிடைக்கும் தொகை நிகர வருவாயாகக் கருதப்படும் இடைநிலையாளர்களின் நஷ்டஈடு அவர்களுடைய நிகர வருவாயின் அளவைப்பொறுத்து, அதைப்போல் 10 முதல் 30 மடங்கு வரையி லும் இருக்கும். பொதுவாக ஈட்டுத் தொகை நிகர வருடாந்திர வருவாயின் அளவைப் பொறுத்து அமையும். வருவாய் குறைவாக இருக்குமேயானால், பெருக்கும் எண் அதிகமாக இருக்கும். சிலருக்கு இத்தொகை பல தவணைகளில் ரொக்கமாகக் கொடுக்கப்பட்டது. சிலருக்கு ஈட்டுத் தொகையை மாற்ற வொண்ணாத (Non-transferable) பத்திரங்களாகக் கொடுத்தனர். நாட்டில் உள்ள எல்லா இடைநிலையாளர்களுக்கும் கொடுக்கப்பட்ட ஈட்டுத் தொகையின் மொத்த அளவு ரூ. 635 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் 1960 முடிய—உண்மையில் கொடுக்கப்பட்டத் தொகை ரூ. 160 கோடியாகும்.[4]

இடைநிலையாளர்களின் நீக்கம் காரணமாகப் பல குறிப்பிடத் தக்க நிரந்தர விளைவுகள் ஏற்பட்டன. அவைகளில் முக்கியமானது அரசாங்கத்திற்கும் சாகுபடியாளர்களுக்கும் ஏற்பட்ட நேரிடைத் தொடர்பாகும். ஜாகிர் பகுதிகளில் ஜாகீர்தார்கள் நீக்கப்பட்ட தனால் நிர்வாக அமைப்பிலும், சமூகப் பணிகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டன. ஜாகீர் போலீஸுக்குப் பதிலாக மாநிலப் போலீஸ் படை ஏற்பட்டது. ஜாகிர் நிர்வாக அமைப்பிற்குப் பதிலாக பல அரசாங்க இலாக்காக்கள் — வருவாய், நிலவரித் திட்டம், கல்வி,

4 "Land Reform in India during the First and the Second Five Year Plan," prepared in the Land Reforms unit of the Director ate of Econo mics and Statistics, Agricultural Situation in India. Annual Number August, 1960.

பொதுப்பணிகள், பொது சுகாதாரம் முதலியன—ஏற்பட்டன இது ஒரு பெரும்பேறு ஆகும். இதை விட முக்கியமானது முன்பு ஜாகீரின் கீழ் உள்ள பகுதிகளில் நிலவரி கணிசமாகக் குறைந்தது. இரயத்துவாரிப் பகுதிகளில் உள்ளதைப் போல இங்குள்ள, வரி விகிதமும் அமைந்தது. இடைநிலையாளர்களின் நீக்கம் காரண மாகச் சாகுபடியாளர்களிடையே உபரியான வருவாய் ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகியது. அவர்கள் விரும்பினுல் வேளாண்மை உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில் முதலீடு செய்யலாம், இல்லையேல் நுகர்வு செலவுகளை மேற்கொள்ளலாம்.

இடை நிலையாளர்களின் நீக்கம் வேளாண்மையின் முன்னேற் றத்திற்கு அவசியமானதாக இருந்ததேயல்லாமல் போதுமான தாக இல்லை. பொதுவாக இந்தத் திட்டம் வெற்றிகரமாக இருந் தது. ஆனுல், உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் சொந்த மாகச் சாகுபடிச் செய்யும் நிலம்—'குத்குஷ்' என்று இடைநிலை யாளர்கள் கூறியதைத்தீவிரமாகப் பரிசீலனைசெய்யாமல்எப்படியே அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. அதாவது சொந்தச் சாகுபடி யின் கீழ் உள்ள பகுதிகள் யாவை என்றோ, வாரக்குடியினரிடம் குத்தகைக்காக விடப்பட்டப் பகுதிகள் யாவை என்றோ தெளி வாக்கப்படவில்லை. குத்குஷ் நிலங்கள் அனைத்தையும் அவர்களே சொந்தமாக வைத்துக்கொள்ளுவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். இவ்வகையில் மிகப்பெரிய அளவில் 'குத்குஷ்' நிலம் இருந்தது. இத் தகைய மிகப்பெரிய அளவிற்கு நிலத்தைப் பெற்ற ஜமீன்தாரர்களை யும், இடைநிலையாளர்களையும்பொதுவாகப்பூமிதார்கள்(Bhoomidar) என்று அழைக்கப்பட்டனர். அதாவது பூமிதாரர் என்ற சொல்லிற்கு நிலத்தைச் சாகுபடி செய்பவர் என்று பொருள். இதனுல் தலத் தில் இல்லாத கிழார்களும் தங்களை "சாகுபடியாளர்" என்று அழைத்துக் கொண்டனர். அப்படி சொல்லிக்கொள்வதால் அவர் கள் ஆதாயமடைந்தார்கள். இவ்வாருக ஜமீன்தார்கள் பூமி தாரர்களாக மாறிக்கொண்டு வந்த சமயத்தில் நில உடைமைக்கு உச்சவரம்பு ஏதும் விதிக்கப்படவில்லை. இதற்கு ஜமீன்தாரி நீக்கக் குழு எதிர்ப்பு தெரிவித்திருந்தது. இதனுல் வரையற்ற நிலப் பரப் பிற்குச் சாகுபடியாளர் என்ற உரிமையை ஜமீன்தார்களால் பெற முடிந்தது. தவிரவும் 'சொந்தச் சாகுபடி' என்ற சொல்லிற்குத் திட்டவட்டமான இலக்கணம் கூறப்படவில்லை. நிலத்தை உழு பவர்களைத் தவிர அதனை நேரில் மேற்பார்வை செய்பவர்களும், உறவினர் மூலமாக மேற்பார்வை செய்பவர்களும், சாகுபடிக்கு மூலதனம் அளித்தவர்களும், கடன் கொடுத்தவர்களும் நிலத்தின் சாகுபடியாளர்களாக அழைக்கப்பட்டனர். இவைகளின் காரண மாகச் சுற்றி வளைத்து வேளாண்மையுடன் தொடர்பு கொண்டுள் ளவர்களும் சாகுபடியாளர்களாகக் கருதப்பட்டனர்.

இந்த முறைமையில் நீண்டகால விளைவுகள் பல தோன்றின 'குத்குஷ்' என்று கூறப்படும் நிலப்பரப்பு வாரச் சாகுபடியின் கீழ் அமையவில்லை என்று உடைமையாளர்கள் நிரூபிக்க வேண்டும். இதற்காக அதுவரை தலத்தில் இல்லாத நிலக்கிழார்களாக இருந் தவர்களிடம் குத்தகைக்காகச் சாகுபடி செய்தவர்கள் வெளி யேற்றப்பட்டார்கள். அதாவது இடைநிலையாளர்களின் நீக்கம் காரணமாகப் பெருவாரியான வாரக்குடிகள் வெளியேற்றப்பட் டார்கள். மற்ற வகைகளில் போற்றத் தகுந்ததாக இருந்த போதி லும், சாகுபடியாளர்கள் வெளியேற்றம் ஒரு அருவருக்கத்தக்க காட்சியாகவே அமைந்துள்ளது. இரண்டாவதாக மற்றொரு குறிப் பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. நிலக்கிழார்கள் முற்றிலும், தலத்தில் இல்லாத நிலைமையிலிருந்து பூமிதாரி' யாகத் தன்னை அழைத்துக் கொள்வதற்கும் தன்னுடைய நிலத்தில் ஒரு பகுதியை யாவது நிர்வகிக்கத் தலைப்பட்டனர். இது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஆகும். பொதுவாகத்தலத்தில் இல்லாதவர்கள் போதிய வசதியைப் பெற்று இருக்கின்றமையால், அவர்கள் சாகுபடிக்கானச் சாத்தியக் கூறுகளையும், வேளாண்மை நிர்வாகத்தையும் பற்றி தீவிரமாகச் சிந்திக்கின்றபோது தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிலத்தில் பெருவாரியாக முதலீடு செய்கின்றனர். இதன் காரணமாக "முதலாளித்துவ சாகுபடி முறை" ஏற்படலா யிற்று. பெருவாரியான அளவு வளங்கள் நிலத்திற்காகப் பயன் படுத்தப்படுகின்றன. இதுவரை தலத்தில் இல்லாத நிலக்கிழாராக இருந்தவர்கள், இன்றைக்கு நில அதிபர்களாக மாறியிருக்கின்ற னர். அவர்கள் நவீன சாகுபடி நுட்பங்களையும், டிராக்டர் (Tractor)களையும் கையாளுவதால் அதிக அளவு உற்பத்தித் திறனை யும், அதிக வேகத்தில் வேளாண்மை வளர்ச்சியையும், பெருவாரி யான உபரியையும் பெறமுடிகிறது. ஆனால் இந்தச் செயல்களின் பகிர்வுப் பலன்கள் அவ்வளவு விரும்பத்தக்கதாக இல்லை.

3. குடிவாரச் சீர்திருத்தங்கள்

ஜமீன்தாரிப் பகுதிகளில், இடைநிலையாளர்களின் நீக்கம் காரணமாகச் சாகுபடியாளர்களுக்கும், அரசாங்கத்திற்கும் நேரி டைத் தொடர்பு ஏற்பட்டது. ஆனால் இரயத்துவாரி, ஜாகிர்தாரிப் பகுதிகளில், நிலத்தின் உடைமையாளர்களுக்கும், சாகுபடியாளர் களுக்கும் இடையில உள்ள வேறுபாடு ஒரு பிரச்சினையாகவே இருந்தது. ஜாகீரின் நீக்கம் பெரும்பாலும் ஒரு நிர்வாகச் சீர் திருத்தமாகும். கீழ்ப்படிவ அமைப்புக்களில் எத்தகைய மாற்றத் தையும் ஏற்படுத்தவில்லை. தலத்தில் இல்லாத நிலக்கிழார்கள் அதிகக் குத்தகை மூலமாக உபரியான வருவாய் பெற்று வந்தார்

கள். வாரக்குடிகளாகத் தற்போதுள்ளவர்களையும், அவ்வாறு வரக் கூடியவர்களையும் நிலத்திலிருந்து வெளியேற்றியமையால் நிலை யற்றதன்மை வளர்ந்தது. முதலீடும், உற்பத்தித் திறனும் குறையலாயின. எனவே நிலச்சீர்திருத்தத்தின் இரண்டாவது முக்கிய நிலையில் குடிவாரச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. குடிவாரச்சட்ட அமைப்புக்கள் மாநிலத்திற்கு, மாநிலம் மாறிய போதிலும், அவைகளுக்கு இடையே, குறிப்பிடத்தக்க அளவிற்கு ஒருமிதத் தன்மை நிலவியது. குடிவாரச்சட்டத்தின் முக்கிய நோக்கம், நில உரிமைக்கு உத்தரவாதம் அளிப்பதாகும். 'ஆர்தர் யங்'—(Arthor young) அவர்களின் மூதுரையை இங்கே குறிப்பிட லாம். "பாலைவனத்தை ஒருவனின் நிலையான உடைமையாக்குங் கள், அதை அவன் பூங்காவாக மாற்றுவான். ஒரு பூங்காவை 9 ஆண்டுகாலக் குத்தகைக்கு அவனிடம்விடுவீர்களேயானால், அதை அவன் பாலைவனமாக மாற்றி விடுவான்" குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் காலத்திற்குத் தொடர்ந்து ஒருவாரக்குடியானவன் ஒரு குறிப்பிட்ட நிலத்தைச் சாகுபடி செய்வானேயானால் அவனை 'நிரந்தர வாரக்குடியானவன்' என்றோ, 'பாதுகாக்கப்பட்ட' வாரக்குடியானவன் என்றோ கூறலாம். அப்படிப்பட்டவர்களைச் சாதாரணமாக நிலச்சுவான்தார்களால் வெளியேற்ற முடியாது. அப்படி வெளியேற்றப்பட வேண்டுமானால் (1) அவன் குத்த கையைச் செலுத்தத் தவறியிருக்கவேண்டும். அல்லது (2) நிலத்தை —முறையற்ற வகையில்—மரத்தை வீழ்த்துவது போன்ற செயல் களால்—பாழ்படுத்தியிருக்க வேண்டும் அல்லது (3) சில குறிப் பிட்ட சூழ்நிலைகளில் நிலச்சுவான்தார் தானே சொந்தமாகச் சாகுபடியை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு வரையறைகளுக் குட்பட்ட வகையில் குடிவாரச் சீர்திருத்தங்கள் நில உரிமையை ஓரளவிற்கு உத்தரவாதம் அளிக்கின்றது எனலாம். பல இடங் களில் சாகுபடியாளர்கள் அதிக பலன் அடைந்துள்ளார்கள். குடி வாரச்சீர்த்திருத்தத்தின் இரண்டாவது முக்கியக் குறிக்கோள் குத் தகையைக் குறைப்பது ஆகும். வழக்கமாக வந்துள்ள குத்தகை நிலச்சுவான்தார்களுக்கும் வாரக்குடியானவனுக்கும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்வரை தொடர்ந்து நீடிக்கக்கூடும் இவ்விரு தரப்பினரில் யாராவது ஒருவர் இதற்கு ஆட்சேபம் தெரி விப்பார்களேயானால், வருமான இலாகா அலுவலர்களுக்கு 'நியாயமானக் குத்தகையை நிர்ணயிப்பார்கள். அவர்களுக்கு அத்தகைய அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. நிலத்தின் மொத்த விளைச்சலில் இது, அதிகபட்சம் 4-ல் ஒருபகுதியிலிருந்து 6-ல் ஒரு பகுதி வரை இருக்கலாம். இது சாகுபடியாளர்களுக்கு அதிக சலுகைகளைக் கொடுத்துள்ளது. தற்சமயம் உள்ள குத்தகை மட்டம் பொதுவாகவே மிக அதிகமானது. இதனால் கடந்த அரை நூற்றாண்டு காலமாகவே தேசீயக்கோட்பாட்டுக் கருத்தினர்இதை

வெகு தீவிரமாக எதிர்த்து வந்துள்ளனர். வாரக்குடியானவர்களுக்குப் புதியக் குடிவார்ரச் சட்டப்படி மற்றொரு முக்கிய சலுகை கொடுக்கப்படும். அதாவது சில நிபந்தனைகளுக்குட்பட்ட வகையில் அவன் சாகுபடி செய்கின்ற நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளலாம். நிலத்தின் அங்காடி விலையைவிடக் குறைவான விலையைக் கொடுத்து, அவன் அந்த நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளலாம். எடுத்துக் காட்டாக, ஆந்திரப் பிரதேசத்தின் சில பகுதிகளில் சாகுபடி செய்கின்ற நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளுவதற்கு எட்டு வருடக் குத்தகையை வாரக் குடியானவன் செலுத்த வேண்டும். இது நிலத்தின் மதிப்பில் 40 விழுக்காடாகும். உத்தரப் பிரதேசத்தில் 'சர்தார்கள்' நிலத்தின் சொந்தக்காரர்களாக ஆவதற்கு 16 வருடக் குத்தகையைக் கொடுக்கவேண்டும். இவ்வாறு பெரிய அளவிற்கு அளிக்கப்படும் சலுகைகள் காரணமாக வாரக் குடியானவர்கள் தாங்கள் சாகுபடி செய்யும் நிலத்தின் உடைமையாளராவதற்குப் போதிய ஊக்கத்தை அளிக்கும்.

இவையாவற்றையும் வாரக்குடியானவர் சமுதாயத்திற்கு நிலச் சீர்திருத்தங்கள் அளித்த வெகுமதிகளாகக் கருதலாம். இங்கு இந்தியக் குடிவாரச் சட்டங்களின் சிறப்பு இயல்பு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். இது நிலக்கிழார்கள், குறிப்பாகச் சிறு நிலக்கிழார்கள், வாரக்குடியானவர்கள் ஆகிய இருசாரர்களின் நலன்களையும் சமநிலைப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. சோவியத் யூனியன், சீனா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் முதலிய நாடுகளில் மேற்கொண்டதைப்போல் புரட்சிகரமான நிலச்சட்டங்கள் இங்கு ஏற்படவில்லை. அந்த நாடுகளில் நிலக்கிழார்கள் அனைவரும் 'செல்வந்தர்'களாகவும் சுரண்டுபவர்களாகவும், வாரக்குடியானவர்கள் யாவரும் 'வறியவர்'களாகவும், 'சுரண்டப்படுபவர்'களாகவும் கருதப்பட்டனர். இந்திய நிலச்சீர்திருத்தங்கள் இத்தகைய கருத்துக்களின் அடிப்படையில் அமையவில்லை. இதற்குமாறாக இந்த நாட்டில் பெரும்பாலானவர்கள் சொந்தச் சாகுபடி செய்பவர்கள் என்றும், நிலத்தைக் குத்தகைக்கு விட்டுள்ள சிலரும் சாதாரணமான, மிகவும் சொற்பமான, வசதிபெற்றுள்ளவர்கள் என்றும் கருதப்படுகிறது. மற்றும் வாரக்குடியானவர்கள், சொந்தச் சாகுபடியாளர்கள், தலத்தில் இல்லாதக் கிழார்கள் என மூன்று பிரிவினர்களாக வேறுபடுத்த முடியாத வகையில் பலர் உள்ளனர். சொந்தமாக இரண்டு ஏக்கர் நிலத்தையும், வாரச்சாகுபடியாளனாக இரண்டு ஏக்கர் நிலத்தையும் பயிரிடும் ஒருவர் அதே சமயத்தில் மூன்று ஏக்கர் குடும்ப நிலத்தைக் குத்தகைக்கு விடுவதால், அதைப் பொறுத்தவரையில் தலத்தில் இல்லா நிலக்கிழாராகவும் இருக்கக் காண்கிறோம். இதன் காரணமாக எங்குபார்த்தாலும் இந்திய நிலச்சீர்திருத்தத்தில் தலத்தில் இல்லாதக் கிழார்களுக்கு

நிபந்தனையுடன்கூடிய சலுகைக் காட்டப்படுகிறது. அதாவது அவர்கள் சாகுபடியாளர்களாக விரும்புவார்களேயானால், அந்த நிலத்தைத் திரும்பப் பெறலாம். இதற்கு இரு நிபந்தனைகள் உள்ளன. முதலாவதாகச் சொந்தச் சாகுபடி என்ற சொல்லின் இலக்கணத்திற்குட்பட்டு (இவர்கள்) இருக்க வேண்டும். இரண்டாவதாக அவ்வாறு சாகுபடிக்கு ஏற்கப்படும் நிலங்கள் குறிப்பிட்டவரையறைக்குட்பட்டதாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக பம்பாய், பழைய ஹைதராபாத் முதலிய இடங்களில் அமுலாக்கப்பட்ட நிலச்சீர்திருத்தங்களில் இதனைக் காணலாம். தலப்தில் இல்லாதக் கிழார் சொந்தச் சாகுபடிக்காக நிலத்தைத் திரும்பப் பெறவேண்டுமானால் (அ) வாரக் குடியானவன் சாகுபடி செய்கின்ற நிலம் முழுவதையும் பறிக்கக் கூடாது. (ஆ) நிலத்தைத் திரும்பப்பெற்ற பின்னர் அவர் சாகுபடி செய்யும் மொத்த நிலப்பரப்பு ஒரு உச்சவரம்பிற்கு உட்பட்டு இருக்கவேண்டும். மாறாத வாரக் குடியானவன்தான் சாகுபடி செய்கின்ற நிலத்தை. அதன் உடைமையாளரிடமிருந்து இரண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டு வாங்கலாம். (அ) நிலக்கிழாருடைய எல்லா நிலத்தையும் வாங்கி அவர் சாகுபடி செய்வதற்கு நிலம் இல்லாமல் செய்யக் கூடாது. (ஆ) வாரக் குடியானவன் இவ்வாறு வாங்கியதன் காரணமாக அவனுடைய நில உடைமை ஒரு உச்ச வரம்பிற்கு உட்பட்டு இருக்கவேண்டும். இவ்வாறாகக் குடிவாரச் சீர்திருத்தம் ஒரு பக்கம் நிலக்கிழாரையும் மற்றொரு பக்கம் வாரக் குடியானவனையும், சமநிலைப்படுத்துகின்றது. தராசின் இரு பக்கங்களையும் சமநிலைப்படுத்தும் தராசு முள்ளைப்போல் இச் சீர்திருத்தம் அமைந்துள்ளது. இத்தகைய சட்டங்களில் இயல்பாக இரு கருத்துக்கள் உள்ளன. எதிர்காலத்தில் பெறும் நிலத்திற்கான குறைந்தபட்சம் மட்டமும் உச்சவரம்பும் நிர்ணயிக்கப்பட வேண்டும். ஒரு நிலக்கிழாரின் அல்லது வாரக் குடியானவனின் உடைமை உச்சவரம்பைக் கடந்து விடுமானால் எதிர்காலத்தில் மேற்கொண்டு நிலத்தை வாங்குவதையோ அல்லது திரும்பப் பெறுவதையோ அனுமதிக்கக் கூடாது. அதே சமயம் நிலக்கிழார் அல்லது வாரக்குடியானவனின் வசம் உள்ள நிலத்தின் அளவு குறைந்தபட்ச மட்டத்தைவிடக் குறைவாக இருக்குமேயானால், நிலத்தைக் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தக் கூடாது.

இந்திய நிலச் சீர்திருத்தங்களின் அடிப்படையான நோக்கத்தை உணரவேண்டியது அவசியமாகும். இந்த சீர்திருத்தம் ஒரு அனுமானத்தின் பேரில் மேற்கொள்ளப்படுகிறது. வாரக் குடியானவர்களுக்கு அளிக்கின்ற ஊக்கம் காரணமாகவும், சட்டம் அவர்களுக்குச் சாதகமாக இருப்பதாலும், தாங்கள் சாகுபடி செய்கின்ற

உடைமைகளைச் சொந்தமாக்கிக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாம். அவ்வாறே நிலக்கிழார்கள் பெறக்கூடியக் குத்தகையின் அளவு குறைந்துள்ளதாலும், சட்டங்கள் பாதகமாக உள்ளதாலும் நிலத்தைச் சொந்த சாகுபடிக்கு மேற்கொள்ளவோ அல்லது வாரக் குடியானவனுக்கே விற்றுவிடவோ தீர்மானிக்கலாம். ஒன்று அவர்கள் சொந்த சாகுபடியை மேற்கொள்ள வேண்டும், அல்லது தலத்தில் இல்லாத நிலைமைக்கு ஒரு முடிவு கட்டவேண்டும். இதனால் சொந்த நிலம் இல்லாத சாகுபடியாளர்களும், சொந்த சாகுபடியைமேற்கொள்ளாதநிலக்கிழார்களும் எதிர்காலத்தில்மறைந்து விடுவார்கள். இறுதியில் யாவரும் சொந்த சாகுபடியை மேற்கொள்ளுவார்கள்.

குடிவாரச் சீர்திருத்தங்கள் இடத்திற்கு இடம் பெரிய அளவிற்கு வேறுபட்ட போதிலும், அவற்றின் வகை அமைப்பில் உள்ள ஓரினத் தன்மையை யாரும் மறுக்கமுடியாது. இச் சீர்திருத்தங்களின் நோக்கம் நிறைவேற்றப்படுகின்ற நிலையில் சிதறிப் போகின்றது. இதனைச் செயல்படுத்துவதில் ஏற்பட்ட அசாதாரணக் கால தாமதத்தை டேனியல் த்ரோனர் (Daniel Throner)[5] கண்டனம் செய்துள்ளார். முடிவு செய்த சீர்திருத்தங்களைச் சட்டமாக்குவதிலும், மற்றும் சட்டமாக்கப்பட்டதைச் செயல்படுத்துவதிலும் நீண்டகால தாமதம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய காலதாமதத்தையும், பொதுவாகவுள்ள ஆர்வமின்மையையும், இந்தியச் சூழ்நிலையில் உள்ள குழு நலன்களுடன் தொடர்புபடுத்திக் காணவேண்டும். சட்டசபையிலும், பாராளுமன்றத்திலும் உள்ள உறுப்பினர்கள் நேரிடையாகவும், மறைமுகமாகவும் நிலக்கிழார்களின் பிரதிநிதிகளாக இருப்பதையும், இச் சீர்திருத்தங்களுக்கு மிகப் பெரியளவில் தேவைப்படுகின்ற அமைப்பு முறை மாற்றங்கள் நிழக்கிழார்களின் நலனிற்குப் பாதகமாக இருப்பதையும் உணரவேண்டும். மேலும், இத் திட்டத்தை நிறைவேற்றுவது நாட்டின் நிர்வாக அமைப்பிற்கு ஒரு பெருஞ் சுமையாக உள்ளது. வரலாற்றுச் சூழல்கள் காரணமாக நமது நாட்டின் மரபு நிலையைக் காப்பதில் தான் அதிகம் ஈடுபட்டுள்ளது. சமூக மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு செயற் காரணியாக இருந்ததில்லை, எனவே அடிப்படையான அமைப்பு முறை மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியதாக இல்லை. இடைநிலையாளர்களின் நீக்கம், குடிவாரச் சீர்திருத்தம், நில உச்சவரம்பு, நில உடைமைகள் தொகுப்பு கூட்டுறவு சாகுபடி முதலிய திட்டங்களின் இயைபு ஆக்கம் திருப்தியற்றதாக இருந்தன. இவற்றைப் பல செயற் காரணிகளைக் கொண்டு அமுல் செய்ய வேண்டியதால் பயன் உள்ள வகையிலும், துரிதமாகவும்

[5] Daniel Thorner, The Agrarian Prospcet in India (Delhi, 1956.)

செயல்படுத்த முடியவில்லை. ஆனால் விரைந்து செயல் படுத்து வதில்தான் உண்மையான வெற்றி அமைந்துள்ளது.

எல்லாவற்றையும்விட நமது கவனத்தை அதிக அளவில் கவர்ந்தது ஒன்று உண்டு. குடிவாரச் சீர்திருத்தங்கள் காரணமாக ஒவ்வொரு மாநிலத்திலும் எண்ணிறந்த வாரக் குடியானவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். இதற்கு முன்புகூட நிலத்திலிருந்து எப்போதாவது வாரக் குடியானவர்கள் வெளியேற்றப்படுவது உண்டு. சீர்திருத்தத்தின் காரணமாக இது சர்வ சாதாரணமாகி விட்டது. வாரக்குடியானவர்களை உடனடியாக வெளியேற்றப் படாவிட்டால் சட்டத்தின் பாதுகாப்பில், அவர்கள் நிரந்தர வாரக் குடியானவர்களாக ஆக்கப்படுவார்கள் என்ற பயம் ஒரு முக்கிய காரணமாகும். நிலக்கிழார்கள் வாரக்குடியானவர்களிடம் தனிப் பட்ட முறையில் கோபப்படவில்லை. ஆனால், அவர்களுக்கு அளிக் கப்பட்ட நிரந்தரமான பாதுகாக்கப்பட்ட ஒரு தகுதியைக் கண்டு அவர்கள் அதிகம் வெகுண்டார்கள். எடுத்துக்காட்டாக ஹைதராபாத்[6]திலும் பம்பாயிலும்[7] மேற்கொள்ளப்பட்ட விசா ரணைகளில் பெரும்பாலான வாரக்குடியானவர்கள் வெளியேற்றப் பட்டதாக அறிகிறோம்.

உஸ்மானியா பல்கலைக் கழகத்தினர் ஹைதராபாத்தில் விசாரணை நடத்தினர். 1951-ல் 100 வாரக்குடியானவர்கள் பாது காக்கப்பட்டனர். (1) அதில் 45.4 விழுக்காட்டினர் அன்றுவரை பாதுகாக்கப்பட்ட வாரக்குடியானவர்களாகவே இருந்தனர். (2) 12·4 விழுக்காட்டினர் நிலம் வாங்கி நிலக்கிழாராக மாறிவிட்ட னர் (3) 26 விழுக்காட்டினர் சட்டப்படி வெளியேற்றப்பட்டனர். (4) 22·1 விழுக்காட்டினர் சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் வெளியேற்றப்பட்டனர். (5) 17.5 விழுக்காட்டினர் சாகுபடி செய்கின்ற நிலத்தைத் தன்னிச்சையாக விட்டுச் சென்றனர்.

நுணுகி ஆய்கின்றபோது கடைசியாகக் கூறிய இரு வகை களுக்கும் உள்ள வேறுபாடுகள் புறக்கணிக்கக்கூடிய வகையில் உள்ளன. கோகலே நிலையத்தினர் பம்பாய் குடிவாரச் சட்டத் தின் (1946) பயனைப்பற்றி விசாரித்தனர். நடைமுறையைப் பொறுத்தவரை இந்தச் சட்டம் இருப்பதாகத் தோன்றவில்லை என்ற திடுக்கிடத்தக்க முடிவை வெளியிட்டனர். மேலும் ஒரு செய்தியை இங்குக் குறிப்பிடவேண்டும். நிலத்திலிருந்து வெளியேற் றப்பட்டவர்கள், அவதிக்குள்ளானார்கள் என்பது ஒருபுறம் இருந்த போதிலும், பெரும்பாலான வாரக்குடியானவர்கள் உண்மையி

[6] Khusro, A. M., Economic and Social Effects of Jagirdari Abolition and Land Reforms in Hyderabad [Osmania University Press, 1958]

[7] Dandekar, V. M. and Khudanpur, G. J., The Working of the Bombay Tenancy Act, [Gokhale Institute of Politics and Economics, 1957]

லேயே நிலைபெற்ற, நிரந்தரமான உரிமைகளைப் பெற்றனர். எதிர் காலத்தைக் கருத்தில் கொண்டு முதலீடு செய்யவும், உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் வேண்டும் என்ற ஆர்வம் இத்தகைய வாரக் குடியானவர்களிடையே அதிகம் இருப்பதைக் காணலாம். காட்டாக ஹைதராபாத் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்ட முடிவுகளை—இங்குக் கூறலாம். சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படு வதற்கு முன்னர் வாரக்குடியானவர்களின் முதலீட்டுச் செயல் களின் அமைப்பு வகைகளில் அதிக ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. சீர்திருத்தங்களுக்குப் பின்னர், முதலீடுகளின் அளவு பெரு வாரியாக அதிகரித்ததுடன் அதன் உள்ளீடான அமைப் பிலும் சமன்பாடு மிகுந்து காணப்பட்டது, நிலச்சீர்திருத்தங் களின் காரணமாக வாரக்குடியானவர்கள் சாகுபடி செய்கின்ற பகுதிகளிலும் கூட ஒரு ஏக்கர் நிலம் ஒரு பண்ணை ஆகியவற்றின் உற்பத்தித் திறன் சொந்த சாகுபடியாளர்களின் உற்பத்தி மட்டத்தை எய்தும் அளவிற்கு உயர்ந்து வருகிறது என்று கூறலாம். இதனால் ஏற்படும் வெளியேற்றங்கள், நிலச் சீர்திருத் தத் திட்டத்தின் பெரும் கறையாக உள்ளன. இது சட்டத்தின் முக்கிய நோக்கினின்றும் வெகுவாக நமது கவனத்தை மாற்றிவிடு கின்றது.

குத்தகையைக் குறைப்பது குடிவாரச் சீர்திருத்தங்களின் இரண்டாவது முக்கிய நோக்கம். ஆனால் சட்டத்தில் கண்டுள்ள முறைகளின் மூலம் இதனைச் செயலாக்க முடியாது. இப்போதுள்ள ஆதாரங்கள் முரண்பட்டு இருந்தபோதிலும், உண்மையில் குத் தகையின் போக்கு நிலச் சீர்திருத்தங்களுக்குப் பின்னரும் அதி கரித்துள்ளது. வளர்ந்து வருகின்ற மக்கள் தொகையினரிடையே நிலத்தின் தேவை அல்லது நிலப்பசி துரிதமாக அதிகரித்தபோதி லும் இறுதிநிலை அளவிலேயே நில அளிப்பு உயர்ந்துள்ளது. இவ்வாறு நிலத்தின் தேவை அதிகரித்து வருகின்ற அளவிற்கு நில அளிப்பு அதிகரிக்காமையால் குத்தகை உயர்வு அடைகின்றது. அதாவது குடிவாரச் சட்டங்களின் நோக்கம் சந்தை நிலவரத் துக்கு மாறுபட்டதாக உள்ளது. எனவே பொதுவான குத்தகைக் குறைப்பு ஏற்படுவது சாத்தியமில்லை. 1950-59 ஆண்டுகளில் இந்திய விவசாயப் பொருள்களின் மதிப்புப் பண அடிப்படையில் அதிகரித்தது குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். பெரும்பா லும், துரித விலை உயர்வின் காரணமாகவும், ஓரளவிற்கு, விளைச் சல் [விகிதம்] அதிகரித்தமையாலும் ஏற்பட்டது எனலாம். இதனால் குத்தகை மாறுதபோதிலும், இதை மொத்த உற்பத்தி யில் விகிதமாகப் பார்க்கின்றபோது குறைந்து இருப்பதைக் காண லாம், குத்தகை 1948-ல் மிக அதிகமாக இருந்தது என்று கூறு

வதைப் போல 1958-லும் மிக அதிகம் என்று சொல்லமுடியாது. உண்மையில் பத்தாண்டு காலத்தில் குத்தகையின் அளவில் அதிக மாற்றம் இல்லை. நிலச் சீர்திருத்தங்களினால் சாதிக்க முடியாத ஒன்றை, பணவீக்கம் [வாரக்குடியானவர்களுக்கு] சாதித்துள்ளது. இது தற்செயலாக ஏற்பட்ட போதிலும் அநேக இடங்களில் நியாயமான குத்தகையை ஏற்படுத்தியது எனலாம்.

இருந்தபோதிலும் இந்தக் கூற்றிற்கு மற்றும் ஒரு முக்கிய நிபந்தனை உள்ளது. சில இடங்களில் மொத்த உற்பத்தியின் ஒரு விகிதமாகக் குத்தகை நிர்ணயிக்கப்படுகிறது. (குத்தகையானது ஒரு ஏக்கருக்கு குறிப்பிட்ட அளவு பணத்தொகை என்றோ அல்லது குறிப்பிட்ட அளவு விளைச்சல் என்றோ நிர்ணயிக்கப்படுவதில்லை). இவ்வாறு வாரத்திற்கு விடப்படுகின்ற நிலத்தில் விளைச்சல் அல்லது அதன் மதிப்பு அதிகரித்துள்ள போதிலும் குத்தகையின் சுமை குறைக்கப்படவில்லை. எனவே விளைச்சலின் ஒரு பகுதியாக வாரம் வசூலிக்கப்படுகின்ற இடங்களில் நிலச்சீர்திருத்தங்கள் ஏற்பட்ட போதிலும், விளைச்சல் அதிகரித்துள்ள போதிலும் பண வீக்கம் ஏற்பட்டுள்ள போதிலும், குத்தகையின் சுமை தொடர்ந்து அதிகமாகவே உள்ளது.

குடி வாரச் சீர்திருத்தங்களின் மூன்றாவது நோக்கம், சாகுபடி செய்யும் நிலத்தின் உடைமையாளன் என்ற உரிமையைவாரக் குடியானவர்கள் பெறுவதாகும். இக்குறிக்கோள் ஓரளவிற்கே நிறைவேறியுள்ளது. மிகச் சிலரே நிலத்தின் உடைமையாளன் என்ற உரிமையைப் பெற்று இருக்கிறார்கள். பெரும்பாலானவர்கள் வாரக் குடியானவர்களாக இருந்து கொண்டே கணிசமான நிலப்பரப்பைச் சாகுபடி செய்கிறார்கள். முதல் இரண்டு குறிக்கோள்களும் நிறைவேற்றப்பட்டுள்ளமையால் - சாகுபடியாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதாலும், குத்தகை குறைந்து இருப்பதாலும் (ஓரளவிற்காவது)—இந்நிலை ஏற்பட்டது என்று கூறலாம். தங்களை முழு உரிமையாளராக ஆக்கிக்கொள்ள வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படவில்லை. அங்காடி விலையைவிட குறைந்த விலைக்கு நிலம் கிடைத்த போதிலும், அதை வாங்குவதற்கு அவர்கள் மிகப் பெரிய அளவிற்கு மூலதனத்தைத் திரட்ட வேண்டியிருந்தது. அவர்களது, உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், குத்தகை குறைப்பிற்கும் உத்தரவாதம் அளிக்கப்படுகின்றவரையில், நிலத்தைச் சொந்தமாக்கிக்கொள்ளவேண்டும் என்ற தேவை ஏற்படவில்லை. முக்கியமாக நில உடைமையைப் பெறுவதற்கான நிபந்தனைகளும், கட்டுப்பாட்டு விதிகளும், இந்த நோக்கத்தின் அவசியத்தைக் குறைத்து விடுகின்றன.

குடிவாரச் சீர்திருத்தத்தின் மற்றொரு பாதக விளைவை நாம் மறந்து விட முடியாது. இந்த சீர்திருத்தங்கள், மதிநுட்பமாகவும், கரந்த நிலையிலும் உள்ள குடிவார ஏற்பாடுகளுக்கு ஆதரவாக இருந்தன. வெளிப்படையாகச் சுரண்டல் தன்மை உடைய அதிக குத்தகையைப் பெறுவது ஒரு இழிவாகக் கருதப்படுவதால், வாரக் குடியானவர்களை "பண்ணை ஊழியர்கள்" (Farm servants) என்று அழைப்பது வழக்கமாயிற்று. இந்த வாரக்குடியானவர்கள் நடப்பு மூலதனத்தையும், [சில சமயங்களில் நிலையான மூலனத்தையும்,] அளிக்கின்றனர்கள். இவ்வகையில் முன்பு இருந்த பண்ணைக் கூலிகளிலிருந்தும் இவர்கள் மாறுபட்டு இருப்பதைக் காணலாம். பண்ணைக்கூலிகள் உழைப்பைத் தவிர வேறு எதையும் அளிக்க வில்லை. குத்தகைப் பத்திரங்களுக்குப் பதிலாக, ஊழியப் பத்திரங் கள் ஏற்படலாயின. 1951-க்கு முன்பு சாதாரணமாக புழக்கத்தில் இருந்த வாரக் குத்தகை முறை, நிலச்சீர்திருத்தத்திற்குப் பின்னர் மேலும் தீவிரமாகியது. இந்த முறையினால், தங்கள், குத்தகை குறையாமலும், தங்களுடைய வாரக் குடியானவர்களை வெளி யேற்றும் உரிமைகளை இழக்காமலும் இருந்தனர்.

சில பொருளாதார அறிஞர்கள், குறிப்பாக, ரஷ்யாவிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் உள்ளவர்கள், பண்ணைக் கூலிகள் அனைவரும் சாகுபடியாளர்கள் என்றும் இவர்களுக்கு வேலை அளிப் போர்கள் அனைவரும் முதலாளித்துவ விவசாயிகள் என்றும் கருது கின்றனர். இந்த நாட்டிலும் ஒரு சாரார்,—ஆனால் இவர்களை இடது சாரிகள் என்று கூறுவதற்கு இல்லை—அதைப்போன்ற கருத்தை உடையவர்களாக இருக்கின்றனர். பண்ணைக் கூலிகளின் ஊதியம், விளைச்சலின் ஒரு பகுதியாக நிர்ணயிர்கப்படுவதால், அவர்களின் வருவாயில் ஒரு 'நிலையற்ற கூறு' (Risk element) அமைந்துள்ளதாகக் கருதுகின்றனர். இதனால் இவர்களை வாரக் குடியானவன் என்றும் கருதுகின்றனர், உண்மையில் வருவாயில் உள்ள 'நிலையற்ற கூறுகள்' இருவகைப்படும். மேலே கூறப்பட்டது ஒருவகையானது. மற்றொன்று வேளாண் தொழிலில் தன் னுடைய மூலதனத்தைச் செலவிடுவதன் காரணமாக ஏற்படக்கூடி யது. இவ்விரண்டும் முற்றிலும் வேறுபட்டவை. ஊதியத்தை முழுமையாகவோ — விகிதாசாரமாகவோ, நிர்ணயிக்கப்படுகின்ற விதத்தில் வாரக் குத்தகையின் இலக்கணம் அமையுமேயானால், குடிவாரச் சட்டத்தை ஏய்ப்பது சுலபமாகிவிடும். ஊதியத்தை விளைச்சலின் ஒரு விகிதமாக நிர்ணயிப்பதற்குப்பதிலாக ஒரு குறிப் பிட்ட அளவு தானியமாகவோ, அல்லது அதன் மதிப்பாகவோ நிர்ணயிக்க முற்படலாம். இப்படி செய்வதன்மூலமாக ஒரு வாரக்

குடியானவனை, அவன் தகுதியிலிருந்து கீழே தள்ளிவிட முடியும்—அதாவது ஒரு சாதாரண கூலியாளாக மாற்றிவிட முடியும்.

மேலெழுந்தவாரியாக ஊதியம் நிர்ணயிக்கப்படுகின்ற அடிப்படையில், வாரக்குடியானவனை ஏனைய விவசாயக்கூலிகளினின்றும் வேறுபடுத்திக் காண்பது இயலாது. மாறாக, பண்ணையம்செய்வதில் எந்த அளவிற்கு இவர்கள் ஈடுபடுகின்றார்கள் என்ற அடிப்படையில் தான் நிர்ணயிக்க முடியும். ஒரு உழைப்பாளியானவன், உழைப்பைத் தவிர வேறு எதையும் அளிக்காதபோது கூலியாளாகவே அவன் கருதப்படுகின்றான். அவன் ஆலைத் தொழிலாளியைப் போலவே ஊதியத்தைத் தவிர வேறு எதையும் அளிக்காத காரணத்தினால், ஊதியத்தைத் தவிர வேறு எதையும் அவன் பெறுவதற்கு இல்லை. மாறாக, பண்ணையத்திற்கு அவன் தன்னுடைய உழைப்பை அளிப்பதுடன், நிலையான மூலதனத்தையோ நடப்பு மூலதனத்தையோ அளித்து அதற்குப் பதிலாக உற்பத்தி செய்யப்படுகின்ற விளைவின் ஒரு பகுதியைப் பெறுவானேயானால், அவனைச் சாதாரண ஒரு கூலியாளாகக் கருத முடியாது; அவனை ஒரு (குடிவாரச்) சாகுபடியாளனாகவோ, வாரக் குடியானவனாகவோ கருதவேண்டும். இவ்விரு பெயர்களும் ஒருவரைத்தான் குறிக்கின்றன. உண்மையான வாரக்குடியானவனை நிர்ணயிக்கின்ற அடிப்படையைக் கண்டு பிடிப்பது ஒரு பிரச்சினையாகும். அவன் பெறுகின்ற—முழுமையான அல்லது விகிதாசார ஊதியத்தின் அளவையும், அது நிர்ணயிக்கப்படுகின்ற விகிதத்தையும் சார்ந்து அமையவில்லை. மாறாக [உழைப்பைத் தவிர] அவன் பண்ணையின் மூலதனத்திற்கு என்ன அளிக்கின்றான் என்பதைச் சார்ந்துள்ளது. இதுவரை வாரக்குடியானவனை மையமாகக் கொள்ளலாமல் நிலக்கிழார்களை மையமாகக்கொண்டு வாரப் பிரச்சினைகளை அணுகி வந்துள்ளோம். இதனால் வாரக் குடியானவன் யார் என்று கண்டு பிடிப்பது சிரமமாக இருந்தது. இதில நிலக்கிழார் எந்த அளவிற்கு மூலதனத்தை அளிக்கிறார் என்பதைவிட உழைப்பாளி ஒருவன் எந்த அளவிற்கு மூலதனத்தை அளிக்கிறான் என்பதன் அடிப்படையில்தான் வாரக்குடியானவனை இனம் கண்டுகொள்ளமுடியும். ஒருவன் மூலதனத்தை அளிக்கவில்லையானால், அவனை ஒரு பண்ணைக் கூலியாகக் கருதலாம். ஒருவன் மூலதனத்தை அளித்து இருப்பானேயானால், அவனை ஒரு வாரக்குடியானவன் என்று கருதலாம். அப்படி நிர்ணயிக்கப்பட்ட வாரக்குடியானவர்களுக்கு அனைத்து உரிமைகளும் கிடைக்க வசதி செய்ய வேண்டும்.

4. நில உடைமைகளுக்கு உச்சவரம்பு

அடுத்தபடியாக இந்திய நிலச் சீர்திருத்தங்களில் தற்போதுள்ள நில உடைமைகளுக்கும், எதிர்காலத்தில் பெறப்போகும் உடைமைகளுக்கும் உச்சவரம்பு விதிக்கப்பட்டது. எல்லா மாநிலங்களும் உச்சவரம்பை ஆதரிக்கவில்லை. உண்மையில் இம்முயற்சிகளுக்கு எதிர்ப்புக்கள் இருந்து வந்துள்ளன. நில உச்சவரம்பின் முக்கிய நோக்கம், நிலத்தை மறு பகிர்வு செய்யவேண்டும் என்பது ஆகும். பெரும்பான்மை நிலக்கிழார்கள் மிகக் குறைந்த அளவு நிலப்பரப்பையும், சிறுபான்மையான நிலக்கிழார்கள் மிகப் பெரிய அளவு நிலப்பரப்பையு பெற்று இருக்கிறார்கள். இவ்வாறு பண்ணை உடைமைகளின் பகிர்வு பாதகமாக இருந்தது. எனவே நில உச்சவரம்பை ஏற்படுத்துவதன் மூலமாக மிகப் பெரிய நிலக்கிழார்களிடம் உபரியாக உள்ள நிலத்தை ஈட்டுத்தொகை கொடுத்து பெறுவது என்றும், அவற்றை இறுதிநிலை எல்லைக்குட்பட்ட கிழார்கள், மிகச் சிறு கிழார்கள், நிலம் இல்லாத விவசாயக் கூலிகள், முதலியோருக்குப் பகிர்ந்துகொடுக்கவும் எண்ணினர். நிலம் பற்றாக் குறையாக இருப்பதாலும், அதன் தேவை மிக அதிகமாக இருப்பதாலும், இத்தகைய மறு பகிர்வு அவசியமாக உள்ளது என்பதுடன், நில உச்சவரம்பை ஏற்படுத்துவதன்மூலம் நிலத்தைத் திறமையாகப் பயன்படுத்துவதற்கும் ஒரு ஏக்கர் நிலத்தின் சராசரி உற்பத்தித் திறனை உயர்த்த முடியும்'

நில உச்சவரம்பை ஏற்படுத்துவதில் பல எதிர்ப்புக்களும் இருந்தன. மிகப் பெரிய பண்ணைகளின் உற்பத்தித் திறன் உச்சவரம்பு காரணமாகக் குறைந்துவிடக் கூடும் என்றனர். ஆனால், இந்த வாதத்தில் ஆழ்ந்த கருத்து இருப்பதாகக் கூற முடியாது. பொதுவாகவே பெரிய பண்ணைகளின் உற்பத்தித் திறன் சிறிய பண்ணைகளை[8] விடக் குறைவாகவே இருக்கின்றன. எவ்வாறாயினும் அதிக உற்பத்தி வீதத்தைப் பெற்றுள்ள பண்ணைகளுக்கு உச்சவரம்பில் இருந்தும் விலக்கு அளிக்க வேண்டும். ஒவ்வொருவரின் நிலத் தேவையையும் பூர்த்தி செய்வதற்குப் போதிய அளவு நிலத்தை உச்சவரம்பின் மூலமாகப் பெறமுடியாது என்றும் சிலர் கூறுகின்றனர். இக்கூற்றையும் முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. நில உச்சவரம்பினால் சிலராவது நிச்சயமாகப் பலன் அடையக் கூடுமாகையால், எல்லோரும் பலன் அடைய முடியவில்லை என்பதைப் பொருட்டாகக் கருத வேண்டியதில்லை. இறுதியாக, நகரங்களில் வேளாண்மையல்லாத வருமானத்திற்கு எத்

[8]. **Studies in the Economics of Farm Management,** Ministry of Food and Agriculture, Government of India.

தகைய உச்சவரம்பும் விதிக்கப்படாதபோது, நிலத்திற்கும், வேளாண்மை வருவாய்க்கும் உச்சவரம்பு விதிக்கப்படுவானேன்? என்று கேட்கின்றனர். இந்த வாதத்தில் ஓரளவிற்கு உண்மை இருப்பதாகவே கூறலாம். இதனை முழுமையான உண்மையாகக் கருதுவதற்கில்லை. அதாவது, உச்சவரம்பு நிலத்திற்கு மட்டுமே யன்றி விவசாய வருமானத்திற்கு அல்ல என்பதைப் பலர் புரிந்து கொள்ளவில்லை. 1955-ல் ரூ. 3600-யை உண்மையான நிகர வருவாயாக நல்கிய நிலம், 1965-ல் அதைப்போல 4 மடங்கு அதிகமாக சுமார் ரூ. 14,000-க்கும் அதிகமான வருவாயை நல்கக்கூடும். அதாவது சராசரியாக மாதம் ஒன்றுக்கு ஒரு பண்ணையிலிருந்து ரூ. 1200 கிடைக்கக் கூடும். இந்தத் தொகை நகரத்தில் பெறக் கூடிய ரூ. 1500-க்கும் அதிகமான மாத வருவாய்க்குச் சமமாகவும் சில சமயங்களில், மாதம் ரூ. 2000-க்கு ஈடாகவும் இருக்கும். வேளாண்மை அல்லாத துறைகளிலிருந்து பெறக்கூடிய மாத வருவாய்க்கு, ரூ. 2000 அளவில் உச்சவரம்பு, கட்டப்படுகின்றவரை வேளாண்மைத் துறையில் விதிக்கப்படுகின்ற உச்சவரம்பு மட்டம் சமன் அற்றது என்று கூறுவதற்கில்லை. நிலம் என்றென்றும் தட்டுப்பாடுடைய ஒரு பொருளாகும். ஆனால் மூலதனத்தைப் பெருக்குவதற்கான வாய்ப்புக்கள் எண்ணிறந்தவைகளாக இருக்கின்றன. இதனால் நிலத்திற்கு மட்டும் உச்சவரம்பு விதிக்கவும் ஆனால் மூலதனத்திற்கு அஃது இன்றியும் இருக்கக் காண்கிறோம்.

உச்சவரம்பு மட்டங்கள் பல காரணிகளால் மாற்றம் அடைகின்றன. அவையாவன, மண்ணின் அமைப்பு, பல பயிர்களைக் கொண்ட வேளாண் அமைப்பு (Crop-complex), விவசாயிகளின் திறன்கள், உற்பத்தி நுட்பங்கள், மற்றும் [அப்போது] நிலவுகின்ற சமூகப் பொருளாதார நிலைமைகள் முதலியன. துவக்கத்தில் பல மாநிலங்கள் பல்வேறு நில உச்சவரம்பு மட்டங்களை நிர்ணயிக்கக் கருதியிருந்தன. திட்டக் கமிஷன் தான் நில உச்சவரம்பு மட்டத்தில் ஒருமித்தத் தன்மையை ஏற்படுத்தக் கருதியது. 'குடும்ப உடைமை' (Family holdings)யைப் போல மூன்று மடங்கு நிலம் அதிகபட்ச வரம்பாக இருக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது. தற்போதுள்ள சாகுபடி நுட்பங்கள், விலை நிலவரங்கள், முதலியவைகளை அடிப்படையாகக் கொண்டு ஆண்டு ஒன்றுக்கு, சராசரியாக, நிகர வருவாய் ரூ. 1200 நல்கக்கூடிய நிலத்தைக் 'குடும்ப உடைமை'யின் இலக்கணமாகக் கொள்ளலாம். ஒரு குடும்பத்தில் சராசரியாக ஐந்து பேர்கள் இருப்பதாகக் கருதப்பட்டது. எனவே, நிலத்திலிருந்து கிடைக்கும் ஆண்டு நிகர வருவாய், ரூ. 3600-க்கும் அதிகமாக இருக்கின்ற நிலங்களுக்கே உச்சவரம்பு விதிக்கப்படும்.

மாநிலத்திற்கு மாநிலம் உள்ள வேறுபாடுகள் மேலும் தொடர்ந்து நீடிக்கலாயின. எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம். ஆந்திரப் பிரதேசத்தில் தெலிங்கானாப் பகுதிகளிலும், மகாராஷ்டிரத்தில் மரத்துவடா பகுதிகளிலும், மைசூரில் கர்னாடகத்திலும், ஆண்டு ஒன்றுக்கு நிகர வருவாய் மட்டமான ரூ. 3600-ஐ அளிக்கக்கூடிய உடைமைகளை உச்சவரம்பு அளவாக அறிவித்தனர். இப் பகுதிகளில் உச்சவரம்பு உடைமைகளின் பரப்பு அளவு 18 ஏக்கர் முதல் 270 ஏக்கர் வரை உள்ளது. [பெப்சு (Pepsu) நீங்கலாக உள்ள] பஞ்சாபில் 30 'ஸ்டான்டெர்ட்' ஏக்கர்கள் (Standard Acres) அல்லது புன்செய் நிலம் 60 ஏக்கர் (60 dry acres) என்றும், மற்றும் இடம் பெயர்ந்த மக்களுக்கு இவை முறையே 50 'ஸ்டான்டெர்ட்' ஏக்கர்களாகவும், புன்செய் நிலம் 100 ஏக்கர்களாகவும் உள்ளன. கேரளாவில் நிலத்தின் வகைகளுக்கு ஏற்ப 15 முதல் 37½ ஏக்கர்கள் வரை இருக்கும் என்றும், உத்தரப் பிரதேசத்தில் குத்தகை வீதத்திற்கு ஏற்ப 40 முதல் 80 ஏக்கர்கள் வரை இருக்கும் என்றும் மசோதாக்களில் குறித்துள்ளார்கள். இவ்வாறே எதிர்காலத்தில் பெறக்கூடிய அதிக பட்ச நிலத்தின் அளவும் மாறின.

நில உச்சவரம்பை ஏற்படுத்துவதில் மாநிலங்கள் ஆரம்பத்திலிருந்தே அக்கறை காட்டவில்லை. நிரந்தரமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வேண்டிய ஆர்வமில்லாமலும் இருந்தன. பிரதிபலிக்கும் வகையில் சட்டசபை நடவடிக்கைகள் நத்தை வேகத்தில் அமைந்திருந்தன. நில உச்சவரம்பு ஒரு சீர்திருத்த சாதனமாகும். இதனைச் செம்மையாகப் பயன்படுத்துவதற்கு, ஒவ்வொரு குடும்ப அமைப்பிலும் உள்ள நிலத்தைப் பற்றிய முழுமையான மதிப்பீட்டு விவரங்கள் தேவைப்படுகின்றன. ஆனால் பல மாநிலங்களில் உரிமைப் பத்திரங்கள் முழுமையாக இல்லை. நில உடைமைகள் [பற்றிய] கணிப்பு மறு பகிர்விற்குக் கிடைக்கக்கூடிய நிலத்தின் உண்மை அளவை வெளிப்படுத்தியிருக்கக்கூடும். ஆர்வம் இல்லாமையாலும், உரிமைப் பத்திரங்களில் உள்ள குறைபாடுகள் காரணமாகவும், இத்தகைய கணிப்பை மேற்கொள்ளவில்லை. எல்லா மாநிலங்களும் இதில் ஒரே அளவிற்குத் தீவிரமாக ஈடுபடவில்லை. உண்மையில் பெரும்பாலான மாநிலங்களில் முழுமையான கணிப்பு விவரங்கள் இல்லை. இவ்வாறாக நில உச்சவரம்புத் திட்டத்தை யாரும் தீவிரமாக மேற்கொள்ளவில்லை. சட்டத்தை இயற்றுவதில் தாமதம் ஏற்பட்டது. சில இடங்களில் சட்டங்கள் இயற்றப்பட்ட போதிலும் அதனை அமுலாக்குவதில் அதிக காலதாமதம் ஏற்பட்டது. இத்தகைய காலதாமதம் காரண

மாக வரப்போகும் நில உச்சவரம்பு பற்றிய விவரங்களை யாவரும் அறியலாயினர். இதனால் பாதிக்கப்படலாம் என்று எதிர்பார்த்தவர்கள், தங்கள் நிலத்தின் ஒரு பகுதியை விற்றும், பாகப் பிரிவினை செய்தும், மற்றும் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும், பட்டாவை மாற்றியும், உச்சவரம்பு சட்டத்தினின்றும் தப்பிக்க முயன்றனர். 1959-க்கு முன்னரே பெரும்பாலான மாநிலங்களில் நில உச்சவரம்பு சட்டங்கள் இயற்றப்பட்ட போதிலும் அதிகக் காலதாமதம் காரணமாக அதனை நிறைவேற்றுவது சிரமமாக இருந்தது. உச்சவரம்பை 30 ஏக்கர் மட்டத்தில் ஏற்படுத்திய போதிலும், இதைவிட அதிகமாக உள்ள உடைமைகள் மிகச் சிலவாக இருந்தமையால் மறு பகிர்விற்கு நிலம் ஏதும் மிஞ்சவில்லை. இத்திட்டத்தைச்செயல்படுத்துவதில் அரசாங்கம் கணிசமாகச் செலவு செய்துள்ள அளவிற்கு, ஏற்ப அதிகப் பயன் விளையாது என்று கருதப்பட்டதால் இத்திட்டத்தை மேற்கொண்டு நிறைவேற்றுவது அவசியம்தானா என்று உண்மையாகவே சந்தேகிக்கலாயினர். உச்சவரம்பைப் பயன் உள்ளதாகச் செய்வதற்கு ஒரே வழிதான் உண்டு, ஒரு குறிப்பிட்ட தேதிக்கு முன்னர் ஏற்பட்ட எல்லா நில உரிமை மாற்றங்களையும் ரத்து செய்ய வேண்டும். ஆனால், அவ்வாறு செய்வதில் அரசியல் சட்ட அடிப்படையிலும், மற்றும் இதர வகைகளிலும் பல இன்னல்கள் எழக் கூடும். மொத்தத்தில் உபரியான நிலத்தைப் பெறுவதற்கு (உடைமையாளர்களுக்கு ஈட்டுத்தொகை கொடுத்து) ஏற்பட்ட ஒரு அரிய வாய்ப்பினை இழந்து விட்டோம். அவ்வாறு பெற்ற நிலத்தைக் கொண்டு சிறிய [பண்ணையாளர்களின்] நில உடைமைகளின் அளவை அதிகரித்து இருக்கலாம். அல்லது நிலம் இல்லாத விவசாயக் கூலிகளுக்குக்கொடுத்து இருக்கலாம். அல்லது கூட்டுறவுப் பண்ணைகளுக்கு ஊக்கம் ஏற்படும் வகையில் அவற்றைப் பயன்படுத்தி இருக்கலாம். அத்தகைய வாய்ப்பு இனிமேல் ஏற்படப்போவதில்லை. நில உச்சவரம்பை ஏற்படுத்துவதற்கான சட்டங்கள் சில மாநிலங்களில் நிறைவேற்றப்படவில்லை. மற்றும் சிலவற்றில் அவை ஏட்டளவில், சட்ட புத்தகங்களில் பதிவு செய்யப்பட்ட நிலையிலேயே உள்ளன. இந்திய நிலச்சீர்திருத்தங்களின் வரலாற்றில் ஒரு கருமைக் கறையாகவே இது இருக்கும். இறுதியில் உச்சவரம்பு சட்டங்களினால் ஏற்பட்ட நிகர பலன்கள் மிகக் குறைவாக—நமது கவனங்களிலிருந்து மறைந்துவிடும் அளவிற்கு மிகக் குறைவாக—உள்ளது.

5. சுருக்கம்

நிலச் சீர்திருத்தத் திட்டத்தின் ஒரு பகுதி மோசமாகவும், மற்றொரு பகுதி ஒளி மிகுந்தும் இருக்கின்றது. சுமார் 10 ஆண்டு

களுக்கும் அதிகமான காலத்தில், மிகவும் தீவிரமாகச் சட்டசபை, மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் பெருவாரியான போக்குகளைப் பின் வருமாறு குறிப்பிடலாம். பெரும்பாலான இடைநிலையாளர்கள் நீக்கப்பட்டனர். இதனுல் இரு வேறுபட்ட விளைவுகள் தோன்றின. முன்னுள் ஜமீன்தார்களுக்கு பூமிதாரி (bhoomidari) உரிமைகள் அல்லது சொந்த சாகுபடி உரிமைகள் வழங்கப்பட்ட இடங்களில் சிறந்த பண்ணை நிர்வாகமும், நவீன உற்பத்தி நுட்பங்களும் செறிந்த அளவில் உள்ளிடும்பொருள்களும் (input) மேற்கொள்ளப்படுவதால், ஒரு ஏக்கரின் உற்பத்தித் திறனும், தனி ஒருவரின் உற்பத்தித் திறனும் அதிகரிக்கலாயின. மாருக இவை நடைபெருத இடங்களில் வாரமுறை (Share-cropping) அதிகரித்தது. முன்பு தலத்தில் இல்லாத நிலக்கிழார்களாக இருந்தவர்கள், இப்போது தங்களைச் சொந்த சாகுபடியாளர்களாக அழைத்துக்கொள்கின்றனர். அவர்களுடைய நிலத்தை வாரக்குடியானவர்கள் பயிரிடுகின்றனர். இதற்கு முன்னர் பெற்று வந்ததைபபோல, விளைச்சலில் பெருவாரியான பங்கைப் பெற்று வருகின்றனர். இவ்வாறு வாரச் சாகுபடியை மேற்கொண்டபோதிலும், சட்டத்தின் இலக்கணப்படி, பண்ணைகளுக்கு மூலதனம் அளிக்கின்ற காரணத்தினுல், சொந்தச் சாகுபடியாளர்கள் என்று கூறிக்கொண்டு பலன் அடைகின்றனர். வாரக்குடியானவன் அல்லது வாரச் சாகுபடியாளன் பண்ணைகளுக்கு வேண்டிய மூலதனத்தில் ஒரு பகுதியாவது, அனைத்தையுமாவது அளிக்கின்றுர்கள் என்ற உண்மை பெரும்பாலும் கவனத்திலிருந்து மறைந்து விடுகின்றது. இதனுல் சுரண்டல் தன்மை உடைய வாரமுறை பல பகுதிகளில் தொடர்ந்து நீடிக்கலாயிற்று. சில பகுதிகளில் இவை மேலும் அதிகரித்துள்ளதாகக் கூறலாம்.

குடிவாரச் சீர்திருத்தங்களைத் திறம்பட அமுலாக்கியப் பகுதிகளில் வாரக்குடிகளின் நிலைமை முன்னேற்றம் அடைந்துள்ளது. இதன் பலனுக முதலீடும், உற்பத்தித் திறனும் அதிகரித்துள்ளன. அதே சமயம், வெளியேற்றங்களும் அதிகரித்துள்ளன. சுரண்டல் தன்மை உடைய குத்தகைகள் மறையவில்லை. நிலக்கிழார்களிடம் தொடர்ந்து உபரியான வருவாய் குவிந்து வருகின்றது. கிடைத்துள்ள ஆதாரங்களிலிருந்து அரசியல் விழிப்புணர்ச்சி அதிகமாக உள்ள பகுதிகளிலும், வசதியுடைய வாரக்குடியானவர்கள் உள்ள பகுதிகளிலும், குடிவாரச் சீர்திருத்தங்கள் அதிகம் பயன் உள்ள வகையில் அமுலாக்கப்பட்டுள்ளது.

9 Khusro, A. M., முன் கூறியபடி.

இந்த அளவிற்கு வசதிக்குறைவான, சிறிய வாரக் குடிகளைப் பொறுத்தவரைசரிவரஅமுலாக்கப்படவில்லை என்றுகூறவேண்டும்.[9]

உச்சவரம்பைப்பற்றிய தவறான வாதங்கள் மேற்கொள்ளப் பட்டன. அத்துடன் சட்டத்தை இயற்றுவதில் அனாவசியமான தயக்கம் ஏற்பட்டது. பின்னர் அதனைச் செயலாக்குவதிலும் அதிக காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இத்தகையதாமதங்கள் காரணமாக பெரிய நிலக்கிழார்களுக்குத் தங்களுடைய உடைமைகளைப் பிரிப் பதற்குப் போதிய அவகாசம் கிடைத்தது. பெரும்பாலான மாநிலங் களில் இயற்றப்பட்ட நில உச்சவரம்பு சட்டங்கள், சட்டப் புத்த கங்களை அலங்கரிப்பனவாகவே இருந்தன. இதனால் மறுபகிர்வுக்கு அதிக நிலம் கிடைக்கும் என்ற நம்பிக்கை வெறுமையாகியது. மொத்தத்தில் உச்சவரம்பைத் தவிர்த்து நமது அடிப்படையான குறிக்கோள்களை மனத்தில் கொண்டு பார்ப்போமானால், நிலச் சீர் திருத்தங்கள் ஓரளவிற்கு வெற்றியடைந்தும், ஓரளவிற்கு தோல்வி யடைந்தும் உள்ளன.

9. இரும்பு எஃகுத் தொழில்

ஆர். எஸ். பிஷ்த் (R. S. Bisht)

எம். பி. என். நம்பூதிரிபாத்
(M P. N. Namboodripad)

இன்றைய உலகில் சராசரியாக ஒருவர் பயன்படுத்தும் எஃகின் அளவைக் கொண்டு ஒரு நாட்டின் தராதர முன்னேற்றத்தை (அளந்து) அறியலாம். எல்லாத் தொழில்களும் எஃகைச் சார்ந்துள்ளன. பெரியதும், சிறியதுமானப் பொறிகளைச் செய்வதற்கு எஃகு தேவைப்படுகிறது. எனவே நிலையான தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையாக அதாவது தொழில் தேவைகளுக்குப் போதிய அளவுடைய எஃகை உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு இத் தொழில் வளர்ச்சி அடைந்து இருக்க வேண்டியது அவசியமாகும்.

இந்திய நிலையை ஆய்ந்து பார்க்கும் போது தெளிவற்ற பொருளாதார வளர்ச்சியைத்தான் காணமுடிகிறது. பொதுவான தொழில் வளர்ச்சி அதிக காலதாமதத்திற்குப் பின்னர் ஏற்படலாயிற்று.

அதன்பின் நீண்ட காலத்திற்குப் பொறி ஆக்கம், மூலதனப் பண்டங்கள், உற்பத்தி தொழில்கள் முதலியன தோன்றவில்லை. சுதேசத்தொழில்களுக்கு ஊக்கம் அளித்த சூழ்நிலைகள் அசாதாரணமானவை, எதிர்பாராதவை—அவை இரு உலகப் போர்கள் ஆகும். இந்தியச் சூழ்நிலையை இங்கிலாந்தின் தொழில் வளர்ச்சியின் பின்னணியில்தான் நாம் அறிந்து கொள்ள முடியும். தொழில் துறையில் தலையாய இடத்தைப் பெற்றுள்ள இங்கிலாந்து அதன்

தொழில் வளர்ச்சி வேகத்திற்கு ஏற்ப, உலக நாடுகளில் இடைவிடாது அங்காடியைத்தேடி அலைந்த வண்ணமாக இருந்தது.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் நிலவிய அரசியல் பொருளாதார சூழ்நிலைகள் ஆதார தொழில்களின் வளர்ச்சிக்குச் சாதகமாக இல்லை. குறிப்பாக இரும்பு எஃகுத் தொழிலின் வளர்ச்சி நெடுங் காலத்திற்கு ஏற்படவில்லை.

இத்தகைய சூழ்நிலையின் பின்னணியில் இரும்பு எஃகுத் தொழிலின் முன்னேற்றம் அமைந்துள்ளதையும் ஏற்றத் தாழ்வுகள் நிறைந்திருக்கக் காணலாம். நெடுங்காலத்திற்கு முன்னர் டமாஸ்கஸ் மற்றும் உட்ஸ் வாட்கள் (Damascus and woodze swords) தயாரிப்பதற்கான எஃகை உற்பத்தி செய்துள்ளோம். ஆனால் நமது அண்மைக்கால வரலாற்றில் அத்தகையச் சிறப்பு நிகழ்ச்சிகள் ஏதுமில்லை. 18 வது நூற்றுண்டின் பிற்பகுதியிலும், 19-வது நூற்றுண்டின் முற்பகுதியிலும் மேற்கொள்ளப்பட்ட சில முயற்சிகள் வெற்றி பெறவில்லை. 1875—ல் தான் வர்த்தக ரீதியாக இரும்பு உற்பத்தி செய்வதற்கான முயற்சி வெற்றியடைந்தது. பராக்கர் (Barakar) என்னும் இடத்தில் வங்காள இரும்பு எஃகு கம்பெனி (Bengal Iron and steel Co) ஒரு ஆலையை நிறுவியது. பின்னர் 1919—ல் இக்கம்பெனி சீரமைக்கப்பட்டபின்னர் வங்காள இரும்புக் கம்பெனி (Bengal Iron Company) என்று அழைக்கப்பட்டது. நவீன முறைகளில் இந்தியாவில் முதலாவதாக வார்ப்பு இரும்பை (pig iron) உற்பத்தி செய்தார்கள்.

இந்தியாவில் (பெரிய அளவில்) நவீன முறையில் எஃகு உற்பத்தி செய்த பெருமை காலம் சென்ற ஜாம்ஷெட்ஜி டாட்டா அவர்களைச்சாரும். அவர் தொழில்துறையில் புதுமைகாண விழைந்தவர். தொழில் துணிவும், வருங்காலத்தை முன்கூட்டியே அறியும் திறனும் பெற்றவர். அவரது வாழ்க்கை வரலாறு தொழில் புதுமை காண விழைபவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும். அவரை இந்திய எஃகுத் தொழிலின் தந்தை என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். ஜாம்ஷெட்ஜி அவர்கள் மிகப் பெரிய அளவில் நவீன விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தும் இரும்பு எஃகு ஆலையை நிறுவக் கருதினார் இதற்காக அமெரிக்க ஐரோப்பிய வல்லுநர்களின் துணையுடன் வங்காளம், பீகார் ஆகிய மாநிலங்களைச் சர்வே செய்தார். அவரது கனவு 1907-ல் நிறைவேறியது. பீகாரில், சாக்சி (Sakchi) என்னும் இடத்தில், இந்திய மூலத்தைக் கொண்டு டாட்டா இரும்பு எஃகு கம்பெனி (Tata Iron and Steel Co) நிறுவப்பட்டது. சாக்சியைப் பிற்காலத்தில்

ஜாம்ஷெட்பூர் என்று அழைக்கலாயினர். ஆனால் இதனைக் காண்பதற்கு முன்னமேயே 1903—ல் அவர் காலமாகி விட்டார். இரும்பு எஃகு ஆலைத் திட்டத்தைப்பல நிலைகளில் நிர்மாணித்தனர். 1911-ல் வார்ப்பு இரும்பு உற்பத்தி செய்யப்பட்டது. அதற்கு ஓர் ஆண்டிற்குப்பின்னர் எஃகுக் கட்டிகள் (Steel ingots) உற்பத்தி செய்யப்பட்டன. இக்கம்பெனியில் சுமார் ரூ. 232 லட்சம் டன்கள் கொள்ளளவு உடைய இரு ஊது உலைகளும்(blast furnace), 40 டன்கள் கொள்ளளவு உடைய 4 திறந்த உலைகளும் (open hearth furnaces), 180 செம்பு கோக்குக் கரி மூடு உலை அடுப்புக்களும் (Copper coke-ovens) இருந்தன. முதல் உலகப்போர் ஏற்படுவதற்கு முன்னர் இக்கம்பெனி நிலையான வகையில் இயங்கத் தொடங்கி விட்டது. சண்டை நடைபெற்ற காலத்தில், டாட்டா இரும்பு, எஃகு கம்பெனியானது அரசாங்கத்திற்கு 1500மைல்கள் நீளத்திற்குத் தண்டவாளங்களும், சுமார் 3,00,000 டன்கள் எஃகுப் பொருள்களும் அளித்தது. நேசநாடுகள் மெஸபடோமியாவில் அடைந்த வெற்றிக்கு இது முக்கியக் காரணமாக இருந்தது. போருக்குப் பின்னர் உற்பத்தியை விரிவு படுத்தும் திட்டத்தைக் கம்பெனி மேற்கொண்டது. அவை பல நிலைகளில் 1929-லும் 1933-லும் 1935 லும் நிறைவேற்றப்பட்டன. முடிவு பெற்ற எஃகு (finished steel) உற்பத்தி ஆண்டு ஒன்றுக்கு 6,00,000 டன்களாக உயர்ந்தது. இரண்டாவது உலகப்போர் ஆரம்பமான சமயத்தில் விற்பனைக்கு எஃகுகளின் உற்பத்தித்திறன் 8,00.000 டன்களுக்குச் சற்றுக் குறைவாக இருந்தது.

இந்திய இரும்பு எஃகுத் தொழிலின் வரலாற்றில் மற்றொரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ஒன்று உண்டு. 1918-ல் பாரக்கருக்கு அருகில் இந்திய இரும்பு எஃகு கம்பெனி (Indian Iron and steel Co Ltd) ஆரம்பிக்கப்பட்டது. 1937-ல் வங்காள எஃகுக் கழகம் (The Steel Corporation of Bengal Ltd) இந்திய இரும்பு எஃகுக் கம்பெனியுடன் இணைந்து எஃகு உற்பத்தி செய்யத் தொடங்கியது. பின்னர் 1953-ல் இரு கம்பெனிகளின் ஆக்கச் செலவுகளின் கட்டமைப்பை (ஆய்ந்து) பரிசீலனை செய்து சுங்க ஆய்வுக் குழு (Tariff Commission) அவைகளின் இணைப்பிற்குச் சிபாரிசு செய்தது.

இந்திய இரும்பு-எஃகுக் கம்பெனி ரூ. 3 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1925-ல் ஒவ்வொரு பங்கின் முகமதிப்பையும் (Nominal Value) ரூ. 100-லிருந்து ரூ. 50 ஆகக் குறைக்கப்பட்டமையால், மொத்த மூலதனம் ரூ. 1·5 கோடியாகக் குறைந்தது. அதே வகையில் மூலதன மதிப்பீடு மறுபடியும் ரூ 1.08 கோடியாகக் குறைக்கப்பட்டது. ஒவ்வொன்றும்

பத்து ரூபாய் வீதம் 39,19,880 சாதாரணப் பங்குகளை ஏற்படுத்தி ரூ. 5- கோடி மூலதனத்தைப் பெற்றனர். 1942—ம் ஆண்டு மார்ச் மீ 31-ம் தேதி அன்று கம்பெனியின் வெளியிட்ட மூலதனமும் (Issued Capital) ஒப்பிய மூலதனமும் (Subscribed Capital) மொத்தம் ரூ. 2.55 கோடியாக இருந்தது. 1951—ல் எஃகுக் கழகத்துடன் இணைக்கப்பட்டமையால் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 7.50 கோடியாக உயர்ந்தது.

வங்காள எஃகுக் கழகம் 1937-ல் ஆரம்பிக்கப்பட்டது. அதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ 10 கோடியாகவும், வெளியிடப்பட்ட மூலதனம் ரூ. 4. 49 கோடியாகவும் இருந்தது. பின்னர் இக் கழககம் இந்திய இரும்பு எஃகுக் கம்பெனி (IISCO) யுடன் இணைக்கப்பட்டதை முன்னமேயே கூறியுள்ளோம்.

1952 ஆம் ஆண்டின் "இரும்பு எஃகு கம்பெனிகள் இணைப்பு அவசரச் சட்டம்'' கொண்டு வரப்பட்டதன் விளைவாக, இந்திய இரும்பு எஃகுக் கம்பெனியும், வங்காள எஃகுக் கழகமும் 1953 ஜனவரியில் இணைந்தன. புதிய தேவைகளுக்கு ஏற்ப இவ்விரு அலகுகளின் மூலதனக் கட்டமைப்புக்களும் மாற்றி அமைக்கப்பட்டன, புதிய அலகின் அனுமதிக்கப்பட்ட மொத்த மூலதனம் ரூ. 8.80 கோடி. வெளியிடப்பட்டதும், ஒப்பியதுமான மூலதனம் ரூ. 7.88 கோடியாகும். இவ்வாறாகப் புதிய அலகின் அனுமதிக்கப்பட்ட மூலதனம், இணைப்பிற்கு முன்புள்ள இரு அலகுகளின் மொத்த அனுமதிக்கப்பட்ட மூலதனத்தைவிட குறைவாக உள்ளது. அதே சமயம், புதிய அலகின் வெளியிடப்பட்டதும், ஒப்பியதுமான மூலதனம் முன்பு இருந்த இரு அலகுகளின் வெளியிடப்பட்ட, ஒப்பிய மூலதனங்களின் கூடுதல்களைவிடச் சற்று அதிகமாக உள்ளது.

1953-ல் ஏற்பட்ட இணைப்பு மேற்கொண்டு கம்பெனி வளருவதற்குத் தூண்டுகோலாக அமைந்தது. இரும்பு எஃகுப் பொருள்களின் தேவைக்கான வரையும், அளவும், வளர்ந்து செல்வதாலும், பேரளவு உற்பத்திச் சிக்கனங்களின் பலனை எய்தும் நோக்கத்துடனும், பல நிலைகளில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டத்தை இக்கம்பெனி மேற்கொண்டது. இதற்குத் தேவையான மூலதனத்தைப் பெறுவதற்கு ஒவ்வொன்றும் ரூ. 10 வீதம் 51,83,708 சாதாரணப் பங்குகள் வெளியிடப்பட்டன. 1957-ம் ஆண்டு மார்ச் மீ 31-ம் தேதி கம்பெனியின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ 14 கோடியாகவும் ஒப்பிய மூலதனம் ரூ. 8.50 கோடியாகவும் இருந்தது. கம்பெனி சேமித்துக்கொள்ளக் காப்பு நிதியும்

இதர இனங்களிலிருந்து பெறக்கூடிய நிதியும் இதன் வளர்ச்சித் தேவைகளுக்குப் போதுமானதாக இல்லை. எனவே அதிகப்படியான நிதியைப் புதிய பங்குகளை விற்பதன்மூலம் பெறவேண்டியிருந்தது.

1921-ல் மைசூர் ராஜ்ய அரசாங்கம் பத்திராவதி என்னும் இடத்தில் ஒரு இரும்பு ஆலையைத் துவக்கியது. அதை இப்போது மைசூர் இரும்பு எஃகு ஆலை (Mysore Iron and Steel works) என்று அழைக்கிறார்கள். இந்தக் கம்பெனியின் வருடாந்திர உற்பத்தித் திறன் *25,000* டன்கள் முடிவு பெற்ற எஃகு ஆகும். இதைத் தவிர *16,000* டன்கள் அயம் கலந்த ஸிலிக்கான் (feno-silicon) உற்பத்தி செய்கிறார்கள். இது உயர்ந்த ரக எஃகு தயாரிப்பதற்கு மிகவும் இன்றியமையாதது.

1912-ல் டாட்டா இரும்பு எஃகு ஆலை ஏற்படுத்தப்பட்டதிலிருந்து *1939* வரை எஃகு உற்பத்தி நிதானமாக வளர்ச்சி அடைந்துள்ளது. கீழே கொடுக்கப்பட்டுள்ள உற்பத்தி விவரங்கள் இதனை தெளிவாக்கக் கூடும். (பார்க்கவும் அட்டவணை-*1*)

அட்டவணை-1

ஆண்டுகள்	உற்பத்தி டன்கள் *
1916	*99,000*
1921	*1,26,000*
1929	*4,00,000*
1933	*4,83,000*
1936	*6,04,000*
1938	*7,02,000*
1939	*8,42,905*

* ஆதாரம்: United Nations statistical year Book, 1958.

1939-ல் உலகப்போர் ஏற்பட்டது. போர் பொதுவாக எல்லாத் தொழில்களுக்கும், குறிப்பாக இரும்பு எஃகுத் தொழிலிற்கும் தோற்றுத நிலையில் பலனிக்கும். அரசாங்கத்திற்குப் படைக் கருவிகள், வெடிமருந்துகள் முதலியன அதிக அளவிற்குத் தேவைப்பட்டன. பிரிட்டிஷ் தொழிலின் உற்பத்தித் திறன் பெரிய அளவிற்குக் குறைந்துள்ளதால் நமது தேவைகளை அவற்றால் பூர்த்தி செய்ய இயலவில்லை. இந்நிலையில் தொழில் மேலும் வளர்ந்தது *1936*-ல் *843* லட்சம் டன்களாக இருந்த உற்பத்தி *1943*-ல் *11,5* லட்சம் டன்களாக உயர்ந்தது.

இரு போர்களும், 20-வது நூற்றுண்டின் முதல் பாதியில் உலகத்தையே அதிர்ச்சி அடையச் செய்தபோதிலும், அவைகளால் தான் இரும்பு எஃகுத் தொழில் துரித வேகத்தில் வளர்ச்சி அடைய முடிந்தது. போர்க் காலங்களில் பொதுவாகவும், அவசரமாகவும் தேவைப்படும் பொருள்களை இத் தொழில் உற்பத்தி செய்கிறது. பொதுவான தேவைகள் அதிகரிப்பதால் சிறு அளவில் புதிய ஆலைகள் ஏற்பட்டன. இவை புதிய துறைகளில் ஈடுபட்டதுடன் புதிய நுட்பத் திறங்களையும் கையாண்டன. ஆனல். பேரளவிற்கு உற்பத்தி செய்யும் ஆலைகள் அதிக சிரமத்திற்குள்ளாயின.

போர்க் காலங்களில் ஆலைப் பொறிகளும், சாதனங்களும் அதிக அளவிற்குக்கடினமானவகையில் பயன்படுத்தப்பட்டமையால் விரை விலேயே அவை பழுதடைந்தன. இதனுல் போர் முடிந்ததும் உற்பத்தி குறையலாயிற்று. கம்பெனிகள் போதிய அளவு நிதிவசதி பெருமையால், பெருவாரியான அளவு பதிலமர்த்திடும் (Replacement) வேலைகளும், நவீனமாக்கும் வேலைகளும், தேக்கமுற்றன. 1949-ல் உற்பத்தி மிகக் குறைவாக 9·76 லட்சம் டன்களாக இருந்தது. அதன் பின்னர் ஒவ்வோர் ஆண்டிலும் உற்பத்தி அதிகரிக்கலாயிற்று. தற்சமயம் உற்பத்தி, சுமார் 18 லட்சம் டன்கள்.

[தொழில்] காப்பின் வரலாறு

முதல் உலகப் போர் நடைபெற்ற காலத்தில் இத்தொழில் செம்மையாக வளர்ச்சி அடைந்தது. டாட்டா இரும்பு எஃகு ஆலை மட்டும் அங்காடியில் தனித்து இருந்தமையால், 1916—17 ஆண்டுகளில் சர்வாதீன நிலைமையைப் பெற்று விளங்கியதாகக் கூறலாம். ஜாம்ஷெட்பூரில் துவக்கப்பட்ட டாட்டா ஆலை முழு அளவு உற்பத்தி செய்ததுடன் உற்பத்தித் திறனை மேலும் விரிவுபடுத்தவும் எண்ணினர். 1922 லும் சூழ்நிலைச் சாதகமாகவே இருந்தது. மேற்கொண்டு 4 எஃகு ஆலைகளை இந்தியாவில் ஏற்படுத்த வேண்டும் என்று கருதி வந்தனர். இத்தொழில் இந்தியாவின் தொழில்வளர்ச்சிக்கு ஒரு வழிகாட்டியாகவும் தொழில் துணிவுக்கு ஒரு எடுத்துக் காட்டாகவும் இருந்தது. மேலும் 1922-ல் இறக்குமதி செய்யப்பட்ட இரும்பு—எஃகு பொருள்களுக்கு. 10 முதல் 15 விழுக்காடு வரை தீர்வை விதிக்கப்பட்டது. இத்தீர்வைகள் சுதேசிப்பொருள்களுக்கு ஓரளவிற்குக் காப்பாக அமைந்தது எனலாம்.

காலச்சக்கரத்தின் சுழற்சியில் இத்தொழில் பாதகமான சூழ்நிலையை 1921-22 ல் கடக்கவேண்டியிருந்தது. எஃகின் விலை திடீரென்று வீழ்ச்சி அடைந்தது. இறக்குமதி செய்யப்பட்ட எஃகின் விலை இந்தியாவின் ஆக்கச் செலவு மட்டத்தைவிடக் குறை

வாக இருந்தது. 1914 க்கும் 1923 க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் பொதுவான விலைகளின் மட்டம் 60 சதவீதம் அதிகரித்துள்ள போதிலும், இறக்குமதி செய்யப்பட்ட எஃகுப் பொருள்களின் விலை 20 முதல் 25 சதவீதமே அதிகரித்துள்ளன. அக்காலத்தில் அரசாங்கம் "தெரிவுப் பாதுகாப்பு" (Discriminating protection) எனப் பொதுவாக விவரிக்கப்படுகின்ற ஒரு முறையைப் பின்பற்றினர். டாட்டா கம்பெனியினர் சரக்கு வரி போர்டினிடம் இறக்குமதி செய்யப்படும் எல்லா இரும்பு எஃகுப் பொருள்களின் மீதும் 33¼ விழுக்காடு தீர்வை விதிக்குமாறு கேட்டுக்கொண்டனர். (சரக்கு வரி போர்டு-Tariff Board) இறக்குமதி செய்யப்பட்ட எஃகுப் பொருள்களில் 15 விழுக்காடு பெருமான விகிதத் தீர்வையும் (ad valorem) எஃகுத் தண்டவாளங்களில் 10 விழுக்காடுதீர்வையும் சில குறிப்பிட்ட பொருள்களின் மீதான தீர்வை இரு மடங்கு அல்லது இதைவிட அதிகமாகவும் தீர்வை விதிக்கும்படி சரக்கு வரி போர்டு சிபாரிசு செய்தது. இதற்கு அடிப்படையாக அமைந்த ஒரு மதிப்பீட்டை இங்குக் குறிப்பிடவேண்டும். இறக்குமதி செய்யப்படுகின்ற ஒரு டன் எஃகின் சராசரி விலை ரூ. 140 என்றும் மதிப்பிடப் பட்டுள்ளது. ஆனால், உள்நாட்டில் ஒரு டன் எஃகின் சராசரி விலை குறைந்தபட்சம் ரூ. 180 - ஆக இருக்கவேண்டும் என்றும், அப்போதுதான் தொழிலின் ஆக்கச் செலவிற்கும் உற்பத்தியாளர்களின் நியாயமான லாபத்திற்கும் போதுமானதாக இருக்கும் என்றும், இத்தொழிலின் வளர்ச்சிக்கு இது அத்தியாவசியமானது என்றும் கருதப்பட்டது. போர்டின் சிபாரிசின்படி 1924-ல் எஃகுத்தொழில் காப்புச் சட்டம் நிறைவேற்றப் பட்டது. அதன்படி பல பொருள்களுக்கு மாறுபடுகின்ற வீதத்திலும்,வேறுபடும் வகைகளிலும் காப்புத் தீர்வைகள் விதிக்கப் பட்டன. அவைகளில் சில குறித்த வீதவரியாகவும் (specific) சில பெறுமான விகிதத் தீர்வையாகவும் (ad-valorem) இருந்தன. அத்துடன் எஃகுத் தண்டவாளங்கள் இணைப்பு இருப்பு-கட்டைகள் (fish plates) ரயில்வே பெட்டிகள் முதலியவைகளின் உற்பத்திக்கு அரசாங்கக் கொடைகள் வழங்கப்பட்டன.

இக்காலத்தில் சுதேசித் தொழில்கள் இறக்குமதி செய்யப் படும் பொருள்களுடன் போட்டியிட இயலாது இருந்தன. அதற்கு இரு காரணங்கள் உண்டு. இக்காலத்தில் உள்நாட்டின் ஆக்கச் செலவு அதிகரித்தது; ஐரோப்பாவில் உள்ள எஃகுத் தொழில் மந்தத்தினால் பாதிக்கப்பட்டமையால் இறக்குமதிப் பொருள் களின் விலையும் அசாதாரணமாகக் குறைந்து இருந்தன. 1924-ம் ஆண்டு கோடையில் மற்றும் ஒரு பாதகமான சூழ்நிலை குறுக்கிட லாயிற்று. ரூபாயின் ஸ்டர்லிங் மதிப்பு 1 ஷில்லிங், 4 பென்ஸி

லிருந்து, 1 ஷில்லிங் 6 பென்ஸ் ஆக உயர்ந்தது. இதன் காரணமாக சரக்கு வரி போர்டின் கணிப்புக்கள் தலைகீழாகிவிட்டன. பாது காப்பினை உயர்த்தும்படி இத்தொழில் அதிபர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தை மறுபடியும் கோரினர். ஆனால், அரசாங்கம் வேறு விதமாக முடிவு செய்தது. அப்போதுள்ள தீர்வைகளுடன், உற்பத் தியின் அடிப்படையில் கொடை அளிப்பது பொருத்தமாக இருக் கும் என்று கருதினர். எனவே அரசாங்கம், பூர்த்தி செய்யப்பட்ட எஃகிற்கு டன் ஒன்றுக்கு ரூ. 20 வீதம் எஃகுக்கட்டிகளின் மாத உற் பத்தியில் அதிகபட்சம் 70 விழுக்காட்டிற்குக்கொடை அளித்தது. இந்தக் கொடை 1925-ம் ஆண்டு செப்டம்பர்வரை கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

1925 ல் சரக்கு வரி போர்டு அரசாங்கத்தின் கொடையைப் புதுப்பிக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. புதிப்பிக்கப்பட்ட கொடைவீதம் டன் ஒன்று ரூ. 18- ஆக இருக்கவேண்டும் என்றும் இது 1927 வரை நீடிக்கவேண்டும் என்றும் சிபாரிசுசெய்தது.ஆனால். அரசாங்கம் இந்த சிபாரிசை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. டன் ஒன்றுக்கு ரூ. 12- வீதம் அரசாங்கக் கொடை அளிக்கப்படும் என்றும், மொத்தத்தில் அரசாங்கம் ரூ. 60 லட்சம் கொடுக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது. 1927 ம் ஆண்டில் மறுபடியும் சரக்கு வரி போர்டின் பரிசீலனைக்கு இப்பிரச்சினை வந்தது. இந்த போர்டு மேற்கொண்டு 7 ஆண்டுகள் காலத்திற்குப் பாதுகாப்பு அளிக்கப் படவேண்டும் என்றும், பாதுகாப்பு அளிக்கும் விதம் மாற்றப்பட வேண்டும் என்றும் கூறியது. இதன் சிபாரிசுகள் சிறு மாற்றங் களுடன் 1927-ல் சட்டமாக இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி இறக்குமதியாகும் செய்யப்பட்ட எஃகுப் பொருள்களின் தன் மைக்கு ஏற்ப, அடிப்படைத் தீர்வைகள் வேறுபட்டன. இத்தீர்வை கள் தொடர்ந்து 7 ஆண்டுகாலத்திற்கு விதிக்கப்படும். பெரும் பாலும் எல்லாப் பொருள்களின் மீதான தீர்வைகளும், 1924- லிருந்து 1927 வரையில் அமுலாக்கப்பட்ட தீர்வையினின்றும் குறை வாகவே இருந்தன. பிரிட்டனைத் தவிர ஏனைய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பல எஃகுப் பொருள்களுக்கு அதிகப்படி யான தீர்வை விதிக்கப்பட்டது. எனவே, ஐரோப்பா கண்டத்தி லிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எஃகுப்பொருள்கள் முன்பு இருந்ததைவிட அதிக விலையில் விற்க வேண்டியதாயிற்று. அதே சமயம் இறக்குமதி செய்யப்பட்ட தகரத் தகடுகளின் (Tin-Plate) மீதான தீர்வை டன் ஒன்றுக்கு ரூ. 85 யிலிருந்து ரூ. 48 ஆக குறைக்கப்பட்டது. எஃகுத் தொழிற்கு அரசாங்கம் ஒரு குறிப் பிட்ட காலம்வரை, குறிப்பிட்ட அளவிற்கு உதவியளிப்பதாக உறுதி அளித்தது. அதே சமயம் பிரிட்டிஷ் பொருள்களுக்கு முன்

உரிமைகள் (preference) வழங்கும் ஒரு கோட்பாடு புதிதாக ஏற்படலாயிற்று. 1934-ல் ஏழு ஆண்டுகாலக் கெடு முடிவுற்றமையால் பாதுகாப்பு மறுபடியும்புதுப்பிக்கப்பட்டது. முடிவாகக்கூறவேண்டுமானல் 1923-ம் ஆண்டுமுதல் தெரிவுப் பாதுகாப்புக் (Descriminating-protection) கொள்கை உருவாக்கப்பட்டதுஎன்றும், இதனல் முழுமையான நன்மைகள் ஏற்படவில்லையானலும், ஓரளவிற்கு இத்தொழிலின் வளர்ச்சிக்கு உதவியாக இருந்துள்ளது என்றும் கூறலாம். இரு உலகப்போர்களும் இத்தொழிலின் முன்னேற்றத்திற்கு அவசியமான நம்பிக்கையைக் கொடுத்தன. இது எவ்வாறு ஏற்பட்டபோதிலும் அதிகப்படியான உற்பத்தித்திறன் இல்லாத பட்சத்தில் இந்தியாவின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு இருக்கும்.

1934ம் ஆண்டில் சரக்கு வரிவிதிப்பு விசாரணையின் விளைவாகக் காப்புத்திட்டம் ஒன்று அனுமதிக்கப்பட்டது. இது ஏழு ஆண்டு காலத்திற்கு 1941 ஆம் ஆண்டு மார்ச் மீ 31 ந் தேதி வரை, அமுலில் இருக்கும். ஆனல், இந்தக் காலவரம்பு முடியும் முன்னர் இரண்டாவது உலகப்போர் ஏற்பட்டுவிட்டது. இறக்குமதியாகும் எஃகின்மீதான காப்புத்தீர்வைகளை நீடிப்புச் சட்டங்கள் மூலமாக அவ்வப்போது நீடிக்கப்பட்டன. கடைசியாக இது ஓர் ஆண்டு காலத்திக்கு 1947 ம் ஆண்டு மார்ச் மீ 31-ம் தேதி வரை நீடிக்கப்பட்டது. போர் தொடங்கியதும் அரசாங்கம் எஃகு விலைகளை 1939 ம் ஆண்டு அக்டோபர் மீ 1 ம் தேதியின்போது நிலவிய விலை மட்டத்திலேய நிலைத்து (freeze) இருக்குமாறு செய்தனர். ஆக்கச் செலவில் (ஏற்படுகின்ற) அதிகரிக்கின்ற அளவிற்கு மட்டுமே விலை உயர்வு அனுமதிக்கப்பட்டது.

போர் முடிந்த பின்னர் அரசாங்கம் எஃகு (பொருள்களின்) விலைகளின் மீதான கட்டுப்பாட்டை நீக்கவில்லை. போர் ஏற்படுவதற்கு முன்னர் இருந்த காப்புத்தீர்வைகள் முறைக்குப் பதிலாக சட்டப்படி விலையை அவ்வப்போது வர்த்தக வரி போர்டு (தற்சமயம் சுங்க ஆய்வுக்குழு) நிர்ணயிக்கும் ஒரு முறையை ஏற்படுத்தினர். அவ்வப்போது விலையை நிர்ணயிப்பதற்கான அடிப்படை பின் வருமாறு; உற்பத்தியாளர்களின் நியாயமான ஆக்கச்செலவு, தேய்மானம்,-சில சலுகைகள் முதலியவற்றுடன் மொத்த மூலதனத்தில் 8 விழுக்காடு லாப ஈவும் அனுமதிக்கப்படும்.

இரும்பு எஃகுத் தொழிலுக்குக் காப்பு தேவைப்படாத காரணத்தினல் 1947-ம் ஆண்டு ஏப்ரல் மீ 1ம் தேதி முதல் கைவிடப்பட்டது. இருந்தபோதிலும் முன்பு இருந்த காப்புத்தீர்வைகள் தொடர்ந்து வருவாய் (Revenue duties) தீர்வைகளாக நீடிக்கலாயின.

இந்தியாவில் பின்பற்றப்பட்ட சுங்கக் காப்புக்கோட்பாட்டை முக்கியமாக இது செயலாக்கப்பட்ட விதத்தைப் பொருளாதர அறிஞர்களும், மற்றும் பலரும் கண்டனம் செய்துள்ளனர். அதனை உருவாக்கும்போது காப்புக் கோட்பாட்டினால் சமுதாயம் அல்லது சமூகத்திற்கு ஏற்படக்கூடிய அதிகப்படியான செலவுகள் பற்றிப் போதிய அளவு கவனம் செலுத்தவில்லை. இரும்பு எஃகு தொழிலிற்கு எத்தகைய காப்பும் தேவைப்படாமல் இருப்பது ஒரு நற்காலமாகும். எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இன்னல்கள் ஓரளவிற்கு அந்நிய நாடுகள் வேண்டுமென்றே தங்கள் சரக்குகளைக் குறைந்த விலையில் இந்தியாவில் விற்பனை செய்வதற்காகக் குவிப்பதன் காரணமாகத் தோன்றக்கூடும். ஆனால் உடனடியாக உள்ள எதிர்காலத்தில் இத்தகைய வாய்ப்புக்கள் ஏற்படுவதற்கில்லை என்று கூறலாம், 'தொழில் கொள்கை அறிக்கையில் இந்திய அரசாங்கம் பின் வருமாறு கூறி உள்ளது: "நேர்மையற்ற போட்டியைத் தவிர்க்கவும், இந்தியாவின் வளங்களை அதிகஅளவில் பயன்படுத்தவும், நுகர்வோர் நலன் புறக்கணிக்கப்படாமல் இருக்கவும் உதவுகின்றவகையில் அரசாங்கத்தின் சுங்கக் கொள்கை அமைக்கப்படும்."

இரண்டாவது உலகப் போர் சமயத்தில் உற்பத்தி

இரண்டாவது உலகப் போர் சமயத்தில் *1939*-ல் *842 905* டன்களாக இருந்த உற்பத்தி, *1943* ல் *1,149, 308* டன்களாக உயர்ந்தது. போர் நடைபெற்ற சமயங்களில் உற்பத்தி மட்டங்கள் உயர்ந்த நிலையிலேயே இருந்தன. அதற்காகப் புதிய இயந்திரங்கள், சாதனங்கள் முதலியன சேர்க்கப்படவில்லை. அப்போது இருந்த உற்பத்தி திறனை அளவிற்கும் அதிகமாகப் பயன்படுத்தியமையால், உற்பத்தி மட்டம் உயர்ந்த நிலையில் இருந்தது. இயற்கைக்கு மாறுபட்ட நிலையில் உள்ள போர்ச்சூழல்கள் தொழிலின் வளர்ச்சிக்குத் தற்காலிகமாக ஊக்கம் அளித்தன. அதே சமயம், போர் முடிவு பெற்றபின்னர் இதில் ஒரு தற்காலிக நெருக்கடி ஏற்பட்டது. இதற்கு மிகை உற்பத்தியினால் ஏற்பட்ட தேய்மானம் முக்கிய காரணமாகும்.

1945 முதல் *1947* வரையிலான காலத்தில் எஃகுத் தொழிலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை. உள்நாட்டில் குறைந்த விலையில் உற்பத்தியாகும் எஃகு பற்றாக்குறையாக இருந்தமையால் உயர்ந்த விலையில் அதிக அளவு இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எஃகுத் தொழிலை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்வகையில் ஆய்ந்து கூறுமாறு அரசாங்கம் வர்த்தகவரி போர்டைக் கேட்டுக்கொண்டது. போர்டு

தன்னுடைய அறிக்கையில் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட எஃகிற்கு வைப்பு விலைத் திட்டத்தை (Retention price scheme) சிபாரிசு செய்தது. எஃகு உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளையும், நாட்டின் எஃகுத் தேவைகளையும் ஆய்ந்து கூறுவதற்கு 1945-ல் குழுப்பட்டி (panel) ஒன்று நியமிக்கப் பட்டது. இவைகளைத் தவிர, நாட்டில் அதிகப்படியாக எஃகு உற்பத்தி செய்யவும் பெரிய அளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வில்லை.

போர் முடிவு பெற்ற காலத்தில் விரிவாக்கம்

1947-ல் நாடு விடுதலை பெற்ற பின்னர் இந்திய அரசாங்கத்தின் கொள்கையில் மாற்றம் இன்றியமையாததாக இருந்தது. தன் ஆற்றலில் இயங்கும் (Self generating economy) பொருளாதார அமைப்பை உருவாக்கும் வகையில் இக்கொள்கையை அமைக்க வேண்டி இருந்தது. இத்தகைய பொருளாதார அமைப்பில் இரும்பு எஃகுத் தொழில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. ஒரு நாட்டின் பொருளாதார "உள் கட்டமைப்பின்" செறிவை வெளிக் காட்டும் குறியீட்டு எண்களாக தலா (சராசரி)எஃகு உற்பத்தியும் எஃகு நுகர்வும் அமைந்துள்ளன. 1958-59 ல் இந்தியாவில் சராசரி யாக நுகரப்பட்ட எஃகுப் பொருள்களின் அளவு 22 பவுண்டாக இருந்தது. ஆனால் பிரிட்டனில் (U.K) இந்த அளவு 317 பவு. ஆகவும், அமெரிக்காவில் (U S A) 842 பவு. ஆகவும், ரஷ்யா (U S S R) வில் 468 பவு. ஆகவும் இருந்தன. இந்தியாவின் மொத்த எஃகு உற்பத்தி, வளர்ச்சி பெற்ற அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகளின் உற்பத்தியைவிடக் குறைவாக இருப்பதுடன் சீனாவின் உற்பத்தியைவிடவும் குறைவாக உள்ளது. பல நாடுகளில் எஃகு உற்பத்தி, செய்யப்படுகின்ற விவரங்கள் (எஃகுக் கட்டிகளின் வடிவில்) கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (பார்க்கவும் அட்டவணை-2)

அட்டவணை-2

நாடுகள்	ஆண்டு உற்பத்தி (மில்லியன் டன்கள்)
அமெரிக்கா (U.S.A)	102.2
ரஷ்யா (U S S R)	51.0
மேற்கு ஜெர்மனி	24.5
ஜப்பான்	12.5
பிரிட்டன் (U. K)	22.0
சீனா	8.0
இந்தியா	2.0

இவ்வகையில் இந்தத் தொழிலின் வளர்ச்சிக்கான அரசாங்கத்தின் கொள்கை, ஆரம்பத்திலிருந்தே தெளிவாக விளக்கிக் கூறப்பட்டு இருந்தது. 1948-ல் தொழில் கொள்கைத் தீர்மானம் வெளியிடப்பட்டது. அதில் ஆதாரமானதும், போர் முக்கியத்துவம் பெற்றதுமான தொழில்களின்பட்டியலில் எஃகுத்தொழில் இணைக்கப்பட்டு இருந்தது. இதன் எதிர்கால வளர்ச்சி அரசாங்கத்தினுடைய பொறுப்பாக இருந்தது. 1956-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்பட்ட தொழில் கொள்கைத் தீர்மானத்தில் இது மறுபடியும் உறுதி செய்யப்பட்டது. இந்த இரு தீர்மானங்களின்படி, தனியார் துறையில் இயங்கி வருகின்ற நிறுவனங்களை அரசாங்க உடைமைகளாக்கமாட்டா. ஆனால், இதைப்பற்றிய இறுதியான தீர்மானம், இன்னும் சிலஆண்டுகளில் இந்த நிறுவனங்களின்செயல் [திறன்] (operational results) முடிவுகளைப் பொறுத்து. மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

1947-ல் எஃகுத் தொழிலில் நான்கு ஆலைகள் இருந்தன. டாட்டா இரும்பு எஃகுக் கம்பெனி, இந்திய இரும்பு எஃகுக் கம்பெனி, வங்காள எஃகுக் கழகம், மற்றும் பத்திராவதி ஆலை முதலியன. பத்திராவதியில் உள்ள ஆலை அரசாங்கத்தின் உடைமையாகப் பொதுத்துறையில் உள்ளது. ஏனைய ஆலைகள் தனியார் துறையில் உள்ளன. இந்த ஆலைகளின் மொத்த உற்பத்தித் திறன் 1.2 மில்லியன் டன்கள். போர்க்காலத்தில் பெரும்பாலான ஆலைகள் அதிக சிரமப்பட்டு இயங்கி வந்தன. எனவே போர் முடிந்தவுடன் இந்த ஆலைகளில் உள்ள இயந்திரங்கள் சாதனங்கள் முதலியன உரிய காலத்திற்கு முன்னரே, பழுது அடைந்தன. இவற்றிற்குப் பதிலமர்த்துவதிலும் நவீனமாக்குவதிலும் தேக்கம் ஏற்பட்டமையால் உற்பத்தியின் அளவு குறைந்தது. 1949-ல் இது மிகக் குறைந்த நிலையில் 9·76 லட்சம் டன்களாக இருந்தது. இருந்த போதிலும் அந்த ஆண்டிலிருந்து உற்பத்தியில் முன்னேற்றம் ஏற்படலாயிற்று. பெரிய ஆலைகள் சிறிய அளவில் புதுப்பிக்கப் பட்டதுதான் இதற்கு முக்கியக் காரணமாகும்.

1945-க்குப் பின்னர், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பமாகும் காலம் வரை, பல புதிய எஃகு ஆலைகளை அமைப்பதற்கான யோசனைகள் கூறப்பட்டன. பல திட்டங்கள் பரிசீலிக்கப் பட்டன. 1945-ல் இத் தொழிலின் வளர்ச்சிக்கான திட்டத்தைத் தயாரிப்பதற்காக 1945-ல் குழுப்பட்டி ஒன்றை அரசாங்கம் நியமித்தது. குழுப்பட்டியின் சிபாரிசின் பேரில், 5 லட்சம் டன் எஃகு உற்பத்தி செய்யும் திறன் உடைய இரு ஆலைகளை ஏற்படுத்து

வது என்று முடிவு செய்தனர். இரண்டு அந்நிய பொறியியல் நிறுவனங்கள் ஆலோசனைக்காக (Consultants) நியமிக்கப்பட்டன. அவற்றின் அறிக்கை 1949-ல் தயாராகி விட்டது. 10 லட்சம் டன்கள் எஃகுக் கட்டிகள் உற்பத்தி திறன் உடைய ஆலையை நிர்மாணிப்பதற்கு ரூ 90 கோடி ரூபாய் ஆகும் என்று ஆலோசகர்கள் மதிப்பிட்டனர். அது சமயம் போதிய வசதிகள் இல்லாத காரணத்தினால், அரசாங்கம் இந்த யோசனைகளைக் கைவிட வேண்டியிருந்தது. தற்சமயம் பின்நோக்கிப் பார்க்கும் போது அரசாங்கம் இவ்வாறு ஆலை அமைக்கும் திட்டத்தைக் கைவிடமுடிவு செய்ததை நாட்டிற்கு ஏற்பட்ட ஒரு இழப்பாகக் கருதவேண்டியிருக்கிறது வேண்டிய பெரும்பாலான எஃகுப் பொருள்கள் இறக்குமதி செய்யவேண்டியிருப்பதாலும். இத்தகைய செலவுகளை ஆண்டு தோறும் திரும்பத் திரும்ப மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், நமது அந்நிய மாற்று இருப்புக்கள் பெரிய அளவில் குறையலாயின.

எஃகுத் தொழிலின் வளர்ச்சி பற்றி நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னரே மீண்டும் சிந்திக்கலாயினர். 1948 முதல் 1950-க்குள்ளான காலத்தில் புதிய எஃகு ஆலைகளை நிர்மாணிக்கும் வேலையைத் தொடங்கி இருந்தோமானால், இரண்டாவது திட்ட ஆரம்பத்திற்குள் எஃகைப் பொறுத்தவரை இந்தியா தன்னிறைவு எய்தியிருக்கக் கூடும். புதிய எஃகு ஆலைகளை அமைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, இரண்டாவது திட்டத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் பெருவாரியான அளவிற்கு எஃகு இறக்குமதி செய்யப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் எஃகு இறக்குமதி பற்றிய விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. [1]. (பார்க்கவும் அட்டவணை-3)

அட்டவணை 3

ஆண்டுகள்	மதிப்பு (கோடி ரூபாய்களில்)
1955	*59.39*
1956	*131.00*
1957	*167.15*
1958	*97.80*
1959 [ஜனவரி- அக்டோ]	*70.33*
மொத்தம் :	*524.67*

10 லட்சம் டன் எஃகு ஆலையை நிர்மாணிக்கும் செலவு, 1949-ல் ரூ. 90 கோடியாக இருக்கும் என்று ஆலோசகர்கள் மதிப்பிட்டனர். புதிய ஆலையை நிர்மாணிக்கும் செலவு மிக அதிகமாக உயர்ந்துள்ளமையால் அதே அளவு ஆலைக்கு சுமார் ரூ. 150 முதல் ரூ. 180 கோடி வரை செலவாகும் என்று கருதப்படுகிறது. இவ்

வாறுக அமைந்த பல காரணிகள் நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பல வகைகளில் பாதித்தன. அவை பின்வருமாறு.

1. எஃகு ஆலைகளை நிர்மாணிக்க இறக்குமதி செய்யப்படும் சாதனங்களின் செலவு அதிகமாக உயர்ந்து உள்ளமையால், அதிக அளவு அந்நிய மாற்றை இந்த இனத்திற்காக மட்டும் செலவிட வேண்டியிருந்தது.

2. இரண்டாவது திட்டத் துவக்கத்திலிருந்து பொதுவாக நிலவி வரும் அந்நிய மாற்றுப் பிரச்சினை காரணமாக எஃகு இறக்குமதி பெரிதும் குறைக்கப்பட்டது. இதனால், அதிக அளவிற்கு எஃகுப் பொருள்களைப் பயன்படுத்தும் தொழில்கள், உற்பத்தித் திறனை (Installed Capacity) விடக் குறைந்த அளவில் இயங்க லாயின.

3. எஃகு உற்பத்தி போதிய அளவு இல்லாததன் காரணமாக சமூக முதல் பொருளாகக் கருதப்படும் இரயில்வேயின் வளர்ச்சியும் பொறி ஆக்கத் தொழில்களின் (machine-building) வளர்ச்சியும் தாமதித்தன,

உலக பாங்கின் ஆலோசனைப்படி 1952-ல் அதிகப்படியான எஃகுத் தேவையைப் பரிசீலிப்பதற்காக 'நுட்பக் குழு' (Technical-Mission) ஒன்று நியமிக்கப் பட்டது. 1958-வது ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட எஃகு உற்பத்தியின் அளிப்பில் 4,00,000 முதல் 5,00,000 டன்கள் வரை பற்றாக்குறை இருக்கும் என்று மதிப்பிடப் பட்டது. அடுத்த இரு ஆண்டுகளுக்குள் இந்த மதிப்பீட்டை மறுபடியும் அதிகரிக்க வேண்டியிருந்தது. முதல் திட்டக் காலத்தில் எஃகுப் பொருள்களைப் பயன்படுத்தும் தொழில்கள் எதிர் பார்த்ததை விட அதிக விரைவில் வளர்ந்தன.

1953-ல் இந்திய அரசாங்கம் பொதுத்துறையில் ஒரு எஃகு ஆலையை அமைப்பதற்காகக் 'குருப்&டிமாக்' (Krupp and Demag) என்ற ஜெர்மன் கம்பெனியுடன் பேச்சு வார்த்தைகள் தொடங் கியது. 5 லட்சம் டன்கள் திறனுடைய எஃகு ஆலை ஒன்றை ரூ. 80-கோடி செலவில் நிர்மாணிப்பதற்கு ஜெர்மன் கம்பெனியுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது. இத் திட்டத்தை நிறை வேற்றுவதற்கு முன்னர் எஃகுத் தேவையை அறிவதற்கு அர சாங்கம் மற்றொரு சர்வே நடத்தியது. தனியார் துறையில் உள்ள எஃகு ஆலைகளின் உற்பத்தியை அதிகரித்த பின்னரும் எஃகுக் கட்டிகளின் உற்பத்தியை விட, தேவை 30 லட்சம் டன்கள் அதிகமாக இருக்கும் என மதிப்பிடப் பட்டது. அதற்கிணங்க

1 (அ) Monthly statistics of Froreign Trade in India. மற்றும்
(ஆ) Monthly Abstract of statistics:

இந்திய-ஜெர்மானியக் கூட்டு முயற்சியில் 10 லட்சம் டன்கள் எஃகுக் கட்டிகள் தயாரிக்கும் ஆலை ஒன்று ரூர்க்கேலா (Rourkela) என்னுமிடத்தில் நிறுவப்பட்டது.

அதன் பின்னர், பொதுத்துறையில் மேலும் இரண்டு எஃகு ஆலைகளை ஏற்படுத்த அரசாங்கம் தீர்மானித்தது. அதன்படி எஃகுக் கட்டிகளை உற்பத்தி செய்வதற்கு, 10 லட்சம் டன்கள் திறனுடைய எஃகு ஆலை ஒன்றைப் பிலாய் (Bhilai) என்னும் இடத்தில் அமைப்பதற்கு ரஷ்ய அரசாங்கத்துடன் (USSR) 1955ல் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளப் பட்டது. மூன்றாவது எஃகு ஆலை துர்க்காப்பூரில் அமைக்கப்பட்டது. இதனை அமைப்பதற்குப் பிரிட்டிஷ் எஃகுக் கம்பெனிகளின் கூட்டு நிறுவனமான இந்திய எஃகு நிர்மாணக் கம்பெனி (Indian Steel construction-company Ltd, London)யுடன் 1956-ல் உடன் படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

பொதுத்துறைகளில் எஃகு ஆலைகளை நிறுவுவதற்கான அடிப்படை முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டு வந்த சமயத்தில், பிர்லா சகோதரர்கள் (Birla Brothers) ரூ. 100 கோடி செலவில் 10 லட்சம் டன்கள் எஃகுக் கட்டிகள் தயாரிக்கும் எஃகு ஆலைக்கான திட்டத்தைக் காட்டி அரசாங்கத்திடம் அனுமதி கோ[illegible] தொழில் கொள்கைத் தீர்மானத்திற்கு எதிராக இது இருந்[illegible] யால் இந்த கோரிக்கையை அரசாங்கம் மறுத்து விட்டது.

1950-51 முதல் தனியார் துறையினர் எஃகு உற்பத்தியை அதிகரிப்பதற்கு திட்டமிடலாயினர். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே இந்திய இரும்பு எ.ஃகுக் கம்பெனியை விரிவு படுத்துதல், நவீனமாக்குதல், முதலியவைகளுக்கானத் திட்டம் சேர்க்கப்பட்டு இருந்தது. 1953-ல் 6·4 லட்சம் டன்களாக இருந்த இரும்பு உற்பத்தித்திறனை 1957-ல் 1.4 மில்லியன் டன்களாக உயர்த்த வேண்டும் என்றும் பூர்த்தி செய்யப்பட்ட எ.ஃகு உற்பத்தியை 3·5 லட்சம் டன்களிலிருந்து 7 லட்சம் டன்களாக அதிகரிக்க வேண்டும் என்றும் திட்டம் வகுத்தனர். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த ஆலையின் பூர்த்திசெய்த எ.ஃகின் உற்பத்தித் திறனை 7 லட்சம் டன்களிலிருந்து 8 லட்சம் டன்களாக அதிகரிக்க எண்ணினர். இந்திய இரும்பு எ.ஃகுக் கம்பெனியின் விஸ்தரிப்புத் திட்டங்கள் யாவும் நிறைவேற்றப் பட்டன.

டாட்டா இரும்பு எ.ஃகுக் கம்பெனி1951—ல் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், ஆலையை நவீனமாக்கவும் திட்டமிட்டது. விற்பனை செய்யக்கூடிய எ.ஃகுப் பொருள்களின் உற்பத்தித் திறனை 9·3 லட்சம் டன்களாக உயர்த்தவும் கருதியது. எ.ஃகுக் கட்டி

களின் உற்பத்தித் திறனை 2 மில்லியன் டன்களாகவும், முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டதும், அரைகுறையாகப் பூர்த்தி செய்யப்பட்டதுமான எஃகுப் பொருள்களின் உற்பத்தித் திறன் 1.5 மில்லியன் டன்களாக அதிகரிக்கவும் மற்றொரு விஸ்தரிப்புத் திட்டம் வகுத்தனர். இத் திட்டத்தின் இறுதிக் கட்டத்தில் 1958 அக்டோபரில் ஊதுலை ஒன்று இயக்குவிக்கப் பட்டது.

மைசூர் அரசாங்கத்தின் உடைமையாகப் பத்திராவதி இரும்பு எஃகு ஆலை இருந்தது. முதல் திட்டக் காலத்தில் பூர்த்தி செய்யப் பட்ட எஃகு உற்பத்தித் திறனை 1 லட்சம் டன்களாக அதிகரிப் பதற்குத் திட்டமிட்டனர். பத்திராவதி ஆலையில் மென்மையான எஃகுப் பொருள் (mild steel)களை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக விலை உயர்ந்த எஃகுப் பொருள்களை உற்பத்தி செய்வதில் [முழு] கவனம் செலுத்துகின்றனர். ரூ 3.7 கோடிக்கான திட்டங்கள் முதல் திட்டக் காலத்திலேயே பூர்த்தியாகி விட்டது. இரண்டு மின் வார்ப்பிரும்பு உலைகளும் (electric pig iron furnace) குழாய்களை ஆக்க வல்ல வார்ப்பிரும்பு ஆலை (cast iron spun pipe plant)-யும் முதல் திட்ட இறுதியிலேயே இயங்கத் தொடங்கின. இரண்டாவது திட்டக் காலத்தில் குழாய்களை ஆக்கவல்ல ஆலை (spun-pipe plant) ஸின்ட்டரிங் ஆலை (sintering-plant) அயம் கலந்த சிலிக்கான் ஆலை (ferro-silicon-plant) முதலியவைகளை ஏற்படுத் தவும், எஃகு உருக்கும் ஆலை எஃகு 'ரோலிங்' (Rolling) ஆலை முதலியவைகளை விஸ்தரிப்பதற்கும் மொத்தம் ரூ. 5·95 கோடி முதலீடு செய்ய திட்டமிட்டனர்.

மூன்று புதிய ஆலைகளும், உற்பத்தி செய்யத் தொடங்கி விட்டன. 'பிலாய்'இலும் 'ரூர்க்கேலா'விலும் முதல் ஊதுலைகள் 1959-பிப்ரவரி மாதத்தில் இயங்க ஆரம்பித்தன. அந்த ஆண்டின் பிற்பகுதியில் 'பிலாய்'யில் மேலும் இரு ஊதுலைகள் ஆரம்பிக்கப் பட்டன. 1960-ஜனவரியில் ரூர்க்கேலா ஆலையின் இறுதிக் கட்டம் பூர்த்தி பெற்றது. 1959-டிசம்பரில் துர்க்காபூர் ஆலையின் முதல் ஊதுலை இயக்கப்பட்டது. மூன்று ஆலைகளும் வார்ப்பு இரும்பைத் தற்சமயம் உற்பத்தி செய்கின்றன. இத்திட்டங்கள் யாவும் எதிர்பார்த்தபடி முன்னேற்றம் அடையக்கூடுமேயானல் நாட்டில் உள்ள எல்லா ஆலைகளும் மொத்தம் சுமார் 6 மில்லியன் டன்கள் எஃகுக் கட்டிகள் உற்பத்தி செய்யக் கூடியவையாக இருக்கும் ரூர்க்கேலா ஆலை நிர்மாணிக்கப்பட்ட முறையில் சில குறைகள் இருப்பதாகத் துவக்கத்தில் கண்டுபிடிக்கப் பட்டது. இதனல் ஓரளவிற்கு உற்பத்தி பாதிக்கப்பட்டது. பின்னர் இக் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டன,

எஃகு ஆலைகளில் முதலீடுகள்

இரண்டாவது திட்டத்தில் பொதுத்துறையில் எ∴கு உற்பத்திக்காக ரூ. 353 கோடி முதலீடு செய்வது என்று ஆரம்பத்தில் கருதி வந்தனர். பொதுத்துறையில் உள்ள ஆலைகள் முழுத்திறன் உற்பத்தியை 1962க்கு முன்னர் மேற்கொள்ளுவது இயலாதாகையால் முதலீட்டின் ஒரு பகுதியை அடுத்தத் திட்டக் காலத்திற்கு எடுத்துச் செல்வது (carry over) அவசியமாயிற்று. தொடக்கத்தில் பொதுத்துறையில் உள்ள மூன்று ஆலைகளுக்கும் முதலீடு செய்வதற்காக ஒதுக்கிய தொகை, இயந்திரங்களின் விலை நிர்மாணிக்கும் செலவுகள் முதலியன அதிகரித்தமையால் போதுமானதாக இல்லை. பின்னர் முதலீட்டுச் செல்வையும் அதிகரிக்க வேண்டியிருந்தது. ஆக்கச் செலவுகளின் உயர்விற்கு விலை மட்டத்தின் உயர்வே ஓரளவிற்குக் காரணமாக இருந்தபோதிலும், உண்மையில் மதிப்பீடும் திட்டமிடலும் திருப்தியற்ற முறையில் இருந்தன. வெளி நாடுகளில் ஊரும் பணவீக்கம் (creeping inflation) ஏற்பட்டதன் காரணமாக இயந்திரச் சாதனங்களின் விலை உயரலாயிற்று. இதனால் அந்நியமாற்று மேலும் ரூ. 64 கோடிக்குத் தேவைப்பட்டது. அதாவது ரூ.228 கோடியாக இருந்த அந்நியமாற்று அளவு ரூ. 292 கோடியாக உயர்ந்தது. முதலீட்டிற்கான மதிப்பீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (பார்க்கவும் அட்டவணை-4)

அட்டவணை 4

ஆலைகள்	ஆரம்ப மதிப்பீடு (கோடி ரூபாய்களில்)	திருத்தப்பட்ட மதிப்பீடு (கோடி ரூபாய்களில்)
ரூர்க்கேலா	128	170
பிலாய்	110	170
துர்க்காப்பூர்	115	137
மொத்தம்:	353	477

திருத்தி அமைக்கப்பட்ட ஆக்கச் செலவு மதிப்பீடுகள் மிக அதிகமாக இருப்பதாகக் கருத முடியாது. இந்த முதலீடுகள், அடுத்து வரும் திட்டக் காலத்தில் அந்நியமாற்றைப் போதியளவு சேமிக்க உதவும். புதிய எ∴கு ஆலைகள் ஏற்பட்டமையாலும் பழைய ஆலைகளின் உற்பத்தித்திறனை அதிகரித்தமையாலும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 750 கோடி அந்நிய

மாற்றைச் சேமிக்க முடியும் என்று கருதினர். ஆனால், சில திட்டங்களில் சிக்கனங்கள் தீவிரமான அளவில் மேற்கொள்ளப் படவில்லை என்று பொதுவாகக் கூறலாம்.

உலகப் போர் முடிவு பெற்ற பின்னர் போதிய பண வசதிகள் இல்லாத காரணத்தினால் உடனடியாக எஃகு ஆலைகளைப் புதுப்பிக்கும் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை என்று முன்பு கூறினோம். டாட்டா கம்பெனியார் 1955-ல் உற்பத்தியை 2 மில்லியன் டன்களாகப் பெருக்கத் திட்டமிட்டனர். அமெரிக்கா (USA)வில் உள்ள கெய்சர் பொறி இயல்வல்லுநர்கள் (Kaiser-Engineers) நிறுவனத்துடன் $ 130 மில்லியன்களுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். உலக பாங்கியிலிருந்து $ 75 மில்லியன்கள் $ 32.5 மில்லியன்கள் ஆகிய இரு கடன் தொகைகளுக்கு அரசாங்கம் உத்தரவாதம் அளித்தது. அரசாங்கம் நிர்வகிக்கின்ற விலை சமன்பாட்டு நிதி (Price-Equalization Fund)யிலிருந்து இக் கம்பெனி ரூ. 10-கோடியைச் சிறப்புக் கடனாகப் பெற்றது. 2 மில்லியன் டன்களாக உற்பத்தியைப் பெருக்க வேண்டிய திட்டத்தில் எஃகு உற்பத்தியின் பல கூறுகள் அடங்கியுள்ளன. (இரும்புத்) தாதுக்களைப் பிரிப்பது, பதப்படுத்துவது முதல் பூர்த்தி செய்யப்பட்ட எஃகு வெளியேற்றப்படும்வரை பல துணைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ரூ. 118 கோடி செலவாகும். சமன்பாட்டு நிதியிலிருந்தும், உலகப் பாங்கிலிருந்தும் பெற்ற கடன்கள் தவிர. ரூ.13.5கோடிக்குப் பங்கு மூலதனத்தைக் கம்பெனி எழுப்பியது. தனியார் துறையில் உள்ள எஃகு ஆலைகளுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் எஃகு வைப்பு விலையின் ஒரு சிறப்புக் கூறாக வளர்ச்சி நிதி (Development-fund) ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது.

இந்திய இரும்பு எஃகுக் கம்பெனியின் வளர்ச்சித் திட்டத்திற்கு உதவும் வகையில் அரசாங்கம் வட்டிக் கடனாக ரூ. 7.9 கோடியும் சமன்பாட்டு நிதியிலிருந்து ரூ. 10 கோடியும் கொடுத்தது. உலகப் பாங்கு $ 30.02 மில்லியன்கள், $ 20.0 மில்லியன்கள் ஆகிய இரு கடன்களைக் கொடுத்தது' அதிகப்படியாகத் தேவைப்படும் நிதியை இரு வகைகளில் கம்பெனி பெற்றது. முதலாவதாகப் புதிய பாங்குகள் வெளியிட்டதன் மூலமாகவும் அடுத்து கம்பெனி உற்பத்தி செய்யும் எஃகின் வைப்பு விலையில் சுங்க ஆய்வுக்குழு அனுமதித்த வளர்ச்சித் தள்ளுபடி (Development Rebate) மூலமாகவும் பெறமுடியும்.

இரண்டாவது திட்டக் காலத்தில் 1959 ஏப்ரல் வரை தனியார் துறையில் எஃகு ஆலைகளில் மொத்த முதலீடு செய்யப்பட்டத் தொகை ரூ.100.77 கோடியாகும். முதல் திட்டக் காலத்தில் இத்தொகை ரூ. 49.4 கோடியாக இருந்தது. இந்த (மூன்றாவது)

திட்டத்தில் இத்தொழில் [வளர்ச்சிக்குத் தேவையான] முதலீட்டு இலக்கை முழுமையாக நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

உற்பத்திப் போக்குகள்

கடைசியாகச் சில ஆண்டுகளில் (உள்ள) எஃகு உற்பத்தியில் காணப்பட்ட போக்கை ஆய்ந்து பார்த்தால் பல உண்மைகளை அறிய முடியும். நமது நாட்டில் பூர்த்தி செய்த எஃகின் உற்பத்தி அளவு அதிக மாற்றம் இன்றி இருப்பதைக் காணலாம். நிதான மாக அதிகரிக்கும் வகையில் அதன் பொதுவான போக்கு அமைந் துள்ளது. *1951ல் 1.04* மில்லியன் டன்களாக உற்பத்தி இருந்தது, 1956-57 ஆண்டுகளுக்கான உற்பத்தி விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன. *(பார்க்கவும் அட்டவணை-5)*

அட்டவணை 5

ஆண்டு	உற்பத்தி (மில்லியன் டன்கள்)
1956	*1.34*
1957	*1.35*

புதிய எஃகு ஆலைகளில் சில சிறு குறைகள் இருந்தபோதிலும் உற்பத்தி நிதானமாகவே அதிகரித்து வந்துள்ளது. 1958-ல் நீண்ட வேலை நிறுத்தம் ஏற்பட்டதுடன் உற்பத்தி சாதனங்களைப் புதுப்பிப் பதற்காகவும் டாட்டா கம்பெனி ஆலை மூடப்பட்டு இருந்தது. அந்த ஆண்டில் மொத்த உற்பத்தி 1.5 மில்லியன் டன்கள். இது 1957 உற்பத்தியை விட கணிசமான அளவிற்கு அதிகமாகவே உள்ளது. அதே சமயம் 1959-ல் நிலவிய சூழ்நிலை மிகவும் சாதக மாக இருந்த போதிலும், மொத்த உற்பத்தி 1.75 மில்லியன் டன் களாக இருந்தது. அதாவது 1958-ம் ஆண்டின் உற்பத்தியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 1959-ம் ஆண்டு உற்பத்தி பெரு வாரியாக அதிகரித்துள்ளது என்று கூறமுடியாது. புதிய ஆலை களும், நெடுநாட்களாக இயங்கி வரும் ஆலைகளும் உற்பத்தியை அதிகரிக்க முடியவில்லை. உற்பத்திக்கு அடிப்படையாக உள்ள கச்சாப் பொருள்களை அதிகரிப்பதற்குப் போதிய அளவு கவனம் செலுத்தாமைதான் இதற்கு முக்கியக் காரணமாகும். எடுத்துக் காட்டாக உயர்தரமான கோக்கு செய்யும் கரி (coking coal)யின் உற்பத்தி பற்றுக்குறையாக இருப்பதைக் காண்கிறோம். 1960 ஆம் ஆண்டின் இடையிலிருந்து எல்லா எஃகு ஆலைகளும், தரக் குறைவான கோக்கு செய்யும் கரியைப் பெருவாரியான அளவிற்குப் பயன்படுத்த வேண்டியிருந்தது இதன் விளைவாக உற்பத்தி

குறைவதுடன் ஆக்கச் செலவும் அதிகரிக்கலாயிற்று. இதைப் போன்ற பல பிரச்சினைகளை எதிர்காலத்தில் இந்தத் தொழிலின் சுமுகமான வளர்ச்சியைப் பாதிக்கக்கூடும். அவைகளை அவ்வப் போது தீர்த்துவைக்க வேண்டியது அவசியமாகும்.

எஃகு உபயோகம்

இதுவரையில் திட்டமிடுபவர்கள் எஃகு உற்பத்தியில் உள்ள பற்றுக்குறையைப் போக்கும் வகையில் நாட்டின் எஃகு உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் அதிகக் கவனம் செலுத்தினார்கள். கடைசியாக உள்ள சில ஆண்டுகளில், இந்நாட்டில் எஃகு உபயோகப் படுத்தப்பட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (பார்க்கவும் அட்டவணை-6)

அட்டவணை 6

ஆண்டு	மில்லியன் டன்கள்
1954	*1.6*
1955	*2.2*
1956	*2·3*
1957	*3.1*

1953-ல் எஃகு நுகர்வு மிகக்குறைவாக *2.5* மில்லியன் டன்களாக இருந்தது. எ ∴ கு இறக்குமதியை அதிக அளவிற்குக் கட்டுப் படுத்தியதாலும், உள்நாட்டு உற்பத்தி போதிய அளவு இல்லாமையாலும் எ ∴ கு நுகர்வு குறைவாக இருந்தது. *1958*-ல் எ ∴ கு உற்பத்தி போதிய அளவு இல்லாமையால், எ ∴ குப் பொருள்களைப் பயன் படுத்துகின்ற பல தொழில்களின் உற்பத்தி குறைந்தது, பொதுவாக ஒரு தொழிலில் உள்ள நிலைமை இதர தொழில்களுக்கும் பரவக்கூடும் ஆகையால் அந்த ஆண்டில் தொழில வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. *1959*-ம் ஆண்டில் எ ∴ கின் நுகர்வு *3.0* மில்லியன் டன்களாக இருந்த நிலைமை ஓரளவிற்குச் சீரடைந்து இருப்பதைக் காட்டுகிறது.

எதிர்காலத்தில் *1960—61*ல் சுமார் 45 லட்சம் டன்கள் பூர்த்தியான எ ∴ கு உற்பத்தி செய்யப்படும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. எ ∴ குப் பொருள்களைப் பயன்படுத்தும் தொழில்கள் போதிய அளவிற்கு வளர்ச்சி அடையாத காரணத்தினால், நாட்டில் உற்பத்தி செய்த எல்லா எ ∴ கையும் பயன்படுத்த முடியாது என்றும், பூர்த்தி செய்யப்பட்ட சில வகை எ ∴ குப் பொருள்கள் உபரியாக இருக்கக்கூடும் என்றும் ஐயப்பட்டனர். எனவே எதிர் காலத்தில் அதாவது மூன்றாவது திட்டக் காலத்தில் எ ∴ கைப்

பயன்படுத்துகின்ற தொழில்கள் வளர்ச்சி அடையவேண்டும் என்றும் எ∴குத் தொழில் வளர்ச்சிக்கு இது அவசியம் என்றும் கருதினர். அதாவது எ∴கை அடிப்படையாகக் கொண்டுள்ள தொழில்கள் அதிவேகமாக வளர்ச்சி அடையவேண்டும். இரண்டாவது திட்ட இறுதியில் ஏற்படுத்திய எ∴கு உற்பத்தித் திறனைக் கொண்டு பலவகையான உற்பத்திப் பொருள்கள், நுகர்பொருள்கள் தயாரிக்க முடியும்.

எஃகுப் பொருள்களின் விலைப் பிரச்சினை

1955-ம் ஆண்டில் அத்தியாவசிய பொருள்கள் சட்டத்தின்படி (Essential commodities Act) எ∴குப் பொருள்களின் விற்பனை விலைக் கட்டுப்படுத்தப் பட்டது. பூர்த்தி செய்யப்பட்ட எ∴குப் பொருள்களின் கட்டுப்பாட்டு விலைகள், அவ்வப்போது இரும்பு எ∴கு கட்டுப்பாட்டு அதிகாரியால் (Iron and steel controller) நிர்ணயிக்கப்படும். இதனை செயல்படுத்தும் வகையில் நாடெங்கிலும் எ∴குப் பொர்ருள்களை உபயோகிப்பவர்களுக்கு (குறிப்பிட்ட அளவு) 'கோட்டா' நிர்ணயிக்கப்படும். இறக்குமதி செய்யப்பட்ட எ∴குப் பொருள்களும் சுதேசி எ∴குப் பொருள்களும் ஒரே விலையில் விற்கவேண்டும் என்பது (இந்திய) அரசாங்கத்தின் கொள்கையாகும்.

நெடுங்காலமாக இந்திய எ∴கு இறக்குமதி செய்யப்பட்ட எ∴கை விட போதிய அளவு மலிவாகவே, இருந்தது. 1939-ல் இந்திய எ∴குத் தொழிலிற்குக் காப்பு அளிப்பது பற்றி வர்த்தக வரி போர்டு ஆய்வை மேற்கொண்டது. அது சமயம் உற்பத்தியாளர்கள், இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிற எ∴கு, இறக்குமதி செய்யப்படுகின்ற எ∴கின் விலையை விட அடக்கம்—இன்ஷூரன்ஸ்—கட்டணம் முதலியவை உள்ளடக்கிய—மிகவும் குறைவாக இருப்பதாகக் கூறினர். சுதேசி எ∴கின் ஆக்கச் செலவிற்கும் இறக்குமதி செய்யப்பட்ட எ∴கின் விலைக்கும் அதிக அளவு வித்தியாசம் இருந்தது. இந்த வித்தியாசத்தினால் கிடைக்கும் பயனை சமூகம், நுகர்வோர், உற்பத்தியாளர்கள்—ஆகிய மூவர்களில்—யார் அடையவேண்டும் என்று தீர்மானிக்க வேண்டி இருந்தது. இறுதியாகச் சரக்கு வரி போர்டு ஒரு முடிவு செய்தது அதன்படி உற்பத்தியாளர்கள் வைப்பு(Retention price) விலையைப் பெறுவது என்றும், ஆனால் அங்காடியில் சுதேசி எ∴குப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்ட எ∴குப் பொருள்களின் விலைக்கே விற்கப்படும் என்றும் தீர்மானிக்கப் பட்டது. இந்த விலைத் திட்டத்தின்படி வைப்பு விலைக்கும் அதிகமாக அங்காடியில் பெறப்படும் விலையில் உள்ள வித்தியாசத்தைக் கொண்டு விலை சமன்

பாட்டுநிதி (Price Stabilisation Fund) ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்தியது.

உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்படும் வைப்பு விலையை அவ்வப்போது சுங்க ஆய்வுக்குழு பரிசீலனை செய்யும். 1956-ல் சுங்க ஆய்வுக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் நடப்பு விலைத் திட்டம் உருவாக்கப்பட்டது. இந்த அறிக்கையின் ஒரு சரத்துப்படி (escalator clause) ஆக்கச் செலவை நிர்ணயிக்கும் பொருள்களின் விலை மாற்றங்களுக்கு ஏற்ப எஃகின் வைப்பு விலை அவ்வப்போது நிர்ணயிக்கப்படும். வைப்பு விலையை நிர்ணயிப் பதற்காகச் சரக்குக் கட்டணம், ஊதியம், கச்சாப்பொருள், சக்தி, எரிபொருள் முதலியவைகளின் விலையைச் சுங்க ஆய்வுக்குழு ஆய்ந்து வரும். இதனால் உற்பத்தியாளர்கள் ஓரளவிற்கு நன்மை அடையக்கூடும்.

தற்போதுள்ள எஃகு விலைகளின் கட்டமைப்பிலும், எஃகின் வைப்பு விலையை மதிப்பிடுகின்ற முறையிலும் பல குறைபாடுகள் இருந்தன. அவ்வகையில் முக்கியக் குறைபாடு விலைத்திட்டத்தில் உள்ளது. சுங்க ஆய்வுக் குழுவும், அதற்கு முன்னர் இருந்த சரக்கு வரி போர்டும், விலைத் திட்டத்தை முடிவு செய்யும்போது இத்தொழிலின் முழுமையான நிதித் தேவைகளைக் கருத்தில் கொள்ளவில்லை. வர்த்தக வரி போர்டு இப் பிரச்சினையை இயற்கையான முறையில் அணுகி இருக்கவேண்டும், அதாவது இத் தொழிலில் ஈடுபட்ட மூலதனத்திற்குக் கிடைக்கும் வருவாய் மற்றும் இத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் முதலியவற்றைத் தீர்க்கமாக ஆய்ந்து இருக்கக் கூடுமானால், இறக்குமதி செய்த எஃகுப் பொருள்களின் விலை மிக அதிகமாக இருந்த 1950-51ம் ஆண்டிலேயே போர்க்காலத்தில் பழுது அடைந்த சாதனங்களைப் புதுப்பித்து, மற்றும் அவசியமான உற்பத்திப் பெருக்கத்தை மேற்கொண்டு இருக்க முடியும். போர் முடிவு பெற்ற காலத்தில் பின்பற்றப்பட்ட விலைக் கொள்கையின்படி, இத் தொழிலில் முதலீடு செய்துள்ள மொத்தத் தொகையில் 8 சதவீத லாபமே அனுமதிக்கப்பட்டது. விலைக்கொள்கையை மறு பரிசீலனை செய் கின்றபோது, உற்பத்தியாளர்கள் தங்கள் நிலைமையைப் பின் வருமாறு விளக்கிக் கூறினர். அரசாங்கத்திற்குச் செலுத்தும் வரி, நிர்வாக பதிலாளிகளுக்குக் கொடுக்கும் கமிஷன், ஊழியர்களுக்கு லாபத்தில் பகிர்ந்து அளிக்கும் போனஸ் முதலியவைகள் நீங்கலாக பங்குதாரர்களுக்கு 3½ சதவீதம் லாப ஈவு மட்டுமே பகிர்ந்து அளிக்கப்படுகிறது. இதனால் அடுத்த ஆண்டிற்கு லாபத்தை எடுத்துச் செல்வதற்கு (Plough back) ஏதும் இல்லை.

கிட்டத்தட்ட வருமான வரிக்காக கொடுக்கப்படுகின்ற சலுகைகளைப் போல 6¼ சதவீதம் மட்டும் தேய்மானத் தள்ளுபடி

அனுமதிக்கப்பட்டது. ஆனால், பதிலமர்த்தும் செலவுகள் (replacement) போர்க் காலத்திற்கு முன்பு இருந்த மட்டத்தை விட 150 விழுக்காடு அதிகரித்துள்ளது. இதனால் தேய்மான நிதி பதிலமர்த்துவதற்குப் போதுமானதாக இல்லை. எஃகுத் தொழிலின் வளர்ச்சியானது விலைக் கொள்கை காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஏனைய தொழில்களின் வளர்ச்சியை விட இது குறைவாக வளர்ந்து இருப்பதைக் காணலாம். காட்டாக 1946-51 ஆண்டுகளில் எஃகுத் தொழிலில் உள்ள ஆலைகள், இயந்திர சாதனங்கள் முதலியன 30 விழுக்காடு மட்டுமே அதிகரித்து உள்ளன. இதே காலத்தில் ஏனைய தொழில்களின் வளர்ச்சி இதைவிட அதிகமாக உள்ளது. எல்லாத் தொழில்களும் 71 விழுக்காடும், சிமெண்ட் 103 விழுக்காடும், பொறியியல் தொழில்கள் 170 விழுக்காடும் பெருகியுள்ளன.

விலைச் சமன்பாட்டு நிதியைப் பற்றியும் சிலர் குறை கூறினர். அரசாங்கம் இந்த நிதியை ஏற்படுத்தியதற்கான காரணங்களை இங்கே குறிப்பிடலாம். நாடெங்கிலும் எஃகின் விலை ஒரே மட்டத்தில் இருக்க வேண்டும் என்று கருதினர். வைப்பு விலையை விட இறக்குமதி விலை அதிகமாக உள்ளதால் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் உபரியான லாபத்தைப் பெறக்கூடும் என்று எதிர்பார்த்து, அரசாங்கம் இந்த நிதியை ஏற்படுத்தி நிர்வகிக்கத் தொடங்கினர். நெடுங்காலத்திற்கு உள் நாட்டில் உற்பத்தி செய்த எஃகின் ஆக்கச் செலவைப் போல இரு மடங்காக இறக்குமதி செய்த எஃகின் விலை (மட்டம்) இருந்தது. இந்த விலை வித்தியாசம் காரணமாக நாட்டிற்கு சுமார் 27 கோடி ரூபாய் பலன் ஏற்பட்டுள்ளது. இருந்த போதிலும் சமன்பாட்டு நிதியை முற்றிலும் நீக்கி விட வேண்டும் என்று யாரும் விரும்பவில்லை. ஆனால், நாளடைவில் இறக்குமதி குறையக் குறைய இதைக் கைவிடத் தயாராக இருக்க வேண்டும். மற்றும் வைப்பு-விலை (Retention-price) உயர் மட்டத்தில் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் கோரினர். இதனால் விலை வித்தியாசத்தின் அளவு குறைவதுடன், இந்த நிதியினின்றும் உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கும் பங்கும் குறையும். இந்தக் கோரிக்கை நியாயமான ஒன்றாகும். உயர்வாகவுள்ள வைப்புவிலை திறமைக்கும், ஊக்கத்திற்கும் அளிக்கப்படும். சன்மானமாக உள்ளது. இரண்டாவதாக இத்தொழிலைப் பின்னர் விரிவு படுத்துவதற்குத் தேவையான தொகையை நாளடைவில் உபரியான வருவாயினின்றும் சேமிக்கலாம். டாட்டா கம்பெனியும், இந்தியக் கம்பெனியும் ரூபாய் மூலதனத்திற்காகச் சமன்பாட்டு நிதியில் இருந்து பிரத்தியேக வட்டிக்குக் கடன் பெறுகின்றன என்பது அந்த நிறுவனங்கள் வளர்ச்சிக்கான நிதித் தேவையை இதரவழிகளில் பெறமுடியாமையைக் காட்டுகின்றது. ஓரளவிற்குப்

புதிய பங்குகள் மூலமாக மூலதனம் பெற்றனர். எதிர்காலத்தில் பங்குகளில் முதலீடு செய்பவர்களிடமிருந்து கணிசமான அளவு மூலதனத்தைப் பெற இயலாது. கடந்த பல ஆண்டுகளாக லாப ஈவின் (dividend) சதவீதம் மிகக் குறைவாக இருப்பதே இதற்கு முக்கியக் காரணமாகும். இதரத் தொழில்களின் முதலீட்டிற்கு 7 முதல் 8 சதவீதம் லாப ஈவு கிடைக்கின்ற போது, 4 சதவீதத்திற்கும் குறைவாக லாப ஈவு கொடுக்கும் ஒரு தொழில் எவ்வாறு பங்கு மூலதனத்தைப் பெற முடியும்? இதற்கான விடையைக் கற்பனை செய்துதான் பார்க்க வேண்டும்.

(உலகத்திலேயே) மிகக் குறைந்த ஆக்கச் செலவில் எஃகை தயாரிக்கும் நாடாக இந்தியா உள்ளது. இருந்த போதிலும் நுகர்வோர் கொடுக்கும் விலை மிக அதிகமாக உள்ளது. சமன்பாட்டு தண்டவரி டன் ஒன்றுக்கு ரூ. 110யும், ஆயத்தீர்வை டன் ஒன்றுக்கு ரூ. 53-யும் செலுத்த வேண்டும். எஃகின் சராசரி வைப்புநிலை 1955-ல் சுங்க ஆய்வுக் குழுவினரால் டன் ஒன்றுக்கு ரூ. 393-என்று நிர்ணயிக்கப் பட்டது. ஒப்பந்த சரத்துப்படி 1959-ல் வைப்புநிலை மறுபடியும் பரிசிலனை செய்யப்பட்டது. அப்போது ஒரு டன் (எஃகின் விலை) ரூ. 424—ஆக நிர்ணயிக்கப் பட்டது. அதாவது ஒரு டன் எஃகின் விலை ரூ. 31—அதிகரித்தது. கட்டுப்பாட்டு விலை, வைப்பு விலையை விட அதிகமாக உள்ளது. இந்த வித்தியாசம், சமன்பாட்டுத் தீர்வை, ஆயத்தீர்வை ஆகியவற்றின் கூடுதலுக்குச் சமமாக உள்ளது. சில வகை எஃகு பொருள்களின் கட்டுப்பாட்டு விலை, ஜப்பான், பெல்ஜியம் போன்ற நாடுகளில் இருந்து பெறப் பட்ட தீர்வைக்குப் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட விலையை விட அதிகமாக உள்ளது. எடுத்துக்காட்டாகப் பாளங்களும், தண்டுகளும் ஏனைய நாடுகளை விட அதிகமான விலையில் இந்தியாவில் விற்கப்படுகின்றன. இந்திய விலையை விட பிரிட்டனில் ரூ. 118-குறைவாக உள்ளது. அவ்வாறே ஆஸ்திரேலியாவில் ரூ. 105-யும் பெல்ஜியத்தில் ரூ. 152-யும் ஜப்பானியில் ரூ. 111-ம் குறைவாக உள்ளன.

எஃகின் விலை மிக அதிகமாக இருப்பதால் பொறியியல் தொழில்களின் ஆக்கச் செலவு கட்டமைப்பு பாதிக்கப் படுகிறது. இந்தத் தொழில்கள்தான் எஃகு பொருள்களைப் பெருவாரியாகப் பயன் படுத்துகின்றன. எதிர்காலத்தில் அயல் நாட்டு வாணிபத்தில், பொறியியல் தொழில்கள் அதிக முக்கியத்துவம் பெற்று இருக்கும். இத்துறையில் பல தொழில்கள் அதி வேகமாக வளர்ந்து வருகின்றன. ஆனால், இந்தப் பொருள்களுக்கான அங்காடி மந்தமாக இருக்கிறது. சராசரி வருவாய் மட்டம் குறைவாக இருப்பதால் விற்பனை வாய்ப்புக்கள் நிலையற்றதாக உள்ளன. எனவே

உள்நாட்டிலும், ஏற்றுமதி அங்காடிகளிலும் பொறியியல் தொழில்களின் பொருள்கள் மலிவாகக் கிடைக்கச்செய்ய வேண்டும். அடிப்படையான கச்சாப் பொருளான எஃகின் விலை கணிசமாகக் குறையாதபோது பொறியியல் தொழில்களின் ஆக்கச் செலவுகளைக் குறைப்பது கடினம். இவ்வாறாக எஃகின் விற்பனை விலையைக் குறைப்பதற்குத் தகுந்த முகாந்திரங்கள் இருக்கின்றன. இத்தொழில்களின் முதல் பொருள்களை அமைப்பதற்கும், முதல் பொருள் சாதனங்களை ஏற்படுத்தவும் தேவைப்படும் நிதியை இவற்றின் வருவாயிலிருந்தே பெற வேண்டியது அவசியம்.

பழைய எஃகு ஆலைகள் மட்டும் இதுவரை விலைக் கொள்கையின் கட்டுப்பாடுகளினால் கடுமையாகப் பாதிக்கப் பட்டன. ஆனால், இப்போதுள்ள நிலைமையில் புதிய ஆலைகளும் இதைப் போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஆரம்பத்தில் மதிப்பிட்டதைவிட இந்த ஆலைகளை அமைப்பதற்கான ஆக்கச் செலவுகள் பல மடங்கு அதிகரித்துள்ளன. தற்சமயம் செலுத்துகின்ற வட்டியும் மற்றும் எதிர்காலத்தில் கடனிற்காக செலுத்த வேண்டிய தொகையும், இதைத் தவிர உற்பத்தியை அதிகப்படுத்தும் திட்டங்கள் முதலியவைகளுக்காக அதிக அளவு காப்பு நிதி தேவைப்படும். எதிர் காலத்தில் பழைய ஆலைகளுக்கும், புதிய ஆலைகளுக்கும் பொதுவான ஒரே மாதிரியான விலைக் கொள்கை பின்பற்றப்படும். எஃகின் ஆக்கச் செலவு பற்றிய புதிய பரிசீலனை 1960-ல் நடைபெற்றது. சுங்க ஆய்வுக் குழுவினர் அது சமயம், விலையை நிர்ணயிக்கின்றபோது பிரச்சினையின் பல்வேறு கூறுகளையும் பற்றிச் சிந்தனை செய்வார்கள் என்று நம்புகின்றோம்.

பிரச்சினைகளும் எதிர்கால வாய்ப்புக்களும்

அதிக எஃகு உற்பத்தித் திட்டத்தில் தீர்க்கமுடியாத பல பிரச்சினைகள் இருக்கின்றன. இவைகளுக்குப் போதிய கவனம் செலுத்தவில்லையானால், விஸ்தரிப்புத் ட்டங்களை நிறைவேற்றுவது கடினமாக இருக்கும். கச்சாப் பொருள்களின் அடிப்படையை உருவாக்குவதில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்பதை முன்பே கூறியுள்ளோம். எஃகுத் தொழிலின் முழுமையான தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு உயர்தர கோக்குக் கரி இருப்பதாகக்கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்காக நிலக்கரி சுத்தம் செய்வதற்கு 5 ஆலைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. அவைகளில் மூன்றுகூட எதிர்காலத்தில் உடனடியாக முடிவு பெறக்கூடியனவாக இல்லை. சாதாரணமாக நிலக்கரி சுத்தம் செய்யும் ஆலையை அமைப்பதற்கு மூன்று வருடங்கள் ஆகக்கூடும். எனவே, இவ்விடைக் காலத்தில் சுத்தம் செய்யப்பட்ட நிலக்கரி தட்டுப்பாடு ஏற்படக்

கூடும். இதனால் மூன்றாவது திட்டத்தில் எஃகு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும்.

போதிய அளவு போக்குவரத்து வசதிகள் வளர்ச்சி அடைய வில்லையானால், உற்பத்திப் பெருக்கம் ஏற்படுகின்றபோது பல இன்னல்கள் தோன்றக்கூடும். எடுத்துக்காட்டாக, கனிச்சுரங்கங் கள் இருக்கும் இடத்தையும் ஆலைகள் அமைந்துள்ள ஜாம்ஷெட் பூர், பர்ன்பூர், துர்க்காப்பூர் முதலிய இடங்களையும் இணைக்கும் இருப்புப் பாதைகளில் மின்சார இரயில்களைச் செலுத்துவதற் கான திட்டம், ஓர் ஆண்டுகாலம் மதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே ரூர்க்கேலாவை கனிச்சுரங்கங்களுடன் இணைக்கும் இருப்புப்பாதை பூர்த்தியாகவில்லை—ஒரு வகையில் இந்த இன்னல்கள் தற்காலிக மானவை. இப்பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணவிட் டால், இவை உற்பத்தியை ஏதாவது ஒரு வகையில் பாதிக்கக் கூடும். முன்னேற்றம் அடைந்த நாடுகளில் போக்குவரத்து வசதி கள் போதிய அளவும், மலிவாகவும் இருப்பதுதான் எஃகுத்தொழி லின் உற்பத்திச் சிக்கனங்களுக்கு முக்கியக்காரணமாக உள்ளது எஃகு உற்பத்தி செய்யும் இடங்களுடன், அங்காடிகளும், மற்றும் கச்சாப்பொருள்கள் கிடைக்கும் இடங்களும் போக்குவரத்து சாத னங்களால் இணைக்கப்பட்டுள்ளன. 4 மில்லியன் டன்கள் அதிகப் படியான எஃகு உற்பத்தித் திறனை ஏற்படுத்துவதற்கு சுமார் 24 மில்லியன் டன்கள் சரக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது கச்சாப் பொருள்கள், பூர்த்தி செய்யப்பட்ட பொருள்கள் ஆகிய இரண்டும் மொத்தத்தில் 24 மில்லியன் டன்கள் சரக்கு போக்கு ரைத்தை அதிகரிக்கும். மூன்றாவது திட்டக்கால இறுதிக்குள் போக்குவரத்து இடர்ப்பாட்டை முழுமையாகத் தவிர்க்கும் வகை யில் சரக்குகளை எடுத்துச்செல்லும் வசதிகளை ஏற்படுத்தவேண்டும் இரண்டாவது திட்டக்காலத்தில் 'வாகன்' (wagons)களும், இருப்புப்பாதைகளும், பற்றாக்குறையாக இருந்தன. இத்தகைய நிலைமை எதிர்காலத்திலும் நீடிக்காமல் இருக்கவேண்டுமானால், இருப்புப்பாதைகளை விரிவுபடுத்தும் திட்டங்களை விரைவாக நிறை வேற்றவேண்டும்.

எஃகுத் தொழிலைப் பாதிக்கின்ற மற்றொரு பிரச்சினை சக்திப் பற்றாக்குறையாகும். நாட்டின் தொழில் நடவடிக்கைகளின் மைய மாக உள்ள பீகார், மேற்குவங்காளப்பகுதிகளில் இப்பற்றாக்குறை மிக அதிகமாக உள்ளது.

சக்தியும் போக்குவரத்தும் ஆக்கச்செலவை நிர்ணயிக்கும் முக்கியமான காரணிகளாக உள்ளன. ஒரு அலகு சக்திக்கான செலவும் ஒரு டன் கச்சாப்பொருள்களை ஏற்றிச்செல்லும் கட்டண

மும் மிகச் சிறிய அளவிற்கு அதிகரித்தாலும் இறுதிப்பொருளின் ஆக்கச்செலவு பன்மடங்கு அதிகரித்துவிடும். எனவே எஃகு உற்பத்தியை அதிகரிக்க மேற்கொள்ளும் திட்டங்களில் இத்தகைய காரணிகளையும் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

நிலக்கரியைத் தவிர, எஃகுத் தொழிலிற்கு அயம் கலந்த மாங்கனீஸ் (ferro-manganese) உலைக்கற்கள் (refractories) முதலிய கச்சாப் பொருள்களும் தேவைப்படுகின்றன. அண்மையில் சில ஆண்டுகளாக அயம் கலந்த மாங்கனீஸ் உற்பத்தித் திறன் இந்நாட்டில் அதிகரித்துள்ளது. இத்துறையில் அனுமதிக்கப்பட்ட எல்லாத் திட்டங்களும், நிறைவேற்றப்படுமானல், மூன்ருவது திட்டத் துவக்கத்தில் மொத்த உற்பத்தித் திறன் 160,000 டன்களாக இருக்கும். இதுவரை உற்பத்தி செய்யத் தொடங்கிய 5 ஆலைகளின் மொத்த உற்பத்தித்திறன் 85,000 டன்கள் ஆகும். உலைக்கற்களின் நடப்பு உற்பத்தி ஆண்டு ஒன்றுக்கு 2,00,000 டன்கள் ஆகும். எல்லா எஃகு ஆலைகளும் முழுமையான அளவிற்கு உற்பத்தியை மேற்கொள்ளும்போது, ஆண்டு ஒன்றுக்கு 4,00,000 டன்கள் தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்சமயம் ஆண்டுதோறும் மிக அதிகமான அளவிற்கு உலைக்கற்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. புதிய எஃகு ஆலைகள் நிர்மாணிப்பதற்கு சுமார் 5,50,000 டன்கள் உலைக்கற்கள் தேவைப்பட்டன. நாட்டின் உலைக்கற்களைத் தயாரிக்கும் புதிய ஆலைகளை ஏற்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

கோக்குக்கரியின் உற்பத்தி தற்சமயம் 3.5 மில்லியன் டன்களாக உள்ளன. எல்லா எஃகு ஆலைகளும் முழுத்திறனில் இயங்குகின்றபோது இதன் தேவை சுமார் 11.2 மில்லியன் டன்கள் ஆக உயரும். எஃகுத் தொழிலுக்குத் தேவையான ஏனையக் கச்சாப் பொருள்களின் உற்பத்தியிலும் இந்தியா தன்னிறைவு எய்தவில்லை. அவைகளாவன. ஃப்ளோ ரோஸ்பார் (fluorospar) குரோமைட், டங்ஸ்டன் கனி (wolfram) முதலியன.

இத்தொழிலை எதிர்நோக்கியுள்ள இன்னல்கள் பெரும்பாலும் தற்காலிகமானவைகளேயன்றி, தீர்க்க முடியாதவைகளாக இல்லை. வற்ருத வளங்கள் பெரிய அளவினதாகவும், ஒன்றுக்கொன்று அருகாமையிலும் இந்தியாவில் இருக்கின்ற காரணத்தினல், கூடிய விரைவில் பெரிய அளவு எஃகு உற்பத்திசெய்வதில் உலகத்திலேயே இந்தியா முதலிடம் பெறக்கூடும் என்று நாம் எதிர்பார்க்கலாம். முக்கியமாக வடகிழக்கு இந்தியாவில் எஃகுத் தொழிலின் வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளன. இதனை ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "இந்தியாவின் ரூர் (Ruhr) இந்த இடத்தில் உருவாகிக்கொண்டு வருகிறது."

மூன்ருவது திட்ட இறுதியில் தேவைப்படும் எ∴கின் அளவைப் பற்றிப் பலர் பலவாருகக் கணக்கிட்டுள்ள போதிலும் அதிகார பூர்வமான இலக்குகள் வெளியிடப்படவில்லை. எதிர்காலத் தேவை பற்றிய மதிப்பீடுகள் உண்மை நிலையை எடுத்துக்காட்டவேண்டும். 1965-66 ஆண்டில் எ∴கின் தேவை சுமார் 15 மில்லியன் டன்கள் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத அளவில் இருப்பதாகச் சிலர் கருதுகின்றனர். 1956 லிருந்து 1960 வரையில் உள்ள காலத்தில் எ∴கின் தேவை சுமார் 1½ மில்லியன் டன்கள் அதிகரித்து இருக்கக் கூடும் அடுத்த (3 வது) திட்டத்தில் 5 ஆண்டுகளில் தொழில் வளர்ச்சி அதிக வேகத்தில் ஏற்படுமாஞல் பூர்த்தியான எ∴கின் மொத்த தேவை 4 மில்லியன் டன்களுக்கும் சற்று அதிகமாக இருக்கும். இந்த அடிப்படையில் 10 முதல் 12 மில்லியன் டன்கள் வரை எ∴குக் கட்டிகளும் 7.5 முதல் 9 மில்லியன் டன்கள் வரை பூர்த்தியான ஏ∴கும் தேவைப்படும் என்றும், எனவே மூன்ருவது திட்டக்கால இறுதியில் எ∴கு உற்பத்தித் திறனின் இலக்கு இந்த அளவிற்கு இருக்குமாஞல் சரியாக இருக்கும் என்றும் கருதுகின் றனர்.

இன்னும் சிலர் 10 அல்லது 15 ஆண்டு காலத்திற்கான நீண்ட கால எ∴குத்திட்டம் அவசியம் என்று வாதம்செய்கின்றனர். நாட்டின் வலுவான பொருளாதார உட்கட்டமைப்பின் முக்கியப் பகுதியாக எ∴குத்தொழில் உள்ளது. முழுவதும் வளர்ச்சி அடைந்த எ∴குத் தொழிலானது தன் ஆற்றலில் ஏற்படும் வளர்ச்சிக்குமுன்னேடியாக அமையும். போதிய அளவு முன்கூட்டியேதிட்டமிடாதபோது பல சிக்கல்கள் தோன்றக்கூடும். எ∴கு அடிப்படையில் தோன்றிய தொழில்கள் திடீரென்று விரைவான வளர்ச்சியை அடையுமேயாஞல் எ∴கின் தேவை உற்பத்தியைவிட அதிகரிக்கும் என்றும் இதஞல் பல சமன் குறைகள் தோன்றக்கூடும் என்றும் கூறுகின்றனர். மற்றும் சிலர் இதற்கு எதிராக வாதிடுகின்றனர். எ∴கைப் பயன்படுத்தும் தொழில்கள் வளர்ச்சி அடையாத நிலையில் அதிகப்படியாக எ∴கு உற்பத்தித்திறனை ஏற்படுத்துவது, ஒரு வீண்முயற்சி என்கின்றனர்.

மூன்ருவது திட்டக்காலத்தில் அதிகப்படியாக எ∴குஉற்பத்தித் திறனை உருவாக்குவதற்கான காரணங்களும், விளைவுகளும், எப்படியிருந்தபோதிலும், பொக்காரோ என்னும் இடத்தில் புதிய எ∴கு ஆலை ஒன்றை நிறுவுவதற்கு ஆயத்தம் செய்கின்றனர். மற்றும் தற்போதுள்ள எ∴கு ஆலைகளின் உற்பத்தித் திறனை, எவ்வித சிரமும் இன்றி அதிகரிக்க முடியும். பிலாய் ஆலையின் எ∴குக் கட்டி உற்பத்தித் திறனை 2 மில்லியன் டன் அளவுக்கு உயர்த்துவது என்று ஏற்

கனவே முடிவு செய்யப்பட்டுள்ளது. எஃகுத்தொழிலின் வளர்ச்சிப் பிரச்சினையை நிதானமாக அணுகவேண்டும். அத்திட்டம் நீண்ட கால விளைவுகளையும், குறுகியகால விளைவுகளையும் கருத்தில் கொள்வதுடன் நாட்டின் பொதுவான தொழில் வளர்ச்சி வேகத்தை அதிகரிக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

10. பஞ்சாலைத் தொழில் *

எச். ஃ. புகாஸவா (H. Fukazawa)

அறிமுகம் : நிலையான மூலதனமும், நடப்பு மூலதனமும் ஆக மொத்தம் ரூ 278 கோடி மூலதனத்தையும், 124 லட்சம் கதிர்களையும், 2 லட்சம் தறிகளையும் கொண்ட 465 ஆலைகள் இந்தியப் பஞ்சாலைத் தொழிலில் இருக்கின்றன. எல்லா 'ஷிப்டு' (shift)களிலும் மொத்தம் 7 லட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இது இந்நாட்டில் தனியார் துறையின் மிகப்பெரிய தொழிலாக உள்ளது. மொத்த உற்பத்தியாலும், பருத்திப் பொருள் ஏற்றுமதியாலும், இந்தியப் பஞ்சாலைத் தொழில் உலகத்திலேயே (கம்யூனிஸ்ட் நாடுகள் நீங்கலாக) இரண்டாவது பெரிய தொழிலாக உள்ளது. இந்தியாவில் உள்ள மொத்த ஆலைத்தொழிலாளர்களில் 22 விழுக்காடு தொழிலாளர்கள் இதில் ஈடுபட்டுள்ளனர். நாட்டு வருவாயில் 1.8 விழுக்காட்டையும் மொத்தத் தொழில்துறை வருவாயில் 21.2 விழுக்காட்டையும், பஞ்சாலைத் தொழில் அளிக்கின்றது. 1955-56ல் இந்தியா பெற்ற மொத்த அந்நியமாற்றில் 10 விழுக்காடு இத்தொழிலால் பெறப்பட்டது.[1] பஞ்சாலைத் தொழில் முதலாவதாக 1851ல் பம்பாயில் தோன்றியது,

ஏனைய சில முக்கியமானத் தொழில்களைப் போலல்லாமல் இத்தொழில்தான் இந்தியர்களின் முதல் முயற்சியால் தொடங்கப்பட்டு ஆரம்பம் முதல் அவர்களுடைய மூலதனம், நிருவாகம்

* இக் கட்டுரை ஆசிரியர் டாக்டர் பட்டம் பெறுவதற்காக எழுதிய ஆய்வுக் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு இந்த அத்தியாயம் அமைந்துள்ளது. இக் கட்டுரை, டாக்டர் வி. பி. சிங் (Dr. V. B. SINGH) அவர்களின் மேற் பார்வையின் கீழ் 1958-ல் முடிக்கப் பட்டது.

1 கீழே குறிப்பிட்ட ஆதாரங்களிலிருந்து சேகரிக்கப்பட்டது. Government of India, Programmes of Industrial Development 1956-61, Delhi 1956 Eleventh Census of Indian Manufacturers 1956 (Summary Report) Calcutta 1958, and India 1958 (Delhi, 1958.)

முதலியவற்றால் வளர்ந்துள்ளது. ஆரம்ப காலத்தில் அரசாங்கத்திடமிருந்து எந்தவிதமான உதவியும் பெறாமல் வளர்ந்த போதிலும் 1927 ம் ஆண்டு முதல் சிறிய அளவில் சுங்கப் பாதுகாப்பைப் பெற்று வளர்ச்சி அடையலாயிற்று[2]. இத் தொழில் 19-வது நூற்றாண்டின் பிற்பகுதியில் பம்பாய் மாநகரம், அகமதாபாத், பம்பாய் மாநிலத்தின் இதர பகுதிகள், கான்பூர், தமிழ் நாடு, மேற்கு வங்காளம், முதலிய இடங்களில் தோன்றியது. முதல் உலகப் போருக்குப் பின்னர், மத்திய இந்தியாவிலும், மத்திய மாகாணத்திலும், மற்றும் இதர பகுதிகளிலும், இந்தத் தொழில் வளர்ச்சி அடைந்த விவரத்தை அட்டவணை எண் 1-ல் காணலாம். கடந்த நூறு ஆண்டுகளில், இத்தொழில் எவ்வாறு ஏன் வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை இக்கட்டுரையில் விரிவாகக் காணலாம். (பார்க்கவும் அட்டவணை —*1*, *1*-அ)

1. தொழிலின் வளர்ச்சி : (1851-1927)

இத் தொழிலில் உள்ள மொத்த ஆலைகள் அதிகரித்துள்ளதை அட்டவணை எண் 1-லிருந்து அறியலாம். அத்துடன் மற்றும் ஓர் உண்மையும் குறிப்பிடத் தக்கது. முதல் உலகப் போருக்கு முன்னால் பஞ்சாலைகள் முக்கியமாகப் பம்பாயிலும், அகமதாபாத்திலும் செறிந்து காணப்பட்டன. 1911-ல் இத் தொழிலில் உள்ள மொத்த ஆலைகளில் 33 விழுக்காடும், மொத்த கதிர்களில் 45 விழுக்காடும், தறிகளில் 42 விழுக்காடும், தொழிலாளர்களில் 45 விழுக்காட்டினரும், பம்பாய் மாநகரத்தில் இருந்தனர். அவ்வாறே 19 விழுக்காடு ஆலைகளும், 14·5 விழுக்காடுக் கதிர்களும், 16 விழுக்காடு தறிகளும், 13.6 விழுக்காடு தொழிலாளர்களும் அகமதாபாத்தில் இருந்தனர்.

1911 ல் பம்பாய் மாநிலத்தின் இதர பகுதிகளில் 45 ஆலைகள் தோன்றின. அவை ஷோலாபூரிலும், பரோடாவிலும், இன்னும் சில ஊர்களிலும் பரவியிருந்தன. மேலும் ஐக்கிய மாகாணத்தில் (உ.பி.) கான்பூரில் அப்போது 5 பெரிய ஆலைகள் இருந்தன. உ.பி.யில் இருந்த ஆலைகளில் இந்த ஐந்து ஆலைகள் மிகவும் சிறந்து விளங்கின. தமிழ்நாட்டில் பஞ்சாலைகள் கோயம்புத்தூர், மதுரை முதலிய தென் மாவட்டங்களில் பரவியிருந்தன. வங்காளத்தில் பஞ்சாலைகள் ஹௌரா (Howrah) மாவட்டத்திலும், 24 பர்காணுக்

[2] இந்தியாவில். 1948-ம் ஆண்டில், முதலீடு செய்யப்பட்ட அந்நிய மூலதனம் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன: பருத்தி நெசவுத் தொழில்; 21 விழுக்காடு சர்க்கரை; 21 விழுக்காடு மின் பொறியியல், காப்பி, காகிதம் முதலியன; 25-50 விழுக்காடு; நிலக்கரி 62 விழுக்காடு; சுரங்கம் 73 விழுக்காடு; சணல் 89 விழுக்காடு; ரப்பர் 93 விழுக்காடு Malhotra Brothers, Bharat year Book 1957 (Delhi, 1957), p·284.

அட்டவணை 1.

1911-1941-1954 ஆண்டுகளின் ஆலைகளின் வளர்ச்சியும் பரவுகையும்: *[2(அ)]*

(ஆலைகள் நீங்கலாக உள்ள புள்ளிகள் 1000-ல் தரப்பட்டுள்ளன)

இட அமைப்பு	ஆலைகள்			கதிர்கள்		
	1911	1941	1954	1911	1941	1954
பம்பாய் மாநகரம்	87	65	65	2,890·6	2789·1	2975·1
அகமதாபாத்	50	75	74	934·2	1783·0	2067·1
பம்பாய் மாநிலத்தில் இதர பகுதிகள்	45	62	72	696·2	1248·9	415·18
மொத்தம்	182	202	211	4,521·0	5821·0	6494·1
இராஜஸ்தானம்	3	7	12	34·2	98·4	166·7
பேரார்	3	4	11	38·5	69·0	372·1
மத்திய மாகாணம்	7	7	—	189·3	302·8	—
பீகாரும் ஒரிஸ்ஸாவும்	9	2	3	—	25·0	75·5
ஹைதராபாத்	3	6	7	59·5	120·5	158·1
மத்திய இந்தியா	4	16	18	64·0	348·6	1494·9
வங்காளம்	13	33	40	433·7	458·8	494·1
பஞ்சாப்	12	7	11	133·9	105·2	214·3
டெல்லி	—	6	—	113·1	—	—
உ. பி.	14	26	29	396·3	749·6	670·7
(கான்பூர்)	(5)	(11)	(12)	+(351·1)	—	(534·8)
சென்னை மாநிலம்	[illegible]	63	94	362·6	1451·7	2109·7
திருவாங்கூர்	11	1	11	25·6	11·7	134·8
மைசூர்	2	8	[illegible]	28·4	162·1	231·4
பாண்டிச்சேரி	5	3	3	70·7	87·7	86·1
கூடுதல் மொத்தம்	261	390	460	6.407·7	10,025·1	11,691·5

[2(அ)] Compiled from Mehta, M. M., **Structure of Indian Industries** (Bombay, 1955), p. 167 for 1911 and 1941, and Gandhi M. P., **The Indian Cotton Textile Industry, 1954-55 Annual**, Appendix B for 1954. 1914-ல் கான்பூருக்கு + குறியிட்ட விவரங்கள் தோராய மதிப்பீடுகள் ஆகும். based on Vatal, J. S., **Report on the Industrial Survey of the Cawnpore District of** V. P. (Allahabad, 1924).

அட்டவணை 1 (அ)

இட அமைப்பு	தறிகள்			ஒரு 'ஷிப்டில்' வேலை செய்யும் தொழிலாளிகள்		
	1911	1941	1954	1911	1941	1959
பம்பாய் மாநகரம்	42· 5	65·5	65·7	104·5	115 0	112·9
அகமதாபாத்	3·48	43·5	42·6	31·3	75·5	73·1
பம்பாய் மாநிலத்தின் இதர பகுதிகள்	25·0	26·1	27·7	24·1	62·3	55·8
மொத்தம்	85·9	135·1	136·0	252·7	252·8	241·8
இராஜஸ்தானம்	1·1	2·3	3·9	2·2	5·7	17·9
பேரார்	0·8	1·5	7·3	1·6	4·1	17·7
மத்திய மாகாணம்	3·3	5·3	—	11·0	18·6	—
பீகாரும், ஒரிஸ்ஸாவும்	—	0·7	1·6	—	1·2	2·7
ஹைதராபாத்	0·8	2·4	3·2	2·6	7·9	8.1
மத்திய இந்தியா	1 3	10·9	11·3	3·2	27·0	22.1
வங்காளம்	2·0	10·6	10·6	10·2	25·9	22·5
பஞ்சாப்	0 7	2·6	5·5	2·7	5·3	6·7
டெல்லி	—	3·1	—	—	6·4	—
உ. பி.	3 8	12·3	13·3	12·0	29·9	26·9
(கான்ப்பூர்)	+ (3 5)	—	(10·9)	+ 11·0	—	(204·4)
சென்னை மாநிலம்	2·2	6·9	9 3	18·3	55·7	59·2
திருவாங்கூர்	—	0·3	0·7	0·7	1·0	3·6
மைசூர்	0·2	2·8	3 5	1·2	9·2	(204 4)
பாண்டிச்சேரி	1·6	2·1	2·0	4·8	4.9	4·1
மொத்தக் கூடுதல்	101·2	198·9	208·0	230.3	454·8	4354.8

களிலும் (Parganhas) மற்றும் சில இடங்களிலும் அமைந்து இருந்தன.[3]

இத்தொழில் வளர்ச்சி அடைந்த ஆரம்பகாலத்தில் பம்பாயிலும், அகமதாபாத்திலும் பல ஆலைகள் செறிந்து காணப்பட்டன இதற்கான காரணங்களை இங்குக் காணலாம். இந்தியாவை ஆண்டு வந்த பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் நாட்டம் கொள்ளவில்லை. எனவே இந்தியாவில் அரசியல் தூண்டுதலால் மூலதனத்திரட்சி ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. இந்தியாவிலேயே போதிய அளவு உழைப்பாளிகளும், கச்சாப் பொருள்களும், அங்காடிகளும் இருந்த போதிலும். உற்பத்தி நுட்பத்தையும், இயந்திரங்களையும் வெளிநாடுகளிலிருந்து தருவிக்க வேண்டியிருந்தது. இதற்குத் தேவையான மூலதனத்தையும் இவற்றை ஏற்று நடத்தக்கூடிய தொழில் அதிபர்களையும் எங்கிருந்து, எப்படி பெறுவது? பிரிட்டிஷ் வர்த்தகர்கள் இந்தியாவில் லாபகரமாகத் தொழில் செய்து வந்தனர். இருந்த போதிலும் இந்தியாவில் பஞ்சாலையை ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்ந்து பார்க்கத் தயங்கினர். இத்தகைய தொழில் வளர்ச்சி, லங்காஷயரில் வளர்ந்துள்ள தொழிலிற்கு நேரடியாகப் போட்டியிடக் கூடும் என்று அஞ்சினர். எனவே இந்தியாவில் பஞ்சாலைத் தொழிலை ஆரம்பிப்பதற்கு வாணிப மூலதனமும், தொன்மையான தொழில் துணிவும் தேவைப்பட்டன. துவக்கத்தில் பம்பாயிலும், அகமதாபாத்திலும் பஞ்சாலைகள் செறிந்து தோன்றுவதற்கு சாதகமான சூழ்நிலை இருந்தது. இந்த இரு இடங்களுள் முக்கியமாகப் பம்பாயில், 19-வது நூற்றாண்டின்மத்தியிலிருந்து செல்வமும், தொழில் துணிவும் பெற்ற இந்தியத் தொழில் சமுதாயத்தினர் குழுமியிருந்தனர். இந்த விவரம் கீழே தரப்பட்டுள்ளது.[4]

தொழிலின் எழுச்சி: 17 வது நூற்றாண்டின் இறுதியிலிருந்தே இந்தியாவின் மேற்குப் பகுதிகளில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தகத்தலமாக பம்பாய் திகழ்ந்துள்ளது.[5] பம்பாயின் வர்த்தக முக்கியத்துவம் ஓங்கத் தலைப்பட்டதும், பல சமுதாயங்களையும், பல வகுப்புக்களையும் சார்ந்த, தொழில் துணிவுடைய வர்த்தகர்கள்

3 Mehta M. M., அவர்களின் **Structure of cotton Mill Industry of India** (Allahabad, 1947), pp.236-37.

4 இந்தியாவின் தொழில் சமுதாயத்தினர்கள். 18-வது. 19-வது நூற்றாண்டுகளில் எழுச்சி அடைந்த விவரங்களுக்குப் பார்க்கவும், Gadgil, G. R., **Origins of the Modern Indian Business class**-An Interim Report, Institute of Pacific Relations (New york. 1959),

5 பம்பாயின் வரலாற்றை அறிய, பார்க்கவும், Edwards, S. M., **The Rise of Bombay**, reprint from vol X of the **Census of India series**, 1901. (Bombay,- 1902) and the **Gazetteer of Bombay city and Island**, 4 vols. (Bombay, 1909).

பலர்—பிரிட்டானியர்கள், பார்ஸிக்கள், பாத்தியாக்கள், கோஜாக்கள், குஜராத்தியர்கள், யூதர்கள் முதலியோர்—அங்கு மேலும் குழுமினர். இதனுல் பம்பாயில் வர்த்தகம் மேலும் வளர்ச்சி அடைந்தது. 1820 முதல் 1880 வரையிலான காலத்தில் பம்பாயிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த பொருள்களில் அபினும், கச்சாப் பருத்தியும், 70 முதல், 90 விழுக்காடு வரை இருந்தன. இவற்றில் பெரும் பகுதி சீனுவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. மற்றும் அங்கு இறக்குமதி செய்த பொருள்களில் 40 முதல் 60 விழுக்காடு வரையிலான பொருள்கள் பருத்தித் துணியாகவும், நூலாகவும் இருந்தன. இவை பெரும் பாலும் இங்கிலாந்திலிருந்து தருவிக்கப் பட்டன. அக்காலத்தில் மொத்த இறக்குமதியின் மதிப்பு 10 மடங்கும் மொத்த ஏற்றுமதியின் மதிப்பு 14 மடங்கும் அதிகரித்துள்ளன. ஒவ்வொரு ஆண்டிலும் இறக்குமதியைவிட ஏற்றுமதி உபரியாக இருந்துள்ளது.[6] இவ்வாருகப் பம்பாயில் வர்த்தக மூலதனம் அதிக அளவில் குவியத் தொடங்கியது. அமெரிக்க உள்நாட்டுப் போர் ஏற்பட்ட 1861-65 ஆண்டுகளில் எதிர்பாராத வகையில் செல்வம் மேலும் பெருகலாயிற்று. பொதுவாகக் கச்சாப் பருத்தி இந்தியா முழுவதிலும், குறிப்பாகப் பம்பாயிலும் பூரிப்பான நிலைமையில் இருந்தது. இதனுல் பம்பாயில் மட்டும், மேற்படி 5 ஆண்டு காலத்தில், சுமார் ரூ 70 முதல் ரூ 75 கோடி வரை செல்வம் அதிகரித்துள்ளது.[7]

பிரிட்டிஷாரும், பார்ஸிக்களும், 19-வது நூற்றுண்டின் சாதகமான சூழ்நிலையில் பம்பாயின் செல்வத்தை மேலும் பெருக்கலாயினர்[8]

இத்தகையப் பொருளாதார சூழ்நிலையில், பம்பாயில் உள்ள பார்ஸி வர்த்தகர்களின் பிரதிநிதியாகக் கருதப் படுபவரும், தொழில்துணிவு மிக்கவருமான திரு. கோவாஸ்ஜி நானுபாய் தாவர் (Cowasjee Nanabhoy Davar, 1814-1873) என்பவரால் 1851-ல் முதல் பஞ்சாலே பம்பாயில் ஏற்படுத்தப் பட்டது. அந்த ஆலேக்குப் பம்பாய் நூற்பு, நெசவுக்கம்பெனி (Bombay Spinnig and

6 மேற்கொண்டு விவரங்களுக்குப் பார்க்கவும், **Gazetteer of Bombay city and Island vol I, p. 421.**

7 Maclean, J. M., **A Guide to Bombay** (Bombay, 1880), p. 110-119

8 பார்ஸி சமுதாயத்தினரைப்பற்றிய விவரங்களுக்குப் பார்க்கவும், Government of Bombay, **Gazetteer of Bombay Presidency**, (Bombay, 1901), Vol IX Part I, Section III, மற்றும் 19-வது நூற்றுண்டில் பம்பாயில் வாழ்ந்த குடிமக்களின் வாழ்க்கைப்பற்றிய விவரங்களுக்குப் பார்க்கவும, Wacha, E. D, **Shells from the Sands of Bombay** (Bombay, 1920).

Weaving Co, Ltd) என்று பெயர்சூட்டப்பட்டது. அதில் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்த 500 'திரொஸில்' (Throstle) கதிர்கள் பொருத்தப்பட்டன. பம்பாய் வர்த்தகர்கள் பரம்பரையான தொழிலில் அதிகம் ஈடுபட்டு வந்தமையால் புதிய தொழிலில் அதிக நம்பிக்கை வைக்கவில்லை. "பம்பாயில் கூட இத்தகைய ஒரு பஞ்சாலை ஏற்பட்டுள்ளதா என்று;"[9] ஐயப்பட்டனர். முதல் ஆலை 1854-ல் இயங்கத் தொடங்கியது. இந்த கம்பெனி வெற்றிகரமாகச் செயல் பட்டமையால், ஒவ்வொரு ரூ 5000-பங்கிற்கும் முதல் வருட லாப ஈவு ரூ 1000-ஆக இருந்தது. இந்த வெற்றியைத் தொடர்ந்து பம்பாய் திரொஸில் மில்ஸ் (Bombay Throstle Mills) என்ற மற்றோர் ஆலை 1857-ல் நிறுவப்பட்டது.[10] இத்தகைய ஆரம்ப வெற்றி பம்பாயில் குவிந்துள்ள வர்த்தக மூலதனத்தைக் கவர்ந்தது. செல்வம் படைத்த வர்த்தகர்கள் பலர் பஞ்சாலைக் கம்பெனிகளை ஏற்படுத்தினர். 1851-லிருந்து 1915 வரையிலான காலத்தில் 73 வர்த்தக நிறுவனங்கள் நேரிடையாகப் பம்பாயில் 96 ஆலைகளை ஏற்படுத்தின. இவற்றில் மொத்தம் 30 லட்சம் கதிர்களும், 51,900 தறிகளும் 1,12,000 தொழிலாளர்களும் ஈடுபட்டு இருந்தனர். அவற்றின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ 7·66 கோடியாகும்.[11] மற்றும் பல நிறுவனங்கள் துணை முயற்சிகளில் பங்கு பெற்றன. 1880-க்குப் பின்னர் பம்பாய் நூலிற்குச் சீனாவில் அங்காடி ஏற்பட்டதன் காரணமாக நூற்பு ஆலைகள் அதிகமாகத் தோன்றின. 1882-க்கும் 1899-க்கும் இடையில் நூற்பு ஆலைகள் 39-ம் நூற்பும், நெசவும் இணைக்கப்பட்ட ஆலைகள் 17-ம் ஏற்பட்டன. 1924-25-ல் பம்பாயில் உள்ள மொத்தம் 81 ஆலைகளை 41 நிருவாக பதிலாளி நிறுவனங்கள் நிருவகித்தன. அதன் விவரங்கள் பின் வருமாறு; (பார்க்கவும் அட்டவணை-2)

'பெட்டிட்ஸ்', (Petits) வாடியா' (Wadia), 'டாட்டா' (Tata) முதலிய இனத்தவர்கள் பார்ஸி சமுதாயத்தில் மிகவும் முக்கியத்துவம் பெற்ற நிருவாக பதிலாளிகள்.[13] இத்தொழிலில் 'மெஸ்ஸர்ஸ் கிரீவ்ஸ் காட்டன் அண்ட் கம்பெனி'—Messers Greaves cotton and Co-)'மெஸ்ஸர்ஸ் பிராட்பரி பிராடி அண்ட் கம்பெனி'(Messrs-Bradbury Brady and Co) முதலிய பிரிட்டிஷ் வர்த்தகக் கம்பெனிகளும் ஈடுபட்டன[14]. இந்த அட்டவணையில் கூறப்பட்ட வகுப்

9 A Bombay News paper dated July 7, 1860 and quoted in **The Risc of-Bombay**, op. cit., p. 265.

10 Rutnagar, S., M., (Ed) **Bombay Industries: Cotton mills.** (Bombay 927), P. 9.

11. Rutnagar, S. M., முன் கூறியபடி, பக். 10-22.

அட்டவணை 2.

1924-25-ல் பம்பாய் சமுதாயத்தினரைச் சார்ந்த பதிலாளிகளிடையே ஆலைகள் பகிர்வு. [12]

சமுதாயத் தினர்	பதிலாளிகள்	ஆலைகள்	கதிர்கள் (1,000)	தறிகள்	தொழிலாளர்கள் 1,000	மூலதனம் லட்ச ரூபாய்களில்
பார்ஸிகள்	13	22	978·2	25,600	54·7	359·9
இந்துக்கள்	17	19	831·7	15,150	23·3	333·9
மகமதியர்கள்	3	15	587'7	10,810	26.5	321·5
யூதர்கள்	3	14	652·0	13,500	25·0	761·5
ஐரோப்பியர்கள்	5	11	421·5	8,160	19·5	190·1
மொத்தம்	41	81	3471·1	73,220	154·5	1966·5

பினர்களில் பாத்தியாக்கள் மட்டுமே இந்துக்கள் ஆவர். பம்பாயில் அக்காலத்தில் குஜராத்திய வகுப்பினரோ, மார்வாடி வகுப்பினரோ இத்தொழிலின் வளர்ச்சியில் அதிகம் பங்குபெறவில்லை. மகமதியர்களின் பிரதிநிதிகளாக கோஜா (Khoja) குடும்பத்தைச் சார்ந்த இப்ராகீம் கரீம்பாய் அவர்களும், யூதர்களின் பிரதிநிதியாக சாஸூன் (Sassoon) குடும்பத்தினரும் இருந்தனர். [15] ஆனால்,

12 முன் கூறியபடி p' 54.

13 *சீன*, அராபிய கடற்கரைகளில் மிகுந்த செல்வாக்கு உடைய வர்த்தகர்களாக 'பெட்டிட்ஸ்' வகுப்பினர் இருந்தார்கள். 'வாடியா' வகுப்பினர் பருத்தியிலும், பருத்திப் பொருள்களிலும், பெரிய அளவில் வர்த்தகம் செய்து வந்தனர். இவர்கள் இங்கிலாந்தின் இயந்திர உற்பத்தியாளர்களுக்குப் பம்பாயில் மிகப்பெரிய பதிலாளிகளாகவும் இருந்தனர். டாட்டா வகுப்பினர் பழைமையான வகுப்பினர்களாகவோ, பார்ஸி சமூகத்தின் பிரதிநிதிகளாகவோ இருந்ததில்லை. 19-வது நூற்றுண்டின் முதற் பகுதியில் இவர்கள் சீனவுடன் சுமாரான அளவில் வர்த்தகம் செய்து வந்தனர். 1867-68-ல் அபிஸீனியப் போர் (Abyssinian war) நடைபெற்றகாலத்தில் 'நஸ்ஸர் வான்ஜி டாட்டா' (Nasserwanji Tata) அவர்களும், அவரது நண்பர்களும் பம்பாய் அரசாங்கத்துடன், போருக்குத் தேவையான பண்டங்களைத் தருவித்து அளிப்பதாக ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இந்த ஒபபந்தத்தின்மூலமாக கிடைத்த ரூ. 40 லட்சம் லாபத்தைக்கொண்டு முதல் பஞ்சாலையை அமைத்தனர். முன் கூறிய விவரங்களைப் பார்க்கவும், பக். 54, 641, 647, 730 முதலியன. மற்றும், Harnis, F. R., Jamsetji - Nassevwanji Tatta; **A chronicle of his life,** Oxford University press, (1925). p. 11

14 இந்த இரு நிறுவனங்களும், இங்கிலாந்தின் பொறி உற்பத்தியாளர்களின் மிகப்பெரிய 'பதிலாளி'களாக இருந்தன. Rutnagar, S. m., முன்கூறியபடி பக். 641, 643, 655, 703, 705, முதலியன.

15 முன் கூறியபடி P. 54.

பார்ஸிக்கள், பாத்தியாக்கள், கோஜாக்கள், யூதர்கள், ஐரோப்பியர்கள் முதலானவர்களின் செல்வாக்கு நாளடைவில் குறையலாயிற்று. அவர்களுக்குப் பதிலாக, 1930-39 ஆம் ஆண்டுகளிலும், அதற்குப் பின்னரும், குஜராத்தியர்களும், மார்வாடிகளும் அதிக செல்வாக்கைப் பெற்றனர். இந்த விவரங்களை நாம் பின்னர் பார்க்கலாம்.

வளம் மிக்க குஜராத்தில் 15-வது நூற்றாண்டிலிருந்து அரசியல் பொருளாதார முக்கியத்துவம் பெற்ற நகரமாக அகமதாபாத் இருந்து வருகிறது.[16] இங்குப் புகழ் பெற்ற குஜராத்திய பனியாக்கள், முக்கியமாக சமணர் (Jains)கள் வர்த்தகம், வாணிகம், நிதி போன்ற துறைகளில் தீவிரமாக ஈடுபட்டு இருந்தார்கள்.[17] குஜராத்தியர்கள் பரம்பரையாக வந்துள்ள தொழில்களில் முனைப்பாக ஈடுபட்டு இருந்தனர். பம்பாய் வணிகர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவர்கள் பழைமையை விரும்புபவர்களாகவும், பிற்போக்காளர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் அகமதாபாத்தின் முதல் பஞ்சாலையை ஏற்படுத்தவில்லை. இந்த பெருமை திரு. ரான்சோத்லால் சோட்டாலால், 1823-94, (Ranchodlal-Chhotalal) என்ற துணிவுடைய பிராமணரைச் சாரும். இவர் 1859-ல் முதல் ஆலையையும், 1877-ல் மூன்றாவது ஆலையையும் ஏற்படுத்தினார். இவர் ஒரு ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர். இவர் முதல் ஆலையின் துவக்க மூலதனமான ஒரு லட்சம் ரூபாயை உறவினர்களிடமிருந்தும், மிக நெருங்கிய நண்பர்களிடமிருந்தும் பெறுவதற்குள் பல இன்னல்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது,[18] அகமதாபாத்தின் 2-வது ஆலையை 'கான்பி' (Kanbi) நிலக்கிழாரான சேத் பெச்சார்தாஸ் அம்பாவிதாஸ் (Seth Bechardas Ambavidas) என்பவர் 1865-ல் ஆரம்பித்தார்.[19] முதல் மூன்று ஆலைகளும் வெற்றிகரமாகச் செயல்பட்டன. இதனால் இத்

16 குஜராத்தின் பொதுவான வரலாற்றிற்குப் பார்க்கவும்: Ali Muhammad-khan, Mirati Ahmani, **Political and Statistical History of Gujarat,** translated by James Bird, (London, 1935), and Forbes, A. k., **Ras Mala** 2 Vols-Oxford University Press, 1924.

17 அகமதாபாத், குஜராத் ஆகிய இடங்களின் பொருளாதார வாழ்க்கையைப் பற்றி அறிந்துகொள்ள, பார்க்கவும், **Imperial Gazetteer of India, Provincial-series Bombay presidency** (Calcutta, 1909), Vol-I pp. 246, 247, 285 etc. மற்றும் குஜராத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்ட ஜாதியினர்பற்றிய விவரங்களுக்குப் பார்க்கவும், **Gazetteer of the Bombay Presidency,** op-cit., Vol. IX, part I, Section III.

18 Bhadshah, Bhagwanlal, R., **The Life of Rao Bahadur, Ramchodlal chhotalal, C I E,** (Bomday, 1899),

19 Desai, Natwarlal, N., **Directory of Ahmedabad Mill Industry,** 1929-1933, (Ahmedabad, 1935), Historical section, p. 6., இவர் கான்பி (Kanbi) குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற விவரத்தை இக்கட்டுரை ஆசிரியர் அகமதாபாத்தில் தெரிந்துகொண்டார்.

தொழிலிற்கு மேற்கொண்டு குஜராத்தி 'பனியாக்'களின் மூலதனமும், தொழில் துணிவும் கிடைக்கலாயின. 1880 முதல் 1900 வரையிலான காலத்தில் மேலும் 26 ஆலைகள் அகமதாபாத்தில் ஏற்பட்டன. 1900-ல் மொத்தம் 29 ஆலைகள் இருந்தன, அவற்றில் மொத்தம் 4,58,000 கதிர்களும், 8,700 தறிகளும், 10,000 தொழிலாளர்களும் ஈடுபட்டு இருந்தனர். 1900-1914 ஆண்டுகளில் மேலும் 21 ஆலைகள் ஏற்பட்டன. இதாவது மொத்தம் 50 ஆலைகளும், 9,86,000 கதிர்களும், 20,000 தறிகளும் இருந்தன[20]. இந்த 50 ஆலைகளையும் 38 குழுவினர்கள் ஆரம்பித்துள்ளனர். இவர்களில் ஒன்று அல்லது இரண்டு குடும்பத்தினர்கள் நீங்கலாக ஏனையோர்கள் லேவா தேவிக்காரர்களாகவும், வர்த்தகர்களாகவும் இருந்தனர். உண்மையில் "அகமதாபாத் நெசவுத் தொழிலின் தோற்றுவாய்க்கும், பெருக்கத்திற்கும், வளர்ச்சிக்கும், தொழில் துணிவு மிக்க லேவா தேவிக்காரர்களின் ஆர்வமும் மூலதனமும் முக்கியக் காரணிகளாக இருந்தன. இவர்கள் பங்குதாரர்களாகவும், முதலீடு செய்பவர்களாகவும், நிதியாளர்களாகவும், பெரிய அளவு மூலதனத்தை அளித்து இருக்கிறார்கள். அவ்வூரில் அமைந்த ஆலைகளின் நிருவாகிகள், நேரிடையாகவோ, மறைமுகமாகவோ லேவா தேவிக்காரர்களாக இருந்தனர் அல்லது அவர்களது உறவினர் லேவாதேவிக்காரர்களாக இருந்தனர்.[21].

பம்பாயிலும், அகமதாபாத்திலும் இந்தியத் தொழில் அதிபர்கள் பஞ்சாலைத் தொழிலை வளர்த்து வரும் காலத்தில், பிரிட்டிஷ் வர்த்தகர்களும், இந்தியாவில் பஞ்சாலைகளை ஏற்படுத்தும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடலாயினர். இவர்கள் கான்பூரிலும், சென்னை மாநகரிலும் புதிய ஆலைகளை ஏற்படுத்தினார்கள். மக்கள் செறிவுடைய யமுனை-கங்கை ஆற்றிலிடைப்பகுதிகளில் அமைந்துள்ள கான்பூர் வட இந்தியாவில் பிரிட்டிஷார் ஆட்சியின் முக்கிய இருப்பிடமாக வளர்ந்துள்ளது.[22] மெஸ்ஸர்ஸ் பெக். மாக்ஸ்வெல் அண்ட் கோ—(Messrs Begg Maxwell & co) [பின்னர், மெஸ்ஸர்ஸ் பெக், சுதர்லாந்த் அண்ட் கோ—Messrs Begg Suther-land & co] என்ற நிறுவனம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களில் பெருவாரியாக வாணிபம் செய்தது. மேற்படி

[20] Gandhi M P., **Indian Cotton Textile Industry**, 1851-1950, Centenary-Volume, (Bombay, 1951), p. 130.

[21] Estimated from Desai, N. N., op. cit., History Section, and Section III, pp 18-19.

[22] கான்பூரின் வரலாற்றுச் சுருக்கத்திற்குப் பார்க்கவும், Government of the United Provinces of Agra and Oudh, **District Gazetteer of the United Provinces of Agra and Oudh** (Allahabad, 1906, vol. XIX [Cawnpore].

நிறுவனத்தினர் **1861**-க்கும் **1923**-க்கும் இடையில் முதலாவதாக அங்கு 6 பெரிய பஞ்சாலைகளை ஏற்படுத்தினர்கள்.[23] இந்திய வர்த்தகர்களாக இருந்த மார்வாடிகள், உள்ளூர் 'பனியா'க்கள் (Banias) மற்றும் 19-வது நூற்றாண்டிலும், 20-வது நூற்றாண்டின் முற்பகுதியிலும் கான்பூரில் குடியேறிய மகமதியர்கள், முதலியோர் தங்களுக்குச் சொந்தமாக ஆலைகளை அமைத்துக் கொள்ள முயல வில்லை. ஆனால், அவர்கள் பல நிலைகளில் விற்பனை பதிலாளிகளாக வும், பிரிட்டிஷ் ஆலைப் பொருள்களின் விற்பனையாளர்களாகவும் இருந்தனர். இவர்களில் சிலர் இத்தொழிலில் சிறு பங்குதாரர் களாவர்.[24] முதல் உலகப் போருக்குப் பின்னர்தான் 'சிங்கானியா' இல்லத்தின் (House of Singhania) மூதாதையாளர்களான இராம்நாத் பைஜ்நாத் (Ramnath Baijnath) அவர்களால் சிறிய பஞ்சாலை ஒன்று ஏற்படுத்தப் பட்டது.

அமைப்பு முறை

அமைப்பு முறை: இத்தொழிலின் எழுச்சி பற்றிய ஆய்வின் சுருக்கத்தை நாம் மேலே குறிப்பிட்டுள்ளோம். வளமான வர்த்தக நிறுவனங்கள் இந்த ஆலைகளை ஏற்படுத்தியதுடன் நிதி உதவி செய்தும், நிருவகித்தும் வந்தன. இந்திய நிறுவனங்கள் பெரும் பாலும் குடும்பக் குழுக்களாகவே இருந்தன. மரபாக வந்த வர்த் தக நடவடிக்கைகளுடன் புதிய தொழில் துணிவையும் இணைத்து பிரத்தியேகமான தொழில் நிருவாக முறையை—நிருவாக பதிலாளி முறையை—ஏற்படுத்தினர்கள்[25]. இந்த முறையில்

[23]Golden Jubilee Souvenir, Upper India Chamber ofCommerce, Cawnpore, 1888-1938. (Cawnpore, 1938), pp. 12-18. 'எல்ஜின் மில்ஸ்'—Elgin Mill) என்று அழைக்கப்பட்ட முதல் ஆலையை திரு. ஹக் மாக்ஸ்வெல்(Mr. Hugh Maxwells) அவர்களும், அவரது நண்பர்களும் ஆரம்பித்தனர். 'எல்ஜின் மில்லின்' நிர்வாகி யாகவும், காரியதரிசியாகவும் இருந்து ஓய்வு பெற்ற ஒருவரால் 'ம்யூர் மில்ஸ்' (Muir-Mills) என்று அழைக்கப்பட்ட இரண்டாவது ஆலை ஏற்படுததப்பட்டது. 'எலஜின் மில்'லின் முன்னாள் பணியாளராக இருந்த ஒருவரால் 1882-ல் 'கான்பூர் காட்டன் மில்ஸ்' (Cawnpore Cotton Mills) என்ற மூன்றுவது ஆலை துவக்கப்பட்டது: 1886-ல் 'விக்டோரியா மிலஸ்' (Victoria Mills) என்று அழைக்கப்பட்ட 4-வது ஆலை நிறுவப்பட்டது. இந்த 4-வது ஆலை 'எல்ஜின் மில்'லின முன்னால் நெசவு மேற்பார்வை யாளராக (Ex-Weaving master) இருந்த ஒருவரால் ஏற்படுத்தப்பட்டது. 'கான்பூர் காட்டன் மில்'லில் நிருவாகியாக இருந்து ஓய்வு பெற்ற ஒருவரால் 5-வது ஆலையான 'சுதேசி மில்ஸ்' (Swadeshi mills) நிறுவப்பட்டது. 4-வது ஆலையை நிறுவியவா, 1923-ல் 6-வது ஆலையையும் ஏற்படுத்தினர். Ibid 'கண்டோன்மெண்டு' (contonment) பகுதிகளுக்குத் தேவையான துணியைத் தயாரிப்பதற்காகக் கான்பூரில முதலில் பல பஞ்சாலைகள் ஏற்பட்டு இருக்கக்கூடும்.

[24] Vatal, J. S., **Report on the Industrial Survey of the Cawnpore District of the U. P.**, (Allahabad, 1924). pp. 65' 96:103, and **Silver Jubilee Souvenir, the United Provinces chamber of Commerce, Cawnpore** 1914-1936, (Cawnpore, 1937), pp. 71-111.

[25] பொதுவாக நிருவாகப் பதிலாளி முறையைப் பற்றி அறிவதற்குப் பார்க்கவும் Lokanathan, P. S., **Industrial Organisation in India**, (London, 1935), and Nigam, Raj. K., **Managing Agencies in** India Goverment of India, 1958,, p. 1-17.

நிறுவனத்தின் அமைப்பாளர்கள் பொதுவாக செலுத்தப்பட்ட மூலதனத்தின் பெரும்பகுதியைத் துவக்கத்திலேயே அளித்ததுடன் அவ்வப்போது கம்பெனிக்குத் தேவையான நிதியையும் கொடுத்து உதவினர். மொத்த உற்பத்தியிலாவது விற்பனையிலாவது லாபத்திலாவது கமிஷன் பெற்றுக்கொண்டு கம்பெனியின் நிருவாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். மற்றும் இவர்கள் நிருவகிக்கும் கம்பெனிக்குக் கச்சாப் பொருளையும் இயந்திரங்களையும் வாங்குவதுடன் உற்பத்தி செய்த பொருள்களை முகப்பு விலையை விட அதிக விலைக்கு விற்றும் வந்தார்கள். நிருவாகப் பொறுப்பை மேற்கொண்ட நிறுவனம் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவந்தது. இச் செயல்களுக்கும், நிருவகிக்கப் படும் கம்பெனியின் செயல்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இருப்பதில்லை. பம்பாயிலும், கான்பூரிலும், மற்ற இடங்களிலும் நிருவாகப் பதிலாளிகளுக்கு 20 முதல் 40 ஆண்டுகள் வரையிலும், அகமதாபாத்தில் 99 ஆண்டுகளுக்காவது நிரந்தரமாகவாவது நிருவாக உரிமை அளிக்கப்பட்டது. கம்பெனியின் பொறுப்புக்களிலிருந்து நிருவாகப் பதிலாளியைக் கட்டாயமாக நீக்கப்படும் போதும், கம்பெனி மூடப்படுகின்ற போதும், தக்க ஈட்டுத் தொகை கொடுக்கப்பட வேண்டும், நிருவகிக்கும் கம்பெனியுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி அந்த கம்பெனியில் கடந்த 5 ஆண்டுகள் முதல், 20-ஆண்டுகள் வரை அவர் பெற்ற மொத்தக் கமிஷனுக்குச் சமமான தொகையைப் பெறுவார்.[26] தொழில் நிதி வசதிகள் தோற்றுவதற்கு அரசாங்கம் போதிய ஆதரவு அளிக்காத நிலையிலும் பங்கு மார்க்கெட்டுகள் போதிய அளவு வளர்ச்சி அடையாத நிலையிலும் "வர்த்தகப் பிணைப்பின்" ('Commercial nexus') மூலமாக நிருவாக பதிலாளிமுறை தொழில் வளர்ச்சிக்குத் தேவையான நிதி உதவியை அளித்துள்ளது. வர்த்தக மூலதனத்தைத் தொழிலிற்கு நிரந்தரமாக அளித்து வந்தமையால் வெற்றிகரமான தொழில் வளர்ச்சிக்கு அடிகோலியது எனலாம்.[27] ஆனால், மற்றொரு வகையில் அமைப்பு முறை ரீதியாகப் பார்க்கின்ற போது "தொழில்துறை நிபுணர்"களின் வளர்ச்சி வேகம் குறைந்துள்ளதைக் காணலாம். அவ்வகையில் அமைந்தகாரணிகளைக் கீழே குறிப்பிடலாம். முதற்கண் நிருவாக பதிலாளியின் தொழில்துறை ஈடுபாட்டை இரு

[26] சட்டரீதியாகக் கூறவேண்டுமானால், சில சமயங்களில், சொந்த நிறுவனமாக வைத்துக் கொள்வதற்குப் பதிலாக, நிருவாகப் பதிலாளிகள் தனியார் கூட்டுப் பங்கு நிறுவனமாகவோ, பொதுக் கூட்டுப் பங்கு நிறுவனமாகவோ, (தங்களை) அமைத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் இக்கட்டுரையில், நிருவாகப் பதிலாளிகள் நிருவகிக்கின்ற கம்பெனியினின்றும் வேறு படுத்துவதற்காக அவர்கள் கூட்டாக அமைத்துள்ள அமைப்பை நிறுவனம் (firm) என்று கூறுகிறோம். Report of the Indian Tariff Board. (1932) (Calcutta, 1932), pp. 78, 80, 86-88 etc.

[27] Report of the Industrial Commission 1916-18,(Calcutta, 1918), p. 13.

பிரிவுகளாகப் பிரிக்கலாம். (1) நிருவகிக்கப்படும் [ஆலைக்] கம்பெனி மற்றொன்று, நிருவாகப் பதிலாளி நிறுவனம். எனவே தவிர்க்கமுடியாத நிலையில் நிருவாகப் பதிலாளிக்கு இருவகை நலன்கள் ஏற்பட்டு விடுகின்றன. இவர்கள் நிருவகிக்கின்ற கம்பெனிகள், வெற்றிகரமாக செயல்படுகின்ற போதும், அதன் பங்குகளுக்குப்பொதுமக்களிடையேதேவை அதிகரிக்கின்றபோதும் தங்களுடைய பங்குகளை விற்று விடுகின்றனர். [28] இதனால், அந்தக் கம்பெனியில் அவருக்கு இருந்த இரட்டை நிதி நலன்கள் குறைந்து விடுகின்றனர். இத்தகைய சூழ்நிலையில், நிருவாகப் பதிலாளி,தான் நிருவகிக்கின்ற கம்பெனியை விட தன்னுடைய சொந்த நிறுவனத்தின் நலனில் அதிக அக்கறை காட்டுகிறார். தவிரவும், கம்பெனியானது செல்வாக்காக இயங்குகின்ற காலத்தில் பதிலாளிகள், தங்களுடைய பதிலாளி உரிமையை விற்று விடுகின்றார்கள். (2) பெரும்பாலான நிருவாகப் பதிலாளிகள், நிருவாகத்தின் தலைமைப்பீடத்தை ஏற்கும் தகுதியையோ, உற்பத்தி நுட்ப அறிவையோ பெற்று இருக்கவில்லை. அவர்களில் சிலர் தொழில் துறை நிருவாகத்தைப் பாரம்பரியமாக மேற்கொண்டவர்கள். மற்றும்சிலர் தொழில்துறை நிருவாகத்தைத்தங்களது தொழிலாக மேற்கொள்ளவில்லை. இவர்கள் வியாபாரிகளாகவும், வர்த்தகர்களாகவும், நிதியாளர்களாகவும் இருப்பதால், போதிய அளவு நிதி வசதி பெற்று இருக்கின்ற காரணத்தினால், தொழில்துறை நிருவாகத்தை மேற்கொள்ளலாயினர். (3) நிருவாக பதிலாளிகள் தங்கள் நிறுவனத்தின் உறுப்பினர்களாக உள்ளவர்களையே பெரும்பாலும் கம்பெனியின் நெறியாளர்களாக நியமிக்கின்றார்கள். இவர்கள் கம்பெனியின் நிருவாகத்தில் முனைந்து ஈடுபடுவதில்லை. (4) பதிலாளி முறை பாரம்பரியமாக வருகின்ற காரணத்தினால், நிருவாகத் திறன் அதே அளவுக்கு இருக்கக்கூடும் என்று உறுதியாகக் கூறுவதற்கு இல்லை. இந்த விவரணங்கள் இந்தியப் பதிலாளி நிறுவனங்களைப் பொறுத்தவரை முற்றிலும் உண்மை ஆகும். இவை பெரும்பாலும் குடும்பத்தினர்களின் குழு ஆக்கத்தால் அமையப் பெற்றவை. இதனால் ஒரு ஆலையின் வெற்றியோ, தோல்வியோ அதன் நிருவாகப் பதிலாளிகளின் "தனிப்பட்ட தன்மைகளை"ச் சார்ந்து ஆலைகள் இயங்கியமையால் இரு முக்கிய

28 பம்பாயில் இது ஒரு பொது நியதியாக இருந்து வருகிறது. நிருவாகப் பதிலாளியும், அவருடைய நிறுவனமும், கம்பெனியைத் தோற்றுவிக்கின்றபோது 75 விழுக்காடு பங்குகளைப் பெற்று இருந்தார்கள், ஆனால் அந்தக் கம்பெனி வெற்றிகரமாக செயல்படும்போது, அதன் பங்குகளுக்குப் பொதுமக்களிடையே தேவை அதிகரிக்கின்றபோதும், இவர்கள் 25 விழுக்காடு பங்குகளையே வைத்து இருந்தனர். அகமதாபாத்திலும், மற்றும் வட இந்தியா முழுவதிலும், நிருவாகப் பதிலாளிகள் துவக்கத்தில் 100 விழுக்காடு பங்குகளையும், பின்னர் 40 முதல் 50 விழுக்காடு வரையிலான பங்குகளையும் பெற்று இருக்கின்றனர். விவரங்களுக்குப் பார்க்கவும்; Lokanathan, P. S., op. Cit., pp. 21, 26, 27, etc.

விளைவுகள் தோன்றின. ஒரு புறம் நிருவாகப் பதிலாளிகள் அடிக்கடி மாற்றப்பட்டனர்; சில ஆலைகளை மூடவேண்டியதாயிற்று. மற்றொரு புறம் சில பதிலாளி நிறுவனங்களால் பெரும்பாலான பம்பாய், அகமதாபாத் ஆலைகள் கட்டுப்படுத்தப் பட்டமையால் சிறு குழு ஆதிக்கம் (Oligarchy) ஏற்பட்டது. எடுத்துக்காட்டாக 1851-க்கும், 1925-க்கும் இடையில் ஏற்பட்ட 97 ஆலைகளில், 24 மட்டுமே அதே பதிலாளி நிறுவனங்களால், 1925 வரை நிருவகிக்கப் பட்டன. தீக்கிரையாகியதும், பிரிக்கப்பட்டதுமான ஆலைகள் 15, பெயரிலும், நிருவாகப் பதிலாளியிலும் மாற்றம் அடைந்தும் கலைக்கப்பட்டதுமான ஆலைகள் 45, மற்றும் 16 ஆலைகளில் பதிலாளிகள் தன்னிச்சையாகவே மாறிவிட்டனர்.[29] பம்பாயுடன் ஒப்புமையாகக் கருதும் போது, அகமதாபாத், மற்றும் நாட்டின் வட பகுதிகளில் பதிலாளிகளின் இரட்டை நிதி நலன்கள் அதிக அளவு காக்கப்பட்டுள்ளமைக்கு இரு காரணங்கள் உண்டு. பொது மக்களிடையே நிதித்தட்டுப்பாடு அதிகமாகவும், மூலதனக் குவிப்பு குறைவாகவும் இருந்தது. பங்கு மார்க்கெட்டுகள் அதிகம் வளர்ச்சியுறவில்லை. எனவே, 1915 வரையில் நமக்குக் கிடைத்துள்ள உறுதியான ஆதாரங்களின்படி, மொத்தம் 50 ஆலைகளில் 16 ஆலைகளில் மட்டுமே பதிலாளி அமைப்பில் மாற்றம், ஆலையைக் கவனித்தால், ஆலையின் பெயர் மாற்றம், பதிலாளி மாற்றம் முதலியன ஏற்பட்டுள்ளன.[30] நிருவாகப் பதிலாளிகளின் ஆதிக்கத்தின் கீழ் அமைந்துள்ள ஆலைகளைப் பற்றிய விவரங்கள், 1924-25ல் பம்பாய்க்கும், 1931-32ல் அகமதாபாத்திற்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.[31] **(பார்க்கவும் அட்டவணை-3)**

[29] Computed from Rutnagar, S. M., op. cit., pp 25-26 and 53-54 இத்தகைய மாற்றங்கள் ஒரு ஆலைக்கு ஒருமுறை மட்டும் ஏற்படுவதில்லை. இரண்டு முதல் நான்கு தடவைகள்கூட இத்தகைய மாற்றங்கள் ஏற்படக்கூடும்:

[30] Computed from Desai, N. N., op. cit., p. 4—108, ஆலைகளில் இத்தகைய மாற்றங்கள் ஒரு முறைக்கும் அதிகமாக ஏற்பட்டுள்ளன.

[31] Rutnagar, s. m., op. cit., pp. 54—61 and Desai, N.N., op. cit., p. 4—108. பம்பாயில் ஒரு பதிலாளி நிறுவனம் பல நிறுவனங்களை நிருவகித்து வந்தது. அகமதாபாத்தில் அவ்வாறு இல்லை. அங்கு பொதுவாக, ஒரு கம்பெனியை நிருவகிப்பதற்கு ஒரு தனிப்பட்ட பெயருடன் கூடிய ஒரு தனிப்பட்ட பதிலாளி நிறுவனம் அமைக்கப்படும். எனவே அகமதாபாத்தில் பெயரளவிற்காவது குறிப்பிடத்தக்கவகையில் அதிகாரக்குவிப்பு இல்லை என்று கூறலாம். உண்மையில் ஒரு குடும்பக் குழுவினர் பல பதிலாளி நிறுவனங்களை அமைத்தனர். மற்றும் அட்டவணையில் கண்டுள்ளபடி, நிருவகிக்கவும், கட்டுப்படுத்தவும் செய்தனர்.

[32] 1925-ல் பம்பாய் ஆலைத்தொழிலாளர்களில் 15 விழுக்காட்டினர் மட்டுமே, பம்பாய் மாநகரத்திலேயே வசிப்பவர்கள் என்று அறிவிக்கப்பட்டது. Rutnagar, s. m., op. cit., p. 319. 1930-ல் அகமதாபாத் பஞ்சாலைத் தொழிலாளர்களில் 20 விழுக்காட்டினர் பரம்பரை நெசவாளர்கள் ஆவர். விவரங்களுக்கு, **Report of the Royal Commission on Labour in India** (Calcutta, 1931), uP. 13.

அட்டவணை 3
நிருவாகப் பதிலாளிகளிடையே குவிந்து இருந்த ஆலைகள்

ஒரு பதிலாளி நிறுவனத்தால் நிருவகிக்கப்பட்ட ஆலைகள்	பதிலாளி நிறுவனங்கள்	குடும்பக் குழுவினரின் கட்டுப்பாடு அல்லது நிருவாகத்தின் கீழ் உள்ள ஆலைகள்	குடும்பக் குழுக்கள்
1 ஆலை	30 நிறுவனங்கள்	1 ஆலை	10 குழுக்கள்
2 ஆலைகள்	3 ,,	2 ஆலைகள்	6 ,,
3 ,,	4 ,,	3 ,,	4 ,,
5 ,,	2 ,,	4 ,,	1 ,,
2 ,,	2 ,,	5 ,,	1 ,,
மொத்தம்: 23 ஆலைகள்	41 நிறுவனங்கள்	6 ,,	3 ,,
		7 ,,	2 ,,
		மொத்தம் 28 ஆலைகள்	27 குழுக்கள்

இடையே சமூக, கலாச்சார வேறுபாடுகள் அதிகம். தொழில் வளர்ச்சியின் துவக்கக் காலத்தில் ஆலை அலுவலர்களாகவும், பொறியியலாளர்களாகவும், அநேக ஐரோப்பியர்கள் இருந்தனர். [33]

ஆலைகளில் இடைநிலைப்படி அமைப்பில் பலதிறப்பட்டவர்கள் ஏற்பட்டனர். இவர்களை 'ஜாபர்' (Jobbers) 'முக்காடம்' (Muquadams) அல்லது "ஸர்தார்" (Sardar) என்று அழைப்பார்கள். இவர்கள் ஆலை வேலைகளுக்குத் தொழிலாளர்களைத் தேர்ந்துஎடுக்கவும், தொழிலாளர்களை மேற்பார்வை செய்யவும், மற்றும் மொழிபெயர்ப்பாளர்களாகவும் இருந்தார்கள். [34] 'ஜாபர்கள் தொழிலாளர்களுடன் நேரிடையாகத் தொடர்புகொண்டும், அவர்களுக்குத் தேவையானக் கடனைக் கொடுத்தும் வந்தார்கள். வேலை அளிப்போர்கள் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புவசதிகள். ஏதும்செய்து

33 1925-ல் ஆலை அலுவலர்களாகவும், பொறியியலாளர்களாகவும் உள்ளவர்களில் பெரும்பான்மையோர் இந்தியர்களாகளாக இருந்தனர்—காட்டாக, பம்பாய் ஆலையில் (மொத்தம்) அலுவலர்களாவும், பொறியியலாளர்களாகவும் இருந்தவர்களில் 1895-ல் 58 விழுக்காட்டினர் இந்தியர்கள். இந்த விகிதம் 1925-ல் 74 விழுக்காடாக உயர்ந்தது Rutnagar, M. S., op. cit., pp. 293-4.

34 அலுவலர்களும், பொறியியலாளர்களும், இந்தியர் மயமாக்கப்பட்டமையால், 'ஜாபர்'களின் மொழி பெயர்க்கும் அலுவலின் முக்கியத்துவம் குறைந்தது. விவரங்களுக்கு; Mehta, S. D., The Indian Cotton Textile Industry-An Economic-Analysis (Bombay 1953), pp. 66—69.

கொடுக்கவில்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு அன்றைய நிலைமை இருந்தது. 'ஜாபர்'களில் பலர் தொழிலாளர்களுக்குக் குடிசைகள் கட்டி வாடகைக்கு விட்டனர்[35]. பெரும்பாலான தொழிலாளிகள் கிராமத்திலிருந்து "ஈர்க்கப்படவில்லை. ஆனால் "வெளியேற்றப்பட்டார்கள்" இவர்கள் ஓரளவிற்காகவாவது ரொக்கமாக வருவாய் ஈட்டவேண்டும் என்று கிராமத்திலிருந்து வெளியேறினார்களேயல்லாமல், தொழில் நகரங்களில் மேன்மையான வாழ்க்கையைப் பெறும் நோக்கத்துடன் நிரந்தரமாகக் குடியேறவில்லை. ஆகையால், அவர்கள் சொந்தக்கிராமத்துடன் நெருங்கிய 'தொடர்பு' கொண்டு இருந்தார்கள்; கூடியவிரைவில் கிராமத்திற்குத்திரும்புவதற்குப்பெரிதும்விழைந்தார்கள். தொழிலாளர்கள் தங்கள் வேலையில் நிலைபெறாமல் இருந்தமைக்கும், அதிகமான தொழிலாளர் தொழில்துறையில் ஈடுபட்டதற்கும், கிராமத்துடன் அமைந்த நெருங்கியப்பிணைப்பு ஒரு முக்கியக் காரணமாக இருந்தது. 1931-ல்கூட சராசரியாக, ஒரு தொழிலாளி ஒருஆலையில் அதிகபட்சம் 2-வருடங்கள் மட்டுமே வேலை செய்ததாகக் கூறப்படுகிறது[36]. கிராமப் பிணைப்புக் காரணமாகத் தொழிலாளிகள் சாத்வீகமாக இருந்தார்கள். தொழிலாளர்கள் இயக்கத்தில் இவர்கள் ஈடுபடவில்லை. மற்றும் குறைந்த ஊதியத்திற்கு வேலைசெய்யத் தயாராக இருந்தார்கள். தொழிலாளர்கள் எப்போதும் கிடைத்துக்கொண்டு இருந்தமையால், அடுத்து அடுத்து தொழில் வளர்ச்சிக்குத் தேவைப்பட்ட போதெல்லாம் வேண்டிய அளவு தொழிலாளர்களை அளித்து, தொழில் வளர்ச்சி தடைபெறாமல் செய்தமைக்கும் இந்த கிராமப்பிணைப்பு ஒரு முக்கியக்காரணமாகும். அதைத்தவிர, தொழிலாளர்களின் முன்னேற்ற வேகத்தைக் குறைப்பதற்கும் இப்பிணைப்பு காரணமாக இருந்தது. இவர்கள் நிலையான வாழ்க்கையை மேற்கொள்ளுவதற்கும் அமைப்பு முறைகளின் மூலமாகச் செயல்படுவதற்கும், கட்டுப்பாடுடன் இருப்பதற்கும், திறமையை ஓங்கச் செய்வதற்கும் பெருந்தடையாக இது இருந்தது. 19-வது நூற்றாண்டில் கடைசிப் பத்தாண்டுகளிலிருந்து தொடர்ந்து முதல் உலகப்போர் வரையிலான காலத்தில், ஊதி

35 விவரங்களுக்கு, **Report of the Royal Commission on Labour in India. op. cit.**, 270—78-முதல் உலகப்போருக்குப்பின்னர் தொழிலாளா இயக்கம் தீவிரமாக வளரலாயிற்று. தொழிலாளிகளைப் பற்றிய செய்திகளை ஆலை நிருவாகிகளுக்குக் கூறும் புகிய பொறுப்பை ஜாபர்கள் ஏற்றனர். விவரங்களுக்கு: Shiva Rao, B., **The Industrial Worker in India.** (London, 1939), pp. 90—104.

36 **Report of the Royal Commission on Lobour jn India**, pp. 11—17. வேலையின்மை பெருகி இருந்தபோது, அனுபவம் பெற்ற பழைய தொழிலாளர்களைத் தக்கக் காரணம் இன்றி 'ஜாபர்'கள் வேலையிலிருந்து நீக்கினார்கள். அவர்களுக்குப் பதிலாகப் புதிய தொழிலாளர்கள அமர்த்தப்பட்டார்கள். இவர்களிடமிருந்து ஜாபர்கள் ஓரளவு தொகையைப் பெற்றுககொண்டார்கள். எனவே, தொழிலாளாகள் நிலையற்று இருந்தமைக்கு 'ஜாபர்'களும் காரணம் ஆவர்.

இருந்தது. 19-வது நூற்றாண்டில் கடைசிப் பத்தாண்டுகளிலிருந்து தொடர்ந்து முதல் உலகப்போர் வரையிலான காலத்தில், ஊதியத்தில் குறிப்பிடத்தக்க அளவில் மாறுதல்கள் ஏதும்ஏற்படவில்லை. 1914-ல் ஒரு தொழிலாளியின் சராசரி மாத வருவாய் பம்பாயில் ரூ. 16-6-3 (ரூ. 16-39)யும், அகமதாபாத்தில் ரூ. 13-9-9 (ரூ, 13-61) ஆகும். இதர இடங்களில் ஊதியம் இதைவிடக் குறைவாக இருந்தது [37]. நம்முடைய மதிப்பீட்டின்படி, ஒரே மாதிரியான பொருள்களை உற்பத்திசெய்வதற்கு ஆகும் உழைப்பிற்கான (ஆக்கச்)செலவு 1906-ல் பம்பாயில் உள்ளதைவிட லங்காஷயர் நூற்புப் பிரிவுகளின் செலவு 3 மடங்காகவும், நெசவுப் பிரிவுகளின் செலவு 2.3 மடங்காகவும் இருந்தது [38]. இத்தொழில் வெற்றிகரமாக வளர்ந்ததற்கு உழைப்புச்செலவு குறைவாக இருந்ததை ஒரு முக்கியப் பொருளாதாரக் காரணமாகக் கருதலாம். முதல் உலகப் போருக்குப்பின்னர் இந்தியாவில் அரசியல் விழிப்புணர்ச்சி தோன்றியதாலும், வாழ்க்கைச் செலவு கண்டிராத வகையில் அதிகரித்தமையாலும், அச்சமயம் ஏற்பட்டஒரு கொள்ளைநோய்காரணமாகத் தற்காலிகத்தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டாமையாலும், தொழில் வளர்ச்சியில் ஒரு பூரிப்பான நிலைமை இருந்தமையாலும், தொழிலாளர்இயக்கம் திடீரென்று எழுச்சி பெறலாயிற்று. [39] 1921-க்கும், 1925-க்கும் இடையே இந்தியா முழுவதிலும் உள்ள பருத்தி ஆலைகளில் ஊதிய உயர்வு கோரியும், வேலைச் சூழ்நிலையின் அபிவிருத்தியைக் கோரியும் 500-க்கும் அதிகமான வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. [40] இதன் காரணமாகப் பம்பாயில் 1914-ல் 100 ஆக இருந்த ஊதியக் குறியீட்டு எண், 1921-ல் 187-ஆகவும், 1926-ல் 269 ஆகவும் உயர்ந்தது. அகமதாபாத்தில் 1914-ல் 100 ஆக இருந்த குறியீட்டு எண். 1921-ல் 222 ஆகவும், 1926-ல் 281-ஆகவும் உயர்ந்தது. [41] இந்தியாவில் உணவுப்பொருள்களின் சில்லரை விலைக்குறியீட்டு எண் 1941-ல் 100 ஆக இருந்தது. 1926-ல் இந்த எண் 169 ஆக உயர்ந்தபின்னர் 1926-ல் 136-ஆகக் குறையலாயிற்று [42]. 1926-ல் ஒரு தொழிலாளியின் மாத சராசரிஊதியம் பம்பாயில் ரூ. 44-3-6 (ரூ, 44-22)ஆகவும், ஆமதாபாத்தில் ரூ. 39-4-0 (39-25) ஷோலாப்பூரில் ரூ. 26-10-2 (ரூ. 26-64) ஆகவும் இருந்தது. [43]

[37] Desai, N. N., op-cit., P-12.

[38] Computed from **Gazetteer of Bombay City and Island** Vol. I, p-209.

[39] Shiva Rao, B., op-cit., pp. 18—19.

[40] **Report of the Roayl Commission on Lobour in India** pp. 333—34.

[41] Computed from Desai, N. N., op-cit., P. 12. and **Report of the Royal Commission on Labour in India** pp. 197—98.

[42] Government of India, **Index Number of Indian Prices** 1861—1931. (Delhi, 1933), p. 3.

[43] Report of the Royal Commission on Labour in India, PP. 197—98.

பொதுவாகப் பெண் தொழிலாளிக்குக் கிடைக்கும் ஊதிய விகிதம் ஆண் தொழிலாளி ஒருவரின் ஊதியத்தில் பாதிக்கும், குறைவாக இருந்தது. சில சிறப்பான சமூகப் பழக்க காரணமாக ஆலைகளில் பெண் தொழிலாளர்கள் மிகவும் குறைவாக இருந்தார்கள்.

போருக்குப் பின்னர் பல தொழில் சங்கங்கள் தோன்றின. பல கலைக்கப்பட்டன, 1924-ல் இந்தியத் தொழிலாளர் இயக்கத்தில் மொத்தம் 20 பருத்தி நெசவாலைச் சங்கங்கள் இருந்தன. அவற்றின் மொத்த உறுப்பினர்கள் 32,000 பேர்கள். இந்தியாவில் உள்ள மொத்த ஆலைத் தொழிலாளர்களில் இவர்கள் 10 விழுக்காடாக இருந்தனர்.[44]

இதற்கிடையில் லங்காஷயரில்உள்ள வர்த்தகர்களின் வற்புறுத்தலுக்கு [45]இணங்க இந்திய அரசாங்கம் 1881-ல் ஆலைச் சட்டத்தை ஏற்படுத்தியது. அச்சட்டம் 7-முதல் 12 வயதுவரையில் உள்ள சிறுவர்கள் அதிகபட்சம் ஒரு நாளைக்கு 9 மணிநேரம் வேலை செய்யலாம் என்றும், அவர்களுக்கு இடையில் ஒரு மணி நேர ஓய்வு கொடுக்கப்படவேண்டும் என்றும் கூறியது. இச்சட்டம் பின்னர், 1891-லும் 1911-லும், 1922-லும் திருத்தப்பட்டது. அவற்றின் காரணமாகச் சிறுவர்கள் ஆலையில் வேலை செய்வதற்கான குறைந்தபட்ச வயது 12-லிருந்து 15 ஆக உயர்த்தப்பட்டது தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு அதிகபட்சம் 11 மணி நேரம் வேலை செய்யலாம் என்றும், ஒரு வாரத்தில் அதிகபட்சம் 60 மணி நேரம் வேலை செய்யலாம் என்றும் நிர்ணயிக்கப்பட்டது 1891-ம் ஆண்டுச் சட்டத்தின்படி பெண் தொழிலாளர்கள் அதிகபட்சம் 11 மணி நேரம் வேலை செய்யலாம் என்றும் இவர்களுக்கு 1½ மணி நேர இடைவேளைக் கட்டாயமாக இருக்கவேண்டும் என்றும், இரவு நேரங்களில் பெண்களும், சிறுவர்களும் வேலைசெய்யக் கூடாது என்றும் கூறியது. 1911-ம் ஆண்டுச் சட்டத்தின்படி சிறுவர்கள் அதிகபட்சம் 6 மணி நேரம் மட்டுமே வேலை செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டது. பின்னர் தொழிலாளர் இயக்கத்தின் வற்புறுத்தலுக்குஇணங்க இந்திய அரசாங்கம்,1923-ல் தொழிலாளர்கள் நஷ்டஈட்டுச் சட்டத்தையும் (Workmen's compensation Act,) 1926-ல் இந்தியத் தொழில் சங்கங்கள் சட்டத்தையும் (Indian Trade Unions Act)-ஏற்படுத்தியது.

கச்சாப் பொருள்களும், உற்பத்தியும், அங்காடிகளும் :

பெருவாரியான நிலப்பரப்பில் கச்சாப்பருத்தி சாகுபடி செய்யப்படுகின்றது. பம்பாய், தக்கணம், மத்திய மாகாணம், பேரார், குஜராத், கத்தியவார், மத்திய இந்தியா, ஐக்கிய மாகாணம், தமிழ்நாடு, பஞ்சாப் ஆகிய இடங்களில் பருத்தி ஒரு முக்கிய வர்த்

[44] பார்க்கவும்: Mathur, A. s., and Mathur, A. S., **Trade Union Movement is India** (Allahabad pp. 1957), . 18—21.

[45] Punekar, S. D., **Trade Unionism in India** (Bombay, 1948), pp. 55 ff.

தகப்பயிராக இருந்தது [46] 1913- 8-ம் ஆண்டுகளில் இந்தியாவில் விளைந்த மொத்தப் பருத்தியில் 185விழுக்காடு நடுத்தர, குட்டை இழைப் பருத்திகளாக இருந்தன. அவற்றின் நீளம் 7/8 அங்குலத்தையும்விடக் குறைவாக இருந்தன. நீண்ட இழைப் பருத்தியின் உற்பத்தி 7,26,000 பேல்கள் ஆகும் [47]. ஒவ்வொரு ஆண்டிலும் மொத்தப் பருத்தி உற்பத்தியில் 50-60 விழுக்காடு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி. செய்யப்பட்டது 19-வது நூற்றாண்டின் இறுதியிலிருந்து ஜப்பான், சீனு, இங்கிலாந்து முதலிய நாடுகள் நமது முக்கிய வாடிக்கைதாரர்களாக இருந்தனர். [48] கச்சாப்பருத்தியானது உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோருக்குச் செல்வதற்குள்ளாக அநேக இடைநிலையாளர்களின் கைமாறவேண்டியிருந்தது [49].

(பார்க்கவும் அட்டவணை ; 4)

நூல் துணி உற்பத்தி பற்றிய விவரங்கள் கீழே உள்ள அட்டவணை 4-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

1900-1915-ல் இந்திய ஆலைகளின் வளர்ச்சி பிரமிக்கத்தக்கதாக இருந்தது. இக்கால்த்தில் நூலின் உற்பத்தி 85 விழுக்காடும் துணியின் உற்பத்தி 169 விழுக்காடும் அதிகரித்துள்ளன அதிக அளவு வெளிநாட்டுத் துணி (முக்கியமாக இங்கிலாந்து) இறக்குமதி செய்யப்பட்டது. கைத்தறித் துணியின் உற்பத்தியும் (692-லிருந்து 1184 மில்லியன் கஜங்களாக) உயர்ந்தது. இந்தியாவின் மொத்தத் துணி அளிப்பில் இறக்குமதி, ஆலை உற்பத்தி, கைத்தறி உற்பத்தி ஆகியவைகளின் விகிதம் 1900-01-ல் முறையே 65 விழுக்காடு, 11 விழுக்காடு, 24 விழுக்காடாக இருந்தது. இந்த விகிதம் 1914-15-ல் முறையே 52 விழுக்காடு, 23 விழுக்காடு, 25 விழுக்காடாக மாறியது, முதல் உலகப்போர் நடைபெற்ற காலத்தில் கப்பல் தட்டுப்பாடு காரணமாகவும், கட்டண உயர்வு காரணமாக

46 கச்சாப்பருத்திபற்றி பொதுவாக அறிந்துகொள்வதற்குப் பார்க்கவும், Dantwala, M. L., A Hundred Years of Indian Cotton, Bombay, 1947

47 Government of India, Report of the Indian Central Cotton Committee, (Calcutta, 1919), Vol. I pp. 7—16.

48 Gandhi, M. P., The Indian Cotton Textile Industry; Its past, present, and future (Calcutta, 1930), P. 77.

1923-24 வரை இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட நீண்ட இழைப்பருத்தியின் அளவு மிகவும் குறைவாக இருந்தது. அப்போது இந்திய ஆலைகள் அனைத்தும், குறிப்பாகப் பம்பாயில் உள்ள ஆலைகள் ஒரு மந்தமான சூழ்நிலையில் இருந்தன. இதன் காரணமாக மெல்லிழை நூல்களையும், உயர்தர துணிகளையும் உற்பத்தி செய்ய வேண்டியிருந்தது. இதற்காக நீண்ட இழைப்பருத்தியின் இறக்குமதி அதிகரிக்கப்பட்டது. 1922-23-ல் 50,000 பேல்களாக இருந்த இறக்குமதி, 1927-28-ல் 2,97,000 பேல்களாக அதிகரித்தது. பிற விவரங்களுக்கு; Statistical Abstract for British India 1921-22. to 1930-31 (Delhi, 1933), pp. 578—619.

49 Report of the Bombay Provincial Banking Enquiry Committee Bombay, 1930, Vol. I, pp. 101 ff.

அட்டவணை - 4.

பருத்தி நூல், துணி முதலியவற்றின் அளிப்பு.[50]

ஆண்டுகள்	நூல்			துணி				தலா நுகர்பு
	நிகர இறக்குமதி	இந்தியாவில் உற்பத்தி	இந்திய நூல் ஏற்றுமதி	நிகர இறக்குமதி	இந்தியாவில் உற்பத்தி		இந்தியத் துணி ஏற்றுமதி	
					ஆலைகள்	மொத்தம்		
	(மில்லியன் பவுண்டுகளில்)			(மில்லியன் கஜங்களில்)				(கஜங்களில்)
1900-01	30·1	353	122	1,875	422	1,114	111	9·80
1914-15	34·0	652	143	2,327	1,136	2,320	110	14·35
1919-20	7.9	636	161	836	1,640	2,204	239	8·80
1924-25	50·5	719	46	1,710	1,970	3,226	230	15·01

50 Government of India, **Report of the Indian Tariff Board, Cotton Textile Industry Enquiry** (1926-27), Vol. I, pp, 236-37.

வும், இங்கிலாந்திலிருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்வதில் உள்ள இன்னல்கள் காரணமாகவும் மேற்கொண்டு இத்தொழிலின் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. [51] நூல், துணி ஆகியவைகளின்இறக்குமதி 1914-15-க்கும், 1919-20-க்கும் இடையில் முறையே நான்கில் ஒரு பகுதியாகவும், மூன்றில் ஒருபகுதியாகவும், வீழ்ச்சி அடைந்தது. அதேசமயம் உள்நாட்டில் நூல் உற்பத்திஒரளவிற்குக்குறைந்துள்ள போதிலும், ஆலைத்துணியின் உற்பத்தி 45 விழுக்காடு அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. போருக்குப்பின்னர் பணவீக்கம் ஏற்பட்ட காலத்தில் 1919-20-லிருந்து 1924-25 வரையிலான காலத்தில் இந்திய ஆலைகளின் நூல், துணி ஆகியவற்றின் உற்பத்தி முறையே 13 விழுக்காடும், 20 விழுக்காடும் அதிகரித்துள்ளன. முக்கியமாக சுதேசஇயக்கம் காரணமாகவும், ஒரளவிற்குஉலகத்தில்பொதுவாக உள்ள துணிப்பற்றுக்குறை காரணமாகவும், இறக்குமதி செய்யப்பட்டஅந்நியத்துணியின் அளவு போர் ஏற்படுவதற்குமுன்பு (1914) இருந்ததைவிட வெகுவாகக் குறைந்துவிட்டது. 1919-20 ல் பருத்தித் துணியின் அளிப்பில் இறக்குமதி 29 விழுக்காடாகவும், ஆலை உற்பத்தி 50 விழுக்காடாகவும், கைத்தறித்துணி 21 விழுக்காடாகவும் இருந்தது. இந்த விகிதம் 1924-25 ல் முறையே 35 விழுக்காடாகவும், 30 விழுக்காடாகவும் மாறியது.

இந்திய ஆலைகளில்உற்பத்திச்செய்யப்பட்ட நூல், துணி இவைகளின் தர அமைப்பைப்பற்றிக் காணலாம். இந்தியாவில் சாகுபடி செய்யப்படும் கச்சாப்பருத்தி குட்டை இழையாகவும், நடுத்தர இழையாகவும் இருப்பதால், இந்திய ஆலைகளில் தயாரிக்கப்படுகின்ற நூலும், துணியும் பெரும்பாலும் குறைவான, நடுத்தர வகையைச் சேர்ந்தவையாக இருக்கின்றன. 1922-23 வரை இவற்றில்பெரும்பாலானவை எ. 30-க்கும்குறைவானவையாகும். அதே ஆண்டில் எ. 1-20 நூல் உற்பத்தி 68 விழுக்காடாவும், எ. 21-30நூல் உற்பத்தி 29 விழுக்காடாகவும், எ. 31-க்கும் மேலான நூலின் உமபத்தி 3 விழுக்காடாகவும் இருந்தன. [52] இந்திய ஆலைகள் காட்டா நடுத்தர ரக நூல், துணி உற்பத்தியில் சிறப்பாக ஈடுபட்டமை, யாலும், ஊதியச்செலவும், கச்சாப்பொருள்களின் விலையும் மிகக் குறைவாக இருந்தமையாலும், இத்தொழில் துரிதமாக வளர்ச்சி, அடைய முடிந்தது. இந்தியாவிலும், சீனாவிலும் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு வேண்டிய நூலை, அளித்ததுடன் இந்தியாவில் குறைந்த வருவாய் பெறும்நுகர்வோருக்குத்தேவைபான துணியையும் இத்தொழில் அளித்து வந்தது. இங்கிலாந்திலிருந்து இறக்கு

51 முன் கூறியபடி, PP. 81 and 235.

52 Computed from Read, Stanley, (ed)., The Indian Year Book 192
Bombay, 1929), p. 657.

மதி செய்யப்பட்ட நூலும், துணியும், ஏனைய ரகங்களிலிருந்து உயர்ந்த ரகமாக மாறியதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன[53].

பெரும்பாலும் பம்பாய் ஆலைகள்தான் இந்தியாவின் நூல் துணி முதலியவற்றிற்கு வெளிநாடுகளில் அங்காடியை ஏற்படுத்தின 1880 வரை, அதாவது, 1874-75 முதல் 1878-79முடிய உள்ள ஆண்டுகளில் சராசரியாக ஏற்றுமதி செய்யப்பட்ட இந்திய நூல் 10.8 மில்லியன் பவுண்டுகள் ஆகும். இவை முழுவதும் பம்பாய் ஆலைகளில் தயாரிக்கப்பட்டன. இவற்றில் 9 மில்லியன் பவுண்டுகள் சீனுவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன[54], ஆனால் 1878 வாக்கில் இந்தியாவில் பல இடங்களில் கடுமையான பஞ்சம் எற்பட்டது[55]. இதனால் பஞ்சாலைத் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டது. பம்பாய் ஆலைகள் அநேக வாடிக்கைக்காரர்களை இழக்கலாயிற்று. இதே காலத்தில் உலகச் சூழ்நிலை காரணமாக, வெள்ளியின் விலை பொன் மதிப்பின் அடிப்படையில் குறையலாயிற்று[56]. இதனால் சீனுவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பிரிட்டிஷ் நூல் முன்பு இருந்ததைவிடக் குறையலாயிற்று. பம்பாய் தொழிலிற்கு வெளிநாட்டு வர்த்தகத்தில், முக்கியமாகச்சீனுவுடனுனவர்த்தகத்தில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டது. இதனைச் சமாளிக்கும் நோக்கத்துடன் சில ஆலை அதிபர்கள், முக்கியமாக பெட்டிட்ஸ் (Petits) வகுப்பினர், பம்பாயில் உற்பத்தி செய்த நூலை, சீன அங்காடிகளில் விற்பனை செய்வதற்கு முயன்று, வெற்றியும் பெற்றுர்கள். 1882-83 ல் பம்பாயில் ஏற்றுமதி செய்த 45 மில்லியன் பவுண்டு நூலில் பெரும்பகுதி சீனுவிற்கு அனுப்பப்பட்டது.[57] கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் பம்பாயிலிருந்து சீனுவிற்கு ஏற்றுமதியாகும் நூல் அதிவேகமாக அதிகரித்துள்ளதைக்காட்டுகிறது, (பார்க்கவும் அட்டவணை-5)

இதன் உச்சநிலை, இந்த நூற்ருண்டின் முதல் பத்து ஆண்டுகளில் ஏற்பட்டது. பம்பாய் ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த நூலில் 65 விழுக்காடு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அதில் 90 விழுக்காடு சீனுவிற்கு மட்டும் அனுப்பப்பட்டது. 1911-20 ஆண்டுகளில்

[53] **Report of the Indian Tariff Board** 1926-27 Vol. I P. 35.

[54] முன் கூறியபடி P. 84.

[55] பார்க்கவும்: Dutt. R. e. **The Economic History of India**, Vol. II, 6th Ed. (London, 1950), PP. 410, 416, 426 Etc.

[56] பார்க்கவும், Mukerje, R, K. and Dey, H. L,, (ed) Economic problems of Modern India. (1941) vol II, part V.

[57] Mehta, S D, Cotton Mills in India, 1854-1954, (Bombay, 1954), p. 47.

[58] Compiled from **Report of the Indian Tariff Board**, 1926.27, vol. I,p.84.

அட்டவணை நெ. 5.

இந்தியாவிலிருந்தும், பம்பாயிலிருந்தும் நூல் ஏற்றுமதி.[58]

(மில்லியன் பவு. களில்)

வருட சராசரி	மொத்த ஏற்றுமதி	இந்தியாவிலிருந்து சீனாவிற்கு	மொத்த ஏற்றுமதி	பம்பாயிலிருந்து சீனாவிற்கு	பம்பாயில் மொத்த நூல் உற்பத்தி
1879-80 முதல் 1883-84 வரை	35·8	30·1	34·3	28·9	—
1904-05 முதல் 1908-09 வரை	248·0	220·7	235·4	210·0	360·8
1909-10 முதல் 1913-14 வரை	192·8	170·0	181·2	159·5	339·4
1925-26	31·9	9·7	31·5	9·4	261·9

தோன்றிய ஜப்பானியப்போட்டியின் காரணமாகவும், சீனாவின் நூற்புத் தொழில் துரிதமாக வளர்ச்சியடைந்தமையாலும், சீனாவில் இந்திய நூலிற்கான அங்காடி வீழ்ச்சி அடையலாயிற்று,[59] இந்தியத் துணியின் ஏற்றுமதி ஒருபோதும் மிகப்பெரிய அளவில் இருந்ததில்லை. இந்திய ஆலைகளின் மொத்த உற்பத்தியில் ஏற்றுமதியின் அளவு 1900-01 ல் 26 விழுக்காடாகவும், 1914-15 ல் 9 விழுக்காடாகவும், 1919-20 ல் 14 விழுக்காடாகவும், 1924-25 ல் 11 விழுக்காடாகவும் இருந்தது. இவற்றைப் பெரும்பாலும் பம்பாய்ஆலைகள் உற்பத்தி செய்தன. இவை கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரை, பாரசீக வளைகுடா, சிலோன், மலாக்கா ஜலசந்தி (Strait settlement) முதலிய பகுதியில் அமைந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.[60] பம்பாய் ஆலைகளில் உற்பத்தியாகும் நூலின் பெரும் பகுதி சீனாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்தியாவின் இதர

59 பார்க்கவும்: Ganguli, B, N, India's Economic Relations with the Far Eastern anb Pacific Countries in the Present Century, (Bombay. 1956), P.P 164-66

60 Statis tical Abstract for British India, 1915-16, to 1924-25 (Calcutta, 1926) P. P 490-91 and also Report of the Indian Tariff Board 1926-27, vot I P. 98

பகுதிகளில் உள்ள ஆலைகள் வளர்ந்து வரும் உள்நாட்டு அங்காடிகளுக்குத் தேவையான நூலை அளித்து வந்தன [61].

போருக்குப் பின்னர் ஏற்பட்ட பூரிப்பும், இயந்திரங்களின் தேய்மானமும்

போர் நடைபெற்ற சமயத்தில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துணிமணிகள் திடீரென்று வீழ்ச்சி அடைந்தன என்றும், போர் முடிவு பெற்ற பின்னரும் இத்துறையில் அத்தகைய மீட்சியும் ஏற்படவில்லை என்றும் முன்னமே கூறினோம் [1913-14ல் இறக்குமதி 3,042 மில்லியன் கஜங்களாக இருந்தது, 1922-23 ல் 1,467 மில்லியன் கஜங்களாகக் குறைந்தது.] போர் முடிவு பெற்ற ஐந்து ஆண்டு காலத்தில், இந்திய ஆலைகளின் நூல், துணி முதலியவற்றின் உற்பத்தி 7 விழுக்காடுகளே அதிகரித்துள்ளன[62]. இதற்கிடையில் இந்தியாவில் பாங்கு (பண) நோட்டுக்களின் புழக்கம் அதிகரிக்கலாயிற்று. 1914-ல் ரூ. 6,612 லட்சமாக இருந்த பணம் புழக்கம் 1918-ல் ரூ. 9979 லட்சம் ஆகவும். 1920-ல் ரூ. 17,452 லட்சம் ஆகவும் அதிகரித்துள்ளது[63]. திடீரென்று தோன்றிய பண வீக்கம் காரணமாக இத்தொழிலிற்குப்பண அடிப்படையில் பூரிப்பு ஏற்பட்டது[64]. பம்பாய் ஆலைகள் 1919-க்கும் 1923-க்கும் இடையில் ஈட்டிய நிகர லாபத்தின் கூடுதல் ரூ. 28.83 கோடி என்று மதிப்பிடுகின்றோம். இவ்வைந்து ஆண்டுகளில் கூடுதல் அடைந்த நிகர லாபத்தின் விகிதம் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 116-விழுக்காடாகவும் லாப ஈவின் விகிதம் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 116 விழுக்காடாகவும், இருக்கின்றன. அவ்வாறே 1921-க்கும் 1923-க்கும் இடைப்பட்ட 3 ஆண்டுகளில்அகமதாபாத் ஆலைகளுக்கான விவரங்கள் முறையே ரூ. 4-35 கோடியாகவும், 138 விழுக்காடாகவும், 104 விழுக்காடாகவும் இருந்தன[65].

(61) இத்தொழிலில் வெவ்வேறு இடங்களில் உள்ள விற்பனை முறைகள் பற்றிய விவரங்களுக்குப் பார்க்கவும், Ibid, P 161-2 Desai, N. N., op cit., seetion III P.P 17-18 and Vatal J,S, op cit, P.P 63-64

(62) **Report of the Indian Tariff Board,** 1926-27 **vot I PP.236-39**

(63) **Statistical Abstract for British India, op cit., p. 241**

(64) 1914-ல் 100 ஆக இருந்த புரோச் (**Broach**) கச்சாப்பருத்தியின் விலைக் குறையீட்டு எண் 1918-ல் 225-ஆக, உச்ச நிலையை அடைந்தது. பின்னர் 1921-ல் 111-ஆக வீழ்ச்சியடைந்தது. பின்னர் 1923-ல் 172-ஆக மறுபடியும் உயர்ந்தது. 1914-ல் 100 ஆக இருந்த பம்பாய் (நி-20) நூலின் குறியீட்டு எண், 1918-ல் 258 ஆகவும் 1920-ல் 334 ஆகவும் உச்சநிலைக்கு உயர்ந்தும், பின்னர் 1923-ல் 200 ஆகவும் வீழ்ச்சியடையலாயிற்று. பம்பாய் துணியின் குறியீட்டு எண், 1914-ல் 100 ஆக இருந்தது. இவ்வெண். 1918-ல் 265 ஆகவும். 1920-ல் 305 ஆகவும் (உச்சநிலை) உயர்ந்தது. பின்னர் 1923-ல் 212-ஆக வீழ்ச்சி அடைந்தது, பார்க்கவும் **Index number of Indian prices,** op cit P.P 7 and 12-14

65 **Computed from the Report of the Indian Tariffl Board** 1926.27 **vot I Pp 20-23**

ஆனால் வேளாண்மைப் பொருள்களின் விலை 1920-21 லிருந்தே நிதானமாக வீழ்ச்சி அடையத் தொடங்கியதால், 1923-ல் தொழிலின் பூரிப்பிற்கு இடையே மந்த நிலைமை உருவாகியதாகக் கூறலாம். சீனாவின் நூல் அங்காடியை இழந்தபின்னர், 1924 லும் 1925-லும் முறையே ரூ. 92 லட்சமும் ரூ. 134 லட்சமும் நிகர இழப்பு ஏற்பட்டது. அகமதாபாத் ஆலைகளுக்கும் இந்தியாவின் வட பகுதிகளில் உள்ள ஆலைகளுக்கும், உள்நாட்டுஅங்காடிகள் நிலையாக இருந்தமையால், இழப்பு ஏற்படவில்லை. இருந்தபோதிலும் 1924-லும், 1925-லும், லாபம் ரூ. 50 லட்சமாகக் குறைந்தது.[66] இந்திய ஆலை முதலாளிகள், முக்கியமாகப் பம்பாயில் உள்ளவர்கள், தொழிலாளர்களின் ஊதியத்தை வெகுவாகக் குறைக்க முற்பட்டனர். இதனால், தொழிலாளர்களின் கிளர்ச்சி மேலும் அதிகரித்தது, இதே காலத்தில் இந்தியாவின் மொத்த உற்பத்தி நிதானமாக அதிகரித்துக்கொண்டு வந்துள்ளபோதிலும், பம்பாயில் உள்ள ஆலைகளின் மொத்த உற்பத்தியைக் குறைந்து எண். 31-க்கும் மேலான உயர்ந்தரக நூல், துணி இவற்றின் உற்பத்தியை அதிகரிக்கலாயிற்று. 1922—23-ல் 6·6. மில்லியன் பவு. ஆக இருந்த நூலின் உற்பத்தி (மொத்தத்தில் 19. விழுக்காடாக இருந்தது) 1927—28-ல் 17.3 மில்லியன் பவு. ஆக உயர்ந்தது. (மொத்தத்தில் 5.4 விழுக்காடாக உயர்ந்தது. உயர்ந்த ரக நூல், துணி முதலியவற்றின் உற்பத்தி அதிகரிப்பின் காரணமாக விற்பனை எளிதாகி விட்டது[67]. உயர்ந்தரக நூலையும், துணியையும் உற்பத்தி செய்வதில் அதிகக் கவனம் செலுத்திய போதுதான் வெளிநாடுகளின் போட்டியை, முக்கியமாக ஜப்பானின் போட்டியை, அதிக அளவிற்கு உணர்ந்தனர். ஜப்பானியப் பொருள்களுக்கு இந்தியாவில் 1910-லிருந்தே அங்காடி ஏற்பட்டு விட்டது. [ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நூல், துணி முதலியவற்றை இந்திய ஆலைகளின் மொத்த உற்பத்தியின் விகிதமாகக் கருதும் போது மிகக்குறைவாக இருப்பதைக் காணலாம். 1922—23-ல் 4 விழுக்காடாகவும், 1925—26-ல் 13 விழுக்காடாவும் இருந்தன. அவை பெரும்பாலும் பம்பாயில் இறக்குமதி செய்யப்பட்டன. முக்கியமாக எண். 31—40 நூலாகவும், அவற்றால் நெய்யப்பட்ட துணியாகவும் இருந்தன. ஜப்பானிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட நூலும், துணியும், கிட்டத்தட்ட அதே தரத்தில் இந்தியஆலைகளின் உற்பத்திக்குச் சமமாக இருந்தன. ஜப்பானியப் பொருள்களின் விலைகள் பம்பாய் ஆலைகளின் ஆக்கச்

[66] முன் கூறியபடி pp. 20-23.

[67] Computed from **Indian Year Book** (1926) op. cit, p. 657, and **Indian Year Book** (1929) p. 722.

[68] Computed from Report of the Indian Tariff Board 1926-27, Vol-I, pp. 35, 38 & 49.

செலவுகளைவிடக் குறைவாக இருந்தன.[68]. 1922-1926-ஆண்டுகளில் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நூலின் மதிப்பு அதன் மொத்த இறக்குமதி மதிப்பில் 40—60 விழுக்காடாகவும்.(ஜப்பானுடைய பங்கு, 35—55 விழுக்காடாகவும் உள்ளது) துணியின் மதிப்பு அதன் மொத்த இறக்குமதி மதிப்பில் 88—75 விழுக்காடாகவும் (ஜப்பானுடைய பங்கு 8—16 விழுக்காடாகவும்) இருந்தன. இவற்றில் பெரும்பாலானவை எண். 41-யைவிட உயர்ந்த ரகமாதலால், ஜப்பானியப் பொருள்களைப்போல், இந்தியப் பொருள்களுடன் அதிக அளவில் நேரிடையாகப் போட்டியிடவில்லை.[69].

பருத்தித் தொழிலிற்குக் காப்பு அளிக்கும்படி இந்திய அரசாங்கத்தை, பம்பாய் ஆலை முதலாளிகள் சங்கம் கேட்டுக் கொண்டதுடன், இக்கோரிக்கையை மீண்டும் வற்புறுத்தும்படி அகமதாபாத், பரோடா ஆலை முதலாளிகள் சங்கங்களையும் கேட்டுக் கொண்டது.

1921—1922-க்குப் பின்னர் இறக்குமதியாகும் ஜப்பானிய நூலிற்கு 5 விழுக்காடும், துணி மணிகளுக்கு 11 விழுக்காடும் வருமானத் தீர்வை விதிக்கப்பட்டது. இத்தீர்வை போதுமானதாக இல்லைஎன்று ஆலைமுதலாளிகளின் சங்கங்கள் கருதியது. எனவே, இத்தொழிலைக் காக்கும் வகையில் இறக்குமதி செய்யப்படும் ஜப்பானிய பொருள்களின் மீது, அதிகப்படியாக 13 விழுக்காட்டுச் சிறப்புத் தீர்வை விதிக்க வேண்டும் என்று அவை இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டது.[70]

69 முன் கூறியபடி, பக். 35.

70 விவரங்களுக்குப் பார்க்கவும்: **Report of the Indian Tariff Board 1926-27, Vol. II, Evidence and Statements of Bombay Millowners Association.** ஜப்பானிய சரக்குகளின் மீது 13 விழுக்காடு சிறப்புத்தீர்வை விதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இரு கூறுகளாகப் பிரிக்கலாம். 1923-லிருந்து ஜப்பானிய 'யென்'-Yen-னில் ஏற்பட்ட மதிப்புக் குறைப்பிற்காக 8 விழுக்காடும், நீண்ட வேலை நேரத்திற்காகவும், மற்றும் பெண்கள், சிறுவர்கள் முதலியோர்கள் ஜப்பானிய ஆலைகளில் இரண்டு 'ஷிப்டு'-(Shift) களில் வேலை செய்வதற்காக 5 விழுக்காடும் தீர்வை வேண்டும் என்றும் கோரினர் அகமதாபாத், பரோடா ஆலை முதலாளிகளின் சங்கங்கள். மற்றும் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அதாவது, தீவிரமான வெளிநாட்டுப்போட்டி எந்த ஒரு குறிப்பிட்ட நாட்டிலிருந்தும் ஏற்படவில்லை என்றும், இது ரூபாயின் (வெளிநாட்டு) மதிப்பை உயர்த்தியதால் ஏற்பட்டது என்றும், போருக்கு முன்னர் 1 ஷி: 4-பென்ஸ் ஆக இருந்த ரூபாயின் மதிப்பை, 1926-ல் 1 ஷி 6 பென்ஸ் ஆக நிர்ணயிக்கப்பட்டமையால் இந்தியப் பொருள்கள் வெளிநாட்டுப் பொருள்களுடன் போட்டியிடமுடியவில்லை என்றும் கூறினர். இந்த அடிப்படையில் எ. 40-க்கும் குறைவான நூல், துணி முதலியன இறக்குமதி செய்யப்படுமேயானல் அவற்றின் மீது அதிகப்படியாக 13 விழுக்காட்டுத் தீர்வை விதிக்கப்படவேண்டும் என்றும் இதைத்தவிர தேய்மானத்திற்கு ஈடுசெய்கின்ற வகையில் மற்றும் அதிகப்படியாக 4-5 விழுக்காட்டிற்குத் தீர்வை விதிக்கப்பட வேண்டும் என்றும், அகமதாபாத் ஆலை முதலாளிகள் சங்கத்தினர் கோரினர். பரோடா ஆலை முதலாளிகள் சங்கத்தினர், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற துணி மணிகளின் மீது அதிகப்படியாக $12\frac{1}{2}$ விழுக்காட்டுத் தீர்வை விதிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். பார்க்கவும்: **Statementsand Evidence of Ahamedabad Mill Owners Association and Statements and Evidence of Baroda Mill Owners Association.**

2. காப்பும், வளர்ச்சியும் (*1927—1956*)

அரசாங்கத்தின் கொள்கைகள்: பருத்தித் தொழிலிற்கான காப்புக் கோரிக்கையை இந்திய அரசாங்கம் முதலில் நிராகரித்தது. பின்னர், இறக்குமதிசெய்யப்பட்ட பஞ்சாலை இயந்திரங்கள், இதர உறுப்புக்களின் மீதான 10 விழுகாட்டுத் தீர்வையை நீக்கியது.[71]. ஆலை முதலாளிகளின் கோரிக்கைக்குத்தேசிய இயக்கத்தினர் ஆதரவுஅளித்ததுடன், அரசாங்கத்தினிடம் அதனை நிறைவேற்றும்படிக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, 1927-ஆகஸ்டில் இறக்குமதி யாகும் நூலில் பவுண்டு ஒன்றுக்கு $1\frac{1}{2}$ அணு (ரூ 0.09) வீதம் குறித்த வீதத்தீர்வை (Specific duty) யாவது அல்லது 5 விழுக்காடு பெறுமான விகிதத் (ad valorem) தீர்வையாவது விதிப்பதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்தது.[72]. மந்த நிலைமை தொடர்ந்து நீடித்தமையால் அதிகப்படியான காப்பு வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தினர். அச்சமயம் அரசாங்கத்தின் நிதி நிலைமையும் மிகவும் மோசமாக இருந்தமையால், 1930-ல் இறக்குமதி செய்யப்பட்ட துணிமணிகளின் மீதான வருமானத் தீர்வையை 11-லிருந்து 15 விழுக்காடாக அரசாங்கம் உயர்த்தியது. இங்கிலாந்து அல்லாத ஏனைய நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் பருத்தித் துணிமணிகளுக்கு 5 விழுக்காடு காப்புத் தீர்வையாவது, அல்லது அதற்கு ஈடான மாற்றுத் தீர்வைகளாவது விதிக்கப்படும்.[73]. ஆனால் 1931-ல்அர சாங்கத்தின் நிதிநிலைமை மிகவும் சீர்கேடு அடைந்தமையால் பிரிட்டிஷ் துணிமணிகளின் மீதான இறக்குமதித் தீர்வையை 25 விழுக்காடாகவும்இதர நாடுகளிலிருந்துஇறக்குமதியாகும்துணிமணிகளின்மீதான தீர்வையை $31\frac{1}{4}$விழுக்காட ாகவும் உயர்த்தினர். மற்றும் இறக்குமதி செய்யப்படும் பருத்தி நூலின் மதிப்பில் $6\frac{1}{4}$ விழுக்காடு தீர்வையா

71 **Report of the Indian Tariff Board regarding the Grant of protection to the Cotton Textile Industry 1932, (Calcutta, 1932) Pp. 1-3.** அரசாங்கம் கீழே குறிப்பிட்ட ஆதாரங்களைக்காட்டி, காப்புக் கோரிக்கையை நிராகரித்தது. ஜப்பானிய 'யென்'னின் மதிப்பு 1925-டிசம்பருலிருந்து அதிகரித்துள்ளது என்றும், மற்றும் பொன்னின் மதிப்பிற்குச் சமமாக உள்ளது. (**Gold-parity**) என்றும கூறியது. எனவே ஜப்பானியத்தொழிலிற்குத் தொழிலாளர்கள் வேலை நிலைமைகாரணமாக ஏற்பட்டுள்ள சாதகநிலைமை ஆக்கச் செலவில் 10 விழுக்காடுகள் தான் உள்ளன என்றும் அதனை ஈடு செய்யும் வகையில் தற்சமயம் உள்ள 11 விழுக்காடு வருமானத் தீர்வை அமைந்துள்ளது என்றும், எனவே இறக்குமதி செய்யப்படும் (ஜப்பானியத்) துணியின் மீது அதிகப்படியான தீர்வை தேவையில்லை என்றும் கூறின. அதேசமயம் இறக்குமதியாகும் நூலின் மீதான 5 விழுக்காடு வருமானத் தீர்வை போதுமானதாக இல்லையானாலும் கைத்தறி நெசவாளர்களின் நலன் கருதி அதனை மேற்கொண்டு அதிகரிப்பதற்கு இல்லை என்றும் அறிவித்தனர்.

72 மேற்கொண்டு விவரங்களுக்குப் பார்க்கவும், **Government of India Legislative Assembly Debate,** 1927, vol IV (official Report) **Simla, (1927) pp 4004-4009**

73 பம்பாய் ஆலைகளுக்குத் தற்காலிகமாக உதவும் நோக்கத்துடன் 5 விழுக்காடு காப்புத்தீர்வை விதிக்கப்பட்டது. ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கோரிக்கைக்கு இணங்க, பிரிட்டிஷ் சரக்குகளுக்கு இத்தீர்வையினின்றும் விலக்கு அளிக்கப்படும். பார்க்கவும், **Report of the Indian Tariff Board, 1932 p. 25**

வது, அல்லது அதற்குச் சமமான மாற்றுத் தீர்வையாவது விதிக்கப்படும்.[74]. உயர் விகிதச் சுங்கத் தீர்வைகள் காரணமாகவும், சுதேசி இயக்கம் 1930-லிருந்து தீவிரமாக வளர்ந்தமையாலும்[75]. இறக்குமதி செய்யப்படும் துணிமணிகள் வெகுவாகக் குறைந்துள்ளதை கீழே உள்ள அட்டவணை எண். 6லிருந்து அறியலாம்.[76]. (பார்க்கவும் அட்டவணை-6)

1931-ம் ஆண்டின் இறுதியில் பொன் ஏற்றுமதியை ஜப்பான் தடைசெய்தது. 'யென்'னின் மாற்று விகிதம் ரூபாயின் அடிப்படையில் வீழ்ச்சி அடைந்தது. இதனால் ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் 1932-முதல் ஆறுமாதங்களுக்கு மாதா மாதம் அதிகரித்துக் கொண்டே சென்றது.[77]. எனவே 1932-ஆகஸ்ட்டில் பிரிட்டன் அல்லாத நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் துணிகளுக்கான இறக்குமதித் தீர்வை 31¼ விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடுகளாக உயர்த்தப்பட்டது. இருந்தபோதிலும் இறக்குமதி செய்யப்பட் துணிகளின் அளவு மேலும் அதிகரிக்கலாயிற்று. 1931—32-ல் 776 மில்லியன் கஜங்களாக இருந்தது. 1932-33ல் 1225 மில்லியன் கஜங்களாக உயர்ந்தது[78]. எனவே 1933-ஜூனில் பிரிட்டன் அல்லாத நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் துணிகளின் மீதான இறக்குமதித் தீர்வை 75 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. 1934-ஜனவரியில் இந்தியா ஜப்பானுடன் பரிமாற்றக் 'கோட்டா' முறை உடன்படிக்கை (Reciprocal quota system) ஒன்று செய்து கொண்டது. ஒரு வருடத்திற்கு இந்தியாவில் இறக்குமதி செய்யக்கூடிய ஜப்பானிய பருத்தி துணி மணிகளின் 'கோட்டா' வும், இந்தியாவிலிருந்து ஜப்பானுக்கு ஏற்றமதி செய்யக்கூடிய கச்சாப் பருத்தியின் 'கோட்டாவும்' முறையே 325 மில்லியன் கஜங்களாகவும், ஒரு மில்லியன் பேல்களாகவும் நிர்ணயிக்கப்பட்டன. வர்த்தகத்தின் அளவு இதைவிட அதிகமாகவோ குறைவாகவோ இருக்குமேயானால் அதற்கான தனிச் சலுகைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதே சமயம் பிரிட்டன் அல்லாத இதர நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் துணிகளின் மீதான தீர்வை 50 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.[79]. 1935-ம் ஆண்டு இந்தோ-பிரிட்டிஷ்

74 முன் கூறியபடி பக். 3-7

75 Regarding the Swadeshi Movement and Industry, see Mehta, S. D., The Cotton Mills in India, 1854-1954 Pp. 176-198.

76 Report of the Indian Tariff Board (1932) Pp. 27-28

77 முன் கூறியபடி—பக். 94-105

78 Gandhi, M. P. The Indian Cotton Textile Industry, 1937 Annual P-xi

79 முன் கூறிய விவரப்படி P. P 126-127

அட்டவணை 6.

(மில்லியன் கஜங்களில்)

ஆண்டுகள்	பிரிட்டன்		ஜப்பான்		மொத்த இறக்குமதி	ஆலை உற்பத்தி
	அளவு	மொத்த இறக்கு மதிக்கு விழுக்காடு	அளவு	மொத்த இறக்கு மதிக்கு விழுக்காடு		
1928-29	*1456*	*75*	*357*	*18*	*1937*	*1893*
1929-30	*1248*	*65*	*562*	*19*	*1939*	*2419*
1930-3	*523*	*59*	*321*	*36*	*890*	*2561*
1932-32	*383*	*49*	*340*	*34*	*776*	*2990*

வர்த்தக உடன்படிக்கைக்கு இணங்க 1936-ல் இந்திய அரசாங்கம் பிரிட்டிஷ் துணிகளின் மீதான இறக்குமதித் தீர்வையை 25-லிருந்து 20 விழுக்காடாகவும், பிரிட்டிஷ் நூலின் தீர்வையை $6\frac{1}{4}$ லிருந்து 5 விழுக்காடாகவும் குறைத்தது[80]. 1939-மார்ச்சில் இந்தோ—பிரிட்டிஷ் வர்த்தக உடன்படிக்கை திருத்தி அமைக்கப்பட்டது. அதன்படி பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துணிகளின் மீது விதிக்கப்பட்டிருந்த தீர்வை 15 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. அதற்குப் பதிலாக ஜப்பானிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட துணிகளின் அடிப்படை 'கோட்டா'வான 325 மில்லியன்களை விட அதிகமாகியது. இதனை அட்டவணை 7ல் காணலாம்.

அட்டவணை 7.

அறுவைகளின் உற்பத்தியும், இறக்குமதியும்

(மில்லியன் கஜங்களில்) [81]

ஆண்டுகள்	பிரிட்டன்	ஜப்பான்	மொத்த இறக்குமதி	ஆலை உற்பத்தி
1933-34	426	349	796	2,945
1934-35	552	374	944	3,397
1935-36	440	496	947	3,571

937-ல் இந்தியாவிலிருந்து பர்மா பிரிக்கப்பட்டதன் காரணமாக ஜப்பானியத் துணியின் இறக்குமதிக் 'கோட்டா'வும் 283 மில்லியன் கஜங்களாகக் குறைக்கப்பட்டது. ஜப்பானிய துணியின் இறக்குமதி ஒப்பந்த அடிப்படையில் அமைந்த கோட்டவைவிட அதிகமாக இருந்தபோதிலும், 1936—37ல் 417 மில்லியன் கஜங்களிலிருந்து 939—40-ல்393 மில்லியன் கஜங்களாகவும், 1940—41-ல்

[80] பார்க்கவும்: Government of India, Report of the Special Tariff Board on Enquiry regarding the Level of the Duties necessary to afford adequate protection to the Indian Cotton Textile Industry against Import from U. K of Cotton piecegoods and yarn etc. (Delhi, 1936), PP 113-114 para 37, 38, and 39

[81] காந்தி, M. P. op. cit. XI

368 மில்லியன் கஜங்களாகவும் இருந்தது. 1941-ல் முற்றிலும் நின்று விட்டது [82].

சுங்கப்பாதுகாப்புடன் பொதுமக்களின் உறுதியான ஆதரவும் இருந்தமையால், இந்தியஅங்காடிகளில்மேற்கொண்டுவெளிநாட்டுப் போட்டி பரவவிடாமல் வெற்றிகரமாகத் தடுத்துநிறுத்த முடிந்தது. இரண்டாவது உலகப்போர் காரணமாக இந்திய அங்காடியில் வெளி நாட்டுப் போட்டி முழுமையாகவும், இறுதியாகவும் அகற்றப் பட்டது.

இரண்டாவது உலகப்போர் இத்தொழிலிற்கு முற்றிலும் புதிய தொரு பிரச்சினையைத் தோற்றுவித்தது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் திடீரென்று நிறுத் தப்பட்டதுடன், இந்தியப் பொருள்களுக்கான தேவை அதிகரிக்க லாயிற்று. இராணுவத்திற்காக, இந்தியாவிலும், வெளிநாடுகளிலும், மற்றும் நேசநாடுகளிலும் துணி அதிக அளவு தேவைப்பட்டது. இதன்விளைவாகத்துணிப்பஞ்சம் ஏற்பட்டது. விலையும் அதிவேகமாக உயரலாயிற்று.[83]. நிலைமையைச் சமாளிப்பதற்கு இந்தியஅரசாங்கம் பல திட்டங்களைக் கொண்டு வந்தது. அவையாவன, துணித் தரத் திட்டம், 1942 (Standard Cloth Scheme); பருத்தித்துணி, நூல் (கட்டுப்பாடு) உத்தரவு, 1943; [Cotton Cloth and yarn (Control) order]முதலியன ஆகும். இது தவிர துணிக்கட்டுப்பாட்டுப் போர்டு (Textile Control Board) 1943 அமைக்கப்பட்டது. மற்றும் மிகை லாப வரியும், கட்டாய வைப்புத் திட்டமும் 1940-ல் கொண்டு வரப் பட்டன. இதைத் தவிர 1945-ல் துணிப்பயன் திட்டமும் (utlity Cloth Scheme) 1946-ல் பருத்தி துணி இடப் பெயர்ச்சிக் கட்டுப்பாடு உத்தரவும் [Cotton Textile Control of Movement Order1946]; 1947ல் தரப்படுத்தும் திட்டமும்(Standardisation Scheme), 1948-ல் பருத்தித்துணி கட்டுப்பாட்டு உத்தர வும் அமுலாக்கப் பட்டன. இவற்றின் மூலமாக உற்பத்தியையும், பகிர்வையும், பருத்திஆடைகளின் விலையையும், கட்டுப்படுத்தமேற் கொண்ட முயற்சிகள் ஓரளவிற்கே வெற்றியை நல்கின. [84].

(பார்க்கவும் அட்டவணை 8)

[82] முன் கூறியபடி, 1940, Annuai PXI

[83] 1942—43 ல் துணி பற்றாக்குறை மிகவும் தீவிரமாக இருந்தது. பொதுமக் களின் சராசரி நுகர்வு 1939.40-ல் 16—67 கஜமாக இருந்தது. 1942—ல் 7 கஜமாகக் குறையலாயிற்று. அதே சமயம் துணியின் விலை 1939 ஆகஸ்டில் இருந்ததைப் போல 4-மடங்காக அதிகரித்தது. Govil K L., Cotton Industry of India 2nd Ed. Bombay (1950); p.p 45. and 48.

[84] இக்காலத்தில் அரசாங்கத்தின் கொள்கைகளைப் பற்றிய விவரங்களுக்குப் பார்க்கவும், Govil K. L, முன்கூறியபடி, p.p. 48-54 and 73-86, and Mehta, S. D. op. cit p.p 197—ff.

அட்டவணை 8.

பருத்தி நூல், துணி முதலியவற்றின் உற்பத்தியும், இறக்குமதியும், ஏற்றுமதியும் (*1939 - 1951*) [85]

(நூல்-மில்லியன் பவுன்களிலும், துணி-மில்லியன் கஜங்களிலும்)

	1939-1940	1942-43	1944-45	1947-48 பாரதம் (இந்திய யூனியன்)	1950-51
நூல் இறக்குமதி	41	0·9	0·2	8·8	0·5
ஆலை நூல் உற்பத்தி	1235	1534	1652	1330	1162
இந்திய நூல் ஏற்றுமதி	37	34	17	6·04	74 5
நிகரப் பருத்தித் துணி இறக்குமதி	560	10	50	26	5
ஆலைப் பருத்தித் துணி உற்பத்தி	4012	4109	4726	3770	3675
இந்திய ஆலைத் துணி ஏற்றுமதி	321	818	423	192	1210
கைத்தறி உற்பத்தி	1820	1500	1600	1230	750
தலா நுகர்வு (கஜங்களில்)	16·67	+12·40	+15·10	14·1	9·7

போர் சமயத்திலும், அதற்குப் பின்னரும் இறக்குமதி செய்யப்பட்ட அந்நியப் பொருள்கள் முற்றிலும் நின்றுவிட்டதை அட்டவணை 8 விவரித்துக் கூறுகின்றது. போர் நடை பெற்ற காலத்தில் மிகப் பெரிய அளவிற்கு ஆலைகளின் உற்பத்தி அதிகரித்தது. போர் நின்ற பின்னர் தொழிலாளர்களின் கிளர்ச்சிக் காரணமாகவும், சமயப் பூசல்கள் காரணமாகவும், 1947-ல் பிரிவினைக்குப்பின்னர் தோன்றிய கச்சாப் பொருள்கள் பற்றுக்குறை காரணமாகவும் உற்பத்தி பெரிதும் குறையலாயிற்று. 1948 வரை இந்தியப் பொருள்களுக்கு வெளிநாடுகளில் தேவை அதிகமாக இருந்தபோதிலும், ஏற்றுமதிக்கு ஆதரவு அளிக்காமல் அதனைக்கட்டுப்படுத்தி வந்தனர்

[85] Compiled from Gandhi, M, P,, op. cit., 1940 and 1945-46, tables 7-10 nd ibid, 1954-55 Annual pp, iii- X

'+' குறியிட்ட எண்கள் உண்மையில் பொதுமக்களின் நுகர்வைக் குறிக்கவில்லை. அதில் பெரும் பகுதி இராணுவத்திற்காக அளிக்கப்பட்டது.

இந்திய அரசாங்கம் இத்தகையக் கொள்கையை 1948-ல் மாற்றிக் கொண்டது. ஏற்றுமதிக்கு ஆதரவு அளிக்கப்பட்டமையால் இந்தியத் துணிமணிகளுக்கு நிலையான அங்காடிகளை வெளிநாடுகளில் தோற்றுவிக்க முடிந்தது. இதனால் 1950—51-ல் ஏற்றுமதி திடீரென்று அதிகரிக்கலாயிற்று.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நாட்டின் எல்லாத்துறைகளின் வளர்ச்சிக்காக அரசாங்கம் பல்வகைப்பணிகளை மேற்கொண்டது. தனியார் துறையில் மிகப்பெரிய தொழிலான பஞ்சு ஆலைத் தொழிலின் முதல் திட்ட இலக்குகள் பின் வருமாறு: 1955-56-ல நூல் உற்பத்தி 1640 மில்லியன் பவு. கள், துணி உற்பத்தி 4700 மில்லியன் கஜங்கள், ஆலைத்துணி ஏற்றுமதி 940 மில்லியன் கஜங்கள், கைத்தறித்துணி ஏற்றுமதி 60 மில்லியன்கஜங்கள்.

தலா நுகர்வு 1951—52-ல் 12.5 கஜங்களாக இருந்தது. இதை 1955—56-ல் 15 கஜங்களாக உயர்த்தக்கருதினர். உற்பத்தி, பகிர்வு, விலைகள் முதலியவற்றின் மீதான அரசாங்கக் கட்டுப்பாடுகள் 1952—53-ல் நீக்கப்பட்டன. இந்திய நூல் ஏற்றுமதியும், இந்தியா இறக்குமதி செய்யும் நூல், துணி ஆகியவற்றின் அளவும் மிகவும் குறைந்த அத்தியாவசியமான அளவில் இருக்கும்படி கட்டுப்படுத்தப்பட்டது.[86] மற்றும் அசாதாரணவகையில் மிக அதிகமான இறக்குமதித் தீர்வைகள் விதிக்கப்பட்டன. பிரிட்டிஷ் துணிகளின் இறக்குமதியின் மீது 60 முதல் 80 விழுக்காடுவரையிலும் பிரிட்டன் அல்லாத நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட துணிகளின் மீது 50 முதல் 100 விழுக்காடு வரையிலும் இறக்குமதித் தீர்வைகள் விதிக்கப்பட்டன. இதைத்தவிர முதல் திட்டகாலத்தில் 5 விழுக்காடு தண்டல்வரி (Surchrage) விதிக்கப்பட்டது.[87]

உண்மையில் திட்ட இலக்கின் அளவிற்கு நூல் உற்பத்தி செய்யப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் துணி உற்பத்தியும் சராசரி (தலா) நுகர்வும் திட்ட இலக்கைவிட சற்று அதிகமாகவே இருந்தது. ஆனால் ஆலைத்துணியின் ஏற்றுமதி திட்டக் காலம் முழுவதிலும், இலக்கைவிட மிகவும் குறைவாகவே இருந்துள்ளது. 1951—52-ல் 384 மில்லியன் கஜங்களாகவும். 1955—56-ல் 760 மில்லியன் கஜங்களாகவும், 1955—56-ல் 680 மில்லியன் கஜங்களாகவும் இருந்தன.[88]

கச்சாப் பொருள் உற்பத்தி, ஏற்றுமதி ஆகியவற்றில் ஏற்பட்ட மாறுதல்கள்

இந்தியாவில் பருத்திப் பயிரின் விளைச்சல் 1932—33-ல்

[86] **Programmes of Industrial Development (1951-56) PP 208—10, 211-13 and 341**

[87] Gandhi, M. P.,op. cit., 1954-55 **Annual** pp. Vi--VIII

[88] முன் கூறியபடி, 1954-55 **Annual** pp. III, IV, X and 1956-57 **Annual** pp. III, IV. XVII

46, 57, 000 பேல்களாக இருந்தது. 1941—42-ல் 62,23,000 பேல் களாக உயர்ந்தது. பின்னர் "அதிக உணவு உற்பத்தி" இயக்கத்தின் காரணமாக, இவ்விளைச்சல் 35,66,000 பேல்களாகக்குறைந்தது. நாடு பிரிவினை செய்யப்பட்டபோது, நீண்ட இழைப் பருத்தி சாகுபடியாகும் மேற்குப் பஞ்சாபை இந்தியா இழந்தமையால், 1948—49-ல் விளைச்சல் 17,67,000 பேல்களாகக் குறைந்தது[89] ஆனால் முதல் திட்டக் காலத்தில், தன்னிறைவு எய்தும் அளவிற்கு இந்தியாவின் பருத்தி உற்பத்தி (1955—56-ல்) 39,98,000 பேல் களாக அதிகரித்தது [90]. இருந்த போதிலும் இரண்டாவது ஐந் தாண்டுத் திட்டத்தில் கச்சாப் பருத்தியின் ஒரு ஏக்கர் உற்பத்தி விகிதத்தை, அதிகரிக்கக் கூடிய முக்கியச் செயல் திட்டங்கள் இருந்தன. [91]

1922—27-ல் பருத்தியின் மொத்த உற்பத்தியில் 30 விழுக்காடாக இருந்த நீண்ட இழைப் பருத்தி [718 அங்குலத்தைவிட நீளமானவை] யின் உற்பத்தி அரசாங்கம் அளித்த ஆதரவின் காரணமாக 1937—42-ல் 38 விழுக்காடாகவும் 1946—47-ல் .64. 4 விழுக்காடாகவும் உயரலாயிற்று[92]. பிரிவினை காரணமாக 18 விழுக்காடாகக் குறைந்த இந்த விகிதம், 1954-55-ல் 37 விழுக்காடாக அதிகரித்தது. [93]

1926—27-ல் 807. 12 மில்லியன் பவு. ஆக இருந்த நூலின் உற்பத்தி 1944—45-ல் 1650.9 மில்லியன் பவு. ஆக அதிகரித்தது என்பதைக் கண்டோம். போருக்குப்பின்னர் தொழிலாளர் கிளர்ச்சியாலும், சமயப் பூசல்களாலும் கச்சாப் பருத்தியின் பற்றுக்குறை காரணமாகவும், 1946—47-ல் 1222மில்லியன் பவு ஆகக்குறைந்தது. முதல் திட்டக்காலத்தில் திட்ட இலக்கான 1640 மில்லியன் பவு. ஆக நூல் உற்பத்தி உயர்ந்தது[94]. இக்காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நூலின் தரமும் மாறுதல் அடைந்தது. மட்டரக, (நீ1-20)

89 Gandhi, M P., முன் கூறியபடி, 1939, Annual pp. 91-93 and 99 and 1950 Annual p l.

90 முன் கூறியபடி, 1956-57 Annual Table. 2.

91 1953-54-ல் ஒரு ஏக்கரில் விளையும் கச்சாப்பருத்தியின் உற்பறிதித்திறன் இந்தியாவில் 90 பவு. ஆகவும், எகிப்தில் 510 பவு. ஆகவும், அமெரிக்காவில் 324 பவு. ஆகவும் பெருவில் 448 பவு. ஆகவும், அர்ஜெண்டைனாவில் 209 பவு. ஆகவும், மெக்ஸிக்கோவில் 312 பவு. ஆகவும், பிரேஸிலில் 175 பவு ஆகவும் குறைந்தது. முன் கூறியபடி, 1954-55 Annual, pp 57-58 and Second five Year Plan pp. 321-26.

92 Gandhi M. p., op-cit., 1945-46 Annual, Appendix, AP,XIIand 1950 Annual P. 118.

93 Second Five Year Palan p. 264

94 Gandhi, M. P., op-eit., 1939 Annual p. 32, 1945-46 Annual, p. IV 1950 Annual p. IV, 1956-57 Annual p. XVII

நடுத்தர (நீ 21-40) உயர்ந்தரக (நீ 41-க்கும் அதிகமானது) நூலின் உற்பத்தி மொத்தத்தில் முறையே 64 விழுக்காடாகவும் 34 விழுக்காடாகவும், ஒரு விழுக்காட்டிற்கும் சற்று அதிகமானதாகவும் 1926—27-ல் இருந்தது, இந்த விகிதம் 1938—39-ல் 53 விழுக்காடாகவும், 39 விழுக்காடாகவும், 7 விழுக்காடாகவும் முறையே இருந்தது[95]. அந்நியப் பருத்தியைக் குறைவாக இறக்குமதி செய்தமையாலும், மொத்த உற்பத்தியை அதிகரிக்க வேண்டியிருந்தமையாலும், 1942—43-ல் இவ்விகிதம் முறையே 64 விழுக்காடாகவும், 30 விழுக்காடாகவும், 4 விழுக்காடாகவும் மாறியது[96]. பிரிவினை காரணமாக இவ்விகிதம் 67.3 விழுக்காடாகவும், 25.7 விழுக்காடாகவும், 7.1 விழுக்காடாகவும் மாறியது. முதல் திட்ட இறுதியில் 1955—56-ல் இது 55.8 விழுக்காடாகவும் 38.5 விழுக்காடாகவும், 5.7 விழுக்காடாகவும் இருந்தது. இது கிட்டத்தட்ட போர் ஏற்படுவதற்கு முன்னர் இருந்த நிலைமையைப் போல் இருந்தது[97].

1926—27-ல் துணிமணிகளின் உற்பத்தி 2259 மில்லியன் கஜங்களாக இருந்தது. 1944—45-ல் 4727 மில்லியன் கஜங்களாக உயர்ந்தது[98]. 1946-47-ல் இது 3864 மில்லியன் கஜங்களாகக் குறைந்தது. 1955-56-ல் 5101 மில்லியன் கஜங்களாக உயர்ந்தது. இது முதல் திட்ட இலக்கைவிடச் சற்று அதிகம்[99]. துணிகளின் தரத்தைக் காண்போமானால், 1926—27-ல் நீ. 30-யை விட உயர்ந்த ரகநூலினால் நெய்த துணியின் உற்பத்தி,மொத்த உற்பத்தியில் 8 விழுக்காடாக இருந்தது. இந்த விகிதம் 1942-43—ல் 28 விழுக்காடாக உயர்ந்தது[100]. குறிப்பாகப் பிரிவினை காரணமாக, 1948-ல், இந்த விகிதம் 22 விழுக்காடாகக் குறைந்தபோதிலும், 1951-ல் 40 விழுக்காடாக அதிகரித்தது. முதல் திட்டக்காலத்தில் துணியின் மொத்த உற்பத்தியை அதிகரிப்பதில் அதிகக் கவனம் செலுத்தியதால் உயர்ந்த ரகதுணி மொத்த உற்பத்தியில்,1955-56ல் 14.7 விழுக்காடாக வீழ்ச்சி அடைந்தது.[101] துணியின் தலா நுகர்வு

95 Computed from, I bid, 1939 **Annual** p. 32

96 Computed from Thakkar, N. H., **Indian Cotton Textile Indus ry-during the Twentieth century** (Bombay, 1949), p.81

97 Computed from Gandhi M. P., op-cit., 1951-52 **Annual, P. XV,** 1954-55 **Annual** p. XVII, and 1956-57 **Annual** p. XVII

98 Ibid, 1939 **Annual,** p. 35 and 1945-46 **Annual p. IV**

99 Ibid, 1951-52 **Annual** p, XV, 1954-55 **Annual** p. XVII, and 1956-57 **Annual,** p. XVIII

100 Computed on the basis of **Report of the Indian Tariff Board** 1932 pp. 23-24 from the above Report p. 17 and Thakkar, N. H.,

101 Computed from Gandhi, M. P., op cit., 1951-52 **Annual, p. XV,** and 1956-57 **Annual** p. XVII

1938-40-ல்16-67 கஜமாகஇருந்தது; 1942—43-ல் 7கஜமாக குறைந்த போதிலும், 1950—51-ல் 9-7 கஜமாகவும், 1955—56-ல் 15-5 கஜமாகவும் உயர்ந்தது. இது திட்ட இலக்கை விட சற்று அதிகம்ஆகும்.

இந்தியா ஏற்றுமதி செய்த துணியின் அளவு மிகக் குறைவாக இருந்தது. இந்த அளவு 1939-வரை குறைந்து கொண்டு சென்றது. இரண்டாவது உலகப்போர் காரணமாக, இந்திய ஜவுளிகளுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டது. 1936—37-ல் 211 மில்லியன் கஜங்களாக இருந்த துணிகளின் ஏற்றுமதி 1942—43-ல் 818 மில்லியன் கஜங்களாக அதிரிக்கலாயிற்று. ஆனால். அதே ஆண்டில் இந்தியாவில் துணி பற்றுக்குறை மிகவும் தீவிரமாக இருந்தமையால் விலைவாசி உயர்வைத் தடுக்கக் கருதி, 1944—45-ல் ஏற்றுமதியின் அதிகபட்ச அளவு 463 மில்லியன் கஜங்களாக நிர்ணயிக்கப்பட்டது. 1948-ல் இந்திய அரசாங்கத்தின் கொள்கையில் ஏற்பட்ட மாறுதல் காரணமாக, துணியின் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக இதனை அதிகரிக்கும் வகையில் அரசாங்கக் கொள்கை அமைந்தமையால், 1949—50-ல் 690 மில்லியன் கஜங்களாக இருந்த ஏற்றுமதியின் அளவு 1950—51-ல் திடீரென்று 1210 மில்லியன் கஜங்களாக உயர்ந்தது[103]. முதல் திட்ட காலத்தில் துணியின் ஏற்றுமதி ஒருவருடத்திற்கு 1000 மில்லியன் கஜங்களாக இருக்கவேண்டும் என்றும், அதில் கைத்தறி துணி 60 மில்லியன் கஜங்கள் என்றும் நிர்ணயித்தனர். ஆனால், முதல் திட்டக் காலத்தில் ஆலைத் துணியின் ஏற்றுமதி திருப்திகரமாக இருக்கவில்லை 1951—52-ல் 384 மில்லியன் கஜங்களாகவும், 1952—53-ல் 561 மில்லியன் கஜங்களாகவும். 1953—54-ல் 702 மில்லியன் கஜங்களாகவும்

வகை	1953	1954	1955	1956
காடா	37	21	21	25
நடுத்தரம்	39	67	72	70
உயர்ந்த ரகம்	22	9	4	3
மிக உயர்ந்த ரகம்	2	3	3	2
மொத்தம்	100	100	100	100

[102] கடல் மார்க்கமாக ஏற்றுமதி செய்யப்பட்ட விவரங்களுக்கு முன் குறிப்பைப் பார்க்கவும், **1939, Annual pp. 35-37,** தரை வழியாக ஏற்றுமதியான விவரங்களுக்குப் பார்க்கவும், **Statistical Abstract for British India, 1927-28 to 1936-37, (Delhi, 1939), p. 721.** கடல் மார்க்கமாக ஏற்றுமதி செய்யப்பட்ட துணியின் அளவு கிட்டத்தட்ட தரை வழியாக ஏற்றுமதி செய்த அளவிற்குச் சமமாகும்.

[103] Gandhi, M.P , op-cit., 1945-46 **Annual pp.** iii-iv

1954-55-ல் 760 மில்லியன் கஜங்களாகவும் 1955-56-ல் 680மில். கஜங்களாகவும் இருந்தது [104]. இந்நிலையில் இத்தொழிலிற்குப் பழையனவும், புதியனவும் ஆகிய போட்டிகள் தோன்றலாயின. இதர நாடுகளில் பஞ்சாலைகள் ஏற்பட்டமையாலும், புதிதாகச் செயற்கை இழைகளால் நெய்யப்பட்ட துணிகளின் போட்டி அதிகரித்தமையாலும் இத்தகைய நிலைமை ஏற்பட்டது எனலாம். நடுத்தரத் துணிகளை ஏற்றுமதி செய்வதில் இந்தியா அதிகக்கவனம் செலுத்தியது. கடந்த சில ஆண்டுகளில் ஏற்றுமதியின் மொத்த அளவு அதிகரித்துள்ளதற்கு ஏற்ப, ஏற்றுமதியின் மதிப்பு அதிகரிக்க வில்லை. 1953-ம் ஆண்டின் அடிப்படையில் பார்க்கும்போது ஏற்றுமதியின் மொத்தஅளவு 1954-ல் 25 6 விழுக்காடும் 1955-17.7 விழுக்காடும் 1956-ல் 6 விழுக்காடும் அதிகரித்துள்ளது அதே சமயம் ஏற்றுமதியின் மதிப்பு 1954-ல் 18.7 விழுக்காடும் 1955-ல் 2-5 விழுக்காடும் 1956-ல் 1.6 விழுக்காடும் அதிகரித்துள்ளது. [106] இருந்த போதிலும் 1956 ல் உலக வர்த்தகத்தில் ஈடுபட்ட மொத்தப் பருத்தித் துணி யில் 20 விழுக்காட்டை இந்தியா ஏற்றுமதி செய்தது. உலகத்தில் பருத்தித் துணிமணிகளை ஏற்றுமதி செய்கின்ற நாடுகளில் (கம்யூனிஸ்ட் நாடுகள் நீங்கலாக) 2—வது இடத்தை இந்தியா பெற்றுள்ளது.[107] 1955—56-ல் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்தத் துணிமணிகளில் 40 விழுக்காடு ஆசியாவிலும் 33 விழுக்காடு ஆப்பிரிக்காவிலும் 16 விழுக்காடு ஐரோப்பாவிலும் 7 விழுக்காடு பஸிபிக் பெருங்கடலைச் சார்ந்துள்ள தீவுகளிலும் 4 விழுக்காடு அமெரிக்காவிலும் விற்கப்பட்டன. [108]

அமைப்பு முறைகளில் மாற்றங்கள்

நாம் ஆய்வதற்கு எடுத்துக் கொண்ட காலத்தில் தொழிற் சாதனங்கள், அதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் தொகை முதலியன அதிகரித்துள்ள விவரத்தை அட்டவணை நீ. 9-ல் பார்க்கலாம்.

104 முன் கூறியபடி 1956-57 **Annual** pp. iii-iv

105 அண்மை ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த துணியில் காடா (நெ **17**-வரை), நடுத்தரம் (நெ **17** முதல் நெ 36 வரை) உயர்ந்த ரகம் (நெ 36 முதல் நெ 48 வரை) மிக உயர்ந்த ரகம் (நெ 48-க்கும் மேலானவை) துணிகளின் விகிதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

106 Computed from முன் கூறியபடி 1956-57 **Annual** p. 8, and **India** 1958, p. 362.

107 1956 ஜனவரியில் கம்யூனிஸ்ட் அல்லாத உலக நாடுகளின் பருத்தித் துணியின் வர்த்தகத்தில், ஜப்பான் 28 விழுக்காடு ஏற்றுமதி செய்தது. பேரளவிற்கு உற்பத்தி செய்கின்ற நாடுகளின் பன்னாட்டு நிலைமைப்பற்றிய விவரங்களுக்குப் பார்க்கவும், Gandhi, M. P., OP. Cit. 1954-55 **Annual** p. 58. and 1956—57 **Annual** p 45

108 முன் கூறியபடி, 1954—55 **Annual** p. 39 மற்றும் 1956—57 **Annual** p. 9.

1929-க்கும், 1956-க்கும் இடையில் மொத்தக் கதிர்கள் 39 விழுக்காடும், மொத்த ஆலைகள் 35 விழுக்காடும், மொத்தத் தறிகள் 18 விழுக்காடும் அதிகரித்துள்ளன. 1924-25-ல் 1256 மில்லியன் கஜங்களாக இருந்த கைத்தறித்துணி உற்பத்தி, 1939-40-ல் 1820 மில்லியன் கஜங்களாகவும், 1954—55-ல் 1600 மில்லியன் கஜங்களாகவும் அதிகரித்துள்ளது. 2-வது உலகப் போர் முடிந்த சில ஆண்டுகளில் நூல் உற்பத்தி பெரிதும் குறையலாயிற்று. இக்காலத்தில் தமிழ் நாட்டில் புகழ்பெற்ற உள்ளூர் கைத்தறித் தொழிலிற்கு வேண்டிய நூலை அளிக்கும் வகையில் நூற்புத் தொழிலின் வளர்ச்சி அமைந்துள்ளதை அட்டவணை எண். 9 லிருந்து காணலாம். இக்காலத்தில் குறிப்பிடத்தக்க வகையில் மற்றொரு இயல்பும் அமைந்து இருந்தது. முதல் உலகப்போருக்கு முன்னர் மிகப்பெரிய நகரங்களில் ஆலைகள் செறிந்து வளர்ந்துள்ளமைக்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் பரவலாகவும், சிற்றூர்களிலும் ஆலைகள் ஏற்படலாயின. எண்ணற்ற உள்ளூர் நுகர்வோர்களிடம் நேரிடையாகவும், சுலபமாகவும் தொடர்பு கொள்ளும் வகையில் அமைந்திருந்தன. உள்ளூரில் ஊதியச் செலவும், கச்சாப் பொருள்களின் விலையும்

அட்டவணை 9

தொழிலின் வளர்ச்சி (1929-1956) [109]

ஆண்டுகள்	ஆலைகள்	கதிர்கள் (1,000-களில்)	தறிகள் (1,000-களில்)	தினம் ஒரு 'ஷிப்டி'ல் வேலை செய்யும் தொழிலாளர்கள் (1,000-களில்)
1929	344	89,07	1,75	3.47
1939	389	1,00,59	2,02	4,42
1945	417	1,02,38	2,02	5,10
1951	445	1,12,41	2,01	4,25
1956	465	1,23,76	2,07	4,30

[109] For 1929 to 1951 Government of India, **Report of the Workin. Party for the Cotton Textile Industry**, 1952, p. 2' and 1956, Gandhi, M. P p. cit., 1956-57 **Annual** p. i.

குறைவாக இருந்தமையால் மூலதனமும், தொழில் அதிபர்களும் சிற்றூர்களையும், சிறுபட்டணங்களையும் நாடிச் சென்றனர். பம்பாயைச் சுற்றிலும் உள்ள ஆலைகளில் ஊதியம், கச்சாப் பொருள்கள் ஆகியவைகளுக்கான செலவு அதிகமாக இருந்தமை யாலும், நுகர்வோரின் அங்காடிகளுக்குச் சேய்மையில் இருந்தமை யாலும், குறிப்பாக 1939-க்கு முன்பு பொதுவாக இருந்த மந்த சூழ்நிலையில் பாதகமான நிதி நிலைமையைப் பெற்று இருந்தன. இந்த ஆலைகளின் மொத்த வருவாயிலிருந்து வழக்கமாக எல்லா கழிமானங்களையும் கழிக்கப்பட்டு இருந்ததால் 1931-36-ல், இவை பேரளவிற்கு, சுமார் ரூ. 88 லட்சம் முதல் ரூ. 171 லட்சம் வரை. இழப்பை அடைந்திருக்க வேண்டும். இத்தகைய பேரிழப்பைத் தவிர்க்கும் நோக்கத்துடன் பதிலாளிகளின் கமிஷனில் மூன்றில் ஒரு பங்கும், கடன் பத்திரங்களின் வட்டியில் ஓரளவும் குறைக்கப் பட்டன. அத்துடன் தேய்மானம் 80—90 விழுக்காடுகளாகக் காட்டினர். இதனால் ஒரு வருடத்தில் நிகர லாபம் ரூ. 16 லட்சத் திலிருந்து, ரூ. 43 லட்சம் வரை இருப்பதாக அறிவிக்க முடிந்தது, மொத்த லாபத்தில் 10 விழுக்காட்டை நிருவாக பதிலாளிகள் கமிஷனைப் பெற்றுக் கொண்டார்கள். இது தவிர பங்குதாரர் களுக்கும் ஓரளவிற்கு லாப ஈவு பங்கிட்டு அளிக்கமுடிந்தது. இருந்த போதிலும், 1932—லும் 1933—லும் நிகர இழப்பு ரூ. 20 இலட்ச மாக இருந்தது.[110]

எப்போதும் போல அகமதாபாத்தில் உள்ள நிலைமை பம் பாயில் உள்ளதைவிடக் கொஞ்சம் சீர்பெற்று இருந்தது. இங்குக் கூட வழக்கமான கழிமான விகிதங்கள் கழிக்கப்பட்டு இருக்குமே யானால், 1933-க்கும் பின்னர் நிகர இழப்பு ஏற்பட்டு இருக்கக் கூடும். ஆனால், மேற்கூறிய முயற்சிகளின் காரணமாக ஆண்டு தோறும் அவர்களால் நிகர லாபம் இருப்பதாகக் காட்ட முடிந் தது. மொத்த லாபத்தில் 25 முதல் 30 விழுக்காடுகள் வரையிலான தொகையைப் பதிலாளிகள் கமிஷனைப் பெற்றார்கள்.[111] இருந்த

110 விவரங்களுக்குப் பார்க்கவும், Government of Bombay **Report of the Textile Labour Enquiry Committee**, 1937-38 Vol-I Interim Report, Bombay, 1938, pp. 45-46, பம்பாய் ஆலைகள் பகிர்ந்து அளித்த சராசரி லாப ஈவு 1931-ல் 1.2 விழுக்காடும், 1934-ல் 3.8 விழுக்காடும், 1935-ல் 1.8 விழுக்காடும், 1936-ல் 3.4 விழுக் காடும் ஆகும். நிருவாகப் பதிலாளிகள் 1931-ல் 68 ஆலைகளிலிருந்து ரூ. 15 லட்சமும் 1932-ல் 71 ஆலைகளிலிருந்து ரூ.14-லட்சமும், 1933-ல் 57 ஆலைகளிலிருந்து ரூ 10-லட்ச மும், 1934-ல் 61-ஆலைகளிலிருந்து ரூ. 15 லட்சமும், 1936-ல் 54 ஆலைகளிலிருந்து ரூ 15-லட்சமும் கமிஷன், அலுவலகப்படி முதலிய பெயர்களில் பெற்றார்கள்.

111 அகமதாபாத்தில் உள்ள நிருவாகப் பதிலாளிகள், பம்பாயில் உள்ளவர்களைவிட அதிகமான வருவாய் பெற்று வந்தார்கள். அகமதாபாத்தில் உள்ள பதிலாளிகளின் கமி ஷன் மொத்த விற்பனையின் அடிப்படையிலும், பம்பாயில் உள்ள பதிலாளிகளின் கமிஷன் மொத்த லாபத்தின் அடிப்படையிலும் நிர்ணயிக்கப்பட்டன, முன் கூறிய ஆதாரத்தைப் பார்க்கவும். pp. 46-47.

போதிலும் இரண்டாவது உலகப் போர் இதுவரை கண்டு இராத ஒரு பூரிப்பான வளர்ச்சியை ஏற்படுத்தியது. எனவே 1940—ல் அரசாங்கம் மிகை லாப வரியையும் (Excess Profits tax) கட்டாய வைப்புத் திட்டத்தையும் (Compulsory Deposit Scheme) ஏற்படுத்திய போதிலும் *1943*-ல் லாபம் உச்ச நிலையை எய்தியதாகக் கூறலாம். அந்த ஆண்டில் இந்தியாவில் உள்ள பஞ்சாலைகளின் மொத்தலாபம் சுமார் ரூ. *109* கோடியாகவும் [*1940*-ல் இது ரூ. *7* கோடியாக இருந்தது] நிகரலாபம் ரூ.*21* கோடியாகவும், இருந்தது. *1944*-ல் மொத்த லாபம் ரூ *85* கோடியாகவும். நிகரலாபம் ரூ. *18* கோடியாகவும் இருந்தது [112]. போருக்குப் பின்னர் இத்தொழிலின் நிதிவளம் ஓரளவிற்குக் குறைந்து இருப்பதைப் பின் வரும் அட்டவணை (எ. *10*) விளக்குகிறது.

அட்டவணை 10.

பஞ்சாலைத் தொழிலின் தொழில் லாபக் (Industrial Profits) குறிப்பீட்டு எண். *(1939 = 100)*[113]

ஆண்டுகள்	குறியீட்டு எண்	ஆண்டுகள்	குறியீட்டு எண்:
1939	*100*	*1947*	*317·7*
1940:	*142·5*	*1948*	*548·1*
1941	*316·6*	*1949*	*292·0*
1942	*491·3*	*1950*	*356·6*
1943	*640·0*	*1951*	*551·1*
1944	*492·1*	*1952*	*262·8*
1945	*423·3*	*1953*	*379·4*
1946	*408·9*	*1954*	*387·2*

112 Mehta, S. D., The Cotton Mills of India, 1854-1954, pp, 193 and 197. இந்தியாவில் உள்ள எல்லா ஆலைகளுககும் சராசரியான லாப ஈவு, 1940-ல், 11 விழுக்காடாகவும், 1941-ல் 14 விழுக்காடாகவும், 1942-ல் 27 விழுக்காடாகவும், 1943-ல் 27 விழுக்காடாகவும், 1944-ல் 18 விழுக்காடாகவும் இருந்தது. போர்நடைபெற்ற காலத்தில் பங்குகளின் தோற்றமதிப்பைப் (face value) பங்குதாரர்கள் பெற்றதாகக் கூறலாம்.பார்க்கவும்: Gandhi, M. P., op-cit., 1945-46 Annual, p. 67.

113 The Eastern Economist, Vol. xxviii, No 11, p. 400, March 15, 1957. தொழில் லாபங்கள் 'நிகர' மானவை, அவற்றில் தேய்மானமும் சேர்க்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக வர்த்தகப்பாங்குகள்உலகப்போருக்கு முன்னர் தொழில் நிறுவனங்களுக்குக் கடன் கொடுக்க முன்வரவில்லை. அகமதாபாத்தில் உள்ள ஆலை முதலாளிகள் சொந்தமாகவே லேவாதேவித் தொழில் செய்தமையால் அவற்றிற்கு நிதித்தட்டுப் பாடு ஏற்படவில்லை. உலகப் போர் நடைபெற்ற போதும், அதற் குப்பின்னரும் இத்தொழில் பூரிப்பான வளர்ச்சியை எய்தியமை யால், எளிதில் பாங்குகளிடமிருந்து கடன் பெறமுடிந்தது.[114] விடு தலைக்குப் பின்னர் 1948-ல் இந்தியத் தொழில் நிதிக்கழகமும், (Industrial Finance Corporation of India) 1954-ல் இந் தியத்தொழில் கடன் முதலீட்டுக் கழகமும் (Industrial Credit and Investment Corporation of India) மற்றும் பல அரசாங்க ஆதரவால் ஏற்பட்ட நிதிக் கழகங்களும் தோன்றின. தனியார் துறையில் உள்ள பேரளவுத் தொழில்களின் நிதித் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் இந்த நிதிக் கழகங்கள் நிறுவப்பட்டன.[115] ஒவ்வொரு ஆலையின் நிதித் தேவையும் முதலீடும் திருப்திகரமாக இருந்தன. இவற்றின் செயல் முறையும், நிருவாகமும் நிலைபெற்றுவிளங்கின. இந்தக்கம்பெனிகள் நிருவாகப் பதிலாளிகளின் நிதிஉதவியை அதிக அளவிற்குச்சார்ந்து இருக்க வேண்டிய அவசியம் இல்லையாகையால் பதிலாளிகளின் முக்கியத்துவமும் குறையலாயிற்று.

அடுத்து நாம் எடுத்துக்கொண்ட காலத்தில், இந்திய ஆலைகளின் நிருவாகம் நிலையற்ற தன்மையில் இருந்தன. நிருவாகப் பதிலாளிகள் அடிக்கடி மாற்றப்பட்டதுடன், பல ஆலைகள் மூடப் படலாயின. எடுத்துக்காட்டாக, பம்பாயில் உள்ள கரீம் பாய் இப்ரகிம் (Currinbhoy Ibrahim) குழுவினர் 12-க்கும் அதிக மான ஆலைகளை நிருவகித்து வந்தனர். 1933-ல்:இவை பேரிழப்பை அடைந்தமையால் மூடவேண்டியதாயிற்று, 1937 க்கும் 1940-க் கும் இடையில். பம்பாயில் 3 ஆலைகளின் நிருவாகப் பதிலாளிகள் மாற்றம் அடைந்தனர். மூடப்பட்ட 8 ஆலைகளில் 6 ஆலைகள் பின்னர் புதிய பெயரிலும் புதிய பதிலாளிகளின் நிருவாகத்திலும் மறுசீரமைப்பைப் பெற்றன. இந்த 4 ஆண்டுகள் காலத்தில் அகமதாபாத் நீங்கலாக, பம்பாய் மாநிலத்தின் இதர பகுதிகளில் மொத்தம் 15 ஆலைகள் மூடப்பட்டன. 10 ஆலைகளின் பதிலாளி கள் மாற்றப்பட்டனர். மூடப்பட்டவற்றுள் 26 ஆலைகள் திரும்ப

[114] of Mehta, S. D. **The Indian Cotton Textile Industry; An Economic Analysis** pp. 176-78.

[115] C. Das, Nabagopal, **Industrial Enterprise in India,** (Calcutta) 1956, p. 57-67.

[116] Computed from Gandhi, M. P. op-cit., 1937 **Annual,** Appendix and 1940 **Annual Appendix** -I.

வும் நிறுவப்பட்டோ, மறு சீரமைப்பைப் பெற்றோ இயங்கின.[116] 1940-க்கும் 1954-க்கும் இடையில் இந்தியாவில்உள்ள மொத்த ஆலைகளில் மூன்றில் ஒரு பங்கிலிருந்து பாதிவரையிலான ஆலைகளின் நிருவாகப் பதிலாளிகள் மாற்றப்பட்டனர்.[117] போர்க் காலத்தில் பம்பாய் மாநகரத்தில் மூடப்பட்ட 15 ஆலைகளில் புதிய பெயரிலும், புதிய பதிலாளிகளின் கீழும் 11 ஆலைகள் மறு சீரமைப்பைப் பெற்றன. மற்றும் 5 ஆலைகளின் பதிலாளிகள் மாற்றப்பட்டனர்.[118] இந்த காலத்தில் கீர்த்தி பெற்ற 'ஸாஸூன்' (Sassoon) குழுவினர் 10 ஆலைகளுக்கான நிருவாகப் பதிலாளி உரிமையை ரூ 480 லட்சத்திற்கு விற்றனர்கள்.[119] போர்க்காலத்தில் அகமதாபாத்தில் உள்ள 70 ஆலைகளில், 15 ஆலைகள் மறு சீரமைப்பைப் பெற்றோ பதிலாளிகளில் மாற்றத்தைப் பெற்றோ இருந்தன. இப்போக்கு போர் முடிவு பெற்ற பின்னரும் தொடர்ந்து நீடிக்கலாயிற்று. 'ஸாஸூன் குழுவினர் எஞ்சியுள்ள 4ஆலைகளின் நிருவாகப்பதிலாளி உரிமையையும் விற்றுவிட்டு இத்தொழிலினின்று முற்றிலும் மறைந்தனர். இது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். இவ்வாறு தன்னிச்சையாகவே சிலர் நிருவாக பதிலாளி உரிமையை விற்கத் தலைப்பட்டனர். மற்றும் சிலர் பதிலாளி நிறுவனத்தின் நிதி ஆதிக்கம் காரணமாகவும், நிருவகிக்கப்பட்ட கம்பெனி வெளியாரின் ஆதிக்கத்துக்குட்பட்டதாலும், பதிலாளி அல்லது கம்பெனியின் பணமுடை காரணமாகவும் இவ்வுரிமையை இழக்கலாயினர்.[120]

இத்தகைய நிகழ்ச்சிகளின் காரணமாகக் குறிப்பிட்டத்தக்க விளைவு ஒன்று ஏற்பட்டது. பம்பாய் பருத்தித் தொழிலில் பார்ஸிக்கள், பாத்தியாக்கள், கோஜாக்கள், யூதர்கள், ஐரோப்பியர்கள் முதலியோர்களின் முக்கியத்துவம் குறைந்ததுடன், அவர்கள் தொழிலிலிருந்து விலகவும் செய்தனர். இவர்களுக்குப் பதிலாகக் குஜராத்தியர்களும், மார்வாடிகளும் எழுச்சி அடையலாயினர். 1953-ல் பம்பாய் மாநகரத்தில் உள்ள 53 ஆலைகளில் 19 ஆலைகள் குஜராத்தியர்களின் நிருவாகத்தின் கீழும், 18 ஆலைகள் மார்வாடிகளின் நிருவாகத்தின் கீழும் மற்றும் பார்ஸிக்களின் கீழ் 5-ம், இந்தியர் அல்லாதவர்களின் கீழ் 8-ம் இதரர்களிடம் 3-ம் இருந்தன. அகமதாபாத்தில் உள்ள 65-ஆலைகளில் 61-ஆலைகள் குஜராத்தியர்களாலும், மற்றும் மார்வாடிகள்,

117 Mehta, S. D.. The Cotton Mills of India, 1854-1954 op. cit., p. 208

118 Computed from Gandhi, M. P., 1940 Annual Appendix, and 1945-46 Annual

119 Mehta, S. D., op. cit., P. 208.

120 Mehta. S. D. op. Pcit,, 208,

பார்ஸிக்கள், இந்தியர் அல்லாதவர், இதரர்கள் முதலியோர்களின் நிருவாகத்தின் கீழ் முறையே ஒவ்வொரு ஆலையும் இருந்தன. இந்தியா முழுவதிலும் 334-ஆலைகள் இருந்தன. அதில் குஜராத்தியர்களால் 121-ஆலைகளும், மார்வாடிகளால் 65-ம். பார்ஸிக்களால் 9-ம், இந்தியர் அல்லாதவர்களால் 24-ம், தென்னிந்தியர்களால் 71-ம் (முக்கியமாகச் செட்டியார்கள். நாயுடுக்கள் ஆதிக்கத்தில்) வங்காளிகளால் 13-ம், இதரர்களால் 31-ம் நிருவகிக்கப்பட்டன[121]. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் சில ஜாதியினரின் ஆதிக்கத்தில் இத்தொழில் இருந்தது. இந்நிகழ்ச்சிகள் காரணமாக இத்தொழிலின் பல ஆலைகள் சில நிருவாகப் பதிலாளிகளின் ஆதிக்கத்தில் குவிக்கப்பட்டு இருந்த நிலைமை குறையலாயிற்று[122]. 1955-ல் இந்தியாவில் மொத்தம் 461-ஆலைகள் இருந்தன. அவற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த 13 பதிலாளி நிறுவனங்களால் 49 ஆலைகளே நிருவகிக்கப்பட்டன[123]. இத்தொழிலில் உள்ள மொத்த சாதனங்கள் தொழிலாளர்கள் ஆகியவற்றுள் 5-ல் ஒரு பகுதிக்கும் அதிகமானவை இத்தகைய நிறுவனங்களின் நிருவாகத்தின் கீழ் அமைந்து இருந்தன. இதனால் மற்றும் ஒரு குறிப்பிடத்தக்க விளைவு ஏற்பட்டது. நிருவாகபப்திலாளிமுறைக்கு முற்றிலும் புறம்பான அமைப்புக்களால் நிருவகிக்கப்பட்ட ஆலைகள், சிறிய அளவில் இருந்த போதிலும், குறிப்பிடத்தக்க வகையில் எழுச்சி பெறலாயின. 1954-55-ல் இத்தகைய ஆலைகளின் செலுத்தப்பட்ட மூலதனம், இத்தொழிலில் முதலீடு செய்யப்பட்ட மொத்த மூலதனத்தில் 13.8 விழுக்காடாக இருந்தது [124].

நாம் ஆய்விற்கு எடுத்துக் கொண்ட கால இறுதிவரை நிருவாகப் பதிலாளி முறை சட்டப்படி எத்தகைய தடையும் இல்லாமல் வளர்ந்துள்ளதை அறியலாம். 1936-ம் ஆண்டில் இந்தியக் கம்பெனிச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதனை, சட்டத்தின் உதவியால் நிருவாகப்பதிலாளி முறையைச்சீர்திருத்தும் ஒரு முதல் முயற்சியாகக் கருதலாம். ஆனால், இந்தச் சட்டத்தின் ஷரத்துக்

121 முன் கூறியபடி பக். 247.

122 பெரும்பாலான பருத்தி அதிபர்கள் பஞ்சாலைத் தொழிலிற்குப் புறம்பான வர்த்தக, தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்த உண்மை மறுக்கப்படவில்லை. cf. Sharma, S. L., Some Trends of Capitalist Corncentration in India, Aligarh, 1955, and Nigam, Raj, K., Managing Agencies in India (New Delhi, 1958)

123 அவர்கள், பிர்லா, டாட்டா, சிங்கானியா, அகர்வாலா, பின்னி, கஸ்தூரிபாய் லால்பாய், அம்பாலால் சாராபாய், ஃபின்லே, ஜய்பூரியா, ஸ்ரீ வத்ஸவா, பாரத்ராம், சாரத்ராம், புல்லன் மற்றும் ஹார்வி முதலானோர்கள். Computed from Gandhi, M. P., op. cit. 1954-55 Annual Appendix. I.

124 Nigam, Raj, K., Managing Agencies in India, Government of India, (New Delhi, 1958) P. 46.

125 Das Napagopal, op. cit. pp. 76-89

களைத் தீவிர மாகச் செயல்படுத்தவில்லை.[125] இந்தியத் தொழில் நிறுவனங்களின் அமைப்பு முறையையும், நிருவாகத்தையம் சீர்படுத்தும் வகையில் அரசாங்கம் மேற்கொண்ட ஒரு ஆக்க முயற்சியாக 1956-ம் ஆண்டின் கம்பெனிச் சட்டம் அமைந்தது. இதன்படி, (1) அமைப்பு முறையைப் பொறுத்தவரை நெறியாளர் குழுவின் நேர் பொறுப்பில் கம்பெனி செயல்படும். நிருவாகப் பதிலாளிகளின் அதிகாரம் கம்பெனியின் பொதுச் சபைக் கூட்டத்தில் நிர்ணயிக்கப் படும். சிறுபான்மையான நெறியாளர்கள் மட்டுமே பதலாளிகளால் நியமிக்கப்படுவார்கள். நிருவாகப் பதிலாளிகள்பற்றிக் கம்பெனி மேற்கொள்ளும் முக்கியத் தீர்மானங்கள் அனைத்தும் மத்திய அரசாங்கத்தின் இசைவைப் பெற வேண்டும்.[126] (2) பதிலாளிகள் அதிகபட்சம் 15-20 ஆண்டுகள் தான் நிருவகிக்கலாம் என்றும் வரையறுக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெறுத வரையில் இவ்வுரிமை பாரம்பரியமாக வரக்கூடியதல்ல என்றும் அறிவிக்கப்பட்டது. பதிலாளிகளை முதல் முறையாக நியமிக்கவும், பின்னர் அடுத்து அடுத்து நியமிக்கவும், மாற்றிகொள்வதற்கும் அரசாங்கத்தின் அனுமதியைப் பெறவேண்டும்.[127] (3) ஒரு வருடத்தில் கம்பெனி பெறும் நிகர லாபத்தில் அதிக பட்சம் 10 விழுக்காட்டைத்தான் நிருவாகப் பதிலாளிகள் கமிஷனைப் பெறலாம் பதிலாளிகள் அலுவலகப்படிகள் கோருவதற்கும், பதிலாளி உரிமையை இழக்க நேரிடும்போது ஈட்டுத் தொகை கோரும் உரிமையை கிடையாது என்று அறிவிக்கப்பட்டது. அவர் நிருவகிக்கும் கம்பெனியின் விற்பனை பதிலாளியாகவோ, வாங்கும் பதிலாளியாகவோ இருக்கக் கூடாது. நிருவகிக்கும் கம்பெனியுடன் நேரிடையாகப் போட்டியிடக்கூடிய எத்தகைய தொழிலிலும் இவர்கள் ஈடுபடக்கூடாது. ஒரே நிருவாகத்தின் கீழ் அமைந்த கம்பெனிகள் ஒன்றுக் கொன்று கடன் கொடுப்பதும், ஒரு கம்பெனி மற்ருெரு கம்பெனியில் முதலீடு செய்வதும் தடை செய்யப்பட்டது. நிருவகிக்கப்பட்ட கம்பெனியின் நிதியிலிருந்து பதிலாளிகள் கடன் பெறுவதும் தடை செய்யப்பட்டது[128]. (4) 1960-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ம் தேதிக்குப் பின்னர் ஒரே சமயத்தில் எவரும் 10 கம்பெனிகளுக்கும் அதிகமாக நிருவகிக்கக் கூடாது.[121] 1960-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ம் தேதிக்குப் பின்னர் நிருவாகப் பதிலாளி முறையை அரசாங்கம் முற்றிலும் அகற்றவோ, ஓரளவிற்கு மட்டிலும் நீக்கவோ கூடும்.[130].

126. Government of India, The Companies Act. 1956, Clauses 326, 368, and 377.

127 முன்கூறியபடி Clauses 326, 328, 343, 344 and 345.

128 முன் கூறியபடி Clauses 348, 352, 354, 356, 358, 365, 366, 369, 370, 372, and 373.

129 முன் கூறிாபடி Clause 332.

130 முன் கூறியபடி Clause 324

புனரமைப்பும், இயந்திர உற்பத்தியும்; தொழிற் சீரமைப்பும்

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் துவக்கத்தில் சாதனங்கள் அதிகரிக்காமலும் நவீன மாக்கப்படாமலும் இருந்தமையால் சிக்கனமற்ற முறையில் இயங்கி வந்த 150 ஆலைகளில் 5 ஆலைகள் உடனடியாக மூடப்பட்டன. 35 ஆலைகள் இழப்புக்களை மேற் கொண்ட நிலையிலும், மற்றும் 90 ஆலைகள் இறுதி நிதி வரம்பிலும் இயங்கி வந்தன[131]. பம்பாய் பருத்தி ஆலைகளின் 90 விழுக்காடு இயந்திரங்கள் 25 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வந்துள்ளன.[132] முதல் திட்டத்தில் அரசாங்கம் செயல்படுத்த இருந்தத் திட்டம் பின்வருமாறு; 1 தற்போதுள்ள சாதனங்களை முழுமையான அளவிற்கு பயன்படுவதுவதன் மூலமாக உற்பத்தியை அதிகரிக்கச் செய்வது. (2) புதிய ஆலைகளை ஏற்படுத்துவதுடன், சிக்கனமற்ற ஆலைகள் சிக்கனமாக இயங்கும் வகையில் நூற்புப் பகுதிகளை விரிவு படுத்துவது; கைத்தறித் தொழிலிற்கு ஆதரவு அளிப்பது. (3) மேற்கொண்டு தறிப்பகுதிகளை விரிவு படுத்துவதைக் கட்டுப்படுத்துதல். [133] இந்தச் செயல் திட்டத்தின் அடிப்படையில் முதல் திட்டக்காலத்தில் அப்போதுள்ள சாதனங்களான கதிர்கள், தறிகள் முறையே 9 விழுக்காடும் 4 விழுக்காடும் அதிகரித்துள்ளன. இது திட்டஇலக்கைவிடச்சற்று அதிகமாகும். [134] இரண்டாவது திட்டத்தில் புதிதாக 9 விழுக்காடு கதிர்கள் ஏற்படுத்த வேண்டும் என்றும், பழைய கதிர்களில் 2 விழுக்காடு பதிலமர்த்தப் படும் என்றும் திட்டமிட்டனர். முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு முன்பு நிறுவப்பட்ட பழைய தறிகளில் 18 விழுக்காடு தறிகளைப்பதிலமர்த்தவும்மொத்தத்தில் 11.5 விழுக்காடு தறிகளை தன் இயக்கத் தறிகளாக மாற்றவும் [135] திட்டமிடப் பட்டது

பருத்தி நெசவு இயந்திரத் தொழிலின் எழுச்சி சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட ஒரு முக்கிய வளர்ச்சியாகும். இந்தியாவின் பருத்தி ஆலைத் தொழிலிற்கு வேண்டிய மொத்த இயந்திரத்

131 Programmes of Industrial Dcvelopment (1951—56) pp, 210—12.,

132 Report of the Working Party for the Cotton Texitle Iudustry (1952) p. 52 and 97-109.

133 **Programmes of Industrial Devolepment(1951-56)pp. 64-66 and 212-214**

134 Computed from Programmes of Indusirial Development (1956-61) 13 p, 245 and 348.

135 Computed from, Ibid pp. 41-42 and 348-49 1953ல் மொத்தத் தறிகளில் தன்னியக்கத் தறிகளின் விகிதம் இந்தியாவில் 4.7 விழுக்காடாகவும், மேற்கு ஐரோப்பாவில் 31.6 விழுக்காடாகவும் பிரிட்டனில் 11.5 விழுக்காடாகவும், அமெரிக்காவில் 100 விழுக்காடாகவும், ஜப்பானில் 66.7 விழுக்காடாகவும் இருந்தன.

தேவைகளின் மதிப்பில் சுமார் 21 விழுக்காட்டை, முதல் திட்டக் காலத்தில புதிதாக எழுச்சி பெற்ற பருத்தி நெசவு இயந்திரத் தொழில் உற்பத்தி :செய்தது.[136] இயந்திர உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதுடன், இயந்திரங்களை ஏற்றுமதி செய்யவும் இரண்டாவது திட்டம் கருதியது [137]

நிருவாகத்துறை இந்தியர்களின் கட்டுப்பாட்டின் கீழ் அமைந்ததைப் போல, ஆலை அலுவலர்கள், பொறியியலாளர்கள் ஆகியவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியர்களாக இருந்தார் கள். 1895-ல் மொத்தம் 245 பேர்கள் ஆலை அலுவலர்களாகவும் பொறியியலாளர்களாகவும் அமர்த்தப்பட்டு இருந்தனர். வர் களில் 104 பேர்கள் ஐரோப்பியர்கள். 940-ல் இவ்வகையில், மொத்தம் 415 பேர்கள் இருந்தார்கள். அவர்களில் 68 பேர்கள் ஐரோப்பியர்கள்.[138] மற்றும் பெரும்பாலானஆலைகளில்நிருவாகப் பதிலாளிகளுக்கும் பொறியியலாளர்களுக்கும் இடையே எப் போதும் சுமுகமான உறவு இருந்ததில்லை. பதிலாளிகள் அளவிற் கும் அதிகமாக நுட்ப விவரங்களில் குறுக்கிட்டனர்.[139]

பருத்தித் துணிமணிகளின் ஏற்றுமதிக்கானத் திட்ட இலக்கை நிறைவேற்றுவதில் உள்ள இன்னல்களை எதிர்நோக்கிய அதே சமயத்தில், அரசாங்கம், வேலையில் அமர்த்துவோர், தொழிலாளி கள் ஆகியவர்களுடன் தொழிற் சீரமைப்புப் பிரச்சினை பற்றி ஆலோசித்தது. பழைய இயந்திரங்களுக்குப் பதிலாக, தொழிலாளர் களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கக் கூடிய புதிய இயந்திரங்களை அமைக்கும் ஒரு பிரச்சினையாக ஆலை முதலாளிகள் கருதினர்.[140] ஆனால், ஆலைத் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் இவ்வாறு கருத் வில்லை. தொழிற்சீரமைப்பு வேலையின்மையை அதிகரிக்கும் என்றும், ஆலைகளில் வேலை பளு அதிகரிக்கக் கூடும் என்றும், இதனால் வேலையில் அமர்த்துவோர்கள்தான் பலன் அடைவார்கள் என்றும் கருத்துத் தெரிவித்தனர்.[141] 1957-ல் அரசாங்கம் வேலையில் அமர்த்துவோர், தொழிலாளர்கள் ஆகியவர்களுக்கு இடையே தொழில் சீரமைப்புப் பற்றிய முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்பட்ட

136 Computed from Ibid பக். 36.38.

137 முன் கூறியபடி pp 41.42.

138 Mehta. S. D., The Indian Cotton Textile Industry: An Economic Analysis p 58 Sec Footnote 34.

139 Reports of teh Working Party for the Cotton Textile Industry (1952) pp 58-59 Also of Myers C A. Industrial Relations in India (Bombay 1958) pp 182-85

140 C. F. Reports of the Milleowners Association, Bombay 1956 pp. 12-13, Gandhi op. eit. 1956-57 Annual Preface pp. iii-iv. and Myers C.A. op. cit, ehap. VI

241 Report of the Working Party for the Cotton Textile Industyr, 1952). pp. 40-42.

போதிலும்[142], தொழில் சீரமைப்பு முயற்சிகளை வேலையில் அமர்த்துவோர் மேற்கொண்ட போதெல்லாம் தொழிலாளர்கள் கிளர்ச்சியிலும், வேலை நிறுத்தத்திலும் ஈடுபட்டனர். ஆனால் பரந்த நோக்கத்துடன் தொழிற் சீரமைப்பு முயற்சிகளை மேற் கொள்ளுவதைப் பொறுத்து இத் தொழிலின் எதிர்கலாம் அமையும்,

142 முன் கூறியபடி: P.P. 561ா63.

கலைச் சொற்கள்

(ஆங்கிலம்—தமிழ்)

A

Ad Valerom Duty — பெறுமான விகிதத் தீர்வை
All India Rural Credit Survey Committee — அகில இந்தியக் கிராமீயக் கடன் விசாரணைக் குழு
Ancestor — மூதாதை
Anthropology — மனித இன நூல்

B

Bilateral Trade Agreements — இருமுக வர்த்தக உடன்படிக்கைகள்
Boom — பூரிப்பு

C

Class — வகுப்பு, (வகுப்பினர்)
Clan — குலம்
Collateral — இணை உறவு
Commercial Capital — வாணிப மூலதனம்
Commercial nexus — வர்த்தகப் பிணைப்பு
Community — சமுதாயம்
Commercialisation of agriculture — வர்த்தகம் சார்ந்த வேளாண்மை
Composition of Trade — வர்த்தக இயைபு
Coparcenary — பங்காளி (க்குடும்பம்)
Crude Oil — கச்சா எண்ணெய்

D

Differential Fertility — வகையீட்டுக் கருவளம்
Discriminating Protection — தெரிவுப் பாதுகாப்பு
Dividend — லாப ஈவு
Drain Theory — சுரண்டல் தேற்றம்
Drift Soil — நகர்வு மண்

E

Endogamy — அகமண முறை
Enterprise — தொழில் துணிவு

Excess Profits Tax	— மிகை லாப வரி

F

Face Value	— தோற்ற (முக) மதிப்பு
Fertility	— கருவளம்
Field worker	— கள ஊழியர்
Financial Interests	— நிதி நலன்கள்
Fixed capital	— நிலையான மூலதனம்
Fixed Fiduciary System	— வரையுடை நம்பிக்கை முறை
Firm	— நிறுவனம்

G

Geological Survey of India	— இந்தியப் புவி அமைப்புச் சர்வேக் கழகம்
Grow More Food	— அதிக உணவு உற்பத்தி
Guided Under development	— கட்டுப்பாட்டிற்கு உட்பட்டக் குறைவளர்ச்சி

H

Heir	— சந்ததி
Historical Relativism	— வரலாற்றுத் தராதரத்துவக் கோட்பாடு
House hold	— குடும்ப அமைப்பு

I

Igneous Rock	— தழற் பாறைகள்
Imperial Council of Agricultural Research	— ஏகாதிபத்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனம்
Income Elasticity of Demand	— வருமானத் தேவை நெகிழ்ச்சி
Indian Bureau of Mines	— இந்தியச் சுரங்க நிர்வாகக் குழு
Industrial Estate	— தொழிற் பேட்டை
Industrial Finance Corporation of India	— இந்தியத் தொழில் நிதிக் கழகம்
Industrial Credit and Investment Corporation of India	— இந்தியத் தொழில், கடன் முதலீட்டுக் கழகம்
Innovation	— புதுமை
Input	— உள்ளிடும் பொருள்
Inspectorate of Mines	— சுரங்க ஆய்வகம்

J

Joint Family	— ஏகக் குடும்பம்

K

Kinship — உறவு முறை

L

Lineally — வம்சாவளியாக

M

Managing Agent — நிருவாகப் பதிலாளி
National Coal Development Corporation — தேசீய நிலக்கரி வளர்ச்சிக் கழகம்
National Co-operative Development and Warehousing Board — தேசீயக் கூட்டுறவு, வளர்ச்சி பண்ட சாலைக் கழகம்

N

National Mineral Development Corporation — தேசிய தாதுப் பொருள் வளர்ச்சிக் கழகம்
National Sample Survey — தேசியமாதிரி சர்வே (கணிப்பு)
Nuclear Family — கருக் குடும்பம்

O

Oil and Natural Gas Commission — எண்ணெய் நில வாயுக் குழு
Oligarchy — சிறு குழு ஆதிக்கம்

P

Permanent Settlement — சாசுவத நிலவரி முறை
Policy — கொள்கை
Priniciples — கோட்பாடுகள்
Protective Duty — காப்புத் தீர்வை
Primary Sector — முதல் நிலைத் துறை
Price Equalization Fund — விலைச் சமன்பாட்டு நிதி

R

Rationalisation — தொழில் சீரமைப்பு
Recession — பின் இறக்கம்
Reciprocal Quota System — பரிமாற்றக் கோட்டா முறை
Residual Soil — தங்கிய மண்
Retention Price — வைப்பு விலை
Revenue Duty — வருமானத் தீர்வை

S

Secondary Sector — இரண்டாம் நிலைத்துறை
Society — சமூகம்